
# நிறப்பிரிகை



இலக்கிய இணைப்பு - 4

www.padippakam.com

# செயல் அதுவே சிறந்த சொல்



*நம் கடவுள் சாதி காப்பாற்றும் கடவுள்; நம் மதம் சாதி காப்பாற்றும் மதம்; நம் அரசாங்கம் சாதி காப்பாற்றும் அரசாங்கம்; நம் இலக்கியம் சாதி காப்பாற்றும் இலக்கியம்; நம் மொழி சாதி காப்பாற்றும் மொழி.*

**- பெரியார் ஈ.வே.ரா.**

நிறப்பிரிகையின் நான்காவது இலக்கிய இணைப்பை கருப்பர் ஆப்ரோ-அமெரிக்க இலக்கியச் சிறப்பிதழாக அளிக்கிறோம். ஏராளமான மொழிபெயர்ப்புகளோடு வழக்கமான அம்சங்களும் இணைந்துள்ளன. தமிழில் தனித்துவமிக்க ஒரு தலித் எழுத்துமுறையை உருவாக்கியுள்ள பாமா அவர்களின் புதிய சிறுகதை 'வெண்ணயம்'. வெண்மணியை ஒட்டிய கிராமம் ஒன்றில் பிறந்த இளைஞர் தய். சுந்தசாமியின் முதல் சிறுகதை 'டன்டனக்கு டனக்கு டனக்கு'. வளமான கற்பனைச் சாத்தியங்களும் நகைச்சுவை உணர்வும் மிக்க சுந்தசாமி இப்போது திருத்துறைப் பூண்டி பகுதியில் தலித் இயக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

சமீபத்தில் வந்துள்ள குறிப்பிடத்தக்க கவிதைத் தொகுப்புகளில் ஒன்று 'தெறி'. அதன் ஆசிரியர் என்.டி. ராஜ்குமார் மற்றும் புதிதாக எழுதுகிற இளைஞர்கள் நட. சிவகுமார், குருசாமி மயில்வாகனன் முதலியோரின் கவிதைகள் இவ்விதழில் இடம் பெறுகின்றன.

புனித இலக்கியத் தொகுப்புகள் உலகெங்கிலும் மறுவாசிப்பிற்குள்ளாகும் காலம் இது. தமிழில் முதன் முதலில் இத்தகைய கட்டுடைப்பை நிகழ்த்தியவர் கோ. இராசாராம். கநா.சு-வின் 'பொய்த்தேவு' நாவலில் வெளிப்படும் சாதி மேலாண்மைக் கருத்துக்களை அதில் அவர் தோலுரித்திருந்தார். மௌனி, எம்.வி. வெங்கட்ராம், புதுமைப் பித்தன் ஆகியோரை அ. மார்க்ஸ் மறுவாசிப்புச் செய்திருந்தார். இந்த வரிசையில் இரு மறுவாசிப்புகள் இந்த இதழில் இடம்பெறுகின்றன. சுந்தர ராமசாமியின் 'புளிய மரத்தின் கதை'யை ராஜன் குறையும் 'தொட்டிக்கட்டு வீடு' நாவலை பெருமாள் முருகனும் மறுவாசிப்பிற்குள்ளாக்குகின்றனர்.

இரு நூல் விமர்சனங்கள் இவ்விதழில் இடம் பெறுகின்றன. அ. மார்க்சின் சமீபத்திய மூன்று நூற்களை சினிமாக் கோட்பாட்டாளரும் நவீன மேலைச் சிந்தனைகளில் ஆழ்ந்த பயிற்சி மிக்கவருமான வெங்கடேஷ் சக்ரவர்த்தி விமர்சிக்கிறார். உலகின் கவனத்தை ஈர்த்துள்ள அருந்ததி ராயின் புக்கர் பரிசு பெற்ற ஆங்கில நாவலை விமர்சிக்கும் பேரா. டி.பி. விஜயகுமார் ஒரு மலையாளி. தலித் இயக்கச் செயல்வீரர். தலித்திய நோக்கில் அருந்ததி ராயை முன்நிலைப்படுத்துகிறார் விஜயகுமார்.

நிறப்பிரிகையின் இரண்டாவது இலக்கிய இணைப்பு தலித் இலக்கியச் சிறப்பிதழாக வெளிவந்தது. தொடர்ந்து தலித் இலக்கிய, இயக்க முயற்சிகளுக்கு முக்கிய இடமளித்து வருவது நிறப்பிரிகையின் குறிக்கோளாக இருந்து வருகிறது. தமிழில் புதிதாக அரும்பத் தொடங்கியுள்ள தலித் இலக்கிய முயற்சிகளுக்கு இதுவரை மராத்திய, கன்னட மொழி ஆக்கங்கள்தான் முன்னோடிகளாக இருந்து வந்துள்ளன. புதிதாக எழுத வரும் தலித் இளைஞர்களில் பெரும்பாலோர் தமிழில் மட்டுமே படிக்கக் கூடியவர்களாக உள்ள நிலையில் உலக அளவில் அவர்கள் பரிச்சயம் கொள்ளத் தக்க இலக்கியங்கள் சிலவற்றை தமிழில் அறிமுகம் செய்யும் நோக்கில் முதற் கட்டமாக ஆப்ரோ-அமெரிக்க எழுத்துக்கள் இங்கே மொழிபெயர்க்கப்படுகின்றன. ஆப்ரோ-அமெரிக்க அடிமைச் சூழலுக்கும் நமது சாதியச் சூழலுக்கும் பல ஒப்புமைகளும் உண்டு, வேறுபாடுகளும் உண்டு. எத்தகைய மொழி கையாளப்படுகிறது, என்ன மாதிரியான அனுபவங்கள் தேர்வு செய்யப்படுகின்றன முதலான அம்சங்கள் எழுதுகிற நமது தோழர்களுக்கு உதவலாம் என நம்புகிறோம்.

இதுவரை மேலை இலக்கிய அறிமுகம் என்றால் வெள்ளைத் தோலர்களின் எழுத்துக்கள்தான் என்கிற நிலை இருந்து வந்தது. இந்திரன் போன்றோரது ஒரு சில முயற்சிகள் தவிர வேறு பலரின் கவனத்தை ஈர்க்காத புலம் கருப்பர் இலக்கியம்.

இன்று உலக அளவில் இலக்கியக் கோட்பாட்டாளர்களாகவும், திறனாய்வாளர்களாவும் கருப்புச் சிந்தனையாளர்கள் மேலெழுந்து வருகின்றனர். அதிகாரங்களுக்கெதிரான நவீன சிந்தனைகளையெல்லாம் உள் வாங்கிக் கொண்டு கருப்பர் இலக்கியப் பிரதிகளுக்கென தனித்துவமிக்க அணுகல் முறைகளை இவர்கள் உருவாக்கியுள்ளனர். என்ரி லூயிஸ் கேட்ஸ், எச்.ஏ. பேக்கர் முதலானோர் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

இவர்களில் கேட்ஸ் முன்நின்று தொகுத்துள்ள கருப்பர் இலக்கியத் தொகுப்பொன்று (The Norton Anthology of African American Literature - Henry Louis Gates Jr, Nellie Y. Mckay, General Editors. W.W. Norton & Company, 1997) சமீபத்தில் வெளிவந்துள்ளது. சுமார் மூவாயிரம் பக்கங்களில் நேர்த்தியான முறையில் அச்சிடப்பட்ட ஒரே தொகுப்பாக இது அமைந்துள்ளது. சுமார் முன்னூறாண்டு கால கருப்பு இலக்கிய வரலாற்றைத் துல்லியமான காலப் பகுப்பு செய்து, ஒவ்வொரு காலத்திற்குமான முக்கிய ஆக்கங்களை நுண்மையாய்த் தெரிவு செய்து அடக்கமான அறிமுகங்களோடு இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நமது தொகுப்பில் இடம் பெற்றுள்ள பல ஆக்கங்கள் இதிலிருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளன. தெரிவுகளைச் செய்தவர் வளர்மதி. பல ஆண்டுகளாக கருப்பு இலக்கியங்களையும் கருப்பர்களின் சிவில் உரிமை இயக்க வரலாற்றையும் பயின்று வருபவர், ஆர்வமாய் கவனித்து வருபவர். தெரிவு செய்ததோடன்றி அவற்றைத் தக்கவர்களிடம் கொடுத்து மொழியாக்கி திருத்தங்கள் செய்து பிரதி எடுத்த பணியையும் அவரே செய்தார். இறுதியில் தஞ்சையில் எங்களோடு பதினைந்து நாட்கள் தங்கி இந்தப் பணிகளை அவர் மேற்கொண்டார். இத் தொகுப்பின் வெற்றியின் முக்கிய பங்கு அவருக்குண்டு.



படிப்பகம்

www.padippakam.com

# நிறப்பிரிகை

## இலக்கிய இணைப்பு - 4

### கருப்பர் (ஆப்ரோ - அமெரிக்க) இலக்கியச் சிறப்பிதழ்


**சிறுகதைகள்**

வெனயம் - பாமா 3

டன்டனக்கு டனக்கு டனக்கு - தய். கந்தசாமி 8

**கவிதைகள்**

என்.டிராஜ்குமார், நட.சிவகுமார், குருசாமி மயில்வாகனன் 11

**மறுவாசிப்பு**

சுந்தரராமசாமி-யின் 'புளியமரத்தின் கதை' - ராஜன்குறை 13

'தொட்டிக்கட்டுவீடு' நாவலில் வெளிப்படும் சாதிய மேலாண்மை - பெருமாள் முருகன் 21

**நூல் விமர்சனம்**

அமார்க்சின் மூன்று நூற்கள் - வெங்கடேஷ் சக்ரவர்த்தி 25

அருந்ததிராய் : பார்ப்பன இடதும் மனுநீதியும் - டிபி. விஜயகுமார் 28

**ஆப்ரோ - அமெரிக்க இலக்கியம்**

**கட்டுரைகள்**

கருப்பர் இலக்கியம் - வளர்மதி 31

கருப்பர் இலக்கிய விமர்சனம் - அமார்க்ஸ் 33

கலாச்சாரமும் அரசியல் எழுச்சியும் - ஜேன் கேரீ 39

நியூயார்க் நகரின் கெரில்லாக் கலைஞர்கள் - இவோர் மில்லர் 43

கருப்பாக இருப்பதை எப்படி உணர்கிறேன்- சோரா நீல் ஹர்ஸ்டன் 47

**அடிமைத் தன் வரலாறுகள்**

தன்னைப் பற்றித் தானே எழுதிக் கொண்ட ஆப்ரிக்கன் ஒருவனின் சுவையான வாழ்க்கைக் கதையிலிருந்து - அவுலத் ஈக்வானா 50

பிரெடரிக் டக்ளஸ் என்கிற அமெரிக்க அடிமையின் வாழ்க்கைக் கதை : அவரே எழுதியது : பிரெடரிக் டக்ளஸ் 58

**சிறுகதைகள்**

சிக்காகோ புழுக்கம் - க்ளாரன்ஸ் மேஜர் 65

நிழலைக் கொன்றவன் - ரிச்சர்டு ரைட் 69

அகன்ற வெளி - ஜேம்ஸ் ஆலன் மெக்ஃபெர்சன் 78

**கருப்பர் நாட்டுப்புறக் கதைகள்** 94

**கவிதைகள்** 96

**காமத்தின் அரசியல்**

விலகியபடியே நெருங்கிக் கொண்டு - ஆலிஸ் வாக்கர் 98

காமம் ஓர் ஆற்றலாக அதிகாரமாக - ஆட்ரே லோர்ட் 105

**செய்திகள், சிந்தனைகள், சிதறல்கள்**

விஜயபாரதமும், விஷ்ணுபுரமும் - பொ.வேல்சாமி 110

**இழப்புகள்** 111


**மொழிபெயர்ப்பாளர்கள் :**

நிறப்பிரிகை, வளர்மதி, இரா.நடராசன், லதா இராமகிருஷ்ணன், மோனிகா.

படிப்பகம்

www.padippakam.com



# நிறப்பிரிகை எழுத்தாளர் சந்திப்பு : 98

## "தமிழ் சினிமா"

இடம் : கும்பகோணம்

நாள் : ஜூலை 11, 12 (சனி, ஞாயிறு), 1998

## விவாதத் தலைப்புகள்

**முதல் நாள்:**

அமர்வு 1 : கலாச்சார மோதல் களமாக தமிழ் சினிமா வரலாறு.

அமர்வு 2 : சந்தை, ரசனை, கலாச்சாரக் கட்டுமானங்கள் வெகுசன - ஊடகமாக திரைப்பிரதி உருவாக்கம்.

அமர்வு 3 : புலனின்பக் களமாக திரைப்படக் காட்சி - சமுகவியல் தேவைகள்.

அமர்வு 4 : திரைப்படப் பிரதி - வாசிப்பின் சாத்தியங்கள்.

**இரண்டாம் நாள்**

அமர்வு 1 : சினிமா பார்க்கும் நடைமுறையின் வரலாறு (பார்வையாளர்கள் மட்டுமே பேசும் அரங்கு)

அமர்வு 2 : திரையரங்கங்கள் என்கிற பொது மன்றத்தின் முக்கியத்துவமும் வரலாறும்.

அமர்வு 3 : சினிமா பார்வையாளர்களாகப் பெண்கள் (கள ஆய்வுக் கட்டுரைம் பார்வையாளர் கருத்துரையும் மட்டும்).

அமர்வு 4 : சினிமா பார்வையாளர்களாக தலித் மக்கள். (தலித் இளைஞர்கள் பெரிதும் பங்கேற்கும் அமர்வு).

**குறிப்புகள் :**

1. கருத்தரங்கு நடைபெறும் இடம்,ஒவ்வொரு அமர்விலும் எதிர்பார்க்கப்படும் விவாதத்திற்கான கேள்விகள் முதலியவற்றை நி.பி.முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு கொள்பவர்களுக்கு மட்டுமே அழைப்புகள் அனுப்பப்படும்.

2. விரிவான கட்டுரைகள் வாசிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு அமர்வையும் ஒருவர் தொடங்கி வைத்து விவாதக் குறிப்புகளை முன் வைப்பார். பார்வையாளர்கள் முழுமையாகக் கருத்துச் சொல்ல வாய்ப்பளிப்பது நோக்கம்.

3. திரைப்பட இளம் இயக்குனர்கள் தங்கர் பச்சான், அகத்தியன், சேரன், களஞ்சியம், மற்றும் சில உதவி இயக்குனர்கள், வெங்கடேஷ் சக்ரவர்த்தி முதலான சினிமா கோட்பாட்டாளர்கள் பங்கேற்க இசைந்துள்ளனர். சில தலைப்புகளில் இவர்களில் சிலர் விவாதங்களைத் தொடங்கி வைக்கலாம்.

4. விவாதங்களைத் தொடங்கி வைக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்.

5. சில முக்கிய தமிழ்ப் படங்களைத் திரையிட முயல்கிறோம்.

6. தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்கிறோம். உணவு அவரவர் பொறுப்பு.

படிப்பகம்

www.padippakam.com



**சிறுகதைகள்:**

# வெளயம்

*பாமா*

மேட்டுச்சேரி கிராமம் அன்னைக்கு ரொம்பா ஆரவாரமா இருந்துச்சு. என்ன ஏதுன்னு வெசாரிக்கப்போனா, ஊருக்குள்ள எம்.எல்.ஏ. வர்ரதா சொன்னாக. கோயிலுக்கு முன்னால பந்தலு போட்டு அலங்காரஞ் செஞ்சுருந்தாக. சிறுசுலருந்து பெருசுவர அம்புட்டுப்பேரும் சிருச்ச மொகத்தோட அங்குட்டும் இங்குட்டுமா அலஞ்சுகிட்டு இருந்தாக. சினிமாப்பாட்டு வேற லவுடு ஸ்பீக்கர்ல அலறிக்கிட்டு இருந்துச்சு.

ராசுப் பெயலும் பள்ளிக்கொடம் முடுஞ்சதும் வீட்டுக்கு ஓடியாந்தான். வீட்டு வாசல்ல நின்னமாணிக்க பைக்கட்டத் தூக்கி வீட்டுக்குள்ள விட்டெறுஞ்சிட்டு விர்ருன்னு கோயிலுப்பக்கம் ஓடுனான். சனங்க பூராம் மேடைக்கு முன்னால ஒக்காந்து பேசிக்கிட்டு இருந்தாக. கூட்டத்துக்குள்ள அம்மயப் பாத்த ராசு இடுச்சு புடுச்சுப் போயி அவாமடில நங்குன்னு ஒக்காந்தான்.

"ஏண்டா, ஒஞ்சூத்து கீழ ஒக்காராதோ? அதியப்புடுச்சு பெய புள்ள. கதவச் சாத்திட்டு வந்தியாடா? நாயி போயி நக்கிட்டுப் போயிருச்சுன்னா ரவைக்கு நம்ம ரெண்டுபேரும் பட்னியாக் கெடக்க வேண்டியதுதான்", ராசோடெ அம்மெ ரெங்கம்மா சொன்னா.

"ம்... சாத்திட்டேன்மா", வேகமாகச் சொன்னான் ராசு.

"சரி... நீ செத்த கீழ எறங்கி ஒக்கார்டா. தொடையெல்லாம் வலிக்குது. மூனாங்கௌாசுப் படிக்கிற பெயல இன்னும் மடில தூக்கிச் செமக்கச் சொல்றாம் பாரு. இருக்க இருக்க நீ என்னலே இன்னும் பச்சப் பிள்ளையா?", சொல்லிக்கிட்டே ராசத்தூக்கி கீழ ஒக்கார வச்சா ரெங்கம்மா.

ராசு கேட்டான், "ஏமா, நம்மளுக்கும் லோனு மாடு குடுப்பாகளாமா?"

"குடுப்பாக... இந்த லோன வாங்க விக்காதத வித்து அவனுக்கு இவனுக்குனு சன்னப் பணமா குடுத்திருக்கேன். பணத்த வாங்கித் தின்னு போட்டு ஏமாத்தாமெ கடேசியா இம்புட்டு நாளுக் கழுச்சு இப்பமாச்சும் லோனு குடுக்காகளே.... சரி மாடு வாங்குனாவிட்டி நீ மாடு மேப்பியா?"

"சரிம்மா– நான் மேய்க்கேன். ஆனா... நானு பள்ளிக் கொடத்துக்குப் போனுமே...", ராசு இழுத்தான்.

"பள்ளிக்கொடம் போயிவந்த நேரத்துல மேய்க்கனும்டா"

"சரி, எங்க கௌாசு பலராமன் வீட்டுலகூட மாடு இருக்காம். முந்தா நேத்து சொன்னான்."

பேசிக்கிட்டிருக்கையிலேயே எம்.எல்.ஏ. கார்ல வந்து எறங்குனாரு. சனம்பூராங் கைதட்டி ஆரவாரஞ்செய்ய, எம்.எல்.ஏ. மேடையில ஒக்காந்தாரு. நெறய்யப்பேரு மேடைக்கு வந்து எம்.எல்.ஏ.வோட தங்க மனசெ, தாராள கொணத்தப் பத்தி பாராட்டிப் பேசிட்டு மால மரியாதெ செஞ்சாக. எல்லாம் முடுஞ்சப்பெறகு எம்.எல்.ஏ. எந்துருச்சு நாலுவாத்த பேசிட்டு, ஒவ்வொருத்தரயாக் கூப்புட்டு லோனக் குடுத்தாரு.

ரெங்கம்மான்னு பேரு கூப்டவும் ராசு அவுகம்மெ எந்துருச்சுப் போனா. ராசும் கூடயே போனான். லோன வாங்கிட்டுத் திரும்பி வரயில ராசு சத்தமாக் கேட்டான். "ஏம்மா இன்னும் யாருக்குமே மாடு குடுக்கல. நமக்கு மாடு தரலம்மா. எப்பம்மா குடுப்பாக?"

"ஏலெய், இங்கயாடா மாடு குடுப்பாக? இங்க லோனுதாம்டா குடுப்பாக. அதக்கொண்டி நம்மதாண்டா நல்ல மாடாப் புடிக்கனும். ஒனக்கு எல்லாத்தயும் வெளக்கனும். இல்லன்னா ஓங்கண்ணுல ஒறக்கம் வராதே", ரெங்கம்மா சொல்லிக்கிட்டே அவனக் கூப்டுகிட்டு வந்தா.

மறாது வாரத்துல இருந்து மேட்டுச்சேரி தெருவுகள்ள லோனு மாடுகளும், கன்னுக் குட்டிகளுமா கெட்டிக் கெடந்துச்சு. காலைலயும், சாயங்காலமும் மாட்டோடெ, கன்னோடெ, பாலு பீச்சுர கேனோடெ சனங்க அலமோதிக் கிட்டு கெடந்தாக. ரெங்கம்மாளும் ஒரு செனமாட்டப் புடுச்சுட்டு வந்து கெட்டிப் போட்டுருந்தா. மாடு இப்பமோ பெறகோ ஈனுக்கிரும் போல இருந்துச்சு.

தெனமும் பள்ளிக்கொடம் முடுஞ்சு வந்த ஒடனே ராசு கேப்பான். "ஏம்மா, என்னம்மா நம்ம மாடு மட்டும் இன்னுங் குட்டியே போடல. எல்லாரு மாடும் பாலு பீச்சுது தெரிமா? எப்பமா நம்ம மாடு கன்னுபோடும்?"

ராசுப்பெய சும்மா சும்மா தொணச்சுக்கிட்டே இருப்பான். ரெங்கம்மாளும் இன்னைக்குப்போடும், நாளைக்குப் போடும்னு சொல்லிக்கிட்டு வந்தா. அவளும் மாடு கன்னு எப்பப் போடும்னு எதிர்பாத்துக்கிட்டே இருந்தா.

ராசு ஒன்னாங் கௌாசுப் படிக்கையில அவுகய்யா செத்துப் போனான். அவனுக்கு எல்லாமே அவுகம்மெதான். ரெங்கம்மாளுக்கும் கொஞ்ச வயசுதான். மிஞ்சி மிஞ்சிப் போனா இருவத்தஞ்சு வயசுதான் இருக்கும். அவள இன்னொரு கலியாணஞ் செய்யச் சொல்லி எல்லாரும் சொல்லிப் பாத்துட்டாக. அவுக சாதில ரெண்டாங் கலியாணம் செய்ரது சர்வ சாதாரண வெசயம் னாலும், ரெங்கம்மா இன்னொரு கலியாணம் வேண்டாமின்னுட்டா. ராசுப்பயல ஆளாக் கனும்னு அவளுக்கு ரொம்பா ஆச. இந்த லோனு மாட்டக் கூட அதுக்குத்தான் வாங்குனா. இதுல எதுனாச்சும் மிச்ச மீதி வச்சு ராசெ முன்னேத்திரனும்னு கெனாக் கண்டுக்கிட்டு இருந்தா.

படிப்பகம்

www.padippakam.com



அன்னைக்கு ஞாயித்துக் கெழம லோனு மாடுகளுக்குக் காதுல கம்மலு குத்துரதுக்கு மேட்டுச்சேரிக்கு அதிகாரி வந்துருந்தாரு. ஒவ்வொரு மாட்டயும், கன்னயும் பாத்துட்டு காதுல கம்மலு குத்துனாரு. ரெங்கம்மாளும் மாட்டக்கொண்டு போயி காட்டுனா. ராசும் கூடப்போனான். மாட்டப் பாத்த அதிகாரி கன்னுக்குட்டிய எங்கன்னு கேட்டாரு. பக்கத்துல பூவசரம் மரத்துல கெட்டிக் கெடந்த கன்னுக் குட்டியக் காட்டி, அதாம்னு சொன்னா ரெங்கம்மா. ஒடனே ராசு அவசரமாச் சொன்னான், "அது எங்க மாடு போட்ட குட்டி இல்ல. அது சாமிப்பெய அவுக மாடு போட்ட குட்டி. எங்க மாட்டுக்கு இன்னுங் குட்டியே பெறக்கல."

இதக் கேட்டதும் அந்த அதிகாரி ரெங்கம்மாளோட மாட்டுக்குக் கம்மலு குத்தல. மாடு ஈண்டப் பெறகு வந்து கூப்புடச் சொல்லிட்டு, காருல ஏறிப் போயிட்டாரு. ரெங்கம்மாளுக்கு ராசுப்பெய மேல கோவங்கோவமா வந்துச்சு. வீட்டுக்கு வந்ததும் ராசெ நல்லா வஞ்ச போட்டா.

"ஏண்டா, வெவரங்கெட்ட பெயலே, ஓ வாயெ வச்சுக்கிட்டு சும்மா இருந்துருந்தின்னா அவரு நம்ம மாட்டுக்கும் கம்மலக் குத்திட்டுப் போயிருப்பார்ல இனி இதுக்குன்னு அவரப் போயி மெனக்கிட்டு கூட்டியாரனும் கூப்டாலும் சும்மாயா வருவானுக? அஞ்சோ பத்தோ அவனுகளுக்கு அழுதாத்தான் வருவானுக."

அங்ன இருந்தவுகளும் ராசெ சகட்டு மேனிக்கா வஞ்சாக. ராசுக்கு ஒன்னும் வெளங்கல. அவெங்கேட்டான், "எதுக்கு எல்லாரும் வைறீக? நானு பொய்யா சொன்னேன்? நெசத்தத்தானெ சொன்னேன். எங்க மாடுதான் இன்னுங்குட்டி போடலியே... என்னம்மா...? போடலதானம்மா...?"

"போடா... போ... என்னம்மா நொன்னம் மான்னு. பொழைக்கத் தெரியாத பெயலா இருக்கியே. நெசத்தச் சொல்லிட்டாப்ல ஒனக் கென்ன மெடலா குத்திட்டாக? ஒரு எழவுந் தெரியல. என்னன்னுதாஞ் சீவிக்கப் போறியோ, ரெங்கம்மா சலிப்பாச் சொன்னா.

"எங்க டீச்சரு எப்பயும் நெசத்தத்தாஞ் சொல்லனும்னு சொல்லியிருக்காங்கம்மா. பொய்யே சொல்லக்கூடாதாம். பொய் சொன்ன வாய்க்குப் போசனங் கெடைக்காதாம்."

"ஆமா... மெய்யச் சொல்லிட்டாப்ல அந்தமானிக்கப் போஉசனங் கெடச்சுருதாக்கும். நம்மெல்லாங் கஸ்டப்பட்டு ஒழச்சாத்தான்டா ஒருவாக் கூழாவது குடிக்கலாம். வயித்துப் பாட்டுக்கே இங்க என்னமோ சொன்ன கெணக்கா இருக்கு. இதுல இவெ பொய்யி சொல்லாதெ, மெய்யச் சொல்லுன்னு உசுர வாங்குறான். நல்லா மூனு நேரமும் சோத்தத் தின்னுட்டு ஒக்காந்துட்டு பொய் சொல்லாதெ, களவாங்காதேன்னு நம்மகிட்ட சொல்லுவாகாடா. நம்ம நெலமயில இருந்து பாத்தாத்தான் தெரியும்". ராமாயி சொன்னா.

"எப்பிடி இருந்தாலும் பொய்யே சொல்லக் கூடாதாம். காந்தித் தாத்தா கூட சொன்னாராம்", ராசு திரும்பியும் சொன்னான்.

ராசு சொன்னதக் கேட்ட ரெங்கம்மா நெனச்சா, இந்தப்பெய சொல்றதும் நாயமாத்தாந் தெரிது. ஆனா இந்த நாயமெல்லாம் நம்ம பொழப்புக்குச் சரிப்பட்டு வராதே... இவனப் படிக்க வச்சாலும் தப்பா இருக்கு... படிக்க வைக்கட்டாலும் தப்பாத்தான் இருக்கு... என்ன செய்றது...."

நாலஞ்சு நாளுக்கழுச்சு ரெங்கம்மாளோட மாடு ஈனுக்கிருச்சு. ராசுப்பெயலுக்கு ரொம்பாச் சந்தோசம். பள்ளிக்கொடத்துல கூட செலநேரம் கன்னுக்குட்டிய நெனச்சுக்கிட்டு கெடப்பான். டீச்சருகிட்ட, மத்த பிள்ளைககிட்ட அவுக மாட்டயும், கன்னயும் பத்தி பேசிக் கிட்டு இருப்பான். பள்ளிக்கொடம் முடுஞ்ச ஒடனே முந்தி மாதிரி அங்ன இங்ன நிக்காமெ ஒடனே வீட்டுக்கு வந்து அம்மெகூட பாலு பீச்சுரதுக்குக் கன்னுக்குட்டியப் புடுச்சுட்டுப் போவான்.

பள்ளிக்கொடத்துல ஒருநாளு பெயல்க ஒக்காந்து வீட்டுல நிக்கிர அவுகவுக மாடுகளப் பத்திப் பேசிக்கிட்டு ருந்தானுக. ராசும் அவுக மாட்டப்பத்தியும், கன்னுக் குட்டியப் பத்தியும் சொன்னான்.

"எங்க ஊர்லயே எங்கமாடுதான் நெறய்யாப் பாலு பீச்சுது. நானு இப்ப தெனமும் எங்க கன்னுக்குட்டிய சாயங்காலம் மேப்பேன்."

இதக்கேட்ட பலராமன் சொன்னான் "ஓங்க மாடுதான் ரொம்பாப் பாலு பீச்சுதா? எங்கமாடு ஒரு நாளைக்கு 8 லிட்டர் பாலு பீச்சும் தெரியுமா?"

"எங்கமாடு ஒரு நாளைக்கு 10 லிட்டரு பாலுல பீச்சுது". ராசு பதுலுக்குச் சொன்னான். பலராமனுக்குக் கோவம் வந்துருச்சு. கோவமாக் கத்துனான். "ஏய் போடா... போ.... ஓங்க மாடு லோனுமாடு. அது போயி 10 லிட்டரா பீச்சுது! யாருட்ட வந்து பொய்யி சொல்ற?... எங்கமாடு சொந்தமாடு. தெரிம்ல?"

"லோனு மாடுன்னா பாலு பீச்சாதா? போடா... போ... நீ யாருட்டனாலும் கேட்டுப்பாரு. எங்கமாடுதான் நெறய்யாப் பீச்சுது", ராசு சொன்னான்.

பதுலுக்குப் பலராமனும் எளக்காரமாச் சொன்னான், "எப்பிடின்னாலும் அது லோனு மாடுதானெ... சொந்தமாடு இல்லியே... லோனு மாட்ட வச்சுக்கிட்டு பீத்துரான்."

ராசு ஒன்னுஞ் சொல்லல. வீட்டுக்கு வந்ததும் அம்மயிட்ட நடந்ததப் பூராஞ் சொன்னான். அவெஞ் சொன்னதக் கேட்ட ரெங்கம்மா சொன்னா. "ஏலெய், பலராமன்னா அந்த கொளத்தங்கரத் தெருப்பெயதானெ? அவெங்கூட சண்ட கிண்ட போட்டுக்கிராதடா. அவுகப்பனுக்கு இருக்ர சொத்துக்கு நூறு மாடு கூட சொந்தமா வாங்கி உடலாம். அவெ என்ன நம்மள மாதிரி மேட்டுச் சேரிக்காரனா? லோனு மாடுன்னா அம்புட்டுக்கானு பெயபிள்ளைக்குக்கூட எளக்காரமா இருக்கு. என்ன செய்றது. நீயி எதுக்குடா நம்ம மாடு பத்து லிட்டரு பீச்சுதுன்னு சொல்ற? கொறச்சுச் சொல்ல வேண்டியதுதானே?"

"நீ தானம்மா அன்னைக்குப் பத்து லிட்டருன்னு சொன்ன? பெறகு எதுக்கு கொறச்சுச் சொல்லனும்ங்ற? உள்ளதத்தானே சொன்னேன்."

படிப்பகம்

www.padippakam.com



"உள்ளதச் சொன்னா ஒடம்பு எரியும்டா அவனுகளுக்கு. நம்ம இப்பிடி வெகுளித்தனமா இருக்கப் போயிதான் எல்லாப் பெய மக்களும் நம்மள ஈசியா ஏமாத்த லாம்னு நெனைக்கானுக."

ராசு பதுலொன்னுஞ் சொல்லல. அம்மெ சொன்னதும் அவனுக்குச் சரியாப் புரியல. "உள்ளதச் சொல்றது தப்பா? பொய் சொல்லக் கூடாதுங்காக. பெறகு பொய்தான் சொல்லனும்ங்காக. பொய் சொல்லாட்டிப் பொழைக்க முடியாதாம்... அம்மெ சொல்றா. பொய் சொன்னா பொழைக்க முடியாதாம்... டீச்சர் சொல்றாக. உள்ளத சொன்னம்னா ஏமாத்துவாகளாம். என்னமோ... ஒன்னுமே புரியல. கொழப்பமா இருக்குது", ராசு நெனச்சுக்கிட்டான்.

ஒருநாள பள்ளிக்கொடம் முடுஞ்சு ராசு ரொம்பா லேட்டா வீட்டுக்கு வந்தான். ரெங்கம்மா கேட்டா, "இன்னைக்கு ஏண்டா இம்புட்டு நேரம்? பாலு பீச்சப் போம்போது நீயி வருவ வருவன்னு பாத்துட்டு பெறகு நானே போயிட்டேன்."

ராசு பதுலொன்னுஞ் சொல்லாமெ உம்முன்னு ஒக்காந்துருந்தான்.

"ஏலேய், ஒனியத்தானே கேக்கேன். என்னலே ஆச்சு? இப்பிடி தலப்பிள்ள சாகக்குடுத்தவா மாதிரில ஒக்காந்துருக்க?"

"ஏம்மா, பாம்பு தவளயத் திங்கிமா?", ராசு மெல்லக் கேட்டான்.

"எதுக்குடா இம்புட்டு நேரம்னு கேட்டா, நீயி என்னத்தயோ கேக்க? இப்ப என்னத்துக்கு இதக் கேக்க?"

"நீயி திங்கிமான்னு மொதல்ல சொல்லு."

"தீங்கும் ஏண்டா... பாம்ப கீம்ப பாத்தியா...?"

"இன்னைக்கில்லம்மா... பள்ளிக்கொடம் உட்டு வரும்போது நாங்க பாம்பு பாத்தோம்."

"எங்கனக்குள்ளடா பாத்தீக?"

"அந்தச் சுடுகாட்டுக்கிட்டப் பாதை கெழக்காமெ வளையுது பாரு. அங்னக் குள்ள ரெண்டு பாம்பு பாத்தோம்."

"ரெண்டு பாம்பா? அட பாதகத்தி மக்கா... எம்மந்தண்டிப் பாம்புகடா?"

"பெரு... சும்மா. ரெண்டு பாம்புகளும் ஒரு தவக்காய்க்குச் சண்ட போட்டுக்கிட்டு கெடந்துச்சுக."

"பாம்புக எப்பிடிடா சண்ட போடும்?"

"நெசம்மா போட்டுச்சும்மா... ஒரு தவக்காய ரெண்டு பாம்புகளும் வாயிட்ட கவ்விக்கிட்டு இழுத்துக்கிட்டு கெடந்துச்சுக. பாவம்மா தவக்கா. அதோட ஒரு காலு ஒரு பாம்போட வாய்ல இருக்கு; இன்னொரு காலு இன்னொரு பாம்போட வாய்ல இருக்கு. ஒன்னு இங்குட்டு இழுக்க, இன்னோன்னு அங்குட்டு இழுக்க தவள கத்தி கத்தி அழுதுச்சுமா."

"அப்பயும் ஒரு தவக்காய ரெண்டு பாம்பாடா கவ்விக்கிட்டு கெடந்துச்சுக... சே... கண்றாவிடா."

"யாராச்சும் தவக்காயக்... காப்பாத்த மாட்டாகளான்னு நெனச்சேன்மா."

"பாம்பு வாய்க்குள்ள ஆப்டத எப்பிடிடா காப்பாத்த முடியும்? பாவம்... அந்தத் தவக்காய்க்கு அம்புட்டுத்தான் விதி."

"கல்லக் கொண்டி பாம்புகள இறுத்தலாம்னு நெனச்சோமா... ஆனா பாம்புகளப் பாத்தா பயந்து கெடந்துச்சு. அதான் இறுத்தல."

"எதுக்குடா பயம்? எட்டாக் கைல நின்னுக்கிட்டு ஒற்றே இறுத்தா இறுத்திக் கொல்ல வேண்டியதுதானலே."

"ஐய்யோ... பாம்புகள அடிக்கக் கூடாதாம்மா. அதுக நல்ல பாம்புகளா இருந்துட்டா அம்புட்டுத்தான். நம்மளக் கருவச்சு கொத்தியே போடுமாம். ஏம்னா அதுக சாமி பாம்புகளாம் எங்க டீச்சரு சொன்னாக."

"போடா... போ... சாமியாவது... கீமியாவது... எம்புட்டு நல்ல பாம்புகள நம்மாளுக கொன்னு தூக்கி எறுஞ்சுருக்காக? நீயி வகுத்துல ஏழு மாசம் இருக்கையிலயே நானு நல்ல பாம்ப அடுச்சுருக்கேன். வகுத்துப் புள்ளக்காரி பாம்பெ அடிக்காதே... பெறக்கிற பிள்ள பாம்பு கெணக்கா நாக்க நாக்க வெளிய நீட்டிக்கிட்டு திரியும்னு சொன்னாளுக. அதெல்லாம் சும்மாடா... நீ என்ன நாக்கயா நீட்டிக்கிட்டுத் திரிர?"

"பெறகு எதுக்கும்மா டீச்சரு அப்பபடிச் சொல்றாக?"

"அவுகளுக்கு என்னடா தெரியும்? ஏதோ புஸ்தகத்துக்குள்ள எழுதி இருக்கிறத படுச்சுட்டு வந்து அப்படியே சொல்லிக் குடுக்காக. நடமொற வாழ்க்கையப் பாத்தின்னா வேற மாதிரித்தான் இருக்கும். மொதல்ல, நாலெழுத்து எழுதப் படிக்கத் தெருஞ்சுக்கோடா. அதக் கருக்கடயாச் செய்யி. என்ன?"

"எங்க டீச்சரு எம்புட்டுப் படுச்சுட்டு வந்துருக்காக? அவுக சொல்றது தப்பாகும்? நீயி ஒன்னு கூடப் படிக்கல. நீயி சொல்றது ரைட்டாக்கும். நானு டீச்சர்ட கேப்பேன்.... கேக்கட்டா?"

"நீயி இப்படி குண்டக்க மண்டக்கப் பேசாதடா. பெரியவுக சொன்னா கேளு. மொளச்சு மூனு எல உடல. அதுக்குள்ள இவெ எனக்குப் பாடஞ் சொல்ல வந்துட்டான்."

"இப்ப நீ பெரியவளா? டீச்சரு பெரியவுகளா? யாரு சொல்றதக் கேக்க? சொல்லு. நீயி அப்பப்ப எனியக் கொழப்பி உடுறம்மா", ராசு சொன்னதுக்கு ரெங்கம்மா ஒன்னுஞ் சொல்லல.

அன்னைக்கு ராத்திரி தூக்கத்துல ராசுக்கு பாம்பு கெனாதான் வந்துச்சு. அவனால இத ரொம்ப நாளைக்கு மறக்கவே முடியல. தெனமும் பள்ளிக்கொடம் போம்போது, வரும்போது அந்த எடத்தப் பாத்தாலே அவனுக்கு அந்தப் பாம்புகளும், தவளையுந்தான் நெனப்புக்கு வரும். நல்ல பாம்பு சாமியா இல்லையான்னு பொழுதனிக்கும் மண்டயப்போட்டு கொழப்பிக்கிட்டு கெடந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



மாட்டு லோன அடச்சுட்டு ஒழுகுற வீட்டுக் கூரையப் பிருச்சுட்டு மொதல்ல அத மேயனும்னு ரெங்கம்மா நெனச்சா. ராசுப் பெய பள்ளிக்கொடம் போக புதுப் பைக்கட்டு ஒன்னு கேட்டுருந்தான். அடுத்த வாரம் புதுப்பையி வாங்கித் தாரதா சொல்லியிருந்தா ரெங்கம்மா. ராசுப்பெய அவுக கௌாசுப் பிள்ளைககிட்ட பூராம், அவனுக்குப் புதுப்பைக் கட்டு வாங்கப் போற வெசயத்த சொல்லிக்கிட்டு திருஞ்சான். பைக்கட்டு வாங்குனப் பெறகு புதுப் பேனா ஒன்னு வாங்கனும்னு நெனச்சுக்கிட்டான்.

அந்தவாரம் சனிக்கெழம பள்ளிக்கொடம் லீவு. வழக்கம்போல ரெங்கம்மா மாட்டக் கொண்டு போயி ஊருக்குக் கெழக்கு இருந்த நெல்லறுத்த வயக்காட்டுல மேய உட்டுட்டு வந்தா. அங்க எப்பயும் பத்து, இருவது மாடுக. பசுவும், எருமையுமா மேயும். ராசு பள்ளிக் கொடத்துல சத்துணவு சாப்டுட்டு, செத்த நேரம் வௌாண்டுட்டு வீட்டுக்கு வந்தான். ரெங்கம்மா சொன்னா, "ஏலெய் மாட்ட கெழக்க கொண்டு போயி மேய உட்டுருக்கேன். போயி எங்ன நிக்கின்னு பாத்துட்டு வாடா. தூரந் தொல வட்டுக்குப் போயிராமெ."

ராசு போயி பாத்துட்டு வந்து சொன்னான், "ஏமா, உயிர்வேலி முள்ளுகளா இருக்குல... அங்னகுள்ள மேயுது."

"இங்குட்டு புல்லு இருக்ற லெக்கமாப் பாத்து பத்தி உட்டுட்டு வரக் கூடாதுடா?"

"ஏம்மா, நானு கன்னுக்குட்டிய அவுத்துட்டுப் போயி மேய்க்கட்டாமா?"

"வேண்டாம்டா... நீயி கொண்டு போயி பாலக்குடிக்க உட்டுருவெ. பெறகு என்னத்த பீச்சி ஊத்துறது? நானு இப்ப வெயிலு தாழ மாட்டக் குளுப்பாட்டப் போறேன். அப்ப கன்னுக்குட்டிய அவுத்துட்டுவா. இப்ப அதுக்குக் கொஞ்சம் புல்ல அள்ளிப் போடுடா."

"ஏம்மா, அப்டின்னா கன்னுக்குட்டிய நாந்தான் குளுப்பாட்டுவேன். என்னம்மா எனக்கு ஆசையா இருக்கும்மா."

"நீ என்னத்தடா குளுப்பாட்டுவெ? அவா துள்ளிக் குதுச்சுட்டு ஒட்டங்காட்டுவாளே. ஒனக்கா அம்புட்ரப் போகுது?"

"என்னம்மா நீயி. அப்ப இப்ப அவுத்துட்டுப் போயி கவுத்தப் புடுச்சுக்கிட்டே மேய்க்கேன். நீயி பெறகாட்டி வா."

"ஏ இந்தப் பெயலுக்கு ஒரு தடவ சொன்னா தெரியமாட்டேங்கி. பாலக் குடுச்சுரும்டான்னு சொன்னா இல்லாத மணியம் பண்றான். ஒனக்குப் புதுப்பைக்கட்டு வேணுமா வேண்டாமாடா?", ரெங்கம்மா அதட்டுனா.

"சரி... சரி பைக்கட்டு வேணும்மா. பெறகாட்டிக்கு ஒங்கூடயே கன்னுக்குட்டியப் பத்திக்கிட்டு வாரேன்."

வெயிலுதாழவும் ரெங்கம்மாளும் ராசும் கன்னுக்குட்டியோட வயக்காட்டுப் பக்கம் போனாக. செத்த நேரங் கழுச்சு மாட்டயும், கன்னுக்குட்டியயும் குளிப்பாட்டிட்டு வீட்டுக்குப் பெறப்படயில ரெங்கம்மா சொன்னா, "ஏலேய் நீயி கன்னுக் குட்டியப் புடுச்சுக்கிட்டு இங்னக்குள்ள நின்னுக் கிட்டு ஆளு வருதான்னு பாத்துக்கோ. நாம்போயி அந்த வேலில கெடக்ர பீக்கங்காய்ல ரெண்டு புடுங்கிட்டு வாரேன். காய் வாங்கத்துட்டு இல்லடா."

"ஐயய்யோ வேண்டாம்மா அது ஊராவுக காயி... களவாங்கக் கூடாது. போகாதமா. பள்ளிக் கொடத்துல கூட சொன்னாக. களவாங்கக் கூடாதாம். அடுத்தவுக பொருளுக்கு ஆசப்படக் கூடாதாம்மா", ராசு சொன்னான்.

"ஏ சும்மா கெடடா, நீயும் ஒம் பள்ளிக்கொடமும். நீயி ஆளு பாருடா. நாம் போயிட்டு புடுங்கிட்டு வாரேன்". சொல்லிட்டு ரெங்கம்மா விருட்டுனு போயி ரெண்டு காயப்புடுங்கி மடிக்குள்ள வச்சுக்கிட்டு வந்தா.

ராசுப்பெய திருதிருன்னு முழுச்சுக்கிட்டு கன்னுக்குட்டியப் பத்திக்கிட்டு வந்தான். வார வழியெல்லாம் அவனுக்கு மனசுக்குள்ள கேள்விமேல கேள்விதான். கேட்டா அம்மெ வைவாளோன்னு பயந்துகிட்டு வந்தான்.

வீட்டுக்குவந்து பாலு பீச்சிட்டு வந்தா ரெங்கம்மா. ராசு உம்முன்னு வீட்டுத் திருணயில ஒக்காந்துருந்தான். ரெங்கம்மா புடுங்கிட்டு வந்த பீக்கங்காயத் தோலு சீவிட்டு, வெட்டிக்கிட்டிருந்தா. அப்ப அங்க வந்த சீனிப்பாட்டி கேட்டா, "பீக்கங்காயி ஏதுடி? நல்லாப் பிஞ்சுக்காயா இருக்கே... பாசிப்பருப்பு போட்டு கொழம்பு வச்சா நல்லா இருக்கும்."

"இந்தக்காய அந்த மொதலாளி தொரச் சாமியோட காட்டு வெலில இருந்து புடுங்கிக்கிட்டு வந்தேன். இப்பிடி புடுங்கி கிடுங்கி வச்சாத்தான் உண்டு. கடைகளுக்குப் போயி காயி வாங்கித் திங்கிரமாதிரியா நம்ம நெலம இருக்கு. இந்த ரேசங்கட அரிசி கெடைக்கிறத பெரிய காரியம்", ரெங்கம்மா அலுத்துக்கிட்டா.

இதக் கேட்டுக்கிட்டிருந்த ராசு சொன்னான், "பாட்டி, பாட்டி களவாங்குறது தப்புதான? அடுத்தவுக பொருள எடுக்கக் கூடாதுல பாட்டி."

"அப்படித்தாண்டா படிச்ச பெயமக்க சொல்லிக்கிட்டுத் திரிராக. ஆனா அவுக களவாங்காமலா இருக்காக?" பாட்டி பதுலுக்குக் கேட்டா.

"இல்லையே. களவாங்க மாட்டாங்களே. எங்க டீச்சருகூட சொன்னாகளே", ராசு அடுச்சுச் சொன்னான்.

"அவுக சொன்னா, இல்லன்னு ஆயிருமா? போடா.... போ... நீயி பள்ளிக்கொடம் போனாலும், ஆபிசுகளுக்குப் போனாலும் துட்டு குடுக்காமெ ஒரு காரியம் நடக்காது. எல்லாப் பெயலுகளுக்கும் நெத்தில துட்டு வச்சாத்தான் கையெழுத்துப் போட்டுத் தருவானுக. பள்ளிக் கொடத்துல பிள்ளக்காடுகளச் சேக்கனும்னாலும் துட்டு கெட்டனும். ஏ... அம்புட்டுத் தூரம் போற? ஒங்கம்மெ இந்த லோனு மாட்டப் புடிக்க எம்புட்டுப் பேத்துக்கு எம்புட்டுத் துட்டு கொட்டி அழுதுருப்பா! இதெல்லாமே திருட்டுத்தாம்டா. அத ஒரு பெயலும் வெளிய சொல்ல மாட்டானுக. நீயி என்னமோ இந்தக் காயப் புடங்கியாந்ததுக்கு பெரிய பெரசங்கம் வைக்ர. தொண்டைக்குக் கீழ போனா நரகலு. இதப் புடுங்குனதுனால நாம யாரு வகுத்தலயும் அநியாயமா அடிக்கலயே! அந்தக்

படிப்பகம்

www.padippakam.com



காட்டுக்காரனுக்கு இருக்குர நெலம் நீச்சுப்பத்தி ஒனக்கென்ன தெரியும். நீயி பச்சப்புள்ளதானே. அதான் புஸ்தகத்துல படிக்கிறத பூராம் நெசமுன்னு நெனச்சுக்கிட்டு இருக்க."

பாட்டி சொல்லி முடிக்கவும் ராசு பதுலே பேசல. ஆனா அவனுக்குள்ளேயே ஒரு முடிவுக்கு வந்தவனா பேசிக்கிட்டான். 'நம்மகிட்ட இல்லன்னா இருக்குறவங்க கிட்ட இருந்து எடுக்குறது தப்பு இல்லாம். சரிதான். ஆனா. எதுக்கு நமக்கு மட்டும் ஒன்னுமே இல்ல? அந்த பலராமனுக்கு மட்டும் எல்லாமே இருக்கு? அது எப்படி? நாளைக்குப் பள்ளிக்கொடத்துல டீச்சருட்ட கேக்கனும்.'

ரெங்கம்மா கொழம்பு வச்சு, சோத்தக் காச்சி ராசுக்குச் சுடச்சுடப் போட்டுக் குடுத்தா. ராசுக்குப் பசின்னாலும் பீக்கங்கா கொழம்ப ஊத்திச் சாப்புடுரதுக்கு மனசுக்கு எப்பிடியோ இருந்துச்சு. அவுகம்மயிட்ட சொன்னான், "ஏம்மா, எனக்கு எப்பயும் போல தண்ணிக் கஞ்சிலே குடு. நானு கரச்சுக் குடுச்சிர்ரேன்."

"எதுக்குடா? இன்னுமாடா அந்தப் பீக்கங்காய நெனச்சுக்கிட்டு கெடக்க? அடப்படுவா? இம்புட்டு வயசுல இம்புட்டு பிடிவாதமா இருக்ர. அன்னைக்கு என்னடான்னா அந்த அதிகாரிககிட்ட சூது வாது இல்லாமப் பேசி ஊர்ச்சனத்தோட வகுத்தெருச்சல வாங்கிக் கெட்டிக்கிட்ட கூறு கெட்ட பெயலாவுல வந்து பெறந்துருக்க."

"என்னைக்குச் சொன்னேன்?"

"என்னைக்கா? போன பொயலு மழைல வீடு எழந்தவுகளுக்கு கவுருமெண்டு துட்டு குடுத்தாகள்ள. அப்பத் தெருத் தெருவா வந்து வீடுகளப் பாத்து பேரு எழுதயில நீயி என்ன சொன்ன?"

"ஒன்னுஞ் சொல்லலியே."

"ஒன்னஞ் சொல்லலியா? அந்தக்கா வேலுத் தாயி வீட்டப் பாத்துக்கிட்டு கேக்கயில என்னமோ நீதான் அரிசந்துர ராசா பரம்பர கெணக்கா அவா வீடு மழைல இடியல; அவுகளா இடுச்சு உட்டாகன்னு சொல்லிப் போடல?"

"ஆமா சொன்னேன். ஊர்ல எல்லாரும் அப்பிடித்தான சொன்னாக. அன்னைக்குக்கூட நீயும் சீனிப்பாட்டியுங் அப்பிடித்தான பேசிக்கிட்டு இருந்தீக. நானு கேட்டம்ல."

"நாங்க எங்களுக்குள்ளதானல சொல்லிக்கிட்டோம். நீயி அந்த அதிகாரியிட்டலே சொல்லிப் போட்ட. ஊர்ல ஒரே ஆவலாதியாப் போச்சு. எல்லாப் பெய மக்களும் போகயில வரயில சாடமாடயா வைறாளுக."

"எதுக்கு வஞ்சாக. நானு பொய்யா சொன்னேன். அவுக மகங்கூடச் சொன்னான். மம்பிட்டியக் கொண்டு செவர வெட்டி உட்டாகன்னு."

"ஒனக்கு எத்தன தடவதாம்ல சொல்றது. இவா என்ன பிள்ளையா பெத்து வெச்சுருக்கா! வெனயமில்லாத கழுதயப் பெத்து வச்சுக்கிட்டு....! அம்புட்டு பேரும் அன்னைக்கு மானாவாகியாக வஞ்சாளுக. இனியாச்சும் கொஞ்சம் சூதானமா இருந்து பொழைக்ர வழியலப் பாருடா. என்ன?" ரெங்கம்மா கொஞ்சம் அதட்டிக் கெஞ்சலும், வருத்தமுமா சொன்னா.

ராசு பேசாம சோத்தச் சாப்புட்டான். அவனுக்கு எல்லாம் புருஞ்சது மாதிரி இருந்துச்சு. ஒன்னுமே புரியாதது மாதிரியும் இருச்துச்சு.

'பள்ளிக் கொடத்துக்குப் போனா ஒன்னு சொல்லித் தாராக. வீட்டுக்கு வந்தா வேற மாதிரிச் சொல்லித்தாராக. அம்மெ சொல்றா நம்மளுக்குள்ள உள்ளதச் சொல்லலாம்னு. வெளியாளுககிட்ட, அதிகாரிககிட்ட உள்ளதச் சொல்லக் கூடாதுங்கா; செலநேரம் பொய் சொல்லலாமாம். செலநேரம் பொய் சொல்லக் கூடாதாம்.. நம்மளுக்கு ஒன்னும் இல்லன்னா நெறய்யா இருக்குரவுககிட்ட இருந்து எடுக்கலாமாம்.. அப்பிடி எடுத்தா அது களவாணித்தனம் இல்லியாம்.. அம்ம சொல்றது சரிமாதிரித்தான் இருக்குது. ஆனா டீச்சருக வேறமாதிரில சொல்லித் தாராக...' கண்டமாணிக்க ராசு நெனச்சுக்கிட்டு கொழம்பிப் போனான்.

திங்கக் கெழம பள்ளிக் கொடத்துக்குப் போனான். சாயங்காலம் பள்ளிக் கொடத்து தோட்டத்துக்கு டீச்சரு தண்ணி ஊத்தச் சொன்னாக. பிள்ளைக தண்ணி ஊத்தும் போது டீச்சரு வந்து சுத்திப் பாத்துட்டுச் சொன்னாக. "ஏய் எல்லாரும் நல்லாத் தண்ணி ஊத்தனும். ஒங்க வீட்டுத் தோட்டம்னு நெனச்சுக்கிட்டு செடிகளுக்கு நல்லாச் செழிம்பா தண்ணி கொண்டாந்து ஊத்தனும்."

டீச்சரு சொல்லவும் பிள்ளைக இன்னும் வேக வேகமா வாளிகளத் தூக்க முடியாமெத் தூக்கிட்டு வந்து தண்ணி ஊத்துனாக. டீச்சரு சுத்திச் சுத்தி வந்து தோட்டத்துல இருந்த காய்களப் புடுங்கிட்டுப் போனாக. இதப் பாத்துக்கிட்டே இருந்து ராசு சொன்னான், "ஏலைகா, நம்ம தண்ணி ஊத்தயில மட்டும் டீச்சரு நம்ம வீட்டுத் தோட்டத் துக்கு ஊத்தர மாதிரி ஊத்துங்கன்னு சொல்றாக. ஆனா காய்க்ர காயமட்டும் புடுங்கி அவுக வீட்டுக்குக் கொண்டு போறாங்க. தோட்டம் போடயில காய்க்ர காய்கள நமக்குச் சத்துணவுல போட்டு கொழம்பு வச்சுத் தருவோமுன்னு தானடா சொன்னாக. அப்ப டீச்சரு ஏமாத்தத்தானடா செய்றாக?"

இதக்கேட்ட பெயல்க டீச்சருட்ட போயி ராசு சொன்னதப் பூராம் அப்பிடியே சொல்லிக் குடுத்துட்டானுக. டீச்சருக்கு ரொம்பக் கோவம். ராசக் கூப்புட்டு வரச் சொல்லி க் கேட்டாக. ராசு சொன்னான், "ஆமா டீச்சர். நீங்க பொய்யிதான சொல்றீக. சத்துணவுல காயப்போடாமெ ஒங்க வீட்டுக்குத்தான எடுத்துட்டுப் போறீக? நாங்க தான டீச்சர் தண்ணி ஊத்துறோம்" அப்ப நாங்கதான் டீச்சர் புடுங்கிட்டுப் போகனும்?"

"மொளச்சு மூனு எல கூட உடல. அதுக்குள்ள டீச்சரயே எதுத்துப் பேசுறடா? பெரிய திருவாத்தனா இருப்பாம் போலடா இவெ". சொல்லிக்கிட்டே ராசு தலைல நறுக்கு நறுக்குன்னு கொட்டுனாக டீச்சரு.

கொட்டு வாங்குன தலையத் தடவிக்கிட்டே வந்த ராசு நெனச்சான். 'டீச்சரு பொய் சொன்னா.. அது பொய் இல்லியாக்கும்...! டீச்சரு களவாண்டா அது களவாணித்தனம் இல்லியாக்கும்...! அவுகளே புழுகுறாக...! அவுகளே களவாங்குறாக...! பெறகு நம்மகிட்ட பொய் சொல்லாத... களவாங்காதன்னு சொல்லிக்கிறாக...!'

அன்னயிலருந்து ராசுப்பெய ரொம்பா வெனயகாரப் பெயலாகிட்டான்.

படிப்பகம்

www.padippakam.com



# டன்டனக்கு... டனக்கு... டனக்கு

## தய். கந்தசாமி

"சரி சரி' அவன உட்டுடுங்க... அவஞ்சவுரியத்துக்கு பண்ணட்டும் வந்துருக்குற கொண்டாங்குடுத்தான் அவன் மோறயில காரிகிட்டு துப்பிபுட்டு போவட்டும்" என்றார் குப்பு சலிப்படைந்தவராக.

"ஆமாங்குறன் காலையிலருந்து இத்தினிபேரு மத்துசம் பண்ணியும் கேக்க மட்டுறான். பெத்த தாயி செத்து கெடக்குறா இந்த நாயி இந்த ரகளபண்ணுது" என்றாள் தப்புலை ஆமோதிப்பது போல ஒரு பெண்மணி.

"அதுலயும் அவங்குடிச்சிட்டான்னா மனுசனேயில்ல. யாராருந்தாலும் கண்ணு மூக்கு தெரியாம அடிச்சிபோட்டு வான்" என்றார் ஒரு பெரியவர்.

காலையிலிருந்து எவ்வளவோ அவனை எல்லாரும் மாதானப்படுத்தி பார்த்து விட்டார்கள். அவன் மட்டும் கேட்பதாய் இல்லை.

செத்துப்போன பாக்கியத்தாளின் பிணம் வாசலில் நாற்காலியில் உட்கார்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இப்போதுதான் அவள் நாற்காலியையே பார்த்திருக்கிறாள். இரண்டு மூன்று மாலைகள் போடப்பட்டு வெத்தல பாக்கு சக்கி வாய்க்குள் திணித்து கட்டியிருந்தார்கள். கண்களிரண்டி லும் சந்தனம் குழைத்து அப்பி காசு ஒட்டியிருந்தார்கள். இரு மமும் இளநீர் சீவி வைத்திருந்தார்கள். எவர்சில்வர் குடம் ரண்டில் பட்டைபட்டையாக சாணம் ஒட்டி நெல்லை குத்தி வத்து அலங்கரித்து உரித்த தேங்காயில் குடுமி மேல் நாக்கியிருக்க குடங்களில் வாய்ப்பகுதியில் வைத்திருந்தார் ர். வெளியூர்ப் பெண்களும் உள்ளூர் பெண்களும்

என்னராதே! பின்னராதே!

என்ன சொல்லி! கண்ணசந்தே!

என்று பாடிக்கொண்டு மாறடிக்க தயாராகிக் கொண்டி ந்தார்கள். சேகர் குடித்துவிட்டு கண்கள் ரெண்டும் சிவப் றியிருக்க தள்ளாடித்தள்ளாடி ஒரு காளை மாடு கதறுவது ால வார்த்தைகள் அர்த்தமின்றி சிதற எடுத்தடிவைக்கும் ல்கள் இலக்கு மாறி நழுவ அழுது கொண்டு வருவதைப் ர்த்து பெண்கள் பயந்து விலகி இடம் கொடுத்தார்கள்.

அம்மாவின் பிணத்தருகே நெஞ்சுவரள அழுது ாண்டிருக்கும் தன் அக்கா தங்கச்சிகள் அருகில் போய் ணைத்துக் கொண்டான். உழைத்து மரத்துப் போன உள்ளங் கள் குடிவெறியில் மேலும் விறைப்பேறியிருக்க இரண்டு களாலும் முகத்தில் அறைந்து கொண்டு அழுதான்.

சேகரின் அழுகை சுற்றி நின்ற பெண்களை நங்குரலெடுத்து அழ வைத்தது. சேகரின் மூத்த அக்காள் வதி "அலுவாதடா யாண்டா இப்பிடி வெறும் வயித்துல ச்சிட்டு வந்து இப்படி பண்ணுற. பாக்குறவுங்க என்னடா ல்லுவாங்க. அம்மா செத்துகடக்கயில சேவண்டி க்கிறன்னு சொல்லுவாங்கடா. மத்தவேலய பாருடா" றதும் அவள் பாதங்களை இறுகப் பிடித்துக் கொண்டு கா இன்னக்கி மட்டுந்தாக்கா இன்னமே செத்தாலும் யமாட்டேன் இன்னகி மட்டுந்தான் ஒன்ங்கால்ல உலுவுற" ு தாரை தாரையாய் கண்ணீர் வழிய கெஞ்சினான்.

இதுவரை சேகரை ஏசியவர்கள்கூட லேசாய் அவன்மேல் அனுதாபப்பட்டார்கள். இதற்கு மேலும் இவனை ஒன்றும் செய்ய முடியாது என்று விட்டுவிட்டார்கள். சட்டையை கழட்டி வீசினான். கைலியை மடித்துக் கட்டினான். துண்டை முண்டாசாக கட்டிக் கொண்டு கால் சட்டையிலிருந்து பீடியை எடுத்து பற்றவைத்துக் கொண்டான். சுற்றி நின்ற கூட்டம் அவன் தப்படிக்கப் போவதை ரசிக்கத் தயாரானார்கள்.

சேகர் தப்படிக்கணும் அத கேக்கணும் பாக்கணும். கையும் கண்ணும் ஏன் உடம்பே பேசும். எதிர் தப்புக்காரனை விழிகளை உருட்டிக்காட்டி தப்பின் நடையை மாற்றச் சொல்லுவான். நாக்கை துருத்திக் கொண்டு "ய்யஏஏய்ய்" என்று குரலெழுப்புவான். அந்த சத்தம் சமயத்துக்கு சமயம் நையாண்டியாய், கோபமாய், சந்தோஷமாய் மாறிமாறி ஒலிக்கும். சாவு வீட்டில் பிணத்தருகில் இருக்கக்கூட ஆளில்லாமல் எல்லாரும் அப்படி வேடிக்கை பார்ப்பார்கள். தப்படியை சந்நதம் வந்தவனைப்போல, பைத்தியக்காரனைப் போல குழந்தையைப்போல, அலட்சியமாய் மாறிமாறி போக்கு காட்டுவான். தப்பை கையில் எடுத்துவிட்டால் புலன்களின் உணர்வுகள் யாவும் தப்பில் குவிய தன்னை மறந்த லயத்தில் இருப்பான். சூழ நிற்கும் கூட்டமும் சாவீடு என்பதை மறந்து திருவிழா களிப்பின் கிறக்கத்திலிருக்கும்.

தப்புக் கட்டையில் துளையிட்டு கட்டியிருக்கும் கயிறுக்குள் இடது கையை நுழைத்து தோள்பட்டைக்கு கயிறை ஏற்றி தப்பை வலது கையில் ஒரு சுற்று சுற்ற கயிறு முருக்கேறும். தப்பின் ஒரு விளிம்பு இடது மார்பில் அழுந்த எதிர்பக்க விளிம்பை இடது கை மணிக்கட்டின் உள்புறம் அழுத்தும். தப்பு குச்சிகளில் பெரியதை வலது கை பற்றிக் கொள்ள சிறியதை இடது கையில் பற்றிக்கொண்டு "டன்டனக்கு டனக்கு டனக்கு" என்று தப்பைப் பார்த்து தட்டி தலை உயர்த்தினானென்றால் நெறுதுளி கிளம்பும்.

யாரிடமும் சேகர் இப்படி தப்படிக்க கற்றுக்கொள்ளவில்லை. அந்த ஊரில் வருடம் ஒரு குடும்பம் வேலை பார்க்க வேண்டும். மாடு செத்தா 'தூக்க. அறுவடையில் நெல் அளக்க. நெல்லை பட்டறை போட்டால் சாணிப்பால் குறிபோட. குடியானத் தெருவில் பிணம் விழுந்தால் எழவு சொல்ல, தப்படிக்க. பிணம் எரிக்க. வருடம் ஒரு பறக் குடும்பம். சேகர் வீட்டு முறை வருடத்தில் சேகர் அப்பா சின்னான் வெளியூர் போக, சேகர் தப்படிக்க, ஊரே வாய் பிளந்தது.

"சின்னான் மொவனாடா நீ. அகரத்து கட்டையன்லாம் ஒங்கிட்ட பிச்சவாங்கனும்டா" என்று பாராட்டி யாரோ ஒரு குடியானவன் கொடுத்த ரெண்டு ரூபா நோட்டை வாங்க மறுத்தான் சேகர்.

"ஏல, புடிடா அத அய்யா என்னமாச்சும் நெனச்சுக்க போறாங்க புடிடா" என கூட இருந்தவர்கள் வற்புறுத்தவும் வாங்கிக் கொண்டான். பிறகு யார்வீட்டு முறையில் குடியானத் தெருவில் சாவு நடந்தாலும் சின்னாம் மொவனையும் அலச்சிகிட்டு வாங்கடா என்று சேகரின் தப்படி பிரபலமாகி விட்டது.

படிப்பகம்

குடியானத் தெரு பெண்கள் ஆசையிருந்தும் கண்டுகொள்ளாதது போல் இருப்பார்கள். இவனின் சத்தமும், தாளலயமும், சேஷ்டைகளும் அவர்களின் கவனத்தையும் ஜெயித்துவிட்டன. இதனால் நிறைய பெண்கள் சேகரிடம் நெருக்கமாய் இருப்பார்களாம். நிறைய சோறு போடுவது, கறியை நிறைய வைப்பது என்ற வகையில் அது தெரியுமாம். ஒரு பெண் சேகரிடம், "இளையராஜா கூட தப்படிச்சவர்தான் சேகரு. இன்னிக்கு எல்லா சாதிக்காரனும் அவரு கால்ல உலுவலயா? இது இன்னும் கேவலமில்ல. இது ஒரு கலதான்" என்றாளாம்.

அப்போது இளையராஜாவெல்லாம் பிரச்சனை இல்லை. அகரத்து கட்டையனை மிஞ்சனும் சேகருக்கு. சாட்டிகுடிக்கு கெழக்க அகரம்ன்னு ஊர் பெயர். சின்ன கட்டையனும், பெரிய கட்டையனும் சகோதரர்கள். தப்பு வாசிப்பதில் பிரபலம். அவர்களின் தப்படிக்கு முன்னால் மோளகாரன், பீப்பி காரன்லாம் பதுங்கனும். வைக்கோல் கூளத்தை கொளுத்தி தப்பு காச்றிசுவார்கள். மாட்டுத் தோளில் சூடேச் ஒரு உலாகத் தகடாய் இருக ஒவ்வொரு அடியும் 'ன்னனனைனன்ன' என வெண்கலமாய் ஒலி எழுப்புமாம். அவர்கள் இருவரும் எந்த ஊருக்குத் தப்பு வாசிக்கப் போனாலும் அந்த ஊர் தப்புக்காரர்களோடு பந்தயம் நடக்குமாம். சுத்தப்பட்டு கிராமங்களில் யாருமே அவர்களை ஜெயித்ததில்லையாம். சேகருக்கு முன்பே அவர்கள் செத்துப்போய்விட்டார்கள். சேகரை எல்லாரும் கட்டையனோடு ஒப்பிடுவார்கள். ஊர்கொடுத்த உற்சாகத்தில் இருபத்தி ஐந்து வயது சேகருக்கு தப்படிக்கும் கூச்சம் மறைந்துபோய், தப்பெடுத்தாலே ஒரு துள்ளாட்டம்தான்.

ஊரில் ஏதாவது ஒரு சாவு என்றால், சேகரை ஊரே கட்டாயப்படுத்தும். ஊரில் பெரியவர்கள் உற்சாகத்தில் 'யப்பா சேகரு நாஞ்சாவுறன்னைக்கு எந்தல மாட்டுல நின்னு இப்படி அடிச்சு என்ன கொண்ட சேத்துடுடா. ஒன் பொண்டாட்டி வையித்துல நான் வந்து பொறக்குறன்' என்பார்கள்.

சேகரின் அம்மா பாக்கியம் "இந்த பயித்தியங் கொண்ட பயல பாரன். இப்பயே வெட்டியார பயலா பூட்டான். காரிகிட்டு னப்புங்கடி அவது. அடச்சீ இங்கிட்டு வா" என்பாள்" பொய் கோபத்தை முகத்தில் ஒட்டிக்கொண்டு சேகரும் சூத்தை இடுப்பை வெட்டிவெட்டி ஆடிக்கொண்டே மேலும் உற்சாகமாய் அடிப்பான். சேகரை திட்டிக்கொண்டே ஓரமாய் உட்காருவாள். சற்று நேரத்துக்கெல்லாம் வேடிக்கை பார்ப்போரின் உற்சாக சலசலப்பில் கவனம் சிதறி, 'ஏ எட்டுங்கடி' என்று கூட்டத்தை விலக்குவாள்.

'இப்போ என்னமோ யான்டா அடிக்கிற வெட்டியார பயலன்ன இப்ப நடுவுல வந்து நீக்குற' என்று ஏகடியம் பேசும் பேத்திகளிடம்.

'ஏன் ஆம்படையான அடிக்க சொல்லி நீங்க அவுத்துபோட்டுகிட்டு ஓடுங்களன்டி சக்காளத்திவொள' என்பாள்.

எல்லாரும் பெருமையாக, "சேகரு செத்தூளு களப்பிட்டான்" என்று சொல்லும்போதெல்லாம் அவர்களின் காலடி மண்ணை எடுத்து வந்து திட்டிசுத்தி போடுவாள்.

"உத்தாதிட்டி, பெத்தாகிட்டி, நாதிட்டி, நரிதிட்டி, எல்லா திட்டியும் இப்பிடி பூடுனும்' என இரண்டு கைகளிலும் விரல்களை மடக்கிக்கொண்டு நெருக்கி பத்து விரல்களிலும் ஒரே நேரத்தில் நெட்டி முறிப்பாள். கைக்குள் மிளகாயும், உப்பும் திட்டி வைத்தவர்களின் காலடி மண்ணோடு வைத்திருந்து அடுப்புக்குள் எரியும் நெருப்பில் எறிவாள். கார நெடியில் இருமிக்கொண்டே சேகர் அம்மாவை திட்டுவான். 'ஆமா பெரிய இது வாசிச்சுப்புட்டன் அதுல திட்டி வச்சுட்டாங்க நீ வேற தும்பம்பன்ற" என்பான். "எல்லா கண்ணும் நல்ல கண்ணாருக்குமா? ஏந்திட்டியே ஒனக்கு பட்டுருக்கும். என்னா நெளிநெளிக்கிறான். என்னா நொடி நொடிக்கிறான். அந்த காலம் மேரிக்க இப்ப இல்ல. எந்த செறிக்கியும் கட்டிக்கமாட்டா. தப்படிக்கிற பயண்ணுட்டு" என்று முடிக்கும் முன் "இப்ப சொல்றியா? பொண்ணுகாட்றன்" என்பான். ஆப்பை காம்பை பொய்யாய் அம்மா ஓங்க ஓடி வந்து அம்மாவின் இடுப்பை கோர்த்து கட்டிக்கொண்டு சிரிப்பு மூட்டுவான்.

இப்பொழுதெல்லாம் தப்பையே மறந்துவிட்டான் சேகர். குடியானத் தெருவில் தப்படிக்கப் போன இடத்தில் வெளியூர்க்காரன் ஒருவன் குடித்துவிட்டு ஒரு அய்ந்து ரூபாய் நோட்டை தரையில் போட்டு, "தப்படிச்சிகிட்டே படுத்து கண்ணால எடுத்துகடா" என்று சேகரிடம் சொல்ல, அவன் குடித்திருக்கிறான் என்பான் பேசாமல் அதை கண்டு கொள்ளாமல் தப்படித்துக் கொண்டிருந்தான். அந்த ரூபாய் காற்றில் பறந்தோடியது. யாரோ அதை எடுத்து அதன்மீது ஒரு ஓட்டாஞ்சல்லியை எடுத்து காற்றில் பறக்காதபடி வைத்தார்கள். குடி வெறியோடு குடியான சாதி வெறியும் தலைக்கேற, 'எலேய் அந்த பணத்தை கண்ணால எடுடா" என்றான் திரும்பவும். "நான் எடுக்குறங்க சின்னையா நீங்க போயி ஒக்காருங்க" என்றான் சேகர். "பறக்ஒதிக்கு அவ்ளோ ஏத்தமாடா, இந்த ஊரு ஒக்காள கூலிலோ சரியாருந்தா இவனுங்களுக்கு இவ்ளோ கொளுப்பேறுமாடா", என்றான் திரும்பவும். அருகிலிருந்த உள்ளூர் குடியானத் தெருக் காரர்களிடம், "ஏங்க நாங்க வேல செய்யிறதா வேண்டாமா, அந்த அய்யாவ ஒக்கார சொல்லுங்க" என்றான் சேகர்.

"அடேங்கப்பா இவரு பெரிய வளையபட்டி. தப்படிக்கிற பறப்புண்ட மொவனுக்கு என்னடா கவுரவம்" என்று சொல்லிக் கொண்டே தோளில் மாட்டியிருந்த தப்பை எட்டி உதைக்கவும் தப்புக்கட்டை சேகரின் மேலுதட்டில் இடியாய் இறங்க சேகருக்கு கண்கள் தெறித்தது போலிருந்தது. அப்புறம் அங்கே என்ன நடந்ததென்றே தெரியவில்லை சேகருக்கு.

"அடங்கோயிங்கொக்காலயும்..." என்றபடி அவன் நெஞ்சில் எகிறி உதைக்க கரைவேட்டி விலகி கிடக்க கொடும்பாவி போல அவன் சாய ராட்சச காற்றாடியின் ஆரங்களாய் சேகரின் கைகள் சுழல அடிக்க வந்தவர்கள் அலற, குடியானத்தெரு மொத்தமும் சேகரை கட்டி வைத்து சாணி கரைத்து அவன் தலையில் ஊற்றி செருப்பாலும் விளக்குமாற்றாலும் விளாசி நார்நாராய் கிழித்துவிட்டார்கள். சேரிப் பெண்கள் கெஞ்சி அழுதார்கள். 'ஒக்காள ஒலி, ஆட்டகடிச்சி மாட்டக் கடிச்சி கடசில அடிமடியிலேயே கை வைக்கிறீங்களா. பறப்பய ஒருத்தன கூட வுடாதீங்கடா" என்றான் ஊர்த்தலைவன். அவன் உதடு கொளவி கொட்டியது போல வீங்கியிருந்தது. குழந்தைகள் பார்த்தால் பயந்து விடும். அப்படி இருந்தது.

அன்று சேரியே கூடி முடிவு செய்தது. தொழிலு பாக்க முடியாதுன்னு சொன்னா வேலையே குடுக்கமாட்டான் புள்ளகுட்டியோட பட்டினி கெடந்து சாவவேண்டியதுதான் என்றார்கள் சிலர். ரோசத்துக்கு தாண்டா துணி கட்டுறது. இந்த தொழிலும் வேண்டாம் ஒரு மசுரும் வேண்டாம் என்றார்கள்

www.padippakam.com



சிலர். "அவன் தான் குடிச்சிருந்துருக்குறான். ஒரு அடி அடிச்சா நம்ப கொறஞ்சா பூடுறோம்? 'மானாங்கனியா' புடிச்சி அடிச்சிருக்கிறான். அதான் அவனுவொளுக்கு கோவம் வந்துட்டு" என்றார்கள் சிலர். "அதுக்காக சாணிய கரச்சு ஊத்தி வெளக்கமாத்தால அடிக்கணுமா?" என்றார்கள் சிலர். முடிவாய் ஊர் தலையாரி பெரியான் தான் நீண்ட தலை முடியை தலையை பின் புறமாய் சாய்த்துக் கொண்டு கட்டி முடிந்தபடி பேசினார். "கொட்டி கொட்டி அளந்தாலும் குருணி பதக்காவ போறதில்ல. நம்ம மின் பின்ன என்ன பாவம் பண்ணுனமோ இந்த சாதியில வந்து பொறந்துட்டோம். அனுபவிக்கிறோம். அதுக்காவ மானத்த வித்து வயித்த கழுவணும்னு அவசியமில்ல. அவன் வேலையே குடுக்குலன்னாலும் வெளியூர்ல கல்லறுத்தாவது பொலச்சிகுவோம். என்னா மேயபோற மாடு கொம்புலயா பில்ல கட்டிகிட்டு போவுது. இன்னைக்கி சேகருக்கு நாளைக்கி நம்மளுக்கு. நாமளும் மண்டையில மசுருமொளச்ச காலத்துலருந்து நாயா ஒலைக்கிறோம். என்னா கண்ட பலன். ஒண்ணுமில்ல. இந்த பொலப்பு பொலக்கிறத செத்துடலாம். இன்னைக்கில்லன்னு. தொடந்து இப்படியே பன்றாங்க குடியான ஆளுக. அவுங்க காலமிறிச்சமுன்னா நம்ப தலைமிய அவுங்க மிறிக்கட்டும். போனவருசம் இப்படிதான் சும்மா பொறம் போக்குல மண்டிகெடந்த கருவகுச்சிய வெட்டுனதுக்கு வயசு சொண்ணுன்னு பாக்காம சிவராப மொவல புளியங்கம்பு போட்டு அடிச்சானுவ. பத்து நாளைக்கு மின்ன பள்ளிகொடத்து பயலுவ சண்டைக்கு சந்திரசேகரு அத்தேம் பெரிய ஆளு சீனிவாசன் மொவன் சின்ன பயலை வா, கையெல்லாம் ரெத்தம் வர்றமாதிரி அடிச்சிபுட்டான். இன்னைக்கி இந்த கத. போதும், நம்ப என்ன அய்யிரா? ஒலைக்கிறசாதி. இந்த வெட்டியான் வேலயும் வேண்டாம் ஒரு எழவும் வேண்டாம். வருமானந்தான் முக்கிய மின்னு நினைக்கிறவுங்க செஞ்சிக்கிங்க. தாயாபுள்ளைய சொந்தத்சோவாதிய மறந்துடுங்க" என்று முடித்துக் கொண்டார்.

ஊர் முடிவைமீறி தப்படிக்கப் போனால் அவர்களும் கேவலப்படுத்துவார்கள். வாழ்வு சாவுக்கும் சொந்தக்காரார்கள் வரமாட்டார்கள். "நாதியத்து போவனும்" என்று பயந்து ஊரே தப்பை மறந்தது.

இப்போதெல்லாம் சாவு நடந்தால் ஆப்ரகுடி மேளமோ, டவுனிலிருந்து தம்பூரு செட்டோ கொண்டு வந்தார்கள். அறுவடைக்கு நெல்லளக்க ஆறு மரக்கால் ட்ரம் வந்துவிட்டது. எவனும் நெல்லை பட்டறை போடுவதில்லை. சாவு செத்தால் சம்மளத்துக்கு ஆளு சொல்லி போகிறார்கள். உறவினர்களே தகனத்தை கண்காணித்து சுடலை காக்கிறார்கள். மாடு செத்தால் டயர் வண்டியில் ஏற்றி ஆற்றங்கரையில் கொண்டு போய் போட்டார்கள். சேகரோ காலையிலிருந்து தப்படிக்கத்தான் மல்லுக்கு நிற்கிறானே தவிர அம்மாவுக்காக அழவில்லை. எப்படியாவது இன்று தப்படித்துவிட வேண்டுமென்றுதான் இப்போது குடித்துவிட்டு வந்து நிற்கிறான்.

பரபரவென விறகுப் பரனில் ஏறி ஒட்டடை படிந்திருந்த மூலையில் தப்பைப் தேடி எடுத்தான். உரசாக்கில் போட்டு கட்டி வைத்திருந்தான். சணலை அவிழ்த்து தப்பை வெளியே எடுத்துப் பார்த்தான். நல்லவேளை எலியோ கரப்பானோ சேதப்படுத்தவில்லை. புதுதப்பு வெள்ளையாய் இருந்தது. நெருப்பில் காய்ச்சக் காய்ச்சத்தான் கருப்பேரும். தப்பையும் தப்புக்குச்சிகளையும் எடுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

வைக்கோல் அள்ளிவந்து நெருப்பு மூட்டினான். தப்புக் கட்டையின் உட்புறம் இடது கையைப்போட்டு நெடுங்கிடையாய் நெருப்பில் காட்டினான். மெல்ல தூக்கித் தூக்கி விட்டுப்பிடித்தான். தப்புக்கட்டை அடுத்தடுத்த நான்கு விரல்கடைப் பகுதியில் சீராய் விழுந்தது. வலது கையால் லேசாய் தன், தன் என தட்டி தோல் பதத்துக்கு வந்துவிட்டதா என பரிசோதித்தான். முறுகக் காய்ச்சி தப்பை தோளுக்குக் கொண்டு வந்தான்.

எந்தெந்த நாயி சாவுக்கோ தப்படிச்சிருக்கேன். எங்க அம்மாவுக்கு அடிக்கிலன்னா? தலைமுழுதும் வெறியேற மெலிந்த குச்சியை இடது கையிலும் தடித்த குச்சியை வலது கையிலும் பிடித்தான். குளிப்பாட்டி பாடைக்குத் தூக்கி வந்து கயிறு போட்டு கட்டினார்கள். பாக்கியத்தாத்தாளின் உடலை மகள் வீட்டு பேரப்பிள்ளைகள் நெய்பந்தம் பிடித்தார்கள். அக்காவீட்டு பிள்ளைகளை அம்மா கேட்பாள் "ஆத்தா செத்துபுட்டன்னா எப்பிடி தப்படிச்சிகிட்டு அழுவ' எங்க எங்க ஜஞ்சனக்கு ஜனக்கு நக்கு".

சேகரால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. அழுகையை மறைக்க ''ய்யஏய்ய்'' என்று அடித்தொண்டையிலிருந்து குரலெழுப்பி தப்பை அடிக்கத் தொடங்கினான். ரெண்டு மூனு வருசம் கழித்து ஒலிக்கும் சேகரின் தப்பொலி எல்லோரின் கவனத்தையும் உடைத்தது. ஆடுகிறான் சேகர். அவன் நின்ற இடம் அமளி துமளிப் படுகிறது. கால் மாற்றி கால் போட்டுத் துள்ளுகிறான். குதிகால் தரையில் படவில்லை. தரை நொறுங்கி மணலாகிறது. நுணுங்கி நுணுங்கி புழுதி பறக்கிறது. கண்ணீர் வழிந்து நெஞ்சு நனைகிறது. சுற்றி நின்ற கூட்டம் சேகரின் சோகத்துக்குள் விழுகிறது. கையையும், காலையும் பரபரக்க வைத்து ஆடாமல் இருக்க ரொம்ப பிரயாசை படவைக்கும் சேகரின் அதே பழைய தப்புச்சத்தம். ஆனால் சேகரின் கன்னங்களில் வழிந்து தொப்புளில் தேங்கி வழியும் கண்ணீர் எல்லாரையும் அழவைத்தது.

"உத்தரம பண்ணிகிற நீங்க பண்ணிகிங்க" என்ற சத்தமோ, "பொம்பள புள்ளிவோ எல்லாரும் சுத்திவந்து நமக்காரம் பண்ணிகிங்க" என்று தலையாரி பெரியான் உரக்க சத்தமிட்டதோ சேகரின் காதில் விழுந்ததாகத். தெரியவில்லை. இன்னமும் தப்படித்துக்கொண்டே ஆடுகிறான். கோடைக் காலத்தில் உக்கிரமாய் வெயிலடிக்கும் மதிய வேளையில் பேய்ச்சூராவளி புழுதியை சுழற்றி அள்ளிக்கொண்டு வருவது மாதிரி இருந்தது அவன் ஆடிக் கொண்டிருக்கிற இடம் "எப்பிடி தப்படிச்சிகிட்டு ஆடுவ எங்க ஜஞ்சனக்கு ஜனக்கு ஜனக்கு" என்று அம்மா கேட்டது மட்டுந்தான் காதுக்குள் ஒலிக்கிறது சேகருக்கு.

"சிவசிதம்பரம், வைகுண்ட சக்கரம், நாலு கோவரம், மூனு மண்டவம் கோய்ந்தா" என்று ஒருவன் சொல்லவும் "கோ- ய்ந்தா" என்று கூட்டம் சத்தமிட்டதும் அதிர்ந்து திரும்ப, அம்மாவின் பாடையை நாலு பேர் தோளுக்கு உயர்த்தி மூன்று முறை பாடையை சுற்றினார்கள். தப்பை வீசி எறிந்துவிட்டு "யம்மா..." என்று கதறிக்கொண்டே தரையில் விழுந்து புரள காலையிலிருந்து அவனை சமாதானப்படுத்திய பெரியவர்கள் தோள் துண்டை வாய்க்குள் திணித்துக் கொண்டு விலா அதிர குலுங்கினார்கள்.

◆

படிப்பகம்

www.padippakam.com



# கவிதைகள்

## எங்கள் காட்டு தெய்வங்கள்

.கணியான் ஒருபுறம் பாடி உடம்பை முறுக்கேற்ற
வில்லுபாட்டு ஒருபுறம் பாடி சூடுகிளப்ப
கொட்டும் வாத்தியமும் கோபத்தைத் தூண்டிவிட
ஆ... ஓ... வென பெருத்த சத்தமிட்டுக் கொண்டே
வல்லயமும் தீப்பந்தமும் எடுத்துக்கொண்டு
கச்சைகட்டி நிற்பான் சுடலையாண்டி
பரம்பரை கோபத்தோடு.

ஆடுகிற சாமியை இடுப்பினை பிடித்திழுத்து
என்பிள்ளைகளுக்கும் எனக்குமொரு
நல்லசெதியை சொல்லிப்போ
இல்லேண்ணா ஒனக்கு இனிமேல்
சோறு தண்ணி பூச ஒண்ணும் கெடையாது
உள்ளப் போட்டு கோயில் நடைய
இழுத்தடச்சுப் போடுவேனென்று
அதிகாரத்தோடு சொல்ல
என்ன நம்பு உனக்கு நானுண்டு எனச்சொல்லி
திருநீர் இட்டுக் கொடுப்பான் சுடலை பாட்டிக்கு.

பிரம்மத்தை உணரமுடியாத நாங்கள்
கைகோர்த்து நடப்போமெங்கள்
காட்டுத்தெய்வங்களோடு

## ரசனை

காலையில் எனக்குக் கொண்டுவைக்கும்
பழங்கஞ்சியை
சளுவாய்வடிய
கைசூப்பிக்கொண்டிருக்கும் குழந்தை
ஓடியேவந்திருந்து கையிட்டு அலம்ப
வடியும் மூக்களையை
ஒருகைகொண்டு எடுத்துச் சீந்தி
மறுகைகொண்டு வாரிக்குடித்து
அவனுக்கும் அள்ளிக்கொடுக்க
கால்நீட்டி இன்னொரு குழந்தையை
பேளவைத்துக்கொண்டிருக்கும் பாட்டி
ரசித்துக்கொண்டிருப்பாள்.

– என். டி. ராஜ்குமார்

## தேர்க்காலில் வடிந்த இரத்தம்

விஷம் கக்கும் பாம்புகள் ஏராளம்
தெருக்களில் கோவில் வாசல்களில்
பாம்புகள் தன் சட்டையை கழற்றிக் கொள்ளும்.

குளத்தங்கரைகளில்
குளிக்கப் போகும் ஆடுகளை
நீர்க்கோலி பாம்புகள் காலை சுற்றி சுற்றி கடிக்கும்.
கொடிய விசமுள்ள ராஜநாகங்களின்
ரௌடித்தனங்களுக்கு பின்னாலோ
பல பல கண்ணீர் கதைகளுண்டு.

ஊர் சுற்றி வரும் தேரு சப்பரம் தூக்க
தெருவழியா வடமிழுக்க
உரிமை கேட்டு எழுந்த காலம்
தேரை தொட்டு வடமிழுத்த போது
வடத்த அறுத்து
தேரோட்டத்தை நிறுத்தின பாம்புகள்.

நிறுத்தின தேரை
இரும்பு சங்கிலி கட்டி திரும்பவும் இழுத்த போது
பாம்புகள் உஷாராகி படமெடுத்தன
தேர் காலுல பிடிச்சு தள்ளி
ரத்தக் களரியில் கொன்னுப் போட்டு
சிரித்தன பாம்புகள்
மனுச உசிர மசிரா நெனச்சு.

அன்னைக்கு
தேர்காலுல வடிஞ்ச இரத்தம்
இன்னும் தெருவெல்லாம்....

– நட. சிவகுமார்

## விமர்சனம்

ஆணைகளைக் கேட்டுக் கொள்ளுங்கள்
தேவைப்படுபவர்கள் எழுதிக் கொள்ளலாம்
1... 2... 3...
சொன்னவுடன் துவக்கவும்
நடந்து போகும் போது
ராணுவ நடையில் செல்லவும்
சீருடைகள் முக்கியம்
வளைவான கத்தி வைத்திருப்பவர்கள்
வைத்து விட்டு வரவும்
ஒன்றிரண்டு துப்பாக்கிகள் தேவைப்படும்
கத்திக்குத் தப்புபவர்களுக்காக
அவைகளையும் எடுத்துக்கொள்ளுங்கள்
விசாரணையை சுருக்கமாக்குங்கள்
அப்போதுதான்
தண்டனை நேரம் அதிகமாகக் கிடைக்கும்
இவர் என்று கை நீட்டியதும்
முதல் குழுவினர் பணி செய்யட்டும்
கயிறுகளை மறந்து விடாதீர்கள்
நகராமல் அவர்களைக் கட்டிப்போட
கயிறுகள் கட்டாயம் தேவை
பலகீனமானவர்கள் வர வேண்டாம்
இது சிரச் சேதம்
எதிரிகளுக்கு மட்டுமல்ல
சஞ்சலவாதிகளுக்கும்தான்
எனவே
தலைகளைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்

படிப்பகம்

www.padippakam.com



ஒருவர் தலையை சீவும் பொழுது
அடுத்தவர் பார்க்கும் வகையில்
இருக்கட்டும் இது முக்கியம்
மறந்துவிடாமல்
அறுத்த கத்தியில் வழியும்
ரத்தம் துடைக்க
துணிகளையும்
எடுத்துக் கொள்ளுங்கள்
கீழே விழுபவைகளை
பைகளில் சேகரியுங்கள்
தலைகள் மட்டுமே போதுமானது
அதைத் தவிர
வேறு என்ன இருக்கிறது அவர்களிடம்
விரல்களை மட்டும்
உருத்தெரியாமல் நசுக்கிவிடுங்கள்
கவனம்....
எச்சரிக்கை
தயாராகுங்கள்
ஆணையைச் செயல்படுத்துங்கள்
இதோ...
முதல் தலை...
அதோ இந்த
கவிதையை எழுதிக் கொண்டிருப்பவன்
இரண்டாவது
இதை
வாசிப்பவனாக இருக்கட்டும்
பிடியுங்கள்!
பிடித்துக் கொள்ளுங்கள்!
ஒன்று...
இரண்டு..
மூன்று...

- குருசாமி மயில்வாகனன்

## நாடெங்கும் தலித் ஆய்வுகள்

தலித் ஆய்வுகள் குறித்த பல்கலைக்கழக மானியக் குழுவின் கருத்தரங்கொன்று கேரளத்தில் கோழிக்கோடு பல்கலைக் கழகத்தில் சென்ற பிப்ரவரி 17,18,19 தேதிகளில் நடைபெற்றது. இப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையைச் சேர்ந்த டாக்டர் எம். தாசன் முன்னின்று நடத்திய இம் மூன்று நாள் கருத்தரங்கில் காஞ்சா அயிலய்யா, கெயில் ஓம்வெத், டெல்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கஜேந்திரன், அரிஷ் மங்களம் நமது கே.ஏ. குணசேகரன், முகுந்தன்மேனன், சிதானந்தன், கங்காதரன் எனப் பலரும் கட்டுரைகள் வாசித்தனர். தொடக்க நிகழ்ச்சி, நிறைவு நிகழ்ச்சி தவிர பத்து அமர்வுகள், ஒவ்வொன்றிலும் சுமார் நான்கு கட்டுரைகள், காரசாரமான விவாதங்கள். தலித்தும் ஊடகங்களும்; சிறுபான்மையின தலித்துகள்/மனித உரிமைகள்; தலித் அரசியல் ஒரு கோட்பாட்டுப் பார்வை; தலித் இலக்கியம்; தலித் பண்பாடு; தலித் வரலாறு; தலித்தும் பெண்களும் எனப் பல முக்கிய தலைப்புகளில் அமர்வுகள் இருந்தன. நிறைவுரையாற்ற அ. மார்க்சுக்கு வாய்ப்பு கிடைத்த போது தமிழக நிலைமைகளைச் சுட்டிக் காட்டினார். கேரள இலக்கிய, கலாச்சாரச் சூழல் பற்றி நமக்கு இங்கே ஒரு 'மாதிரியான' அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு முற்றிலும் மாறாக இருந்தது கோழிக்கோட்டுக் கருத்தரங்கம். கேரள அரசியலையும் கலாச்சாரத்தையும் நாயர் நீக்கம்/நம்பூதிரி நீக்கம் செய்யும் துடிப்புமிக்க இளைஞர்களின் கோபம் நம்மை அசர அடித்தது. நம்பிக்கை ஊட்டியது. அங்கே வாசிக்கப்பட்ட கோபக்கார தலித் இளைஞர் ஒருவரின் அருந்ததிராய் நூல் பற்றிய கட்டுரை இந்த இதழில் வேறொரு பக்கத்தில் வெளி வந்துள்ளது. சுசி தாரு அவர்களின் முயற்சியில் அய்தாராபாத் CIEFL நிறுவனத்தில் நடைபெற்ற (பிப்ரவரி 25-27, 1998) 'இலக்கியத்தையும் வரலாற்றையும் மீள எழுதுதல்' குறித்த கருத்தரங்கத்திலும் தலித்திய விவாதங்களே முதன்மை பெற்றன. காஞ்சா அய்லய்யா, ரவிக்குமார், சந்தோஷ் குமார் தாஷ், சத்ய நாராயணா, அ. மார்க்ஸ் முதலானோர் தலித்தியத் தலைப்புகளில் கட்டுரை வாசித்தனர். தலித் அரசியல் குறித்த தனி அமர்வு ஒன்றும் இறுதியில் கூட்டப்பட்டது. தமிழகத்திலிருந்து சுந்தர்காளி, வெங்கடாசலபதி, அழகரசன் முதலானோரும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். பூனா பல்கலைக் கழகத்தில்சென்ற ஏப்ரலில் கோபால் குரு முயற்சியில் தலித் அரசியல் பற்றிய கருத்தரங்கொன்று நடந்ததாக அறிகிறோம். தமிழகத்திலிருந்து எம்.எஸ்.எஸ். பாண்டியன் இதில் கலந்துகொண்டிருக்கிறார். நாடெங்கும் தலித் ஆய்வுகள் முக்கியம் பெறுவது வரவேற்கத்தக்கதாய் உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



மறுவாசிப்பில் இலக்கியப் புனிதங்கள்: 1

# சுந்தர ராமசாமியின் "புளிய மரத்தின் கதை"

*ராஜன்குறை*

இலக்கியம் தன் பல்வேறு சாத்யங்களுள் ஒன்றாக வரலாறாகவும் விழைகிறது. அதுவே வரலாறாகவும், வரலாற்றின் பகுதியாகவும் கூட உருவெடுக்கிறது. வரலாறு என்னும் அறிவுத்துறை, மக்கள் திரள் உருவாக்கிய அமைப்புகள், கூட்டு முயற்சி வெளிப்பாடுகள், சமூக இயக்கங்கள் போன்றவற்றை பதிவு செய்து விவாதிக்கும் போது, இலக்கியம் அவ்விதமான வரலாற்றை செயல்படுத்தும் மனித உயிரிகளை நெருங்கி விவரிப்பதன் மூலம், வரலாற்றைவிடவும் வரலாற்றை உண்மையாய்க் கூறுவதாய் நம்புவதும், நிகழ்வதும் சாத்தியமாகிறது.

வரலாறு என்பது அதிகார மையங்கள், பிரதிநிதித்துவ அமைப்புகள் ஆகியவற்றின் இயக்கங்களை பதிவு செய்வதாய் ஆகும்போது, இவற்றின் அடியோட்டமாய் செயல்பட்ட வெகுஜனத்திரள்களின் இயல்பூக்கம், ஆற்றல்கள் வெளிப்பட்ட விதம் மைய நீரோட்ட வரலாறு எழுதுவதில் முக்கியமற்று போகிறது. தனித்துவங்கள் நிறைந்த மக்கள் குழுக்கள் மைய நீரோட்ட வரலாற்று நிகழ்வுகளை ஒட்டியும், விலகியும், வெட்டியும் இயங்கிய விதத்தை ஆய்வு செய்வது / பதிவு செய்வது அடித்தட்டு வரலாற்றாய்வாக பரிணாமம் பெறுகிறது. மைய நீரோட்ட வரலாற்றின் கருதுகோள்களை ஆற்றல்மிக்க விதத்தில் கேள்விக்குள்ளாக்கும் புரட்சிகர, ஜனநாயகச் சிந்தனை செயல்பாடாக இது விளங்க சாத்தியமாகிறது.

இலக்கியம் வரலாற்றின் காரணிகளான மனித உயிரிகளையே கவனம் கொள்வதால், அது இயல்பிலேயே அடித்தட்டு வரலாற்றாய்விற்கு நெருக்கமானதாக செயல்பட சாத்தியமுண்டு. இதன் காரணமாகவே தமிழ்ச் சூழலில் அடித்தட்டு வரலாற்றாய்வு குறித்து விவாதிக்கும் போது, இலக்கியப் பயிற்சியாளர்களை அதன் விளிப்புக்காட்படுத்துவது மிகவும் பொருத்தமானதாகவும், தேவையானதாகவும் தோன்றுகிறது.

இந்திய நிலப்பரப்பில் காலனீயம் ஏற்படுத்திய பல விளைவுகளின் பின்னணியில் பிறந்த நாவல் என்ற புனைவெழுத்து வடிவம் திட்டவட்டமாகவே தன்னை வரலாறு கூறும் பணிக்கு ஆட்படுத்திக் கொண்டது. சுதேச வரலாறு கூறுவதிலும், சுதேச கலாச்சார மேன்மையைக் கூறுவதிலும், மேல்சாதி உயர்கலாச்சாரப் பின்னணியுள்ள இலக்கியப் பயிற்சியாளர்கள் முயன்றபோது, தேசிய அடையாளத்தை நிர்ணயிக்கவும், புனைவெழுத்து துணைபோனது.

பிரதேச, சாதீய கலாச்சாரங்களின்றி தேசியக் கலாச்சாரமென்று ஏதுமற்ற இந்திய நிலப்பரப்பில், காலனீய ஆட்சியும், ஐரோப்பிய கலாச்சாரமும் விளைவித்த மாற்றங்களை பல்வேறு மக்கள் திரள் பகுதியினர் எவ்விதம் எதிர்கொண்டனரென்பதை அடித்தட்டு வரலாற்றாய்வு செய்யும்பொழுது, புனைவெழுத்து பயிற்சி முறைகள் எவ்விதம் கலாச்சாரப் பன்மையைக் கண்ணுற்றன என்பதையும் ஆய்வு செய்வது பொருத்தம்.

தமிழில் 'நவீன' வகையிலான எழுத்துமுறையில் 'இலக்கிய அந்தஸ்து' பெற்ற சு. ராவின் 'புளிய மரத்தின் கதை' எவ்விதம் வரலாறு கூறுகிறது; இதில் பல கலாச்சாரங்கள் கொண்ட மக்கள் திரள்கள் எவ்விதம் அணுகப்படுகின்றன என்பதை சற்று விரிவாகப் பார்ப்பது உயர் கலாச்சார மமதை, தேசிய கலாச்சார மாயை ஆகியவற்றை புரிந்து கொள்ள உதவலாம்.

☆ ☆ ☆

"சரித்திர ஆசிரியர்கள் புளிய மரத்தின் கதையை எல்லாம் எழுதமாட்டார்கள்" (பக்கம் 15) என்கிறது இந்தப் பிரதியின் கதைசொல்லியின் குரல். எனவே, அந்த வேலை இலக்கிய ஆசிரியனுக்கு வந்துவிடுகிறது. உண்மையில் புளிய மரத்தின் ஆரம்பகாலக் கதையை இந்தப் பிரதியின் கதை சொல்லிக்குச் சொல்பவர் ஒரு வயதான கிராமத்துக் கதை சொல்லிதான். அவர் பெயர் தாமோதர ஆசான். தாமோதர ஆசானுடைய காலம் இப்பிரதியின் 'அக்காலம்'. "ராஜ விசுவாசம் மக்களைப் பெரிதும் ஆட்கொண்டிருந்த காலம் அது. அரசன் தெய்வ அவதாரமா அல்லது தெய்வம் அரசனின் அவதாரமா என்பதில் கூட உறுதியான தீர்மானம் இல்லாத காலம்" (பக்கம் 48). அவர் காலத்தில் புளிய மரத்தைச் சுற்றியிருந்த நாற்றமெடுக்கும் குளம் தூர்க்கப்பட்டு, புளியமர ஜங்ஷனும், அதையொட்டி கடைவீதியும் உருவாகிறது. அதன் பின்னால், புளிய மரத்தின் அழிவு ஏற்பட்டது கதைசொல்லியின் 'இக்காலம்'. "சொக்கனும், சொடலையும் பரிக்குதுக்குப்* புறப்பட்ட" காலம் (பக்கம் 107). தோட்டிச்சிகள் சீலையும், சம்பரும் தவிர பாடிசு கூட கேட்கும் காலம் (பக்கம் 119).

நாவலின் முதல் மூன்று அத்தியாயங்கள் , ஆசானின் பூர்வீகத்தை, அக்காலத்தைக் கூறுகின்றன. இது 61 பக்கங்கள். ஐந்தாம் அத்தியாயம் முதல் 15ஆம் அத்தியாம் வரை இக்காலத்தை, புளிய மரத்தின் அழிவில் சம்பந்தப்பட்டவர்களின் கதைகளை கதை சொல்லியின் மூலம் கூறுகின்றன. இது 157 பக்கங்கள். இடையில் நான்காம் அத்தியாயம், 25 பக்கங்களில் தனியாக நிற்கிறது. இது, புளிய மரத்திற்கு அருகிலிருந்த தூங்குமூஞ்சி மரத்தோப்பு, நவீன பூங்காவாக மாறியதையும், பூங்காவின் மாலை நேரக்காட்சியையும் கூறுகிறது.

புளிய மரத்தை வைத்து எழுப்பப்படும் அக்கால / இக்கால வேறுபாட்டிற்கிடையில் தூங்குமூஞ்சி மரத்தோப்பு

*நாட்டை பரிபாலிக்க

படிப்பகம்

www.padippakam.com



/ நவீன பூங்கா இருமை எதிர்வின் மூலம் நவீன சமூகம் கடுமையாகச் சாடப்படுகிறது. தூங்குமூஞ்சி மரத்தோப்பு ஆசானின் காலை காந்தம் போல இழுத்தது என்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை என்று கூறும் கதைசொல்லி, நவீன மோஸ்தரில் உள்ள பூங்காவில் ஆசான் உயிரோடிருந்தால் தனது காலடிபட விட்டிருக்கமாட்டார் என்று உறுதி செய்கிறார். அழிவை அணு அணுவாக வர்ணிக்கும் சங்கடமான உற்சாகமற்ற பணியில் 61ஆம் பக்கத்தில் ஈடுபட்ட கதை சொல்லி முதலில் 25 பக்கங்களில் தோப்பு / பூங்கா பற்றிய நீண்ட பிரசங்கத்தை ஒற்றைத் தன்னிலைப் பார்வையில் கூறுகிறார்.

இந்த பிரசங்க அத்தியாயம் நாவலின் மொத்த நீளத்தில் 10% கொண்டது. முன்னும் பின்னுமுள்ள கதை நிகழ்வுகளுடன் சம்பவ ரீதியான தொடர்பு கொண்டதுமல்ல. இருப்பினும் முன்னுரையில் ஆசிரியர் கூறுவதுபோல் அடித்துத் திருத்தி, கிழித்துப் போட்ட பக்கங்களில் இந்த 25 பக்கங்கள் ஏன் விடுபடவில்லை என்பது சிந்தனைக்குரியது. புளிய மரத்தின் அழிவு மட்டுமே, அந்த அழிவுக்குக் காரணமான 'இக்காலத்தை' வர்ணிக்கப் போதுமானதாக இல்லாமல் போகும் வாய்ப்பைக் கருதி 'நவீன' பூங்காவின் மூலம், 'இக்காலத்தின்' சீரழிவு வர்ணிக்கப்படுகிறது. இந்த அத்தியாயம் புளியமரத்தின் 'இக்கால' அழிவின் கதைக்கு முன்னால் வைக்கப்படுவது கால மாற்றமே பல அழிவுகளுக்குக் காரணம் என்பதைச் சுட்டும் பொருட்டு. பூங்கா என்ற பொது இடத்தில் தெரியவரும் காலமாற்றம் கொண்டுவரும் அவலங்கள் என்ன? (1) செய்தித்தாள்கள் - அவற்றின் தகவல்கள், (2) அரசியல், (3) சினிமா. இதையெல்லாம் இங்கு விரிவாக விவாதிக்க இடமில்லா விட்டாலும் ஒரே ஒரு மாற்றத்தைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

அந்த இடம் தூங்குமூஞ்சி மரத்தோப்பாக இருந்தபோது அது 'ஆண்களுக்கான' ஒரு பொது இடமாக இருந்தது. ஆடுமேய்க்கும் சிறுவர்கள் நிர்வாணமாகக் கட்டிப் புரண்டார்கள். ஆண்கள் சீட்டாடினார்கள். வேலை வெட்டி அற்றவர்கள் தூங்கினார்கள். பல 'ஒதுக்குப்புறமான' செயல்களை அங்கு செய்ய முடிந்தது.

அது பூங்காவாக மாறியபோது அங்கு நுழையும் வாய்ப்பைப் பெற்றவர்கள் முக்கியமாகப் பெண்கள். கணவர்களுடனோ, காதலர்களுடனோ அல்லது தோழிகளுடனோ அவர்கள் அங்கு வர வாய்ப்பு ஏற்படுகிறது. தோப்பு அழிந்து பூங்கா உருவானதை பெண்கள் எப்படிப் பார்த்திருப்பார்கள் என்பதை சிந்திக்கும் தேவை கதை சொல்லிக்கு இல்லை. 'பெண்மை அம்பலமாகி விட்டதையும், அவர்கள் காமத்தைத் தூண்டும் காட்சிப் பொருள்களாக மாறிவிட்டதையும் கதை சொல்லி பூங்கா காட்சிகளில் பிரசங்கிக்கிறான். பூங்கா என்ற பொது இடம் தங்கள் புழக்கத்திற்குக் கிடைத்ததைப் பற்றி அவர்களுக்கு வேறு கருத்துக்கள் இருக்கலாம். அதைப் பற்றி கதைசொல்லிக்கு அக்கறையில்லை.

முன்னுரையில் 'தேச ஜனத்தொகையில்' பெண்களின் விகிதாசாரப்படி நாவலில் அவர்கள் விகிதாசாரம் உத்தேசமாகக்கூட அமையவில்லை என்று வருத்தப்படும் ஆசிரியருக்கு அவர்கள் பார்வைகளையாவது தனது கதை சொல்லி ஒலிக்க வேண்டுமென தோன்றுவதில்லை.

பெண்கள் மட்டுமல்ல, பூங்காவில் கூடும் யாரைப் பற்றியும் நல்லதாகக் கூற எதுவும் இல்லை கதை சொல்லிக்கு. வயோதிகர்களைப் பற்றிக்கூட. ஏனெனில் இவர்கள் 'நவீன' வயோதிகர்கள். வேலை செய்து ஓய்வு பெற்றவர்கள். செய்தித்தாள் படிப்பவர்கள். இவர்களெல்லாம் தாமோதர ஆசான்கள் அல்லர். இளைஞர்கள், சினிமா நடிகையைப் பற்றியே கவலைப்படுபவர்கள். அரசியல் பேசுபவர்கள், முகங்களை விகாரமாக்கிக்கொண்டு, அடித்தொண்டையில் கத்துபவர்கள். தமிழாசிரியர்கள், அகந்தை பிடித்த கிறுக்கர்கள். ஊர்வலத்தில் கோஷமிடுபவர்கள், ரத்த வாந்தியெடுக்க விழைபவர்கள். இப்படியாகக் காலத்தின் கோலத்தை எள்ளி நகையாடுகிறான் கதைசொல்லி. அதன் பின் அவன் 'இக்காலம்' சாதிக்கும் புளியமரத்தின் அழிவின் கதையை சொல்கிறான்.

ஒரு நாள் அதிகாலை ஏழைச் சிறுவர்களும், கர்ப்பிணி தோட்டிச்சிகளும் புளியங்காய் சாப்பிடும் ஆசையில், யாருமில்லா அந்த விடிகாலை நேரத்தில் புளியமரத்தில் கல்லெறிந்து மரத்தையே மொட்டையடித்து விடுகிறார்கள். பெரிய கும்பலாக தோட்டிகள், தோட்டிச்சிகள், சிறுவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து சாலை வேலைக்காகப் போடப்பட்டிருந்த கற்களைப் பயன்படுத்தி இதைச் செய்துவிடுகிறார்கள். தோட்டிகள் பின்னால் அந்த இடத்தை சுத்தமாகப் பெருக்கி, கற்களையும் பழையபடி குவித்துவிட, இந்த அதிகாலைக்களவு தடையமின்றி போகிறது.

இவ்வாறான கல்லெறிதலில் இசுலாமிய வியாபாரி காதரின் கடை போர்டு உடைந்துவிடுகிறது. தன்மீது தனிப்பட்ட விரோதம் கொண்ட இந்து வியாபாரி தாமுதான் அடியாள் கூலி ஐயப்பன் மூலம் போர்டை உடைத்ததாகக் காதர் எண்ணுகிறான். அவன் போலீஸில் புகார் கொடுக்க போலீஸ் தாமுவை கைது செய்கிறது. கூலி ஐயப்பன் தலைமறைவாகிறான். புளியங்காய்களை வருடா வருடம் ஏலம் போடும் முனிசிபாலிடி காய்கள் காணாமல் போனதை களவாகப் போலீசில் புகார் செய்கிறது. தோட்டிகள் தான் இதைச் செய்திருக்க வேண்டும் எனவும் புகாரில் சொல்கிறது. தோட்டிகள் தலைவரான மாடசாமியும், நிறைமாத கர்ப்பிணியான அவர் மனைவி மாடத்தியும் கைது செய்யப்படுகிறார்கள். ஏற்கனவே தோட்டிகளை சங்கமாக ஒன்றுபடுத்தி, கூலி உயர்வுக்காக குரல்கொடுத்த வக்கீல் ஜனார்த்தனம் அவர்களுக்காக வாதாடுகிறார். ஜாமீனில் தாமுவும், மாடசாமியும் வெளிவருகிறார்கள். பொதுக்கூட்டம் போட்டு முனிசிபாலிடியையும், அரசாங்கத்தையும் தாக்குகிறார்கள். தாமு, காதர் முதலான கறுப்புச் சந்தை வியாபாரிகளைத் தாக்கிப் பேசுகிறான். 'திருவிதாங்கூர் நேசன்' என்ற தினப்பத்திரிகை அவர்களை ஆதரிக்கிறது. இதன் ஆசிரியர் 'இசக்கி'. இந்த நேரத்தில் முனிசிபல் எலக்ஷன் வருகிறது. தாமு 13ஆம் வார்டில் நிற்கிறான். பின்னால், கிறித்துவரான முனிசிபல் தலைவர் எம்.சி. ஜோசப்பை எதிர்த்து தாமு தலைவராக முற்படுவான் எனப் பேச்சு

படிப்பகம்

www.padippakam.com



அடிபடுகிறது.

பத்திரிகையாளன் இசக்கி எம்.சி. ஜோசப்பின் பதவியைக் காக்கும் பொருட்டு 13ஆம் வார்டிலே தாமுவை எதிர்த்து நிற்கும்படி காதரைத் தூண்டிவிடுகிறான். 13ஆம் வார்டில் முஸ்லீம் ஓட்டுகள் அதிகம். அடுத்தபடி இருந்த வேளாளர் ஓட்டுகள் மக்கள் வழி, மருமக்கள் வழி என பிரிந்து இருப்பதாலும், மக்கள் வழிக்காரர்கள் மருமக்கள் வழிக்காரனான தாமுவுக்கு ஓட்டுப் போடமாட்டார்கள் என்பதாலும் காதருடைய வெற்றிவாய்ப்பு அதிகமாக இருக்கிறது. தாமு, வேட்பாளர் விண்ணப்பத்தின் கடைசி நாளன்று அந்த வார்டில் உள்ள ஏழை இசுலாமிய கிழவரான ஒரு மிட்டாய் வியாபாரியை இன்னுமொரு வேட்பாளராக்கிவிடுகிறான். இதனால் இசுலாமிய ஓட்டுகள் பிரிந்துவிடும் என்பதால், காதலின் வெற்றிவாய்ப்பு மிகவும் குறைந்து விடுகிறது.

இதற்கிடையில் இசக்கி தாமுவின் கடைவியாபாரம் புளியமரத்தின் நிழலில் நடப்பதால் (வெற்றிலை பாக்குக்கடை) புளியமரத்தை வெட்டிவிட்டால் வியாபாரம் படுத்துவிடும் என்று காதரிடம் சொல்கிறான். அவனுடைய பத்திரிகையில் தொடர்ந்து புளிய மரத்தை வெட்டவேண்டும் என எழுதத் தொடங்குகிறான். புளியமரம் மிகவும் வயதாகிவிட்டதால் மக்கள் நடமாட்டம் மிக அதிகமாக உள்ள இடத்தில் கிளைகளோ, மரமோ இற்று விழுந்தால் உயிர்ச்சேதம் ஏற்படும் என்பது போன்ற காரணங்களைக் கூறுகிறான். முனிசிபாலிடியும் இதை ஒட்டி புளியமரத்தை வெட்டுவது குறித்து விவாதித்து மூன்று ஓட்டுகள் வித்தியாசத்தில் வெட்டிவிட தீர்மானம் நிறைவேற்றுகிறது. காதரும் வெட்டுவதற்கு ஆதரவாகவே பிரசாரம் செய்வதால் தனக்கெதிராகவே இந்த முயற்சி என்றுணரும் தாமு ஒரு தந்திரம் செய்கிறான். புளிய மரத்தில் ஒரு அம்மன் முகத்தை ஒட்டிவைத்து, அது தெய்வமாகிவிட்டது என்றும், மரத்தை வெட்டுவது இந்துக்கள் உணர்வுக்கு எதிரானது என்றும் பிரச்சாரம் செய்கிறான். மரத்தடியில் விசேஷ பூஜைகளும், கலை நிகழ்ச்சிகளும் நடக்கின்றன. பிரச்சினை மதரீதியாக மாறிவிட்டதால் முனிசிபல் தலைவர் ஜோசப் பின்வாங்கி விடுகிறார்.

தாமுவிடம் இதற்குள் விரோதம் கொண்ட கூலி ஐயப்பன், காதரிடம் தன்னால் ரசாயனம் செலுத்தி புளியமரத்தை பட்டுப்போகச் செய்துவிட முடியும் என்று கூறுகிறான். தேர்தல் விஷயம், புளியமர விஷயம் இரண்டிலுமே தோல்வியடையும் நிலைக்கு தாமுவால் தள்ளப்பட்ட காதர் இதற்கு உடன்பட புளியமரம் ரசாயன முறையில் கொல்லப்படுகிறது. கூலி ஐயப்பனின் செயலைப் பார்த்த தாமுவின் ஆட்கள் அவனை கொன்று விட்டு போலீஸில் சரணடைகின்றனர். தாமு, காதர் இருவருமே கைது செய்யப்படுகின்றனர். புளியமரம் பட்டுப்போனதை அறிந்த பக்தர்கள் உணர்ச்சிவசப்பட்டு காதர் கடையைத் தாக்க, மதக் கலவரம் உருவாகும் சூழ்நிலையேற்படுகிறது.

காதர் தண்டனை பெற்று சிறையிலிருக்க, விடுதலையான தாமு ஊரைவிட்டே சென்று விடுகிறான். தேர்தலில் வெற்றிபெற்ற மிட்டாய்த்தாத்தா, முனிசிபல் அங்கத்தினராக இருந்தாலும் வருவாய்க்கு வேறு வழியில்லாததால், பழையபடி சட்டையில்லா வெற்றுடம்புடன் வியாபாரம் செய்யப் புறப்படுகிறார்.

☆ ☆ ☆

கதை சொல்லி கொஞ்சம் காலக் குழப்பத்துடனே கதை சொல்கிறான். குறிப்பாக, தாமோதர ஆசானிடம் கதை கேட்ட காலத்தில் கல்லூரியில் படித்ததாகவும், வேலை பார்க்க வெளியூர் சென்றதாகவும் கூறுகிறான் (பக்கம் 43, 57). ஆனால் ஆசான் காலம் கழிந்து தூங்குமூஞ்சி மரத்தோப்பு வெட்டப்பட்ட போதும் தான் கல்லூரியில் படித்ததாகக் கூறுகிறான் (பக்கம் 66). பின்னர் அதெல்லாம் கடந்து தாமு, காதர் மோதல் உருவான காலத்தில் தனக்கு பதினாறு வயதென்று (பக்கம் 157) கூறுகின்றனான். இது தவிரவும் பல்வேறு காலக் குறிப்புகளுமே கொஞ்சம் குழப்பம் தருவதாக இருக்கின்றன. ஆனால், புளிய மரம் பட்டுப்போனது, முனிசபல் எலக்‌ஷன் நடந்தது போன்ற இறுதிக்கட்ட நிகழ்ச்சிகள் 1952ல் நடந்ததாகக் கொஞ்சம் உறுதியாக எண்ண முடிகிறது. ஆகவே, இது 52ல் ஏற்பட்ட ஒரு மதக்கலவரத்தின் கதை என்று சொல்லலாம். கதை சொல்லியின் சார்பு இதில் தெளிவாக வெளிப்பட்டு விடுகிறது. காதர் என்ற இசுலாமியரைக் குற்றவாளியாகச் சித்தரிப்பது கொஞ்சம் கவனமாகப் படித்தாலும் வெளிப்படும்.

☆ ☆ ☆

காதர் பற்றி விரிவாகக் கூறப்படுகிறது. காதரும் பொய்த்தேவு சோமு போலத்தான்.

"வாழ்க்கையில் முக்கியமாய் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு உண்மையை, காதர் தனது சிறுவயதிலேயே தெரிந்து கொண்டுவிட்டான். எல்லாத் தெய்வங்களிலும், பணத் தெய்வம்தான் சக்திவாய்ந்தது என்றும், பணத்துக்கு சம்பந்தமில்லாத துறைகள் என்று கருதப்படும் இடங்களில் கூட பணநாயகம் ஓங்கி நிற்கிறது என்றும் புரிந்து கொண்டான்" (பக்கம் 128).

ஜவுளி வியாபாரத்தில் தனக்கு அனுபவமேற்பட காரணமான வள்ளிநாயகம் பிள்ளையிடமிருந்து மனிதாபிமானமின்றி விலகி, கோபால அய்யருடன் சேர்ந்து கொள்கிறான். அவருக்காகக் கொள்முதல் செய்யும் போது கமிஷன் அடித்து காசு சேர்த்து அவருடைய ஜவுளிக் கடையையே வாங்கிவிடுகிறான். பணத்திற்காக ஜனாப் அப்துல் அஸீஸின் அழகற்ற பெண்ணை விருப்பமின்றி திருமணம் செய்து கொள்வதுடன், பின்னால் அவளைக் கொடுமைப்படுத்தவும் செய்கிறான். அவருடைய பணத்தில் எடுத்த சிகரெட் ஏஜென்சியினால் பணம் பெருக, அகந்தை நிரம்பியவனாகிக் கடைக்காரர்களை அலைக்கழிக்கிறான். சிகரெட்டை பதுக்கி போலித்தட்டுப்பாடு உருவாக்கும் கறுப்பு மார்க்கெட் காரனாக மாறி, தாமுவால் கையும் களவுமாய் பிடிபட்டு ஏஜென்ஸியை இழக்கிறான். இறுதியில் தாமுவின் மேல் பொறாமையால் புளியமரத்தை ரசாயனக் கொலை செய்யத் துணைபோகிறான். பணம் சேர்ப்பதும், இன்பங்களை

படிப்பகம்

www.padippakam.com



# அன்னியன்

## கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

*(கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் - 'உங்கள் தூதுவன் என்னும் இசுலாமிய அரசியல் இதழின் ஆசிரியர். இசுலாமியாராவதற்கு முன்பு தாழ்த்தப்பட்ட வகுப்பு ஒன்றைச் சேர்ந்த கொடிக்கால் செல்லப்பா நீண்ட காலம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் கன்னியாகுமரி மாவட்டச் செயலாக இருந்தவர். நாகர்கோயில் வட்டாரத்தில் சகலருக்கும் அறிமுகமான கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் அவர்கள் இசுலாமிய மக்களின் முன்னேற்றத்துக்காக வாழ்வை அர்ப்பணித்துச் செயல்படுகிறார்.*

*சுந்தர ராமசாமி குழுவினர் ஆண்டுதோறும் இலக்கியச் சந்திப்புகளை - வெளிப்படையாக அழைப்பு விடுக்காமல் - நடத்துவதை நாம் அறிவோம். அத்தகைய சந்திப்பு ஒன்றில் கலந்து கொள்ள நேர்ந்த அப்துல்லா அவர்களின் அனுபவங்கள் இங்கே......)*

சர்வதேச அளவில்
நாடறிந்த நல்ல எழுத்தாளரும்
'காலச்சுவடு' ஆசிரியருமான
திரு. சுந்தர ராமசாமி அவர்கள்
அண்மையில்
குமரிமாவட்டம் சுங்கான்கடை
என்ற இயற்கை
எழில் கொஞ்சும்
மலை அடிவாரத்தில்
தமிழகத்தின் தலைசிறந்த
படைப்பாளிகளையும்
படிப்பாளிகளையும்
கொண்ட
மூன்று நாள் முகாம்
ஒன்றை மிகச் சிறப்பாக
நடத்தினார்கள்.

அந்த முகாமில்
பங்கு கொள்ள
அழைக்கப்பட்டிருந்ததால்
நானும் கலந்து கொண்டேன்.
அது எனக்கு
மிக்க பயனுள்ளதாக
இருந்தது.

முகாமில் பங்குகொண்டிருந்த
படைப்பாளர்களும் -
படிப்பாளிகளும்
சமூகத்தின்
பல்வேறு கூறுகளை
தத்தம் தளங்களினின்று
தாம் அறிந்த
கண் காட்சிகளை
அனுபவங்களை
அதனால் ஏற்பட்ட
உள்உணர்வுகளை
பல்வேறு கோணங்களில்
தங்களுக்கேயுரிய
இயல்பான நடையில்
விவாதித்தனர்.
சில சமயங்களில்
வாதப்பிரிதிவாதங்களும்

அனுபவிப்பதும் தவிர வேறு லட்சியங்கள் இல்லாதவன். தன்னால் வஞ்சிக்கப்பட்ட கோபாலய்யர் குடும்பத்திற்கு மாதா மாதம் உதவிப்பணம் தருமளவு குற்றணர்வுள்ளவன். அவன் மாமனார் ஜனாப் அப்துல் அஸீஸு பினாங்கு சென்று சொத்து சேர்த்து களக்காடு திரும்பியவர். பொழுதுபோக்காக கடை ஆரம்பித்து அதில் ஜின்னாவின் படத்தை மாட்டி வியாபாரத்தைக் கெடுத்துக் கொள்பவர். முஸ்லீம் லீக் சார்ந்தவர். தன் மருமகன் தவறு செய்தாலும் குருட்டுத் தனமாய் அவனை ஆதரிப்பவர்.

இவனது எதிரியாக நிறுத்தப்படும் தாமு சிறுபான்மை எண்ணிக்கையிலுள்ள சமூகத்தைச் சேர்ந்தவன். தன் அண்ணன் செல்லப்பனுடன் ஒரே மனைவியை பகிர்ந்து கொள்பவன். தன் சுயமுக்கியத்துவம் கருதி அரசியலில் ஈடுபட்டாலும், அஞ்சாமல் போலீஸையும் எதிர்க்கக் கூடியவன். ஆகஸ்டு தியாகி என பெயர் வாங்கியவன். பொதுமக்கள் பிரச்சினைகளை சிறப்பாகப் பேசக்கூடியவன். வெற்றிலை பாக்கு கடைக்காரர் சங்கத்தின் தலைவனாக, அவர்களது ஆழ்ந்த நம்பிக்கையைப் பெற்றவன். அவர்கள் பொருட்டு காதருடன் போராடி, அவர்கள் சார்பாக அவனது பதுக்கல் வேலையை அம்பலப்படுத்தியவன். அச்சமற்றவன். சாதுரியமுள்ளவன். காதரைவிட பன்மடங்கு மக்களிடையே செல்வாக்குள்ளவன். இசுலாமியர்கள் பலரையும் நண்பனாகப் பெற்றவன்.

கதைசொல்லிக்கு தாமுவினிடத்து பல காரணங்களால் ஈர்ப்பு உண்டு. அதில் ஒரு காரணம் அவனது அதிசயமான குடும்ப வாழ்க்கை. தாமுவின் வீட்டிற்கு சாவர்க்கரின் 'எரிமலை' வாங்கப்போகும் சாக்கில் போயிருக்கிறான்.

☆ ☆ ☆

தாமு, காதர் இருவருமே பலவீனங்கள் நிரம்பியவர்களாகவும், சுயநலமுள்ள வியாபாரிகளாகவும் சித்தரிக்கப்பட்டாலும் அதிக தவறுகளை செய்வது காதராகவே இருப்பதாக கதைசொல்லியால் நிறுவப்பெருகிறது. காதரின் அந்தரங்க உந்துதல்களையும், முன்னுக்குவர அவனது போராட்டத்தையும் மிக விரிவாகப் பேசும் கதைசொல்லி, தாமுவை அவ்வளவு தூரம் அணுகி ஆராயாமல் வசதியான தூரத்தில் நிறுத்துகிறான். இது தவிர கதையின் இறுதியில் நிகழும் 'அசம்பாவிதங்களுக்கு' காதரே அதிகம் பொறுப்பு என்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது. இங்கு புளியமரத்தின் அழிவு, புளியமரத்தால் ஏற்பட்ட அழிவு என்று அடிக்கடி கதைசொல்லி சொல்வது என்ன என்று பார்க்கவேண்டும்.

1. முதலில் புளியமரத்தின் அழிவு. அதை ரசாயன ரீதியாக பட்டுப்போக வைத்தது, காலத்தால் அதன் மரணத்தைக் கொஞ்சம் முன்னோக்கி நகர்த்தியதுதான். ஏனென்றால் கதை சொல்லியே அது மிகவும் வயதான

படிப்பகம்

www.padippakam.com



நடந்ததுண்டு.
அத்தனையும்
சுவையாகவும்
சிந்தனைக்கு
விருந்தாகவும்
அமைந்திருந்தன.
ஒரு சமயம் . . . . ,
சபைக்கு என்னை
திரு. சுந்தர ராமசாமி
அறிமுகப்படுத்தியபோது
என் பூர்வாசிரமத்தை
சிலாஹித்து கூறிவிட்டு
என் நீண்டகால
நண்பர்;
இப்போது இவர்
முஸ்லிமாக மாறிவிட்டார்
என்றார்.

ஆம்! அவர் பேச்சில்
அழுத்தம் இருந்தது.
என்மீது எப்போதும்
அவருக்கு அன்புண்டு.
நானும் அதை - இப்பவும்
பேணி பாதுகாத்து
வருகிறேன்;

ஆனால் நான்
எடுத்துக்கொண்ட
முடிவில்
அவருக்கு ஏதோ
ஒரு விதத்தில் - நான்
தடமாறி சென்று
விட்டதாக - என்மீது
மனக்குறை உண்டு.
ஆம்! அது
இப்பவும் இங்கு
பளிச்சிட்டது.

சபையில் . . . . .
எல்லோருக்கும்
பரிச்சயமான
எழுத்தாளரும்
விமர்சகருமான
ஒரு முஸ்லிம்
நண்பர் இருக்கிறார்.
இருந்தும்,
திரு. சுந்தர ராமசாமியின்
அறிமுகம் - என்மீது
மற்றவர்களுடைய
பார்வைபட
தூண்டியது.

நான் இப்போது
புதிதாக
ஏற்றுக்கொண்டிருக்கும்
மார்க்கத்தையும்
என் வாழ்க்கையில்
ஏற்பட்டுள்ள
மாறுதல்கள் பற்றியும்
அறிந்து கொள்ள
ஆவலாய்
அடுக்கடுக்காக
பல கேள்விகளை கேட்டனர்.
என் பதில்;
சிலருக்கு திருப்தியாக
இருந்தது.
இன்னும் சிலருக்கு
மறுத்துரைக்க
முடியாவிட்டாலும் - அதை
ஏற்றுக்கொள்ள
மனமில்லாதிருந்ததையும்
பார்க்க முடிந்தது. ,

எங்கள் உரையாடலின் ஊடே
திரு. சுந்தர ராமசாமி அவர்கள்
கொடிக்கால் . . . . .
என்ன இருந்தாலும்
நானும் . . . . .
ஏன் இங்கு இருப்பவர்களும்
உங்களுக்கு அன்னியர்!
அப்படித்தானே என்றார் . . .

என் மனம் வேதனைப்பட்டது.
ஏன் அப்படி கூறுகிறீர்கள்
என்றேன்.

மரம்தான் என்றும், 'இன்னும் சில காலம்' விட்டிருந்தால் 'அது தானாகவே பட்டுத்தான் போயிருக்கும்' என்றும் முதலிலேயே கூறிவிடுகிறான் (பக்கம் 8). அதன் வயதைக் கருதியே ஒரு பொதுஜனத் தொந்திரவாக மாறக்கூடிய அதை வெட்டிவிடலாம் என முனிசிபாலிடியும் தீர்மானிக்கிறது. எனவே, இசக்கியும், கூலி ஐயப்பனும், காதரும், முனிசிபல் தலைவர் ஜோசப்பும் சூழலியல் குற்றவாளிகள் என்று கூறமுடியாது. நகர்மையத்தில் உள்ள மிகவும் வயதான மரத்தைத் தானாக பட்டுப்போய் விழும் வரை வெட்டக் கூடாது என்று கூறுமளவு தாவரநேயம் கதைசொல்லியுட்பட யாருக்கும் சாத்தியமில்லை. எனவே, கதையினிறுதியில் ஜெயில் தண்டனை பெற்றதாகக் கூறப்படும் காதர் எந்த காரணத்தினால் சிறையிலிருக்கிறான் என்பதே புரியவில்லை. என்ன தண்டனை, எவ்வளவு காலம் என்றும் தெரியவில்லை.

2. சாவர்க்கர் படிக்கும் தாமு புளிய மரத்தை இந்து தெய்வமாக மாற்றி, திட்டமிட்டு இந்து மதவெறியைத் தூண்டி பிரச்சாரம் செய்தாலும், இவன்தான் கலவரம் உருவாகக் காரணம் என கதைசொல்லி நிறுவுவதில்லை. தாமு தண்டனையின்றி விடுதலையாகி விடுகிறான்! (இத்தனைக்கும் தாமுவின் ஆட்கள்தான் கூலி ஐயப்பனைக் கொன்றவர்கள்).

3. பின்னர் புளிய மரத்தால் ஏற்பட்ட அழிவு. கலவரம் / மதக்கலவரம் என்பதாகப் பிரதி கூறுவது கீழ்க்கண்ட நிகழ்வுகளைத்தான்.

- காதரின் கடை சேதப்படுத்தப்பட்டு, தீ வைக்கப்படுகிறது. ஆனால் போலீசும், தீயணைக்கும் படையும் விரைந்து வந்ததால் அதிக சேதம் ஏற்படவில்லை. கூட்டத்தைக் கலைக்க போலீஸ் தடியடிப் பிரயோகம் மட்டும் செய்ய நேர்ந்தது.

- ஆங்காங்கு ஊரில் சில கைகலப்புகள் நிகழ்ந்தன. கோட்டாற்றில் சில முஸ்லீம்கள் தாக்கப்பட்டதாக செய்தி வந்தது. பெரிய அளவில் மதக் கலவரம் உருவாகலாம் என செய்திகள் வந்தன. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இரண்டு வாரங்கள் கழித்துதான் சகஜ நிலை திரும்பியது.

- மாணவர் கோஷ்டியொன்று இசக்கியின் பத்திரிகையான 'திருவிதாங்கூர் நேசன்' காரியாலயத்தைத் தாக்கியது. இசக்கி தப்பிவிட்டான். இத்தகைய நிகழ்வுகளுக்கு சிறிதும் தொடர்பு படுத்தமுடியாதபடி அழிவு, அழிவு என்று கட்டியங்கூறி கதை துவங்கப்படுகிறது.

"ஆனால் நாட்டையும், பணத்தையும், பெண்டுகளையும், அதிகாரத்தையும் புகழையும் காயாக வைத்து விளையாடிய மனிதன் புளிய மரத்தை மட்டும் விட்டுவைக்கிறேன் என்கிறானா? அதையும் காயாக வைத்து விளையாடித் தீர்த்துவிட்டான்" (பக்கம் 9)

www.padippakam.com



ஆம்! உங்கள் வேதம்
திருக்குர்ஆன்
அப்படித்தானே கூறுகிறது.
சற்று விளக்கமாக
கூறுங்கள் என்றேன்.
எங்களைப் பார்த்து
"ஃகாபீர்" என்றுதானே
நீங்களும் உங்கள்
வேதமும் கூறி
அன்னியப்படுத்துகிறது
என்றார்.

ஃகாபீர் என்றால்
என்ன பொருள்
கொள்ளுகிறீர்கள்
என்றேன்
அன்னியன் . . . . .!
அவர்களை கண்டால்
வெட்டுங்கள்
குத்துங்கள்
கொலை செய்யுங்கள்
என்று கூறகிறதே!

ஆம்! அவர் அறிந்து
வைத்திருந்தவைகளை
அவைக்கு அறிமுகம்
செய்ததில் வியப்பில்லை.
ஸார்! (திரு. ராமசாமி) நீங்க
இஸ்லாத்தை
தவறாக புரிந்து
கொண்டிருக்கிறீர்கள்.
ஃகாபீர்-க்கு பொருள் :
ஏக இறைவனை
இறைக்கொள்கைகளை
இறைச் சட்டங்களை
ஏற்றுச்கொள்ள
மறுத்து - நிராகரித்து
இறைவனுக்கே
சவால்விட்டு
களதத்தில் நின்றவர்
களை- ஃகாபீர்களை
பார்த்து - அந்த காலகட்டத்தில்
ஏக இறைவன்
கூறிய வார்த்தை
வசனம்தான் ஃகாபீர்
என்றேன்.
அப்படியா . . . என்றார்
திரு. சுந்தர ராமசாமி
அறை குறை மனதுடன்.

ஆமா . . . . .
இதோ இருக்கிறாரே
நண்பர் . . . .
(முஸ்லிம் முற்போக்கு
இலக்கியவாதி)
அவரும் காபீர்தான்
பரவா இல்லை
நம்ம ஆளுதான்
என்றான் ஒரு
பெண்மணி (எழுத்தாளர்).

நான் சகோதரரை
இமை கொட்டாது
பார்த்ததுபோல்
சபையும் அவரை
உற்று நோக்கியது

சகோதரரின்
மௌனம் கலந்த
புன்னகை . . . .
பெண்மணியின் கூற்றை
அங்கீகரிப்பதுபோல்
இருந்தது.

எனக்கோ - அதுகண்டு
திகைப்பாக இருந்தது.

மற்றவர்களுக்கோ
அவர் போக்கு
பிடித்திருந்தது.

*நன்றி : உங்கள் தூதுவன்*
*அக்டோபர் 1997*

"இப்போது அந்தக் கடைவரிசை எங்கே? கண்ணைப் பறிக்கும் விளக்குகள் எங்கே? ஒவ்வொரு கடையிலும் இப்படியா இருள் மண்டிக் கிடக்கும்? எங்கு பார்த்தாலும் இப்படியா நூலாம்படை தொங்கும்? சிலந்திகள் விளையாடும்? மூதேவி இப்படியா கால்பரப்பி விளையாடுவாள்?"

அப்படித்தான் என்ன ஆயிரம் காலம் வாழ்நதுவிட்டீர்களா? அடப்பாவிகளா! பத்துவருஷத்தில் இப்படியா அழிந்து போவீர்கள்?"

(பக்கம் 61)

"புளிய மரத்தைக் காப்பாற்றியது மூலம் மனிதகுலத்துக்கு ஒரு நன்மையைத் தேடித்தந்துவிட்ட பெருமையுடன் அன்று பேசினார் ஆசான்.

அவர் வரைக்கும் அது உண்மைதான்.

ஆனால் புளியமரம் நின்றதில் லாபமா, நஷ்டமா? என்பதை இப்போதும் என்னால் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. பின்னால் விளைந்த விபரீதம் எல்லாம் எனக்குத் தெரியுமே தவிர ஆசானுக்குத் தெரியாது. தான் வாழ்ந்த காலத்தை அளவு கோலாக வைத்து லாபக் கணக்கு பார்த்துவிட்டார் ஆசான். பின்னால் நடந்த பல சம்பவங்கள் பற்றியும் எண்ணிப் பார்க்கிறபோது புளிய மரம் அன்றே அழிந்து போயிருந்தால் பல விதத்தில் லாபமாகக்கூட இருந்திருக்கலாம் என்று கூடத் தோன்றுகிறது.

பின்னால் ஏற்பட்ட சண்டைக்கும், சச்சரவுக்கும், பூசலுக்கும், புகைச்சலுக்கும் அதுதானே காரணம்?"

அப்படியும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

அழிவைத் தேடிக்கொண்டு போகிறவன் எதைத்தான் வியாஜ்யமாக வைத்துக்கொள்ள மாட்டான்?

(பக்கம் 41)

இப்படியாக பலவிதங்களில் அழிவு பற்றிப் பேசுவது இறுதியில் கூறப்படும் நிகழ்வுகளுக்குத் தொடர்பின்றி உள்ளது. காதரின் கடை மட்டும் சேதப்படுத்தப்பட்டது; தீ வைக்கப்பட்டது. உடனடியாக தீயை அணைத்துவிட்டதால் சேதம் அதிகமில்லை. அப்படியிருக்க கடைவீதி முழுக்க ஏன் இருண்டு போகவேண்டும்? புளியமரத்தின் மறைவால் பஜாரே எடுக்கப்பட்டுவிட்டது என்று கதைசொல்லி 241ஆம் பக்கத்தில் சொல்வது பிரதியினடிப்படையில் அபத்தமாகவும், முன்பின் முரணாகவும் இருக்கிறது. ஒரு மரத்தை வெட்டிவிட்டால் பேருந்து நிலையம், சினிமா தியேட்டர், கடைவீதி எல்லாமுமா காணாமல் போகும்? அதுவும் சாலைகளின் சந்திப்பாக உள்ள ஒரு இடத்தில்? எனவே அழிவு, அழிவு என பூச்சாண்டி காட்டியதெல்லாம் அந்த

படிப்பகம்

www.padippakam.com



மரத்தைப் பற்றிய அழகியல் ரீதியான அக்கறைதானே தவிர, அதன் உருவக மதிப்பிற்குத்தானே தவிர வேறு என்ன என்ற கேள்வி எழுகிறது.

புளிய மரத்தின் கம்பீரம், பூரணத்துவம் என்று பலபடியாக வர்ணித்து உருவாக்கப்படும் ஏதோ ஒரு உருவகம் அழிந்துபட்டது என்பதுதானே சோகம்? எதன் உருவகம் இந்தப் புளியமரம்?

☆ ☆ ☆

' புளிய மரத்தை வெட்டக்கூடாது என முனிசிபாலிடியில் வாதாடும் உறுப்பினர் கம்பராமாயணம் அனந்தன் பிள்ளை பேச்சை முடிக்கும்போது 'ஒரு சுமங்கலியின் நெற்றித் திலகத்தை அழிப்பதில் உங்களுக்கு இத்தனை ஆசையென்றால் அப்படியே செய்யுங்கள்; கடவுள் உங்களை மன்னிக்கட்டும்' என்று கூறுகிறார் (பக்கம் 217, 218). அதை நினைவு கூறும் கதைசொல்லி இறுதியில் கூறுகிறான். "எந்த அடிப்படையில் அவர் அவ்வாறு சொன்னார் என்பது வேறு விஷயம். ஆனால் முச்சந்தியில் புளியமரம் நின்றிருந்த காட்சியை தங்கள் வாழ்நாளில் ஒரு தடவையேனும் பார்த்திருப்பவர்களுக்கு, இப்போது வெறும் பாழாய், சூன்யமாய் கிடந்த அந்த சந்திப்பு வைதவ்ய கோலத்தைத்தான் நினைவூட்டும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை" (பக்கம் 240). இதே பிம்பம் தூங்குமூஞ்சி மரங்கள் வெட்டப்பட்டதை வர்ணிக்க பிரதியில் கதைசொல்லியால் உபயோகிக்கப்பட்டதுதான். "தனிமரம் ஒவ்வொன்றும் விழுந்து கிடந்த அவலம், வைதவ்யம் பூண்ட அன்று விதவை ஒருத்தி விழுந்து கிடக்கும் அவலத்தையே நினைப்பூட்டிற்று எனக்கு" (பக்கம் 66).

தஞ்சாவூர்க்கார இளைஞன் செடிகளை நவீன பூங்காவில் திட்டமிட்டு உருவாக்கியதை "விஞ்ஞானத் தாரை அவன் பிரம்மாவின் முகத்தில் முடிந்த மட்டும் வாரிப்பூசி எல்லோரையும் திகைக்க அடித்தான்" என்று வர்ணிக்கும் கதை சொல்லிக்குக் கூலி ஐயப்பனின் ரத்தத்தை மரத்தில் பதிக்கப்பட்ட அம்மன் முகத்தின் பச்சைக் கண்கள் இமை தாழ்த்திப் பார்ப்பதாகத் தோன்றுகிறது. இப்படியாக இந்து உயர்சாதி, ஆண்மைய குறியீட்டு மண்டபத்தில் இயங்கும் கதை சொல்லிக்கு காதரின் இசுலாமிய சமூகப் பின்புலத்திற்குள் நுழைவதும், அதைவிட தோட்டிகளின் நோக்கு நிலையையோ, கூலி ஐயப்பனின் வாழ்வையோ அவதானிப்பது சற்றும் சாத்தியமின்றிப் போகிறது. புளியமரம் குறித்த பொதுஜன விவாதத்தில் பிற இசுலாமியர்களின் பங்கு என்ன என்பது கூறப்படுவதில்லை. பொதுவாகவே அவர்கள் குரல் பிரதியில் இல்லை. புளியங்காய் களவில் குற்றம் சாட்டப்பட்ட தோட்டிகள், அவர்கள் தலைவர் மாடசாமி ஆகியோரின் நிலைபாடு என்ன என்பது கூறப்படுவதில்லை. வக்கீல் ஜனார்த்தனம் தோட்டிகளை தோழர், தோழியர் என்றழைப்பது குறித்து கிண்டல் செய்யும் வள்ளி நாயகம் பிள்ளையின் குரலுடன் (பக்கம் 118) கதை சொல்லியின் குரலும் இணைகிறது (பக்கம் 175). "தோழியர் மாடத்திக்கு அரசாங்கத்தின் கண்காணிப்பில் ஒரு குழந்தை பிறந்தது" என்று கதைசொல்லி கூறும்போது கிண்டலுக்கே அந்த சொல் பயன்படுத்தப்படுகிறது. முனிசிபல் தலைவர் ஜோசப் போல வாசகர்கள் சிலரும் இந்தக் கிண்டலுக்கு ஹாஹ்ஹாஹ்ஹா என்று சிரிக்கலாம். தோட்டிகளின் சம்பள உயர்வு போராட்டம் குறித்து சில வரிகள்:

"தோட்டிகளுக்கு உடனடியாகச் சம்பளத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி அன்றைய 'திருவிதாங்கூர் நேசன்' தலையங்கமும் தீட்டியிருந்தது. அது இசக்கியின் பேனா என்பதும் தெளிவாகத் தெரிந்தது. புரட்சித் தீ, புரட்சித் தீ என்று அந்த இரண்டு பத்திகளில் எத்தனை தடவைதான் வரும்? ஒரு தீயணைக்கும் மோட்டாரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டுதான் அதுபோன்ற தலையங்கம் ஒன்றை எழுதியிருக்க முடியுமென்று தோன்றுகிறது."

தோட்டிகள் சங்கம் அமைப்பதும், தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதும் ஐயர் ஜனார்த்தனம் அவர்களைத் தோழர் என்றழைப்பதும் இந்திய சாதீயச் சமூகத்தில் உண்மையிலேயே புரட்சிகரமான நிகழ்வுகளென்பது கதைசொல்லியின் சாதித்திமிர் படிந்த மூளைக்குப் புரிவதில்லை. மாடசாமி, தோட்டித் தொழிலாளர் தலைவர் தேர்தலில் நிற்பதாகப் பேச்சு அடிபட்டதாகக் கூறும் கதைசொல்லி, பின்னர் அவர் தேர்தலில் நின்றாரா, வெற்றி பெற்றாரா என்று எதுவும் சொல்வதில்லை. கதைசொல்லியின் கவலையெல்லாம் சிருஷ்டிக்கலையின் சிகரமான புளிய மரத்தைப் பற்றித்தானே தவிர, அதன் 'குறைப் பிரசவங்களான' மாடசாமிகள் மீது அல்ல. இந்தத் தோட்டிகளின் வரலாறு என்ன? பூரம் திருநாள் மகாராஜாவின் காலத்தில் இவர்கள் எப்படியிருந்தார்கள்? முனிசிபாலிடி தோன்றிய பிறகு எப்படியிருக்கிறார்கள்? காலமாற்றத்தைக் குறித்த இவர்கள் பார்வை என்ன? ஓட்டுப் போடவும், தேர்தலில் நிற்கவும் உரிமைபெற்றது பற்றி இவர்கள் என்ன நினைக்கிறார்கள்? தாழக்குடி மூத்தபிள்ளையும், வள்ளிநாயகம் பிள்ளையும் என்ன சொல்வார்கள் என்பதைத் தான் வக்கணையாகக் கூறத்தெரியும் கதைசொல்லிக்கு. தோட்டிகளைப் பற்றி ஒன்றும் தெரியாது அவனுக்கு.

ஆனால், புளியங்காய் களவுக்கும், புளிய மரத்தின் அழிவுக்கும் ஜம்பர் அணிந்த 'மதமதப்பான' உடலைக் கொண்ட கர்ப்பிணி தோட்டிச்சியின் புளியங்காய் ஆசைதான் காரணம் என்று கூறத்தெரியும். வேண்டுமென்றே ரவிக்கை அணிந்துகொள்ளாமல் வயசையும், பூரிப்பையும் காட்டித் திரியும் இன்னொரு தோட்டிச்சி அவளைத் தூண்டிவிட்டாள் என்று கூறத்தெரியும். தோட்டிச்சிகளின் பாலியவிருப்பும், இச்சையுமே அத்துமீறலையும், சமூக அழிவையும் தோற்றுவிக்கும் என்ற சாதீய, ஆணாதிக்கப் பார்வை தனக்குள்ளிருப்பது கதைசொல்லிக்குத் தெரியுமா?

இறுதியில் கூலி ஐயப்பன். இவன் யார்? எத்தகையவன்? இவன் கதையும், பார்வைகளும் என்ன? காதரிடமும், தாமுவிடமும் மாறி மாறி அடியாளாக இருக்கும் இவன் தன்னிலை எப்படியானது? தாமுவின் மேலுள்ள கோபத்தில், புளிய மரத்தை ரசாயன ரீதியாகப் பட்டுப்போகச் செய்ய முடிவெடுக்கும் இவனுக்கு அழகியல் எதுவும் கிடையாதா? கதைசொல்லியின், கம்பராமாயணம் அனந்தம்

படிப்பகம்

www.padippakam.com



பிள்ளையின் அழகியலை இவன் எப்படிப் பார்ப்பான்? கதை சொல்லிக்கு இக்கேள்விக்கெல்லாம் நேரமில்லை.

முன்னுரையில் ஆசிரியர் கூறுவதைக் கவனிக்கவேண்டும்.

"உண்மையில் ஒரு பெண் கதாபாத்திரத்திற்கு நிறையப் பங்கு அளிக்கவே உத்தேசித்திருந்தேன். 1958ல் எங்கள் ஊரில் நான் விரும்பும் நாவலாசிரியர் ஒருவர் வந்து தங்கியிருந்தார். நானும், என் இலக்கிய நண்பரும் வெகுநேரம் ஆசையோடு பேசிக் கொண்டிருப்போம். பேச்சு அலுப்புற்ற வேளைகளில் அந்த ஹோட்டலின் இரண்டாவது மாடியில் நின்று பஜார் இயக்கங்களை வேடிக்கை பார்த்தபடி நிற்போம். அங்கிருந்து நேராகக் கீழே பார்த்தால் சினிமாத் தியேட்டரை ஒட்டி பொரி கடலைக்காரி ஒருத்தி உட்கார்ந்து கொண்டிருப்பது தெரியும். மேலிருந்து பார்க்கையில் முறத்தில் பொரி கடலைக் குவியல்மீது அவளுடைய சிரம் வெட்டி வைக்கப்பட்டிருப்பதுபோல் தெரியும். இந்தக் கோணத்தில் பார்க்க நேர்ந்ததால் அவள் என் மனசில் இடம் பெற்றாள். கொழ, கொழவென்று வெற்றிலைச்சாறு தளும்பும் வாயுடன், தலையில் கனகாம்பர மூட்டையுடன், பெரிய பொட்டுடன், மலிவான அலங்காரங்களுடன், செயற்கைக் கவர்ச்சிகளுடன், "இது என் தொழில் அல்ல, உபதொழில்" என போடாமல் போடும் கோஷத்துடன் சிரிப்பும், வசையுமாக, கண்களால் ஆண்மையை அவ்வப்போது சீண்டியபடி இருப்பாள் அவள். அவளுக்கு இந்நாவலில் முக்கிய பங்கு அளிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஒரு அத்தியாயத்தில் அவளை அறிமுகப்படுத்தியும் வைத்தேன். கூலி ஐயப்பனின் காதலியாகவோ, சகோதரியாகவோ, மாமியாராகவோ பின்னால் வளர்த்திக் கொண்டு வரவேண்டுமென்று யோசித்திருந்தேன். அடித்துத் திருத்தி, கிழித்துப் போட்டு, திரும்ப எழுதிய பக்கங்களின் அவஸ்தையில் அவள் எப்போது நழுவி வெளியே விழுந்தாள் என்பதே தெரியவில்லை."

நழுவி வெளியே விழுந்தது அந்தப் பெண் மட்டும்தான் என்பதல்ல. அடித்தட்டு மக்களின் பார்வைகளும், வரலாறும், சாத்தியங்களும், இயக்கமும் அனைத்தும்தான். பிரதியில் தங்கியிருப்பதெல்லாம் இந்து, மேல்சாதி, ஆண்மைய ஒற்றைத்தன்னிலைப் பார்வைதான். முற்போக்கு, மனிதநேய சிந்தனையாளரும், இருத்தலியல் நோக்கில் பரிச்சயமுள்ளவருமான சுந்தரராமசாமியின் பிரதிக்கு இவ்விதம் நேர்ந்தது, அவர் மொழியில் சொன்னால் துர்ப்பாக்கியந்தான்.

(குடந்தை எழுத்தாளர் சந்திப்பு - 96-ல் ராஜன்குறை வாசித்த கட்டுரையின் பகுதி)

## 1998 - பெர்டோல்ட் ப்ரெக்ட் நூற்றாண்டு

இது ப்ரெக்ட் நூற்றாண்டு. கலை இலக்கியங்களில் நவீனத்துவத்தை எப்படி அணுகுவது என மார்க்சியர்களிடையே விவாதங்கள் எழுந்தபோது அய்சன்ஸ்டைன், மேயர்ஹோல்ட், பிக்காசோ ஆகியோருடைய நவீனத்துவ உத்திகளை மார்க்சியர்கள் பயன்படுத்த முடியும் என்கிற நிலைபாட்டை மேற்கொண்டவர் ப்ரெக்ட். ஒரு நாடகாசிரியராகவும், கவிஞராகவும் மட்டுமே அறிமுகமாகியுள்ள ப்ரெக்டின் இந்தப் பரிமாணம் முக்கியமானது. தொர்த்தவாதத்தை உயர்த்திப் பிடித்த மார்க்சிய அறிஞர் ஜார்ஜ் லூகாக்சுடன் ப்ரெக்ட் மேற்கொண்ட விவாதங்கள் முக்கியமானவை. பழைய அழகியல்களைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு நம் காலத்திற்கான உற்பத்தி அழகியலை உருவாக்க வேண்டும் என வாதிட்டார். அவர் காலத்தில் வேகமாகப் பரவிய லெக்ட்ரானிக் தொழிற் நுட்பமாகிய 'வானொலி' என்பது ஒருவழித் தொடர்புச் சாதனமாக இல்லாமல் கேட்பவர்களும் பங்கேற்கக்கூடிய இருவழித் தொடர்புச் சாதனமாக அமைய வேண்டியதன் அவசியத்தை அப்போதே வற்புறுத்தின. மொத்தத்தில் செயலூக்கமுடைய பார்வையாளர்களின் பங்கேற்புடன் கூடிய அழகியலே அவரது நாடகக் கொள்கையாகவும் இருந்தது. சோசலிச தொர்த்தவாதம், ஸ்டாலினியக் கலை இலக்கியக் கோட்பாடுகள் ஆகியவை குறித்த மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருந்த ப்ரெக்ட், பாசிசத்தை எதிர்த்து பல நாடுகளில் தஞ்சம் புகுந்தாரெனினும் இறுதி வரை ஸ்டாலினிய ரசியாவிற்குப் போகாதது குறிப்பிடத்தக்கது. சோசலிசப் பொருளாதார அமைவு குறித்த ஆய்வுகளின் அவசியத்தையும் அப்போதே வலியுறுத்தியவர் ப்ரெக்ட்.

படிப்பகம்

www.padippakam.com



மறுவாசிப்பில் இலக்கியப் புனிதங்கள் : 2

# "தொட்டிக்கட்டு வீடு" நாவலில் வெளிப்படும் சாதிய மேலாண்மை

*பெருமாள் முருகன்*

வட்டாரம், வட்டார இலக்கியம் என்ற பாகுபாடுகள் முதன்மையாக மொழியை வைத்துச் செய்யப்படுகின்றன. பின், குறிப்பிட்ட பகுதி மக்களின் வழக்காறுகள், வாழ்க்கைப் பிரச்சினைகள், தொழில்கள் போன்றவற்றையும் உள்ளடக்கி 'வட்டாரம்' விரிவுபடுத்தப்படுகின்றது. எவற்றை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு வட்டாரம் பிரிக்கப்படுகின்றதோ, அவற்றையே இன்னொரு வகையில் மறைக்கவும் செய் கின்றது.

முதலில் மொழி. ஒரு வட்டாரத்தில் வாழும் அனைத்துச் சாதியினரும் ஒரே பொதுவான மொழியில்தான் பேசுகின்றனரா? அவர்களுடைய ஒலிப்புமுறையும் ஒன்று போல இருக்கின்றதா? நிச்சயமாக இல்லை. சொற்களிலும் ஒலிப்பு முறையிலும் நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன. கொங்கு வேளாளக் கவுண்டர்களிடையே பழமொழி ஒன்றுண்டு.

பறெப்புள்ளெய பள்ளிக்கொடத்துல வெச்சாலும்
அனேங்கற புத்தி போகாது.[1]

கொங்குப் பகுதிப் பறையர்கள் 'அங்கன இங்கன' என்று 'அன'ப் போட்டுப் பேசுபவர்கள். இவ்வழக்கு பிறசாதியினரிடம் கிடையாது. இந்த நுண்ணிய வேறுபாட்டை உணர்த்தும் பழமொழி பறையர்களின் மொழியைக் கேலி செய்கிறது. மொழியில் மட்டுமல்ல, ஒரு பகுதியில் ஆதிக்க சாதியாக இருப்பவர்கள், அந்தப் பகுதியின் தாழ்த்தப்பட்ட சாதியினரை எல்லா வகையிலும் கீழானவர்களாகக் கருதுகின்றனர்.

கவுண்டச்சி ஒருத்தியின் ஒப்பாரிப் பாடல் இது -
சுத்திப் பனங்காடு
சுடலோரம் பறத்தெருவு
பறத்தெருவு வாக்கப்பட்ட
பசுங்கிளியா எம்மாளுக்கு
பாச தெரியலியே
படிமானங்க சிக்கலியே[2]

புகுந்த வீட்டைப் பிறந்த வீட்டோடு ஒப்பிட்டுத் தாழ்த்திப் பாடும் இப்பெண், கணவன் வீட்டாரைப் பறையர்களாகவும் அவன் ஊரைப் பறைத்தெருவாகவும் உருவகிக்கிறாள். மிகவும் 'உயர்வான' இடத்திலிருந்து பறைத்தெருவுக்கு வாழ்க்கைப்பட்டுப் போன அவளுக்கு, அவர்களுடைய மொழியும் (பாசை) பழக்கவழக்கங்களும் (படிமானங்கள்) புரியவில்லை என்கிறாள்.

பழமொழியும் ஒப்பாரிப் பாடலும் அந்தப் பகுதி மக்களிடையே மொழி வழக்காறுகளில் வேறுபாடுகள் உள்ளதை வெளிப்படையாகக் காட்டுகின்றன. வட்டாரம் என்ற பிரிப்பு இத்தகைய வேறுபாடுகளைக் கணக்கில் கொண்டதில்லை. அது பொதுவாக 'அந்தப் பகுதி மக்களின் மொழி' என்று குறிப்பிடும். அதன் வழியாக வட்டாரச் சாதி வேறுபாடுகளுக்குள் நுழையாமல் மழுப்பிச் சென்று விடும். அங்குள்ள சாதிப் பிரிவினையை மறைக்கவும் முயலும். படைப்புகளில் வெளிப்படையாக வரும் சாதிய அடையாளங் களை நீக்கம் செய்து பொது அடையாளத்தை ஏற்றும்.[3]

இவற்றினூடே குறிப்பிட்ட வட்டாரத்தில் ஆதிக்க சாதியாக இருப்பவர்களின் மொழியை, நடைமுறைகளை அந்த வட்டாரத்தின் பொதுமைக் கூறாக முன்னிலைப்படுத் தும். வட்டார இலக்கியத்தின் தன்மை 'அந்த வட்டாரத்தின் பிரத்யேகமான அல்லது வகைமாதிரியான பண்பு நலன்களை வெளியிடுதல்' என்றால், பிரத்யேகம், வகைமாதிரி என்பன அந்த வட்டார ஆதிக்க சாதியினரின் பண்பு நலன்களே.[4]

இந்த முன்னுரையோடு 'மாணவர்களுக்கும் மக்களுக் கும் போதிக்கப்பட்ட கொங்கு மண்ணின் ஒட்டுமொத்த ஓர் நூற்றாண்டு சரித்திரம்'[5] என்று வருணிக்கப்படும் 'கொங்கு வட்டார' நாவலான 'தொட்டிக்கட்டு வீடு' பற்றிப் பார்க்கலாம்.[6]

இந்நாவலை எழுதிய இரா. வடிவேலன் புலவர்; தமிழாசிரியர். கவிதைகள் (செய்யுள்கள்), பல நாவல்கள், பாடத்திட்ட நோட்ஸ்கள் எனப் பலவற்றை எழுதியுள்ளார். எனினும் 'தொட்டிக்கட்டு வீடு' ஒன்றிற்காகவே மிகவும் போற்றப்படுகின்றார். 'புதுமை நோக்கும் முற்போக்குக் கொள்கையும் கொண்டவர். மாறுவது சமுதாய மரபு இல்லை யெனில் மாற்றுவது படைப்பாளன் மரபு' என்னும் கொள்கை யினர்.[7] இவருடைய 'தொட்டிக்கட்டு வீடு' கொங்குப் பகுதியில் மட்டுமின்றி பரவலான பாராட்டைப் பெற்ற நாவல். பாடத் திட்டங்களிலும் இடம்பெற்று மாணவர்கள் பலரால் பயிலப் பெற்ற சிறப்புடையது. கொங்கு வட்டார நாவலாசிரியர்களில் ஒருவராக இரா. வடிவேலனை ஏற்றுக்கொள்ள இந்நாவலே காரணம்.

நாவலின் சிறப்பு குறித்து நூலின் முதல் பக்கத்திலேயே,

மண்ணின் மணம் கமழும்
அற்புத நாவல் இது
குணக்குன்றாம் குலமகளாம்
குவலயத்துப் பெண் இனத்தின்
எடுத்துக்காட்டாம்
மயிலாத்தாளின் தியாக வரலாறு.

என்று குறிக்கப்பட்டுள்ளது. நாவலின் கதாநாயகியான மயிலாத்தாளைப் போற்றிக் கூறியுள்ள இச்சொற்களின் பொருளை நாவலுக்குள் வைத்துக் காணலாம். மயிலாத்தாள் 'குணக்குன்று'. குணத்திலே மலை போல உயர்ந்தவள்.

கொங்குப் பகுதியின் ஆதிக்க சாதியான கொங்குவே ளாளக் கவுண்டர் சாதியில், நிலபுலன்களும் ஆள்அம்புகளும் உயர்வின் சின்னமாகக் கருதப்படும் தொட்டிக்கட்டு வீடும் கொண்ட, கொத்துக்காரர் என்ற ஒருவகைச் சாதித் தலைமைப் பதவி வகிக்கும் கவுண்டருக்குப் பிறந்தவள் மயிலாத்தாள். அங்கு கவுண்டர்களுக்கு அடுத்த நிலையில் வாழ்பவர் முதலியார், செட்டியார் போன்ற ஒரு சில சாதியினர். வேளாளர்களுக்கு அடிமை வேலை செய்யும் வண்ணார், நாவிதர், குயவர், பண்டாரம், சக்கிலியர், பறையர் முதலான சாதியினர் 'தொழிலாளர்கள்'. இவர்கள் எப்போதும் வறுமையில் வாடுபவர்கள். இத்தகைய சாதி மக்களிடம் மயிலாத்தாள் நடந்து கொள்ளும் விதத்தைப் பல இடங்களில் ஆசிரியர் காட்டுகின்றார்.

படிப்பகம்

www.padippakam.com



குழந்தைக்குப் பால் இல்லை என்று சொல்லும் ஆண்டிச்சியிடம் 'நாளையிலே இருந்து காத்தாலே வந்து வாங்கிட்டுப் போ' என்று ஆதரவு காட்டுகிறாள் (பக்கம் 13). நாவிதன் நாச்சிக்கு அவனுக்கென்று தனியாக வைத்திருக்கும் டம்ளரில் இரண்டு முறை தாராளமாகக் காப்பியை ஊற்று கிறாள் (பக்கம் 16). (மற்றவர்கள் ஒருமுறை தான் ஊற்று வார்கள்). இதுபோல 'குடிபடை'களுக்கு அவள் தாராளமாகச் செய்யும் உதவிகள் நாவலின் பக்கங்களில் நிறைந்திருக் கின்றன. ஆசிரியர் கூற்றாகவே,

"ஏழைகளுக்கும் பாழைகளுக்கும் குறியாப்பும் கைமாத்தும் கடனும் உடனும் கொடுத்தவள்.... குடிகளுக்கு முகம் கோணாது உதவினவள்... 'யாரும் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் மயிலாத்தா ஊட்டியிலிருந்தா கண்டிப்பாக் கொடுக்கும்' என்ற நம்பிக்கையோடு வரும் பறையர், சக்கிலியர், நாவிதர், பண்டாரம் போன்ற குடிபடை களுக்கும் முதலிக்குடி, செட்டிக்குடிக்கும் துணையாகிக் காப்பவள்" (பக்கம் 277).

என்று மயிலாத்தாள் குறிப்பிடப்படுகின்றாள். தங்களிடம் அடிமை வேலை செய்யும் அடித்தட்டுச் சாதியின ருக்குத் தாராளமாக, வரம்புகளுக்கு உட்பட்டுச் சில சலுகை களைக் காட்டி அரவணைத்துச் செல்லும் 'குணக்குன்று' மயிலாத்தாள்.

அடுத்து 'குலமகள்' மயிலாத்தாள். 'குலம்' என்ற சொல் சாதியையே குறிக்கும். மயிலாத்தாள் கவுண்டர் சாதிக்குரிய குணங்கள் எதையும் வழுவாமல் கட்டிக் காப்பாற்றுகின்றாள். அதில் முதலாவது தன்னுடைய சாதிப் பெருமைக்கு இழுக்கு வராமல் காப்பாற்றுவதாகும். தன் வருங்காலக் கணவன் சென்னிமலையுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, அவன், விளையாட்டுக்காக மயிலாத்தாளுக்கு வரப் போகிற கணவன் எப்படிப்பட்டவன் எனக் கேட்கிறான்.

'..... நல்லவரா கெட்டவரா?... ஊதாரியா மாதாரியா?' (பக்கம் 97)

இதற்கு மயிலாத்தாளின் எதிர்வினை கோபமாக வெளிப்படுகிறது. மாதாரி என்பது சக்கிலியரைக் குறிக்கும் சொல்.

'என்ன மாதாரியா? என்ன கண்டபடி அவுங்களப் பத்திப் பேசறீங்க' (பக்கம் 97)

என்று கேட்கிறாள். அவளுடைய வருங்காலக் கணவனை விளையாட்டுக்குக் கூடக் 'கீழ்ச்சாதி' என்று சொல் வதை ஒப்பாத மனம் அவளுடையது. அந்த அளவிற்குச் சாதிப் பெருமை, கௌரவம் ஆகியவற்றில் ஊறியவள் அவள். அதனால்தான் நாவலின் இறுதியில் அவளால் தற்கொலை முடிவெடுக்க முடிகிறது.

'கொங்கு நாட்டின் முதன்மைக் குடிகள்' (பக்கம் 111) என்று ஆசிரியரால் பீற்றப்படும் கவுண்டர் குடியில் பிறந்த மயிலாத்தாள் குடும்பத்தை அவமானப்படுத்த 'மயிலாத்தாள் பண்ணயத்துப் பறையனோடு போய்விட்டாள்'[6] (பக்கம் 282) என்று எதிரிகள் கதை கட்டுகின்றனர். முதன்மைக் குடியும் தொட்டிக்கட்டு வீடு கட்டி வாழ்கின்ற அளவுக்கு வசதியும் கொத்துக்காரர் என்ற பதவியும் கொண்டவர் மயிலாத்தாளின் தந்தை. இத்தகைய சாதிரீதியான அந்தஸ்து உடையவரை அவமானப்படுத்துவது எவ்விதம்? அவருடைய மகள் கவுண்டர் ஒருத்தனோடு 'போய் விட்டால்' அது அவமானமில்லை. 'பறையனோடு போய்விட்டால்' தான் அவமானம். இங்கே 'போய் விடுதல்' அவமானமில்லை. யாரோடு என்பதில் தான் அவமானம். 'பறையனோடு' என்பது அதுவரை அவர்கள் கட்டிக் காத்து வந்த சாதிப் (குலப்) பெருமைக்கு இழுக்கல்லவா? மயிலாத்தாள் தற்கொலை செய்து கொள்கிறாள். ஆகவே 'குலமகள்' என்று ஆசிரியரால் போற்றப்படுகின்றாள்.

குணக்குன்றும் குலமகளுமான மயிலாத்தாளை 'குவலயத்துப் பெண் இனத்தின் எடுத்துக்காட்டாய்' - அதாவது வகைமாதிரியாய் ஆசிரியர் வருணிக்கிறார்.

மயிலாத்தாளை உலகத்துப் பெண் இனத்துக்கே சான்றாய்க் காட்டிய ஆசிரியர் தமது முன்னுரையில்,

"கொங்கு நாட்டு வேளாளர் வாழ்வின் உயரிய பண்புகள், பழக்கவழக்கங்கள், உணர்ச்சிச் சிதறல்கள், வறட்டுக் கௌரவங்கள், போட்டி பொறாமைகள் - இவையே இப் புதினத்தை இயக்குகின்றன" (பக்கம் 8).

என்று குறிப்பிடுகின்றார். கொங்கு வேளாளர்களின் 'உயரிய பண்புகள்' எவை? மயிலாத்தாளின் தந்தை முத்து வேலப்ப கவுண்டரை வைத்து இதைப் பார்க்கலாம்.

நாற்பது ஏக்கர் நிலம் கொண்ட பெரியதனக்காரரும் கொத்துக்காரருமான முத்து வேலப்ப கவுண்டர் 'கூத்தியார்' வீட்டுக்குப் போகும் 'உயரிய' பண்பு கொண்டவர். ஆசிரியரே மேளதாளத்தோடு அழைத்துச் சென்று விட்டு வருவது போல அந்நிகழ்ச்சியை வருணிக்கிறார். அவருடைய பெட்டி வண்டி கிழக்கு நோக்கிப் போவதில் காட்சி தொடங்குகிறது. அடுத்து அவருடைய உடை, உருவ அலங்காரம்; சந்தோசமான மனநிலை. உடனே ஆசிரியருக்கு ஒரு சந்தேகம் வந்து விடுகிறது. கம்பீரமான, நேர்மையான, ஒழுக்கமான மனிதராக நாம் காட்டி வந்த கவுண்டரைக் கூத்தியார் வீட்டுக்கு அனுப்புவதா? உடனே அதையும் ஒரு 'உயரிய பண்பாகச்' சித்தரிக்க முயல்கிறார்.

கவுண்டர்களின் பெருமை மிகுந்த வரலாற்றை விவரிக்கத் தொடங்குகிறார். காணியாளர், காமிண்டர் என்ற அவர்களின் பண்டைநாள் வீரப் பெருமையை எடுத்தோது கிறார். பின் 'பிறர்க்குக் கொடுத்து மகிழும் அவர்களின் பெருங்குணத்தை' விவரிக்கிறார். இத்தகைய உயர்வுடைய வர்கள் 'வைப்பு' வைத்துக் கொள்வதில் என்ன தவறு என்று கேட்க வருகிறார்.

"அந்த வேளாளர் குடியிலே தோன்றி, நன்கு வசதியும் நிலபுலனும் உடைய குடும்ப ஆடவர்கள் மயில் போன்ற மனைவிகளைப் பெற்றிருந்தாலும் வைப்புகளைக் கௌரவத் திற்காக வைத்திருந்தார்கள்... சிலர் அளவாகத் தொடர்புகளும் பலர் தங்கள் மனைவிகளோடு மட்டும் வாழ்க்கையை நடத்தி வந்தனர்..." (பக்கம் 112, 113)

அளவாகத் தொடர்புகள், தங்கள் செல்வாக்குக் குறையாதபடி வைப்புகள் என்பதை ஆசிரியர் வரவேற்கிறார். சுயசாதிப் பெருமக்களுக்குக் கோவலன் போலச் செல்வத்தை இழக்காமல் கௌரவத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ளுங் கள் என்று அறிவுரை கூறுகிறார்.

வேலப்ப கவுண்டர் தன் தொடுப்பை எவ்வாறெல்லாம் உயர்வாக நடத்தினார், மனைவியும் கூட அதை அங்கீகரித் திருந்தாள் என்பதையெல்லாம் விலாவாரியாக எடுத்துச் சொல்லி அவருடைய 'உயரிய பண்பை' ஏற்றுக்கொள்ள வைக்க முயல்கிறார்.[9] இதில் ஆசிரியரின் தெளிந்த கருத்தை இன்னொரு வகையாகவும் விளக்கலாம்.

கவுண்டர்களின் பெருமையைக் குலைக்கும்

படிப்பகம்

www.padippakam.com



வண்ணம் தகராறு செய்து கொண்டு மைனராகத் திரியும் காளி யண்ணன் பாத்திரத்தை ஆசிரியர் கையாளும் விதம். முத்து வேலப்ப கவுண்டரைப் போலவே, அவனுக்கும் ஒரு தொடுப்பு இருக்கிறது. ஆனால் ஆசிரியர் அதை நியாயப் படுத்தவில்லை. ஏனென்றால் கவுண்டர் பெட்டி வண்டியில் மதிப்பாகப் போய் வருகிறார். காளி எல்லோருக்கும் தெரியும் படி நடந்து போகிறான். கவுண்டர் திருமணமாகிக் குடும்பத் தோடு இருக்கிறவர்; காளி 'தண்டுவன்'. அத்தோடு மட்டு மில்லை, கவுண்டர் கொங்கு வேளாள சாதிக்குப் பெருமை தேடித் தருகிறவர்; காளி அந்தப் பெருமைகளைக் குலைக் கிறவன். இருவரின் ஆடையைக் குறித்த வருணனையை மட்டும் பார்த்தால் போதுமானது -

வைப்பு வீட்டுக்குப் போகும் கவுண்டர்,

"..... புடலம் பூவைப் போன்ற வெண்மையான வேட்டியும் சிப்பாவும் அணிந்து சரிகைத் துண்டைத் தோளில் வளைத்துப் போட்டிருந்தார். அவர் வாயும் உதடுகளும் வெற்றிலையால் சிவந்து விளங்கியது. அவருடைய கையில் வெள்ளியால் செய்யப்பட்ட வெற்றிலைப் பெட்டி இருந்தது. அவருடைய காதுகளில் கடுக்கன்களும் இடக்கையில் தங்கக் காப்பும் எடுப்போடு விளங்கியது." (பக்கம் 110-111)

காளியின் தோற்றம் -

"..... நாகரிகமாகச் சிப்பாவும் வேட்டியும் கட்டிக் கொண்டு திரிந்தான். எப்பொழுதும் வாயில் துணியால் தான் சிப்பா இருக்கும். உள்ளே போட்டிருக்கும் பனியன் அப்படி யே நல்லாத் தெரியும். தலையில் நடுகிடு எடுத்து இருபக்கடும் சுருள் சுருளான முடிகளைப் படிய வாரி விட்டுக் கொள்வான். அப்படியும் அம் முடிகள் அடங்காமல் பின்புறம் 'பம்' மெனத் தூக்கிக் கொண்டிருக்கும். அவன் அடிக்கடி பீடி இழுப்பான்." (பக்கம் 143)

இவ்விதம் கொங்கு வேளாளரின் 'உயரிய' பண்பு களைப் போற்றும் ஆசிரியர், அவர்களின் சிறப்பை உலகுக்கு உணர்த்தும் விதத்தில் பல இடங்களில் சடங்குகள், பழக்க வழக்கங்களைக் குறித்து ஒரு நாட்டுப்புறவியல் ஆய்வாள னுக்குரிய தரவுகளைப் போல விரிவான கட்டுரைகளை எழுதிச் செல்கிறார்.[10] நாவலின் அமைப்பைக் குலைத்துவிடும் இத்தன்மை பற்றி ஆசிரியர் சிறிதும் கவலைப்படுவதில்லை. கொங்கு வேளாளர்களின் 'உயரிய' பழக்கவழக்கங்களை விவரிப்பதே அவர் நோக்கம்.

உயரிய பண்புகளைப் போலவே, கொங்கு வேளாளர் களின் 'உணர்ச்சிச் சிதறல்கள், வறட்டு கௌரவங்கள், போட்டி பொறாமைகள்' ஆகியவற்றை ஆசிரியர் எதற்காகக் காட்டுகின்றார் என்பதைப் பார்க்கும் முன் இந்நாவலில் அவர் காட்டும் பிறசாதியினரைப் பற்றிப் பார்ப்பது அவசியம்.

கவுண்டர்களைச் சார்ந்து வாழ வேண்டிய நிலையி லுள்ள பண்டாரம், நாவிதர், சக்கிலியர், பறையர் ஆகிய சாதிகளைச் சேர்ந்தவர்கள் நாவலில் இடம் பெறுகின்றனர். அவர்கள் வரும் இடங்களில் ஆசிரியர் பயன்படுத்தும் சொற்கள் முக்கியமானவை.

"அவனது வெற்றிலை போட்டுச் சிவந்து காறை ஏறிய பற்கள் சிரிப்பையும் கைகளை மடித்துக் கட்டிக்கொண்ட உடல், பணிவையும் காட்டி நின்றன." (பக்கம் 14)

"நான்தானுங்க எஜமான்' என்று செல்லன் பயபக்தியோடு வெளியேயிருந்து சொன்னான்." (பக்கம் 40)

"... (பறையர்) இருகைகளையும் கூப்பித் தலைக்குமேல் வைத்து வணங்கிப் பின் கைகளை முன்புறத்தில் கட்டிக் கொண்டு நின்றான். மற்றவர்களும் பணிவாக அதுபோலவே நின்றார்கள்." (பக்கம் 102)

இதுபோலப் பல இடங்களில் அவர்களுடைய பணிவையும் கவுண்டர்களை மதித்துக், கீழாகத் தங்களைத் தாழ்த்திக் கொள்ளும் நடைமுறைகளையும் ஆசிரியர் சிலாகித்து விவரித்துச் செல்வார். அவர்கள் 'இவ்விதம் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்' என்ற ஆசிரியரின் அக விருப்பத்தை இயல்பாக உணர முடிகிறது.

நாவலில் ராமன் என்ற பறையர் சாதி இளைஞன் முக்கிய இடம் பெறுகிறான். அவனை ஆசிரியர் படைத்துள்ள விதம் அவரது மனோபாவத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. 'ராமன் வாலிபப் பருவத்திற்கே உரிய மிடுக்கும் ஏறு போன்ற தோற்றமும் கட்டுமஸ்தான உடலும் கொண்டு விளங்கினான்' (பக்கம் 197). அவன் எழுதப் படிக்கத் தெரிந்திருந்ததோடு சேரியில் ஏற்படும் சண்டை சச்சரவுகளைத் தீர்க்கும் தலைவனாகவும் ஆகி கொண்டு வந்தான். கூத்தாடுவதிலும் மிகவும் வல்லவனா இருந்தான். கொத்துக்காரக் கவுண்டர் வீட்டுப் பண்ணையா அவன். மிகவும் விசுவாசமானவன். கவுண்டரை வைப் வீட்டுக்குக் கூட்டிச் செல்லும் அவன் 'இப்ப பொறாமை காரங்க வேறு எசமானுக்கு அதிகம். பாதுகாப்பா இருந் கூட்டிக்கிட்டுப் போவணும்' (பக்கம் 111) என்று பொறுப்பா ஆள்காரனாக நடந்து கொள்கிறான்.

இப்படிப்பட்டவனை நாவலின் இறுதியில் 'புரட்சி காரன்' போலக் காட்ட முயல்கிறார் ஆசிரியர். மயிலாத்தா ராமனோடு 'போய் விட்டாள்' என்ற அபவாதத்தை எதிரிக சுமத்தி ராமனைப் பஞ்சாயத்தில் நிறுத்துகிறார்கள். அப்போ அவன் பேசும் பேச்சும் நடைமுறைகளும் அவன் சாதி கென்று விதிக்கப்பட்ட முறைகளை மீறுவது போலத் தோன் கின்றன.

கையில் அரிவாளும் குத்தீட்டியுமாய் பஞ்சாயத் முன்னால் பணியாமல் நிற்கிறான் அவன். கீழே விழுந் கும்பிடவும் அவன் தயாரில்லை. அவனைக் குற்றவா என்று கூறும் கவுண்டர்களைப் பார்த்து வீராவேசமா பேசுகிறான்.

"ஏ! கவுண்டர்களே! ஆனைக் கூட்டம் பாகனு அடங்கி நடப்பதைப் போல நாங்கள் உங்களுக்கு அட இருக்கின்றோம். உங்கள் வாழ்வு கொழிக்க நாங்கள் ஓடா தேய்கின்றோம்.... செருப்பினும் கீழானவர்களாக நீங் எங்களை மதிக்கின்றீர்கள். உங்களுக்கு மூட்டை மூட்டைய விளைச்சலைக் குவிக்கின்றோம்.... ஆனால் உழை எங்களுக்கு நீங்கள் கொடுக்கும் பங்கு என்ன?" (பக்கம் 2

என்றெல்லாம் கவுண்டர்களை 'ஏ' போட்டு விளி தனது உரிமைக்குரலை எழுப்பும் ராமனை, அடு வரியிலேயே நீர்த்துப் போகச் செய்கிறார்.

"நிலத்தடியில் கிடக்கும் வைரங்கள் ஒளி உ வதைப் போல எங்களிடத்தில் அன்பும் பாசமும் காட் உள்ளங்கள் அங்கங்கே ஒரு சில இருப்பதால் அந்தத் அன்புக்காகவே நாங்கள் நன்றியுடன் காலமெல் உழைக்கத் தயாராகின்றோம்." (பக்கம் 290)

என்று பேசி 'ஒரு சில அன்பு உள்ளங்கள காரணமாக்குகின்றார். அந்த அன்பு உள்ளங்களைப் போல மற்ற கவுண்டர்களும் நடந்து கொள்ள வேண்டும் என் ஆசிரியரின் அறிவுரை.

படிப்பகம்

www.padippakam.com



"வேளாண்மைக் கவுண்டர்களே! உங்கள் குடும்பத்தி லே பெண்டுகளெல்லாம் எங்க தெய்வங்களா நினைக்கிற வங்க நாங்க." (பக்கம் 291)

என்று அவன் விசுவாசத்தை மிகைப்படுத்திக் கவுண்டர்களின் சார்பாகப் பேச வைத்து விடுகிறார் ஆசிரியர். இவ்வளவு வேகமாகப் பேசினாலும் கடைசியில், மயிலாத் தாளுக்கு அவமானம் வரக் காரணமாயிருந்த காளியைக் கொல்ல ராமனை அனுமதிப்பதில்லை ஆசிரியர். மாரப்ப கவுண்டர் கத்தியால் குத்திய பின்பே ராமன் அரிவாளால் வெட்டுகிறான் (பக்கம் 292).

ஆசிரியரின் மிகு எச்சரிக்கை உணர்வு இங்கு செயல்படுகிறது. கவுண்டன் ஒருவனைக் கவுண்டன் தான் கொல்ல வேண்டும்; கவுண்டன் மீது பறையன் கை வைக்கக் கூடாது. இன்னொன்று, தன்னுடைய பண்ணைக்காரக் கவுண்டனைப் பின் தொடர்ந்து, அவனுக்கு ஆதரவாகப் பறையன் போக வேண்டும். பாதிக்கப்பட்ட கவுண்டர்களின் பக்கமிருந்து, அவர்களுக்கு ஆதரவாக வாதாட வைத்து, அவர்களின் பின்பலமாகச் செயல்படவும் ராமனைத் தூண்டுகிறது ஆசிரியரின் சாதிப்பற்று.

கவுண்டர் சாதிப் பெருமை பேசும் 'முற்போக்குக்' கொள்கை கொண்ட ஆசிரியர் இந்த நாவலில் சொல்ல முற்படுவது தான் என்ன? வேளாளக் கவுண்டர்களின் போட்டி பொறாமைகள், பங்காளிச் சண்டைகள், உணர்ச்சிச் சிதறல்களை எதற்காகக் காட்ட வருகின்றார்? கவுண்டர்கள் உயர்ந்த சாதியினர் என்பதில் ஆசிரியருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. அவர் காட்டும் கிராமத்தில் அதற்குத்தக அவர்கள் உயர்ந்த நிலையில் ஆதிக்க சாதியினராகவே வாழ்கிறார்கள். அங்கு வாழும் பிற சாதியினர் அவர்களுக் கென்று விதிக்கப்பட்ட கடமைகளை எள்ளளவும் வழுவாமல் நிறைவேற்றுகின்றவர்களாக இருக்கிறார்கள்.

கவுண்டர்களுக்குள் இருக்கும் 'கட்சி' வேறுபாடுகளில் பிறசாதியினர் தலையிடுவதில்லை. 'ஊரில் இருக்கும் முதலி யார், செட்டியார் ஆகியோர் யார் பக்கமும் சேர மாட்டார்கள். அவர்கள் பொதுவானவர்கள். எல்லோருக்கும் வேண்டிய வர்கள். அதுபோலத் தான் பலபட்டரைகளும்' (பக்கம் 66) என்று அங்குள்ள நிலையை ஆசிரியரே விவரிக்கிறார். 'குடிபடைகள்' 'கவுண்டைகளுக்குள்ளே வெட்டிக்குவாங்க, குத்திக்குவாங்க. அப்புறம் சேந்துக்குவாங்க. குடிபடைகள் அதிலே தலையிட முடியுமா. தலையிட்டா நம்ப தலைக்குத் தான் தீம்பு வரும்' (பக்கம் 69) என்ற பயத்தோடு வாழ்கிறார் கள். எல்லாச் சாதியினரும் அவரவர்களுக்கென்று விதிக்கப் பட்டுள்ள கடமைகளைச் செவ்வனே செய்து கொண்டு இருக்கும்போது, கவுண்டர்களை உயர்சாதியாகக் கொண்டிருக்கும் இந்தக் கிராம அமைப்பில் என்ன மாறுபாடு வர முடியும்? கவுண்டர்கள் எந்தச் சிக்கலும் இல்லாமல் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி வரலாம்.

ஆனால் இந்த அமைப்பைக் குலைக்கும் விதமாகச் சில 'மசக்கவுண்டர்கள்' நடந்து கொள்கிறார்கள். அதுதான் போட்டி பொறாமை, பங்காளிச் சண்டை. அவர்களுக்குள் மோட்டுக் கொள்ளும் போது எந்தச் சிக்கலுமில்லை. பிற சாதியினரைத் தங்கள் கட்சிக்குள் இழுத்து, அவர்களைத் தங்கள் சண்டையில் தொடர்புபடுத்தும் போது 'கிராம அமைதி'க்குப் பங்கம் வந்து விடும். கவுண்டர்களை எதிர்த்து பறையன் ராமன் போன்றவர்கள் பேசத் தொடங்கி விடுவார் கள். ராமனின் கோபத்தை நாவலுக்குள் அடக்க ஆசிரியரால் முடிந்தது; நடைமுறையில் இயலாது.

இதனை வேளாளக் கவுண்டர்களுக்கு உணர்த்துவது தான் ஆசிரியரின் நோக்கம். 'கவுண்டர்களே! நீங்கள் எவ்வளவு உயர்வானவர்கள். ஆனால் இப்படிக் கீழ்த்தரமாகச் சண்டை போட்டுக் கொண்டு உங்கள் மதிப்பை இழக்கலாமா. பிறசாதிக்காரர்களை ஆளும் பெருமை படைத்த நீங்கள், அவர்களை எப்போதும் உங்களுக்குக் கீழே வைத்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்' என்னும் நீதியை, அறிவுரையை வழங்குவது தான் நாவலின் நோக்கம். படித்த கவுண்டர் 'மசக்கவுண்டர்களுக்குக்' கூறும் அறிவுரைதான் இந்நாவல்.

இப்படி அப்பட்டமான சாதிய நாவலான 'தொட்டிக் கட்டு வீடை' எந்தக் கேள்வியும் இல்லாமல் 'கொங்கு வட்டார நாவல்' என்ற பொதுமைக்குள் அடக்குவது மோசடியல்லவா? 'கொங்கு வட்டார மண் மணம் கமழக் கமழ' நாவல் அமைந்துள்ளது என்ற பாராட்டு நாவலின் சாதியக் கூறுகளை மறைத்துக் காட்டுவதல்லவா?

**குறிப்புகள் :**

1. Mrs.Meenakshi Sundaram, **Kongu Proverbs a Study,** Vellakkinaru, CBE-29, 1984, p.265.
2. நான் சேகரித்த பாடல். பாடியவர் எனது பெரியபாட்டி. இப்பாடல், பிறந்த வீட்டிலிருந்து திருமணமாகிச் செல்லும் பெண், புதிய இடத்தில் நிலைகொள்ளப் படும்பாட்டை, அவள் மனஉணர்வுகளை வெளிப்படுத்துவதாக இருப்பதையும் குறிப்பிட வேண்டும்.
3. 'தொட்டிக்கட்டு வீடு' நாவலில் ஆள்க்காரன், பண்ணையாள் என்கிற பெயரால் குறிக்கப்படும் பறையனாகிய ராமன், விமர்சனங்களில் 'வேலைக்காரன்' என்று மாறுகிறான். 'ஆள்காரன்' என்ற சொல்லே சாதி அடையாளம் கொண்டது. சு. சண்முகசுந்தரம், தமிழில் வட்டார நாவல்கள், காவ்யா வெளியீடு, 1991, ப. 107
4. கொங்குப் பேச்சு, பண்பாடு என்றாலே கொங்கு வேளாளக் கவுண்டர்களின் பேச்சும் பண்பாடும் தான் என்ற கருத்தை இன்றைய திரைப்படங்கள் கூட முன்னிறுத்துகின்றன.
5. மணல்வீடு மாரப்பன், 'தொட்டிக்கட்டு வீடு ஒரு கண்ணோட்டம்', **சதுக்கப்பூதம்**, இதழ் 1, 1995, ப. 59.
6. இரா. வடிவேலன், **தொட்டிக்கட்டு வீடு**, தேவி நிலையம், சென்னை, முதல் பதிப்பு, 1976.
7. மேற்படி, ப. 6.
8. 'போய் விடுதல்' என்றால் கள்ளத்தனமான உறவு வைத்திருத்தல் என்று பொருள்.
9. கவுண்டருடைய வைப்பான அன்னக்கொடிக்கு ஒரு பெண்குழந்தை இருந்து இறந்து விடுகிறது. அதனால் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கவே ஆசிரியர் 'சாகடித்து' விடுகிறார் எனலாம்.
10. கொங்கு வேளாளர் பண்பாட்டை ஆசிரியர் இவ்வாறு விவரிப்பதன் காரணமாகவே, "உலகப் பண்பாடு - இந்தியப் பண்பாடு - தமிழ்ப் பண்பாடு - இவற்றிற்கு எல்லாம் அடிப்படை மனிதப்ப பண்பாடு - 'கொங்கு வேளாளர் பண்பாடே' - அதாவது விவசாயப் பண்பாடே என்பது ஆசிரியரின் சூட்சமம்". (சதுக்கப்பூதம், ப. 56) என்று வேளாளர் பண்பாட்டை உலகப் பண்பாடாக விவரித்துச் சொல்ல முடிகிறது. அந்த வட்டாரத்திற்கு மட்டுமல்லாமல், உலகத்திற்கே வகை மாதிரியாகக் காட்டும் இத்தகைய விமர்சன வரிகளின் சாதிப் பற்றையும் சேர்த்துப் புரிந்து கொள்ளலாம். ■

படிப்பகம்

www.padippakam.com



நூல் விமர்சனம்: 1

# அ. மார்க்சின் மூன்று நூல்கள்

## (வெள்ளைத் திமிர், பின் நவீனத்துவம் இலக்கியம் அரசியல், உடைபடும் புனிதங்கள்)

வெங்கடேஷ் சக்கரவர்த்தி

அ. மார்க்சின் மூன்று புத்தகங்களையும் ஒரே மூச்சில் படித்தேன். முதலில் படித்தது "வெள்ளைத் திமிர்". பயணக் கட்டுரைகள் வழியாகவும் பேட்டிகளின் வழியாகவும் அ. மார்க்சின் அறிவின் ஆழத்தையும் அடிப்படை ஆதங்கங்களையும் உணர முடிந்தது. நியோ நாசிசச் சூழ்நிலையின் விளிம்பில் வாழும் ஈழத் தமிழர்களின் நிலை நெஞ்சை உருக்கியது. இதில் வரும் எல்லாப் பேட்டிகளும் குறிப்பிடத்தக்கவை. ஆட்டோநாம், பார்த்திபன் வங்காளத்தைச் சேர்ந்த விப்லப் மற்றும் என்னை மிகவும் பாதித்த கட்டுரை தங்க் Army Faction-லிருந்து நீங்கள் தொகுத்த பேட்டி. தமிழில் இவ்வளவு விஷயங்களை எல்லோருக்கும் போய்ச் சேருகிற முறையில் பேச முடிகிறதே என்று நான் மகிழ்ச்சியடைகிறேன். அ. மார்க்சின் பயணம் வீணடையவில்லை என்பதற்கு இப் புத்தகம் ஒரு சாட்சி.

அடுத்ததாக நான் படித்த புத்தகம் ''பின் நவீனத்துவம் இலக்கியம், அரசியல்'' என்பது.

இதில் மேற்கத்தியத் தத்துவப் பின்னணியில் அ. மார்க்ஸ் நவீனத்துவத்தையும் பின் நவீனத்துவத்தையும் வரையறுத்துள்ளதும் பகுத்தறிவு மற்றும் ஒழுங்கமைப்பின் பயங்கரவாதத்தையும் பெருங்கதையாடல் மற்றும் சிறுகதையாடல்களுக்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டிய விதமும் குறிப்பிடத்தக்கவை. முக்கியமாக இந்தக் கோட்பாடுகளை நமது சூழலில் வைத்து பெரியார் மற்றும் இரட்டைமலை சீனிவாசன் போன்றவர்களின் செயல்படுகளை மறுவாசிப்பு செய்து அவர்களது முக்கியத்துவத்தை விளக்கியுள்ளது பல குழப்பங்களை என்னிலிருந்து அகற்றியுள்ளன. அறிவியலின் தத்துவம் என்கிற வகையில் பால் பெய்ராபாந்தின் Against Method-ன் அடிப்படையில் அ. மார்க்ஸ் தந்துள்ள விளக்கங்கள் அருமையானவை. தமிழ் சூழலில் மிகவும் வரவேற்கத் தக்க ஒன்று. ஆனால்

1. என்னைப் பொறுத்த வரையில் விஞ்ஞானம் என்ற ஒரு சமூக நிறுவனத்தின் கட்டமைப்பைக் கடுமையாக விமர்சிக்க வேண்டிய சூழ்நிலையில் நாம் இருந்தாலும் பெய்ராபாந்த் சொல்வது போலவோ ஆர்தர் கோஸ்ட்லர் தனது Sheep Walkers'-ல் சுட்டிக் காட்டுவது போலவோ ஒரு விஞ்ஞான உண்மையை (?), நிஜத்தை (?) கண்டறியும் விதம், முறை எங்கிருந்தும் தொடங்கலாம்... எப்படி வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். ஆனால் அது ஒரு கோட்பாடாக உருவெடுக்கும் போது கார்ல் பாப்பர் சொல்வது போல "It must meet the criterion of falsifiability" (அது பொய்யாக்கப்படுதற்குரிய அளவுகோலைச் சந்திக்க வேண்டும், விஞ்ஞானம். இந்த ரீதியில் அவர் சொல்வதைப் போல. அதன் முறை எதுவாக இருந்தாலும் அது ஒரு ஊகங்கள் மற்றும் மறுப்புகளின் சந்ததித் தொடர் தான் (a series of conjectures and refutations). அதன் நிலை எப்போதுமே தற்காலிகமானதுதான், முற்றுண்மையானதல்ல. இதே போல விஞ்ஞானத்தின் சரித்திரத்தை நாம் எழுதும்போது தாமஸ்ளகுன் னின் Paradig Shift (ஆய்வுச் சட்டக மாற்றம்) என்பதையும் நினைவில் நிறுத்த வேண்டும்.

2. நவீனத்துவத்தை வரையறுக்கும் பொழுது அது மதத்திலிருந்து எவ்வாறு விலகி நிற்கிறது என்பதை அ. மார்க்ஸ் அடிக்கடி வலியுறுத்தினாலும் இங்கும் சில வித்தியாசங்களும் வேறுபாடுகளும் உள்ளன என்பதை நாம் கவனிக்க வேண்டும். நவீன விஞ்ஞானத்தின் கோபுர உச்சி விஞ்ஞானிகளாகத் திகழ்ந்தவர்களில் நியூட்டன் ஒருவர் என்றால் மற்றொருவர் அய்ன்ஸ்டீன். இவர்கள் இருவருமே அடிப்படையில் அறிவியலின் வழியாகக் கடவுளின் விதிகளை (God's laws and Vision) க் கண்டறிவதைப் போல் தான் செயல்பட்டனர். எய்சன்பர்க் தனது "உறுதியின்மைக் கொள்கை"யை வரையறுத்த போது அய்ன்ஸ்டின் சொன்ன, ''கடவுள் பிரபஞ்சத்தோடு தாயம் விளையாடிக் கொண்டிருக்கவில்லை" என்ற வாக்கியத்தை நாம் மறந்துவிட முடியாது.

3. மேலும் அ. மார்க்ஸ் மதத்தை ஒரு ஒற்றைப் பரிமாணக் கட்டமைப்பு போல பாவிப்பதாக எனக்குத் தோன்றுகிறது. மதத்திலேயே பொதுவாக இரண்டு விதங்களை - அமைப்பாக்கப்பட்ட மதம் (Organised), அமைப்பாக்கப்படாத மதம் (Unorganised) எனப் பார்க்க முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. குறிப்பாக நவீனத்துவ சூழலில் கிறித்துவ மதத்தில் பல மாற்றங்கள் வந்தன. இதில் நான் இங்கு கடவுளின் மரணம் என்கிற மதக் கோட்பாட்டைப் (Death of God Theology) பற்றிக் குறிப்பிட வேண்டும். கடவுள் இறந்துவிட்டார் என்றால் உலகிற்கு கிறித்துவம் என்ன வழியைக் காட்ட முடியும் என்ற ஒரு கேள்வி எழுந்தது. இந்தக் கேள்வியின் வழியாக கிறிஸ்துவின் வாழ்க்கையிலிருந்து 'AGAPE' என்ற மதிப்பீடு கண்டெடுக்கப்பட்டது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் 'AGAPE' என்றால் "மற்றவர் மீதான நிபந்தனையற்ற அன்பு''. ஜனநாயக ரீதியில் ஒரு கீர்க்கேகார்டியத் தேர்வுக்கு (Klerkegardian Choice) இடம் இருக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து. நான் ஆத்திகத்தையோ அல்லது நாத்திகத்தையோ ஆதரிப்பவன் அல்ல. இவ்விரண்டும் தர்க்க ரீதியில் மட்டும் வேறுபவை அல்ல. இவை இரண்டுமே வெவ்வேறான மொழி விளையாட்டுகள். இங்கு நாம் கவனிக்க வேண்டியது கீர்க்கேகார்ட் ஒரு சீர்திருத்தவாதி (Reformist) அல்ல என்பதைத்தான். கிறிஸ்துவர்களையும் கிறிஸ்துவ மடாலயங்களையும் அவர் பயங்கரமாகச் சாடினார் என்பது உலகறிந்தது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால்: "ஆத்திகத்தைப் பின்பற்றினால்தான் உங்களுக்கு விடிவு என்று சொல்ல நான் யார்? நாத்திகத்தைப் பின்பற்றினால் தான் உங்களுக்கு விடிவு என்று சொல்ல நீங்கள் யார்?" இதை நாம் இன்று குறிப்பாகப் பெரும்பாலான தலித் மக்கள் மகாராஷ்டிரத்தில் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் சூழலில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

அடுத்தது அ. மார்க்ஸின் "உடைபடும் புனிதங்கள்". இதில் பல புனிதங்கள் உடைபட்டதை என்னால் காண

படிப்பகம்

www.padippakam.com



முடிந்தது. எல்லாக் கட்டுரைகளும் என்னைக் கவர்ந்தன. குறிப்பாக புதுமைப்பித்தன் குறித்த ஆய்வு அவரது பிரதிகளில் ஒடுக்கப்பட்டவர்களின் நிலை என்ன என்பதைத் தெளிவாக முன்நிறுத்தியுள்ளது. தமிழ்ச் சூழலில் இன்று அ. மார்க்ஸ் வைக்கும் வாதங்கள் போற்றிக் காக்கப்பட வேண்டியவை. ஆனால் சில விஷயங்களை நட்பு ரீதியான மாற்றுக் கருத்து என்கிற வகையில் (By way of Affiectionate Dissent) சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1. **எமைல் லக்லாவ், ஸ்லாவோக் ஸிஸெக்** இவர்கள் சுட்டிக்காட்டியது போல - போராட்டங்கள் சுருக்க முடியாத படிக்குப் பன்மைத் தன்மையானவையாக இருப்பதனால் மற்றெல்லாப் போராட்டங்களையும் ஏதேனும் ஒரு போராட்டத்திற்குள் அடக்கிவிட முடியாது. அப்படி ஏதேனும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுமானால் அப்புறம் சுற்றுச் சூழல் அடிப்படை வாதம், பெண்ணிய அடிப்படைவாதம், இனவாத அடிப்படை வாதம், வர்க்க அடிப்படை வாதம், சாதீய அடிப்படை வாதம்.... எனப் பல அடிப்படை வாதங்கள் தான் விளைவாக இருக்கும். மார்க்சியம் இந்தப் பிழையைத்தான் செய்தது. 'கம்யூனிசம்' என்ற **தலைமைக் குறிப்பான்** (Master Signifier) உலகத்தையே உள்ளடக்கியது. அ. மார்க்சும் இதைக் கவனிக்காமல் இல்லை. பல இடங்களில் "வானவில்" என்ற சொல்லை போராட்டங்களின் பன்மைத் தன்மையை (Plurality of Struggles) முன் நிறுத்த சுட்டிக்காட்டியுள்ளார். இருப்பினும் அவரது 'தலித்தியம்' என்ற தலைமைக் குறிப்பானின் கீழ் மார்க்சியத்தின் சில முக்கியமான கருத்தாக்கங்கள் ஒதுக்கப்படுவதை என்னால் காண முடிகிறது. மார்க்சியப் பார்வையில் நவீனத்துவம் என்பது நிலப் பிரபுத்துவம் போய் முதலாளியம் வந்த காலவரிசை மாற்றத் (Synchronic rupture) தைக் குறிக்கும் ஒரு விஷயம். முதலாளியத்தில் மனிதனுக்கு பொருளுக்கும் இருந்த உறவு சித்தாந்த ரீதியில் கட்டமைக்கப்படாமல் மனிதனுக்கும் மனிதனுக்கும் இருந்த உறவே கட்டமைக்கப்பட்டது. "ஒரு அரசன் அரசனாக இருப்பது எப்படியெனில் குடிமக்கள் அவனை அரசனாக ஏற்பதால்''. ஆனால் நிலப்பிரபுத்துவத்தில் இது தலைகீழாக உருவெடுக்கிறது. "குடிமக்கள் தங்களைக் குடிமக்களாக ஏற்பது எப்படியெனில் அவன் அரசனாக இருப்பதால்." "ஒரு அரசன் தன்னை அரசனாக நினைப்பது எப்படியெனில் அவர்கள் குடிமக்களாக இருப்பதால்". நவீனத்துவமும் அதனைச் சார்ந்த முதலாளியமும் வரும்பொழுது இந்த வழிபாட்டு உறவு (Charismatic Realationship) முறிக்கப்பட்டு மக்கள் என்போர் தனித்தனியான குடிமக்களாக (Atomised Subjects) ஆக்கப்படுகிறார்கள். ஆனால் பொருட்களுடனுள்ள உறவில் ஒருவித வழிபாட்டுத் தன்மை வந்துவிடுகிறது. இதைத்தான் கார்ல் மார்க்ஸ் 'பண்டமாயை' (Commodity Fetishism) எனக் குறிப்பிடுகிறார் என்பதை நாம் அறிவோம். அதாவது செல்வம் அல்லது மூலதனத்தின் மூலமாக நாம் எல்லோரும் பணத்தைத்தான் கருதுகிறோமே தவிர செல்வத்தின் உண்மையான மூலம் உழைப்பு (Labour) என்பதை அல்ல. இன்றைய உலகமயமாகும் சூழலில் பணம் எங்கிருந்து இந்த வளைகுடாவுக்கு வந்தாலும் அது உழைப்பின் வழியாகவும் அதைச் சார்ந்த சுரண்டலின் வழியாகவும்தான் இரட்டிப்பாக முடியும் என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டிய சூழலில் இருக்கிறோம். பின் நவீனத்துவத்தைப் பற்றி குறிப்பிடும்போது தொழிற்சாலைகளுக்குப் பிந்திய பணிநிலை சார்ந்த முதலாளியம் ('Service' oriented Postindustrialist society) பற்றி அ. மார்க்ஸ் குறிப்பிட்டாலும் மேற்கூறிய விஷயம் நவீனத்துவத்தை அவர் ஆய்வுசெய்யும் பொழுது விட்டுவிடப் படுகிறது. இந்தச் சூழலில் தொழிற்சங்க இயக்கப் பிரச்சினைகளை முன்னிறுத்த எழுதப்படுகின்ற கதைகளிலோ அல்லது பெண்ணியத்தை முன் வைத்து எழுதப்படும் எழுத்துகளிலோ தலித் சார்ந்த குறிப்புகள் இருக்க வேண்டும் என்பதை நாம் ஒரு நிபந்தனையாக வைப்பது நியாயமல்ல. ஆனால் தலித் சார்ந்த குறிப்புகள் இந்த எழுத்துகளில் ஏதாவது ஒரு முறையில் சுட்டிக்காட்டப் படுகிறது என்றால் அதைக் கடுமையாக விமர்சனம் செய்ய எந்த வாசகனுக்கும் உரிமையுண்டு.

2. இரண்டாவதாக நான் சுட்டிக்காட்ட விரும்பும் விஷயம் தேசியம் மற்றும் இந்து மதத்தைக் கட்டமைக்கும் அ. மார்க்சின் வாதங்கள். ஒரு ஜனநாயக அமைப்பை நாம் விரும்பக் கூடியவர்கள் என்றால் கீழே சொல்லப்படும் இரண்டு வாக்கியங்களை நாம் எப்பொழுதும் சேர்த்து படிக்க வேண்டும்.

அ. எல்லா அடையாளங்களுமே பிரச்சினைக்குரியவை

ஆ. சில அடையாளங்கள் ரொம்பப் பிரச்சினைக்குரியவை.

இதில் இரண்டாவதை மட்டும் முன் நிறுத்தி முதலாவதை மழுங்கடிப்பது சரியல்ல.

எல்லா அடையாளங்களும் தத்தம் முழுமையை நிலைநிறுத்திக் கொள்ள ஒரு இருண எல்லையை (Negative Limit) வரையறுக்கின்றன. சாதீயம் என்ற அடையாளத்தை எடுத்துக் கொண்டால் அதன் இருண எல்லையாக "தீண்டத்தகாதவர்கள்" வைக்கப்படுகின்றனர். இந்த இருண எல்லையை ஒழுக்க ரீதியில் கட்டமைக்கும் பொழுது சாத்தீய அடையாளம் இருந்தும் எல்லையை மீறுபவர்கள் (Deviants), அதாவது இந்த கட்டமைப்பின் 'உள்ளார்ந்த கெட்ட பொருட்கள்' (Internal Bad Objects) ஆகவும் "தீண்டத் தகாதவர்கள்" 'வெளியேயுள்ள கெட்ட பொருட்கள்' (External Bad Objects) ஆகவும் நிலை நிறுத்தப்படுகின்றனர். உள்ளே இருந்து எல்லையை மீறுபவர்களுக்கு சமூக விலக்கு, மரணம் (Excommunication, Death) எதுவானாலும் தண்டனையாகலாம். வெளியே நிறுத்தப்படும் 'தீண்டத் தகாதவர்களுக்கோ' மூன்று நிலைகள்தான் இந்த அடையாளத்தில் உள்ளன. அதாவது அவர்கள்

அ. ' செயலுக்குரிய பொருட்கள் (ஞசுஷத்ங்ஞீற்ள் ர்ச் ஆஞீற்ண்ர்ய்) (தலைவன் - அடிமை இயங்கியல்)

ஆ. பாலியலுக்குரிய பொருட்கள் (Objects of Sex)

இ. வெறுப்புக்குரிய பொருட்கள் (ஞசுஷத்ங்ஞீற்ள் ர்ச் உன்ள்ஞ்ள்ற்)

ஆக முன்னிறுத்தப் படுகின்றனர். (தீண்டத் தகாதவர்களின் எல்லையை மீறினாலும் தண்டனை என்னவோ சமூக விலக்கு அல்லது மரணம் தான்). இதுதான் வவர்ணாசிரம தர்மத்தின் கீழ் வரையறுக்கப்படும் அடையாளங்களின் கொடூரம். இந்த மௌனமான பாசிசம் (Tacit Fascism) இங்கு ஆழமாக வேரூன்றிவிட்டது. இதற்கு எதிராகத் தோன்றிய பெரியாரின் கருத்துக்கள், அயோத்திதாஸ்

படிப்பகம்

www.padippakam.com



பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், எம்.சி. ராஜா, திராவிட இயக்கத்தின் ஆரம்ப கால வீச்சு (குறிப்பாக ஐம்பதுகளில் நடந்த சில விஷயங்கள்) இவை எல்லாமே வரவேற்கத் தகுந்த எதிர்ப்புகள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அதே போல தலித் அடையாளங்களைச் சார்ந்து இங்கு தற்சமயம் நடக்கும் விவாதங்களும் முயற்சிகளும் மேலும் நிலை நிறுத்தப் பட வேண்டியவை. ஆனால் இவற்றின் நடுவே ஒரு "தூய்மையான தலித் அடையாளத்தை" கட்டமைக்கும் முயற்சி பற்றி சில அய்யங்கள் தோன்றுகின்றன. ஏனென்றால் இந்த தூய்மையான தலித் அடையாளத்தின் இருண எல்லையாக "சர்வம் பார்ப்பனிய - வெள்ளாள மையம்" என்ற கூற்று நிலை நிறுத்தப்படுகிறது. அதாவது பார்ப்பனீய - வெவள்ளாள 'கறை' (Stain) படாத எழுத்துக்களே இல்லை என்ற தொனி அ. மார்க்சின் எழுத்துக்களில் வெளிப்படுகிறது. இதன் விளைவாக ஒரு புறத்தில் அயோத்திதாஸ் பண்டிதர் + இரட்டை மலை சீனிவாசன் + எம்..சி. ராஜா + அம்பேத்கர் + பெரியார் = தலித்தியம் என்று சொல்லப்பட்டாலும் மறுபுறத்தில் வர்ணாசிரம தர்மம் + ராஜாராம் மோகன் ராய் + விவேகானந்தர் + காந்தி இந்துத்துவம் இந்து தேசியம் என்ற ஒரு கூற்று வைக்கப்படுகிறது. இந்த இடத்தில் அ. மார்க்சின் கதையாடலில் அதீத வரலாற்றுவாதம் என்கிற குறைபாடு (Suffers from a over rapid historicisation) வந்துவிடுகிறது. அதாவது ராஜாராம் மோகன்ராய், விவேகானந்தர் மற்றும் தயானந்த சரஸ்வதி போன்றவர்கள் வர்ணாசிரம தர்மத்தை முன் நிறுத்தவில்லை. ஆனால் அவர்களுடைய சீர்திருத்தவாத முயற்சியை (Reformist Effort) நாம் கடுமையாக விமர்சிக்க முடியும். காந்திக்கும் அம்பேத்கருக்கும் நடந்த விவாதங்களில் அம்பேத்கர் பக்கம்தான் நியாயம் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. இதைச் சார்ந்து இன்றைய தலித் சூழலில் காந்தியைப் பற்றி வைக்கும் விமர்சனங்கள் வரவேற்கப்பட வேண்டியவை. ஆனால் சாவர்க்காரைப் போல, ஹேக்டேவரைப் போல அரசியல் செயல்பாடுகளுக்காக காந்தி ராஷ்டீரிய சுயம் சேவக்கை நிறுவவில்லை. அவர் சொன்ன சத்தியாகிரகத்தின் அடிப்படை "Civil Disobedience" (குடிமைப் பணிவின்மை) என்பதை நாம் இங்கு மறந்துவிட முடியாது. எந்த மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்து இந் தலித் சிறுத்தைகள் இனத்தவர்கள் பிறந்திருக்கின்றனரோ அதே மாநிலத்தில்தான் திலக் போன்றவர்களால் மாராட்டிய தேசியத்தின் அடுத்த படியாக இந்து தேசியமும் இந்துத்துவமும் கட்டமைக்கப்பட்டது. இதன் 'கறை' அம்பேத்கர் மீதும் படிந்துள்ளதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். அம்பேத்கரே சில சமயங்களில் தீவிரமான தேசிய வாதியாகவும் இஸ்லாமியர்களை வெறுப்பவராகவும் இருந்துள்ளார். அம்பேத்கரில் உள்ள இந்த விஷயங்களைத்தான் ஆர்.எஸ்.எஸ்.சும் சிவ சேனையும் இன்று பயன்படுத்திக் கொள்கின்றன.

இந்து மதம் என்பது பல முரண்பாடுகளின் களமாகவும் பல போராட்டங்களின் தழும்புகள் படிந்ததாகவும் உள்ளது. எந்த இந்து மதம் சாதீயக் கொடூரத்தை ஒரு தளத்தில் நியாயப்படுத்தியதோ அதுவே ஆஜீவகம், ஜெய்னம், பௌத்தம் இவற்றுடன் சேர்ந்து (நான்) "Ego' என்ற அடையாளத்தையும் கட்டுடைத்தது "நான்" என்கிற மமதையை கேள்விக்குட்படுத்தாதவர்கள் மறுமையை (Otherness) எந்த விதத்திலும் உள் வாங்க முடியாது.

இந்த தத்துவத்தை இந்து மதத்திற்குள்ளேயோ மற்ற இந்திய மதங்களுக்குள்ளேயோ சுருக்கிவிடுவதை தவிர்த்து நாம் இதனை ஆசியாவிற்கே உள்ள தனித்தன்மையான அறவியல் என்று வரையறுக்க முடியும். இதனை பார்த்தா சட்டர்ஜி குறிப்பிட்டுள்ள "கிழக்கு ஆன்மீகமானது; மேற்கு பொருளியலானது" என்ற அச்சுப்பதிவுக்கு அப்பாற்பட்டு சிந்திக்க வேண்டிய ஒரு விஷயம் எனக் கருதுகிறேன். ஏனென்றால் இந்த தர்க்கத்தைத் தத்துவ வகுப்புகளிலே கேட்டுக்கேட்டு காது புளித்துப் போய்விட்டது. (இதற்கு ஒரு முன்னோடியாக எரிக் ஃபிரம்மின் Psycho Analysis And Religion என்ற புத்தகத்தைச் சொல்லலாம்.

ஆனால் இதில் ஒரு குறைபாடு உள்ளது. அடையாளம் / அகங்காரம் / வேட்கை இவற்றை இந்த நோக்கு தத்துவ ரீதியாகக் கட்டுடைத்ததே தவிர கலாச்சார / சரித்திர நோக்கில் அல்ல. இருப்பினும் 'இந்துத்துவத்திற்கு' முரணாக இயங்கும் தத்துவம் இது என்று நம்மால் மறுக்க முடியாது. அதாவது இந்தத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் யாரும் மற்றவர்களை எந்த விதத்தில் துன்புறுத்தினாலும் அதை இதன் அடிப்படையில் நியாயப்படுத்த முடியாது. ஆக நீங்கள் எந்த பாசிசத்தை எதிர்க்கிறீர்களோ அது இந்த "அதீத வரலாற்று வாதத்தின்" வழியாகத் திரும்ப தலை தூக்குகிறது.

"தேசியம்" என்பதைப் பொறுத்தவரையில் இங்கும் ஒரு Teleological trajectory இல்லாமல் சில சாத்தியக் கூறுபாடுகள் உள்ளன என்பதைக் கவனிக்க வேண்டும். ஹேபர்மாசின் கருத்தாக்கங்களில் எனக்கு முழுமையான உடன்பாடு இல்லை என்றாலும் 'தேசியத்தை' பற்றி அவர் கூறியதை இங்கு நான் சுட்டிக் காட்ட வேண்டும். தேசியத்தை 'அரசியல் சாசன தேசியம்' (Constitutional Nationalism) என்றும் 'ஒருமையாக்கப்பட்ட தேசியங்கள்' (Particularist Nationalisms) என்றும் இரண்டாகப் பிரிக்கிறார். இதில் இரண்டாம் வகை ஒரு செங்குத்தான நேர்கோட்டுத் தனமான பாசிச (Linearlsed Fascist) தேசியம். இதில் முதலாவது, அரசியல் சாசன தேசியம் என்பது இறுதி நிலையை என்றும் அடையாத ஒன்று. பல மாற்றங்களுக்கு வழி வகுக்கும் ஒன்று. இந்த பின்னணியில் பார்த்தால் இங்கு நடந்து முடிந்த சுதந்திரப் போராட்டம் அரசியல் சாசன தேசியத்திற்காகத்தான் நடத்தப்பட்டது. இன்று ஒருமையாக்கப்பட்ட தேசியங்கள் இதனை தடம்புரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளன. அதிகாரத்தை ஒருமையாக்கப்பட்ட தேசியத்தில் கட்டமைத்து திணிக்கும் பொழுதுதான் மாநில தேசியங்கள் அவற்றிற்கு எதிராகக் கிளம்புகின்றன. இதில் தமிழ் தேசியத்தில் உள்ள பாசிசத்தையும் அ. மார்க்ஸ் சுட்டிக் காட்டியுள்ளது வரவேற்க வேண்டிய ஒன்று. நாம் இரண்டு பாசிசத்திற்குள் சிக்கி இருக்கிறோம்.

இந்த சூழலில் தலித்தியமும் / தலித் அடையாளமும் கட்டமைக்கப்படும் பொழுது மற்றும் ஒரு எஜமானச் சொல்லாடலை (Master Discourse) ஆக அதனை முன் வைப்பது சரியா? ஆனால் எதிர் சொல்லாடல்கள் (Counter discourses) உருவாகும் பொழுது இம்மாதிரி சொல்லாடல்களும் உருவாவது சகஜம். இருப்பினும் இதனைக் கேள்விக்குட்படுத்தாமல் இருப்பது அடிப்படையில் பிரச்சினைக்குரியது. ■

படிப்பகம்

www.padippakam.com



நூல் விமர்சனம்: 2

# அருந்ததி ராய் : பார்ப்பன இடதும் மனுநீதியும்

பேரா. டி.பி. விஜயகுமார்

தமிழில் : நிறப்பிரிகை

*(புக்கர் பரிசு பெற்று உலக அளவில் விற்பனைச் சாதனை புரிந்துள்ள* **The God of Small Things** *நூல் குறித்த ஒரு தலித்தியப் பார்வை)*

அருந்ததி ராயின் முதல் முயற்சியான "சின்ன விசயங்களின் கடவுள்" ஒரு மகத்தான ஆக்கம். இன்றைய மைய நீரோட்ட இந்திய எழுத்தாளர்கள் பலரையும் அது பின்னுக்குத் தள்ளிவிட்டது. ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்குகிற பார்ப்பனீயம் ஆணாதிக்கம் ஆகிய இரண்டின் மீதும் தொடுக்கப்பட்ட நேரடித் தாக்குதல் அது. எனவே இடது, வலது மற்றும் மைய சார்புடைய எல்லாவிதமான பார்ப்பனச் சிந்தனையாளர்களும் அதனைக் கடுமையாகத் தாக்குகின்றனர். கோட்டயம் நகருக்கு அருகிலுள்ள ஆயமெனம் என்கிற கிராமத்தில் வசிக்கும் மார்த்தோமிய சிரியன் கிறிஸ்தவக் குடும்பத்தின் கதை இது. தலித்கள், பெண்கள் மற்றும் இந்தியச் சமூகத்தின் மிகவும் ஒடுக்கப்பட்ட பிரிவினர் பற்றிய நெஞ்சை உருக்கும் கதையைச் சொல்கிறார் அருந்ததி.

கேரள கிறிஸ்தவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மேல் வருண சிரியன் கிறிஸ்தவர்கள், லத்தீன் கத்தோலிக்குகள் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனவர்கள்) மற்றும் தலித் கிறிஸ்தவர்கள். ஆயிரத்தைன்னூறு ஆண்டு வரலாறுடைய சிரியன் கிறிஸ்தவச் சமூகம் மிகவும் இந்து மயமாக்கப்பட்ட ஒரு பிரிவு. இந்து சாதி ஒன்றைப்போல அதுவும் ஒரு (சூத்திர) நாயர் சாதி. அவர்கள் சாதி முறையைக் கடைப்பிடித்தார்கள். அவர்ண சாதிகளான தலித்களையும் பகுஜன்களையும் அவர்கள் ஒடுக்கினார்கள். அதனை அவர்கள் பெருமையாகவும் உரிமையாகவும் கருதினார்கள். போர்த்துக்கீசியர்களின் வருகைக்கு முன்பு ஆண்டியோக்கில் இருந்த பாபிலோன் சபையோடு அவர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள். கோவாவில் இருந்த போர்த்துக்கீசியப் பேராயர் அலெக்ஸ்-டெ-மினெசிஸ் அவர்களை இந்து மய நீக்கம் செய்ய முயன்றார். இந்த நோக்கத்திற்காகவே உதயம் பேரூர் குருமார் மாநாட்டைக் கூட்டினார் (1599). இந்துக்களிலிருந்து விலகிய ஒரு தனி அடையாளத்தை சிரியர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது அவர் நோக்கம். எனவே சிரியர்கள் மத்தியில் இருந்த சாதீய நடைமுறைகளுக்கும் தீண்டாமைக்கும் அவர் தடை விதித்தார். சாதி உணர்வுடைய சிரியர்கள் இதனை எதிர்த்தனர். தங்களது உரிமைகளையும் உயர் சாதிப் பெருமைகளையும் அவர்கள் விடத் தயாராக இல்லை. எனவே அவர்களில் பெரும்பான்மையோர் ரோமுடனான தமது தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு தங்களின் ஆரம்ப காலப் பெர்சிய அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயன்றனர். இதனடிப்படையில் அவர்கள் மட்டஞ்சேரி மாதா கோயிலில் "கூனன் சிலுவையின் மீது சபதம்" (1564) எடுத்துக் கொண்டார்கள். இது மிகவும் பிற்போக்குத்தனமான ஒரு பின்னடைவு நடவடிக்கை. கேரள சிரியன் கிறிஸ்தவர்கள் நூறு சதம் கிறிஸ்துவத் தன்மையற்ற இந்து மயமானவர்கள் என்றால் அது மிகையாகாது.

கேரள மாதா கோயில் வரலாற்றின் இன்னொரு முக்கிய மைல் கல் "சர்ச் மிஷன் கொசைட்டி" (சி.எம்.எஸ்), "லண்டன் மிஷன் சொசைட்டி" (எல்.எம்.எஸ்) மற்றும் "பேசல் மிஷன் ப்ரொட்டஸ்டன்ட் பிஷனரிகள்" மேற்கொண்ட சிறந்த பணி. கேரள மறுமலர்ச்சியின் முன்னோடிகள் என இவர்களைச் சொல்லலாம் கோட்டயத்தைத் தலைநகராகக் கொண்டு சி.எம்.எஸ் மிஷனரிகள் சிரியன் கிறிஸ்தவர்கள் மத்தியில் சீர்திருத்தங்கள் செய்து, அவர்களை நவீனப்படுத்தி, ஆங்கில மயப்படுத்தி இந்துமய நீக்கம் செய்ய முயன்றனர். நவீன கல்வியைக் கற்பிப்பதற்கும் அவர்கள் பெருமுயற்சி மேற்கொண்டனர். ஐரோப்பிய தொடர்புகளையும் அவர்கள் ஏற்படுத்தினர். ஆனால் சாதி உணர்வுள்ள மனுவாதி இந்துயிசச் சக்திகள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். இரு சாதிகளும் கடுமையாக மோதிக் கொண்டன. யாருக்கும் வெற்றியுமில்லை. தோல்வியுமில்லை. சிரியன் புராட்டஸ்டன்ட்களும் மார்த்தோமியர்களும் நவீனத்துவ முயற்சிகளில் முன்னணியில் இருந்தனர். அருந்ததி ஒரு மார்த்தோமிய கிறிஸ்தவர். முழுமையாக இந்துமய நீக்கம் செய்யப்பட்ட அறிவுஜீவி. எனவே அவரது இந்த ஆக்கம் சிறப்பாக அமைந்துள்ளது. இல்லாவிட்டால் அழுகிப் போன மேல் வருண சாமானாக அது உருப்பெற்றிருக்கும். அவர் முழுமையாக மரபுவழி இந்திய மதிப்பீடுகளிலிருந்து விடுபட்டவர். நூறு சதம் இந்தியத் தன்மையற்றவர். அவரது சிறப்பு இதில்தான் உள்ளது. இத்தகைய சமூகக் - கலாச்சாரப் பின்னணியில்தான் அருந்ததி தனது மகத்தான ஆக்கத்தை உருவாக்கியுள்ளார்.

கி.மு. 185-ல் புஷ்யமித்ர சுங்கன் மேற்கொண்ட பார்ப்பனச் சதியையொட்டி கிமு. 150-ல் தோன்றிய மனுநீதியோடு தந்தை வழிச் சமூகத்தின் தோற்றத்தை நாம் பார்க்க வேண்டும். மனுயிசத்தின் உடனடி விளைவுகளாக பெண்ணடிமைத்தனம், சாதிய அமைப்பு வலுவாதல், கைவினைஞர்களும் சூத்திரர்களும் கீழ்மைப் படுத்தப்படுதல், அறிவியல் / தொழில் நுட்ப வீழ்ச்சி ஆகியவற்றைச் சொல்லலாம். மனுதான் இந்தியச் சமூகத்தைக் கட்டமைத்தவன். இந்தியத் தண்டனைச்சட்டம், சிவில் வழக்குச் சட்டம், குற்றவியல் சட்டம் என்கிற எல்லாச் சட்டங்களிலும் உயர்ந்தது மனுவின் சட்டம். இந்துயிசத்தின் சாரம் சமத்துவமற்ற படிநிலையாக்க. சமத்துவம், சகோதரத்துவம், சனநாயகம் முதலான மனித மதிப்பீடுகளை முழுமையாகக் கவிழ்ப்பது இந்துயிசம்.

இந்த நாவலின் நாயகன் வேலுதா ஒரு தலித் பரவன். இவன்தான் 'சிறிய விசயங்களின் கடவுள்'. வேலுதா ஒரு பன்முகப் பரிமாணமுடைய, பண்புமிக்க உயர்ந்த மனிதன். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த அவன் ஒரு திறமை மிக்க மரத் தச்சன். மார்க்சிஸ்ட் கட்சியின் உறுப்பினன், கட்சிக் கார்டு வைத்திருப்பவன் ஒரு உண்மையான புரட்சிமனமுடைய புத்திசாலித்தனமான கட்சி ஊழியன். நமது மாண்புமிகு

படிப்பகம்

www.padippakam.com



குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணனின் சாதியைச் சேர்ந்தவன். ஆயாமனம் இல்லத்தைச் சேர்ந்த மணவிலக்குப் பெற்ற இளம் பெண் அம்முவை அவன் காதலிக்கிறான். வங்க இளைஞன் ஒருவனுடனான முதல் மணத்தில் அவளுக்கு இரட்டைக் குழந்தைகள். ஒருவன் எஸ்தப்பன் மற்றவன் ராகேல். ஏழு வயதிலேயே வயதுக்கு மீறிய புத்திசாலித்தனமுடையவர்களாக அவர்கள் விளங்கினர். நல்ல பண்புகளும் எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வமும் சிறந்த எதிர்காலமும் உடைய பிள்ளைகள் அவர்கள். அம்முவின் அண்ணன் சாக்கோ ஆக்ஸ்போர்டில் படித்த ஒரு மார்க்சிஸ்ட். இறுதித் தேர்வைச் சரியாக எழுதாததால் இங்கிலாந்தில் அவனுக்கு நல்ல வேலை கிடைக்கவில்லை. எதிலும் தோல்வியையே அவன் தழுவ நேரிடுகிறது. ஆக்ஸ்போர்டில் படித்தவனான போதிலும் பரிதாபத்திற்குரிய அவனது சகோதரி அம்முவின் விசயத்தில் அவன் நியாயமாக நடப்பதில்லை. சாக்கோ வின் மனைவி ஆக்ஸ்போர்டு ஒட்டல் ஒன்றில் பணிப்பெண்ணாக இருக்கும் மார்க்ரெட். சாக்கோவுடனான வாழ்க்கை பிடிக்காமல் அவளிடமிருந்து மணவிலக்குப் பெறுகிறாள். இந்த மண வாழ்வின் மிச்சம் 'சோபி மோல்' என்கிற பெண் குழந்தை. இந்தியா திரும்புகிற சாக்கோ அவனது அம்மா ஒழுங்காக நடத்தி வந்த ஊறுகாய் தொழிற்சாலையை குட்டிச்சுவராக்குகிறான். மார்கரெட்டின் இரண்டாவது கணவன் கோ இறந்த பின்பு தனது முன்னாள் மனைவியையும் மகள் சோபியையும் ஆயாமனம் என இவர்களைச் சொல்லலமல். கோட்டயத்தைத் தலைநகராகக் கொண்டு சி.எம்.எஸ் மிஷனரிகள் சிரியன் கிறிஸ்தவர்கள் மத்தியில் சீர்திருத்தங்கள் செய்து, அவர்களை நவீனப்படுத்தி, ஆங்கில மயப்படுத்தி இந்துமய நீக்கம் செய்ய முயன்றனர். நவீன கல்வியைக் கற்பிப்பதற்கும் அவர்கள் பெருமுயற்சி மேற்கொண்டனர். ஐரோப்பிய தொடர்புகளையும் அவர்கள் ஏற்படுத்தினர். ஆனால் சாதி உணர்வுள்ள மனுவாதி இந்துயிசச் சக்திகள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். இரு சாதிகளும் கடுமையாக மோதிக் கொண்டன. யாருக்கும் வெற்றியுமில்லை, தோல்வியுமில்லை. சிரியன் புராட்டஸ்டன்ட்களும் மார்த்தோமியர்களும் நவீனத்துவ முயற்சிகளில் முன்னணியில் இருந்தனர். அருந்ததி ஒரு மார்த்தோமிய கிறிஸ்தவர். முழுமையாக இந்துமய நீக்கம் செய்யப்பட்ட அறிவுஜீவி. எனவே அவரது இந்த ஆக்கம் சிறப்பாக அமைந்துள்ளது. இல்லாவிட்டால் அழுகிப் போன மேல் வருண சாமானாக அது உருப்பெற்றிருக்கும். அவர் முழுமையாக மரபுவழி இந்திய மதிப்பீடுகளிலிருந்து விடுபட்டவர். நூறு சதம் இந்தியத் தன்மையற்றவர். அவரது சிறப்பு இதில்தான் உள்ளது. இத்தகைய சமூகக் - கலாச்சாரப் பின்னணியில்தான் அருந்ததி தனது மகத்தான ஆக்கத்தை உருவாக்கியுள்ளார்.

கி.மு. 185-ல் புஷ்யமித்ர சுங்கன் மேற்கொண்ட பார்ப்பனச் சதியையொட்டி கிமு. 150-ல் தோன்றிய மனுநீதியோடு தந்தை வழிச் சமூகத்தின் தோற்றத்தை நாம் பார்க்க வேண்டும். மனுயிசத்தின் உடனடி விளைவுகளாக பெண்ணடிமைத்தனம், சாதிய அமைப்பு வலுவாதல், கைவினைஞர்களும் சூத்திரர்களும் கீழ்மைப் படுத்தப்படுதல், அறிவியல் / தொழில் நுட்ப வீழ்ச்சி ஆகியவற்றைச் சொல்லலாம். மனுதான் இந்தியச் சமூகத்தைக் கட்டமைத்தவன். இந்தியத் தண்டனைச்சட்டம், சிவில் வழக்குச் சட்டம், குற்றவியல் சட்டம் என்கிற எல்லாச் சட்டங்களிலும் உயர்ந்தது மனுவின் சட்டம். இந்துயிசத்தின் சாரம் சமத்துவமற்ற படிநிலையாக்க. சமத்துவம், சகோதரத்துவம், சனநாயகம் முதலான மனித மதிப்பீடுகளை முழுமையாகக் இல்லத்திற்கு வந்து தங்கிச் செல்லுமாறு சாக்கோ அழைக்கிறான். சோபியின் உடற்கூறு அடிப்படையிலான தந்தை சாக்கோ தான் என்றாலும் ஜோ வை அவள் உண்மையான தந்தையாகவே நேசித்திருந்தாள். ஆறுதலுக்கு வந்த இடத்திலும் அவர்களுக்குச் சோதனைகள் தொடர்கின்றன. படகு விபத்தொன்றில் சோபி மரிக்கிறாள். வேலுதா வுக்கும் அம்முவுக்குமான காதல் விவகாரம் அம்பலத்திற்கு வரும்போது உயர் வருண சக்திகள் வேலுதாவைத் தீர்த்துக் கட்ட சதித்திட்டம் தீட்டுகின்றனர். உயர் வருண இந்து நாயர் சாதியைச் சேர்ந்த உள்ளூர் மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் கே.எம்.என். பிள்ளை இதில் முக்கிய பங்கு வகிக்கிறார். இங்கும் சமூக நிலையைத் தக்க வைப்பதில் ஆர்வமுள்ள இவன் ஒரு கொடிய சாதி வெறியன். அம்முவின் அத்தை பேபி கொச்சம்மா, ஒரு முன்னாள் கன்னிகாஸ்திரி. வேலுதா மீது பொய் வழக்கொன்றைத் தொடுக்கிறாள். அம்முவைக் 'கெடுத்த, தாகவும், குழந்தைகளைக் கடத்திச் சென்று சோபியைக் கொன்றதாகவும் வழக்கு. கோட்டயம் காவல் நிலைய அதிகாரி தாமஸ் மேத்யூ ஒரு சிரியன் கிறித்தவர்; காங்கிரஸ் கட்சி ஆதரவாளர். ஒரு பாழடைந்த வீட்டில் இரட்டைக் குழந்தைகளின் கண் முன் வேலுதா அவனைத் தொடக்கூடிய சாதியைச் சேர்ந்த போலீஸ்காரர்களால் அடித்துக் கொல்லப்படுகிறான். வேலுதா குற்றமற்றவனான போதிலும் தோழர் கே.எம்.என். பிள்ளை அவனுக்கு உதவி செய்யவில்லை. மேல் வருண கும்பலுக்கே அவர் ஆதரவாக இருக்கிறார். தோழர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு இரண்டாம் முறையாக முதலமைச்சராக இருக்கும்போது (1969) இது நடைபெறுகிறது. வேலுதா பற்றிய புகார் கிடைத்தவுடன் போலீஸ் அதிகாரி பிள்ளையைச் சந்தித்து அவரது ஒப்புதலோடுதான் 'நடவடிக்கை' மேற்கொள்கிறார். மோதலி ல் சாவு' என பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன.

ஆக இது தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டத் தகாதவர்களுக்குமிடையேயான சாதீயத் தகராறு. சவர்ணர்களுக்கும் அவர்ணர்களுக்குமிடையேயான மோதல். தீண்டத் தகாதவர்களுக்கு ஆதரவும் இல்லை; ஆயுதங்களுமில்லை. சவர்ண ஆட்சியாளர்கள் ஆயுதம் வைத்திருப்பவர்கள்; இரக்கமற்றவர்கள்; கொடூரமானவர்கள். அருந்ததியின் இதயம் தீண்டத் தகாதவர்களின் பக்கமாகவே இருக்கிறது. எல்லா மேல் வருணத்தவரும் தமக்கிடையேயான சாதி, மத, கட்சி வேறுபாடுகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட் வேலுதாவையும் அம்முவையும் பிரிக்கின்றனர்; தண்டிக்கின்றனர். அவர்கள் 'வரலாற்றின் அடியாட்கள்'. இந்தக் கொடூரமான கொலை எஸ்தா, ராகேல், அம்மு ஆகியோரின் வாய்ப்புமிக்க எதிர்காலத்தை அழிக்கிறது. இதுதான் பெரிய சோகம்.

வேலுதாவின் கொடிய கொலைக்குப் பின்பு அம்முவை அவளது சொந்த வீட்டிலிருந்து துரத்துகிறான் ஆக்ஸ்போர்டில் படித்த சாக்கோ. பின்னர் யாருடைய ஆதரவும் அற்ற நிலையில் தூர லாட்ஜ் ஒன்றில் ஆஸ்துமா நோய்க்குப் பலியாகிறாள் அவள். எஸ்தா மன நோய் பிடித்தவளாகவும் ராகேல் ஒரு பிறழ்ந்த மனதுடையவளாகவும் ஆகின்றனர். இருபத்தி நான்கு ஆண்டுகளுக்குப் பின்பு (1993) ஆயாமனன் இல்லத்தில்

படிப்பகம்

www.padippakam.com



இரட்டையர்கள் சந்திக்கின்றனர். ராகேல் (அருந்ததி) முழுக் கதையையும் நினைவு கூர்கிறாள். கதை நமது இதயத்தைத் தொடுகிறது. கண்களை நனைக்கிறது. அருந்ததியின் மொழித் திறன் அற்புதம். துயரம், உள்ளார்ந்த நகையுணர்வு என்கிற கலக்க முடியாத இரண்டு அம்சங்களைக் கலக்கிறார் அருந்ததி. அம்மு ஒரு வித்தியாசமான பெண். தன்னம்பிக்கையும் தன்னுறுதியும் மிக்கவள்; ஆணாதிக்கத்தை எதிர்ப்பவள். நாவலில் மிகவும் கொடூரமான பாத்திரம் தோழர் கே.எம்.என். பிள்ளை. இதர இந்திய வகையிலான உயர் வருண ஆக்கங்களுக்கு மத்தியில் இந்தத் தன் வரலாற்று நாவல் ஓங்கி உயர்ந்து நிற்கிறது.

இந்தியா முழுமையும் ஒரு அறிவுத்துறைப் பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. அருந்ததியைப் போன்றவர்களே நம்பிக்கை நட்சத்திரங்களாக உள்ளனர். நாவலில் ஏதும் ஆபாசம் இருக்கிறதென்றால் அது பார்ப்பனீயத்தின் ஆபாசம்தான்; அருவெறுக்கத் தக்கதாக ஏதும் உள்ளதெனில் அது பார்ப்பனீய மார்க்சீயம்தான்.

கேரள இடதுசாரி இயக்கத்தை அருந்ததி ஆதரவாகத்தான் பார்க்கிறார். மேல்வருண இடதுத் தலைமையை மட்டுமே அவர் எதிர்க்கிறார். ஈ.எம்.எஸ்.சும் பிள்ளையும் அவர்களின் பிரதிநிதிளாக விளங்குகின்றனர். தமது இயக்கத்தை அவர்கள் இந்து மயப்படுத்துகின்றனர். இந்துக் குற்றவியல் மதிப்பீடுகளுடன் சமரசம் செய்து கொள்கின்றனர். **ஸ்ரீ நாராயண குரு, மகாத்மா அய்யங்காளி, பொய்கயில் குமார குருதேவன்** ஆகியோரது தலைமையிலான தலித் - பகுஜன் இயக்கங்களின் உடன் விளைவாகத் தான் கேரளாவில் இடது இயக்கம் தோன்றுகிறது. மேலே குறிப்பிட்ட சமூக சீர்திருத்த இயக்கங்களுக்குப் பின்புலமாக எல்.எம்.எஸ்., சி.எம்.எஸ், பி.ஈ.எம். முதலான புராட்டஸ்டன்ட் மிஷனரிகளின் பங்களிப்புகள் விளங்கின. கேரள மக்கள் மத்தியில் குறிப்பாக மலபார் மக்கள் மத்தியில் அழுகிக் கிடந்த சமூக வாழ்வைத் தூய்மைப் படுத்தியதில் **திப்பு சுல்தானுக்கும்** பெரும்பங்கு உண்டு. கேரள மறுமலர்ச்சியின் பெருமைகள் யாவும் தலித்-பகுஜன் இயக்கங்களுக்கே சாரும். இதில் மேல் வருணப் பங்களிப்பு ஏதுமில்லை. கேரளக் கட்சிகள் என்பன உயர் சாதிகளால் தலைமை தாங்கப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்களின் கட்சிகள்தான். கேரளத்தைப் பிடித்திருக்கும் பெரிய நோய்களுக்கான மருத்துவம் இந்த முரணின் தீர்வில்தான் அடங்கியுள்ளது.

தலித் பிரச்சினைகளுக்கு மார்க்சீயம் ஒரு தீர்வாக இருக்க முடியாது. தலித் பிரச்சினை என்பது அடிப்படையில் ஒரு சமூக, கலாச்சார மதப் பிரச்சினை. மார்க்சியத்தின் உயர் வருணச் சித்தாந்திகள் தலித் பிரச்சினையைப் பொருளியல் காரணிக்குள் அடக்க முனைகின்றனர். தலித் பகுஜன் மக்களால் பார்ப்பனீயத்திற்கு உருவாகியுள்ள உடனடி ஆபத்தைத் திசை மாற்றும் முயற்சிதான் இது.

கட்சித் தலைமை எப்படி மேல் வருணத்தவர்களின் கையில் சிக்கியது? தாய்விழச் சமூக நாயர்சாதிக் கூட்டுக் குடும்ப 'தரவாடு' முறை அழிந்த போது உயர்சாதி இளைஞர்கள் செய்வதறியாது திகைத்துப் போயினர். உடலுழைப்பிற்குத் தயாராக இல்லாத அவர்கள் உடனடிப் புரட்சியாளர்களாகிக் கட்சித் தலைமையைக் கைப்பற்றினர். தங்களின் பெயர்களோடு சாதியை ஒட்டிக் கொண்டனர். சிவப்புடை தரித்த காவி அணியினராகவே விளங்கினர்.

அருந்ததி இதனைக் கூர்மையாகத் தோலுரிக்கிறார். இ.எம்.எஸ். எரிச்சல் படுகிறார்.

ஆணாதிக்க சாதி வெறியனான சாக்கோ சிரியன் கிறிஸ்தவர்களுக்குள் அக மணம் குறித்தே எப்போதும் பேசுகிறான். அருந்ததி உடற்கூறு ரீதியாக சாதியமைப்பையும் அகமணத்தையும் தாக்குகிறார். அருந்ததியைப் பொருத்த மட்டில் சாதியமைப்பு அநீதியானது; கிரிமினல் தன்மையானது. பார்ப்பனியம், இந்துத்துவம், தந்தைவழி முறை ஆகியவற்றின் மீதான தாக்குதலாக உள்ளதே நாவலின் சிறப்பு. நேருக்கள், பட்டேல்கள், பாசுகள், குப்தாக்கள், முகர்ஜிகள்... போன்றோரின் கேலிச் சித்திரமாகவே சாக்கோ ஆக்கப்பட்டுள்ளான்.

இந்த நாவலைப் பற்றிய மதிப்பீட்டில் மார்க்சிஸ்ட் கட்சியின் இளைஞர் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான **எம்.ர.பேபி**, இ.எம்.எஸ். சுடன் கருத்து மாறுபடுவதேன்! பேபி ஒரு லத்தீன் கத்தோலிக். பிற்படுத்தப்பட்ட மீனவர். எனினும் சுயமரியாதையும் தன்னுணர்வும் மிக்க பேபி கொஞ்சம் அடக்கியே வாசிக்கிறார். நம்பூதிரிபாடு அவரது ஆச்சாரியார் அல்லவா? கேரளத்தின் நோய்களுக்கெல்லாம் இந்தப் பார்ப்பன ஆதிக்கம்தான் காரணம்.

மலபாரில் இன்னொரு நாடகமும் அரங்கேறியது. நாராயண குரு, அய்யங்காளி ஆகியோரின் கருத்துக்களைக் கண்டு அஞ்சி நடுங்கிய சவர்ணர்கள் சில தந்திரங்களை மேற்கொண்டனர். இந்தப் புரட்சிகர சிந்தனைகளை மழுங்கடிக்கும் நோக்குடன் **பிரம்மானந்த சிவயோகி** என்கிற நாயர் சந்நியாசி, **வாக்பதானந்தா** என்கிற தீயர், சீடர் எனச் சிலரை உருவாக்கிப் பார்த்தார்கள். பிரம்மசமாஜயை புட்கைகளையும் ஊக்குவித்தனர். இத்தகைய தந்திரங்களின் மூலம் மலபாரில் தலித் பகுஜன் மக்களை சவர்ணத் தலைமையின் கீழ் கொண்டு வருவதில் வெற்றி பெற்றனர். கேரளாவில் குறிப்பாக மலபாரில் அரசியல் மோதல்கள் எப்போது நடைபெற்றாலும் பாதிக்கப்படுவதென்னவோ தலித்-பகுஜன்கள்தான்.

மலையாள அறிவுத்துறையின் வறட்சிக்கும் கலாச்சார சீரழிவிற்கும் அருந்ததி ஒரு பெரிய விதிவிலக்கு. கார்ட்டுனிஸ்ட் **அபு ஆப்ரகாமையும்** ,அருந்ததியையும் ஒப்பிட்டுப் பர்ருங்கள். இருவரும் நவீனப்படுத்தப்பட்ட மார்த்தோமிய கிறிஸ்தவர்கள்தான். முன்னவர் இந்துமயமானவர். அவரது மண்டல் எதிர்ப்புக் கார்ட்டூன்களை நாம் எளிதில் மறக்க முடியாது. அருந்ததியோ இந்துமய நீக்கம் செய்யப்பட்டவர். புகழுக்குரிய பெரும் ஆக்கத்திற்குச் சொந்தக்காரர்.

**அடிக்குறிப்பு** : நிலப் பிரபுத்துவ சக்திகளை பூர்சுவாக்கள் எனச் சொல்வது பூர்சுவாக்களை அவமானப்படுத்துவது. இ.எம்.எஸ். சை பூர்சுவா எனச் சொல்வது அவருக்கு நோபல் பரிசளிப்பதற்கு ஒப்பானது.

*(1998 பிப்ரவரி 17-19 தேதிகளில் கோழிக்கோடு பல்கலைக்கழக ஆங்கிலத் துறையில் நடைபெற்ற **தலித் ஆய்வுகள்** தொடர்பான யு.ஜி.சி. கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை. கட்டுரையாளர் கொடுங்காலூர் அரசு கல்லூரியில் வேதியியல் பேராசிரியர்).*

படிப்பகம்

www.padippakam.com



# ஆப்ரோ அமெரிக்க இலக்கியம்

கட்டுரைகள் :

## கருப்பு இலக்கியம்

வளர்மதி

இலக்கியப் புனிதங்களும் புனிதத் தொகுதிகளும் நொறுங்கிக் கொண்டிருக்கும் காலமிது. காலத்தை மீறிய 'படைப்புகள்', எல்லோருக்கும் பொதுவான, அருவமான 'அழகியல்' மதிப்பீடுகள் என்று சொல்லப்பட்டவை ஒவ்வொன்றும் ஒன்றொன்றாக நம் கண் முன்னேயே உளுந்து, உலர்ந்து, உதிர்ந்து கொண்டிருக்கின்றன.

அதே நேரத்தில், இதுவரை கவனிப்பாரற்றுக் கிடந்த, மௌனத்தால் இருப்பே மறுக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் உயிர்பெற்று எழுந்து இலக்கிய அதிகார பீடங்களின் அஸ்திவாரத்தை மெல்ல மெல்ல அசைத்து ஆட்டம் காண வைத்துக் கொண்டிருக்கின்றன. பழைய அணிசேர்க்கைகள் குலைந்து, புதிய இணைவுகள் - ஒதுக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், இருப்பே துடைத்து அழிக்கப்பட்டவர்கள், மனிதர்களாகவே மதிக்க மறுக்கப்பட்டவர்கள் தமது தனித்துவத்தை வலி யுறுத்திக்கொண்டே தமக்கிடையில் ஒற்றுமைகளைத் தேடி அடையாளம் கண்டு அணி சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். நீர் எங்கே இருக்கப் போகிறீர் என்பதை சீக்கிரமே முடிவு செய்துகொள்ளுங்கள்.

☆ ☆ ☆

கண்களை மூடிக் கொள்ளுங்கள். உமது ஆட்காட்டி விரலை நெற்றியில் அழுத்திக் கொள்ளுங்கள். எங்கே சட்டென்று உமது நினைவுக்கு வருகிற, உமக்குப்பிடித்த ஐரோப்பிய - வேண்டாம், ஆங்கில 'இலக்கிய 'மேதைகள்' ஒரு ஐந்து பேரை வரிசையாகச் சொல்லுங்கள்_ ஷேக்ஸ்பியர், பைரன், வேர்ட்ஸ்வொர்த், கீட்ஸ், விட்மேன் (உமது நண்பருக்கு சற்று வித்தியாசப்படலாம்: ஹெமிங்வே, வாலேஸ் ஸ்டீவன்ஸ், டிஎஸ்.எலியட், டிஎச். லாரன்ஸ், ஜாய்ஸ்_ இப்படி). இப்போது கொஞ்சம் யோசிப்போம். ஏன் ஒரு பெண் எழுத்தாளர் கூட உமது நினைவின் நுனிக்கு வரவில்லை? (ஜேன் ஆஸ்டின், விர்ஜினியா வூல்ஃப், ஸில்வியா ப்ளாத்). ஏன் ஒரு கருப்பர்கூட தோன்றவேயில்லை?

டோனி மாரிஸன், வாலே சோயின்கா, நோபல் பரிசுகளை பறித்திருக்காவிட்டால் நீர் இவர்களது பெயர்களைத் தெரிந்துகொள்ளும் சிரமமாவது எடுத்திருப்பீரா!

☆ ☆ ☆

டிசம்பர் 8, 1986; நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டு வோலே சோயின்கா அங்கே, அந்த மேடையில் நின்று கேட்கிறார்: "கருப்பர்கள் நாங்கள் இப்போது தெளிவாகவே இருக்கிறோம். இந்த சந்தர்ப்பத்தில் நான் எங்களவர்களை நோக்கி பேசவேண்டிய எந்த அவசியமும் இல்லை எங்களுடைய இலக்கு, நாங்கள் பயணிக்க வேண்டிய பாதை எதுவென்று எங்களுக்குத் தெரியும். இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் பேசவேண்டியது, அந்த மற்றதைநோக்கி .. நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள். உங்கள் பதிலை மெதுவாகவே சொல்லுங்கள். இந்த நொடி, இப்படியொரு நிகழ்வு, வரலாற்றில் எந்தக் காலத்திலும் சாத்தியமேயில்லை என்பதை நிரூபிப்பதற்காக, அவசரத்தில், ஆத்திரத்தில், இதோ, இதே கருப்புத் தோல் போர்த்திய, மெல்லிய சுருண்ட மயிர் கொண்ட எத்தனை ஆயிரம் மனித உயிர்களை கண்டம் விட்டுக் கண்டம் பெயர்த்து கடத்திக்கொண்டு போயிருப்பீர்கள்; கொன்று குவித்திருப்பீர்கள், சித்திரவதை செய்திருப்பீர்கள், முடமாக்கியிருப்பீர்கள், நாக்கை இழுத்து வைத்து அறுத்திருப்பீர்கள், மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தியிருப்பீர்கள்!"*

அந்த வெள்ளை உலகின் மிகப் பெரிய அதிகார பீடம் ஒன்றின்மீது நின்றுகொண்டு என்ற அதை நோக்கியே கேட்கப்பட்ட கேள்வி இது. ஆனால், இந்த கேள்விக்கான பதிலை நீரும்/உமது (எனது) உயர்சாதித் தன்னிலையும் தேடவேண்டிய பொறுப்பு இருக்கிறதா இல்லையா? அவசரமில்லை. நிதானமாகவே யோசித்துப் பாருங்கள்.

☆ ☆ ☆

எலியட்டையும், எஸ்றா பவுண்டையும், சில்வியா ப்ளாத்தையும் தேடிப் பிடித்து எடுத்த அதே அமெரிக்க நூலகத்தில்தான் கருப்பு (ஆஃப்ரோ - அமெரிக்க) இலக்கியமும் குவிந்து கிடக்கிறது. அது இந்திரன் கண்ணில் மட்டும்தான் பட்டிருக்கிறது. இந்திரனுக்கு உரிய மரியாதை இந்த இடத்தில்தான் இருக்கிறது. மற்றவர்கள் இதற்கு என்ன பொறுப்பு எடுத்துக்கொள்ளப் போகிறார்கள்!

இப்போது, ஹென்றி லூயிஸ் கேட்ஸ். Jr, நெல்லி Y. மெக்கே இருவரையும் பொதுத் தொகுப்பாளர்களாகக் கொண்டு, ராபர்ட் G. ஓ'மியலி, வில்லியம் L. ஆண்ட்ரூஸ் , பிரான்ஸஸ் ஸ்மித் ஃபாஸ்டர், ரிச்சர்ட் யார்பரோ, ஆர்னால்ட் ராம்பர்செத், டெபோரா E. மெக்டௌவல், ஹோர்டென்ஸ் ஸ்பில்லர்ஸ், ஹவுஸ்டன் A. பேக்கர், பார்பரா T. கிறிஸ்டியன் (அத்தனை பேரும் கருப்பு அமெரிக்கர்கள்) ஆகிய ஒன்பது பேர் பத்து ஆண்டுகள் கடுமையாக உழைத்து Norton Anthology of African AmericanAnthology என்கிற மாபெரும் தொகுப்பைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 3000 பக்கங்களில், 120 எழுத்தாளர்களுடைய 52 சிறந்த படைப்புகள் இதில் தொகுக்கப்பட்டிருக்கிறது. தொகுப்போடு ஒரு CD-யும் உண்டு. கருப்பர் ஆங்கிலத்தை தாளில் இறக்கி வைக்கும்போது அதன் உயிர்த்துடிப்பு மடிந்துவிடுவதைக் கருத்தில் கொண்டு

* *வெற்றி லூயிஸ் கேட்ஸ், Jr-ன்* Canon - Formation and the Afro - American Tradition *என்ற கட்டுரையிலிருந்து இந்த மேற்கோள். நூல்:* Afro - American Literary study in the 1990s. ed by: Houston A. Banker and Paricia Redmond. University of Chicago Press, 1986.

படிப்பகம்

www.padippakam.com



இந்த ஏற்பாடு. இதில் முக்கியமான பாடல்கள், கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள் உண்டு.

1. வழக்கு மரபு
2. அடிமைத்தனத்திலிருந்து அரசியல் விடுதலை பெற்ற காலம் வரை (1746 - 1865)
3. புனரமைப்பிலிருந்து புதிய நீக்ரோ அதாவது மறுமலர்ச்சிக் காலம் வரை (1865 - 1919)
4. ஹார்லம் மறுமலர்ச்சி (1919-1940)
5. யதார்த்தவாதம், நேச்சுரலிசம், நவீனத்துவம் (1940-1960)
6. கருப்பு அழகியல் (1960-1970)
7. 70-களுக்குப் பிந்தைய இலக்கியம்.

என்று இரண்டரை நூற்றாண்டு காலத்துக்கு விரிந்திருக்கிற கருப்பர் இலக்கியத்தை ஏழு காலகட்டப் பகுதிகளாகப் பிரித்துத் தொகுத்திருக்கிறார்கள்.

இந்த விரிந்த காலப்பகுதியில், இந்த இலக்கியத்தில் எழுந்த தனித்துவமான வடிவங்கள், ஊடுருவியிருகிற தனித்துவமான பண்புகள், ஒவ்வொரு எழுத்தாளரும் தமக்கு முந்தைய தலைமுறை அல்லது சமகால எழுத்தாளருடைய எழுத்துக்களை மறுவாசிப்பு செய்யும் விதத்தில் எழுதியிருக்கும் தனிச்சிறப்பு இன்னும் இது தொடர்பான பிற அம்சங்களை இந்தத் தொகுப்பு கண்டுகொள்ள உதவுமானால் அதுவே அதன் வெற்றி என்று நமது இலங்கைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்னொரு பக்கம், கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக கருப்பு இலக்கியத்தின் தனித்துவமான கூறுகளிலிருந்து, தனித்துவமான கருப்பு, விமர்சனக் கோட்பாட்டை உருவாக்கும் முயற்சியில் கருப்பு விமர்சகர்கள் இறங்கியிருக்கிறார்கள். ஹென்றி லூயிஸ் கேட்ஸ். ஹவுஸ்டன் பேக்கர், இவர்களில முககியமானவர்கள். இந்த இரண்டு விமர்சகர்களும் மேற்கத்திய விமர்சனக் கோட்பாடுகளைக் கட்டுடைத்து (கட்டுடைப்பையும் சேர்த்து) தனித்துவமான கருப்பு இலக்கிய விமர்சனத்தை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க சாதனைகள் செய்திருக்கிறார்கள். (இந்த இதழில் இதுபற்றிய அமா-வின் கட்டுரையைப் பார்க்க). வரும் காலங்களில் ஆங்கில இலக்கியத்தின், இலக்கிய விமர்சனத்தின் போக்கையே தீர்மானிக்கக்கூடிய இந்த எழுத்துக்களைப் பற்றிய விரிவான அறிமுகத்தை பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

## தலித்தியக் குறிப்புகள்

*கொழும்பிலிருந்து வெளிவரும் 'சரிநிகர்' இதழில் அருந்ததியன் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு 'தலித்தியக் குறிப்புகள்' என்கிற தலைப்பில் கையடக்கமான அளவில் தொகுக்கப்பட்டுள்ளது. 'தலித்தியம்' என்பது சமீப காலங்களில் இலங்கையிலும் ஒரு பேசுபொருளாக ஆகியிருப்பதும், "அருந்ததியர் மீட்பு முன்னணி" என்கிற அமைப்பு ஒன்று அங்கே செயல்படுவதும் இதன் மூலம் நமக்கு அறியக் கிடைக்கிறது. யாழ்குடா நாட்டிலுள்ள சாதீயம், பஞ்சமர்களின் ஒடுக்கப்பட்ட நிலை குறித்து நமக்குக் கொஞ்சம் தெரியும். டானியல் முதலானோரின் எழுத்துக்கள் அதற்கு உதவியுள்ளன. ஆனால் அவரது எழுத்துக்களில் கூட பஞ்சம சாதியைத் தாண்டி ஆறாவது சாதியாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அருந்ததியர்கள் நகர சுத்தித் தொழிலாளிகளாக வதிவது சொல்லப்பட்டதில்லை. தமிழும் தெலுங்கும் இவர்களின் மொழி. தமிழர்கள் இவர்களை முடுற்றிலும் அந்நியமாகக் கருதுவதன் விளைவாக இப்போது இவர்கள் சிங்கள மொழி கற்றுக்கொண்டு தங்கள் பிள்ளைகளைச் சிங்களப் பாடசாலைக்கு அனுப்பும் செய்தி நமக்கு அதிர்ச்சியளிக்கிறது. இனவெறியரான பிரேமதாசா தான் ஒரு ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்கிற வகையில் அருந்ததியர்களோடு நெருக்கமாக இருந்த செய்தி நமக்கு வியப்பளிக்கிறது. பல கட்டுரைகள் களஆய்வுகளின் அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதும் 'சரிநிகர்' இதழ் இவற்றைப் பொறுப்போடு பிரசுரித்திருப்பதும் நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. தேசிய இன உணர்வு அடிப்படையில் விளிம்பு நிலைப் பிரிவினர் ஒதுக்கப்படுவதும், ஒதுக்கப்பட்ட மக்கள் மேலும் தமது தனித்துவமான அடையாளங்களை இறுக்கிக் கொள்வதும், இந்நிலை அவர்கள் மேலும் அந்நியமாவதற்குக் காரணமாதலும் நமக்குக் கவலை அளிக்கிறது. சில நாட்களுக்கு முன்பு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. நுஃமானைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது இசுலாமியர் மத்தியில் இத்தகைய போக்கிருப்பதைப் பற்றி அவர் சொன்னது நினைவிற்கு வருகிறது.*

படிப்பகம்

www.padippakam.com



# ஆப்ரோ - அமெரிக்க இலக்கிய விமர்சனம்: நடந்து வந்த பாதையும் கடக்க இருக்கும் தொலைவும்

*அ. மார்க்ஸ்*

## I

அச்சு உலகிற்குள் கருப்பர்கள் முட்டி மோதி இடம்பெற முயல்வதென்பது 1760-1789 காலகட்டத்தில்தான் சாத்தியமாயிற்று. தன் வரலாறுகளாக மிளிரும் அடிமைக் கதையாடல்கள் அய்ந்து இக்கால கட்டத்தில் வெளியாயின. ஆங்கிலத்தில் வெளிவந்த முதல் ஆப்ரிக்கக் கவிதைத் தொகுப்பு லண்டனில் 1773ம் ஆண்டு வெளியாகியது. போஸ்டன் நகரைச் சேர்ந்த **பிலிஸ் வீட்லி** என்கிற அடிமைப் பெண் எழுதிய கவிதைகள் இவை. அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் அய்ந்து பதிப்புகளை இத் தொகுப்பு கண்டது. இதுபற்றி 1808ல் **என்றி கிரிகோரி** என்பவர் இப்படி எழுதினார்: "அய்ந்து தொகுப்புகள் வந்துள்ளன என்பது இதன் கவித்துவத் தரத்திற்குக் கிடைத்த ஏற்பு என்பதைக் காட்டிலும் ஒரு ஆப்ரிக்கக் கவிஞரின் 'நம்பத் தகுந்த' வெளிப்பாடு என்பதற்குக் கிடைத்த ஏற்புதான்."

போஸ்டன் நகரைச் சேர்ந்த திருவாளர் **வீட்லியின்** நீக்ரோ அடிமையாகிய **பிலிஸ்**, இந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்காக ஒவ்வொரு பதிப்பிலும் வெள்ளைப் பெரியவர்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு ஒரு சான்றிதழை வெளியிட வேண்டி இருந்தது. சான்றிதழ் வாசகங்கள் வருமாறு:

"கீழ்க்கண்ட பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 'கவிதைகள்' யாவும் **பிலிஸ்** என்கிற இளம் நீக்ரோ பெண்ணால் எழுதப்பட்டது என (நாங்கள் மனதார நம்புகிறபடி) உலகின் முன் உறுதியளிக்கிறோம். இவள், சில ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவிலிருந்து நாகரீகமற்ற காட்டுமிராண்டியாகக் கொண்டுவரப் பட்டவள். அன்றிலிருந்து இன்றுவரை நகரிலுள்ள ஒரு குடும்பத்தில் அடிமையாகப் பணியாற்றுகிற பாதகமான நிலைக்குள்ளாக்கப்பட்டவள். சிறந்த நீதிபதிகள் சிலரால் ஆய்வு செய்யப்பட்டு இவற்றை எழுதுவதற்கான தகுதி அவளுக்கு உள்ளாளுதென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது."

ஆசிரியத்துவம் குறித்த இந்தச் சான்றிதழின் கீழ் பதினெட்டு வெள்ளையர்கள் கையொப்பமிட்டிருந்தனர். மாசாச்சுசெட்ஸ் ஆளுனர் **தாமஸ் அட்கின்சன்** அவர்களில் ஒருவர். **பிலிஸ் வீட்லி** தான் இதன் ஆசிரியர் என்பதில் சந்தேகமில்லை என அவர் குறிப்பிட்டிருந்தார்.

**வால்டேர், ஜார்ஜ் வாஷிங்க்டன், பெஞ்சமின் ரஷ், பெஞ்சமின் பிராங்க்லின்** எனப் புகழ்பெற்ற அறிஞர்கள், திறனாய்வாளர்கள் மற்றும் தலைவர்கள் பிலிசின் கவிதைகள் பற்றி எழுதினர். ஆனால் யாரும் இவற்றைக் கவிதைகளாக ஏற்றுக்கொண்டு விமர்சிக்கவில்லை. கருப்பு எழுத்துக்களின் தகவல் கூறுகள் (Documentary Status) மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதற்கு மேல் சொல்வதற்கு அவற்றில் என்ன இருக்கிறது? **பிலிஸ் வீட்லி** யின் கவிதைகள் பற்றிய கருத்துரைப்பில் **தாமஸ் ஜெஃபர்சன்,**

"(அழகியல் பரிமாணங்கள் அற்று) நேரடியாகச் செய்திகளைச் சொல்வதற்கு மேலான தளங்களில் கருப்புகள் எதையும் பேசி நான் இதுவரை கண்டதில்லை. ஓவியம்,சிற்பம் இவற்றிற்கான அடிப்படைக் கூறுகளைக் கூட அவைகளிடம் பார்த்ததில்லை. (மனித மூளையின் வெளிப்பாடு என்கிற வகையில் கவிதைகள் என்கிற தலைப்பின் கிழ் வீட்லியின் கவிதைகள் விவாதத்திற்குரியவை அல்ல). (கிறிஸ்தவ) மதம் பிலிஸ் வீட்லியை உருவாக்கியுள்ளது. ஆனால் ஒரு கவிஞரை உருவாக்கவில்லை. அவளது பெயரில் வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பு விமர்சனத் தகுதிக்குக் கீழானது" என்று குறிப்பிட்டார்.

எழுத வந்த கருப்பர்களின் எண்ணமும் இதிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கவில்லை. "இத்தனை குறைபாடுகளோடும் இந்தக் கவிதைகளைப் பொதுமக்களின் மேலான பார்வைக்குப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்" என **பிலிஸ்** அந்தத் தொகுப்பில் முன்னுரைத்திருந்தார். முதல் அடிமைக் கதையாடல் ஆசிரியர்களில் ஒருவரான **குஸ்தவா வஸ்ஸா,** "தாராளச் சிந்தனைகள், கிறிஸ்தவ மதம் ஆகியவற்றுடனான எமது தொடர்பு எமது மனிதப் பண்பை உயர்த்தியிருக்கிறது" எனச் சொல்லிக் கொண்டார் (1789). **சார்ல்ஸ் பால்** - இன் தொகுப்பு வெளிவந்தபோது," பாலுக்குச் சகிக்கத் தக்க அளவிற்கு அறிவுத்திறன் இயற்கையாகவே வாய்த்திருக்கிறது" என அதன் தொகுப்பாளர்கள் குறிப்பிட்டிருந்தனர். **பிரெடரிக் டக்ளஸ்** - இன் தற்சரிதை வெளி வந்தபோது (1845) அதன் முன்னுரையில் **டக்ளசின்** ஆப்ரிக்கப் பாரம்பரியம், முந்தைய மிருகத்தனம், தற்போதைய அறிவுத் திறன்கள் முதலியவை வலியுறுத்தப்பட்டிருந்தன. கருப்பு எழுத்துக்களின் தனித்துவத்தை முதன் முதலில் சுட்டிக் காட்டியவரும் கருப்பு எழுத்துக்களில் புனிதத் தொகுப்பொன்றைப் (Canon) பற்றி முன்மொழிந்தவருமான **தியோடர் பார்க்கர்** (1846) கூட கருப்பு எழுத்துக்களின் முக்கியத்துவத்தைச் சொல்லிவிட்டு இறுதியில், "உயர்ந்த கலாச்சாரம் இல்லாதவர்களின் வெளிப்பாடுகளாக இவை இருப்பதனால் அறிஞர்களின் தேவைகளை இவற்றால் முழுமையாகப் பூர்த்தி செய்ய இயலவில்லை" என்று முடித்திருந்தார்.

மனிதக் குரங்கிற்கும் மனிதனுக்கும் இடையிலான பரிணாமச் சங்கிலியின் விடுபட்டுப்போன கண்ணியாகக் கருப்பர்கள் கருதப்பட்டு வந்த காலகட்டத்தில் தாங்கள் முதலில் மனிதர்கள்தான் என நிறுவ வேண்டிய தேவை அவர்களுக்கிருந்தது. தாங்களும் மற்றவர்களைப் போல சிந்திக்கக் கூடியவர்கள்தான் என நிறுவுவதற்கான வழி

படிப்பகம்

www.padippakam.com



முறைகளில் ஒன்றாக எழுத்தை அவர்கள் கருதினர். "நீக்ரோ எழுத்துக்களுக்கான ஒரு வரை மாதிரி"யை எழுதியவரும் மார்க்சிஸ்டுமான **ரிச்சர்டு ரைட்** இதனைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

"கருப்பு எழுத்தாளர்கள், அமெரிக்கப் பொதுக்கருத்து அவைக்குள் அடிமைத் தனத்தின் அடையாளமாகிய முழங்கால் சட்டையுடன் நுழைந்தார்கள். தாங்கள் தாழ்ந்தவர்களல்ல, தாங்களும் மனிதர்கள்தான், மற்றவர்களோடு ஒப்பிடக்கூடிய வாழ்க்கை உடையவர்கள்தான் என்பதை மண்டியிட்டு அறிவித்தார்கள். வித்தைகள் செய்யும் பிரெஞ்சுச் சடை நாய்களைப் பார்ப்பதைப் போல இந்தக் கலாச்சாரத் தூதுவர்களை (வெள்ளையர்கள்) வரவேற்றனர்."

எனத் தொடங்குகிறது இந்த வரைவு அறிக்கை.

## II

அமெரிக்க அடிமைச் சூழலில் மட்டும்தான் இந்த நிலை என்பதல்ல. பொதுவாகவே வெள்ளை இனம் கருப்பர்களை, அதிலும் குறிப்பாக ஆப்ரிக்கக் கருப்பர்களை மனிதர்களாகவே கருதியதில்லை. இதற்கு வெள்ளை இனத்தின் மிகப் பெரிய மேதைகளும், சிந்தனையாளர்களும், அறிவொளிப் பாரம்பரியத் தத்துவ ஞானிகளும்கூட விதி விலக்கல்ல. **சர் பிரான்சிஸ் பேகன்** தனது 'The New Organon' (1620) - இல் "அய்ரோப்பாவின் மிகவும் நாகரீகமான பகுதிகளைச் சேர்ந்த மனிதருக்கும் 'புதிய இந்தியா' வின் நாகரீகமற்ற காட்டுமிராண்டிகளுக்கும்" இடையிலான வித்தியாசம் பற்றிப் பேசினார். பேகனின் கருத்தாக்கத்தைப் பயன்படுத்திய பீட்டர் ஹேலின் (1631), "மனிதர்களுக்கே உரித்தான பகுத்தறியும் பண்பு (Reason) ஆப்ரிக்கக் கருப்பர்களுக்குக் கிடையாது" என எழுதி, கருப்பர்களை மனிதர்களுக்கும் கீழானவர்களாகக் காட்டினார். தேசீயப் பண்புகள் பற்றிய கட்டுரை ஒன்றில் **டேவிட் ஹ்யூம்** "வெள்ளையர்களைத் தவிர்த்த எல்லா மனித இனங்களும், அதிலும் குறிப்பாக நீக்ரோக்கள், இயற்கையிலேயே வெள்ளை இனத்திற்குக் கீழானவர்களாக இருப்பார்கள் என நான் அய்யுறுகின்றேன்" என்றார் (1753).

மிகவும் நவீனமான பின் நவீனத்துவச் சிந்தனைகளுக்கெல்லாம் ஊற்றுக் கண்ணாக இருக்கிற **இம்மானுவல் கான்ட்** கருப்பு மற்றும் வெள்ளை இனங்களுக்கிடையேயான வேறுபாடு இயற்கையானது என்றார். அவருடைய வாசகமொன்று:

"...பாதர் லபாட் சொன்ன செய்தி இது. நீக்ரோ தச்சர் ஒருவர் தனது மனைவியரைக் கொடுமைப்படுத்துவதை லபாட் கண்டித்தபோது அந்த நீக்ரோ சொன்னானாம்: "வெள்ளையர்கள் முட்டாள்கள். முதலில் பெண்டாட்டிகளை இஷ்டத்திற்கு விட்டு விட்டுப் பின்னால் அடங்கவில்லையே எனப் புகார் செய்வீர்கள்." ஒரு வேளை நாம் யோசித்துப் பார்ப்பதற்கு இந்த வாசகங்களில் சிறிதளவு உண்மை இருக்கலாம். ஆனால் இந்தப் பயல் தலை முதல் கால் வரை **முழுக்க முழுக்க கருப்பு. அவன் சொன்னது முட்டாள் கூற்று** என்பதற்கு இதைவிட வேறென்ன நிருபணம் வேண்டும்?" (அழுத்தம் நம்முடையது).

ஆக தோலின் நிறம் கருப்பாக இருப்பதென்பது முட்டாள்தனத்தின் அறிகுறி என்பது **கான்ட்டின்** கருத்து. சில ஆண்டுகளுக்குப் பின்பு **ஹெகல்** கருப்பர்களுக்கு வரலாறு கிடையாது என்றார். நமது எல்லாக் கருத்துக்களுக்குமான பிரபஞ்ச வியாபகத் தன்மை என்பதைக் கருப்பர்களின் இந்தப் பண்பைப் பொருத்த மட்டில் விட்டு விட வேண்டியதுதான் என்றார். உலகின் வரலாற்றுப் பகுதியாக ஆப்ரிக்காவைக் காணமுடியாது என்று முத்தாய்ப்பு வைத்தார். தனது முழுமை, மொத்தத்துவம் என்கிற கோட்பாட்டையே கருப்பர்கள் விசயத்தில் **ஹெகல்** தளர்த்த முயன்றது கவனிக்கத் தக்கது.

தத்துவச் சிந்தனையாளர்கள் தவிர புகழ்பெற்ற இலக்கியவாதிகளும் இதே போன்ற கருத்துடையவர்களாகவே இருந்தனர். **ராபர்ட் பென் வாரனின்** "Pondy woods" -இல் ஒரு வசனம் வரும்: "நீக்ரோவே, உன் இனம் தத்துவமில்லாததடா". 1920-ல் **க்ளாட் மெக்கே** யின் கவிதைகளைப் பற்றி எழுத வரும்போது அய்.ஏ. ரிச்சர்ட்ஸ், "இந்த ஆசிரியர் ஒரு சுத்தமான நீக்ரோ இரத்தம் பாய்கிறவர்" எனவும் "கருப்பர்கள் கவிதையில் வெற்றி அடைந்ததற்கான முதல் எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது" எனவும் குறிப்பிட்டிருந்தார். **மெக்கேயின்** மற்றொரு நூலைப் பற்றி எழுத வந்த அமெரிக்க மார்க்சிஸ்டான **மாக்ஸ் ஈஸ்ட்மான்**உம் "நீக்ரோ ரத்தம் பாய்கிறவர்" என **மெக்கே** பற்றி எழுதியது இங்கே குறிப்பிடத் தக்கது. கருப்புக் கவிதைகள் பற்றிய **லூயிஸ் சிம்சனின்** கருத்துக்கள், கருப்பர் கதையாடல்கள் பற்றிய **இர்விங் ஹோவின்** சிந்தனைகள், கருப்பர் இசையான 'ஜாஸ்' பற்றி சமூக உளவியல் விமர்சனம் என்கிற பெயரில் நமக்கு முந்திய தலைமுறையில் மிக முக்கிய சிந்தனையாளர்களில் ஒருவரான **தியேடர் அடர்னோவின்** பொருளற்ற விமர்சனங்கள்..... என இனவாத அடிப்படையில் வழுக்கி விழுந்த சிந்தனையாளர்களின் பட்டியலொன்றை நாம் நீட்டிக் கொண்டே போகலாம்.

## III

அறிவுலகில் கோலாச்சிய இந்த இனவெறித்தன்மை கருப்பர்களிடமிருந்து இரு விதமான எதிர் வினைகளை உருவாக்கியது. அறிவுலகில் நன்கு தெரிந்த மேற்படி கோட்பாட்டாளர்கள் அனைவருமே இப்படி இனவெறி நோக்கில் தங்கள் ஆக்கங்களை அணுகியதென்பது கருப்பு எழுத்தாளர்கள் மத்தியில் கோட்பாட்டுருவாக்கத்தின் மீதே ஒரு வெறுப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவாக ஆப்ரோ - அமெரிக்கப் பாரம்பரியத்தில் ஒரு வகையான கோட்பாட்டு எதிர்ப்புத் தன்மை உருவாகியது. கோட்பாடுகள் அனைத்தையுமே அடிமைத்தனத்தை நியாயப்படுத்தவும் கருப்பர்கள் மீதான அதிகாரத்தை உறுதிப்படுத்தவும் பயன்பட்டதன் விளைவு இது.

எனினும் கருப்புச் சிந்தனையாளர்கள் இத்தகைய அறிவுலகின் இனவெறிக்கு அவ்வப்போது பதிலடி

படிப்பகம்

www.padippakam.com



கொடுத்தனர். ஏராளமான மாற்று விமர்சனங்களை அவர்கள் முன் வைத்தனர். கருப்பு விமர்சனம் என்பதை இனவெறிக்கு எதிரான போரின் ஓர் அங்கமாக ஆக்குவதென்பது முதற்கட்ட கருப்பு விமர்சகர்களின் நோக்கமாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வந்த பல விமர்சனங்களை இதற்குச் சான்றாகச் சுட்டிக் காட்டலாம். உருவம்ஷ்உள்ளடக்கம் என்கிற கருத்தாக்கத்தை ஏற்றுக் கொண்ட கருப்பு விமர்சகர்கள் உருவத்தைக் காட்டிலும் உள்ளடக்கம் முக்கியமானது என்று கருதினர். பிரதிகள் அனைத்தும் உள்ளடக்கத்தின் அடிப்படையிலேயே அலசி ஆராயப்பட்டன. இலக்கிய வடிவம் என்பது முக்கியமானதல்ல கருப்பு அனுபவத்தால் அவை நிரப்பப்பட்டிருந்தால் போதும் என்கிற சிந்தனை மிகுந்திருந்தது. உள்ளதை உள்ளபடியே பிரதிபலிப்பதே கருப்பு அனுபவம் எனவும் நம்பப்பட்டது. ரிச்சர்ட் ரைட் போன்ற மார்க்சிஸ்டுகள் இத்தகைய சிந்தனைக்கு அதிக அழுத்தம் கொடுத்தனர்.

எனினும் கருப்பு அனுபவம் என்பது மறைபொருள் மற்றும் உருவக நோக்கில் சொல்லப்படும்போதே இலக்கியமாகிறது என்கிற நோக்கை ரால்ப் எல்லிசன் போன்ற நவீனத்துவ எழுத்தாளர்கள் முன் வைத்து இயங்கினர். கருப்பு இசை குறித்து இங்கே கொஞ்சம் சொல்லியாக வேண்டும். உருவம்xஉள்ளடக்கம் என்கிற முரண் கருப்பு இசைஞர்களிடம் பொருளற்றுப் போனது. இத் தருணத்தில் வெளிவந்த ஸ்டீபன் ஹென்டர்சன் னின் "புதிய கருப்புக் கவிதையைப் புரிந்து கொள்ளுதல்" என்னும் நூல் தான் முதன் முதலில் உள்ளடக்க ஆய்விலிருந்து விலகி ஓரளவு கவிதையின் உருவகத் தன்மையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு விமர்சனம் செய்யப் புகுந்த முதல் நூல் எனலாம். இந்த வகையில் இந்நூல் முதன் முதலாகக் கருப்புக் கவிதை வெளி ஒன்றைக் கட்டமைக்க முற்பட்டது. கருப்புக் கவிதைகளின் தனித்துவமான அமைப்பையும் ஹென்டர்சன் சுட்டிக் காட்டினார். இந்தத் தனித்துவத்தைப் புரிந்து கொள்ளாத விமர்சகர்கள் குறிப்பாக வெள்ளை விமர்சகர்கள் கருப்பு இலக்கியங்களைத் தவறாக அணுகியுள்ளனர் என்கிற குற்றச் சாட்டையும் அவர் முன் வைத்தார். கருப்புப் பேச்சு, கருப்பு இசை ஆகியவற்றிலிருந்து கருப்பு இலக்கிய அமைப்பு வடிவம் பெறுகிறது என்று சொன்ன ஹென்டர்சன், மொழியின் லயம், உருவகம், சொல்லமைப்பு ஆகியவற்றின் பால் கவனத்தை ஈர்த்தார். எனினும் 'பேச்சு' பற்றின ஹென்டர்சனின் புரிதல் மொழியியலின் அடிப்படையில் அமையவில்லை. பேச்சு சுட்டுகிற பொருளின் குறியீட்டுத் தன்மையிலான உறவை அவர் நுணுகிச் சொல்லவில்லை. எனினும் கருப்பு இலக்கியத்தின் தனித்துவத்தின் பாலும் மொழியின் உருவகத் தன்மையின் பாலும் கவனத்தை ஈர்த்த வகையில் ஹென்டர்சனின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாக உள்ளது.

குறிப்பிட்டுச் சொல்லத்தக்க இன்னும் இரு முக்கிய கருப்பு இலக்கிய விமர்சகர்கள் ஹவுஸ்டன் ஏ. பேக்கர் மற்றும் அடிசன் கேல். மேற்கத்திய வெள்ளை மதிப்பீடுகள், பண்பாடு, இலக்கியம் ஆகிய அனைத்தையும் மறுக்கும் அடையாளமாகவும் அளவுகோலாகவும் கருப்பு இலக்கியத்தை பேக்கர் வரையறுக்கிறார். எந்த அளவிற்கு ஒரு பிரதி வெள்ளை மதிப்பீடுகளை மறுதலிக்கிறதோ அந்த அளவிற்கு அது கருப்பாக விளங்குகிறது என்றார் பேக்கர். கருப்பு அமெரிக்க நாட்டுப்புற வழக்கிலும் இதைக் காணமுடியும் என்றார் பேக்கர். கருப்பு அமெரிக்க இலக்கியம் வெள்ளை இலக்கியத்திலிருந்து வேறுபடும் புள்ளிகளாக மூன்றை அவர் சுட்டிக் காட்டினார். முதலில் கருப்பு இலக்கியம் அதன் வாய்மொழித் தன்மையாலும், இசைத் தன்மையாலும் தனித்துவமானதாக அமைகிறது. அடுத்து கருப்பு இலக்கியத்தின் கூட்டுத்துவத் தன்மை அதன் தனிப் பண்பாக விளங்குகிறது. இறுதியாக கருப்பு அமெரிக்க இலக்கியத்தின் சிறப்புப் பண்பு அதன் மறுதலிக்கும் தன்மை என்றார் பேக்கர்.

பேக்கர் குறிப்பிடும் மறுப்பு என்பது வெறுமனே இலக்கியச் கருவின் (theme) அடிப்படையிலானதாக உள்ளது என்கிற விமர்சனம் அவர் மீது வைக்கப்படுகிறது. இலக்கியம் சுட்டும் பொருள் என்கிற அடிப்படையில்தான் பேக்கரின் கருத்தாக்கம் இயங்குகிறதே ஒழிய குறிப்பான் (signifier) என்கிற மட்டத்திற்கு மறுதலிப்பு என்பதை அவர் கொண்டு செல்லவில்லை. இத்தகைய விமர்சனங்கள் மொழியையும் இலக்கியத்தையும் வெறுமனே "கருப்புத் தன்மை" (Blackness) யின் எதிரொளிப்பாய்ப் பார்க்கிறது. 'கருப்பு' என்பதை ஒரு குறியீடாக, உருவகமாகப் பார்க்காமல் அதை ஒரு பொருளாகப் பார்க்கிறது. மீண்டும் இது வடிவத்தைக் காட்டிலும் உள்ளுறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் தவறிற்கு இட்டுச் செல்கிறது. 'கருப்பு' என்பதை ஒரு பொருளாக, நிகழ்வாக, முழுமையாக, சாராம்சமாகப் பார்க்காமல் அதை ஒரு தனித்துவமான அழகியலை உருவாக்கும் உறவுகளின் வலைப்பின்னலாக, குறிகளின் அமைப்பாகப் பார்க்க வேண்டி உள்ளது.

இலக்கியப் பிரதி என்பது மொழியாலான ஒரு நிகழ்வு நெருக்கமான பிரதியியல் ஆய்வுகள் மூலமே அதனை நாம் அணுக வேண்டும். கருப்பர்கள் மீதான கொடுமைகளை விவரிப்பதன் மூலமாகவோ, கருப்பர்களின் எதிர்ப்பைச் சித்தரிப்பதனால் மட்டுமோ ஒரு பிரதியைக் கருப்பு இலக்கியமாகக் கருத முடியாது. நாம் உடனடியாகக் கருப்பு மொழியின் உருவகத் தன்மையின் பாலும், கருப்புக் கதையாடல் வடிவங்களின் தன்மையின் மீதும், ஆப்ரோ அமெரிக்க இலக்கிய விமர்சனக் கோட்பாட்டின் வரலாற்றின் பாலும், உருவம்ஷ்உள்ளடக்கம் என்கிற உறவின் மீதும் குறிக்கும் அது சுட்டும் பொருளுக்குமான உறவின் தன்னிச்சைத் தன்மையின் பாலும் நம் கவனத்தைத் திருப்ப வேண்டும் என்கிற கருத்தை முன் வைக்கிறார் இன்றைய உலகின் முக்கிய இலக்கிய விமர்சகர்களில் ஒருவரான ஹென்றி லூயிஸ் கேட்ஸ்.

## IV

கருப்பு இலக்கியத்திற்கான ஒரு தனி இலக்கிய புனிதத் தொகுதி ஒன்றை உருவாக்க வேண்டும் என வாதிட்டு மிகச் சிறந்த முறையில் அதனை ஆக்கியும் உள்ளவ

படிப்பகம்

www.padippakam.com



(Norton Anthology) ஹென்றி லூயிஸ் கேட்ஸ் வெள்ளை இலக்கியங்களுக்கான கோட்பாடு கருப்பு இலக்கியங்களை விளக்க முடியாது. கருப்புப் பிரதிகளுக்கென தனி இலக்கியக் கோட்பாட்டை உருவாக்க வேண்டுமென்பது அவரது இன்னொரு முன் வைப்பு.

சம கால இலக்கியக் கோட்பாட்டிற்கும் ஆப்ரோ - அமெரிக்க இலக்கிய வளர்ச்சிக்குமிடையேயான உறவில் நான்கு முக்கிய கணங்களை கேட்ஸ் சுட்டிக் காட்டுகிறார். அவை:

(அ) திருப்பிச் சொல்லுதல/பாவனை செய்தல் (Repetition and Imitation)

(ஆ) கருப்பு அழகியல் (Black Aesthetics)

(இ) திருப்பிச் செய்தலும் வித்தியாசமும் (Repetition & Difference)

(ஈ) தொகுப்பிணைவு (Synthesis)

**திருப்பிச் சொல்லுதல் மற்றும் பாவனை செய்தல்** என்பது அய்ரோப்பிய/அமெரிக்க இலக்கிய விமர்சகர்கள் முன் வைக்கிற கோட்பாடுகளையும் அணுகல் முறைகளையும் அப்படியே ஏற்றுக் கொள்ளுதல். ஆனால் நடைமுறையில் தனித்துவமிக்க கருப்பு இலக்கியங்களை இவற்றைக் கொண்டு அணுகுவது எளிதாய் இருப்பதில்லை. எல்லா இலக்கியக் கோட்பாடுகளும் அணுகல் முறைகளும் குறிப்பான இலக்கியப் பிரதிகளுக்காக உருவாக்கப்பட்டவைதான் என்கிற உண்மையை நாம் முதலில் மனம்கொள்ளவேண்டும். குறிப்பான ஒரு இலக்கியப் பிரதிக்காக உருவாக்கப்பட்ட ஒரு குறிப்பான இலக்கியக் கோட்பாட்டை முற்றிலும் அந்தச் சூழலிலிருந்து வேறுபட்ட, இன்னொரு இலக்கியப் பிரதிக்குப் பயன்படுத்தும்போது நிச்சயம் அது அந்த விமர்சகரைப் பிரச்சினைக்குள்ளாக்கும். **சாமுவேல் ஜான்சன்** ஒரு முறை சொன்னது போல நமக்குச் சம்பந்தமில்லாத ஒன்றை காப்பியடிக்க முயலும்போதுதான் நாம் கேலிக்குரியவர்களாக மாறுகிறோம். எனவே கருப்பு இலக்கியத்தின் தனித்துவத்தை மனங்கொண்டு அதனை அணுகுவதற்கான தனித்துவமான அணுகல்முறையை, விமர்சனக் கோட்பாட்டை நாம் உருவாக்க வேண்டியிருக்கிறது.

**கருப்பு அழகியல்** என்பது இதற்கு அதாவது வெள்ளை இலக்கியத்தைப் பாவனை செய்தல் என்பதற்கு நேரெதிரானது. கருப்பு அரசியல் இயக்கத்தின் ஓரங்கமாக 1960களின் பிற்பகுதியில் இது உருவாகியது. **பேக்கர், கேல், ஹென்டர்சன்** முதலியோர் கருப்பு அழகியில் நோக்கில் முன் வைத்த சிந்தனைகளையும் அவற்றின் மீதான விமர்சனங்களையும் ஏற்கனவே பார்த்தோம்.

**திருப்பிச் செய்தலும் வித்தியாசமும்** என்பது சமகால விமர்சனமுறையைக் கருப்புப் பிரதிகளின் மீது பயன்படுத்தும் போதே இந்த விமர்சன முறைகளின் போதாமையைச் சுட்டிக்காட்டி அவற்றை விமர்சிப்பது தான் என்கிறார் **கேட்ஸ்.** பின் அமைப்பியல் உள்ளிட்ட கோட்பாடுகளை இப்படி அணுக முடியும் என்பது அவரது கருத்து.

இறுதியாக கேட்ஸ் சுட்டிக் காட்டும் **தொகுப்பிணைவு** (Synthesis) என்பது பல்வேறு சமகாலக் கோட்பாடுகளையும் கருப்புப் பிரதிகளின் மீது பாவித்து குறிப்பான கருப்புப் பிரதிகளின் தனித்துவங்களின் அடிப்படையில் சமகாலக் கோட்பாடுகளை கருப்புப் பிரதிகளுக்குத் தகவமைப்பது ஆகும். **வோலே சோயிங்கா** இதனை ஆக்க இலக்கியத் துறையில் நிகழ்த்திக் காட்டினார். ஆப்ரிக்க மற்றும் அய்ரோப்பிய துன்பியல் வடிவங்களைத் தொகுத்திணைத்து முற்றிலும் புதிய துன்பியல் கருத்தாக்கம் ஒன்றை அவர் வரையறுத்தார். கருப்பு இசைகளான 'புளூஸ்', 'ஜாஸ்' முதலியவை இப்படித்தான் உருவாயின. நவீன மேற்கத்திய இசை வடிவங்கள் அனைத்தையும் உள் வாங்கி அவற்றில் பொருத்தமான அம்சங்களை பொருத்தமான இடத்தில் பொருத்தி கருப்பு இசை வடிவங்கள் முற்றிலும் புதிதாய், தனித்துவமிக்கதாய் உருவாக்கப்படுகின்றன. புகழ்பெற்ற 'புளூஸ்' இசைஞர் **ஸ்கிப் ஜேம்ஸ்** ஒரு முறை சொன்னார்: "நான் மற்ற 'கிடார்' இசைஞர்களிடமிருந்து சில அம்சங்களை எடுத்துக் கொள்கிறேன். ஆனால் நான் அவர்களைக் காப்பி அடிப்பதில்லை. என்னிடம் வரும்போது அவை **ஸ்கிப் ஜேம்சின்** இசையாகப் புதிய உருவம் எடுக்கிறது. நான் மற்றவர்களின் பாடலைப் பாடுவதில்லை. நான் மற்றவர்களின் குரலை ஒலிப்பதில்லை என்னால் அது முடியாது."

நாம் பயன்படுத்தும் விமர்சன மொழியும் கருப்பு இலக்கியத்தின் தனித்துவமும் ஒன்றை ஒன்று வலுவூட்ட வேண்டும். மாறாக மேற்கத்திய விமர்சன மரபை விமர்சனமின்றி அப்படியே ஏற்றுக்கொள்வதென்பது புதிய காலனியத்திற்கே இட்டுச் செல்லும் என முடிக்கிறார் **கேட்ஸ்.**

## V

கருப்பு இலக்கியத்தின் தனித்துவங்கள் சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டுதல் பொருத்தமாக இருக்கும். **சோரா நீல் ஹர்ஸ்டன்** தனது முக்கிய பிரகடனமாகிய "நீக்ரோ வெளிப்பாட்டின் பண்புகள்" என்னும் கட்டுரையில் பல தனித்துவங்களைச் சுட்டிக் காட்டுகிறார். முதலில் கருப்பர்களின் சொற்கள் ஒவ்வொன்றும் 'செயலூக்கச் சொற்கள்' (action words) என்கிறார் **சோரா.** தங்களுக்குக் கையளிக்கப்பட்ட ஆங்கில மொழியை அவர்கள் காட்சி ரூபமாக உள்வாங்குகின்றனர். எனவே அவர்களின் மொழி மிகவும் உருவகத் தன்மை மிக்கதாகவும் அலங்காரப் படுத்தப்பட்டதாகவும் அமைகிறது. மாறாக வெள்ளை ஆங்கிலம் என்பது கருத்துருவமாக்கப்பட்டதாக (abstract) உள்ளது.

ஒரு சொல் செயலின் மூலமாக விளக்கப்படுவதால் அது செயலூக்கச் சொல்லாக மாறுகிறது. "உட்காரும் நாற்காலி", "வெட்டும் கத்தி", "சமைக்கும் பானை" என்றுதான் சொல்வார்களே ஒழிய 'நாற்காலி', 'கத்தி', 'பானை' என்பதோடு நிறுத்திக் கொள்வதில்லை. மிகவும் உருவக வகைப்பட்டதாக அவர்களின் மொழி அமைந்துள்ளதற்கு எடுத்துக்காட்டாக "விம்மும் இதயத்தாள்", "நான் உன்னை வெங்காயம் நாறுவது மாதிரி அடிப்பேன்" என்பனவற்றைச் சொல்லலாம்.

படிப்பகம்

www.padippakam.com



High - tall, Low - down, Hot boiling, Kill - dead முதலியன அவர்கள் பயன்படுத்தும் இரட்டை விவரண அலங்காரச் சொற்கள். இது தவிர பெயர்ச் சொற்களை வினைச் சொற்களாகப் பயன்படுத்துதல் (Funeralise, Uglying), வினைகளைப் பெயர்களாகப் பயன்படுத்துதல் (She won't take a listen) முதலியன அவர்களின்சொல் அலங்கார விருப்பிற்கு எடுத்துக்காட்டுங்கள்.

எதனையும் நேரடியாகச் சொல்லாமல் சாய்த்துச் சொல்லுதல் – சுவற்றில் படங்களைக் கூடச் சாய்த்துத்தான் மாட்டுவார்கள் சமச் சீரற்ற (asymmetry) முறையில் முன் வைத்தல் என்பன அவர்களின் எழுத்துக்களின் பண்புகளாக அமைவதையும் சோரா சுட்டிக் காட்டுவார். பயங்கரமான முக மூடிகளுடன் அழுத்தம் திருத்தமான உடல் நெளிவுகளுடன் அமைகிறது அவர்களின் நடனம். ஒரு வெள்ளை நடனமாடி முழுமையாகப் பாவனைகளை வெளிப்படுத்துகிறான். கருப்பரோ முழுமையாக வெளிப்படுத்துவதில்லை. ஆனால் அதே சமயத்தில் அவரது அசைவில் பார்வையாளர் ஈர்க்கப்பட்டு எஞ்சியுள்ள வெளிப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு வாய்ப்பளிக்கப் படுகிறார். நீக்ரோ நாட்டுப்புறக் கதைகள் என்பன எப்போதோ நிகிழ்ந்த ஒன்றல்ல. அது இப்போதும் நிகழ்ந்து கொண்டிருப்பது. கடவுளும் சாத்தானும் ராக்பெல்லரும் ஃபோர்டும் அதில் பாத்திரங்களாக உலவுவார்கள். போலச் செய்தல் (mimicry) என்பது அவர்களது கலை இலக்கிய வெளிப்பாடுகளில் ஒரு பிரிக்க இயலாத அம்சம். தாழ்வு மனப்பான்மையின் விளைவாக அதனை இவர்கள் செய்வதில்லை. மாறாக அதனை அவர்கள் ஒரு கலையாக, போலச் செய்வதிலுள்ள மகிழ்ச்சிக்காகவே செய்கின்றனர். மனிதர்களைப் போல் மட்டுமல்ல மிருகங்களைப் போலவும் போலச் செய்வது அவர்களின் வழக்கமாக இருப்பதை சோரா சுட்டிக் காட்டுவார்.

முகமூடிகளை அணிவது என்பது நீக்ரோ கலைகளில் பிரிக்க இயலாத அம்சமாக இருப்பதன் பால் கவனத்தை ஈர்க்கிறார் கேட்ஸ். நிகழ்த்துபவர்கள் பார்வையாளர்கள் அனைவரும் இணைந்த சமூகத்தின் உளவியல் ஒருமையை முகமூடி உருவாக்குகிறது. தனித் தனியான மக்கள் துகள்கள் ஒரு திரளாக ஒரே 'கோரஸ்' குழுவாக இணைவதற்கு முகமூடி பயன்படுகிறது. புறத்திலிருந்து திணிக்கப்பட்ட ஒழுங்குகள், விதிகளுக்கு அப்பாற்பட்ட உள் ஒருமையை அது படைக்கிறது. முகமூடியை அணிந்தவுடன் முகத்தின் அசைவு நிற்கிறது. அதே சமயத்தில் உடலின் அசைவோடு முகமூடியே சேர்ந்து அசைகிறது. ஒரே சமயத்தில் இயக்கம்xஇயக்கமின்மை, ஒழுங்குxகுழப்பம் ஆகியவற்றுக்கிடையேயான இயங்கியல் ஒருமையை முகமூடி வெளிப்படுத்துகிறது.

கருப்பர்களின் உருவக வகைப்பட்ட மொழியே ஒருவகையான முகமூடி அணிதல்தான் என்கிறார் கேட்ஸ். கருப்பு ஆங்கிலம் வெள்ளை ஆங்கிலத்திலிருந்து வேறுபட்டதாக உள்ளது. சொல்லுக்கும் பொருளுக்கும் இடையில் கருப்பு ஆங்கிலத்தின் உருவகம் முகமூடியாய் அமைந்து விடுகிறது. உருவகங்களின் மூலமாகவே இங்கே கருத்துப் பரிமாற்றம் நிகழ்கிறது. மொழி என்பதே ஒரு சிறு குழுவிற்கான அந்தரங்கமான பரிமாற்றுச் சாதனமாகத்தா இருக்கிறது. நாம் எல்லோரும் தமிழ் பேசினாலும் பல்வேறு குழுக்களுக்கு இடையில் சங்கேதத் தன்மைமிக்க பல்வேறு தமிழ்கள் பேசப்படுகின்றன. அதனால்தான் குமுதம் வாசிக்கும் ஒவ்வொரு நிறப்பிரிகை புரியாமல் போகிறது. கட்ட நூற்களைப் படித்துப் பழக்கமில்லாத ஒருவருக்கு லெனின் நூற்கள் அந்நியமாகப் படுகின்றது. எனவே மொழி வெளிப்படுத்துவதைக்காட்டிலும் மறைப்பது அதிகம். எனவே சங்கேத மொழி (அல்லது வட்டார வழக்கு) அந்தக் குறிப்பா குழுவிற்குள் ஒருமையை உருவாக்குகிறது. வட்டார வழக்கு எனும் முகமூடியை அணிந்து கொண்டவுடன் வட்டா உறுப்பினர்களுக்குள் ஒரு ஒருமை ஏற்படுகிறது.

இந்தப் பின்னணியில் கருப்பர்களின் தனித்துவமிக் மொழி, முகமூடி அணிதல் உட்பட்ட கலை இலக்கி வெளிப்பாடுகளை நாம் அணுக வேண்டும்.

கருப்பு மொழியின் குறியீட்டுத் தன்மை வெள்ளை மொழியின் குறியீட்டுத் தன்மையிலிருந்து வேறுபட் இருக்கிறது. ஒன்றைச் சொல்லும் போதே வேறொன்ன அர்த்தப்படுத்துவதாக (trope) அம்மொழி அமைகிற. மேலோட்டமாகப் பார்க்கும்போது பணிந்து ஏற்பது அமையும் மொழி இன்னொரு தளத்தில் இருக்கு நிலையைத் தலைகீழாகக் கவிழ்ப்பதாக அமைகிறது. ஓ மறைபொருளான சொல்லாடல் அந்தப் பேச்சு மொழியி கீழ்த் தளத்தில் இயங்குகிறது. ஒரு வெள்ளை மனத்திற் அருவருப்பாகப் படக்கூடிய ஒன்று கருப்பு மனத்திற் நகைச்சுவையாகத் தொனிக்கலாம். ஏனெனில் இரண்டி குறியீட்டு விதிகளும் வேறு வேறாய் அமைகின்றன.

கருப்பு மொழியின் இத்தகைய தனித்துவத்தை முத ல் அடையாளம் காணவேண்டும்.

அதற்குரிய சமிக்ஞை – நீக்க முறைகளை உருவா வேண்டும். பிறமொழிக்கான சமிக்ஞை – நீக்கக் (de-codi கருவிகள் இங்கே பயன்படாது என்பதைப் புரிந் கொள்ளவேண்டும்.

எல்லா இலக்கியக் கோட்பாடுகளும், அழகிய அணுகல் முறைகளும் குறிப்பான பிரதிகளுக்க உருவாக்கப்பட்டவை தான். ஆனால் அவற்றை எல்ல பிரதிகளுக்குமான பொது அணுகல் முறையாக மு வைப்பது அவர்களின் தந்திரம். அவர்களின் அதிகாரத்த நிலைநிறுத்திக் கொள்ள அவர்கள் செய்யும் சதி. இன புரிந்து கொண்டு கருப்புப் பிரதிகளுக்கான தனித்துவம அணுகல் முறைகளை உருவாக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் கருப்பு இலக்கியத் தொகு கருப்பு இலக்கியக் கோட்பாடு முதலியவற்றை உருவா வேண்டும்.

- என்று முனைகிறது ஆப்ரோ - அமெரிக் கருப்புச் சமூகம்.

www.padippakam.com



***பின்னிணைப்பு:***

## நமது சூழலை ஒட்டிச் சில குறிப்புகள்:

1. கருப்பர்களின் முதல் இலக்கிய முயற்சிகள் சந்தித்த அவமானங்கள் நம் உள்ளத்தை நெருடுகின்றன. வெள்ளையர்களிடம் சான்றிதழ் வாங்கி வெளியிட வேண்டிய அவலம் நெஞ்சை உறுத்துகிறது. எனினும் வேறு சில கேள்விகள் இதனை ஒட்டி எழுகின்றன. கருப்பு இலக்கியங்கள் இருநூறு ஆண்டுகளாக வெளி வந்து கொண்டு இருக்கின்றன. கருப்பர்கள் அடிமைகளாக வந்து நானூறு ஆண்டுகள் ஆயிற்றெனில் வந்த இருநூறு ஆண்டுகளில் அவர்களால் எழுத முடிந்திருக்கிறது, நூல் வெளியிட முடிந்திருக்கிறது. இங்கே இரண்டாயிரமாண்டு காலமாக தலித்கள் எழுத முடியாமற் போனதற்கும் இன்று வரை நூல் வெளியீட்டில் சிரமப் படுவதற்கும் என்ன காரணம்? பிலிஸ் வீட்லி அடிமைதான். இருந்தும் வெள்ளை எசமானின் வீட்டில் அடிமை உடையோடு மேசையில் அமர்ந்து எழுதுவது போன்ற படம் ஒன்று கிடைக்கிறதே. இது இங்கே சாத்தியமா? பிலிசின் கவிதைகளை அவர்கள் இலக்கியமாகக் காணாவிட்டாலும் அடுத்த ஏழு ஆண்டுகளில் அய்ந்து பதிப்புகள் வந்துள்ளனவே. வாசித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் வெள்ளையரல்லவா. இங்கு இது சாத்தியமா? சான்றுக் கையொப்பம் பெற்று நூல் வெளியிடுவது அவமானம்தான். இருந்தும் பதினெட்டு வெள்ளையர்கள் - ஒரு கவர்னர் உட்பட - கையொப்பமிட்டுள்ளனரே அதே 1773 கால கட்டத்தில் இது இங்கே சாத்தியமாயிருக்குமா? ஒரு சாதகமான அரசியல் சூழலில் சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கே தலித் இலக்கியம் வந்த போதே எத்தனை சலசலப்புகள்! இந்த வேறுபாட்டை என்னென்பது? ஒரு வேளை இந்த அடிப்படைகளில் தான் மேற்கத்திய சனநாயகத்தை அம்பேத்கர் வரவேற்றாரா?

2. அங்கே இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு கேட்கப்பட்ட கேள்விகள் இங்கே இன்னும்கூடக் கேட்கப்படுவது கவனிக்கத்தக்கது.

எ.டு. 1. நீக்ரோவே உன் இனம் தத்துவமில்லாததடா!

2. வெறும் செய்திகளைத்தான் நீங்கள் சொல்கிறீர்கள் அவை கவிதையாவதில்லை.

3. இம்மானுவல் காண்ட் டின் கூற்று பலருக்கு அதிர்ச்சியளிக்கும். 'போஸ்ட் மார்னிஸ்டுகளின் குருவை அடையாளம் காண்பீர்' என ஒரு சிலர் இதைக் கட்டச் செய்தியாக வெளியிடலாம். மிகவும் அதிசயிக்கத் தக்க சிந்தனையை ஒரு தளத்தில் வெளிப்படுத்திய காண்ட் இன்னொரு தளத்தில் இன வெறியராகவும் உள்ளார் என்பதுதான் இதில் கவனிக்கப்பட வேண்டிய அம்சம். முழுமையாக யாரும் எல்லா அம்சங்களிலும் பெற்றுக் கொள்ளத் தக்கவராக இருக்க வேண்டுமென்பதில்லை. இதை மனர வழிபாட்டுணர்வை நாம் விட்டொழிப்பது அவசியம்.

4. கருப்பு மொழியின் தனித்துவம், அதன் தனித்தன்மை மிக்க குறியீட்டுத் தன்மை, முகமூடிகள் பற்றிய செய்தி முதலியன புரியவில்லை என நினைக்க வேண்டாம். புழக்கத்திலுள்ள நமக்கருகாமையிலுள்ள மொழிக் கூற்றுகளைக் கவனித்து அசை போடுங்கள். இது எளிதாய் விளங்கும். பாமாவின் 'சங்கதி'யில் 'பீரூமுக்'குப் போகாமல் வெளியே மலங்கழித்த சிறுமி அடி வாங்கிய கதையை அவளே சொல்லும் பகுதியை ஒரு முறை வாசித்துப் பாருங்கள். அந்தப் பெண் சொல்லி முடிக்கும் போது சுற்றி இருக்கும் எல்லோரும் சிரிக்கிறார்களே. உங்களால் சிரிக்க முடிகிறதா இல்லை அருவருப்படைகிறீர்களா? இந்தக் கேள்வியின் பதில் நீங்கள் தலித்தா இல்லையா என்பதைப் பொருத்ததல்லவா? கிராமங்களில் தலித்களுக்கும் உயர் சாதியினருக்குமிடையேயான உரையாடல்களைக் கவனியுங்கள். தலித் மொழி நிறைய trope களுடன் இருப்பதை விளங்கலாம்.

5. அமெரிக்கக் கருப்பு இலக்கிய வரலாற்று அனுபவங்களை நாம் இங்கே அப்படியே பொருத்திப் பார்க்க முடியாது. ஒரு இருநூறு ஆண்டு கால வளமான எழுத்துத் தொகுப்பு ஒன்று அவர்களிடம் உள்ளது. அந்த அடிப்படையில் தனித்துவமிக்க இலக்கியக் கோட்பாடுகளை அவர்கள் அங்கே உருவாக்க முடியும். இங்கே விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிற்குக் கூட தலித் ஆக்கங்கள் இல்லை. 'பொதுவான கோட்பாடே தலித் இலக்கியத்திற்கும் பொருந்தும்' என்கிற கூற்றிலுள்ள பொய்மையை நாம் முதலில் விட்டொழிப்பதற்கு ஆப்ரிக்க - அமெரிக்க அனுபவங்கள் நமக்குப் பயன்படலாம்.

6. பெண்ணிய நோக்கில் கேட்ஸ் முதலானோரின் கருத்துக்கள் விமர்சிக்கப் படுகின்றன. அவற்றையும் நாம் கணக்கிலெடுப்பது அவசியம். கருப்புxவெள்ளை எனப் பிரிப்பதில் அமையக்கூடிய சாராம்சவாதம், கருப்பு இலக்கியப் புனிதத் தொகுப்பு உருவாக்கும் முயற்சியில் விளையக்கூடிய அதிகாரச் செயற்பாடு முதலிய எச்சரிக்கைகள் நமக்குத் தேவை.

7. இந்தக் கட்டுரைக்கான பல ஆதாரங்கள் கீழ்க்கண்ட நூற்களிலிருந்து எடுக்கப்பட்டன.


Henry Louis Gates. Jr, Figures in Black, OUP, 1989

Houston A. Baker & Patricia Redmond, Afro American Literary Study in the 1990's, University of Chicago, 1989.


மேலும் பயில விரும்புவோருக்குச் சில நூற்கள்.


H.A. Baker, The Journey Back, University of Chicago, 1980

H.L. Gates, The Signifying monkey, OUP, 1989.

H.A. Baker, Blues, Ideology & Afro-American Literature, University of Chicago, 1984.

H.A. Baker, Modernism & Harlem Renaissance, University of Chicago, 1989.

Ralph Cohen, The Future of Literary Theory, Routledge, 1989.

H.L. Gates & Nellie Y. Mckay, The Norton Anthology of African American Literature, W.W. Norton & Company, 1997.


படிப்பகம்

www.padippakam.com



# கலாச்சாரமும் அரசியல் எழுச்சியும்

ஜேன் கேரீ

தமிழில் : நிறப்பிரிகை

***ஜேன் கேரீ:*** *இல்லினாய்சில் உள்ள நார்த் வெஸ்டர்ன் பல்கலைக் கழக சிறப்புப் பேராசிரியர். இக்கட்டுரை* Race and Class, July-Sep'93 *இதழிலிருந்து எடுக்கப்பட்டது. 1960 களின் எழுச்சியைப் பற்றி* ***அமில்கார் கப்ரால்*** *குறிப்பிடும்போது ஒடுக்குபவர்களைத் தூக்கி எறிய கலாச்சாரம் முக்கிய கருவியாக அன்று விளங்கியதையும் அது அரசியல், பொருளியல் மற்றும் இராணுவ வடிவங்களில் வெளிப்பட்டதையும் சுட்டிக் காட்டுவார். இன்கே கேரீ, 1960 களின் பிற்பகுதியில் அமெரிக்காவில் வெடித்தெழுந்த கருப்பர் புரட்சிகள் எத்தகைய கிளர்ச்சியையும் நம்பிக்கையையும் கருப்பர் மத்தியில் உருவாக்கியதென்பதை கருப்பர்கள் மத்தியில் கிளர்ந்தெழுந்த கவிதைக துணையோடு விளக்குகிறார்.*

நி.பி

**தங்களின் விதியை எதிர்த்து கோடிக்கணக்கினர் ஓசையற்ற கலகத்தில் இறங்கியுள்ளனர். இந்த மண்ணில் வதியும் மக்களின் வாழ்க்கையில் எத்தனை கலகங்கள் ஊற்றெடுக்கும் என எவரறிவார்?**

**விர்ஜீனியா உல்ஃப்.**

**கடவுள், நோவாவுக்கு வானவில்லை அளித்தார். எங்களுக்கு மழை போதும். அடுத்தமுறை நெருப்பைத் தாருங்கள்.**

***ஒரு அடிமைப் பாடல்.***

1960களின் பிற்பகுதியில் கருப்பு அரசியல் எழுச்சிகள் தோன்றிய டெட்ராய்ட், கிளீவ்லான்ட், நெவார்க், வாஷிங்டன் ஆகிய நகரங்களின் வீதிகளில் நடந்துகொண்டிருந்தேன். இந்த எழுச்சிகளை **"மார்ட்டின் லூதர் கிங் கலவரங்கள்"** என்றுதான் சொல்வார்கள். ஆனால் அமெரிக்காவெங்கும் பரவியுள்ள இனவெறி தொடருமானால் அமெரிக்க நகரங்களிலெங்கும் கலகங்கள் உருவாவதைத் தடுக்க முடியாது எனத்திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தது உண்மையில் **மால்கம் எக்ஸ்** தான். அவர் சொன்னது போலவே அரசியல் எழுச்சிகளும் கிளர்ந்தன.

"அடுத்த முறை நெருப்பு வேண்டும்" என்ற தனது கட்டுரையில் முன்னறிவிப்பாய்ச் சொல்லியிருந்தாரே **ஜேம்ஸ்.**

**பால்ட்வின்** அந்த நெருப்பு நான் நடந்து கொண்டிருந்த வீதிகளில் ஏற்கனவே எரிந்து அடங்கியிருந்தது. மாசுகளை எரித்துத் தூய்மைப் படுத்தியிருந்த அந்தத் தீ அமெரிக்க நகரங்களை அவற்றின் உடற்கூறுகள் வெளியே தெரியுமளவிற்கு அம்மணமாக்கியிருந்தது. குப்பையிற் பூத்த காட்டுப் பூக்களென அந்த அழுகல்களிலிருந்து **"தெருக்களின் பண்பாடு"** (Culture of streets) வெடித்துக் கிளம்பியிருந்தது. அமெரிக்காவின் நீதியற்ற, கொடூரமான வியட்னாம்போருக்கு எதிரான கருப்பு எழுச்சிகள் மற்றும் நாடு தழுவிய எதிர்ப்புகள் தோன்றியபோது அதன் பிரிக்க இயலாத ஓரங்கமாக பண்பாட்டுத் துறையில் ஒரு புத்தெழுச்சி அங்கே உருவாகியிருந்தது. கவிதைகள், பாடல்கள், நாடகங்கள், இசை ஆகியவற்றோடு அன்றாட "தெரு மொழி" (Language of the street) யை, புதிய ஆக்கத்திறனுள்ள சொற்கள், பிம்பங்கள், சந்தங்கள் ஆகியவற்றால் புதுப்பிப்பது என்பதாக அந்தக் கலாச்சாரப் புத்தெழுச்சி எழுந்தது. இந்த உலகம் தன்னை ஒவ்வொரு கணமும் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டிருப்பதாக இசுலாமியத் தத்துவம் சொல்கிறது. ஒடுக்குமுறை, கொடுமை, அநீதி, பேராசை ஆகியவற்றிற்கெதிரான எதிரெழுச்சிகள் என்பன எடுக்கப்பட்ட மக்களின் மூச்சுக் காற்றின் ஒரு இயல்பான கூறாக ஆகிவிடுகின்றன.

1960 களில் தோன்றிய நகர்ப்புறக் கருப்பு எழுச்சிகள் இனம், வர்க்கம், பால் முதலான பிரச்சினைகளைப் புதிய வெளிச்சத்தில் அலசின. கறுப்பு அதிகார இயக்கம், **மார்ட்டின் லூதர் கிங், மால்கம் எக்ஸ்** ஆகியோரின் மரணம், சிவில் உரிமைப் போராட்டம், பெண்ணுரிமை இயக்கம், வியட்நாம் போர் எதிர்ப்பு எழுச்சி ஆகியவற்றிற்கிடையேயான உள்ளார்ந்த உறவுகளை எல்லோரும் திட்டமிட்டுப் புறக்கணித்துக் கொண்டிருந்த போது இதனை வெளிக்கொணர்ந்த பணியையும் கருப்பு எழுச்சிகள்தான் நிறைவேற்றின. சுருக்கமாகச் சொல்வதெனில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நெருக்கடிக்குள்ளாகியிருந்தது. நாட்டுக்கு உள்ளும் வெளியிலும் உருவாகியிருந்த சமூக, அரசியல், பொருளியல் மற்றும் இனப் பிரச்சினைகளை அடக்குமுறை மூலம் தீர்ப்பதென்கிற, ஒரு குடியேற்றச் சமூகத்திற்கே உரித்தான நடைமுறைகளை, அது மேற்கொண்டிருந்தது.

இந்தத் தருணத்தில்தான் நான் பல்கலைக்கழகப் பணியில் சேர்ந்தேன். இந்தச் சூழலில்தான் புனிதங்களைப் போட்டுடைக்கும் கலக உணர்வுடைய மாணவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



நாடெங்கும் தீவிரமான அரசியல் வலைப்பின்னல்களை உருவாக்கிக் கொண்டிருந்தனர். ஆசிரியர்களைத் தேர்வு செய்வதிலும் பாடத்திட்டத்தை மாற்றியமைப்பதிலும் தமக்கும் ஒரு பங்கிருக்கவேண்டும் என அவர்கள் கோரினார்கள். சுருங்கச் சொல்வதானால் அடிப்படை மாற்றங்கள் உடனடியாகத் தேவை என்கிற நிலை இருந்தது; வெகுசனக் கலாச்சாரம் என்பது தேங்கிப்போன மத்திய தர வர்க்க நிறுவனங்களிலிருந்து வெடித்துச் சிதறித் தெருக்களில் வழிந்தது.

குடியரசுத் தலைவர் நிக்சன் கம்போடியா மீது குண்டுவீச ஆணையிட்ட போது பல்கலைக் கழக வளாகங்கள் புரட்சியின் உந்து சக்திகளாக விளங்கும் என எதிர்பார்க்கப்பட்டன. ஆனால் வெளியில் தெரியாத வேறு சில காரணங்களால் அன்று அது சாத்தியமாகவில்லை. அன்றைய பனிப்போர்ப் பொருளாதாரத்தின் ஓரங்கமாக கோடிக்கணக்கான டாலர்கள் ராணுவத் தொழில்துறையில் கொட்டப்பட்டன. இது பெருமளவில் வேலை இல்லாத் திண்டாட்டத்தைக் குறைத்திருந்தது. வெள்ளை ஆண்கள் மேலாகவும் சிறுபான்மையினர், பெண்கள் மற்றும் ஏழை வெள்ளையர்கள் கீழாவும் உள்ள ஒரு படிநிலையாக்கத்திற்கும் அது வழிவகுத்திருந்தது. இது ஆளும் வர்க்கத்திற்கு பிரித்தாளும் சூழ்ச்சி ஒன்றை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பளித்தது. இதன்மூலம் போர் எதிர்ப்பு, கறுப்பு அதிகார, சிவில் உரிமை இயக்கங்கள் கட்டுக்குள் வைக்கப்பட்டன; பெண்ணுரிமை இயக்கத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் மூடிமறைக்கப்பட்டன; எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும் தொழிலாளி வர்க்கத்தினர் போராடிக் கொண்டிருக்கவில்லை என்பது போன்ற தோற்றம் உருவாக்கப்பட்டது. இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சியின் விளைவாக ஒரு சில முன்னணி வெள்ளைத் தொழிலாளிகளும் சிறிதளவு கறுப்பர்களும் கூட வலதுசாரி அணிக்குள் ஈர்க்கப்பட்டிருந்தனர். எனவே தோன்றிய எழுச்சி சிறிது சிறிதாக அடங்கியது; சிதறுண்டு கிடந்த இடது சக்திகளைக் காட்டிலும் தம்மை மேலும் இறுக்கமாக அணிதிரட்டிக் கொண்டிருந்த வலது சக்திகள் அதிகார மையத்தை நோக்கி நகர்ந்தன.

எனினும் டெட்ராய்ட் நகரின் எரிந்து கிடந்த வீதிகளின் வழியே நான் வேகமாக நடந்து கொண்டிருந்த போது மறக்க முடியாத அந்தத் தொலைக்காட்சிப் படம் என் நினைவுக்கு வந்தது. படத்தொகுப்பு அறையில் நடந்த ஏதோ ஒரு பிழையின் காரணமாக அந்தக் காட்சி தப்பிப் பிழைத்து இடம் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் மறுபடி இந்தக் காட்சியை நான் பார்க்கவே இல்லை. கருப்பர் ஒருவர் ஒரு வெள்ளையரின் தோளில் நின்றுகொண்டு ஒரு கடையின் கண்ணாடி நீக்கப்பட்டிருந்த சன்னல் வழியே சாமான்களை எடுத்துக் கொண்டிருக்கும் காட்சி அது. சாத்தியமேயில்லாத இத்தகைய கருப்பு - வெள்ளை கூட்டிணைவை நான் பார்த்த இன்னொரு ஒரே சந்தர்ப்பம் 'அட்டிகா' சிறை எழுச்சிதான். இந்த இரு குறிப்பிடத்தக்க எழுச்சிகளிலும் தொனித்த உள்ளார்ந்த அந்தச் செய்தியை கருப்பு, வெள்ளை, இஸ்பானிக் மற்றும் ஆசியத் தலைவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

எரிந்து போன கட்டிடங்கள் வழியே வேகமாக நடந்து வந்தேன். கருகிப்போன வீடுகள், வெயிலிலும் மழையிலும் பிய்ந்துபோன கூரைகள்... நிறைந்த பகுதி ஒன்றில் இப்போது நான் நின்று கொண்டிருந்தேன். கண்ணில்லாத காவலர்களைப் போல தோற்றமளித்துக் கொண்டிருந்த உடைந்த சன்னல்கள் பக்கவாட்டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைக் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தன. எனினும் அந்த இருளும் சோகமும் நிறைந்த ஆழ் குகைகளிலிருந்து அவ்வப்போது குழந்தைகளை எச்சரிக்கும் குரல்கள் - சூடான, சூரிய ஒளியைப்போல மின்னும் குரல்கள் - ஒலித்துக் கொண்டுதான் இருந்தன. வெள்ளையர்கள் நகரையொட்டிய பகுதிகளுக்கு ஓடியபின்பு அவர்கள் விட்டுச் சென்ற மாளிகைகள் ஏராளமான சிறு பொறந்துகளாகவும் சிற்றறைகளாகவும் பிரிக்கப்பட்டு, ஏராளமான "பெரிய தாமஸ்கள்" மற்றும் அவர்களின் உறவினர்கள் வசிக்குமிடமாயிற்று. கவிஞர் பிராங்க் மார்சல் டேவிஸ் தனது "கருப்புச் சேரி வாசி" கவிதையில் சொல்வார்; "அவனது வாழ்க்கை ஒரு இருண்ட குகையைப்போல, அதற்குள் அவன் பிறப்பு முதல் தள்ளப்பட்டிருந்தான்." மேலும் சொல்வார்: "ஒரே மாதிரியான பல நாட்கள் குருடனைப் போல அதற்குள் அவன் அலைந்து திரிந்தான். கடைசியாக ஒரு நாள் தற்செயலாக அவன் மரண வாயிலுக்குள் தடுக்கி விழும் வரை அது தொடர்ந்தது". ஆனால் தெருக்களை விளையாட்டு மைதானங்களாகக் கொண்ட இந்தக் குழந்தைகள் சின்ன வயசிலிருந்தே மரணத்தோடு விளையாடக் கற்றுக்கொண்டிருந்தனர். போக்குவரத்து நெரிசல்கள், தவறிப் பாயும் துப்பாக்கிக் குண்டுகள் . கடத்திச் செல்லக்கூடிய தாதாக்கள், வேசிகள்... இவர்களை எப்படி ஏமாற்றித் தப்புவது என அவர்கள் தெரிந்திருந்தனர். உடைந்துபோன நடைபாதைகளின் மீது விளையாடிக் கொண்டிருக்கும் அந்தக் குழந்தைகளுக்கு தூரத்திலுள்ள ஒரு கருப்புக் கவிஞன் முன்னதாகவே ஒரு மரணப்பாட்டு ஒன்றை எழுதி வைத்திருப்பது தெரியாது. அவர்களின் கவிதைகள் அவர்களின் எலும்புகளில், பாதங்களில், சிரிப்புகளில் உயிர்த்திருந்தன. அவர்களின் சிரிப்புகள் ஒரு பறவையின் பாடலைப்போல கிறிச்சிட்டன. சமயங்களில் குழலோசையின் உயர் சுருதிகளுக்கு இணையாக அவை இழைந்தன. இந்த நகர்ப்புறச் சேரிச் சகோதரிகளைப் பற்றி காரசாரமான கவிதைகளைத் தூரத்திலுள்ள கவிஞர்கள் எழுதிக் கொண்டிருக்கும்போது இந்தச் சேரி மக்கள் தங்களின் சொந்தத் துயரங்களைப் பற்றி ஏன் மரண கீதங்களை எழுதுவதில்லை? மாறாக அவர்களின் பாடல்கள் எதிர்ப்பு கீதங்களாகவும் நம்பிக்கை முழக்கங்களாகவும் மட்டுமே இருப்பதேன்?

சிறிது நேரத்தில் எரிந்துபோன கட்டிடங்களின் முகப்புத் தோற்றங்கள் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட திரைப்பட 'செட்'களைப் போல தோற்றம் கொண்டன. ஒவ்வொரு தெருவிலும் கருகிப்போன அழிவுகள், ஒளி உமிழும் கோபுரங்களைப் பார்த்து பழிப்புக் காட்டும் வெற்றிலைக் காவி படிந்த உடைந்த பற்களைப் போல விளங்கின.

வாஷிங்டன் நகரத்திற்கு நான் வந்தபோது தீ இன்னும் கவிந்துகொண்டிருந்தது. கருப்பு அதிகார இயக்கம் மற்றும்

படிப்பகம்

www.padippakam.com



வியட்நாம் எதிர்ப்பு எழுச்சிகளுக்குப் பின்பு அமெரிக்க நகரங்களின் கலாச்சாரம் குறித்து கனடா ஒளிபரப்பு நிறுவனத்திற்காக ஒரு தொடர் நிகழ்ச்சி ஒன்றைச் செய்வதற்காக நான் அங்கு சென்றிருந்தேன். எனக்கு வழிகாட்டியாக இருந்தது லாரி நீல். புத்திகூர்மை மிக்க கருப்புக் கவிஞன். போராளி. ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சி என்பதுதான் அவன் உயிர்மூச்சு. எனினும் ஒரு சோகம் அவனுக்குள் எப்போதும் இழையோடுவதை ஒருவர் உணர முடியும்.

சூரிய ஒளி படிந்த வீதிகளின் வழியே நாங்கள் நடந்தபோது அங்கே ஒரு விழாச் சூழல் நிலவியதைப் பார்க்க முடிந்தது. மக்களில் பலர் லாரியை அடையாளம் கண்டு கொண்டார்கள். கருப்பு மக்களுக்கே உரித்தான அலட்சியம் நிறைந்த நகைச்சுவையோடு அவனை அவர்கள் வாழ்த்தினார்கள். வரலாற்றின் இக்கணத்தில் அவர்களுக்கு விடுதலை உணர்வைக் கருப்பு எழுச்சி ஊட்டியிருந்தது. ஒரு மகத்தான நம்பிக்கையை அது அவர்களின் நரம்புகளில் ஏற்றியிருந்தது. கனவில்கூட நினைத்துப் பார்க்க இயலாத சொத்துக்கள், தந்திரமான நிலச்சுவான்கள், கொடூரமான வட்டிக்காரர்கள், அரசு அதிகாரிகள், போலீசின் கையாட்கள்.. போன்ற ஒடுக்குமுறையின் முகவர்கள் மற்றும் குறியீடுகளை அவர்கள் வீழ்த்தியிருந்தார்கள். ஆனால் தங்களின் எழுச்சிக் காலத்தில் பயமுறுத்தி வைத்திருந்த எதிரிகள் வரப்போகும் நாட்களில் தென் அமெரிக்கச் சிறுத்தைகளைப் போல திருப்பித் தாக்கலாம் என்பதை அவர்கள் தெரிந்தே வைத்திருந்தார்கள்.

சிவில் யுத்தத்திற்கு முன்பிருந்தே கருப்பு மக்கள் செறிந்திருந்த ஒரு பகுதிக்கு லாரி என்னை அழைத்துச் சென்றான் இனத்துவச் சனநாயகம் இந்தத் தலைநகரத்தில் என்றும் நிலவியதில்லை. எனினும் கலக எழுச்சிக்குப்பின் இன்று எவ்வாறு கருப்புச் சமூகங்கள் இந்நகரத்தில் இனத்துவச் சனநாயகத்தை நிலை நாட்டியுள்ளன என்பதை ஒரு முரண் நகையாக லாரி விளக்கினான். "வெள்ளையருக்கு மட்டுமான" தங்களின் இருப்பிடங்களை நோக்கி விரைந்து கொண்டுள்ள மோட்டார்காரர்கள் பேருந்து நிறுத்தங்களில் காத்திருக்கும் கருப்பர்களை நின்று அழைத்துச் செல்கின்றதை. கருப்பு முகம் ஒன்று காரில் பக்கத்தில் அமர்ந்திருப்பது தங்களுக்குப் பாதுகாப்பாக இருப்பதுதான் வெள்ளையரின் இந்தத் திடீர் இரக்கத்திற்குக் காரணம் என்பதை லாரி விளக்கினான்.

சோசலிசத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினனான பத்தொன்பது வயதே நிரம்பிய ஜோ மைல்ஸ் ரொம்பவும் சுவாரசியமான கருப்புச் சமூக மையமொன்றிற்கு என்னை அழைத்துச் சென்றான். வாழ்க்கையின் எல்லாத் தளங்களிலுமுள்ள பல்வேறு குழுக்களைச் சேர்ந்த குழந்தைகள், பெற்றோர்கள் எனப் பலரும் இசை, நாடகம், நடனம், கவிதை, ஜூடோ, கராத்தே, பொது நலம், குழந்தை வளர்ப்பு எனப் பல்வேறு துறை சார்ந்த வகுப்புக்களில் பயின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

இந்த மாதிரியான சமூகங்கள் வழக்கமாக நடத்துகிற நிகழ்ச்சிகளிலிருந்து இவை பெரிதும் விலகி இருந்தன. இன்று தமது சமூகத்திற்குத் தேவையாக உள்ள கலாச்சார நிகழ்ச்சிகளை அவர்கள் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். கருப்பு அரசியல் எழுச்சி என்பது புதிய அறிவுத்துறைகளை அவர்களுக்குத் திறந்துவிட்டிருந்தது. கட்டிடக்கலை மாணவர்கள்கூட அங்கே ஒரு வகுப்பை நடத்திக் கொண்டிருந்தார்கள். சேரி மக்களோடு சேர்ந்து கூட்டு வசிப்பிடம் ஒன்றை உருவாக்குவது பற்றி அவர்கள் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வரைந்து காட்டியிருந்த படங்கள், உணர்ச்சி மிகுந்த அவர்களின் உரையாடல்கள் ஆகியவற்றைக் கவனித்தபோது தனது 'இருளின் குழந்தை' என்னும் நூலில் கோடிக்கணக்கான நகர்ப்புற ஏழைகளைப் பற்றிப் பேசியுள்ள பிரேசிலியக் கருப்புப் பெண் கரோலினா மரியா டி ஜேசுவை என்னால் நினைக்காதிருக்க முடியவில்லை. வெவ்வேறு விதங்களில் தன்னைக் கைவிட்ட மூன்று ஆண்களிடம் மூன்று குழந்தைகளைப் பெற்றுக்கொண்ட கரோலினா இந்த விவாதக் குழுக்களில் ஏதேனும் ஒன்றில் இருக்கலாம். கரோலினா போன்றவர்களுக்கு அவர்களது வேகம் மிகுந்த, வெற்றிகொள்ளப்பட இயலாத ஆக்கத்திறன் என்பது அவர்களின் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட உடலுக்குள் அடைபட்டுக் கிடக்கின்றது. அவரது புத்தகம் பிரபலமான பிறகு பத்திரிகை நிருபர் ஒருவர் அவரிடம் கேட்டார்: "உங்களையும் உங்கள் குழந்தைகளையும் உயிரோடு வைத்துக் கொள்வதற்காக குப்பை கூளங்களின் மத்தியில் இத்தனை ஆண்டுகள் போராடிக் கழித்தவர் நீங்கள். இன்று ஒரு புகழ்மிக்க மனிதராக ஆகியுள்ளதை எப்படி உணர்கிறீர்கள்?" கரோலினா சொன்னார்: "உங்கள் வாசகர்களிடம் சொல்லுங்கள். இதுவரை எனக்கு மறுக்கப்பட்ட மனிதத்தன்மைக்குள் நான் மீண்டும் நுழைந்திருக்கிறேன். அவ்வளவுதான். ஒரு இரண்டு நாட்களுக்கு முன்பு தமது மனிதத் தன்மையை மீளுறுதி செய்து கொள்வதற்காக வீதிக்கு வந்த இந்தப் பெண்களும்கூட மனித இனத்திற்குள் மீண்டும் நுழைந்துள்ளனர். அந்தப் பெண்களில் ஒருத்தி ஒரு கவிதையை என்னிடம் தந்தாள். இத்தனை நாட்களும் அவள் வெள்ளையர்களின் வீடுகளில் பணிப்பெண்ணாக இருந்தாளாம். அரசியல் எழுச்சிக்குப் பின்பு அவள் திடீரென கவிதைகள் எழுதத் தொடங்கிவிட்டாள் என என் காதுகளில் யாரோ முணுமுணுத்தார்கள். "அமைதியான இடிமின் புயல்" என்பது கவிதைத் தலைப்பு. பத்தே வரிகளில் அக்கவிதை அவளது கதையையும் அவளைப் போன்ற ஆயிரக் கணக்கான குரலற்ற பெண்களின் கதைகளையும் சொல்லி யது.

முழங்கால் தேய உன் வீட்டுத் தரையை நான்
துடைத்துக் கொண்டிருக்கின்றேன்

ஒரு பொம்மையைப் போல நீ என்னைத்
தொங்க விட்டிருக்கிறாய்

உன் கேள்விகளுக்கு இனிக்க இனிக்க நான்
பதிலளித்துக் கொண்டிருக்கின்றேன்

எனது ஜானைப் பற்றிய, எனது கடவுளைப் பற்றிய

படிப்பகம்

www.padippakam.com



எனது குழந்தையைப் பற்றிய, எனது கனவுகளைப் பற்றிய
கேள்விகள்...கேள்விகள்.
பதிலளிப்பதும் எனது பணிகளில் ஒன்றுதான்...
என்னை நன்கு பயன்படுத்திக் கொள்.
ஏனெனில் அடுத்த தலைமுறைகள் என்னைப் போல உன்னிடம் வரமாட்டார்கள்.

நீ அவர்களைப் புட்டத்தில் உதைக்கும்போதும்
குனிந்து உன் தரையைத் துடைத்துக்
கொண்டிருப்பவர்கள் இனி வரமாட்டார்கள்.

அந்தக் குழுவிலிருந்து வெளியேறி இன்னொரு குழுவிற்குள் நுழைந்தேன். முதிர்ச்சியடைந்த இசைஞர்கள் இளைஞர்களுக்கு இசைப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார்கள் இவர்கள் பல்வேறு இசைக்கருவிகளை மீட்டிக் கொண்டிருக்கிறார்கள்; 'டிரம்'களை முழக்கிக் கொண்டிருந்தனர்; கவிதைகளுக்கு இசையமைத்துக் கொண்டிருந்தனர்; 'ஜாஸ்' கவிதைகளை சந்தத்தோடு வாசித்துக் கொண்டிருந்தார்கள்; உணர்ச்சிக் கவிதைகளை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்; 'கதைப்பாடல்களுக்கும் புளூஸ்' பாடல்களுக்கும் வாய்மொழி வடிவம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கருப்பு மக்களின் உள்ளத்தை அப்படியே முழுமையாக வெளிக்கொணர்வதற்கு ஏற்றது இந்த இசைமொழி தான் என்பது எனக்கு உறைத்தது. மிகவும் தொன்மையான வாழ்க்கை லயங்கள் புராதன நினைவுகள் ஆகியவற்றிலிருந்து எழுந்த இந்த இசை எல்லாக் கலாச்சார வடிவங்களைக் காட்டிலும் பொதுமையானதாக எழுந்தது. கோடிக்கணக்கான மக்களின் காதுகளில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருக்கும் இசை லயங்கள் அவை. இந்த இசைகள் இன்று வணிகமயமாகிவிட்டன. பொருளற்ற வறண்ட பாடல்களைச் சுமக்கும் வாகனங்களாகிவிட்டன. எனினும் அவற்றின் தூய வடிவங்களில் அவை, வேதனைக் குரல்களையும், கலகக் குரல்களையும் கேட்கத் தயாராக இருக்கும் உள்ளங்களின் இதயங்களை நெருடும் சாத்தியம் உடையனவாகவே உள்ளன. அரசியல் எழுச்சி அடைகாத்துத் தந்த இந்த உயிர்ப்புமிக்க இசை லயங்களிலிருந்துதான் ராக் அன் ரோல், 1960 களின் இசைப்பாடல்கள், புளூபீட், ரெகெ, சோகா, ராப், ஹிப்ஹாப் போன்ற எண்ணற்ற இசை வெளிப்பாடுகள் நமக்குக் கிடைத்தன. தங்களின் அகக் காதுகளின் வழியாக ஒருவர் கவனித்தாரானால் இந்த மகத்தான இசை ஆக்கங்கள் ஒவ்வொன்றிலும் எதிர்ப்புக் குரல்களை, தங்களின் அடையாளங்களை உறுதி செய்து கொள்ளும் எதிரொலிகளை அடையாளம் காண முடியும்.

இந்தப் பயணம் முடிந்து வந்தபோது இன்னும் பல கவிதைகளைக் கொண்டு வந்தேன். இவை அனைத்தும்'வாட்சி'ல் இருந்த இளம் கவிஞனைப் போல, "சாம்பலிலிருந்து நான் எழுந்தேன். என்னோடு இன்னும் பலரும்..." எனச் சொல்லக்கூடிய ஆண்களும் பெண்களும் எழுதியவை. இதுவரை நாம் கேட்டிராத தொன்மைக் குரல்கள் அவை. அவர்களின் இசை வழிந்து இந்த உலகெங்கும் எதிரொலிக்கலாம். எனினும் அவர்களின் இந்த எழுதப்பட்ட சொற்கள் எண்ணற்ற இனவெறித் தடைகளை தாண்டிச் செல்லவேண்டுமானால் அரசியல் எழுச்சிகள் பலவற்றை அவர்கள் மேடையேற்றியாக வேண்டும்.

கருப்புசேரிகளின் மேற் தோற்றத்தில் வெளிப்படும் ஏழ்மைக்கும் இழிவுகளுக்கு அப்பால் உயிர்ப்பும் வியப்பும் மிக்க எதிர் கலாச்சாரக் கூறுகளை எப்போதும் ஒருவர் கவனிக்க முடியும். ஒரு ஆழ்ந்த சோகத்திற்குள் அவை புதைந்து நசுங்கிக் கிடக்கும். ஆனால் அபூர்வமாக அவர்கள் ஒருங்கிணைந்து மடித்து கிடந்த தமது கால்களை நிமர்த்தி எழுந்து நிற்கத் தொடங்கும்போது புறக்கணிக்கப்பட்ட நடைபாதையின் வெடிப்புக்களில் பூக்கும் பூக்களைப் போல இந்த எதிர் கலாச்சாரக் கூறுகள் வெடித்துக் கிளம்பும். அவர்களுள் புதைந்து கிடக்கும் கோப விதைகள் நம்பிக்கைப் பூக்களாய் மலரும். 'கருப்பு இசுலாமியரை'ப் போல மிகவும் இழிவானவர்களாகக் கருதப்பட்டு ஒதுக்கப்பட்டவர்களும்கூட மீண்டும் மனித இனத்திற்குள் நுழைய முடியும்.

ஒகியோ மாநிலத்தில் கிளீவ்ன்ட் மாவட்டத்தைச் சேர்ந்த நார்மன் ஜோர்டான், கிளைட் ஷை என்கிற இரு கவிஞர்களின் கவிதைகளோடு முடித்துக் கொள்கிறேன். 1960களின் எழுச்சிகளில் முளைத்தவர்கள் அவர்கள். ஆர்வமிக்க வாசகர்களை நோக்கி அவர்கள் எழுதினார்கள், பாடினார்கள், இசைத்தார்கள்.

## கருப்புப்பேராளி

இரவில் வெள்ளச்சி தூங்கும்போது
ஆயிரம் ஆப்பிரிக்கர்களின் இதயம் தீப்பிடிக்கிறது.
என் மார்புக்குள் எரிகிறது.
போர் முரசின் ஒலியை நான் கேட்கிறேன்.
அதன் அழைப்பு என்னைக் கவர்கிறது
அந்தக் கடையின் முன் சன்னலை நோக்கிக்
கல்லை எறிந்துவிட்டு
ஓடுகிறேன்.

**நார்மன் ஜோர்டன்.**

## நகரம்

இரத்தமும் தேனும், மதுவும் துப்பாக்கி மருந்தும்
நரம்புகளும் ஊசிகளும், திருமணமும் கொலையும்
போலீஸ் கார்களில் மூத்திரமடிக்கிற, தனது குட்டுக் கோல் பெட்டிமீது படுத்துறங்குகிற
குடிகாரனின் அசிங்கமான இருப்பிடம் போல
இது நிச்சயமாக ஒரு நகரம்தான்.
மின்னல் தெறிப்பதையும் திருவாளர் ஜோன்சை வீழ்த்துவதையும் யாரும் பார்க்கவில்லை
குழந்தைகளின் கத்தல் அவன் நன்றாக இருப்பதாய்ச் சொல்கிறது.
அவன் இந்த நகரத்திற்குப் புதிது.
வெள்ளி இரவுகளும் காதல் விவகாரங்களும்
சண்டை போடும் வேசிகளும் உடைந்துபோன படிக்கட்டுகளும்...
இது நிச்சயமாக ஒரு நகரம்தான்...

**கிளைட் ஷை (1968)**

படிப்பகம்

www.padippakam.com



# நியூயார்க் நகரின் கெரில்லாக் கலைஞர்கள்

**இவோர் மில்லர்**

**தமிழில் : நிறப்பிரிகை**

***இவோர் மில்லர்:*** *அமெரிக்க* ***நாத் வெஸ்டர்ன்*** *பல்கலைக் கழகத்தில் நிகழ் கலைத் துறையில் பேராசிரியர். எழுபதுகளில் நியூயார்க் நகரைக் குலுக்கியகருப்பு ஓவிய இயக்கம் ஒன்றின் எழுச்சியையும் இறுதியையும் இக்கட்டுரை விவரிக்கிறது. இந்த ஓவிய இயக்கத்தில் நேரடியாகப் பங்கு பெற்ற ஓவியர்களின் கருத்துக்களை ஐந்தாண்டுகள் (1987-1992) பதிவு செய்து அவற்றின் அடிப்படையில் இக்கட்டுரையை ஆசிரியர் உருவாக்கியுள்ளார்.* ***கோகோ 144, பேஸ் 2*** *முதலியன இந்த ஓவியர்க்ள் சிலரின் பெயர்கள். சுரங்கப் பாதை (ரயில் நிலையங்) களிலும், சுரங்கப் பாதை ரயில்களிலும் இந்த ஓவியக் கலைஞர்கள் தமது கையெழுத்தோவியங்களைப் பதித்தனர். 'கெரில்லாக் கலைஞர்கள்', 'தலை மறைவு ஓவியர்கள்', 'தொல்வரிப் பாணி (Graffiti) ஓவியர்கள்', 'தூசிப்படல (Aerosol) ஓவியர்கள் எனப் பலவாறும் அழைக்கப்பட்டவர்கள் இவர்கள். பல்வேறு உட்குழுக்களாய்ப் பிரிந்து மோதி இந்த கருப்பு இனக் குழுக்கள் என்றால இணைந்து ஒரு சமூகமாய் உருவாகியதில் இந்த ஓவிய இயக்கத்தின் பங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.*

**Race and Class July - Sep'93** *இதழிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு மொழி பெயர்ப்புக் கட்டுரை எனச் சொல்வதைக் காட்டிலும் தழுவல் கட்டுரை எனச் சொல்வது பொருத்தம். பல இடங்கள் சுருக்கப்பட்டுள்ளன.*

1970 களின் தொடக்கத்தில் நியூயார்க் நகரின் சுரங்கப் பாதைகளில் ஒரு புதிய கலை வடிவம் அரும்பிச் செழிக்கத் தொடங்கியிருந்தது. நார்மன் மெய்லர் போன்ற ஒன்றிரண்டு எழுத்தாளர்களும் புகைப்படக் கலைஞர்களும் இந்நிகழ்வை வரவேற்றார்கள் என்றாலும் மற்றெல்லோரும் இதனைச் சமூகத்தின் மீதான ஒரு தாக்குதலாகக் கருதினர். 1980களின் மத்தியில் இந்தக் கெரில்லாக் கலைஞர்கள் உருவாக்கிய 'நடமாடும் வண்ண ஓவியக் காட்சிகள்' உலகெங்கிலிருந்தும் வந்த உல்லாசப் பயணிகளைப் பெருமளவில் ஈர்த்தன. சுரங்கப் பாதைகளை மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நோக்கோடு நியூயார்க் நகர மேயர்கள் லிண்ட்சேயும் கோச்சும் பலகோடி டாலர்கள் செலவு செய்து ஓவியங்களைச் சுரண்டவும் ஓவியர்களைக் கைது செய்யவும் முயன்றனர். உணர்ச்சி அழுத்தம் மிக்க பிரம்மாண்டமான இந்த ஓவியங்கள் நியூயார்க் நகரை விட்டு நிரந்தரமாக மறைந்ததெனினும் இந்தக் கலைவடிவம் ஒரு உலகளாவிய நிகழ்வாக மாறியது. அமெரிக்காவின் இதர நகரங்களுக்கும் அய்ரோப்பா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய நாடுகளுக்கும் இது பரவியது. அர்ப்பணிப்பு மிக்க இந்த ஓவியர்களில் சிலர் இன்றும்கூட பொது இடங்களில் மட்டுமின்றி ஓவியர் கூடங்களுக்காகவும் இத்தகைய ஓவியங்களை வரைக்கின்றனர்.

1971ல் இந்த இயக்கம் தொடங்கியது. இக்கலைஞர்கள் தங்களின் ஆக்கங்களில் வெவ்வேறு விதமான பண்பாட்டுக் கருத்தாக்கங்களைப் பயன்படுத்தினர். இந்த இயக்கம் தொடங்கியபோது இந்தக் கலைஞர்களில் பெரும்பாலோர் 12 முதல் 15 வயதுடைய இளைஞர்கள். இந்த இளம் வயதில் அவர்கள் சுற்றியுள்ள உலகு பற்றியும் அதன் கலாச்சாரத் தாக்கங்கள் பற்றியும் விரிவான பிரக்ஞையும் அவற்றை ஏற்றுக் கொள்ளும் திறந்த மனதும் உடையவர்களாக இருந்தனர். அவர்களின் குடும்பங்கள் தமது பாரம்பரியத்தின் வழியாக மொழியையும் இயக்கத்தையும் அறிமுகம் செய்தன. தொலைக்காட்சிகள் அவர்களுக்கு விளம்பர யுக்திகளைக் கற்றுத் தந்தன. வாழ்ந்த சமூகங்கள் அவர்களுக்கு அரசியலையும் ஒடுக்குமுறையின் வரலாற்றையும் சொல்லின. சமகால நிகழ்வுகளான விளம்பரம், வெகுசனக் கலாச்சாரம், கருப்பர் இயக்கங்கள், லத்தீன் அமெரிக்க இயக்கங்கள், சிவப்பு அதிகார இயக்கங்கள் முதலியன இந்தச் சுரங்கப் பாதை ஓவியர்களின் கண்ணோட்டங்களில் எதிரொலித்தன. இவை அனைத்தும் சேர்ந்த இந்தக் கலப்பு நிகழ்வை நான் creolisation - பண்பாட்டைக் **கலப்புமயமாக்குதல்** என வரையறுக்கிறேன். இந்தக் கலகக் கலைஞர்களில் பலர் தமது சமூகக் குழுக்களிலிருந்து கருத்துக்களையும் பிம்பங்களையும் கலப்புமயமாக்கித் தம் ஆக்கங்களுக்குப் பயன்படுத்தினர்.

ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்ட பல்வேறு கலாச்சாரச் சூழல்களில் வளர்ந்திருந்த இக்கலைஞர்கள் ஒதுக்கப்பட்டிருந்த தமது குழுக்களை நகரம் தழுவிய ஒரு சமூகமாக மாற்றினர். ரயில் பெட்டிகளில் கையெழுத்தோவியங்களை வரைந்து அதன் மூலம் தங்களின் அரசியல் உணர்வுகளை ஒருவொருக்கொருவர் அறிவித்துக் கொண்டனர். பின்பு ரயில் நிலையங்களில் சந்தித்துக் கொண்டு நவீனமான போக்குகளை அறிமுகம் செய்துகொண்டு சிறு சிறு குழுக்களாக உருவாகினார்கள். மன்ஹாட்டனின் மேற்பகுதியைச் சேர்ந்த கோகோ 144 என்னும் கலைஞர் நினைவுகூர்கிறார்:

"இந்த இயக்கம் இடையேயிருந்த தடைகளை உடைத்தது. அய்ம்பதுகள் அறுபதுகளுக்குப் பின்னர் கருப்பர் குடியிருப்புகள் தொடர்பற்று துண்டிக்கப்பட்ட கும்பல் இருப்பிடங்களாக இருந்தன. பிளாக் ஹார்லெம், ஸ்பானிஷ் ஹார்லெம், அப்பர் வெஸ்ட் ப்ராங்ஸ்... இப்படி. கெரில்லா ஓவிய இயக்கம் இந்த எதிர்மறைத் தடைகளை உடைத்து ஒற்றுமையை உருவாக்கியது.. எங்கள் நோக்கம் சொத்து

படிப்பகம்

www.padippakam.com



அடையாளங்களை அழிப்பதல்ல. ஒற்றுமையை கலைநஞர்களுக்குள் மட்டுமல்ல எழுத்தாளர்களாக இல்லாதவர்களுடனும் ஒற்றுமை... ஓ! நீங்கள்தான் கோகோ 144 ஆ? என உரையாடல் தொடங்கும். உங்கள் பெயரை அவர்கள் எங்கெல்லாம் பார்த்திருக்கிறார்கள் எனச் சொல்லத் தொடங்குவார்கள். அது உங்களின் தன்னகங்காரத்தைத் திருப்தி செய்யும் செயலாக இல்லாமல் அழகான, ஆக்கப்பூர்வமான நிகழ்வாக அமையும்.

இவ்வாறு மிகவும் ஆழமான உள்-இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட இளைஞர் பண்பாடு உருவாகியது. எதிரெதிரான கும்பல் குடியிருப்புகளினூ ஈ கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் குழுக்கள் உருவாயின. வளர்ந்தவர்களின் சமூகத்தில் காணப்படாத ஒரு ஒருங்கிணைந்த பண்பாடு இந்த இளைஞர்கள் மத்தியில் தோன்றின. நகர் முழுமையும் எல்லோர்க்கும் அறிமுகமான இந்த எழுத்தாளர்கள் 'All City" எழுத்தாளர்கள் என அழைக்கப்பட்டனர்.

இந்த ஒருங்கிணைப்பு என்பது சிவில் உரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்புக் கோட்பாட்டினடியாக உருவாகியதா இல்லை நகரத்திற்குள் பன்மைத் தன்மையுடன்கூடிய பண்பாட்டைப் பகிர்ந்து வெளிப்படுத்த விரும்பும் இளைஞர்களின் தன்னெழுச்சியான விருப்பத்தின் விளைவா என்பதையெல்லாம் தெளிவாகச் சொல்லிவிட முடியாது.

∴பேஸ் 2 என்கிற இன்னொரு கலைஞர் நினைவு கூர்கிறார்: "உங்கள் சகோதரனை நேசியுங்கள்" மற்றவர்களோடு ஒத்திசைந்து வாழுங்கள் எனக் கருதுகிற சூழலில் நாங்கள் வாழவில்லை. ஸ்பானிய மொழி அல்லது அராபிய மொழி பேசுகிறவர்களை எப்படி அணுகுவது என எங்களுக்குத் தெரியாது. இந்த அடையாளங்களின் அடிப்படையில் வேறுபடுத்திப் பார்க்கவே நாங்கள் பழக்கப்பட்டிருந்தோம். இந்தக் கலைதான் எங்களை மக்கள் திரளாக ஒன்றிணைத்தது."

இந்த உலகைத் துருவி ஆராய, கேள்விகள் கேட்க, தமது புதிய சிந்தனைகளையும் கருத்தாக்கங்களையும் வெளிப்படுத்த இளைஞர்கள் துடித்துக் கொண்டிருந்த நேரம் அது. தமது ஆற்றலை ஏழ்மையோடு போராடியும், அறுவையான பள்ளிப் பாடங்களை எதிர்கொண்டும், உட்குழுப் பகைகளில் பலியாகியும் கழித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் மத்தியில் இந்த இயக்கம் பெரும் தாக்கத்தை விளைவித்தது. தொடக்க காலத்தில் கருப்பு/வெள்ளை என்கிற இன வேறுபாடு, பால் வேறுபாடு முதலியவைகூட தடையாக அமையவில்லை. (பின்னர் தான் இவை உருவாகி நிலைபெற்றன) சுரங்கப்பாதைக்குள் நுழைந்தவுடன் எல்லாத் தடைகளும் சுக்குநூறாயின.

முன் மாதிரிகள், வழிகாட்டிகள், ஆசிரியர்கள் ஏதுமின்றி முயற்சித்தல், மாற்றியமைத்தல் என அவர்கள் தங்களுக்குள்ளாகவே பயின்று கொண்டனர். ரயில் பெட்டிகள், ஓவிய ஸ்ப்ரே கருவிகள், வெகுசனக் கலாச்சாரம் எல்லாமே முதலாளிய சமூகத்தின் கருவிகள்தான். ஆனால் இவர்கள் இவற்றை வெறுமனே செயலூக்கமற்று நுகர்பவர்களாக இல்லாமல் ஒரு புதிய பண்பாட்டைக் கட்டமைப்பதற்கான ஆயுதங்களாகப் பாவித்தனர். கையெழுத்தோவியங்களைப் பதிப்பதன் மூலம் ரயில் பெட்டிகளை அவர்களின் உயிராற்றலைச் சுமந்து செல்லும் வாகனங்களாக்கினர்.

☆ ☆ ☆

இதற்குக் கடும் எதிர்ப்புகள் இல்லாமலில்லை. நகரவாழ்வின் தரத்தைக் கெடுக்கும் கொள்ளை நோயென்று இந்த ஓவியங்கள் கண்டனம் செய்யப்பட்டன. நியூயார்க் அரசு மக்கள் மீதான கட்டுப்பாட்டை இழந்து போனதன் அடையாளமாக இதனை அவர்கள் கண்டனர். இந்த இளைஞர்கள் தம் கொடூரமான அனுபவங்களை ரயில் ஓவியங்களாக்கித் தங்கள் மீது திணிப்பதை அவர்கள் விரும்பவில்லை.

கருப்பர்களின் ஆங்கிலத்தை அமெரிக்க நிறுவனங்கள் அங்கீகரிக்காதது போலவே இந்த மொழியின் காட்சி வெளிப்பாடாக இருந்த இந்த ஓவியங்களையும் அவர்களால் ஏற்க முடியவில்லை. ஹார்லெம் எழுத்தாளர் **வல்கன் கூறுகிறார்:**

"கலை என்பதன் முழுமையான பொருள் என்னவெனில் அது ஒரு தொடர்பு மொழி என்பதுதான்...எனது முக்கியமான பணி எழுத்துக்களை எடுத்துக்கொண்டு அவற்றைச் சிதைப்பதுதான்; மாற்றுவதுதான்; மாற்றி மறு உருவாக்கம் செய்வதுதான். எழுத்து வடிவங்கள் (alphabet) இப்படித்தான் இருக்கவேண்டும் என யாரோ சொன்னார்கள் என்பதற்காக நாமும் அப்படியே பின்பற்ற வேண்டியதில்லை. நீங்கள் அதனைத் தனித்துவமானதாக மாற்றலாம்.அதனை உங்களுக்கே உரியதாக்கிக் கொள்ளலாம்."

'காப்பி' நோட்டுகளில் எழுதுவதையும், மனப்பாடப் பயிற்சியையும் இவர்கள் கடுமையாக வெறுத்தனர். இடது கையால் எழுதுவதுகூட எவ்வளவோ பரவாயில்லை என்றனர். ரயில் ஓவியங்களில் முரட்டு வடிவம் (WILD STYLE) ஒன்றை அவர்கள் முன்னிலைப்படுத்தினர். மேலும் மேலும் அவை புரியாத வடிவங்களாயின. இந்தப் புரியாமை என்பது ஒரு "தாக்குதலாக"வும் "மறுவரையறுப்பாகவும்" உருவெடுத்தது. எழுத்துவடிவத்தை மறுவரையறை செய்வதென்பதோடு ஒரு புதிய எழுத்து மொழியையும் அவர்கள் உருவாக்கினர்.

இயக்கம், சொல், இசையொழுங்கு ஆகியவற்றிற்கிடையேயான பரஸ்பரச் செயல்பாடுகளைப் பயன்படுத்தி அவர்கள் காட்சிப் புலத்துக்குரிய கலை வடிவை உருவாக்கினர். நடனம், குரல், டிரம், இசையொழுங்கு ஆகியவற்றைக் காட்சிக் கூறுகளாக்கினர். மாற்றியமைக்கப்பட்ட எழுத்து வடிவங்களை இயக்கத்திலுள்ள மனித வடிவங்கள் எனச் சிலர் உரிமை கொண்டாடினர். ரயிலின் இயக்கம் இந்தப் படிமத்தை மேலும் ஆழமாக்கியது. நகரங்களினூடாக உயரத்தில் ரயில்கள் பாய்ந்து செல்லும்போது அவற்றின் மேல் பொறிக்கப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



பெயர்கள் பேரோசையுடன் மக்கள் உச்சரித்தொலிக்கும்போது மனிதக்குரல்கள் காட்சி வடிவங்கொண்டன.

தமது பெயர்களையும் கூற்றுக்களையும் உச்சரிப்பதற்கென இந்த எழுத்தாளர்கள் பயன்படுத்திய எழுத்துக்கள் காட்சி இசையொழுங்குகள் (Visual Rythm) மூலம் வடிவமைக்கப்பட்டன. இசையொழுங்கு வடிவு பற்றிய ஆப்ரிக்க - அமெரிக்க கருத்தாக்கங்களை முன்னிலைப் படுத்தும் நோக்குடன் ரோமன் எழுத்துக்கள் மறு கண்டுபிடிப்புச் செய்யப்பட்டன. சில ஓவியர்கள் நடனமாடும் எழுத்துக்களை உருவாக்கினர். ரயில்களின் இயக்கத்தில் அலை இசையொழுங்கு லயம் பெற்றன. லீ சொல்வதைக் கேளுங்கள்:

"முரட்டு நடை எழுத்துக்களை எப்போதேனும் பார்த்துள்ளீர்களா? எழுத்துக்கள் எல்லாமே இயக்கங்களைத்தான் குறிக்கின்றன. அவை உண்மையில் மக்களின் பிம்பங்கள்தான். சில எழுத்துக்களை வடிவமைக்கும் விதத்தில் அவை நடனமாடுகின்றன. – அவை இனிமேல் வெறும் எழுத்துக்கள் மட்டுமல்ல. அதற்கும் மேல். அவை இனி மேல் வெறும் சொற்களல்ல; பெயர்களல்ல. அதற்கும் மேல் உயிரோட்டமான ஒன்றை நீங்கள் படைத்துள்ளீர்கள்."

எழுத்துக்கள் இனிமேல் வெறும் ஓவியத்துனுக்குகளின் அடையாளங்கள் அல்ல. அருவமான கருத்தாக்கங்களாக விரிக்கப்படக்கூடிய சாத்தியங்களை அவை உள்ளடக்கியுள்ளன.

**ஃபேஸ் 2** சொல்கிறார்: என்னைப் பொருத்த மட்டில் மொழிக்கு எல்லை கிடையாது. கடவுளோ யாரோ மொழியைப் படைத்தார்கள் என்றால் நீங்கள் உங்களுக்கான மொழியைப் படைத்துக் கொள்ள முடியும்.. எனக்கு 26 எழுத்துக்கள் போதாது. என்னைப் பொருத்த மட்டில் கடந்து செல்வதற்கான கருவியே எழுத்துக்கள். எழுத்துக்கள் என்பன நீங்கள் எழுப்பக்கூடிய கட்டுமானங்கள். ஒரு கட்டிடத்தைப் பார்த்துவிட்டு 'இதற்கு என்ன அர்த்தம்?' என்று கேட்பீர்களா இல்லை 'இது ஒரு அழகிய கட்டிடம்' எனச் சொல்வீர்களா? பண்டைய மனிதனின் விளங்காத பொறிப்புகளை (hieroglyphic)ப் பாராட்டுவதற்கு அவற்றைப் புரிந்து கொள்ளவேண்டுமா என்ன? எனது வடிவங்கள் எனது ஆப்ரிக்க அவர்களுடன் தொடர்புடையவை. அவை என்ன சொல்கிறது என்பதை உருவகப்படுத்துவது எனது பணியல்ல. அவை அங்கிருப்பதனாலேயே இயங்குநிலையின் கவிதையாகின்றன."

☆ ☆ ☆

ரோமன் வரி வடிவங்களில் இசை லயத்தை ஊட்டுவதென்பது சுரங்கப்பாதை ஓவியர்கள் கண்டுபிடித்த கலப்புமய நடைமுறைகளில் ஒன்று. வெகுசனக் கலாச்சாரக் குறியீடுகளை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். அன்று புகழ் பெற்றிருந்த தொலைக் காட்சித் தொடராகிய "புனிதர்" (The Saint) என்பதிலிருந்து புனிதக் குறியீட்டை ஓவியர் ஸ்டே ஹை 149 தன் ஓவியங்களில் பயன்படுத்திக் கொண்டார். நளினம், புத்திகூர்மை, இரகசிய ஆற்றல்கள் நிறைந்த வீரன் ஒருவனின் பிம்பத்தைத் தனதாக்கிக் கொண்டார். இன்னும் சிலர் தங்களது இன வேர்களினடியான சில பிம்பங்களோடு தம்மை இணைத்துக்கொண்டு தம் சொந்தப் பிம்பங்களை உருவாக்கிக் கொண்டனர். புராதன எகிப்தியக் குறியீடுகளை ஃபேஸ் 12 தன் ஓவியங்களில் பயன்படுத்திக் கொண்டார். இது தன் உள்ளுணர்விலிருந்து வெளிப்படுவதாக அவர் குறிப்பிட்டுக் கொண்டார். தனது இளம் வயதிலிருந்து ஆப்ரிக்க / எகிப்திய உறவுகள் தன் ஆழ்மனத்தில் படிந்து போயுள்ளன என்றார். 'பியூர்டோரிய' இனவேர்களையுடைய கோகோ 144 'டெய்னோ' சடங்குப் படிமங்களை தனது கையெழுத்தோவியங்களில் இணைத்துக் கொண்டார்.

"எனது பெயருக்குள் பல அர்த்தங்களை நான் இணைத்துக் கொண்டேன். 'டெய்னோ' பாறைச் செதுக்குகளை இணைத்துக் கொண்டது அதில் ஓர் அங்கம். எனது ஓவியங்களில் என் பெயரை எழுதுவது எனக்கு மிகவும் முக்கியமான விசயம் எழுத்துக்கள் அருவ வடிவத்தில் இருந்த போதும் பெயர் இன்னும் அங்கே வாழ்கிறது."

என்பது அவர் கூற்று.

"உள் நகர மறுமலர்ச்சி" என்றழைக்கப்படும் இக்காலகட்டத்திய இசை மற்றும் ஓவியச் செயற்பாடுகளில் எதிர்ப்பும் தன்னுறுதியும் முக்கிய அம்சங்களாக இருந்தன. **கிராண்ட் மாஸ்டர் ஃப்ளாஷ், ஃப்யூரியஸ் ஃபைவ்** முதலியவர்கள் உருவாக்கிய (Double) 'செய்தி', 'உயிர் பிழைத்தல்', 'நியூயார்க், நியூயார்க்' முதலியவை குறிப்பிடத்தக்க ஆக்கங்கள். மெல்லமெல்ல உருவாக்கிய "மூன்றாம் உலகப் போர்" என்னும் 'ராப்' இசையில் "போர் என்பது ஓர் வணிக நோக்கிலான விளையாட்டு", "மக்கள் சொல்வதை யாரும் கேட்பதில்லை" போன்ற கருத்தாக்கங்கள் தெறித்தன. "கருப்புச் சேரிகளின் ஓலங்கள்", "அடிமை", "ஸ்பார்ட்டகஸ்" முதலிய பெயர்களை ஓவியங்களாக்கினர். துப்பாக்கிகள், கும்பல் தாத்தாக்கள், நிக்சனைத் தூக்கிலிடு முதலிய அரசியல் முழக்கங்கள் உள்ளிட்ட பிம்பங்கள், தம் வாழ்வின் மீதான வன்முறையை வெளிப்படுத்தும் காட்சிகளடங்கியவை சுரங்கப்பாதை மற்றும் ரயில் ஓவியங்களை ஆக்கிரமித்தன. **ஜோன் ஒன்** கூறுகிறார்.

"அது மிகவும் புரட்சியும் கலகமும் நிறைந்த வரலாற்றின் கட்டம். முதல் தலைமுறை ஓவியர்கள் வெளிப்பட்ட போது பேருந்துகளில் கருப்பர்கள் பின்னிருக்கைகளில் அமர வேண்டிய விதியை எதிர்த்து போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இன்னொரு பக்கம் வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கங்கள். கென்னடி அப்போது குடியரசுத் தலைவர். அந்தக் காலம் முதல் இன்று வரை இந்த இயக்கம் வலுவாகத் தன்னை நிறுவிக்கொண்டது."

தம் பெற்றோர்கள், சமூகம் இவற்றினூடாக இந்த இளைஞர்கள் உணர்ந்த கோபம், விரக்தி ஆகியவற்றோடு புதிய கருப்பு/லத்தீன் அமெரிக்க/பூர்வீக அமெரிக்கப் பிரக்ஞைகள் உருவாக்கித்தந்த புதிய சாத்தியங்கள், நம்பிக்கைகள், திருப்பித் தாக்கும் போர்க்குணங்கள் முதலியவை இணைந்தது என்பது இந்தக் கலைஞர்களுக்கு பச்சைக் கொடி காட்டுவதாக அமைந்தது. கையில் கருவிகளோ வரைவதற்குத் திரைச்சீலைகளோ இல்லாத இவர்கள் கையில் கிடைத்த எல்லாவற்றையும் பயன்படுத்தி உரத்த குரலில்

படிப்பகம்

www.padippakam.com



தங்கள் ஓவியங்களைத் தீட்டினர். லீ சொல்வது போல இந்தத் 'தலைமறைவுக் கெரில்லா கலைஞர்கள்' நகரத்தில் நரம்பு மையமாகிய சுரங்கப் பாதைகளை தாக்கிக் கைப்பற்றினர். தமது இருப்பை வெளிப்படுத்தும் ஒரே வழியாக அவர்கள் இதனைக் கையாண்டனர். அரசாங்கம் தான் இருப்பதாகவே காட்டிக் கொள்ள இயலாமற் போயிற்று.

**கோகோ 144 சொல்கிறார்:**

என்னைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருந்த அரசியல் இயக்கங்கள் பற்றி நான் அறிவேன். "ப்யூர்டோ ரிக்கர்"கள் ஏன் இப்படி அகதிகளாய் விளிம்பு நிலையில் வாழ்கிறார்கள் என எனக்குப் புரியாவிட்டாலும் சமூகம் எங்கள் மீது ஏற்படுத்தும் அழுத்தத்தை நான் புரிந்திருந்தேன். 'ப்யூர்கரிக்டோர்'கள் என்றால் தட்டு கழுவுபவர்கள், ஷூ பாலிஷ் போடுகிறவர்கள் என்கிற பிம்பத்தை எல்லோர் தலையிலும் ஏற்றியிருந்தார்கள். நாங்கள் எழுதத் தொடங்கியதற்கு இதுவும் ஒரு காரணம்... நான் கோகோ இதுதான் நான். இன்னொரு எச்சில் தட்டு கழுவுபவனாக நான் ஆகப் போவதில்லை."

**லீ சொல்கிறார்:**

''அது என்ன தெரியுமா? அழுகிப்போன, தன்னைத்தானே அழித்துக் கொண்டிருக்கிற ஒரு அமைப்பிற்குள் நாங்கள் ஊடுருவினோம்... வெறித்த சுவர்களின் மீது வண்ணங்களைத் தெளித்தோம். ஒரு செங்கல்லை உருவி இரண்டாக உடைத்து வண்ணத்தைப் பூசி மீண்டும் செருகினோம்... அதுதான் நடந்தது. அச்சு வார்ப்புகளை நாங்கள் உடைத்தோம். இறுகிப்போன சமூகம், இறுகிப்போன வாழ்க்கை முறை ஆகியவற்றை நாங்கள் உடைத்தோம். மக்கள் ரயில்களில் வேலைக்குப் போகிறார்கள், சினிமாவுக்குப் போகிறார்கள். அப்போது ரயில் ஓவியங்கள் அவர்களின் கண்முன் எழுகின்றன. அவை வழக்கமான ஒழுங்கில் இல்லை. அது உங்களைச் சிந்திக்கத் தூண்டுகிறது. வழக்கமான ஒழுங்கு என்றால் என்ன?"

அது அவர்களுக்கு பெருமகிழ்ச்சியை ஊட்டிய கணங்களாக இருந்தன. ஐக்கிய நகர ஓவியர்கள் / ஐக்கிய 'கிராஃபிடி' ஓவியர்கள் என்கிற அமைப்பையும் உருவாக்கினார்கள்.

அழுகிப்போன அமைப்பு அவர்களை உள்வாங்க (Co-opt) முயற்சிக்காமலில்லை. பெரிய நிறுவனங்கள் அவர்களை ஓவியம் வரையச் சொல்லின. ஆனால், அவர்கள் வணிக ஈர்ப்பிற்கு விடை போகத் தயாராக இல்லை. **கோகோ 144** சொல்கிறார்:

"எடுத்துக்காட்டாக தரை விரிப்புகள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று விரிப்பில் கையெழுத்து ஓவியங்கள் தீட்டச் சொன்னது. எங்களுக்கு வியப்பாக இருந்தது. எங்கள் பெயர் பொறித்த விரிப்பை அவர்கள் எங்கே விரிப்பார்கள்? 'மேட்ச்' ஆகிற திரைச்சீலைகளையும் தொங்க விடும்போது அது எத்தனை போலித் தனமாக இருக்கும்? "சுரங்கப் பாதை ரயில் நிலையங்களைப் போல முதலில் உங்கள் வீடுகளைக் கட்டிக் கொள்ளுங்கள்". ஏன் அதைச் செய்ய வேண்டும்? எது முக்கியம் – பணமா இல்லை கலையின் முழுமையா? நாங்கள் நுண் கலைஞர்களாக விரும்பினோம். எங்கள் கலையின் நோக்கத்தை நாங்கள் காக்க விரும்பினோம்."

☆ ☆ ☆

எனினும் 1980களின் தொடக்கத்தில் பல சுரங்கப்பாதை ஓவியர்கள் ஓவிய வியாபாரிகள் மூலமாக நியூயார்க் நகரின் புகழ்பெற்ற 'கிராஃபிடி' கலைஞர்களாகப் புகழ் பெற்றனர். பின் ஐரோப்பாவிலும் அவர்களின் புகழ் பரவியது. அவர்களது ஆக்கங்கள் திரைச் சீலைகளில் தேங்கின. ரயில் ஓவியங்களின் இயக்கம் நின்றது. 'மேற்கத்திய மயமான' இவ் ஓவியங்கள் சமூகத்தின் மேல் தட்டினரால் மிகவும் விரும்பப்பட்டன. **லேடி பிங்க்** சொல்கிறார்:

"எழுபதுகளின் சுரங்கப் பாதை ஓவியங்களுக்கும் 80களின் இந்த ஓவியங்களுக்குமிடையே நிறைய முரண்கள் இருந்தன. திரைச் சீலைகளில் ஓவியங்களை வரைவதில் எந்தப் பிரச்சினையும் (risk) இல்லை. ஒத்த நோக்குடையோருடனான பரஸ்பர உரையாடலுமில்லை. கருப்புச் சேரிகளின் அதிகாரப் பூர்வமான குரலாக அவை இனி விளங்க முடியாது. அவற்றின் இருப்பிற்கான நியாயங்களிலிருந்தும் கலாச்சாரச் சூழல்களிலிருந்தும் பிரிக்கப்பட்டு ஓவிய அரங்குகளில் அவை தொங்க விடப்பட்டபோது கருப்பர்களின் தொல்வரிப்பாணி ஓவியம் (Graffiti) என்கிற நிலையை அவை இழந்தன. ஓவிய சுரங்குகளும் அருங்காட்சியகங்களும் வழங்கும் பாதுகாப்பிற்குள் கருப்பு வரி ஓவியங்கள் நிலைகொள்ள முடியாது."

வண்ணம் தீட்டப்பட்ட சுரங்கப்பாதை ரயில்களின் ஓவியங்கள் வீடுகளையும் வரவேற்பறைகளையும் அலங்கரிக்கத் தொடங்கின. எனினும் ஃபேஸ் 2 போன்றவர்கள் இறுதி வரை இதற்கு ஒப்பவில்லை. அவர்கள் இளைஞர்களாகவும் கலகக்காரர்களாகவும் தொடர்ந்தனர். சந்தைக்கு அவர்கள் தம்மை தகவமைத்துக் கொள்ளவில்லை. அவர்களது கலாச்சாரம் என்பது அவர்களின் அடையாளத்தின் ஓரங்கம். சந்தைத் தேவைகளுக்குத் தக அதை அவர்கள் மாற்றிக் கொள்ள முடியாது. இவர்களில் சிலர் இன்னும் கூட ஓவிய அரங்கு முதலைகளிலிருந்து ஒதுங்கி தங்களது குடியிருப்புகளுக்குள் தொல்வரி ஓவியங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்றனர்.

☆ ☆ ☆

பத்தாண்டு காலப் பிரச்சாரங்களுக்குப் பின்பு 1988ல் ரயில் ஓவியங்களை அழிக்கும் முயற்சியில் அரசு வெற்றி கண்டது. சுற்றிலும் கத்தி பொருத்தப்பட்ட வேலிகள், வேட்டை நாய்கள், போலீஸ் படை ஆகியவற்றின் மூலம் ரயில்கள் அருகில் ஓவியர்களை வரவிடாமல் தடுத்து வைத்து ஓவியங்களைச் சுரண்டித் தள்ளியது சுரங்கப் பாதைப் போக்குவரத்து நிர்வாகம். இதற்கிடையில் சுரங்கப்பாதை ஓவியர்களைப் பற்றி ஏராளமான புத்தகங்களும் வீடியோ நாடாக்களும் வெளிவந்தன. இன்று நியூயார்க் நகர ரயில்கள் 'தூய்மையாக' ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த இளம் கலைஞர்கள் தோற்றுவித்த அந்த இயக்கம் ஐரோப்பா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, நார்வே, டென்மார்க் என பலப்பல நாடுகளில் எதிரொலிப்புகளை இன்றும் ஏற்படுத்தி வருகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# கருப்பாக இருப்பதை எப்படி உணர்கிறேன்

**சோரா நீல் ஹர்ஸ்டன்**

**தமிழில் : நிறப்பிரிகை**

*__சோரா நீல் ஹர்ஸ்டன் (1891-1960)__ ஹார்லெம் மறுமலர்ச்சியின் விளைபொருளான சோரா இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய எழுத்தாளர்களில் ஒருவர். தன்னை ஏதாவது ஒரு தீவில் அடைத்து வைத்து, விரும்பிய பத்தே புத்தகங்களுடன் எஞ்சிய வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என யாரேனும் தண்டித்தால் அந்தப் பத்து புத்தகங்களில் இரண்டு சோராவின் ஆக்கங்களாக இருக்கும் என்று ஒரு முறை குறிப்பிட்டார். __ஆலிஸ் வாக்கர்__ .:ப்ளோரிடா மாநிலத்தின் ஈட்டன்விலி நகரப் பகுதியில் பிறந்த சோராவின் குழந்தைப் பருவம் துயரங்கள் நிறைந்தது. பெற்றோர்களுக்கிடையே நிறைய பிரச்சினைகள். சோராவின் பதின்மூன்றாம் வயதில் அவரது அன்னை இறந்து போகிறார். பின் சிற்றன்னையோடு பிரச்சினைகள். பல்வேறு அனுபவங்களுடன் கூடிய இளமைப் பருவம். பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு நாடோடி நாடகக் குழு ஒன்றில் ஒரு அன்புள்ளம் கொண்ட வெள்ளை நடிகையின் உதவியாளராகச் சில காலம்; பின் 'ஹாவர்ட்' பல்கலைக் கழகத்தில் துண்டு துண்டாகப் படித்து 1924ல் படிப்பை முடிக்கிறார். அதே ஆண்டு அவரது முதல் சிறுகதை* "Drenched in Light" *வெளி வருகிறது.*

*1925ல் நியூயார்க் நகரத்திற்கு குடிபெயர்ந்த சோரா ஹார்லெம்மின் சிறந்த கலைஞராகப் பரிணமிக்கிறார். சோராவின் கட்டுரை ஒன்றால் ஈர்க்கப்பட்ட புகழ்பெற்ற மானுடவியலாளர் __ப்ரான்ஸ் போஸ்__ சோராவை மானுடவியல் துறை ஆய்வுகளுக்கு ஊக்குவிக்கிறார்.*

*__சார்லட் மேசன்__ என்கிற இன்னொரு வெள்ளை மானுடவியலாளரும் சோராவுக்கு உதவுகிறார். முழுக்க முழுக்க ஒரு ஆப்ரிக்க - அமெரிக்கராலேயே தொகுத்து வெளியிடப்பெற்றது எனப் புகழ் பெற்ற* Mules ad Men *என்கிற சோராவின் நாட்டுப்புறக் கதைத் தொகுப்பு 1935ல் வெளிவருகிறது. பெரும் வரவேற்பிற்குள்ளான இந்நூல் வெள்ளையர் பால் கொஞ்சம் தாராளப் பார்வை கொண்டுள்ளது என்கிற விமர்சனத்தையும் சந்திக்க நேர்ந்தது. அவரது முதல் நாவல்* Jovah's Gourd Line *1934-ல் வெளிவந்து பெரும் பாராட்டுக்குள்ளாகியது. ஆய்வுகளுக்காக கரீபியத் தீவுகளுக்கு வந்தபோது அவர் எழுதிய* Their Eyes Were Watching God (1937) *என்னும் இரண்டாவது நாவல் அவரது சிறந்த ஆக்கம் என்பார்கள்.*

*சோராவின் கடைசி நாவல்* Seraph on the Suwane (1948) *ஒரு வெள்ளைப் பெண்மணியைப் பற்றியது. அவரது வாசகர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட அந்நாவல் இனச் சார்பை விட்டு பாதை விலகிய எழுத்து என விமர்சகர்களால் கண்டிக்கப்பட்டது. "நீக்ரோக்கள் வெள்ளையர்களைப்பற்றி எழுதக் கூடாது என்கிற பழைய அற்ப விதியை உடைப்பதே என் நோக்கம்' என்றார் சோரா. அவரது புகழ்பெற்ற தன் வரலாறு* Dust Tracks in the Road (1942) *ஒரு முக்கியமான ஆக்கம். பரவலான வரவேற்பை பெற்ற நூல்.*

*சோராவின் இறுதிக் காலமும் பிரச்சினைகள் நிறைந்ததாக அமைந்தது. பத்து வயதுப் பையன் ஒருவனுடன் தகாத உறவு கொண்டதாக செப்டம்பர் 1948ல் அவர் கைது செய்யப்பட்டார். குற்றமிழைத்ததாகச் சொல்லப்பட்ட காலத்தில் அவர் நாட்டிலேயே இல்லை என்கிற உண்மையைக் கூட பத்திரிகைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. செய்திகள் வெளியிட்டு நாறடித்தன. "ஆண்கள் இது நாட்கள் வரை உருவாக்கிய கொடூரமான கருவிகளின் துணையோடு எந்தக் காரணமுமின்றி என்னை அழிக்கத் துணிந்தது என் இனம்' என வருந்திய சோராவின் அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் பணிப்பெண், நூலகர், நிருபர், ஆசிரியை எனப் பல்வேறு பணிகளில் கழிந்தன. 1960-ல் அவர் இறந்தபோது அவர் புதைக்கப்பட்ட இடத்தில் கல்லறை கூட கட்டப்படவில்லை. 1970ல் அவரது எழுத்துக்கள் மறு கண்டுபிடிப்புக்கும் பெருத்த வரலாற்றுக்கும் ஆளாயின. 1973களில் __ஆலிஸ் வாக்கர்__ அவரது கல்லறையை நிறுவினார்.*

---

நான் கருப்பாக ஆன அந்த நாள் இன்னும் என் நினைவிலிருக்கிறது. எனது பதின்மூன்றாம் வயது வரை '.:ப்ளோரிடா'விலுள்ள நீக்ரோ நகரமாகிய 'ஈட்டன்விலி'யில் வாழ்ந்து வந்தேன். 'ஆர்லண்டோ'வுக்குப் போய்க்கொண்டும் வந்து கொண்டுமிருந்த ஒரு சில வெள்ளையர்களைத் தவிர வேறு வெள்ளை மனிதர்களை நான் அறிந்திருக்கவில்லை. உள்ளூர் வெள்ளையர்கள் தூசு படிந்த குதிரைகளில் வருவார் கள். வடக்கத்திய பயணிகள் கிராமத்து மண் சாலைகளில் சீறிக் கொண்டு கார்களில் செல்வார்கள். தெற்கத்தியர்களை நகரத்தவர்கள் நன்கறிவர். அவர்கள் போகிறதைக் கரும்பு மெல்லுவதை நிறுத்தாமல் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் வடக்கத்தியர்களை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்வதில்லை. பயந்த சுபாவமுள்ள வர்கள் திரைக்குப் பின்னாலிருந்து வடக்கத்தியர் செல்லும் போது வேசாக எட்டிப் பார்ப்பார்கள். கொஞ்சம் தைரியமுள்ள வர்கள் சற்று வெளியே முன் வரை வந்து அவர்கள் வேகமாய்ச்

www.padippakam.com



செல்வதைப் பார்ப்பார்கள். பயணிகள் கிராமத்தை விட்டுச் செல்லும்போது உள்ள மகிழ்ச்சி அளவிற்கு அவர்களைப் பார்க்கிற போது மகிழ்ச்சி ஏற்படும் இவர்களுக்கு.

மற்றவர்களைப் பொறுத்த மட்டில் முன் அறை ஒரு அச்சத்திற்குரிய இடமென்றாலும் என்னைப் பொறுத்தமட்டில் அது உட்கார்ந்து வேடிக்கை பார்க்க வசதியான இடம் ஒரு இருக்கை. வாசற் கதவைப் பிணைத்திருக்கும் மரத்திற்கு மேலாக உட்கார்ந்து கொள்வது எனக்கு ரொம்பப் பிடிக்கும். முதற் காட்சியைப் பார்ப்பதற்கெனவே பிறந்திருக்கிற வனுக்குக் கிடைத்த முன் இருக்கை. காட்சியை ரசித்து அனுபவிப்பது மட்டுமல்ல நான் அதை விரும்புவதை நடிகர்கள் அறிந்து கொள்வதைப் பற்றிக் கவலை கொள்வது மில்லை. கடந்து செல்கையில் அவர்களோடு பேசுவதை வழக்கமாகச் சொண்டிருந்தேன். நான் அவர்களை நோக்கிக் கையசைப்பேன். அவர்கள் திருப்பி வணக்கம் சொல்வார்களானால் ஏதாவது இப்படிச் சொல்வேன்: "எப்படி இருக்கிறீர்கள் - நன்றி - எங்கே போகிறீர்கள்?" காரோ இல்லை குதிரையோ சற்று நிற்கும். வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டவுடன் - 'பிளாரிடா'வில் நாங்கள் சொல்வதுபோல - "இத்துனூண்டு" தூரம் அவர்களோடு போவேன். இந்தச் சமயத்தில் என்னைப் பார்ப்பதற்கு என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது வந்துவிட்டார்களானால் இந்தப் பேச்சுவார்த்தை படக்கென முறிந்து போகும். ஆன போதிலும் எங்கள் மாநிலத்திற்கு வருகை தருபவர்களுக்கு "நல்வரவு" கூறும் முதல் 'புளோரிடியன்' நான்தான். "மியாமி வணிக அவை" இதைத் தயவு செய்து கவனத்தில் எடுத்துக் கொள்ளட்டும்.

இந்தக் காலகட்டத்தில் என்னைப் பொருத்தமட்டில் வெள்ளையர்களுக்கும் கருப்பர்களுக்கும் வித்தியாசம் என்னவெனில் வெள்ளையர்கள் நகரத்தின் வழியே பயணம் மட்டும் செல்கிறவர்கள்; இங்கே வசிக்காதவர்கள். நான் "இத்தினியூண்டு" பேசுவதையும் பாடுவதையும் அவர்கள் விரும்பிக் கேட்பார்கள்; எங்களூர் நடனத்தை நான் ஆடுவதை பார்க்க விரும்புவார்கள். இதற்கென அவர்கள் தாராளமாய் வெள்ளி நாணயங்களை அள்ளித் தருவார்கள். ஆக எனக்கு வினோதமாக இருக்கும். அவர்களுக்காக நான் அதிகம் செய்ய விரும்பினேன். லஞ்சம் கொடுப்பதை நிறுத்துவதை விரும்பினேன். ஆனால் அவர்களுக்கு அது தெரியாது. கருப்பர்கள் காசு கொடுப்பதில்லை. என்னுள் தெறிக்கும் மகிழ்ச்சியான போக்குகளுக்காக அவர்கள் வருந்துவார்கள். இருந்தபோதிலும் நான் அவர்களுடைய சோரா. அவர்களுக்கு, அருகிலுள்ள ஓட்டல்களுக்கு, இந்த நாட்டுக்குச் சொந்தமானவள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய அதே சோரா.

ஆனால் எனக்குப் பதின்மூன்று வயதான போது குடும்பத்தில் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. 'ஜாக்சன்வில்லி' பள்ளிக் கூடத்திற்கு நான் அனுப்பப்பட்டேன். 'ஒலியாண்டர்'களின் நகரமாகிய 'ஈட்டன்விலி'யிலிருந்து சோரா-வாக நான் புறப்பட்டேன். படகிலிருந்து நான் 'ஜாக்சன்விலி' ஆற்றங்கரையில் இறங்கியபோது சோரா செத்துப் போனாள். மலையளவு மாற்றம் என் மீது திணிக்கப்பட்டதாக உணர்ந்தேன். இனி நான் ஆரஞ்சு நாட்டைச் சேர்ந்த சோரா இல்லை. நான் இப்போது ஒரு சின்னக் கருப்புப் பெண். சில அனுபவங்களின் வழியாக நான் இதைப் புரிந்து கொண்டேன். நான் இறுக்கமான கருப்பாய் மாறியதை இதயத்திலும் கண்ணாடியிலும் உணர்ந்தேன்.

ஆனாலும் நான் கருப்பானது ரொம்பச் சோகமயமானதாக இல்லை. பெரும் துக்கம் ஏதும் என் உள்ளத்திற்குள் புதைந்திருக்கவில்லை; கண்களுக்குப் பின் மறைந்திருக்கவில்லை. நான் இதனைக் கண்டு கொள்ளவேயில்லை. தங்களுக்கு மிகவும் இழிவான அழுக்கு வாழ்க்கையை இயற்கை அளித்துவிட்டதாகக் கருதி அதற்காக வருந்தித் தேம்பும் நீக்ரோக் குழுவினரில் ஒருத்தி அல்ல நான். எனது குழப்பம் நிறைந்த போராட்டமான வாழ்க்கைக்கு மத்தியிலும் எனக்கொரு நம்பிக்கை இருந்தது. இந்த உலகம் வலிமையானவர்களுக்கானதுதானேயொழிய தோலின் நிறம் சற்றுச் கூடுதலா அல்லது குறைவா என்பது பெரிய பிரச்சினை இல்லை. நான் அழக்கூடாது. நத்தை நோண்டும் கத்தியைத் தீட்டுவதில் நான் சுறுசுறுப்பாய் இருந்தேன். (உலகத்தை நந்தையாய் உருவகித்து சொல்லப்படும் ஷேக்ஸ்பியர் வரிகளில் அடிப்படையில் சோரா இதனைக் கூறுகிறார்:- மொழி பெயர்ப்பாளர்).

எனக்கு மிகவும் நெருக்கமாக நின்றுகொண்டு யாரோ நான் அடிமைகளின் பேத்தி என்பதை எப்போதும் நினைவூட்டிக்கொண்டே இருந்தார்கள். அடிமைத்தனம் 'கழிந்து' அறுபது ஆண்டுகள் ஆகிவிட்டன. சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து நோயாளி தேறிக்கொண்டிருக்கிறார். நன்றி. அப்பட்டமான அடிமை என்கிற நிலையிலிருந்து என்னை ஒரு அமெரிக்கனாக ஆக்கிய பயங்கரமான போராட்டம் என்னை நோக்கி "வரிசையில் நில்" என்றது.. மறுசீரமைப்புப் பணி "நிலைப்படுத்திக் கொள்" என்றது. முன்னுள்ள தலைமுறை "முன்னேறு" என்றது. நான் பறப்பதற்கு தயாராக இருக்கிறேன். பறப்பதற்காக விரைந்து கொண்டிருக்கும் நான் நின்று திரும்பித் தேம்ப முடியாது. நாகரீகத்திற்காக நான் அளித்த விலை அடிமைத்தனம். நானாகத் தேர்ந்ததல்ல; திணிக்கப்பட்டது. அது ஒரு கொடூரமான சாகசம். என் மூதாதையர்கள் மூலமாக அதற்கு நான் விலை கொடுத்திருக்கிறேன். பெருமைமிக்க இத்தகைய மகத்தான வாய்ப்பு இந்த மண்ணில் வேறு யாருக்கும் கிடைத்ததில்லை. உலகமே வெல்வதற்காக நம் முன் கிடக்கிறது. இழப்பதற்கு நம்மிடம் ஏதுமில்லை. நான் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் மற்றவர்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு புகழோ இல்லை இரண்டு மடங்கு தண்டனையோ பரிசாகக் கிடைக்கும் என்பதை அறியும்போது எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. அழுவதா, சிரிப்பதா எனத் தெரியாது பார்வையாளர்களின் முன் மேடையில் முக்கிய புள்ளியாக நிற்பது மிகவும் பரபரப்பான ஓர் அனுபவம்.

எனது பக்கத்து வீட்டிலுள்ள வெள்ளையரின் நிலை இன்னும் கடினமானது. நான் சாப்பிட அமரும்போது என் நாற்காலியைப் பின்னாலிருந்து இழுப்பதற்கு கருப்பு பூதம் எதுவும் எனக்குப் பின்னால் காத்திருப்பதில்லை. படுக்கையில் எந்தக் கடும் பூதமும் என்னை வந்து மிரட்டுவதில்லை. என்னை அடைவதற்கான விளையாட்டு ரொம்பவும் பரபரப்பானது. ஆனால் உள்ளதைக் காப்பாற்றுவதற்கான விளையாட்டு அப்படிப்பட்டதல்ல.

எல்லாத் தருணங்களிலும் என்னை நான் கருப்பியாக உணர்வதில்லை. இப்போது கூட கருப்புப் பிரக்ஞை அற்ற ஈட்டன்விலி சோராவின் நிலையை என்னால் அப்படி

படிப்பகம்

www.padippakam.com



அடைந்துவிட முடிகிறது. மதீனாவுக்குப் புறப்படுவதற்கு முந்திய மெக்காவிலிருந்த நபிகளைப் போல. முற்றிலும் துல்லியமான வெள்ளைப் பின்னணியில் தூக்கி எறியப்படும் போது மட்டுமே நான் ரொம்பக் கருப்பாக உணர்கிறேன்.

உதாரணமாக பர்னார்டில் இருக்கும்போது. "ஹட்சன் நதிக்கு அருகாமையில்" நான் என் இனத்தை உணர்கிறேன். கடலுக்கு நடுவே கிடக்கும் கருங்குன்றைப் போல ஆயிரம் வெள்ளையர்களுக்கு மத்தியில் நான் மோதுண்டு நிற்கிறேன். ஆனாலும் அவற்றினூடே நான் நானாகவே இருக்கிறேன். அலை எழுந்து என்னை மறைக்கும் போதும் நான் நானாகவே இருக்கிறேன். அலை வீழ்ந்து திரும்பும்போது நான் வெளிப்பட்டு நிற்கிறேன்.

சில வேளைகளில் இது நேர் தலைகீழாக நடப்பது முண்டு. ஒரு வெள்ளையன் எங்கள் மத்தியில் நிலைப்பட நேர்வதுண்டு. முரண் இங்கும் துல்லியமாக வெளிப்படும். எடுத்துக்காட்டாக 'தி நியூ வோல்ட் காபரே' போன்ற இடங்களில் ஒரு வெள்ளையருடன் அமர்ந்திருக்கும் போது என் நிறம் அங்கே உறுத்தும். இருவருக்கும் பொதுவெனப் பெரிதாக ஏதும் இருப்பதில்லை. இருக்கிற ஏதோ சில அற்ப விசயங்களை முணுமுணுத்துக் கொண்டு உள்ளே நுழை கிறோம். ஜாஸ் இசைஞர்களுக்கு அருகில் அமர்கிறோம். வெடித்துக் கிளம்பும் ஜாஸ் இசையில் எங்கள் முணு முணுப்பும் இணைந்து கொள்கிறது. வெட்டி விளையாட்டு களுக்கு நேரமில்லை; நேரடியாக 'ஆர்கெஸ்ட்ரா' பணியில் மூழ்கிவிடுகிறது. மயக்கும் இசையின் லயம் வேகம்.. நெஞ்சு இறுகுகிறது; இதயம் பிளக்கிறது. ஜாஸ் இசை பேரிரைச்சலாய் எழுகிறது; பின்னங்காலை ஊன்றி புராதனக் கோபத்தோடு ஒலித் திரையைத் தாக்குகிறது. பீறிடுகிறது; குத்திக் கிழிக்கிறது.. அப்பாலுள்ள காட்டைப் பிளந்து புயலாய் நுழையும்வரை இது தொடர்கிறது. களியும் மகிழ்ச்சியும் கொப்பளிக்க இந்தப் புனிதம் குறைந்ததைப் பின் தொடர்கிறேன். நான் எனக்குள் காட்டுத்தனமாய் ஆடுகிறேன்; எனக்குள் கூச்சலிடுகிறேன்; ஆரவாரிக்கிறேன்; தலைக்கு மேல் உயர்த்தி என் கட்டாரியை அசைக்கிறேன்; குறிபார்த்து அதனைச் சுழற்றி வீசுகிறேன்... ய்ய்ய்ய்..யா! நான் காட்டுக்குள் இருக்கிறேன். காட்டுத்தனமாய் வாழ்கிறேன். என் உடல் நீலமாகவும் முகம் சிவப்பாகவும் மஞ்சளுமாகவும் வண்ணம் பூசப்பட்டுள்ளது. என் நாடி போர் முரசம் போல் துடிக்கிறது. நான் எதையாவது வெட்டி வீழ்த்த - வலியை ஏற்படுத்த, மரணத்தை வழங்க விரும்புகிறேன். எதை..? எனக்குத் தெரியவில்லை. ஆனால் அதற்குள் அந்த இசைத் துணுக்கு நிறைவுறுகிறது. இசைக் குழுவினர் உதடு களைத் துடைத்துக் கொள்கிறார்கள்; விரல்களுக்கு ஒய்வு கொடுக்கிறார்கள். கடைசி இசையோடு நான் நவநாகரீகமாக நாம் போற்றுகிற அந்தப் பகட்டான மரப் பூச்சில் சாய்கிறேன். தனது இருக்கையில் எந்தவித அசைவுமில்லாமல் அமைதி யாய்ப் புகைத்துக் கொண்டு என் வெள்ளை நண்பன் எதிரே அமர்ந்துள்ளான்.

"இங்கே எப்போதும் இசை நன்றாக இருக்கும்", விரல் முனைகளால் மேசையில் தாளமிட்டவாறே அவன் பேசு கிறான்.

இசை. சிவப்பு மற்றும் ஊதா வண்ணம் மின்னும் அந்த மாபெரும் உணர்வுக் குமிழ்கள் அவனை ஒன்றும் செய்யவில்லை. நான் எதை உணர்ந்தேனோ அதை அவனால் காதுகளில் கேட்க மட்டுமே முடிந்தது. அவன் வெகு தொலைவில்... இடையே வீழ்ந்துவிட்ட பெரும் சமுத்திரம். பெரு நிலப்பரப்பு வழியே மங்கலாக அவன் எனக்குத் தெரிகிறான். அவன் வெள்ளை நிறத்தோடு வெளுத்துத் தெரிகிறான். நான் இன்னும் ஆழமாய்க் கருத்திருக்கிறேன்.

சில சந்தர்ப்பங்களில் எனக்கு இன அடையாள மில்லை. நான் நானாக இருக்கிறேன். எனது தொப்பியைச் சாய்த்து வைத்துக் கொண்டு 'நியூயார்க்' நகரின் தலைமை நூலகமாகிய நாற்பத்திரெண்டாம் தெரு நூலகத்தின் முன்புள்ள சிங்கங்களைப் போல அகந்தையோடு ஹார்லெம் நகரின் ஏழாம் நிழற்சாலையில் அலைந்து திரியும்போது நான் அப்படி உணர்கிறேன். என் உணர்வுகளைப் பொறுத்த மட்டில் 'பாரீஸ்' நகரின் கம்பீரமான 'செயினிட் மிசேல் யூரிவாரி'ல் உள்ள 'பெக்கி ஹாப்கின்ஸ் ஜோய்ஸ்' போல அற்புதமான ஆடை அணிகலன்கள், அரசு மரியாதை, அதிகாரத்தொனி ... என்னிடமில்லை. பேரண்டத்தின் சோரா இதோ எழுகிறாள். நான் காலங்கடந்தவள், இனங் கடந்தவள். நான் என்றென்றைக்குமாய்க் காலங்கடந்த பெண்மை... அதன் ஜொலிக்கும் மணிகளோடு.

அமெரிக்கக் குடிமகளாகவும், கருப்பியாகவும் இருப்பதனால் தனிப்பட்ட உணர்வு எதையும் நான் கொள்ள வில்லை. சுற்றெல்லைக்குள் அலைமோதி நிமிர்ந்து நிற்கும் மாபெரும் உயிர்ப்பின் வெறும் சிறு துளி தான் நான். என் நாடு, சரியோ, தப்போ; இதுதான்.

சில நேரங்களில் நான் ஒதுக்கப்படுவதை உணர் கிறேன். ஆனால் அது என்னைக் கோபமூட்டுவதில்லை. திகைப்படைய மட்டுமே செய்கிறது. எனது உடனிருப்பின் சுகத்தை யாரால் மறுத்துக் கொள்ள முடியும்? அது என்னை மீறியது.

ஆனால் அடிப்படையில் கண்டது கடியதால், நிரப்பி சுவற்றை நோக்கி வீசப்பட்ட ஒரு கருப்புப் பையைப் போல நான் உணர்கிறேன். மஞ்சள், சிவப்பு, வெள்ளை... என மற்ற பைகளோடு ஒன்றாய் சுவற்றை நோக்கி பையை உதறுங்கள். விலை மதிப்பற்றவை முதல் சல்லிக் காசு பெறாதவை வரையிலான ஏராளமான சின்னஞ்சிறு பொருட்கள் விழுந்து சிதறுகின்றன. முதல் தரமான வைரக்கல், தீர்ந்துபோன நூற்கண்டு, உடைந்த கண்ணாடித் துண்டுகள், அறுந்த கயிறுகள், ரொம்ப நாட்களுக்கு முன்பு நசுங்கிப்போன ஒரு கதவின் சாவி, துருப்பிடித்த கத்தி, என்றைக்குமே சாத்திய மில்லாத ஒரு சாலைக்காக சேமித்து வைக்கப்பட்ட பழைய செருப்புகள், தாங்க முடியாத எடைகளைத் தாங்கியதால் வளைந்து போன ஒரு ஆணி, இன்னும் சிறிது வாசம் மிஞ்சியுள்ள உலர்ந்த பூக்கள். உங்கள் கையில் அந்தக் கருப்புப் பை. உங்கள் முன் அதில் நிரம்பியிருந்த கண்டது கடியதுகள் - பைகளுக்குள் இருந்த கண்டது கடியதுகள் போலவே. அவைகளைக் கொட்டினால் மீண்டும் குவித்து எந்தப் பெரிய மாற்றமுமில்லாமல் பைகளை முன் போலவே நிரப்பமுடியும். ஒரு சிறு கருப்புக் கண்ணாடித் துண்டு கூடினாலோ குறைந்தாலோ பெரிதாக ஒன்றும் ஆகிவிடுவ தில்லை. ஒருவேளை அப்படித்தான் முதன் முதலில் பைகளை நிரப்பிய அந்த மாபெரும் பை நிரப்புபவன் செய்திருப்பானோ? யாருக்குத் தெரியும்.

- 1928

படிப்பகம்

www.padippakam.com



அடிமைத் தன் வரலாறு :

# தன்னைப்பற்றித் தானே எழுதிக் கொண்ட ஆப்ரிக்கன் ஒருவனின் சுவையான வாழ்க்கைக் கதையிலிருந்து

**கஸ்தவா வஸ்ஸா என்கிற அவுலத் ஈக்வானா**

**தமிழில் : மோனிகா**

*அவுலத் ஈக்வானா (1745-1797) : அடிமை வரலாற்றின் ஒரு தொன்ம மாதிரியாக அவுலத் ஈக்வானாவின் கதையாடலைக் குறிப்பிடுகிறார்கள். அடிமைகள் 'தன்னைப் பற்றித் தானே எழுதிக் கொண்டவற்றை வெறும் 'தன் வரலாறு* (autobiography) *என்கிற இலக்கிய வகைக்குள் அடக்காமல் அதனை ஒரு தனி இலக்கிய வகையாக - அடிமைக் கதையாடல் - என அழைப்பது வழக்கம். 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இத்தகைய அடிமைக் கதையாடல்கள் அடிமைத்தனத்திற்கெதிரான நேரடி சாட்சியம் என்கிற வகையில் உலக அளவில் கவனம் பெற்றன. ஏராளமான விவரங்கள், தகவல்கள், சாகசங்கள், சோகங்களின் தொகுப்பாக ஈக்வானாவின் கதையாடல் விளங்குகிறது. 1789லிருந்து 1857க்குள் 36 பதிப்புகள் விற்றுத் தீர்ந்தன. அய்ரோப்பிய மொழிகளில் பெயர்க்கவும் பட்டது. 18ம் நூற்றாண்டின் மிகச் சிறந்த ஆப்ரிக்க - அமெரிக்க எழுத்துக்களில் ஒன்றாகக் கருதப்படும் இக் கதையாடல் 'கருப்பர்கள் எழுத்துக்கள் மூலம் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள இயலாதவர்கள் என்கிற கூற்றைப் பொய்ப்பித்த இரு நூற்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மற்றது பி:ல்லிஸ் விட்லியின் கவிதைகள்.*

*ஈக்வானாவுக்கு முன்னும் கூடப் பலர் தங்களது அடிமை அனுபவங்களை எழுதியுள்ளார்கள் எனினும் வெள்ளையர்களின் துணையின்றி முற்றிலும் கருப்பராலேயே எழுதப்பட்ட முதல் அடிமைக் கதையாடலாக இதுவே விளங்குகிறது. எனவே இதுதான் அடிமைத் தனத்தின் கொடூரங்களைச் சரியாகத் தோலுரித்த எழுத்தாகவும், அடிமைத்தனத்தை உடனடியாகவும் முழுமையாகவும் ஒழிப்பதற்குக் குரல் கொடுத்த ஆக்கமாகவும் அமைந்தது.*

*இன்றைய கிழக்கு 'நைஜீரியா-வில் 'எஸ்ஸாகர் என்னும் கிராமத்தில் 'இபோ' இனத்தில் பிறந்த ஈக்வானா பதினோரு வயதில் கடத்தப்பட்டு அடிமையாக விற்கப்படுகிறார். தனக்கு வாய்த்த சாத்தியங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு திறமை மிக்க தீராக வளர்ந்த ஈக்வானா கப்பற்படை லெப்டினண்ட் ஒருவனிடம் உதவியாளராகப் பணியாற்றி மத்திய தரைக் கடற்பயணங்கள் பலவற்றில் பங்கு பெறுகிறார். இந்த வெள்ளைக் கடற்படைத் தலைவன்தான் ஈக்வானாவின் பெயரை* ***கஸ்தவா வஸ்ஸா*** *என மாற்றியமைக்கிறான். பதினாறாம் நூற்றாண்டு ஸ்விடன் மன்னர் ஒருவரின் பெயர் அது. ஆறு ஆண்டுகளில் விடுதலை செய்வதாக வாக்குறுதி அளித்த லெப்டினண்ட் வாக்குறுதியை மீறி ஈக்வானாவை மீண்டும் விற்று விடுகிறான். கடற்பயணங்களிலும் கடல் வணிகத்திலும் தேர்ந்து சொந்தமாகத் தொழில் செய்யும் தகுதியோடு ஈக்வானா விடுதலை பெறும்போது அவருக்கு வயது 21. 1767ல் இங்கிலாந்து வந்த ஈக்வானா பணக்கார வெள்ளையர்களுக்கு முடி திருத்துபவராகப் பணிபுரிகிறார். 'மெத்தாடிஸ்ட்' ஆக மதம் மாறுகிறார். கணிதம் பயில்கிறார்.*

*1773ல் வடதுருவம் நோக்கிப் பயணித்த சாகசக் குழு ஒன்றில் பங்கு பெறுகிறார். மத்திய அமெரிக்கா மற்றும் துருக்கி நாட்டுத் துறை முகங்களுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட ஈக்வானா 1777க்குப் பின் இங்கிலாந்தில் நிரந்தரமாகத் தங்குகிறார். ஆப்ரிக்காவுக்குத் திரும்புவது அவரது ஆசைகளில் ஒன்றாக இருக்கிறது. ஆப்ரிக்காவின் மேற்குக் கடற்கரையிலுள்ள* ***சியர்ரா லியோ*** *-னை நோக்கி மேற்கொள்ளப்பட்ட காலனிய நடவடிக்கை ஒன்றில் பங்கு பெற்ற ஈக்வானா அந்த நடவடிக்கையை விமர்சனம் செய்ததன் விளைவாக அவரது ஆப்ரிக்கா திரும்புகிற ஆசை நிறைவேறாமல் போகிறது.*

*ஈக்வானாவின் நூல் வெளிவந்த பின் இங்கிலாந்து, அயர்லாந்து போன்ற பகுதிகளில் தீவிரப் பயணங்கள் மேற்கொண்டு தனது நூல் விற்பனையில் ஈடுபடுகிறார்.* ***சூசனா கஸ்பன்*** *என்கிற வெள்ளைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட ஈக்வானா 1797ல் லண்டனில் மாணமடைகிறார்.*

---

**அத்தியாயம் இரண்டிலிருந்து...**

என்னைப் பற்றியும் என் நாட்டு வழக்கங்களைப் பற்றியும் கூறிக்கொண்டு அறிமுகம் செய்துகொண்டதில் வாசகர்களின் பொறுமையை சோதித்துவிடவில்லை என்று நம்புகிறேன். காலத்தால் அழித்துவிட முடியாதபடி அவை என் மனதில் ஆழப் பதிந்திருக்கின்றன. நான் என் வாழ்வில் சந்தித்த பல்வேறு ஏற்றங்களும் இறக்கங்களும் பலவிதமான அனுபவங்களும் அவற்றை இன்னும் இறுகப் பதியவே வைத்திருக்கின்றன. தான் பிறந்த நாட்டின் மீது ஒருவர் வைத்திருக்கும் பற்று உண்மையானதோ கற்பனையான

படிப்பகம்

www.padippakam.com



ஒன்றோ, பகுத்தறிவின் அடிப்படையிலானதோ இயல்பான இயற்கை உணர்ச்சியோ என் வாழ்வின் அந்த ஆரம்பக் காட்சிகள், அதன் பெரும்பகுதி சோகம் நிறைந்ததாக இருந்த போதிலும்கூட, இன்பம் தருபவையாகவே இருக்கின்றன.

நான் பிறந்த இடம், காலம், சூழல் பற்றியெல்லாம் வாசகர்களுக்கு ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். என் தந்தை நிறைய அடிமைகளோடு பெரிய குடும்பத்தையும் பெற்றி ருந்தார். என்னையும் என் சகோதரியையும் சேர்த்து நாங்கள் ஏழு பிள்ளைகள். என் சகோதரிதான் ஒரே பெண் பிள்ளை. குடும்பத்தில் நான் கடைசி பையன் என்பதால் அம்மாவின் செல்லப்பிள்ளையாக இருந்தேன். என்னை வளர்ப்பதில் அவள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டாள். எப்போதும் அவள் கூடவே வைத்திருந்தாள்.

மிகச் சிறிய வயதிலிருந்தே நான் போர்க்கலையில் பயிற்சி பெற்று வந்தேன். ஈட்டி எறிவது எனது தினசரிப் பயிற்சியாக இருந்தது. எங்கள் குலத்தின் மாபெரும் வீரர்களுக்குச் செய்வது போல எனக்கும் அலங்காரம் செய்து என் தாய் ரசிப்பாள். இப்படி துன்பம் என்பதே தெரியாமல் வளர்த்த எனக்கு பதினோரு வயது ஆனபோது நிகழ்ந்த அந்தச் சம்பவம் என் இன்பங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தது. சற்று தொலைவில் இருந்த வயல்களுக்கு பெரிய வர்கள் சென்று பிறகு குழந்தைகள் சிறுவர்கள் எல்லோரும் யாராவது ஒருவரது வீட்டில் கூடி விளையாடத் தொடங்கு வோம். எங்களில் ஒன்றிரண்டு பேர் மட்டும் ஏதாவது ஒரு மரத்தில் ஏறி யாராவது திருடன் அல்லது பிள்ளை பிடிப்பவன் வருகிறானா என்று கண்காணிப்பது வழக்கம். ஏனென்றால், எங்கள் பெற்றோர்கள் இல்லாதிருந்த இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வந்து சிறுவர்களைத் தூக்கிக் கொண்டு போவது அப்போது அடிக்கடி நிகழ்ந்து வந்தது. ஒருநாள் இதுபோல, எங்கள் வீட்டு முற்றத்திலிருந்த ஒரு மரத்தின் மீது ஏறி நான் காவல் காத்துக் கொண்டிருந்தபோது நிறைய சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த எங்கள் பக்கத்து வீட்டிற்குள் ஒரு பிள்ளை பிடிப்பவன் நுழைவதைப் பார்த்து விட்டேன். உடனே நான் சத்தம் போட சற்று வளர்ந்த பையன்கள் சேர்ந்து பெரியவர்கள் வரும்வரை அவன் தப்பித்துவிடாதபடி கட்டிப்போட்டனர். ஆனால், ஐயோ! இது நடந்து சிறிது நாட்களுக்குள்ளாகவே, இதேபோல பெரிய வர்கள் இல்லாத சமயத்தில் என்னை ஒருவன் தூக்கிப் போவானென்று என் தலையில் எழுதியிருந்தது. ஒரு நாள், வழக்கம்போல பெரியவர்கள் எல்லோரும் வயல்களுக்குப் போய்விட்ட பிறகு நானும் என் சகோதரியும் மட்டும் வீட்டை கவனித்துக் கொண்டு தனியாக இருந்தோம். அப்போது, ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் சத்தம் செய்யாமல் எங்கள் வீட்டுச் சுவரேறி குதித்து, நாங்கள் கத்துவதற்குக்கூட சந்தர்ப்பம் தராமல் ஒரு நிமிடத்தில் எங்கள் இருவரையும் பக்கத்திலிருந்த காட்டுக்குள் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டனர். அங்கு எங்கள் கைகளைக் கட்டிப்போட்டுவிட்டு இரவு வரும் வரை எங்களை தூக்கிக்கொண்டு நடந்தனர். அந்த இரவு, திருடர்கள் வழக்கமாக ஓய்வெடுக்கும் ஒரு சிறிய வீட்டில் கழிந்தது. எங்கள் கைகளை அவிழ்த்துவிட்டிருந்தும் கூட எங்களால் எதுவுமே சாப்பிடமுடியவில்லை. சோர்வுற்று துயரத்தில் விழுந்து கிடந்த எங்களுக்கு தூக்கம் மட்டுமே கொஞ்சம் நிம்மதியைத் தந்தது. மறுநாள் காலை கிளம்பி நாள் முழுக்க நாங்கள் நடந்தோம். வெகு நேரம் வரை காட்டு வழியாக நடந்தவர்கள் கடைசியில் ஒரு தெருவுக்கு வந்தோம். அது எனக்குப் பரிச்சயமானது போலத் தெரிந்தது. அதன் பிறகுதான் எனக்கு தப்பிக்க முடியும் என்ற நம்பிக்கை வந்தது. கொஞ்சதூரம்கூட நடந்திருக்கமாட்டோம். அப்போது தூரத்தில் சிலர் நிற்பது தெரிந்து நான் கத்த ஆரம்பித்தேன். ஆனால், என்னைத் தூக்கி வந்தவர்கள் என்னைத் கட்டி வாயை அடைத்து ஒரு பெரிய சாக்குப் பைக்குள் போட்டுக் கொண்டனர். என் சகோதரியையும் இதுபோலவே செய்தனர். அந்த ஆட்கள் பார்வையிலிருந்து மறையும் வரை எங்களை இப்படித் தூக்கிச் சென்றனர். அன்று இரவு ஓய்வெடுக்கத் தங்கியபோது அவர்கள் எங்களுக்கு சாப்பிடக் கொடுத்தனர். ஆனால் நாங்கள் மறுத்துவிட்டோம். கண்ணீரில் நனைந்து ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டு இருந்ததே எங்களுக்கு சற்று ஆறுதலாக இருந்தது. ஆனால் ஐயோ! இந்தச் சிறிய ஆறுதலும்கூட சீக்கிரமே பறிக்கப்பட்டது. மறுநாள் நான் வாழ்க்கையில் மறக்கவே முடியாத சோகம் நிகழ்ந்தது. நாங்கள் பிரிக்கப்பட்டோம். எவ்வளவோ கெஞ்சி யும் அவர்களுக்கு இரக்கம் பிறக்கவில்லை. அவளை என்னிடமிருந்து பிய்த்தெடுத்து எங்கோ தூக்கிக் கொண்டு போய்விட்டனர். சொல்ல முடியாத துன்பத்தில் நான் விழுந்தேன். மருகி மருகி தொடர்ந்து அழுதுகொண்டி ருந்தேன். பலநாட்களுக்கு என் வாயில் திணிக்கப்பட்டதைத் தவிர எதையுமே உண்ணவில்லை. பலநாட்கள், வெகுதூரம் இப்படிப் பயணம் செய்து, பல ஆட்களிடம் கைமாறி கடைசியில் பசுமையாகத் தெரிந்த ஒரு நாட்டில் ஒரு குலத் தலைவனுக்கு விற்கப்பட்டேன். இவனுக்கு இரண்டு மனைவி களும் சில குழந்தைகளும் இருந்தனர். அவர்கள் எல்லோரும், முக்கியமாக என் தாயைப் போலவே இருந்த அந்த முதல் மனைவி என்னை சமாதானம் செய்வதற்கு ஆனதெல்லாம் செய்து என்னை நன்றாகவும் கவனித்துக் கொண்டனர். என் வீட்டிலிருந்து பல நாட்கள் பயணம் செய்து வெகுதூரம் கடந்து வந்துவிட்டிருந்தபோதிலும் இவர்களும் எங்கள் மொழியையே பேசினர். என் முதல் எஜமானர் ஒரு கொல்லன். என்னுடைய வேலை உலை ஊதுவது. இவையும் எங்கள் ஊரில் நான் பார்த்தவற்றைப் போலவே இருந்தன. ஆனால் அடுப்புகள் மட்டும் வித்தியாசமாக இருந்தன. சுற்றிலும் தோல் பொருத்தப்பட்டு ஒரு குச்சி சொருகப் பட்டிருந்தது. ஒரு ஆள் நின்றுகொண்டு சாராயப் புட்டிகளி லிருந்து கைபம்பினால் நீரை வெறியேற்றுவது போல அதை அழுத்தவேண்டும் அவர் உருக்கியது தங்கமாக இருக்க வேண்டும். அது தகதகவென்று மஞ்சள் நிறத்தில் இருந்ததை யும் பெண்கள் அதை கைகளிலும் இடுப்பிலும் அணிந்து கொண்டதையும் வைத்துச் சொல்கிறேன். ஒருமாதம் போன பிறகுதான் அவர்கள் வெளியே சற்று தூரம் வரை போக என்னை அனுமதித்தார்கள். இந்த சுதந்திரத்தை என்

படிப்பகம்

www.padippakam.com



வீட்டிற்குச் செல்லும் வழியை விசாரிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் பயன்படுத்திக்கொண்டேன். அதற்காகவே சில நேரங்களில் குளிர்ந்த மாலைப்பொழுதுகளில் திருமணமாகாத கன்னிப் பெண்களோடு சேர்ந்து நீர் எடுக்க ஊற்றுகளுக்கு சென்று வந்தேன். பயணம் செய்த நாட்களின்போது சூரியன் தோன்றும் திசையையும் மறையும் திசையையும் விடாமல் கவனித்து வந்தேன். என் வீடு சூரியன் உதிக்கும் திசையில் இருந்ததையும் குறித்துக்கொண்டேன். கிடைக்கிற முதல் சந்தர்ப்பத்தில் அந்தத் திசையில் தப்பி ஓடிவிடவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன். ஒவ்வொரு நொடியும் என் பெற்றோர்களையும் நண்பர் களையும் விட்டுப் பிரிந்த துன்பம் என்னை அழுத்திக் கொண்டு இருந்தது. இந்த வீட்டுக் குழந்தைகளோடு என்னதான் கரிசனமாக பழகினாலும் அவர்களோடு சேர்ந்து உண்ணமுடியாத கொடுமை ஒவ்வொரு நிமிடமும் என் விடுதலை தாகத்தை தூண்டிக்கொண்டிருந்தது. இப்படி தப்பித்துப் போகும் வழியை நான் திட்டமிட்டுக்கொண்டிருந்த போது என் எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் குலைத்த துரதிர்ஷ்டவசமான ஒரு சம்பவம் நடந்தது. சில நேரங்களில் ஒரு வயதான அடிமை சமையல்காரிக்கு உதவிகள் செய்யவும் கோழிக்குஞ்சுகளை பார்த்துக் கொள்ளவும் என்னை விடுவதுண்டு. ஒரு நாள் காலை கோழிக் குஞ்சுகளுக்கு தீனி போட்டுக் கொண்டிருந்தபோது நான் விளையாட்டாக வீசிய சிறு கல்பட்டு ஒன்று செத்துவிட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் அந்த அடிமைக் கிழவி அதைப் பற்றி விசாரித்தபோது நான் நடந்ததை அப்படியே சொல்லி விட்டேன். (என் தாய் எந்தக் காரணம் கொண்டும் பொய் சொல்லக்கூடாது என்று சொல்லியிருந்ததால் உண்மையை அப்படியே சொல்லிவிட்டேன்). கடுங்கோபம் கொண்ட அவள் இதற்குத் தகுந்த பலன் கிடை.க்காமல் போகாது என்று பயமுறுத்தினாள். எஜமானர் அப்போது வீட்டில் இல்லாததால் நேராக எஜமானியிடம் போய் விஷயத்தை சொல்லிவிட்டாள். நல்ல பிரம்படி கிடைக்கப்போகிறது என்று நினைத்து பயந்து போனேன். வீட்டில் நான் செல்லப்பிள்ளையாக இருந்ததால் எவருமே என்னை அடித்தது கிடையாது. அதனால் அடிவாங்குவதைப் பற்றி நினைத்ததுமே என் உடல் நடுங்கியது. இனியும் அங்கு இருக்கக்கூடாது என்று முடிவு செய்து அருகிலிருந்த அடர்ந்த புதர்களுக்குள் ஓடி ஒளிந்து கொண்டேன். சற்று நேரத்திற்கெல்லாம் என்னைத் தேடிக் கொண்டு வந்த எஜமானியும் அடிமையும் நான் காணாததால் வீடு முழுக்க என்னைத் தேடினர். அவர்கள் கூப்பிட்டதற்கு நான் பதில் குரலே கொடுக்காமல் இருந்ததால் நான் ஓடி விட்டேன் என்று நினைத்துவிட்டனர். உடனே அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து என்னைத் தேடத் தொடங்கினார்கள். எங்கள் பகுதியைப் போலவே அங்கும் வீடுகளைச் சுற்றியும் அடர்ந்த மரங்களும் புதர்களும் அருகிலேயே காடும் இருந்ததால் எவ்வளவு தீவிரமாகத் தேடினாலும் அகப்பட்டுக்கொள்ள முடியாத படிக்கு நன்றாக ஒளிந்துகொள்ள முடியும். நாள் முழுக்கவும் எல்லோரும் என்னைத் தேடிக்கொண்டிருந்தார்கள். சில சமயம் நான் ஒளிந்திருந்த இடத்துக்கு வெகு அருகில் கூட வந்தார்கள். பக்கத்துப் புதர்களில் சிறு சலசலப்பு கேட்ட போதெல்லாம், கண்டபிடித்துவிடுவார்கள், எஜமானரிடம் சரியான உதை கிடைக்கப் போகிறது, அவ்வளவுதான் தொலைந்தோம் என்று நினைத்தேன். அவர்களுடைய சைகைகள், அசைவுகள் கேட்கிற நெருக்கத்தில் கூட பலமுறை வந்தார்கள்; திரும்பிப் போவது சுத்தமாக சாத்தியமில்லை என்பதும் தெரிந்துபோனது. பலர் நான் என் வீடு நோக்கி ஓடிவிட்டிருப்பேன் என்று ஊகித்தார்கள். ஆனால் நாள் கடக்கவேண்டிய தூரம் அதிகம் என்பதாலும், பயங்கர காடுகள் நிறைந்த சிக்கலான பாதை என்பதாலும் வழியில் தொலைந்து விட்டிருப்பேன் என்றும் பேசிக் கொண்டார்கள். நான் வீட்டுக்கு போய்ச்சேரவே முடியாது என்றார்கள். இதையெல்லாம் கேட்டதும் என்னைப் பயங்கர அச்சம் பிடித்துக் கொண்டது. இரவு நெருங்க நெருங்க பயம் அதிகமாகியது. இதையெல்லாம் கேட்பதற்கு முன்னதாக எப்படியும் தப்பித்துப் போய்விடுவது என்று முடிவு செய்திருந்தேன். இருட்டானதும் ஒளிந்திருந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிடலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால், இப்போது என் முயற்சியில் எந்தப் பலனும் இல்லை என்று தெரிந்தது. ஒருவேளை காட்டு மிருகங்களிடமிருந்து தப்பித்தாலும் மனித மிருகங்களிடமிருந்து தப்பிக்கவே முடியாது என்று நினைத்தேன். வழி தெரியாமல் காட்டில் தொலைந்து விடுவேன் என்பதை மட்டும் நன்றாகப் புரிந்து கொண்டேன். வேட்டையாடப்படுகிற மானைப் போல எனது நிலைமை இருந்தது:

ஒவ்வொரு இலையும் கிசுகிசுக்கிற ஒவ்வொரு
மூச்சுக் காற்றும்
ஒரு பகைவனைக் கூற, பகைவனோ மரணத்தைக்
காட்டினான்.

அடிக்கடி சலசலத்த சருகுகள் பாம்புகள் நெளிவதைச் சொல்லின. எந்த நிமிடமும் ஒன்று என்னைக் கொத்தலாம் என்று எதிர்பார்த்தேன். இது என்னுடைய பயத்தை இன்னும் அதிகரித்தது. இனிமேலும் தாங்கிக்கொள்ளமுடியாது என்ற அளவுக்கு அச்சம் என் உடல் முழுக்கப் பரவியது. வெகுநேரம் கழித்து புதரை விட்டு வெளியே வந்தேன். அன்று முழுவதும் சாப்பிடாததால் பசியும் மயக்கமுமாக இருந்தது. மெதுவாக ஊர்ந்து எஜமானருடைய பட்டறைக்குள் போனேன். என் பயத்திலிருந்தும் வலியிலிருந்தும் யாராவது விடுவிக்கமாட்டார்களா, செத்துதான்போக மாட்டேனா என்று எண்ணிக் கொண்டே அங்கிருந்த அடுப்பில் குவிந்திருந்த சாம்பலில் போய் படுத்துக்கொண்டேன். காலையில் சரியாக நான் கண் விழித்த நேரத்தில் நெருப்பு பற்ற வைக்க அங்கு வந்த அந்த வயதான அடிமை அங்கு என்னைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டுப் போனாள். அவளுடைய கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. என்னை அன்பாகத் தடவிக் கொடுத்து எஜமானரிடம் பேசி எனக்கு ஒன்றும் நடக்காமல் காப்பாற்றுவதாக சொன்னாள்.

படிப்பகம்

www.padippakam.com



சொன்னபடியே செய்தாள். என்னை லேசாக கடிந்துகொண்ட அவர் இனி என்னை யாரும் அவமானப்படுத்தக்கூடாது. நன்றாக பார்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லி வைத்தார்.

இதற்குப் பிறகு கொஞ்ச நாட்களுக்குள்ளேயே முதல் மனைவி வழியாக என் எஜமானருக்குப் பிறந்த ஒரே பெண் நோய்வாய்ப்பட்டு இறந்துபோனாள். மனம் நொந்து போன அவர், கொஞ்சம் கவனிக்காமல் விட்டிருந்தால் தற்கொலை செய்து கொண்டுவிடுகிற அளவுக்குப் பைத்தியம் பிடித்தவ போல ஆகிவிட்டார். என்றாலும் சிறிது காலம் சென்றதும் ஒருவாறு தேற்றிக்கொண்டார். நான் மறுபடியும் விற்கப் பட்டேன். இப்போது சூரியன் உதிக்கும் திசைக்கு இடது பக்கமாக பலவிதமான ஊர்கள் வழியாகவும் அடர்த்தியான பெருங்காடுகளின் ஊடாகவும் கொண்டுபோகப்பட்டேன். என்னை வாங்கியவர்கள் நான் சோர்ந்துவிட்ட போதெல்லாம் அவர்களுடைய தோள்களிலும் முதுகிலும் என்னைச் சுமந்துகொண்டு நடந்தார்கள். நாங்கள் சென்ற வழிநெடுக சீரான இடைவெளியில் அடக்கமான கொட்டகைகள் இருந்தன. வணிகர்களுக்கும் வழிப்போக்கர்களுக்காகவுமே கட்டப்பட்ட இந்த கொட்டகைகளில் பெரும்பாலும் அவர்களோடு சேர்ந்து பயணித்த மனைவிகளோடு தங்கினர். பாதுகாப்பிற்காக அவர்கள் எப்போதும் ஆயுதந்தறித் திருந்ததும் தெரிந்தது.

என் சொந்த ஊரை விட்டுப் பிரிந்து கடற்கரையை அடையும்வரை என் மொழியை பேசுகிற நபர்கள் ஒருசிலரை யாவது சந்திக்க முடிந்தது. வெவ்வேறு பிரதேசங்களிலிருந்தவர்களுடைய மொழிகளுக்குள் அவ்வளவாக பெரிய வித்தியாசங்கள் தெரியவில்லை. அதனால், அவற்றை எளிதில் கற்றுக்கொள்ளவும் முடிந்தது. ஆப்பிரிக்காவின் பல்வேறு பகுதிகளுக்கு ஊடாக நான் இவ்வாறு பயணித்த போது இரண்டு மூன்று மொழிகளையும் கற்றுக்கொண்டேன். ஆனால், ஐரோப்பியர்கள் குறிப்பாக ஆங்கிலேயர்களுடைய மொழி முற்றிலும் வித்தியாசமாக இருந்தது.

ஆக, இப்படி என் பயணம் நீண்டு கொண்டிருந்தது. ஒருநாள் மாலை, நான் தங்கியிருந்த விட்டிற்கு முற்றிலும் எதிர்பார்க்காத ஒரு நேரத்தில், யார் வந்தது என்று நினைக்கிறீர்கள். என் சகோதரி! என் அருமைச் சகோதரி! என்னைப் பார்த்த மாத்திரத்தில் அவள் வீறிட்டுக் கத்திக் கொண்டு ஓடி வந்து என்னைக் கட்டிக் கொண்டாள். வெகு நேரத்திற்கு எங்களால் எதுவுமே பேச முடியவில்லை. ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டு நீண்ட நேரம் அழுதோம். இந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் எல்லோரும் உணர்ச்சிவயப்பட்டுப் போனார்கள். ஆனால், ஒரு விஷயத்தை மட்டும் ஒப்புக்கொள்ள வேண்டும்; ஓடிவிடாமல் இருப்பதற்காக எப்போதாவது கட்டிப் போடுவதைத் தவிர அந்த கருப்பு எஜமானர்கள் தங்கள் அடிமைகளை எந்த விதத்திலும் இழிவுபடுத்துவதில்லை. நாங்கள் உடன்பிறந்த வர்கள் என்பதைத் தெரிந்துகொண்டதும் அவர்கள் எங்களை சேர்ந்தே இருக்க அனுமதித்தார்கள். அவர்களில் எங்களை வாங்கியிருந்தவன் இருவருக்கும் நடுவில் படுத்துக்கொள்ள அவனது மார்பின் குறுக்காக கைகளை கோர்த்துக்கொண்டு இரவு முழுவதும் படுத்திருந்தோம். சேர்ந்துவிட்ட மகிழ்ச்சியில் கொஞ்ச நேரம் எங்கள் துன்பங்களையெல்லாம் மறந்திருந்தோம். ஆனால் இந்த மகிழ்ச்சியும்கூட சீக்கிரத்தி லேயே முடிவுக்கு வந்தது. காரணம், அந்தக் காலை முழுதாக விடிவதற்குள்ளேயே அவள் மறுபடியும் என்னிடம் இருந்து நிரந்தரமாக பிரிக்கப்பட்டாள்! முன்பு அனுபவித்ததை யெல்லாம் விட இப்போது இன்னும் மோசமான துக்கத்தில் விழுந்தேன். அவளைச் சந்தித்ததில் கிடைத்த கொஞ்சநஞ்ச மகிழ்ச்சியும் போய் இப்போது அவள் கதி என்னவாகும் என்று நினைத்து கவலைப்பட்டேன். கூட இருந்து ஆறுதல் சொல்ல நான் கூட இல்லாத நிலையில் அவள் என்னைவிட மோசமான துன்பங்களில் சிக்கிக் கொண்டுவிட்டால் என்ன ஆவது என்று நினைத்து துவண்டேன்.

என் சகோதரியை விற்ற சில நாட்களுக்குள்ளாகவே என்னையும் அவர்கள் விற்றார்கள். பலநாட்கள், பல்வேறு இடங்கள் பயணித்து கடைசியில் ஆஃப்ரிக்காவில் நான் அதுவரையிலும் பார்த்திராத ஒரு அழகான பிரதேசத்தில் இருந்த டின்மாஹ் என்ற டவுனுக்கு கொண்டு போகப் பட்டேன். எண்ணற்ற ஓடைகள் சலசலத்த அந்த டவுன் மிகவும் வளமாக இருந்தது. ஓடைகள் எல்லாம் சேர்ந்து டவுனின் மத்தியில் ஒரு பெரிய குளம் உருவாகியிருந்தது. இங்கு தான் நான் முதன் முதலாக தேங்காயைப் பார்க்கவே செய்தேன். நான் சாப்பிட்டிருந்த கொட்டைப் பருப்புகள் எல்லாவற்றையும் விட அது ருசியாகப் பட்டது. பழுத்துக் குலுங்கிய மரங்கள் வீடுகளைச் சுற்றி எங்கும் இருந்தன. எங்கள் ஊரில் இருந்ததைப் போலவே, வீடுகள் நன்கு மெழுகி பளிச்சென்று வெள்ளை அடிக்கப்பெற்று இருந்தன. விரல் நகத்தளவு இருந்த வெள்ளைச் சிப்பிகளை அவர்கள் பணமாக பயன்படுத்தினார்கள். ஒரு பணக்கார வியாபாரிக்கு நூற்றி எழுபத்தியிரண்டு சிப்பிகளுக்கு நான் விற்கப்பட்டேன். அவனுடைய வீட்டில் ஒரு மூன்று நாட்கள் தான் இருந்திருப்பேன். அதற்குள் அவனுக்குப் பக்கத்து வீட்டில் இருந்த ஒரு பணக்கார விதவையும் தன் வயதும் உருவமுமே இருந்த அவளுடைய ஒரே மகனும் ஒரு நாள் மாலை அதன்னுடைய வீட்டிற்கு வந்திருந்தபோது என்னைப் பார்த்ததும் விரும்பி விலைகொடுத்து வாங்கிக்கொண்டார்கள். ஆஃப்ரிக்காவில் நான் பார்த்ததிலேயே அழகான அவளுடைய வீடு ஒரு ஓடையை ஒட்டி அமைந்திருந்தது. விஸ்தாரமான அறைகள் நிறைந்த அந்த வீட்டில் அவளுக்கு பணிபுரிய சில அடிமைகளும் இருந்தனர். மறுநாள் என்னைக் குளிப்பாட்டி வாசனை திரவியங்கள் தடவி பிறகு மதிய உணவு கொடுத்தார்கள். அவர்களோடு சேர்ந்தே என்னை சாப்பிடச் சொன்னார்கள். இது எனக்கு நம்பமுடியாத ஆச்சரியமாக இருந்தது. ஒரு அடிமையோடு, சுதந்திர மனிதனாக இருந்த அந்தப் பெரிய இடத்துப் பையன் சமமாக அமர்ந்து சாப்பிட்ட அந்த ஆச்சரியத்தை என்னால் வெளிக் காட்டாமல்

படிப்பகம்

www.padippakam.com



இருக்கமுடியவில்லை. ஆனால் அவனோ, வயதில் மூத்தவனாக நான் இருப்பதைச் சொல்லி நான் சாப்பிடாமல் எதையும் தொடக்கூட மறுத்தான். அங்கு அவர்கள் என்னை நடத்திய விதம் நான் ஒரு அடிமை என்பதையே மறக்க வைத்தது. அவர்களுடைய மொழி கிட்டத்தட்ட எங்களுடைய மொழியைப் போலவே இருந்ததால் பேசிக் கொள்வதில் எங்களுக்கு எந்தச் சிரமமும் இருக்கவில்லை. அவர்களுடைய மரபுகளும் வழக்கங்களும் கூட எங்களுடையதைப் போலவே இருந்தன. எங்களைக் கவனிக்கவென்று தனியாக அடிமைகள் இருந்தனர். நாங்கள் இருவரும் சிறுவர்களோடு சேர்ந்து முன்பு நான் எங்கள் வீட்டில் விளையாடியது போலவே ஈட்டி, வில் - அம்புகள் வீசி விளையாடினோம். என் பழைய மகிழ்ச்சி திரும்பிய நிலையில் இரண்டு மாதங்கள் கழிந்தன. அவர்கள் என்னை தத்து எடுத்துக் கொள்வார்கள் போலத் தெரிந்தது. என்னுடைய துயரங்களை மெதுமெதுவாக மறந்து இப்போதைய நிலைமையை உள்ளபடியே ஏற்றுக்கொள்ள என்னை பக்குவப்படுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் சற்றும் எதிர்பாராமல் என் மயக்கங்கள் ஒருநாள் கலைந்து போயின. ஒருநாள் அதிகாலை என் அன்பான அந்த எஜமானரும் அவர் தாயாரும் தூங்கிக் கொண்டிருக்கும் போது என் கனவுகளிலிருந்து எழுப்பி நான் அதுவரையிலும் நினைத்துக்கூட பார்த்திராத துயரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டேன்.

நினைத்துப் பார்த்திராத மகிழ்ச்சியைப் பற்றி கனவு கண்டு கொண்டிருந்த அதே நொடியில் நான் நினைத்தே பார்த்திராத துயரங்களுக்கு மத்தியில் விழச்சபிக்கப் பட்டிருந்தேன். இப்போது நான் எதிர்கொண்ட மாற்றங்கள் நான் சற்றும் எதிர்பார்க்காமல் திடீரென்று நிகழ்ந்தது போலவே மிகுந்த துன்பம் தருபவையாகவும் இருந்தன. இந்த மாற்றம் இன்பத்தின் உச்சியிலிருந்து வார்த்தைகளால் விளக்க முடியாத கஷ்டங்களும் கொடூரங்களும் நிறைந்த காட்சிக்கு என்னைத் தள்ளியது. எனக்கு நிகழ்ந்த துயரங்களை நடுக்கமின்றி சொல்ல என்னால் முடியாது.

அதுவரை நான் கடந்து வந்த பிரதேசங்களும் மக்களும் ஏதோ ஒரு விதத்தில் எங்களுடைய பழக்கங்கள் வழக்கங்கள் மொழியை பிரதிபலிப்பவர்களாகவே இருந்தனர். ஆனால் இப்போது நான் சேர்ந்த இடத்தில் வாழ்ந்தவர்கள் எல்லா விதங்களிலும் மாறுபட்டிருந்தனர். இந்த வித்தியா சங்கள் அதிலும் குறிப்பாக அவர்கள் சுன்னத் செய்து கொள்ளாதது என்னைத் திகைக்க வைத்தது. அவர்கள் இரும்புப் பாத்திரங்களில் சமைத்தது, வைத்திருந்த ஐரோப்பிய வகையிலான கத்திகள், அம்புகள், மற்போர் செய்தது இவையெல்லாம் நான் பார்த்ததே இல்லை. அவர்களுடைய பெண்கள் எங்கள் பெண்களைப் போல இல்லை. அடக்கம் என்பதே தெரியாமல் ஆண்களோடு சேர்ந்து சாப்பிட்டு, குடித்து, படுத்தது எச்சரிச்சலாக இருந்தது. ஆனால் எல்லா வற்றையும் விட அவர்களிடத்தில் பலி யிடுவதோ நேர்ந்து கொள்வதோ இல்லாததுதான் எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. சில இடங்களில் அவர்களில் சிலர் தங்களை வடுக்களால் அலங்கரித்துக்கொண்டனர்; சிலர் தங்கள் பற்களைத் தேய்த்து கூராக்கிக்கொண்டனர். சில நேரங்களில் என்னையும் அவர்கள் அதுபோல அலங்கரிக்க விரும்பி னாலும் நான் அதற்கு இடம் கொடுக்கவே இல்லை. இப்படி யெல்லாம் செய்துகொள்ளாத வேறு மக்களிடம் ஒருநாள் போக வேண்டியிருக்கும் என்று நினைத்து உறுதியாக மறுத்துவிட்டேன். கடைசியாக, படகுகள் நிரம்பி வழிந்த ஒரு பெரிய ஆற்றின் கரைக்குப் போய்ச் சேர்ந்தேன். இந்தப் படகுகளில் எல்லாவிதமான வீட்டுப் பொருட்களையும் வைத்துக் கொண்டு வாழ்ந்தார்கள். எங்கள் ஊரில் சிறிய ஓடைகளையும் குளங்களையுமே பார்த்திருந்த எனக்கு இவ்வளவு பெரிய நதி பெரிய அதிசயமாக இருந்தது. ஆனால் என்னை ஒரு படகில் ஏற்றி துடுப்புகளை அசைக்கத் தொடங்கியதும் ஆச்சரியம் அச்சமாகிவிட்டது. அந்தப் பகல் பொழுது முழுவதும் பயணித்து இருட்டத் தொடங்கியதும் கரைக்கு ஒதுங்கினோம். சிலர், தங்கள் படகுகளை கரைக்கு இழுத்து வந்தார்கள்; சிலர் நதியிலேயே இருத்தி அதிலேயே சமைத்து உண்டு உறங்கினார்கள். கரையில் இருந்தவர்கள் சிறிய வீடுகளைப் போல இருந்த கூடாரங்களை அமைத்தனர். அதில் ஒன்றில் நான் உறங்கினேன். மறுநாள் காலை, உணவை முடித்துக்கொண்டு முந்தைய நாளைப் போலவே பயணம் செய்தோம். சில இடங்களில் பெண்களும் ஆண்களும் நீருக்குள் குதித்து நீந்துவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனேன். இப்படி, ஆறு அல்லது ஏழு மாதங்கள் நிலத்திலும் நீரிலும் பலவிதமான நாடுகள், தேசங்கள் வழியாக பயணித்த பிறகு கடற்கரையை அடைந்தோம். இந்தக் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள், நான் கைமாறிய நபர்கள், பார்த்த பலவிதமான மக்களின் வித்தியாசமான பழக்கங்கள், வழக்கங்கள் எதையும் நான் மறக்கவில்லையென்றாலும்கூட அவை அனைத்தையும் இங்கு சொல்லிக் கொண்டிருப்பது சலி ப்பூட்டுவதாக, சுவவாரசியமற்றதாக இருக்கும். அதனால் இந்த சில விவரங்களை மட்டும் சொல்வது போதுமென்று நினைக் கிறேன். நான் பயணித்த அத்தனை இடங்களிலும் இயற்கை வளம் கொழித்திருந்தது. வாழை, பரங்கி முதலிய காய் கனிகள், நிறைய கோந்து மரங்கள், மஹோகனி மரங்கள், காடு போல வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் என்று எல்லா இடங்களிலும் மனிதர்களின் உழைப்பில் வளர்ந்த வளங்கள். அப்புறம் போன இடங்களில் எல்லாம் பார்த்தவர் வாயி லெல்லாம் புகையிலை. ஆனால், முன்னர் குறிப்பிட்டதைத் தவிர எந்த வகையான பெரிய இயந்திரங்களும் ஒரு இடத்திலும் இல்லை. எல்லா இடங்களிலுமே ஆண்களும் பெண்களும் பயிர்த் தொழில் மட்டுமே செய்தார்கள். இருவருமே போர்க்கலையில் பயிற்சி பெற்றவர்களாக இருந்தார்கள்.

கடற்கரையில் என் பார்வையை ஈர்த்த முதல் விஷயங்கள் விரிந்திருந்த கடல், சரக்குக்காக காத்து நங்கூரமிட்டிருந்த ஒரு அடிமைக் கப்பல். இரண்டுமே என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. ஆனால் கப்பலில் ஏறியதும் இந்த ஆச்சரியம் அச்சமாகிப்போனது.

படிப்பகம்

www.padippakam.com



பிசாசுகளின் உலகத்துக்குள் நுழைந்து விட்டேனோ என்று அலறி நடுங்கினேன். அவை என்னை விழுங்கப் போகின்றன என்று நினைத்து என் கடைசிப் பிராத்தனைகளை சொல்ல ஆரம்பித்துவிட்டேன். அவர்களுடைய நிறம், மொழி எங்களுடையதிலிருந்து முற்றிலும் வித்தியாசமாக இருந்தது இந்த நம்பிக்கையை வலுவாக்கியது. அந்த நேரத்தில் எனக்கிருந்த பயங்கர கற்பனைகளும் அச்சங்களும் அப்போது ஆயிரக்கணக்கான உலகங்கள் என் வசம் இருந் திருந்தால் அவற்றையெல்லாம் மனமுவந்து கொடுத்துவிட்டு எனது நாட்டில் ஒரு மிகக் கீழான அடிமையாக இருப்பதற்குக் கூட சம்மதித்திருப்பேன். கப்பலைச் சுற்றி வந்தபோது வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து கடத்தி வரப்பட்ட ஏராளமான கருப்பர்கள் சோர்வும் சோகமும் படிந்த முகங்களோடு நீண்ட சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அந்த நிமிடமே என் கதி என்னவென்று தெரிந்துவிட்டது. எனக்கு ஏற்பட்ட அச்சத்தின், வேதனையின் அழுத்தம் தாளமுடியாமல் அங்கேயே கப்பல் தளத்தில் மயங்கி விழுந்தேன். விழித்துப் பார்த்தபோது என்னைச் சுற்றிலும் கருப்பு முகங்கள் தெரிந்தன. என்னை விற்றவர்கள், தங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். என்னை சமாதானம் செய்து உற்சாகப்படுத்துவதற்காக பேசினார்கள். ஆனால் நான் சமாதானமடையவில்லை. நீண்ட முடிகளும் சிவந்த முகங்களுமாகப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்த அந்த வெள்ளையர்கள் என்னைத் தின்றுவிடுவார்களா என்று அவர்களிடம் கேட்டேன். அவர்கள் இல்லை என்று சொல்லி என்னை சற்று சமாதானம் செய்தார்கள். அப்போது, ஒரு மாலுமி எனக்குக் கொஞ்சம் மது கொண்டு வந்து கொடுத்தான். ஆனால் அவனைப் பார்க்கவே பயமாக இருந்ததால் அவன் கையிலிருந்து அதை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டேன். ஒரு கருப்பன் அதை அவனிடமிருந்து வாங்கி என்னிடம் கொடுத்த பிறகு கொஞ்சம் குடித்தேன். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக அது என்னை உற்சாகப்படுத்தாமல், அது தந்த அதுவரையிலும் நான் அனுபவித்திராத ஒரு மயக்கத்தால் இன்னும் மோசமான கிலிபிடித்து மிரள ஆரம்பித்தேன். சீக்கிரமே என்னைக் கொண்டு வந்த கருப்பர்கள் என்னை தனிமையில், துன்பத்தில் விட்டுவிட்டு போய்விட்டார்கள். இப்போது என்னுடைய சொந்த ஊருக்குத் திரும்புவதற்கான எல்லா வாய்ப்புகளும் பறிக்கப்பட்டுவிட்டதை உணர்ந்துகொண்டேன்; கரையைப் பார்க்கக்கூட இனி இயலாது என்று நினைத்தேன்; என்னைச் சுற்றிலும் இருப்பது என்ன என்பது பற்றி எந்த அறிவுமே இல்லாததால் ஒவ்வொரு புதிய பொருளும் ஒவ்வொரு சிறிய அசைவும் என்னில் அச்சத்தையே கிளப்பின. என்னுடைய நாட்டில் அடிமையாக இருப்பதே எவ்வளவோ பரவாயில்லை என்று தோன்றியது. ஆனால், இப்படியே வெகுநேரம் என் துன்பத்தோடு என்னைத் தனியாக இருக்க அவர்கள் விடவில்லை. கப்பலின் அடித்தளத்திற்கு என்னைத் தள்ளினார்கள். அங்கு என் வாழ்க்கையில் அதுவரையில் நான் அனுபவித்திராத மிக மோசமான நாற்றம் என்னை வரவேற்றது. வெறுக்கத்தக்க அந்த நாற்றமும் என் துக்கமும் சேர்ந்து உடலும் உள்ளமும் சோர்ந்து போன எனக்கு எதையுமே உண்ணப் பிடிக்காமல் போனது. என் இறுதி நட்பாக, மரணம் வந்து தழுவிக் கொள்ளக்கூடாதா என்று ஏங்கினேன். ஆனால், என் வேதனை தீராமல், அதை அதிகப்படுத்துவதுபோல இரண்டு வெள்ளையர்கள் எனக்கு ஏதோ சாப்பிடக்கொடுத்தார்கள். நான் சாப்பிட மறுத்தவுடன் ஒருவன் என் கைகளைப் பிடித்துக் கொள்ள மற்றவன் என்னை பாரம் தூக்கும் இயந்திரத்தின் மீது கிடத்தி கால்களைக் கட்ட, முதலாமவன் என்னை செம்மையாக விளாசினான். இப்படியொரு கொடூரத்தை அதற்கு முன் நான அனுபவித்ததே இல்லை. இப்படியிருக்கும் என்று தெரிந்திருந் தால், விலை அரண்களைத் தாண்டி முதல் பார்வையிலேயே எனக்கு அச்சத்தைத் தந்த கடலை நோக்கிப் பாய்ந்திருப்பேன். ஆனால் என்னால் முடியவில்லை. அதோடு, விங்கிடாமல் வைத்திருந்த அடிமைகளை மாலுமிகள் எப்போதும் கண்காணித்துக்கொண்டே இருந்தார்கள். அப்படி கடலில் குதிக்க முயன்ற சிலரையும் சாப்பிட மறுத்தவர்களையும் அவர்கள் கட்டிவைத்து மணிக்கணக்காக சாட்டையால் அடித்ததையும் பார்த்தேன். எனக்கும் பல சமயம் இந்தத் தண்டனை கிடைத்தது. சிறிது நேரத்தில் என் பிரதேசத்தைச் சேர்ந்த சிலரைப் பார்த்த பிறகுதான் சற்று நிம்மதி வந்தது. அவர்களிடம், நம்மை என்ன செய்யப்போகிறார்கள் என்று விசாரித்தேன். அவர்கள், இந்த வெள்ளைப் பிசாசுகள் தங்களுக்கு வேலை செய்வதற்காக எங்களைத் தங்கள் நாட்டிற்கு கொண்டு போகிறார்கள் என்பதைப் புரிய வைத்தார்கள். வேலை செய்வதற்காக என்றால் நிலைமை அவ்வளவு மோசமாக இருக்காது என்று நினைத்து சற்று ஆறுதலடைந்தேன். ஆனால் இன்னமும் அவர்கள் என்னைக் கொன்று தின்றுவிடப் போகிறார்கள் என்ற பயம் என்னை விட்டு நீங்கவில்லை. வெள்ளையர்கள் மகா மோசமாக, காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டது என்னை அப்படி நினைக்க வைத்தது. அவ்வளவு பயங்கரமான கொடூரத்தை நான் வேறு எந்த மக்களிடமும் பார்த்ததில்லை. இது ஏதோ கருப்பர்களிடத்தில் மட்டுமில்லை; தங்களுக்குள்ளாகவேகூட அவர்கள் வெறித்தனமாக நடந்துகொண்டார்கள். அதிலும் குறிப்பாக ஒரு வெள்ளையன், நாங்கள் கப்பல் தளத்தில் இருந்தபோது, முன்பாய் மரத்துக்கு அருகில் ஒருவனைக் கட்டி வைத்து ஈவிரக்கமின்றி அடித்த அடியில் அவன் இறந்தே போனான். ஒரு நாயை வீசுவது போல அவர்கள் இறந்தவனைத் தூக்கி கடலில் எறிந்தனர். இதைப் பார்த்ததும் அவர்கள் மீதான பயம் எனக்கு இன்னும் அதிகரிக்கவே செய்தது. எந்த நிமிடமும் எனக்கும் அதே கதி நடக்கலாம் என்று நினைத்துக்கொண்டேன். என்னுடைய அச்சங்களையும் சந்தேகங்களையும் என் மக்களிடம் வெளிப்படுத்தாமல் இருக்கமுடியவில்லை. அவர்களுக்கு நாடே இல்லையா, இந்தப் பொந்து நான் அவர்களுடைய வசிப்பிடமா என்று கேட்டேன். அப்படியில்லை என்றும், அவர்களுடைய நாடு வெகுதொலைவில் இருப்பதாகவும் சொன்னார்கள். "அப்படியென்றால்," நான் கேட்டேன், "எப்படி நாம் இவர்களைப் பற்றி இதற்கு முன் எதுவுமே கேள்விப் படவில்லை?" அதற்கு, அவர்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத தொலைவில் இருப்பதாகக் கூறினார்கள். தொடர்ந்து, அவர்களுக்கு பெண்கள் இருக்கிறார்களா, அவர்களும் இவர்களைப் போலவேதான் இருப்பார்களா என்று கேட்டேன். இருப்பார்கள் என்று எனக்கு பதில் சொன்னார்கள். "அப்புறம் ஏன்", நான் கேட்டேன், "அவர்கள் நம் கண்ணில் படுவதே யில்லை?" அவர்களை தங்கள் வீட்டிலேயே விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள் என்றார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



கப்பல் எப்படி மிதந்து போகிறது என்று கேட்டேன். தங்களுக்கும் அது தெரியாது என்றார்கள். ஆனால், நீளமான சீலைகளை கயிறுகளைக் கொண்டு உயரமான கம்பத்தில் ஏற்றியதும் கப்பல் நகரத் தொடங்கிவிடுகிறது என்பதைச் சொன்னார்கள். அதுமட்டு மில்லாமல் நினைத்தபோ்து கப்பலை நிறுத்த ஒரு மந்திரப் பொருளைக் கடலுக்குள் போட்டார்கள் என்றும் சொன்னார் கள். இந்த விவரணைகளையெல்லாம் கேட்டு நான் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனேன். நிச்சயம் இவர்கள் பிசாசுகள்தான் என்று நினைத்துக் கொண்டேன். அதனால் கூடியவரைக்கும் அவர்களுக்கு அருகில் போவதையே தவிர்த்தேன். காரணம், அவர்கள் என்னைத் தங்கள் கடவுளுக்கு பலி கொடுத்துவிடுவார்கள் என்ற பயம்தான். ஆனால் என் வேண்டுதல்கள் எதுவும் பலிக்கவில்லை. எங்களில் எவரும் தப்பித்துவிட முடியாத படிக்கு அடைத்து வைத்து எப்போதும் கண்காணித்து வந்தார்கள். கரையில் இருந்தவரைக்கும் அதிக நேரங்கள் நான் தளத்திலேயே இருந்தேன். ஒருநாள் கப்பல் ஒன்று பாய்மரங்கள் விரிந்திருக்க வருவதைக் கண்டேன். அந்தக் கப்பலைக் கண்டதும் எங்கள் கப்பலில் இருந்த வெள்ளையர்கள் குதூகலித்து கத்தினார்கள். அது நெருங்கி வர வர அவர்களுடைய கத்தல்களும் அதிகமாயின. கடைசியில் கரைக்கு சற்று தொலைவில் எங்களுக்கு அருகாக வந்ததும் நங்கூரத்தை கடலுக்குள் இறக்கினார்கள். உடனே கப்பல் நின்றது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த நானும் என் மக்களும் இது நிச்சயம் மாயமந்திரம்தான் என்று முடிவு செய்தோம். கொஞ்சநேரத்தில் அந்தக் கப்பலிலிருந்து படகுகள் இறக்கப்பட்டு அவர்கள் எங்கள் கப்பலுக்கு வந்தார்கள். ஒருவரையொருவர் சந்தித்ததில் இரண்டு தரப்பினருக்கும் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது தெரிந்தது வந்தவர்களில் சிலர் எங்களோடு கைகுலுக்கினார்கள். ஏதோ சைகைகளும் செய்தார்கள். அநேகமாக தங்கள் நாட்டுக்கு எங்களைக் கொண்டுபோகப் போவதைச் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்; கடைசியில், எல்லா சரக்குகளையும் எங்கள் கப்பலுக்குள் ஏற்றியதும் கப்பலை எப்படிக் கிளப்புகிறார்கள் என்பதை நாங்கள் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக எங்கள் எல்லோரையும் அடித்தளத்திற்குள் அடைத்தார்கள். ஆனால் இந்த ஏமாற்றம் என்னுடைய துன்பங்களைவிடப் பெரிதாகப்பட்வில்லை. கரையிலிருந்த வரை நாங்கள் அடைக்கப்பட்டிருந்த இடம் பயங்கர நாற்றமடித்தது. வெகுநேரம் அங்கேயே இருந்தால் மூச்சடைத்தே செத்துவிடுவோம் போல இருந்தது. அதனால் நல்ல காற்றை சுவாசிப்பதற்காக எங்களில் சிலரை அவர்கள் தளத்திற்கு வர அனுமதிப்பதுண்டு. இப்போது எங்களோடு சேர்ந்து சரக்குகளும் அடைத்து வைக்கப்பட்டதால் நிலைமை இன்னும் மோசமாகிப் போனது. சிறிய இடத்தில் திரும்புவதற்குக்கூட இடமில்லாத அளவுக்கு அதிகம் நெருக்கி அடைத்துவைக்கப்பட்டது, வெப்பமான பருவநிலை, சேர்ந்து எங்களை மூச்சுத் திணற வைத்தது. இடத்தின் நெருக்கடியால் புழுக்கமும் அதனால் ஏராளமாக வியர்த்துக் கொட்டியதும் அந்த வியர்வை நாற்றமே காற்றை சுவாசிக்கத்தகுதியற்றதாக ஆக்கியது. பலர் அந்த இரக்கமே இல்லாத மனித வியாபாரிகளின் புண்ணியத்தால் காய்ச்சல் கண்டே இறந்து போனார்கள். இந்த மோசமான நிலைமைகளோடு எங்களைச் சங்கிலியால் கட்டியிருந்த இடங்கள் வேறு வீங்கியிருந்தன. சங்கிலிகளின் பாரத்தை இனிமேலும் தாங்கமுடியாது போல இருந்தது. இது போதாதென்று மலங்கழித்த தொட்டிகளின் நாற்றம் வேறு. எங்கள் குழந்தைகள் அதற்குள் அடிக்கடி விழுந்து, மூச்சுத் திணறி கிட்டத்தட்ட செத்துப் போயிருப்பார்கள். பெண்களின் கூக்குரல்கள், செத்துக்கொண்டிருந்தவர்களின் வேதனை முனகல்கள் எல்லாம் சேர்ந்து கற்பனை செய்துபார்க்க முடியாத பயங்கரக் காட்சியை அங்கு உருவாக்கியிருந்தது. நல்லகாலமாக எனது நிலைமை மிகவும் மோசமாகப் போய்விட்டதால் நான் செத்துவிடாமல் இருக்க அநேகமாக எப்போதும் என்னை தளத்திலேயே இருக்க விட்டார்கள். அதோடு, நான் மிகச்சிறிய பையனாக வேறு இருந்ததால் என்னை விலங்கிடவும் இல்லை.இந்த நிலைமையில், ஒவ்வொரு நிமிடமும் என் இனத்தவர்களுக்கு நிகழ்ந்த கதியே - ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் சாகும் தறுவாயில் நான்கைந்து பேர் தளத்திற்கு கொண்டு வரப்பட்டார்கள் - மரணம், என்னைத் தழுவிக் கொண்டு என் துயரங்களையெல்லாம் முடித்துவைத்துவிடாதா என்று ஏங்கினேன். அடர்ந்த காடுகளில் அமைதியாக வாழ்ந்த என் மக்களின் நிலை எவ்வளவோ மகிழ்ச்சியானதாகத் தோன்றியது. அவர்கள் அனுபவித்த சுதந்திரத்தை நினைத்து பொறாமை கொண்டேன். நான் சந்தித்த ஒவ்வொரு புதிய சம்பவமும் சூழ்லும் என் வேதனையையும், அச்சங்களையும் வெள்ளையர்களின் கொடூரத்தன்மையைப் பற்றிய எனது எண்ணங்களையும் அதிகரிக்கவே செய்தன. ஒருநாள் அவர்கள் நிறைய மீன்களைப் பிடித்துவிட்டார்கள். ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, மிச்சமான மீன்களை, நாங்கள் எவ்வளவோ இரந்து கெஞ்சியும் கூட எங்களுக்குத் தராமல் கடலில் எறிந்துவிட்டார்கள். பசி தாளாமல் எங்களில் சிலர் யாரும் பார்க்கமாட்டார்கள் என்ற நினைப்பில் கொஞ்சம் திருடித் தின்ன முயற்சித்த போது பிடிபட்டு மிகக் கொடூரமாக சாட்டையால் விளாசப்பட்டார்கள். கடல் சற்று அமைதியாக, காற்றும் மிதமாக இருந்த ஒருநாள், சேர்த்து விலங்கிடப் பட்டிருந்த இரண்டு பேர், (அந்த நேரம் நான் அவர்களுக்கு மிக அருகாமையில் இருந்தேன்) இந்தக் கொடூரமான துன்பங்களைவிட சாவே மேல் என்று துணிந்து, எப்படியோ வலை அரண்களைத் தாண்டி கடலில் குதித்துவிட்டனர். அவர்களைத் தொடர்ந்து, உடல்நலக் குறைவு காரணமாக விலங்கு அகற்றப்பட்டிருந்த ஒருவனும் குதித்துவிட்டான். அரண்டுபோன மாலுமிகள் மட்டும் எச்சரிக்கையாகி இருக்காவிட்டால் இன்னும் பலபேர் அன்று கடலில் குதித்துவிட்டிருப்பார்கள் என்றே நினைக்கிறேன். உடனே எங்களில் சற்று சுறுசுறுப்பாகத் தெரிந்தவர்களை மீண்டும் அடித்தளத்திற்கு அனுப்பி விட்டார்கள். சற்று நேரத்திற்கு, கப்பலை நிறுத்தி படகுகளை இறக்கி அந்த அடிமைகளைப் பிடித்துவரச் சொல்லி பயங்கர கூச்சலும் குழப்பமுமாக மாலுமிகள் அங்குமிங்கும் பரபரப்பாக ஓடிக்கொண்டிருந் தார்கள். ஆனால் முதலில் குதித்தவர்கள் மூழ்கிவிட்டார்கள். பின்னால் குதித்த அந்த ஒருவனை மட்டும் பிடித்து விட்டார்கள். அவனை தளத்திற்கு கொண்டுவந்து ஈவிரக்க மில்லாமல் விளாசித் தள்ளினார்கள். இந்தச் சபிக்கப்பட்ட அடிமை வணிகத்தினால் விளைந்த இன்னும் எண்ணற்ற கொடுமைகளை நாங்கள் எங்கள் பயணம் முழுக்க அனுபவித்தோம். பலநாட்கள் தொடர்ந்தாற்போல நாங்கள் நல்ல சுத்தமான காற்றைக்கூட சுவாசிக்க முடியாமல் அடைத்து வைக்கப் பட்டோம். இதனாலும் மலங்கழிக்க வைத்திருந்த தொட்டி

படிப்பகம்

www.padippakam.com



களின் நாற்றத்தாலுமே எங்களில் பலர் மாண்டு போனார்கள். இந்தப் பயணத்தில்தான் நான் முதன்முதலாக பறக்கும் மீன்களைப் பார்த்தேன். அடிக்கடி கப்பலுக்கு மேலாக பறந்து போகும்; சில மீன்கள் மேல் தளத்தில் விழுந்துவிடுவதும் நடக்கும். முதன்முதலாக கோணமானியையும் அப்போது தான் பார்த்தேன். கப்பலோட்டிகள் அதை வைத்து குறிப்புகள் எடுப்பதை ஒன்றும் புரியவில்லை என்றா லும்கூட ஆச்சரியத்தோடு அடிக்கடி கவனித்து வந்தேன். ஒருநாள் நான் வாய் பிளந்துகொண்டு கவனிப்பதைப் பார்த்துவிட்ட அவர்களில் ஒருவன் என் ஆச்சரியத்தை இன்னும் அதிகரிக்கவோ அல்லது தீர்த்துவைக்கவோ அதைப் பார்க்க அனுமதித்தான். தூரம் செல்லச் செல்ல மறைந்த மேகங்கள் இப்போது நிலவெளிகள் போலத் தெரிந்தன. இது என்னுடைய ஆச்சரியத்தை இன்னும் அதிகரித்தது. வேறு ஏதோ ஒரு உலகத்துக்கு வந்துவிட்டதாக, என்னைச் சுற்றிலும் நிகழும் ஒவ்வொன்றும் மாயமந்திரமாக இப்போது நான் உறுதியாக நம்பத் தொடங்கினேன். கடைசியில், ஒருவழியாக நாங்கள் பார்படோஸ் தீவை அடைந்தோம். அது கண்ணில் பட்டதுமே கப்பலில் இருந்த வெள்ளையர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து எங்களைப் பார்த்து ஏதேதோ சைகைகள் செய்தார்கள். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் தீவை நெருங்க நெருங்க துறைமுகமும் பலவிதமான சிறிய பெரிய கப்பல்களும் தெளிவாகத் தெரிந்தன. சீக்கிரமே நாங்கள் பிரிட்ஜ் டவுனில் நங்கூரமிட்டோம். மாலையாகிவிட்ட போதிலும் நிறைய வியாபாரிகளும் தோட்ட முதலாளிகளும் கப்பலுக்கு வந்தனர். எங்களை சிறு சிறு குழுவாகப் பிரித்து கவனமாக நோட்டமிட்டனர். நிலத்தைக் காண்பித்து எங்களை அங்கு கொண்டுபோகப் போவதாக சைகை செய்தனர். ஆனால் நாங்களோ இந்த அருவருப்பான மனிதர்கள் - எங்களுக்கு அவர்கள் அப்படித்தான் தோன்றினார்கள் - எங்களை கொன்று தின்னப்போகிறார்கள் என்று நினைத்தோம். சிறிது நேரம் கழித்து மறுபடியும் எங்களை அடித்தளத்திற்குள் தள்ளிய பிறகு அச்சத்தில் நாங்கள் அலறி அழ ஆரம்பித் தோம், அன்று இரவு முழுவதும் அழுகுரல் களும் கூக்குரல் களுமே நிறைந்திருந்தது. என்ன செய்வ தென்று தெரியாமல் கடைசியில் அந்த வெள்ளையர்கள் தீவிலிருந்து சில வயதான கருப்பு அடிமைகளை அழைத்து வந்து எங்களைச் சமாதானப்படுத்தச் சொன்னார்கள். அவர்கள் எங்களை யாரும் விழுங்கிடப் போவதில்லை என்றும் தீவில் தோட்டங் களில் வேலை செய்யவே எங்களைக் கொண்டு வந்திருக் கிறார்கள் என்றும் கூறினர். அங்கு நமது நாட்டைச் சேர்ந்த நிறையபேர் இருப்பதாகவும் தேற்றினார்கள். அதன் பிறகே எங்களுக்கு நிம்மதி வந்தது. அதே போல, நாங்கள் தீவில் இறங்கிய சிறிது நேரத்திலேயே எல்லா பிரதேசங்களிலி ருந்தும் வந்திருந்த ஆப்பிரிக்கர்கள் எங்கும் இருந்தார்கள். உடனேயே எங்களை வியாபாரியின் கொட்டகைக்கு நடத்திக் கொண்டு போய் பால், வயது வித்தியாசங்கள் எதையும் பாராமல் ஆட்டு மந்தையைப் போல அடைத்து வைத்தார்கள். அங்கு பார்த்த ஒவ்வொரு புதிய விஷயமும் என்னை வியப்பில் ஆழ்த்தின. என்னை முதலில் கவர்ந்தது அங்கு வீடுகள் இரண்டு மூன்று அடுக்குகள் இருந்ததுதான். ஆப்ரிக்காவில் இருந்தவற்றிலிருந்து ஒவ்வொரு விதத்திலும் இவை வித்தியாசமாக இருந்தன. ஆனால் மக்கள் குதிரைகள் மீது அமர்ந்து போனது எனக்கு அதைவிட அதிசயமாக இருந்தது. இது என்னவென்றே எனக்குப் புரியவில்லை. இந்த மக்கள் முழுக்க முழுக்க மந்திர தந்திரக் கலைகள் தெரிந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டேன். இப்படி நான் ஆச்சரியத்தில் மூழ்கியிருக்கும் போது எனக்குப் பக்கத்திலிருந்த சக அடிமை ஒருவன் தனது நாட்டைச் சேர்ந்த இன்னொரு வனிடம் அந்தக் குதிரைகள் தங்கள் நாட்டில் இருந்த அதே வகையைச் சேர்ந்தவைதான் என்று சொல்லிக்கொண்டி ருந்தான். ஆஃப்ரிக்காவின் இன்னொரு தொலைவான பகுதியிலிருந்து வந்தவர்கள் என்றாலும் அவர்கள் பேசிக்கொண்டது எனக்குப் புரிந்தது. ஆனால் அங்கு என் கண்ணில் மட்டும் குதிரைகள் படாமல் போனது எப்படி என்று நினைத்தேன். ஆனால், அதன்பிறகு பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த ஆப்ரிக்கர்களுடன் எல்லாம் பேசிய பிறகு எங்கள் நாட்டில் பலரும், இங்கிருந்த குதிரைகளைவிட நல்ல வகைக் குதிரைகளை வைத்திருந்தார்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன். வியாபாரியின் மேற்பார்வையில் கொஞ்ச நாட்கள் இருந்தபிறகு அவர்களுடைய வழக்கமான முறைப்படி நாங்கள் விற்கப்பட்டோம். ஒரு முரசு ஒலி த்ததும் வாங்க வந்திருந்தவர்கள் நாங்கள் அடைக்கப்பட் டிருந்த கொட்டகைக்கு முந்தியடித்துக்கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு உருப்படியானதாகத் தோன்றும் குழுவைத் தேர்வு செய்து வாங்கினார்கள். அந்தச் சமயத்தில் எழும் கூச்சலும் குழப்பமும் அவர்களுடைய முகங்களில் தெரிந்த வெறியலைச்சலும் ஏற்கனவே பயத்திலிருந்து எங்களுடைய சந்தேகங்களை இன்னும் அதிகரிக்கவே செய்தன. இப்படி எந்த இரக்கமும் இல்லாமல் நண்பர்கள், உறவினர்கள், உடன்பிறந்தவர்கள் ஒரே நாளில் ஆளுக்கொரு திசையில் நிரந்தரமாக பிரிக்கப்பட்டோம். நாங்கள் வந்த கப்பலில் எங்களோடு வந்த ஏழு சகோதரர்கள் அந்த ஏலத்தில் வெவ்வேறு குழுக்களில் பிரித்து விற்கப்பட்டபோது அவர்கள் எழுப்பிய ஓலமும் அழுகையும் இப்போது நினைத்துப் பார்க்கும்போது கூட கண்களில் நீர் நிறைந்து விடுகிறது.

கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்களே! உன்னை எப்படி பாவிக்கிறாயோ அதேபோல மற்றவர் களிடமும் நடந்துகொள், என்று சொன்ன உங்கள் கடவுளிட மிருந்து கற்றுக் கொண்டு இதை ஒரு ஆப்பிரிக்கன் உங்களிடம் கேட்கக்கூடாதா? உங்களுடைய சுகத்துக்காகவும் பணத்தாசைக்காகவும் உழைக்க எங்கள் மண்ணிலிருந்தும் உற்றார் உறவினர்களிடமிருந்தும் நாங்கள் பிரிக்கப்பட்டது போதாதா? உங்களுடைய பேராசைக்காக எங்களுடைய ஒவ்வொரு மென்மையான உணர்வும் தியாகம் செய்யப்பட வேண்டுமா? உற்ற நண்பர்களையும் நெருங்கிய உறவினர் களையும் இப்படி ஆளுக்கொரு திசையாக பிரித்து கொடுமை செய்யத்தான் வேண்டுமா? அடிமை வாழ்வின் துன்பத்தை மறக்க நாங்கள் ஒன்றாக இருந்து ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்வது கூட கூடாதா? பெற்றவர்கள் குழந்தைகளையும், சகோதரர்கள் தங்கள் சகோதரிகளையும் கணவன்மார்கள் தங்கள் மனைவிகளையும் ஏன் இழக்கவேண்டும்? அடிமைத் தனத்தின் துயரங்களைத் தணிக்க எந்த வழியும் தராமலேயே, துன்பங்களை இன்னும் அதிகரிக்கவும், இன்னும் புதிய கொடுமைகளை சேர்க்கவும் செய்கிற இந்த முறை உண்மையிலேயே கொடூரத்தின் புதிய கூர்மையான வடிவம் என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? ●

படிப்பகம்

www.padippakam.com



# பிரெடரிக் டக்ளஸ் என்கிற அமெரிக்க அடிமையின் வாழ்க்கைக் கதை : அவரே எழுதியது

தமிழில் : இரா. நடராசன்

ஃப்ரெடெரிக் டக்ளஸ் (1818-1895): உலகப் புகழ் பெற்ற ஆப்ரோ-அமெரிக்க எழுத்தாளர், சிவில் உரிமைப் போராளி. 1840-50களில் அமெரிக்காவைக் குலுக்கிய அடிமை எதிர்ப்பு இயக்கத்தின் அனல் கக்கும் பேச்சாளர், எழுத்தாளர். சிவில் யுத்தத்தின்போது கருப்பு அமெரிக்கர்களின் தலையாய பேச்சாளராகவும் (Spokesman) பிரதிநிதியாகவும் அனைவராலும் ஏற்கப்பட்டவர்.

ஒரு பெயர் தெரியாத வெள்ளையனுக்கும் **ஹேரியட் பெய்லி** என்கிற அடிமைக்கும் மேரிலாண்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதி ஒன்றில் பிறந்த பிரெடரிக் தன் பிறந்த தேதியைக் கண்டு பிடிக்கத் தன் வாழ்நாள் முழுவதும் முயற்சித்துத் தோற்றவர். சமீபத்தில் வாழ்க்கை வரலாற்றாய்வாளர்களின் முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்ட பிறந்த தேதி பிப்ரவரி 1918. ஏழு வயதில் அன்னையைப் பறிகொடுத்த பிரெடரிக்கின் இளமைக் காலம் கடும் ஏழ்மையில் கழிந்தது.

1826ல் 'பால்டிமோரில் ஒரு வெள்ளைக் குடும்பத்தில் வேலைக்காகச் சேர்ந்த ப்ரெடரிக்கிற்கு அங்கே எழுதப் படிக்கக் கொஞ்சம் வாய்ப்புக் கிடைத்தது. கணவனின் எரிச்சலையும் மீறி அந்த வெள்ளைப் பெண்மணி அவரது கல்விக்கு உதவினாள்.

பண்ணை அடிமையாய் வேலை செய்த இடத்தில் கொடுமைக்கார கங்காணியை எதிர்த்துப் போராடியது அவருடைய வாழ்க்கை வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவமாக அமைகிறது.

தனது சேமிப்பு, எதிர் கால மனைவியின் உதவி ஆகியவற்றின் துணையால் அடிமைத் தளையிலிருந்து விடுவித்துக் கொண்ட ப்ரெடரிக் 1838ல் நியூயார்க் நகருக்கு வந்து திருமணம் செய்து கொண்டு **ப்ரெடரிக் டக்ளஸ்** ஆகிறார். அடுத்த மூன்றாம் ஆண்டு அடிமை ஒழிப்பு இயக்கத்தின் முழு நேரப் பேச்சாளராகச் சேர்கிறார். தேச அளவில் புகழ் பெறுகிறார்.

இவ்வளவு பெரிய பேச்சாளர், தலைவர் அடிமையாக இருந்திருக்க முடியாது என்கிற பிரச்சாரத்தை முறியடிக்க இந்த வாழ்க்கைக் கதையை எழுதுகிறார். இவருக்கு முன் வேறு சிலரும் அடிமை வரலாற்றை எழுதியிருந்த போதிலும் அடிமைக் கதையாடல்களில் தலைசிறந்ததென இதுவே கருதப்படுகிறது. முதல் ஐந்தாண்டுகளில் முப்பதாயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன. சம கால வெள்ளை எழுத்தாளர்களின் தன் வரலாறுகளை விற்பனையில் மிஞ்சியது டக்ளசின் கதை.

இங்கிலாந்தில் விரிவான சுற்றுப் பயணம் மேற்கொண்டு திரும்பிய டக்ளஸ் (1847) "The North Star' என்கிற பத்திரிகையைத் தொடங்குகிறார். 1863 வரை வெளிவந்த அந்த இதழில் முக்கிய கட்டுரைகள் பலவற்றை அவரே எழுதினார்.

1855ல் டக்ளசின் இரண்டாவது தன் வரலாறு My Bondage and My Freedom வெளிவந்தது. இடைப்பட்ட பதினைந்து ஆண்டு கால அனுபவங்களின் அடிப்படையில் இனவெறி, அடிமைத்தனம் ஆகியவற்றை முற்றிலும் புதிய, ஆழமான கோணத்தில் இது பரிசீலித்தது. அடிமை ஒழிப்பு இயக்கம் குறித்த ஒரு விமர்சனமாகவும் அது அமைந்தது.

சிவில் யுத்தத்தின்போது அன்று குடியரசுத் தலைவராக இருந்த **லிங்கனைச்** சந்தித்து யுத்தத்தில் கருப்பு ராணுவத்தையும் ஈடுபடுத்த வற்புறுத்தினார். யுத்தத்திற்குப் பின் குடியரசுத் தலைவராக இருந்த **ஆண்ட்ரு ஜான்சனைச்** சந்தித்து கருப்பர்களுடைய வாக்குரிமைக்காக வாதாடினார். குடியரசுக் கட்சிக்கு இறுதிக் காலத்தில் விசுவாசமாக இருந்ததன் விளைவாக முக்கிய அரசியல் பதவிகள் டக்ளசுக்குக் கிடைத்தன. இறுதி இருபது ஆண்டுகளில் வாஷிங்டனில் வசதியாக வாழ்ந்த டக்ளஸ் 1881ல் தனது மூன்றாவது நினைவுக் குறிப்புகளை Life and Times of Frederick Douglass எழுதினார். எனினும் அது முதலிரண்டு வாழ்க்கைக் கதைகளைப்போல புகழ் பெறவில்லை.

1950களின் சிவில் உரிமை இயக்கம், 1960களின் கருப்பு ஆய்வுகளுக்கான இயக்கம் ஆகியவற்றினூடாக டக்ளசின் முதல் வாழ்க்கைக் கதை அமெரிக்கப் புனித இலக்கியப் பாரம்பரியத்தின் முக்கிய தன் வரலாற்று நூலாக ஏற்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



## அத்தியாயம் 1 - விருந்து...

நான் பிறந்தது மேரிலேண்டின் டால்போட் மாவட்டத்தில் ஹில்ப்ரோ-விற்கு அருகில் டக்காஹோ என்கிற கிராமம். ஈஸ்டன் நகரிலிருந்து சுமாராக ஒரு 12 மைல் தொலைவில் இந்த சிறிய ஊர் இருந்தது. என்னுடைய சரியான வயது என்னவென்று எனக்குத் தெரியாது. அது குறித்த ஆவணங்களையோ ஆதாரங்களையோ பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததே இல்லை. அடிமைகளாகப் பிறந்துவிட்ட ஏறக்குறைய அத்தனைபேருடைய நிலைமையும் இதுதான். குதிரைகளைப் போலவே எங்களுக்கும் எங்கள் வயது பற்றிய எந்த அறிவும் இருந்ததில்லை. செர்ரிப் பழங்கள் குலுங்கி விழுந்து கிடந்த காலம், நடவுக்காலம், அறுவடைக் காலம், இளவேனிற் காலம், மழைக்காலம் என்பதற்கு மேலாக எங்களுடைய நினைவுகள் செல்வதில்லை. தன்னுடைய பிறந்தநாளைத் தெரிந்து வைத்திருந்த ஒரு அடிமையைக்கூட இதுநாள் வரையிலும் நான் சந்தித்ததில்லை. நான் அறிந்த வரை எல்லா எஜமானர்களுமே தங்களது அடிமைகளை இப்படியொரு அறியாமையில் வைத்திருக்கவே விரும்பினர்.

என்னுடைய பிறப்பைச் சுற்றிக் கவிந்திருந்த இந்த இருளின் ஆழங்கான முடியாத வேதனை குழந்தைப் பருவத்திலிருந்தே என்னைப் பற்றிக்கொண்டுவிட்டது. வெள்ளைக் குழந்தைகள் மட்டும் தங்கள் வயதை தெளிவாக சொல்ல முடியும் போது எனக்கு அந்த உரிமை பறிக்கப்பட்டு விட்டது ஏன் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. என்னுடைய எஜமானரிடம் இது பற்றியெல்லாம் கேட்கக்கூட முடியாது. ஒரு அடிமையிடமிருந்து இதுபோன்ற கேள்விகள் வருவதே சரியல்ல; அடிமையாக இருப்பதில் நிம்மதியை இழந்துவிட்ட ஒரு ஆன்மாவின் அச்சுறுத்தலை அதில் அவர் கண்டுகொண்டுவிடுவார்.

என்னுடைய வயதைப் பற்றி தோராயமாக இப்போதைக்கு என்னால் சொல்ல முடிந்ததெல்லாம் ஒரு இருபத்தேழு அல்லது இருபத்தெட்டுக்கு இடையில் இருக்கும் என்பதுதான். 1835-ம் ஆண்டு ஒரு சமயம் என்னுடைய எஜமானர் எனக்கு பதினேழு வயது என்று சொன்னதைக் கேட்டு இந்தக் கணிப்பு.

என் தாயாரின் பெயர் ஹாரியட் பெய்லி. நல்ல கருப்பாயிருந்த ஐசாக், பெட்சி பெப்லி என்கிற கருப்பு அடிமைகளின் மகள். தனது பெற்றோரையும் விடக் கருப்பாக இருந்தவள்.

என்னுடைய தந்தை ஒரு வெள்ளையன். என்னுடைய பிறப்பைப் பற்றி பேசக் கேட்டவர்கள் அத்தனைபேரும் இதை சந்தேகமில்லாமல் சொன்னார்கள். என்னுடைய எஜமானன்தான் என் தந்தை என்றும் இலைமறைகாயாக பேசிக் கொண்டார்கள். இது எந்த அளவிற்கு உண்மை என்பது ஒருபோதும் எனக்குத் தெரியவந்ததில்லை. அறிந்துகொள்வதற்கான வாய்ப்பும் எனக்கு மறுக்கப்பட்டது. என்னுடைய தாய் இவள்தான் என்பதை அறிந்துகொள்வதற்கு முன்னதாகவே - சிறு குழந்தையாக இருந்தபோதே நாங்கள் பிரிக்கப் பட்டோம். மிகச் சிறு வயதிலேயே குழந்தைகளிடமிருந்து தாயைப் பிரித்துவிடுவது நான் தப்பி ஓடிவந்த மேரிலேண்ட் பகுதியில் மிகச் சாதாரணமான வழக்கமாக இருந்தது. சாதாரணமாகவே, குழந்தைக்கு ஒரு வயது ஆனவுடனேயே அதனிடமிருந்து தாயைப் பிரித்து தொலைவான ஏதாவதொரு பண்ணையில் வாடகைக்கு வேலை செய்ய அனுப்பிவிடுவார்கள். வயல் வேலைகளுக்கு லாயக்கில்லாத வயதான கிழவி ஒருத்தியின் பாதுகாப்பில் குழந்தையை வைத்துவிடுவார்கள். ஏன் இப்படி வலுக்கட்டாயமாக பிரித்துவிடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை, குழந்தைக்கு தாயின்பால் வளரக்கூடிய பற்றுதலையும் தாய்க்கு குழந்தையின்பால் இருக்கும் இயல்பான பாசத்தையும் நசுக்கி அழித்துவிடுவதற்காக இருக்கலாம். எது எப்படியோ, விளைவு அப்படித்தான் இருந்தது.

என் தாயை ஒரு நாலைந்து முறைக்கு மேல் நான் பார்த்தது கிடையாது. அப்படிப் பார்த்ததும்கூட நள்ளிரவுகளில் மிகக் குறுகிய நேரங்களுக்குத்தான். என் வீட்டிலிருந்து இருபது மைல் தொலைவிலிருந்த ஸ்டீவார்ட் என்பவரால் அவள் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தாள். நாள் முழுக்க வேலை செய்து முடித்த கையோடு கிளம்பி அவ்வளவு தூரத்தையும் நடந்தே கடந்து இரவுகளில் என்னைப் பார்க்க வருவாள். பண்ணையில் அவள் இருந்தது வயல் வேலையாளாக. அதிக காலையிலேயே வயலில் இருந்தாக வேண்டும். தவறினால் சவுக்கடி நிச்சயம். எஜமானரிடம் முன்கூட்டியே அனுமதி பெற்றிருந்தாலொழிய தப்பிக்க முடியாது. அப்படி அனுமதி கிடைப்பதும் அரிது. தப்பித்தவறி அனுமதி கொடுக்கிற எஜமானருக்கு கருணைக் கடவுள் என்கிற பெருமையான பட்டம் சேர்ந்துவிடும்.

என் தாயை நல்ல பகல் வெளிச்சத்தில் பார்த்த ஞாபகம்கூட எனக்கு இல்லை. அவள் என்னோடு இருந்ததெல்லாம் இரவுகளில்தான். சேர்த்து அணைத்துக்கொண்டு என்னைத் தூங்க வைப்பாள். காலையில் பார்க்கும்போது பக்கத்தில் இருக்கமாட்டாள். நான் எழுந்திருப்பதற்கு வெகுநேரத்திற்கு முன்னேயே போய்விட்டிருப்பாள். எங்களிருவரையும் பிணைத்த உணர்ச்சிகளும் நாங்கள் பரிமாறிக்கொண்டதும் மிகவும் குறைவு. அதுவும் சீக்கிரத்திலேயே முடிந்துபோனது. எனக்கு ஏழு வயது இருக்கும் போதே லீ-ன் ஆலைக்கு அருகில் இருந்த என்னுடைய எஜமானரின் பண்ணையொன்றில் அவள் இறந்துபோனாள். அவளோடு சேர்ந்து அவளுடைய துன்பங்களும் மடிந்து போயின. அவளுடைய மரணப்படுக்கையிலோ புதைக்கும் போதோகூட அருகிலிருக்க நான் அனுமதிக்கப்படவில்லை. அவள் இறந்ததே எனக்கு வெகுகாலத்திற்குப் பிறகுதான் தெரியவந்தது. அவளுடைய மென்மையான பாதுகாப்பையோ இதமான அருகாமையையோ அதிகம் அனுபவிக்காத எனக்கு அவளுடைய மரணம் பற்றிய விவரங்கள் தெரிய வந்தபோது முகமறியாத ஒருவனுடைய மரணம் தரக்கூடிய சலனங்களை விடப் பெரிதாக எந்த உணர்ச்சிகளும் அதிர்வுகளும் வந்துவிடவில்லை.

என்னுடைய தந்தை யார் என்பதைப் பற்றிய எந்தச் சிறு விவரமும் தராமலேயே அவள் இப்படித் திடீரென்று என்னைவிட்டுப் பிரிந்தாள். என்னுடைய எஜமானர்தான் எனது தந்தை என்று கிசுகிசுக்கப்பட்டது எந்த அளவிற்கு உண்மை அல்லது பொய் என்பது எனக்குத் தெரியாது; அது உண்மையா பொய்யா என்பது இங்கு எனக்கு முக்கியமில்லை. அடிமைகளுக்குப் பிறந்துவிட்ட குழந்தைகள் எல்லா வகையிலும் அவர்களுடைய தாய்மார்களின் இழிந்த நிலைமைகளிலேயே உழன்றுகிடக்கவேண்டும் என்பதில் அடிமை உரிமையாளர்கள் கவனம் மிக்கவர்களாக இருப்பதையும் வெறுக்கத்தக்க இந்த நிலைமைகளை தொடரும் பொருட்டு வெளிப்படையாகவே சட்டங்கள் இயற்றி வைத்திருப்பதையும் சுட்டிக் காட்டுவதே இங்கு எனது

படிப்பகம்

www.padippakam.com



நோக்கம். தங்களுடைய காம வேட்கைகளையும் அற்பத் தனமான ஆசைகளையும் தணித்துக் கொள்வதற்காக, அனுபவித்த சுகத்தை லாபமாகவும் ஆக்கிக்கொள்வதற்காக அவர்கள் கைக்கொள்கிற சூழ்ச்சி இது. இதன் வழியாக அடிமை உரிமையாளனுக்கு ஒரே நேரத்தில் தனது அடிமைகளிடம் எஜமான்-தந்தை என்ற இரண்டு உறவுகளும் உரிமைகளும் கிடைத்துவிடுகிறது.

★ ★ ★

## அத்தியாயம் 10 - விருந்து...

1833 ஜனவரி முதல் தேதியன்று திரு. கோவே-யின் பண்ணைக்கு அனுப்பப்பட்டேன். என் வாழ்க்கையில் முதன்முதலாக பண்ணை வேலையாளாக விடப்பட்டேன். அதுவரையிலும் எந்த வேலையும் செய்து பழக்கமில்லாததால் எல்லாமே எனக்குத் தடுமாற்றமாக இருந்தது. பெரிய நகரத்தில் தொலைந்துபோன கிராமத்தானை விடவும் மோசமான ஒரு நிலைமையில் விடப்பட்டதைப் போல உணர்ந்தேன்.

புதிய இடத்திற்கு வந்து சேர்ந்த அடுத்த வாரமே கோவே-யின் சாட்டை என்னைப் பதம் பார்த்தது. பின்னால் குண்டியிலிருந்த சதை பிய்ந்து ரத்தம் கொட்டும்வரை விளாசித் தள்ளிவிட்டான். விரல் தடிமனிற்கு அங்கங்கே வீங்கிப்போனது. அந்தச் சம்பவம் இப்படி நிகழ்ந்தது. அந்த ஜனவரியின் கொடிய குளிரில் ஒருநாள் அதிகாலை காட்டிலிருந்து விறகு எடுத்துவர என்னைக் கிளப்பினான். பழக்கப் படாத இரண்டு காளைகளை இழுத்து வந்து எது வலது எது இடது காளை என்பதைச் சொல்லி பூட்டினான். இடது பக்கக் காளையின் கொம்புகளில் கயிற்றைக் கட்டி மறுமுனையை என்னிடம் கொடுத்து காளைகள் மிரண்டு ஓடினால் இழுத்துப் பிடித்து நிறுத்தவேண்டும் என்று சொன்னான்.

காளை வண்டி ஓட்டிப் பழக்கமில்லாததால் உள்ளுக்குள் எனக்கு உதறலாகவே இருந்தது. நல்லகாலமாக பெரிய சிரமம் எதுவும் இல்லாமல் காடுவரைக்கும் ஓட்டிச் சென்றுவிட்டேன். ஆனால் காட்டுக்குள் இரண்டு எட்டு வைத்தவுடனேயே காளைகள் மிரள ஆரம்பித்துவிட்டன. மரங்கள், கிளை, கொம்பு என்று எதிரே என்ன இருக்கிறது என்பது தெரியாமல் தலைதெறிக்க ஓட ஆரம்பித்துவிட்டன. எந்த நொடியிலும் ஏதாவது மரத்தில் மோதி மூளை சிதறி செத்துப்போகப் போகிறேன் என்றே நினைத்தேன். இப்படிக் கணிசமான தூரம் ஓடிய காளைகள் ஒரு மரத்தில் மோதி விழுந்தன. வண்டி குப்புற விழுந்து நொறுங்கிக் கிடந்தது. காளைகள் திசைக்கொன்றாக புதரில் விழுந்துகிடந்தன. அடர்ந்த காட்டில் திக்குத்தெரியாமல் தன்னந்தனியனாக, அனாதரவாக நின்றுகொண்டிருந்தேன். நீண்டநேரம் சிரமப் பட்டு ஒருவழியாக வண்டியை சரிசெய்தேன். காளைகளை திரும்பவும் பூட்டி முந்தையநாள் விறகு வெட்டி வைத்திருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அளவுக்கதிகமாகவே விறகுகளை ஏற்றி அடுக்கினேன். காளைகள் மிரண்டாலும் முன்புபோல ஓடமுடியாது என்ற நினைப்பு. எல்லாம் முடிய மதியம் ஆகிவிட்டது. பாதிநாள் போய்விட்டிருந்தது. வண்டியை வீட்டுக்கு ஓட்ட ஆரம்பித்தேன். காட்டின் எல்லையைப் பார்த்ததும்தான் எனக்கு நிம்மதியே வந்தது. வண்டியை நிறுத்தி எல்லைக் கதவுகளைத் திறக்க இறங்கி நடந்தேன். சரியாக அந்த நேரம் பார்த்து கயிற்றைப் பிடித்து நிறுத்த எந்த சந்தர்ப்பமும் வைக்காமல் திரும்பவும் காளைகள் மிரண்டு ஓட ஆரம்பித்துவிட்டன. சக்கரத்திற்கும் வண்டிக்கும் இடையில் அகப்பட்டு கதவு உடைந்து நொறுங்கியது. கொஞ்சம் இருந்தால் எல்லை அறிவிப்புப் பலகையில் மோதி நானும் நசுங்கிப் போயிருப்பேன். மயிரிழையில் தப்பிப் பிழைத்தேன். ஒரே நாளில் இரண்டுமுறை சாவின் விளிம்பிற்குச் சென்று வந்தேன்.

வீடு திரும்பிய கையோடு கொவே-யிடம் நடந்த சம்பவங்களை விவரமாகச் சொன்னேன். நிதானமாகக் கேட்டுவிட்டு உடனே என்னை காட்டுக்குத் திரும்பப் போகச் சொன்னான். அவனும் பின்னாலேயே வந்தான். காட்டுக்குள் நுழைந்தவுடன் வண்டியை நிறுத்தச் சொல்லிவிட்டு கதவுகளை உடைக்கவும் நேரத்தை வீணடிக்கவும் எனக்குக் கற்றுக்கொடுக்கப் போவதாகச் சொன்னான். அருகிலிருந்த ஒரு பெரிய கோந்து மரத்திலிருந்து கோடரியால் மூன்று நீண்ட கம்புகளை வெட்டினான். பேனாக்கத்தியால் அவற்றின் தோலைச் சீவி கச்சிதமாக்கியதும் என்னை சட்டையைக் கழற்றச் சொல்லி அதட்டினான். நான் பதில் எதுவும் சொல்லாமல் அப்படியே நின்றேன். அவ்வளவுதான். வெறி கொண்ட புலிபோல என் மீது பாய்ந்து ஆடைகளைக் கிழித்தெறிந்துவிட்டு மூன்று பச்சைவார்களும் இற்றுப் போகும்வரை விளாசித் தீர்த்தான். நீண்ட நாட்கள் அந்தத் தழும்புகள் ஆறவில்லை. எப்போதும் நான் மறக்கக்கூடாது என்பதற்காகவே ஆறாத தழும்புகள் வரும்படி காட்டு மிராண்டித்தனமாக அடித்தான். இதுபோன்ற தவறுகளுக்காக நான் அனுபவிக்க வேண்டியிருந்த சவுக்கடிகளுக்கு அது முதல் ஆரம்பமாக இருந்தது.

கொவே-யுடன் நான் ஒரு வருடம் வாழ்ந்தேன். முதல ஆறு மாதங்கள் அவனது சவுக்கடி படாமல் ஒரு வாரம் கூட கழிந்தது கிடையாது. பின்னால் குண்டியிலோ முதுகிலோ சீழ்பிடித்து காயம் இன்றி நான் இருந்ததே இல்லை. என் அறியாமை ஒன்றே அடிப்பதற்கு அவனுக்குப் போதுமான காரணமாக இருந்தது. கடைசிச் சொட்டு சத்தி வரை பிழிந்தெடுத்து நாங்கள் உழைத்தோம். பொழுது விடிவதற்கு வெகுநேரம் முன்னதாகவே எழுந்துவிடுவோம். குதிரைகளுக்குத் தீனிபோட்டுவிட்டு முதல் வெளிச்சக்கீற்றுகள் வருகிற நேரத்தில் உழுபடைக் கருவிகளோடு வயலுக்குப் புறப்பட்டுவிடுவோம். கொவே எங்களுக்குப் போதுமான உணவு கொடுப்பான். ஆனால், உண்பதற்குப் போதுமான நேரத்தைத் தரமாட்டான். எப்போதும் எங்கள் மதிய உணவை ஐந்து நிமிடங்களுக்குள் அரக்கபரக்க முடித்துக்கொள்ள வேண்டியிருந்தது. முதல் வெளிச்சக்கீற்றோடு தொடங்கி நாளின் கடைசிக் கீற்று விழும் வரைக்கும் எப்போதும் நாங்கள் வயலில் இருப்போம். அறுவடைக் காலங்களில் நடுநிசியின் கரிய இருள் தானியக்கட்டுகளோடு சேர்ந்து எங்கள் மீது கவிந்துவிடும்.

நாங்கள் எப்போதும் கெவே-யின் பார்வையிலேயே இருந்தோம். மிகவும் தந்திரமாக அவன் எங்களைக் கண்காணித்தான். பெரும்பாலும் மதிய நேரங்களை படுக்கையிலேயே கழித்தான். மாலையில் புத்துணர்வோடு வந்து எங்களை விரட்டுவான். வார்த்தைகளால், உதாரணங்களால், அதோடு தவறாமல் சவுக்கடியாலும் விரட்டி விரட்டி வேலையைத் துரிதப்படுத்துவான். அடிமைகளோடு சேர்ந்து வயலில் கைவைக்கிற மிகச் சிலரில் அவனும் ஒருவன். நல்ல உழைப்பாளி. பெரியவர்கள், சின்னப் பையன்கள் என்று யார் யார் எவ்வளவு வேலை செய்யமுடியும் என்று அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. யாரும் அவனை ஏமாற்ற முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



அவன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வேலைகள் ஒழுங்காக நடக்கும். எப்போதும் அவன் எங்களோடேயே இருப்பது போன்ற ஒரு உணர்வை எங்களுக்கு உண்டாக்கியிருந்தான். நாங்கள் அதிர்ச்சி கொள்ளும்படி இதைச் செய்வான். மறைவாக இருந்து கண்காணிக்கும் வாய்ப்புகளை விட்டு நேரடியாக வேலை நடக்கும் இடங்களை அவன் பார்வையிட்டதே கிடையாது. திடீரென்று தோன்றி எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்குவதே அவனது குறியாக இருந்தது. அவ்வளவு தந்திரசாலியான அவனை எங்களுக்குள் 'பாம்பு' என்று அழைப்போம். சோளக்காட்டில் நாங்கள் வேலை செய்யும்போது எங்கள் பார்வையில் பட்டுவிடாமல் மெதுவாகத் தவழ்ந்து வந்து, திடீரென்று எங்கள் மத்தியில் எழுந்து "சீக்கிரம், சீக்கிரம்– வேகம்! வேகம்!" என்று கத்துவான். இது அவனுடைய தாக்குதல் முறை. ஒரு நிமிடம்கூட நாங்கள் சும்மா இருந்துவிட முடியாது. இரவில் வரும் திருடனைப் போல அவன் வருவான். எப்போதும் அவன் எங்கள் மத்தியில் இருப்பதைப் போல உணர்ந்தோம். ஒவ்வொரு மரத்தினடியிலும், ஒவ்வொரு கிளையிலும் ஒவ்வொரு புதர் மறைவிலும் ஒவ்வொரு சன்னலிலும் அந்தப் பண்ணையில் அவன் இருந்துகொண்டே இருந்தான். சில சமயம், ஏழு மைல்களுக்கு அப்பால் இருந்த புனித மைக்கேலுக்கு போவதைப் போல குதிரையை வேகமாக கிளப்பிக்கொண்டு போவான். ஆனால், கொஞ்ச நேரம் கழித்து காட்டு எல்லையில் ஒரு ஓரமாக நின்றுகொண்டு அடிமைகளின் ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். இதற்காக குதிரையை காட்டில் கட்டிவிட்டு வரவும் அவன் தயங்கமாட்டான். சில சமயம், ஏதோ நீண்ட பயணத்தில் செல்ல இருப்பவனைப் போல கட்டளைகள் இட்டுவிட்டு, வீட்டிற்கு சென்று புறப்பட ஏற்பாடுகள் செய்வது போலக் கிளம்புவான். ஆனால், கொஞ்ச தூரம் போய் மீண்டும் மறைந்து தவழ்ந்து ஒரு வேலி ஓரத்தில் அல்லது ஒரு மரத்துக்குப் பின்னால் ஒளிந்திருந்து சூரியன் மறையும் வரை எங்களைக் கண்காணித்துக் கொண்டிருப்பான்.

கொவே-யின் பலம் ஏமாற்றுவதில் அவனுக்கு இருந்த திறமையில் இருந்தது. எப்படியெல்லாம் கண்ணில் மண்ணைத் தூவலாம் என்று திட்டமிடுவதில், அதைத் தக்கவைத்துக் கொள்வதிலுமே அவனது வாழ்க்கை அர்ப்பணம் ஆகியிருந்தது. கல்வி, மதம் என்று எது வழியாக எதைப் பெற்றாலும் அவனுடைய ஏமாற்றுக் கலைக்கு வசதியாக அதைப் பயன்படுத்திக்கொள்வான். கடவுளையே ஏமாற்றும் திறமை தனக்கு இருப்பதுபோல நடந்து கொண்டான். காலையில் ஒரு சிறிய ஜெபத்தையும் இரவில் மிக நீண்ட ஒரு நீளமான ஜெபத்தையும் அவன் சொல்வதுண்டு. ஆச்சரியமாக இருந்தாலும் சில நேரங்களில் அவனை விட சிறந்த பக்திமான்கள் மிகச் சிலரே இருக்கக் கூடும் என்று நினைக்கத் தோன்றும். அவனது குடும்ப வழிபாட்டுச் சடங்குகள் எப்போதும் தோத்திரப் பாடல்களில் தொடங்கும். அவன் ஒரு மோசமான பாடகன். அதனால் தோத்திரப் பாடல்கள் என் தலையில் விழுந்தன. அவன் ஜெபங்களைப் படிப்பான். பிறகு, என்னைப் பார்த்து தலையசைப்பான். சிலவற்றுக்கு நான் அவனைத் தொடர்ந்து பாடுவேன். சிலவற்றுக்கு அமைதியாக இருந்துவிடுவேன். எனது அமைதி எப்போதும் அவனுக்கு குழப்பத்தை உண்டாக்கிவிடும். அவன் என்னை நம்பி இருக்கவில்லை என்பதைக் காட்டிக் கொள்வதற்காக அந்த சந்தர்ப்பங்களில் ஒரு முரட்டு சுருதியில் அவனே பாடத் தொடங்குவான். இம்மாதிரி மனநிலைகளின்போது சாதாரண ஆவியைவிட மேலானவனாகி – ஒரு பரிசுத்த ஆவி போல அவன் ஜெபிப்பான். ஐயோ பாவம்! எல்லோருக்கும் மேலான அந்தக் கடவுளின் மிக உண்மையான பக்தனென்று தன்னைக் கருதிக் கொள்ளும் அளவுக்கு சில நேரங்களில் அவன் தன்னையே ஏமாற்றிக் கொண்டான்; அதுவும் தன்னுடைய அடிமைப் பெண் ஒருத்தியை கட்டாயமாக பாலுறவில் ஈடுபட வைத்த பாவச் செயலை செய்த ஒரு நேரத்தில் அப்படி இருந்தான். ஏமாற்றுவதில் அவனுக்குக் கிடைத்த வெற்றியும் அவனது மனநிலையும் அந்த அழகில் இருந்தன. இந்தச் சம்பவத்தின் விவரங்கள் இப்படி இருந்தன. உண்மையில், கொவே ஒரு ஏழை. அப்போதுதான் வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டிருந்தான். ஒரு அடிமையையே அவனால் வாங்க முடிந்தது. இதில், அதிர்ச்சியான விஷயம் என்னவென்றால் இனவிருத்தி செய்வதற்காகவே அவளை வாங்கினேன் என்று சொல்லிக் கொண்டான். அவளது பெயர் கரோலின். செயின்ட் மைக்கேலிலிருந்து ஆறு மைல்களுக்கு அப்பால் இருந்த திரு. தாமஸ் லோவே-விடமிருந்து கொவே அவளை விலை கொடுத்து வாங்கினான். நல்ல உடல் வாகைப் பெற்றிருந்த அவளுக்கு வயது இருபது இருக்கும். ஏற்கனவே அவள் ஒரு குழந்தை பெற்றிருந்தாள். அதனால், எதற்காக அவளை வாங்கினானோ அதற்கு அவள் பயன்படுவாள் என்று நினைத்தான். அவளை வாங்கிய கையோடு திரு. சாமுவேல் ஹாரிசன் என்பவரிடமிருந்து திருமணமான ஒரு அடிமையை ஒரு வருடத்திற்கு வாடகைக்கு எடுத்துக்கொண்டான். அவனை தினமும் இரவில் அவளோடு சேர வைத்தான். இதன் விளைவாக, ஒரு வருடம் கழித்து அந்த பாவப்பட்ட பெண் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். கொவே-வுக்கு அந்த இருவர் மீதும் மிகுந்த திருப்தி வந்தது. அவனும் அவன் மனைவியும் அடைந்த மகிழ்ச்சியில் ஆச்சரியப்படும்படியான அளவுக்கு அந்தப் பெண்ணிடம் கனிவாக, அன்பாக நடந்துகொண்டார்கள். குழந்தைகள் இரண்டும் அவனுக்குச் சேர்ந்த புதிய சொத்துக்களாகவே கருதப்பட்டன.

வாழ்வின் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அடிமை முறையின் ஆகக்கொடூரமான கசப்பை நான் அனுபவித்தேனென்றால் அது கொவே-யோடு நான் கழித்த முதல் ஆறு மாதங்களில் தான் நாங்கள் எல்லா விதமான கால நிலைகளிலும் வேலை செய்ய வேண்டியிருந்தது. கொளுத்தும் வெயிலோ, நடுங்க வைக்கும் குளிரோ, மழையோ, காற்றோ, பனியோ எதையும் பொருட்படுத்தாமல் வேலை செய்ய நாங்கள் பழக்கப்படுத்தப்பட்டோம். வேலை வேலை வேலை என்பதே ஒவ்வொரு நாளும் விதியாக இருந்தது. நீண்ட பகல்கள் சிறியவனாகவும், மிகக் குறுகிய இரவுகள்கூட மிக நீண்டதாகவும் அவனுக்குத் தோன்றின. அங்கு போன புதிதில் நான் சமாளிப்பதற்கு சற்று கடினமானவனாகவே இருந்தேன். ஆனால், சில மாதங்கள் வாங்கிய அடி, உதைகள் என்னை நேர் செய்திருந்தது. கொவே என்னைப் பழக்குவதில் வெற்றி அடைந்தான். நான் உடலால் உள்ளத்தால் ஆன்மாவால் நொறுங்கிப்போயிருந்தேன். என்னுடைய இயல்பான தாக்குப் பிடிக்கும் சக்தி நசுக்கப்பட்டது. என் அறிவுத்தாகம் சிதைக்கப் பட்டது. படிக்கும் ஆர்வம் தொலைந்தே போய்விட்டது. என் விழிகளில் எப்போதும் சுடர்விட்ட நம்பிக்கை ஒளி செத்துப்போனது. அடிமை முறையின் மொத்த இருள் எனது வாழ்வைக் கவ்வி விழுங்கியது. மனிதனாக இருந்த நான் இழிந்த மிருகமானேன்.

படிப்பகம்

www.padippakam.com



ஞாயிறு மட்டுமே என் ஒரே ஓய்வு நாள். ஒரு விலங்கைப் போல உணர்வற்று, ஏதாவது ஒரு பெரிய மரத்தடியில் தூங்கி விழித்து இப்படியே அந்த நாளைக் கழித்தேன். எப்போதாவது திடீரென்று ஒரு வேகம் பெற்று எழுவேன். விடுதலை உணர்வு ஒரு கீற்றைப் போல என் ஆன்மாவை ஊடுருவிச் செல்லும். நம்பிக்கை ஒளி மெலிதாகத் தெரியும். ஆனால், காற்றில் அலைந்து அணைந்து விடும் அந்தச் சுடரைப் போலவே சற்று நேரத்திற்கெல்லாம் சோர்ந்து விழுந்துவிடுவேன். என் பரிதாபமான நிலையை நினைத்து துக்கம் பீறிட அழுவேன். சில சமயம் கொவே-யை கொன்றுவிட்டு நாமும் செத்துவிடவேண்டும் என்று தீர்மானம் செய்வேன். ஆனால், நம்பிக்கையோடு அச்சமும் கலந்த ஒரு உணர்வில் தயங்கியிருந்துவிடுவேன். இப்போது நினைக்கும் போது அந்தப் பண்ணையில் என் வாழ்க்கை ஒரு கனவு மாதிரிதான் தோன்றுகிறது.

.....

கொவேயுடன் தங்கியிருந்த ஒரு வருடத்தில் என் முதல் ஆறு மாதங்கள் பிந்தைய ஆறு மாதங்களைவிட மிக மோசமானவை என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். என்னை அணுகும்முறையில் கொவேயிடம் மாற்றத்தை உண்டு பண்ணிய அந்தச் சம்பவங்கள் எனது எளிய வாழ்வில் ஒரு சகாப்தமாக அமைந்தவை. இதுவரையில் ஒரு மனிதன் எப்படி அடிமையாக ஆக்கப்படுகிறான் என்பதைக் கண்டீர்கள். ஒரு அடிமை எப்படி தன்னைத்தானே மனிதனாக ஆக்கிக் கொள்கிறான் என்பதை இனி காண்பீர்கள்.

1833 ஆகஸ்டு மாதத்தின் அந்த வெயில் கொளுத்திய நாளொன்றில் பில் ஸ்மித், வில்லியம் ஹக்ஸ், மற்று எலி எனும் அடிமைகளும் நானும் சேர்ந்து கோதுமை தூற்றிக் கொண்டிருந்தோம். ஹக்ஸ் உமியை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தான். எலி காற்றாடியை சுற்றினான். ஸ்மித் கோதுமையை தூற்றினான். நான் தூற்ற வேண்டிய கோதுமையை விசிறிக்கருகில் சேர்த்துக் கொண்டிருந்தேன். வேலை சுலபமானதாக இருந்தது. மூளையைவிட உடல் பலமே அதிகம் தேவைப்பட்ட வேலை. என்றாலும், பழக்கப்படாத ஒருவனுக்கு இது மிகக் கடுமையானதாகவே இருக்கும். மதியம் மூன்று மணி அளவில் நான் சோர்ந்து விழுந்தேன். கடுமையான தலை வலியோடு எனக்கு மயக்கமாகவும் இருந்தது. ஒவ்வொரு மூட்டும் நடுங்கியது. என்னவோ ஆகப்போகிறது என்று நினைத்துக்கொண்டே சுதாரித்துக் கொண்டு எழுந்தேன். என்ன ஆனாலும் வேலையை மட்டும் நிறுத்தமுடியாது என்பது எனக்குத் தெரியும். பலம் அத்தனையும் திரட்டிக்கொண்டு தடுமாறிக் கொண்டே கோதுமையை அள்ளி சேர்த்துக்கொண்டு இருந்தேன். இனியும் முடியாது என்ற நிலை வந்து உடல் தள்ளாடியபோது அப்படியே அங்கேயே உட்கார்ந்துவிட்டேன். ஒரு பயங்கர பாரம் அழுத்தியது போல இருந்தது. நான் விழுந்ததுமே தூற்றும் வேலை நின்றுவிட்டது. அவரவர்க்கு அவரவர் வேலையைச் செய்யவே சரியாக இருக்கும். மற்றவன் வேலையையும் சேர்த்துச் செய்வது யாருக்கும் சாத்தியமில்லை.

நாங்கள் தூற்றிக் கொண்டிருந்த களத்துமேட்டிலிருந்து சுமார் நூறு மீட்டர் தொலைவில், வீட்டில் கொவே இருந்தான். விசிறிச் சத்தம் நின்றுவிட்டதைக் கேட்டதும் உடனே கிளம்பி நாங்கள் இருந்த இடத்திற்கு வந்துவிட்டான். என்ன நடந்ததென்று எரிச்சலோடு விசாரித்தான். பில் நான் மயங்கி விழுந்ததையும் இப்போது கோதுமையை எடுத்து வர ஆளில்லை என்பதையும் சொன்னான். அதற்குள் நான் கொஞ்சம் நிழலாக இருந்தால் களைப்பு சற்று நீங்கும் என்று மெல்ல நகர்ந்து தவழ்ந்து வேலிக்கருகில் போய்விட்டிருந்தேன். பிறகு அவன் நான் எங்கே என்று கேட்க ஒருவன் நான் இருந்த இடத்தைக் காட்டினான். கொவே நான் இருந்த வேலிக்கு வந்து ஓரிரு நிமிடங்கள் என்னைப் பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு என்ன விஷயம் என்று கேட்டான். எனக்குப் பேசுவதே சிரமமாக இருந்தது. இருந்தும் முடிந்த மட்டில் விஷயத்தைச் சொன்னேன். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு அவன் என் இடுப்பில் ஓங்கி ஒரு உதைவிட்டு எழுந்திருக்கச் சொன்னான். நான் முயற்சி செய்து முடியாமல் விழுந்தேன். அவன் இன்னொரு உதை பலமாக விட்டு திரும்பவும் எழுந்திருக்கச் சொன்னான். சிரமப்பட்டு ஒருவாறு எழுந்து நின்றேன். ஆனால் கோதுமை அள்ளும் கலத்தை எடுக்க குனிந்தபோது மீண்டும் தடுமாறி விழுந்தேன். இப்படி நான் விழுந்து கிடக்கையில் கொவே தவிட்டை அப்புறப் படுத்த ஹக்ஸ் வைத்திருந்த தள்ளுவானை எடுத்து வந்து என் மண்டையில் ஓங்கி அடித்தான். ரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அதை சட்டை செய்யாமல் அவன் திரும்பவும் என்னை எழுந்திருக்கச் சொன்னான். நான் எந்த முயற்சியும் செய்யவில்லை. என்னால் முடியவில்லை. அவன் என்னை என்ன செய்தாலும் பரவாயில்லை என்று அப்படியே கிடந்தேன். கொவே-க்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வேறு வழியில்லாமல் என்னை அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டான். சற்று நேரத்தில் தலைவலி லேசாக குறைந்தது போல இருந்தது. அந்த நிமிடம், முதல் முறையாக, எனது உரிமையாளர் தாமஸிடம் போய் முறையிட்டு அவருடைய பாதுகாப்பைக் கோருவது என்று தீர்மானித்தேன். ஆனால், அதற்கு அந்தக் கொளுத்தும் வெயிலில் ஏழு மைல்கள் நடக்கவேண்டும். நான் இருந்த நிலைமையில் அது எப்படி முடியும். ஏற்கனவே வலுவிழந்து சோர்ந்து விழுந்திருந்த எனக்கு கொவேயின் உதைகளும் மண்டையில் விழுந்த அடியும் மிச்சமிருந்த எல்லா சக்தியையுமே உறிஞ்சி விட்டிருந்தன. என்றாலும், எப்படியாவது அங்கிருந்து போய்விடவேண்டும். தகுந்த வாய்ப்பிற்காக காத்துக்கொண்டு அங்கேயே அசையாமல் கிடந்தேன். கொவே வேறு பக்கமாக திரும்பிக் கொண்டிருந்தபோது பலம் அத்தனையும் திரட்டிக் கொண்டு எழுந்து புனித மைக்கேல்லை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். நல்ல வேளையாக கொவே கவனிக்கும் முன்பே குறிப்பிடத்தகுந்த தூரம் கடந்துவிட்டேன். கொவே என்னைத் திரும்பச் சொல்லி கத்தினான். 'வரவில்லையென்றால் அடித்தே கொன்றுவிடுவேன் என்று மிரட்டினான். அவனுடைய கத்தல் மிரட்டல்களையெல்லாம் சட்டை செய்யாமல், எனது மோசமான நிலைமையிலும் எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாக நடந்து காட்டுக்குள் நுழைந்துவிட்டேன்.

சாலை வழியாக நடந்தால் எளிதில் பிடித்துவிட முடியும் என்பதால் சாலையிலிருந்து எவ்வளவு தூரம் விலகியிருக்க முடியுமோ அவ்வளவு தூரத்திலும் அதே நேரத்தில் தொலைந்துவிடாமல் இருக்க அதை என் பார்வையில் வைத்துக் கொண்டே காட்டின் ஊடாக நடந்தேன். கொஞ்ச தூரம் கூட போயிருக்கமாட்டேன். மீண்டும் என்

படிப்பகம்

www.padippakam.com



பலம் என்னைக் கைவிட்டது. அடுத்த அடி எடுத்து வைக்க முடியவில்லை. தடுமாறி விழுந்தேன். வெகுநேரம் வரை அப்படியே இருந்தேன். தலையில் அடிப்பட்ட இடத்திலிருந்து ரத்தம் இன்னும் வழிந்து கொண்டு இருந்தது. அந்த நேரம், இப்படியே ரத்தம் வழிந்தே செத்துப் போகப் போகிறேன் என்று நினைத்தேன். அப்படி நடந்திருக்கும். ஆனால், காயத்திலிருந்து வழிந்த ரத்தமே தலைமுடியோடு சேர்ந்து உறைந்து மேலும் ரத்தம் வழிவதை நிறுத்திவிட்டது. ஒரு முக்கால் மணிநேரம் அப்படியே கிடந்த பிறகு சக்தியைத் திரட்டிக்கொண்டு எழுந்து மறுபடியும் நடக்க ஆரம்பித்தேன். செடிகளுக்கும் புதர்களுக்கும் ஊடாக வெறுங்காலோடு ஒவ்வொரு அடியிலும் கால்களை சிராய்த்துக்கொண்டே நடந்தேன். ஏழுமைல்களை ஐந்து மணி நேரத்தில் கடந்து ஒருவழியாக உரிமையாளரின் இடத்தைச் சேர்ந்தேன்.

கல்லான இதயத்தையும் உலுக்கிவிடக்கூடிய தோற்றத்தில் அவன் முன்னால் நின்றேன். உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை உடல் முழுக்க ரத்தம். ரத்தமும் தூசும் கட்டி தலைமுடி காய்ந்திருந்தது. ரத்தம் படிந்த சட்டை உலர்ந்து விட்டிருந்தது. புதர்களும் முட்களும் பட்டு பாதங்கள், கால்கள் கண்ட இடங்களில் கிழிந்து போயிருந்தன. கொடிய காட்டு விலங்குகள் நிறைந்த குகைக்குள் இருந்து தப்பித்து வந்தவனைப் போல இருந்தேன். இந்தக் கோலத்தில் அவன் முன்னால் நின்றேன். தன்னுடைய உரிமையை வைத்துத் தலையிட்டு என்னைக் காப்பாற்றுமாறு கெஞ்சினேன். நடந்ததையெல்லாம் விவரமாக என்னால் முடிந்த அளவிற்கு விளக்கிச் சொன்னேன். அவன் மனது லேசாக இளகியது போலத் தெரிந்தது. எல்லாம் சொல்லி முடித்த பிறகு அவர் மெதுவாக எழுந்து சற்று நேரம் நடை போட்டார். பிறகு நிதானமாக, இப்படி நடக்கும் என்று ஏற்கனவே தான் எதிர்பார்த்ததாகச் சொல்லி மிகச் சாதாரணமாக கொவே செய்தது சரிதான் என்று நியாயப்படுத்தினார். பிறகு எனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். நான் என்னை வேறொருவரிடம் அனுப்புமாறு கெஞ்சினேன். நிச்சயம் அவன் என்னைக் கொலை செய்து விடுவான். அதற்குத் தயாராக இருக்கிறான்; என்னைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சிக் கதறினேன்.

எஜமானர் தாமஸ் நான் சொன்னதைக் கேட்டு சிரித்தார். கொவே என்னைக் கொன்று விடுவான் என்பதெல்லாம் நல்ல கற்பனை என்றார். கொவே மிகவும் நல்லவன். அவனைத் தனக்குத் தெரியும்; அவனிடமிருந்து என்னைத் திரும்பப் பெற்றுக்கொள்வது எல்லாம் நடக்காத காரியம்; ஒரு வருடத்திற்கு கொவே தான் என் எஜமானன். ஒரு வருடம் நான் கொவேயுடன் இல்லையென்றால் தான் வருவாயை இழக்க நேரிடும்; என்ன நடந்தாலும் நான் அவனிடம் திரும்பிப் போய்த்தான் ஆகவேண்டும் என்றார். இனிமேலும் இதுபோல ஏதாவது கதை சொல்லிக் கொண்டிருந்தால் நானே உன்னைத் தொலைத்துக் கட்டிவிடுவேன் என்றார். இப்படி மிரட்டிய பிறகு காயங்களில் தடவிக்கொள்ள நிறைய உப்பைத் தந்தார். நேரமாகிவிட்டதால் அன்று இரவு மட்டும் அங்கேயே தங்கிக் கொள்ளலாம் என்றும் ஆனால் காலை சீக்கிரமே கிளம்பி கொவே-யிடம் திரும்பிப் போய்விட வேண்டும் இல்லையென்றால் நானே உன்னைத் தொலைத்துக் கட்டிவிடுவேன், அதாவது சவுக்கை எடுத்து விளாசித் தள்ளிவிடுவேன் என்றார்.

அந்த இரவு முழுவதும் நான் தூங்கவே இல்லை. அவர் சொன்னபடி அதிகாலையே கிளம்பினேன் (சனி காலை). உடலும் உள்ளமும் சோர்ந்து போய் நடக்க ஆரம்பித்தேன். இரவு எதுவும் சாப்பிடவில்லை. காலையும் சாப்பிடவில்லை. எப்படியோ ஒரு ஒன்பது மணியளவில் கொவே-யின் இடத்தை அடைந்தேன். பக்கத்து திருமதி. கெம்ப்பின் பண்ணையையும் கொவே-யின் பண்ணையையும் பிரித்த வேலியைத் தாண்டி ஒரு இரண்டு அடி கூட வைத்திருக்கமாட்டேன். சாட்டையும் கையுமாக கொவே என்னை நோக்கி ஓடி வந்தான். அவன் என்னைப் பிடிப்பதற்கு முன்னால் சட்டென்று சோளக்காட்டிற்குள் புகுந்துவிட்டேன். சோளக்கதிர் நல்ல உயரமாக வளர்ந்திருந்ததால் மறைந்துகொள்ள வசதியாக இருந்தது. அவன் மிகுந்த கோபத்துடன் வெகு நேரம் என்னைத் தேடி கொண்டிருந்தான். அப்புறம் எப்படியும் சாப்பிடுவதற்கு நான் வரவேண்டும், எதற்கு சிரமப்படவேண்டும் என்ற நினைப்பில் விட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டான். அந்த நாள் முழுவதையும் காட்டுக்குள்ளேயே கழித்தேன். என் முன் இரண்டே வழிகள்தான் இருந்தன. ஒன்று வீட்டுக்குப் போய் அவனிடம் உதைபட்டுச் சாவது அல்லது காட்டிலேயே பட்டினி கிடந்து சாவது.

அன்று இரவு காட்டில் சான்டி ஜென்கின்ஸ் என் வழியில் இடறினான். எனக்கு சிலகாலமாகவே பழக்கமாகியிருந்த அடிமை அவன். நாலு மைல் தொலைவில் வாழ்ந்து வந்த ஒரு சுதந்திரமான கருப்புப் பெண்ணை மணந்திருந்தான். சனிக்கிழமையாக இருந்ததால் அவளைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தான். நடந்ததையெல்லாம் அவனுக்குச் சொன்னபிறகு தன்னுடன் வருமாறு அன்போடு அழைத்தான். நான் மகிழ்ச்சியோடு சென்றேன். வீட்டில், மறுபடியும் மொத்த விஷயத்தையும் சொல்லி இனி என்ன செய்வது என்று கேட்டேன். அவன் நல்ல அறிவுரை சொல்வான் என்று தோன்றியது. அவனோ மிகுந்த பக்தியோடு, நான் கொவேயிடம் திரும்பச் சென்றுவிடவேண்டும் என்றான். ஆனால் போவதற்கு முன்னதாக காட்டின் மற்றொரு பக்கத்தில் கிடைக்கும் ஒரு விசேஷமான வேரை எடுத்து வந்து எப்போதும் என் வலது பக்கமாக வைத்துக்கொண்டால் பிறகு கொவேயோ அல்லது வேறு எந்த வெள்ளையனோ கூட என்னை அடிக்க முடியாது என்றான். அந்த வேருக்கு அப்படி ஒரு சக்தி இருக்கிறது என்றான். பல ஆண்டுகளாக தான் அதை வைத்திருப்பதாகவும் அதன் பிறகு அவன் அடி வாங்கியதே இல்லை என்றும் சொன்னான். அந்த வேரை கையில் வைத்திருக்கும்வரை அடியே விழாது என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகச் சொன்னான். முதலில் நான் அவன் யோசனையை ஏற்க மறுத்தேன். வெறுமனே ஒரு வேரை கையில் வைத்திருப்பதாலேயே அடி விழாது என்ற நம்பிக்கை எனக்கு வரவில்லை. ஆனால் அவன், வேரை வைத்திருப்பதால் நன்மை எதுவும் வரவில்லை என்று வைத்துக்கொண்டாலும் கூட அதனால் கஷ்டம் எதுவும் வந்துவிடப்போவதில்லை என்று என்னை வற்புறுத்தினான். கடைசியில், அவனைத் திருப்தி செய்வதற்காக அவன் கொடுத்த வேரை வாங்கிக்கொண்டு அவன் சொன்னதைப் போலவே அதை வலது பக்கமாக வைத்துக் கொண்டேன். அது ஞாயிறு காலை. விடுவிடுவென்று வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். கதவைத் திறந்தவுடனேயே கொவே

படிப்பகம்

www.padippakam.com



என்னிடம் வந்தான். மிகுந்த அன்புடன் பேபசினான். பக்கத்திலிருந்த தொழுவத்திலிருந்து பன்றிகளை ஓட்டிக் கொண்டுபோய் மேய்க்கச்சொல்லிவிட்டு ஞாயிற்றுகிழமை ஜெபத்திற்காக சர்ச்சை நோக்கி நடந்தான். கொவே இப்படி நடந்துகொண்டது உண்மையிலேயே வேரில் ஏதோ மகத்துவம் இருக்கிறது "என்று நினைக்க வைத்தது. அன்று ஞாயிற்றுக்கிழமையாக மட்டும் இல்லாமலிருந்திருந்தால் அதை நான் முற்றிலுமாக நம்பிவிட்டிருப்பேன். முதலில் அலட்சியமாக நினைத்தது போலில்லாமல் இப்போது ஒரு அரைகுறை மனத்தோடு அதில் ஏதோ இருக்கிறது என்று நம்பத் தொடங்கினேன்.

மறுநாள் காலை வரை எல்லாம் நன்றாகவே இருந்தது. அன்று காலை வேரின் மகத்துவத்துக்கு முழுமையான சோதனை வந்தது. விடியலுக்கு முன்னதாகவே குதிரைகளை தேய்த்துத் கழுவி குளிப்பாட்டி தீனிபோடச் சொல்லி லாயத்திற்கு அனுப்பினான். மகிழ்ச்சியோடு கிளம்பினேன். பழையபடி வேலை செய்ய அனுமதிப்பதே பெரிய விஷயம் இல்லையா. பரணில் ஏறி வைக்கோலை எடுத்து கீழே வீசிக் கொண்டிருந்தபோது கொவே லாயத்துக்குள் வந்தான். அவன் கையில் நீளமான கயிறு ஒன்று இருந்தது. பாதி உடம்பு பரணியில் இருக்க நான் கீழே இறங்கத் தொடங்கிய நேரம் பார்த்து சட்டென்று அவன் என் கால்களைப் பிடித்து கட்ட ஆரம்பித்தான். எதற்காக அப்படிச் செய்கிறான் என்பதை ஒரு நொடியில் ஊகித்த நான் திமிறிக்கொண்டு எகிறினேன். அவன் பிடியை தளரவிடாததால் தரையில் கைகளைப் பரப்பிக்கொண்டு விழுந்தேன். இப்போது, கொவே என்னைப் பிடித்துவிட்டதாக, இனி என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைத்தது போலத் தெரிந்தது. ஆனால் அந்த நொடியில் - அந்தத் துணிவு எனக்கு எங்கிருந்துதான் வந்ததோ தெரியவில்லை - நான் எதிர்த்துப் போராட முடிவு செய்தேன். முடிவை உடனே செயல்படுத்தவும் செய்தேன். சட்டென்று அவன் கழுத்தை இருகைகளாலும் பிடித்து நெரிக்க ஆரம்பித்தேன். நெரித்துக் கொண்டே எழுந்தேன். ஒருவரை ஒருவர் இறுகப் பிடித்திருந்தோம். என் எதிர்ப்பை எதிர்பார்க்காததால் அவன் நிலைகுலைந்து போய்விட்டான். சருகு போல நடுநடுங்கினான். இது எனக்கு மேலும் பலத்தை தரவே பிடித்த இடத்தில் ரத்தம் வருமளவிற்கு இறுக்கினேன். கொஞ்ச நேரத்திலேயே கொவே ஹக்ஸை உதவிக்கு அழைத்தான். கொவே என்னைப் பிடித்திருக்க ஹக்ஸ் வலது கையைப் பிடித்து சேர்த்துக் கட்ட முயற்சி செய்தான். அவன் கட்டிக்கொண்டு இருக்கும்போதே நான் சந்தர்ப்பம் பார்த்து அவன் கவட்டையில் ஓங்கி ஒரு உதை விட்டேன். வலி தாளாமல் ஹக்ஸ் என்னை விட்டுவிட்டு அங்கிருந்து ஓடி விட்டான். அந்த உதையில் ஹக்ஸ் மட்டுமல்ல அவன் வலியால் குனிந்து துடிப்பதைக் கண்ட கொவேயும் நடுங்கிப் போனான். சற்று தெம்பை வரவழைத்துக்கொண்டு என்னுடைய எதிர்ப்பை கைவிடப்போகிறேனா இல்லையா என்று கேட்டான். என்ன ஆனாலும் விடப்போவதில்லை; ஆறு மாதங்களாக ஒரு மிருகத்தைப் போல நடத்தியதை இனிமேலும் அனுமதிக்கப் போவதில்லை என்று உறுதியாகச் சொன்னேன். ஒன்றும் நடக்காது என்று கண்டு கொண்டவன், லாயத்தின் கதவருகில் கிடந்த ஒரு கழியை எடுக்க என்னையும் சேர்த்து இழுத்துக்கொண்டு நகர்ந்தான். ஆனால், அதை எடுக்க குனிந்த நேரம் பார்த்து நான் என் இரு கைகளாலும் அவன் சட்டைக் காலரைப் பிடித்து தூக்கி தரையில் அடித்தேன். அப்போது பில் உள்ளே வந்தான். கொவே அவனை உதவிக்கு அழைத்தான். என்னைப் பிடித்துக் கட்டச்சொல்லி கத்தினான். பில் தனது உரிமையாளன் தன்னை அங்கு வேலை செய்வதற்காகவே அனுப்பியிருப்பதாகவும் மற்றவர்களை அடிப்பதற்கு உதவி செய்ய அல்ல என்றும் சொல்லிவிட்டு எங்கள் சண்டையைக் கவனிக்காதது போல அங்கிருந்து நகர்ந்துவிட்டான். ஏறத்தாழ இரண்டு மணி நேரம் நாங்கள் இப்படி ஒருவரையொருவர் வீழ்த்த சண்டை போட்டுக் கொண்டிருந்தோம். கடைசியில் கொவே நான் எதிர்க்காமல் இருந்திருந்தால் என்னை இவ்வளவு அடித்திருக்கமாட்டான் என்று சொல்லிக் கொண்டே மூச்சு இழுத்து இழுத்து வாங்க இனிமேலும் முடியாது என்று என்னை விட்டுவிட்டான். உண்மையென்னவோ அவன் என்னை ஒரு அடி கூட அடிக்கவில்லை என்பதுதான். அவனது நிலை எனக்குப் பரிதாபகரமாகத் தோன்றியது. அவனால் என்னை ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஆனால், நான் அவனை ரத்தம் சிந்த வைத்துவிட்டேன்.

அதற்குப் பிந்தைய ஆறு மாதங்களில் ஒருமுறை கூட கொவே கோபத்தில் அவன் சுண்டு விரலைக்கூட என் மீது வைக்கவில்லை. எப்போதாவது எரிச்சல் தாளமுடியாமல் போகும்போது "முன்பு மாதிரி உன் மீது கை வைக்க வேண்டாம் என்று பார்க்கிறேன்" என்பான். "இல்லை", நான் நினைத்துக் கொள்வேன். "வேண்டாம், வைத்தால் உன் நிலைமை முன்னைவிட மோசமாகிவிடும்".

கொவே-யுடன் நடந்த இந்த யுத்தம் என் அடிமை வாழ்க்கையில் முக்கிய திருப்புமுனையாக அமைந்துவிட்டது. என்னுள் எஞ்சி எங்கோயிருந்த விடுதலை வேட்கை என்னும் நெருப்பைக் கிளறிவிட்டது. என் ஆண்மையை மீண்டும் உணர வைத்தது. தொலைந்திருந்த தன்னம்பிக்கையை மீட்டது. விடுதலை பெற்றே ஆகவேண்டும் என்ற வெறியை மீண்டும் தூண்டி விட்டது. வெற்றியினால் கிடைத்த நம்பிக்கை எந்த இழப்பையும் அது மரணமாகவே இருந்தாலும், ஈடு செய்வதாக இருந்தது. ரத்தக்கறை படிந்த அடிமை முறையின் கொடூரக் கரங்களை வன்முறை கொண்டு எதிர்த்த ஒருவனாலேயே நான் அனுபவித்த ஆழ்ந்த மனத்திருப்தியை உணரமுடியும். அதுவரை அனுபவித்து இராத உணர்ச்சி என்னுள் நிறைந்தது. அடிமைக் கல்லறையிலிருந்து எழுந்து விடுதலை சொர்க்கத்தை எட்டிய அற்புதமான புத்துயிர்ப்பு அது. நீண்ட காலமாக நசுக்கி அழுத்தி வைக்கப்பட்டு இருந்த என் ஆன்மா விடுதலை கொண்டு எழுந்தது. அச்சம் பறந்தே போனது. அதன் இடத்தை துணிச்சல் பிடித்துக்கொண்டது. இனி எத்தனை காலம் வடிவத்தில் நான் அடிமையாக இருந்தாலும் உள்ளத்தில் அடிமையாக இருந்த நாட்கள் எப்போதோ முடிந்துவிட்டன என்று தீர்மானித்தேன். அதற்குப் பிறகு என்னை அடிக்கத் துணிந்த எந்த வெள்ளையனும் என்னைக் கொல்லவும் துணிய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்த நான் தயங்கியதே இல்லை.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகும் நான்கு ஆண்டுகள் நான் அடிமையாக இருந்தேன். ஆனால் ஒரு முறை கூட யாரிடமும் 'செமத்தியான அடி' வாங்கியது இல்லை சண்டைகள் போட்டிருக்கிறேன். ஆனால் சவுக்கு மட்டும் என் மீது விழுந்ததே இல்லை. ●

www.padippakam.com



**சிறுகதைகள் :**

# சிக்காகோ புழுக்கம்

ஃக்ளாரன்ஸ் மேஜர்

தமிழில் : லதா ராமகிருஷ்ணன்

***கிளாரன்ஸ் மேஜர் (1936 - ):*** *ஆப்ரோ - அமெரிக்க எழுத்தாளர்களுள் மிகவும் முக்கியமான பின் நவீனத்துவச் சிந்தனையாளராகக் கருதப்படுபவர். எழுத்து தவிர ஓவியமும் இவாது களம். இவாது எழுத்துகளில் வெளிப்படும் காட்சித் தன்மைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். ஏழு நாவல்கள், பன்னிரண்டு கவிதைத் தொகுதிகள், பல கட்டுரை ஆக்கங்கள்.... இதுவரை வெளிவந்துள்ளன. அட்லாண்டாவில் பிறந்திருந்தாலும் தென் அமெரிக்கக் கிராமம் ஒன்றில் வசிக்கும் தாத்தா-பாட்டி வீட்டிற்கு அடிக்கடி சென்று வந்த போதிலும் அவர் வளர்ந்ததென்னவோ சிக்காகோ நகரத்தில்தான்.* ***வான்கோ****வின் ஓவியங்களில் மனம் பறி கொடுத்த மேஜர் ஓவியத்துறையைத் தேர்வு செய்தார்.* ***வான்கோ, ரிம்பாடு*** *தவிர ஆப்பிரிக்க அமெரிக்க எழுத்தாளர்களாகிய* ***டூமர், ரிச்சர்டு ரைட்*** *முதலியோரும் மேஜரைப் பாதித்துள்ளனர்.*

*மேஜரின் கருத்துக்கள் பல்வேறு விவாதங்களுக்குக் களமாகியுள்ளன. பல்வேறு தொகுப்புகளில் இடம் பெற்றுள்ள* **'A Black Criterion' (1967,** *என்னும் ஆக்கத்தில் வெள்ளை அளவுகோல்களைத் தூக்கி எறியும்படி அவர் கருப்புக் கவிஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.* **Journal of Black Poetry**-*க்கு ஆசிரியராக இருந்தார். கருப்புக் கவிதைகள் என்றால் ஒரே மாதிரியாய், ஒற்றைப் பரிமாணத்தோடு மட்டும் இருக்கும் என்கிற கூற்றைப் பொய்ப்பிப்பது போல அமைந்தது* **The New Black Poetry** *என்னும் தொகுப்பு* ***(1970).*** **The Dictionary of Afro American Slang** *என்பது வர இன்னொரு முக்கிய தொகுப்பு.*

*புனைவுகள் எதார்த்தத்தைப் பிரதிபலிக்கவில்லை. மாறாக தனக்கான புதிய எதார்த்தத்தை அவை உருவாக்கிக் கொள்கின்றன என்கிற கருத்துடையவர் வார்த்தைகள் எதார்த்தங்களின் வெளிப்பாடு அல்ல. எதார்த்தங்களை அவை உருவாக்குகின்றன என்பது அவாது கொள்கை. "நீ வார்த்தைகளோடு தொடங்கி வார்த்தைகளில் முடிகிறாய். சூழல்* **(Context)** *உன் சிந்தனையில் இருக்கிறது. மாறாக அதை வேறெதோ ஒன்றின் பிரதிபலிப்பாக நான் கருதவில்லை. சூழல் என்பது புத்தகத்திற்குள் உருவாக்கப்படும் எதார்த்தம்."*

**Reflex and Bone Structure** *என்னும் கட்டுரையில் மர்மக் கொலை நாவல்களைக் கட்டுடைக்கும் மேஜர் இத்தகைய கதையாடல்களில் அதனை எழுதுபவன்தான் கொலைகாரன் என முடிக்கிறார். அச்சுத் தாளில் குறிகள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பது பற்றிய* **Emergency Exists** *இன்னொரு முக்கிய நூல்.*

*உள்நாட்டு அமெரிக்கர்கள், அவர்களது அடையாளச் சிக்கல்கள் குறித்தும் சில நாவல்கள், கவிதைகளை மேஜர் ஆக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

---

ஹலோ? அம்மாவா? இது ஃப்ளாய்ஸ், நான் தான். இப்போதுதான் கோர்ட்டிலிருந்து திரும்பி வந்தேன். ஆமாம், ரஸ்ஸலும் நானும். ஒரு மோசமான செய்தி. சொன்னால் நம்பமாட்டீர்கள். அவர்கள் ஹார்லே-வை விடவில்லை. அப்புறம், என் கணவன், சற்று நேரத்திற்கு முன்பாக இறந்து விட்டான். போலீஸ்காரர்கள் இப்போதுதான் இங்கு வந்திருந் தார்கள். அவனை ஒரு ஸ்ட்ரெச்சரில் கிடத்தி, முழுக்கப் போர்த்தி எடுத்துச் சென்றார்கள். என்னையும் ரஸ்ஸலையும் கேட்காத கேள்விகளெல்லாம் கேட்டார்கள். நாளை காலை நாங்களிருவரும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகவேண்டும். ஏதோ சில காகிதங்களில் நான் கையெழுத்துப் போடவேண்டு மாம். ஆனால் அம்மா, மெட்வின் இறந்ததுகூட எங்களுக்குத் தெரியவில்லை. விசாரணை முடிந்து நாங்கள் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தோம். காரின் முன் சீட்டில் அப்படியே தொய்ந்து போனது போல உட்கார்ந்து இருந்தான். கடைசி வரை அப்படி இப்படி சாய்ந்துவிடாமல் உட்கார்ந்த நிலையி லேயே இருந்தான். சாதாரணமாகத்தான் தூங்கிக் கொண்டி ருக்கிறான் என்று என்னால் அடித்துச் சொல்லியிருக்க முடியும். சில நேரங்களில் அவனை எழுப்ப எவ்வளவு சிரமட் பட்டிருக்கிறேன் தெரியுமா. அசையவே மாட்டான். இதுவும் அப்படியொரு தூக்கம் என்றுதான் முதலில் நினைத்து விட்டேன். கொஞ்ச காலமாகவே அவன் நிறைய சொதப்பிக் கொண்டிருந்தான். மருந்து மாத்திரைகளெல்லாம் ஒழுங்காக சாப்பிடுவதில்லை என்று உனக்குக்கூட சொல்லியிருக்கிறேன் அப்புறம், இப்படி மயங்கிக் கிடந்துவிட்டு பல மணி நேரத்துக்குப் பிறகு நினைவு திரும்புவது அது ஒன்றும் முதல் தடவையில்லை. அதனால்தான், வழக்கமாக நடப்பதுபோல இப்போதும் ஏதோ மயங்கிக்கிடக்கிறான் என்று நாங்கள் பேசாமலிருந்துவிட்டோம். ஆனால், நாங்கள் கோர்ட்டுக்கு இருந்தபோதே அவன் இறந்துவிட்டிருக்க வேண்டும் வெர்னானைப் பார்க்க விரும்பாத ஒரே காரணத்துக்கா இந்தச் சிக்காகோ வெயிலில் வெளியே அங்கே அந் புழுக்கத்தில், காரில் அவ்வளவு நேரமும் உட்கார்ந்துகிடப்பத உன்னால் கற்பனையாவது செய்து பார்க்க முடியுமா

www.padippakam.com



அதோடு கண்ணே, சிக்காகோவில் ஆகஸ்டு மாதம் ஒன்றும் விளையாட்டான விஷயம் இல்லை. அப்படியும் கூட ஹார்லே-யின் விசாரணையைப் பார்க்க அவன் உள்ளே வரவில்லை. ஹார்லே, ரஸ்ஸல் இருவரிடமுமே அவனுக்கு அன்போ பாசமோ இருக்கவில்லை என்பது என் ஊகம். அவர்கள் அவனை நடத்திய விதம், ஒருமுறை அவனை அப்படி அடித்தது, எப்போதும் மோசமான வார்த்தைகளால் கரித்துக் கொட்டியது எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது அதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. மெட்வினும் ரஸ்ஸலும் என்றுமே நண்பர்களாகவே இருந்தது இல்லை என்பது போல இருந்தது. ஆனால் உனக்கு ஞாபகமிருக்கிறதா, அவர்கள் இருவரும் வி.ஏ. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று தேறி வந்தபோது, ரஸ்ஸல் தான் அவனை எனக்கு முதலில் அறிமுகம் செய்து வைத்தான். அது எப்போது நடந்தது? பத்து வருடங்கள் இருக்குமா? அடேயப்பா, காலம்தான் எத்தனை வேகமாக பறந்துவிடுகிறது. அப்புறம் தெரியுமா, ரஸ்ஸல்தான் மெட்வினை வீட்டிற்கு கூட்டி வந்தான். பாவம் வீடு வாசல் இல்லாதவன், இப்படியே தெருவில் விட்டுவிடுவது சரியாக இருக்குமா என்றெல்லாம் என்னென்னவோ சொல்லி என் இரக்ககுணத்தை வைத்து எப்படியாவது சாதித்துவிடலாம் என்று பார்த்தான். அதுவும், எனக்குக் கரைந்துபோகிற மனது என்பதை நன்றாகத் தெரிந்து வைத்துக்கொண்டு. ஆக, இப்படித் திடீரென்று மெட்வின் எங்களோடு. ரஸ்ஸலுக்கு நண்பன், ஆனால் ஏறக்குறைய என் வயது. அப்புறம் உனக்கு ஞாபகமிருக்கிறதா, ஆரம்பத்தில் எல்லாம் நன்றாகவே இருந்தது. ரஸ்ஸலும் மெட்வினும் மட்டுமே நண்பர்களாக, முன்னறையில் நாள் முழுக்க டிவி. பார்த்துக்கொண்டு, மருந்துகளையும் பீரையும் குடித்துக்கொண்டு இருந்தவரை எல்லாமே நன்றாக இருந்தது. அனால் மெட்வின் வீட்டிலிருந்த ஒவ்வொன்றையும் நோட்டம் விடத் தொடங்கியது, என்னைப் பார்க்க ஆரம்பித்தது, அப்படி அந்தப்பக்கமாக போகும்போது எட்டி என்னைத் தொட்டுப்பேச ஆரம்பித்தது, அடடா இது எங்கோ போகிறது, ரஸ்ஸல் இதற்காக அவனை கூட்டிவரவில்லை. அவனுடைய அம்மாவோடு! இல்லை, கூடாது. அவனுடைய அம்மாவும் நண்பனுமா! கூடாது. ஆனால், அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், அம்மா, உனக்குத் தெரியுமா, காதல் விசித்திரமானது, ரொம்பவும் விசித்திரமானது. யாராலும் அதைத் தடுக்க முடியாது. பற்றிக்கொண்டுவிட்டால் அந்த நெருப்பு படர்ந்து பரவிக்கொண்டே இருக்கும். அப்புறம், ரஸ்ஸல் மட்டும் என்ன செய்துவிட முடியும். அவன் என் மகன். எனக்கு எல்லாமும் அவன்தான். அவன் மீது அளவில்லாத பாசம் வைத்திருக்கிறேன். ஆனால், அவன் தன் புத்தியைக் காட்டிவிட்டான். அம்மா, உண்மையைச் சொல்கிறேன், அந்தப் பையன் என்னைப் பாடாதபாடு படுத்திவிட்டான். என்ன, பையன் என்றா சொன்னேன்? அய்யோ! இல்லையம்மா, ஆண்-மகன். இனி அப்படித்தான். ரஸ்ஸல் வளர்ந்த வளர்ந்துவிட்ட ஆண் - மகன். இனிமேலும், அவன் சின்னப் பையன் இல்லை, ஆண்-மகன். வெள்ளைக் கழிசடை என்றெல்லாம் மெட்வினை மோசமாக திட்டிக்கொண்டு, மகாக் கேவலமாக நடந்துகொண்டவனை விவரமில்லாதவன், ஏதோ தெரியாமல் செய்துவிட்டான் என்றெல்லாம் இனியும் நீ சொல்லிக் கொண்டிருக்க முடியாது. உனக்கு ஞாபகமிருக்கும், அப்போதே அதைப் பற்றி உனக்குச் சொல்லியிருக்கிறேன். இரண்டு மூன்று முறை அந்தப் பயலை வீட்டை விட்டு வெளியே துரத்துமளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது. மெட்வினை எப்படியெல்லாம் கொல்லப்போகிறேன்பார் என்றெல்லாம் கிறுக்கு பிடித்தது போல பேச ஆரம்பித்துவிட்டான். அந்தக் கருப்பனிடமிருந்து மெட்வினைக் காப்பாற்றிய அந்தச் சம்பவம் பற்றி சொன்னேனா? கழுத்தை நெறித்துக் கொல்லப் போய்விட்டான். இதோ, இங்கேதான்; கட்டிலின் மேலே. அத்தனை ரத்தமும் முகத்துக்கு ஏறியது போல சிவந்து, உயிருக்குப் போராடிக் கொண்டு, பரிதாபமாக மெட்வின் அதன் மேலே கிடந்தான். அம்மா என்ன பயங்கரம். உனக்குத் தெரியும், அப்போதிருந்துதான் என் உடல் நலம் கெட ஆரம்பித்தது. என்னுடைய தொல்லைகள், வீழ்ச்சி எல்லாவற்றுக்கும் ஆரம்பம் அதுதான். அதற்கு முன்னால் எப்போதுமே ஆரோக்கியமாக இருந்தவள் நான். உனக்கு அது தெரியும். வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போய்க்கொண்டிருந்தேன். ஒருநாள்கூட தவறியதில்லை. ஆனால், கடந்த சில வருடங்களாக என் பிள்ளைகளால் வந்த சோர்வும் அழுத்தமும் என் பாதி உயிரை உறிஞ்சி எடுத்துவிட்டது. அம்மா, இப்போது நானே மருந்துகள் எடுத்துக்கொண்டு இருக்கிறேன். நானே! இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் முன்பாக வாழ்க்கையில் நான் மாத்திரைகள் எடுத்துக்கொண்டதே இல்லை. டாக்டர் என்னை மூன்று வெவ்வேறு மாத்திரைகள் சாப்பிடச்சொல்லி இருக்கிறார். எல்லாவிதமான சோதனைகளும் செய்து பார்த்தார். அது ஏதோ நஜீட்க்ஷர்ல்ட்ழ்ங்ய்ண்ஹ-வாமே, அது பிடித்திருப்பதாக சொல்கிறார்கள். சரி, உனக்கு இந்த சமாச்சாரங்களைப் பற்றியெல்லாம் என்னைவிட அதிகம் தெரியும் என்பது எனக்குத் தெரியும். ஆமாம், மருந்துகள் எல்லாம் ஒழுங்காக எடுத்துக்கொள்கிறேன். அவை, என் பதட்டத்தைத் தணித்து அமைதிப்படுத்த என்று சொல்கிறார்கள். ஆனால், இன்றும் என்னென்னவோ சின்னச் சின்ன மாத்திரைகளும் நிறைய விழுங்க வேண்டியிருக்கிறது. அதெல்லாம் எதற்கு என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அம்மா, உனக்குச் சொல்கிறேன். இந்தப் பையன்கள் என்னைக் கொன்றுபோட விடமாட்டேன். இல்லை, நிச்சயம் விடமாட்டேன். அந்தப் பையன்கள் ஏறக்குறைய என்னை முடித்துவிட்டிருந்தார்கள். ஆனால் என்னை என் சவக்குழிக்குள் தள்ள அவர்களை விடமாட்டேன். அப்புறம், ரஸ்ஸலே கூட இப்போதெல்லாம் அவன் சகோதரனை நினைத்து ரொம்பவும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறான். ஆனால் அம்மா, உனக்குத் தெரியும், அவனுடைய நிலைமையே கூட இப்போது சரியில்லை. எப்போதும் வாட்டமாக தனியே உட்கார்ந்திருக்கிறான். டிவி. பார்ப்பது, தூங்குவது இதைத் தவிர எதுவும் செய்வதில்லை. ஜெர்மனியில் இருந்து திரும்பியதிலிருந்து, கடற்படையிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து அந்தப் பையன் முன்பு போலவே இல்லை. நீ, அந்தப் பையன் ஏதோ சண்டையில் கலந்து கொண்டுவிட்டு - அதை என்ன சொல்வார்கள் போர் அதிர்ச்சியா, களச் சோர்வா - அப்படி ஏதேனும் அதிர்ந்து போயிருப்பான் என்று

படிப்பகம்

www.padippakam.com



நினைப்பாய். இப்போது அவனுடைய தம்பிப் பயல், சின்னத் தம்பி, ஹார்லே, அடக் கடவுளே! சேரக்கூடாத கும்பலோடு சேர்ந்து, போதை மருந்து விற்கிறவர்களோடு சுற்றிக் கொண்டிருந்த ஒரே காரணத்துக்காக இப்போது சிறையில் இருக்கிறான். கொடூரமான கொலைக் குற்றம் செய்ததாக அவனைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். ஆனால், நான் ஹார்லேயை நம்புகிறேன் அம்மா. துப்பாக்கியை அவன் பிடித்ததே இல்லை என்று நிச்சயமாக நம்புகிறேன். அவன் சரியான முட்டாள். தெருவில் நாலு பயல்களோடு சேர்ந்து சுற்றிக்கொண்டு இருந்துவிட்டு, துப்பாக்கியே பிடிக்காமல் கடைசியில் எல்லோருக்கும் சேர்த்து பலிகடா ஆகக்கூடிய அளவுக்கு முட்டாள். அந்த மற்ற இரண்டு பையன்கள், கெல்லியும் பாவ்லோவும் துப்பாக்கி வைத்திருந்திருப்பார்கள் என்று நம்புவதாக நீயே என்னிடம் சொல்லியிருக்கிறாய். நீ சரியாகத்தான் சொல்வாய் என்று எனக்குத் தெரியும். கனிவான, மிகவும் மென்மையான இதயம் அவனுக்கு. ஆனால், போலீஸ்காரர்கள் துப்பாக்கியை கண்டுபிடிக்காத தால் அவர்களால் எதையும் நிரூபிக்க முடியாது. இப்போது, உனக்கே தெரியும், அந்தப் பையன்கள் போலீஸ்காரர்களிடம், ஏரிக்கு காரை ஓட்டிக்கொண்டுபோய் துப்பாக்கியை ஏரியில் வீசிவிட்டதாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஹார்லே, அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்கிறான். இன்னும் துப்பாக்கியை அவர்கள் எங்கோ ஒளித்து வைத்திருக்கி றார்கள். என்ன? ஓ, ஆமா. அதற்காகத்தானே உன்னைக் கூப்பிட்டேன். அப்படித் தானே? இது எல்லாமே எனக்குப் புதிதாக, ரொம்பவும் அதிர்ச்சியாக இருக்கிறது. எதையும் தெளிவாக யோசிக்க முடியவில்லை, அம்மா. கொஞ்சம் இருங்கள். கோர்ட்டில் நடந்தது என்ன? மெட்வினுக்கு என்ன ஆனது? சரி முதலில், நான் முன்னமே சொன்னது போல கோர்ட்டுக்குள் வரவே மெட்வினுக்கு விருப்பமில்லை. காரணம், உள்ளே வெர்னான் இருந்ததுதான். ஆமாம், வெர்னான், உங்கள் அன்பு மகன் வெர்னான். என் பிள்ளை களின் தந்தை, வெர்னான். என்ன அற்புதம்! உங்களுடைய அந்த செல்லப் பிள்ளை இருபது வருடங்களுக்கு முன்பு இருந்தது போலவே இன்னமும் எத்தனை கவர்ச்சியாக இருக்கிறான். அப்புறம் கண்ணே, என்னை நம்பு, கோர்ட்டில் நான் அவனையே தான் பார்த்துக்கொண்டிருந்தேன். நரையேறிய பின்னும், இன்னமும் அதே மிடுக்கு. அப்புறம், எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். ம்ம்ம், இதே அற்புதமான இளமையோடு சக்கைபோடு வெர்னான். அம்மா, பெரியவர்கள் சொல்லி வைத்தது எல்லாம் சரியாகத் தான் இருக்கிறது. முதல் காதலை என்றுமே மறக்க முடிவதில்லை. பாருங்கள், மெட்வின் இதை சரியாக புரிந்துகொண்டான். அதனால் தான் அவன் கோர்ட்டுக்குள் வரவே இல்லை. என்னுடைய பையன்களுக்குத் தகப்பன், அந்த வெர்னான், எனக்கு என்னவாக இருந்தான் என்பதைப் புரிந்துகொண்டு விட்டான். அதோடு, இதையும் சொல்கிறேன். அவன் அவர்களுடைய வளர்ப்புத் தந்தை அல்ல, ரஸ்ஸலுடைய பழைய நண்பன் தான் என்பதை எப்போதும் அவர்கள் அவனுக்கு ஞாபகப்படுத்திக்கொண்டே இருந்தார்கள். அவர்களுடைய வளர்ப்புத் தந்தை என்று தன்னை நினைத்துக் கொள்ளாமல் இருப்பது அவனுக்கு நல்லது என்று அறிவுறுத்திக்கொண்டே இருந்தார்கள். ஆனால், அவனை வாய்க்கு வந்தபடி திட்டுவது. அது ரொம்பவும் அசிங்கம் அம்மா. உண்மையைச் சொல்கிறேன், அதனால்தான் மெட்வின் உள்ளே வரவில்லை. இப்படியே காரிலேயே உட்கார்ந்து கொண்டு காத்திருக்கிறேன் என்று சொல்லி விட்டான். ஆனால் பாருங்கள், இப்படி மதியம் வரைக்கும் வழக்கு இழுத்துக்கொண்டு போகுமென்று அவனுக்கும் தெரியாது, எங்களுக்கும் தெரியாது. எப்போதும் போல ஒன்பது மணிக்கு ஆரம்பித்து மதியத்துக்குள் முடிந்துவிடும் என்றுதான் நினைத்தோம். அப்புறம் பார்த்தால் ரொம்பவும் மெதுவாக நகர்ந்து கொண்டிருப்பது போலத் தோன்றியது. எல்லோரும் உள்ளே போனோம், ரஸ்ஸல், நான், என் அம்மா – பெனிட்டா, என் அம்மா, என்ன உனக்கு ஞாபகமிருக்கிறது தானே? – அவன் நல்ல மனதை வாழ்த்து அம்மா, அவ்வளவு அமைதியாக இருந்தாள். "செல்வி எட்மோனியா எப்படி வராமல் போனார்கள்?" என்று உன்னைப் பற்றியும் கேட்டாள். அப்புறம், நான் உன்னுடைய இதயநோய் பற்றி ஞாபகப்படுத்த வேண்டியிருந்தது. அப்புறம், வேறு யாரெல்லாம் வந்திருந் தார்கள் தெரியுமா? கேய், உன் மகள், தெரியுமா அவளும் வெர்னானோடு வந்திருந்தாள். அப்புறம் வேறு யாரெல்லாம்? இப்போது சரியாக ஞாபகம் இல்லை. ஆக, நாங்கள் எல்லோரும் இருந்தோம். ஆனால், நீ வராமலிருந்தது நல்லது தான். அதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை அம்மா. உன் இதயம் இருக்கும் நிலையில் உன்னால் அதையெல்லாம் தாங்கியிருக்க முடியாது. ஆனால், அந்த இடம் முழுக்க கூட்டம் நிரம்பி வழிந்தது. எனக்கு முன்பின் தெரியாதவர்கள் எல்லாம் என்ன நடக்கிறது என்று பார்க்கிற ஆர்வத்தில் வந்திருந்தார்கள் என்று நினைக்கிறேன். யார்? ஓ, ஆமாம். அந்தக் குமாஸ்தாவின் குடும்பம் மொத்தமும் வந்திருந்தது. சரிதான், வெலோராதான். ஆமாம், அவனுடைய பெயர் கில்ராய். ஆமாம், ஆமாம். டிவி.-யில் சொல்லக் கேட்டி ருப்பாய். அவனுடைய சகோதரி, எல்லா என்று அவளை அழைத்தார்கள், அவளும் அங்கு இருந்தாள். அவர்களில் அவள் ஒருத்தியை மட்டும்தான் விசாரித்தார்கள். அப்புறம் பாருங்கள் அம்மா, அவளுடைய சகோதரன் எவ்வளவு நல்லவன், அவளுடைய அண்ணனைக் கொன்ற அந்தப் பையன்களைப் போன்ற தெருப் பொறுக்கிகளுக்கெல்லாம் எப்படி அவனால் முடிந்தபோதெல்லாம் சின்னச் சின்ன உதவிகள் செய்தான் என்று அவள் பாட்டுக்கு ஏதேதோ சொல்லிக் கொண்டே போனாள். ஆனால், இதைத் தவிர அவள் சொன்னது எதுவும் என் ஞாபகத்துக்கு வரவில்லை. என் பையனை தெருப்பொறுக்கி என்றாள். அப்புறம் அழவேறு செய்தாள். உண்மையைச் சொல்கிறேன் அம்மா, அவ்வளவு அற்புதமாக நடித்தாள். நீதிபதி அதை அப்படியே நம்பிவிட்டார். அப்புறம், ஹார்லேயுடைய அந்த குற்றவாளி நண்பர்கள் பாவ்லோவும் கெல்லியும் அங்கு காவலில் வந்திருந்தார்கள். ஆனால், வெறும் சாட்சிகளாகவே கொண்டு வந்திருந்தார்கள். விசாரணைக்கு இல்லை. அவர்களுக்குத் தனித்தனியாக விசாரணை வைக்கப் போகிறார்கள் போலி ருக்கிறது. அப்புறம் பாருங்கள், உங்களிடம் கூட முன்னமே சொல்லியிருக்கிறேனே, ஹார்லேயுடைய வக்கீல் ஏஞ்சலோ பெஸ்ஸானோ, உண்மையிலேயே திறமையான வக்கீல் என்று

படிப்பகம்

www.padippakam.com



நினைத்திருந்தேன் என்று. அவரால் முடிந்தவரை முயற்சி செய்து பார்த்தார். ஆனால் என்ன செய்வது. வழக்கு வெல்வதற்கு ரொம்பவும் கடினமானது. அந்த நீதிபதி - அந்த ஆளுடைய பெயர் என்ன? ஒரு மாதிரி வேடிக்கையான பெயர்? நீதிபதி யுரெக் டான்சிக் - ஆரம்பத்திலிருந்தே ஹார்லேயை ஒழித்து கட்டிவிடுவது என்று தீர்மானமாக இருந்தான். எனக்குத் தெரிந்தவரை ஏஞ்சலோ செய்த ஒரே தவறு ஜூரி விசாரணையைக் கோர வேண்டாம் என்று ஹார்லேவுக்கு யோசனை சொன்னதுதான். அது மோசமான தவறாகப் போய்விட்டது. ஜூரி விசாரணை மட்டும் கிடைத்திருந்தால் இப்போது குக் மாவட்டச் சிறையில் அடைபட்டிருக்காமல் இந்நேரம் மதியமே விடுதலை ஆகிவிட்டிருப்பான். ஆனால், அதற்காக ஏஞ்சலோவை நான குற்றம் சொல்லவில்லை. எது சரி என்று நினைத்தானோ அதைச் செய்தான். அந்த நீதிபதியை மனமார நம்பினான். அப்புறம் ஹார்லேயும் ஏஞ்சலோவை நம்பினான். அவனுடைய யோசனைப்படியே நடந்துகொண்டான். ஜூரி விசாரணை வேண்டாம் என்று சொல்லிவிட்டான். என்ன? ஓ. அந்த வாதித் தரப்பு வக்கீல், அவன் பெயர் டான் க்ரீவர். முதல்கட்ட விசாரணையில் அவர்கள் வைத்த அதே வக்கீல். ஞாபகமிருக்கிறதா? பாருங்கள், அந்தக் காலை முழுவதும், மதியம் பாதி வரைக்கும் என் மகனை தூக்குக்கு அனுப்ப அந்த க்ரீவர் வைத்த வாதங்களையும் என் மகன் குற்ற மற்றவன் என்று வாதிட்டுக்கொண்டிருந்த ஏஞ்சலோவையும் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்திருந்தேன். ஆனால், உண்மையைச் சொல்கிறேன் அம்மா, அந்த வாதியின் வக்கீல் பேசியது அத்தனையும் மகா அபத்தம் - எனக்கு அப்படித்தான் இருந்தது. விஷயம் என்னவென்றால், அந்த நீதிபதி அவன் சொன்னதை யெல்லாம் எப்படி அப்படியே ஏற்றுக்கொண்டான் என்பது தான் எனக்குப் பிடிபடவே இல்லை. நம்புகிற மாதிரி விஷயங் களைக் கோர்த்து தெளிவாக எதையும் அவன் சொல்ல வில்லை. ரஸ்ஸல் அப்படித்தான் சொன்னான். ரஸ்ஸல் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அப்புறம், ரஸ்ஸல் சட்டப் புத்தகங்களையும் படித்திருக்கிறான். நிறைய விஷயங்களைப் படித்திருக்கிறான். அவனுக்கு நல்ல மூளை இருக்கிறது. ஆனால் அதை உபயோகப்படுத்தி எந்த உருப்படியான காரியமும் செய்யமாட்டான். எப்படியோ, ஏஞ்சலோவும் க்ரீவரும் பேசியதையெல்லாம் வைத்து நீதிபதி ஹார்லேயை குற்றவாளி என்று சொல்ல மாட்டார். அங்கேயே, அப்போதே அவன் விடுதலையாகிவிடுவான் என்றுதான் நாங்கள் நம்பினோம். ஆனால் அந்த நீதிபதி "பிரதிவாதி குற்றம் செய்திருக்கிறார் என்பது நிருபணமாகிறது", என்று சாதாரணமாக சொல்லிவிட்டான். சொல்லிவிட்டு, வாசலில் நின்று கொண்டிருந்த போலீஸ் ஆபீசரைப் பார்த்து, பாதி வாழ்க்கை வெறுத்துப் போனது மாதிரியான அமைதியான ஒரு தொனியில், "கைதியை காவலுக்கு கொண்டு போகலாம்", என்றான். என் உயிரே போய்விட்டது போலிருந்தது. உண்மையைச் சொல்கிறேன் அம்மா, என் இதயமே நின்றுவிட்டது. இன்னும்கூட அது பழைய மாதிரி துடிக்க வில்லை. ஆனால் அந்த நீதிபதி - என்ன நடக்கிறது என்று நிதானத்துக்கு வருவதற்கு முன்னாலேயே, அடுத்த வழக்கை அவன் பாட்டுக்கு அழைத்துவிட்டான். என்றாலும் தண்டனை இன்னும் ஒன்றிரண்டு வாரங்கள் தள்ளித்தான் இருக்கும். பாருங்கள் அம்மா, இங்கே சிக்காகோ-விலிருக்கிற இந்த நீதிபதிகளுக்குத் தேவையானதெல்லாம் குற்றத்தை நிருபிக்கிற மாதிரி சில ஆதாரங்கள் வேண்டும், தங்கள் வேலை சீக்கிரம் முடியவேண்டும். அவ்வளவுதான். நீதியைப் பற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலையே இல்லை. ரஸ்ஸல் சொன்னது போல, அவர்களுக்குத் தேவையானது எல்லாம் குற்றத்தை நிருபிக்க ஒரு ஆதாரம். ரஸ்ஸல் ஒருமுறை சொல்லி யிருக்கிறான், ஒருமுறை ஏதாவது ஒரு விஷயத்தில் - அது எந்தக் கன்றாவியானாலும் சரி - இந்தச் சிக்காகோ குற்றவியல் நீதித்துறையிடம் மாட்டிக்கொண்டுவிட்டால் போதும், உன் வாழ்க்கை அவ்வளவுதான். குட்டிச்சுவர்தான். உன் கதை முடிந்துவிட்டது என்று முடிவுசெய்துவிடலாம். ரஸ்ஸல் இதை எப்போதும் சொல்லிக்கொண்டு இருப்பான். உனக்குத் தெரியுமா, படையிலிருந்து வந்த பிறகு, அவன் கொஞ்சம் நல்லபடியாக இருந்த அந்தச் சமயம், கொஞ்ச காலத்திற்கு அவன் கோர்ட்டிலும் காவலாளியாக வேலை செய்திருக் கிறான். உனக்கு ஞாபகமிருக்கிறதா. அங்கே, உள்ளே நடக்கிற எல்லா அயோக்கியத்தனங்களும் அவனுக்குத் தெரியும். என்ன? என்ன சொல்கிறீர்கள் அம்மா? ஓ. ஆமாம். ரொம்ப வும் அசாதரணமான விஷயம் இல்லையா இது. இப்படி செத்துப்போவது. சும்மா அப்படி உட்கார்ந்திருந்த படியே சாவது. அந்த வெப்பத்தில், புழுக்கத்தில். ஏதோ சாதாரணமாக உட்கார்ந்திருக்கிறான் என்று நினைத்துக் கொண்டு நாங்களும் காரை வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வந்தது.


## நிறப்பிரிகை - 10

### ஜூலை '98

- தென் மாவட்ட சாதி மோதல்கள் - கூட்டு விவாதம்.
- கோவை மதக் கலவரங்கள் - கள ஆய்வு.
- காஞ்சா அயிலய்யா - பேட்டி
- இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் : ஒரு பார்ப்பனராகவும் கம்யூனிஸ்டாகவும் - திலீப் மேனன் - ஆய்வுக் கட்டுரை
- நீட்ஷே பற்றி பரியான் மேகி - ஸ்டெர்ன் உரையாடல்: வெங்கடேஷ் சக்ரவர்த்தியின் குறிப்புரையோடு
- கருப்பர் அரசியல் - சில குறிப்புகள்.
- வித்தியாசங்களின் புகழ்ச்சியில் - அ. மார்க்ஸ்

இன்னும் பல முக்கிய கட்டுரைகளுடன்...


படிப்பகம்

www.padippakam.com



# நிழலைக் கொன்றவன்

## ரிச்சர்டு ரைட்

தமிழில் : வளர்மதி

***ரிச்சர்டு ரைட் (1908-1960):*** "ஒரு குற்றவாளி எழுத்தாளரான கதை" என்பது ரிச்சர்டு பற்றி எழுதப்பட்ட ஒரு விமர்சனக் கட்டுரையின் தலைப்பு. 'மிஸ்ஸிசிபி'யைச் சேர்ந்த 'நாட்சே' பகுதியிலுள்ள பெருந்தோட்டம் ஒன்றில் மிகவும் ஏழ்மையான பின்னணியில் தோன்றியவர் ரிச்சர்டு. அம்மா பக்கவாத நோயில் வீழ்ந்த பின் சகோதரரோடு அனாதை இல்லத்தில் தஞ்சம். இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நூலகங்களின் மூலம் **எச்.எல். மென்கென், தியேடர் டிரெசியர், ஷெர்வுட்ஆண்டர்சன், சிங்ளேர் லூயிஸ்** ஆகியோரின் எழுத்துக்களை படித்துத் தீர்க்கிறார். அவரை மிகவும் பாதித்தது **மென்கென்.** "வார்த்தைகளோடு போராடுகிற... போராடுகிற ஒரு மனிதன்... ஒரு தடியைப் பாவிப்பதுபோல...வார்த்தைகளை ஆயுதமாய்ப் பாவிக்கும் மனிதன்" என்பது மென்கனைப் பற்றிய ரிச்சர்டின் மதிப்பீடு.

கிராமப்புற தென் அமெரிக்காவின் இனவெறி, ஏழ்மை, பொது இடங்களில் கருப்பர்களைக் கொல்லும் வழக்கம்.. ஆகிவற்றுக்குப் பயந்து ஏராளமான கருப்பர்கள் இடம் பெயர்ந்ததை ஒட்டி 1927-ல் ரிச்சர்டு சிகாகோ வருகிறார். கண்ணியமான வாழ்க்கை வடக்கிலும் சாத்தியமில்லை என உணர்ந்தபோது 1930களில் தொடக்கத்தில் அவர் பொதுவுடைமைச் சிந்தனைகள் மற்றும் இயக்கங்களின் பால் ஈர்க்கப்படுகிறார். எழுத்தாளர்களின் மென்னியைப் பிடிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் விதிமுறைகள் அவரைக் கட்சியோடு முரண்பட வைக்கிறது. இரண்டாம் உலகப் போரில் படையில் கருப்பர்கள் மீது இன ஒதுக்கல் மேற்கொள்ளப்படுவதை கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்காதபோது கட்சியிலிருந்து விலக முடிவெடுக்கிறார்.. "நான் கம்யூனிஸ்ட்டாக முயற்சித்தேன்" என்கிற கட்டுரைப் பகுதிகள் வெளிவந்தபோது கட்சிக்கும் அவருக்குமான உறவு முழுமையாகச் சிதைகிறது (1944). மார்க்சியத்திற்கும் இலக்கியத்திற்குமான உறவுகள் குறித்து ஆழமாகச் சிந்தித்திருந்த ரிச்சர்ட் அந்த அனுபவங்களின் பின்னணியோடு கருப்பு அமெரிக்க எழுத்துக்கள் குறித்த இலக்கியக் கோட்பாடு வாக்க முயற்சிகளை மேற்கொள்கிறார். Blue Print for Negro Writing இந்த வகையில் ஒரு குறிப்பிடத் தக்க ஆக்கம். ஹார்லெம் மறுமலர்ச்சியை "வெள்ளை அமெரிக்காவிடம் கையேந்தி நிற்கும் அலங்காரத் தூதுவர்களின் பணிவான நாவல்கள், கவிதைகள், நாடகங்கள் எனக் கேலி செய்து ஒதுக்கிய ரிச்சர்டு எதார்த்தம் மற்றும் சமூகம் குறித்த ஒரு மார்க்சியக் கருத்தாக்கத்தைப் பரிந்துரைத்தார் இக்காலகட்டத்தில் அவரது முக்கிய ஆக்கம் Uncle Tom's Children (1938) பெண்களின் நோக்கில் அவர் எழுதியது Long Black Song. அவரது புனைவுகளில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது Native Son வெளிவந்ததோடு அமெரிக்கக் கலாச்சாரம் என்றென்றைக்குமாய் மாறியது" என ஓர் விமர்சகர் குறிப்பிட்டார். ஒரு எதிர்ப்பு எழுத்தாளராக இலக்கிய வரலாற்றில் ஓர் அழுத்தமான இடத்தை இந்த நூல் அவருக்கு உருவாக்கித் தந்தது. 'இந்த மாதப் புத்தகம் என மாதம் ஒரு நூலைத் தேர்வு செய்கிற 'Book of the Month Club, என்னும் அமைப்பு முதன் முதலாகத் தேர்வு செய்த கருப்பர் நாவல் Native Son மூன்று வாரங்களில் இரண்டு லட்சம் பிரதிகள் விற்பனையாயின. 1945 ல் வெளிவந்த அவரது தன் வரலாறு Black Boy இன்னொரு முக்கிய ஆக்கம்.

அடுத்த பதினைந்து ஆண்டுகள் - அவரது இறுதிக் காலம் வரை - பாரிசில் கழிந்தன. **சார்த்தர், சிமோன் டி பாவே** ஆகியோருடன் நெருக்கமான தொடர்பு. **சார்த்தர், காம்யூ** ஆகியோரின் இருத்தலியல் சிந்தனைகளின் செல்வாக்கில் எழுதப்பட்ட ரிச்சர்டின் The Outsider, 1953ல் வெளிவந்தது. அவரது இளம் வயதுத் துன்ப வாழ்க்கையின் விளைவாக அவர் இயல்பிலேயே ஒரு இருத்தலியற் சிந்தனையாளராக இருந்தார் எனவும் பாரிசுக்கு வருவதற்கு முன்பேகூட அவரது எழுத்துக்கள் சிலவற்றில் இருத்தலியற் கூறுகள் உண்டு எனவும் சில விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

1950 களில் அய்ரோப்பா, ஆப்ரிக்கா கண்டங்களைச் சுற்றிய ரிச்சர்ட் உலகளாவிய பின்னணியில் இன ஒடுக்குமுறை குறித்துச் சிந்தித்தார். Black Power, (1954) White Men Listen, (1957) The Long Dream (1958) முதலியன இக்காலகட்டத்தில் முக்கிய ஆக்கங்கள். இங்கே மொழிபெயர்க்கப்பட்டுள்ள அவரது சிறுகதை Eight Men (Thunder's Mouth Press, Newyork, 1987) என்கிற சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



அவன் சின்னஞ் சிறிய பையனாக இருந்தபோதே அது எல்லாம் ஆரம்பித்துவிட்டது. அப்போதிருந்தே அவன் நிழல்களைக் கண்டு பயப்பட ஆரம்பித்துவிட்டான். அவசரப் பட்டுவிடாதீர்கள். அவன் பயந்தது தகதகக்கும் அந்தச் சூரியன் இந்த நிலத்தின் மீது படியவிட்ட அழகான நிழலுரு வங்களைப் பார்த்து அல்ல. பாவம், அவை என்ன செய்யும். ஆபத்தில்லாதவை. அதோடு, கோடையின் கண்கூசச் செய்யும் வெயிலில் அவற்றைத் துரத்திப் பிடித்து விளையாடு வது அவனுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால், மற்ற எவர் கண்களுக்குமே படாத அவனுக்கு மட்டுமே தெரிகிற மர்ம மான சில நிழல்கள் இருந்தன. அவை, அவனுடைய அச்சத் தின் நிழல்கள். ஆக, இந்தப் பையனுக்கு அப்படியான நிழல்கள் இருந்தன. அவற்றில் ஒன்றைக் கொல்வதற்கு அவன் வாழ்ந்திருந்தான்.

சால் சாண்பர்ஸ் தலைநகர் வாஷிங்டனிலிருந்து சில மைல்கள் தொலைவிலிருந்த தெற்கின் சிறிய டவுன் ஒன்றில் கருப்பாக பிறந்தான். அதாவது, அவன் பிறந்த உலகம் இரண்டாக பிளவுண்டிருந்தது. ஒன்று வெள்ளை உலகம்; மற்றது கருப்பு உலகம். இரண்டு உலகங்களுக்கும் நடுவில் கோடி மைல்கள் உளவியல் இடைவெளி இருந்தது. ஆக, ஆரம்பத்திலிருந்தே சால் தனது கருப்பு உலகிலிருந்து எட்டிப் பார்த்தபோது அவனுக்குச் சொந்தமில்லாத அவனால் புரிந்துகொள்ளவே முடியாத ஒரு வெள்ளை உலகின் நிழற்கோடுகளே மங்கலாகத் தெரிந்தன.

அப்புறம் என்ன நடந்ததென்றால் சாலுக்கு அவனுடைய தாயே:கூட உருவில்லாத ஒரு நிழலாகவே ஆகிப்போனாள். அவனுடைய நினைவில் அவளுடைய உருவத்தை பதித்துக்கொள்ளும் முன்னமே வெகுகாலத்திற்கு முன்னதாகவே அவள் மறைந்துவிட்டாள். அவனுடைய தந்தைக்கும் இதே கதி விதிக்கப்பட்டிருந்தது. அவனும் பையன் அவனுடைய உருவத்தை மூளையில் செதுக்கிக் கொள்வதற்கு முன்னதாகவே மாண்டு போனான்.

நெருங்கி, பழகி அறிந்துகொள்வதற்கு முன்னமே, அவன் கண் முன்பாகவே நபர்கள் காற்றில் கரைந்து போனதால் உயிர்ப்புள்ள மனிதர்களை, ஆளுமை கொண்ட நபர்களை அறிந்துகொள்ள அவனுக்கு வாய்க்கவே இல்லை. மனிதர்கள் அவனுக்கு நிச்சயமின்மையின் குறியீடாக ஆகிப் போனார்கள். வாழ்வின் நிச்சயமற்ற தன்மை அவனுக்குள் பதிந்து போனது. உருவற்ற, தெளிவில்லாத நிகழ்வு ஒன்று அவன் மீது கவியக் காத்திருப்பது போன்ற ஒரு உணர்வு நிரந்தரமாக அவனைப் பிடித்துக் கொண்டது.

தொடர்பற்ற அந்நியர்களாகவே ஆகிவிட்ட சகோதரர் கள் ஐந்து பேரும் இரண்டு சகோதரிகளும் அவனுக்கு இருந்தார்கள். அத்தனை பேரையும் காப்பாற்றிக் கரைசேர்க்க யாரும் இல்லாததால் உறவினர்கள் ஆளுக்கொரு குழந்தையை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

சாலை அவனுடைய பாட்டி எடுத்துக்கொண்டாள். எப்போதும் ஒரு டவுனிலிருந்து மற்றொன்றுக்கு மாறிக் கொண்டே இருந்தவள் அவள். அதனால்தான் என்னவோ அழகிய நிலப்பரப்புகளும்கூட சாலுக்கு எந்த உணர்ச்சிப் பிடிப்பையும் தராமல் போயின. கொஞ்சகாலத்திற்கு தங்கி யிருந்துவிட்டு நகர்ந்துவிடவேண்டிய உயிர்ப்பற்ற வெளிகள் என்பதற்கு மேலாக தெற்கின் அந்தச் சிறிய டவுன்கள் அவனுக்கு பெரிய அர்த்தம், கிளர்ச்சி எதையும் தந்துவிட வில்லை.

பனிரெண்டு வயது இருக்கும்போதே எல்லா புறயதார்த்தமும் அவனுக்கு வெறும் நிழல்களாக ஆகிப் போயின. அவனுடைய பெற்றோர்கள், அவன் விழுந்துவிட்ட கருப்புத் தீவைச் சூழ்ந்திருந்த வெள்ளை உலகம், வரிசையாக நகர்ந்துகொண்டே இருந்த தூசிபடிந்த சின்னச் சின்ன டவுன்கள் என்று எல்லா யதார்த்தத்தையுமே உள்ளீடில்லாத வெறும் பெயர்களாக, சாரமில்லாத பொருட்களாக, ஒரு நொடிப்பொழுது நிகழ்ந்துவிட்டு ஆழங்காணமுடியாத சூன்யத்தில் கறைந்துபோய்விடுகிற சிறு துகள்களாக பார்க்கத் தொடங்கினான்.

சால் சோம்பேறியோ மந்தமானவனோ அல்ல. என்றாலும் பள்ளியில் மூன்றாவது க்ரேடை எட்டுதவற்கு அவனுக்கு ஏழு வருடங்கள் பிடித்தது. அவனுடைய வாழ்க்கையில் வந்துபோனவர்கள் வெரும் படிப்பை ஒரு பொருட்டாக எடுத்துக்கொண்டவர்களில்லை. சாலும் இதற்கு விதிவிலக்காகிவிடவில்லை. பதினாலு வயது ஆனபோதும் மூன்றாவது க்ரேடிலேயே இருப்பது அவனுடைய சூழலில் சாதாரணமான ஒன்று. சாலும் மற்ற எல்லோரையும் போலவே சாதாரணமானவனாக இருப்பதையே விரும்பினான்; சராசரியாகவே இருந்தான்.

அப்புறம், சாலுடைய பாட்டி, எப்போதும் தன்னுட னேயே இருப்பாள் என்று அவன் நம்பியவள், திடீரென்று ஒருநாள் இறந்துபோனாள். அந்த நொடியிலிருந்து கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல அவனுக்கு எதுவும் புரியாமல் போனது. வெள்ளையர்களிடம் வேலைக்குப் போக ஆரம்பித் தான். திடீரென்று இப்படி வெள்ளை உலகத்துக்குள் போய் விழுந்தவனுக்கு அந்த உலகம் சுத்தமாக பிடிபடவில்லை. அவனுடைய நிழல்கள் இப்போது பயங்கர உருவங்கள் எடுத்து எங்கு சென்றாலும் அவனை சுற்றிச் சூழ்ந்து கொண்டன. அவனுக்கும் எங்கோ ஏதோவொரு இடத்தில் மறைந்திருந்த சூரியனுக்கும் இடையில் ஏதோவொரு பொருள் அந்த பயங்கர கரிய நிழலைக் கவித்து நின்றது.

வேலைக்குச் சேர்ந்த இடங்களில் விசித்திரமான அந்த வெள்ளையர்கள் அவனை ஏதோ இழிந்த பொருளைப் போல பார்ப்பதை சீக்கிரத்திலேயே உணர்ந்துகொண்டான். ஒருநாளும் அவன் தன்னை தாழ்ந்தவனாக கருதியதில்லை. ஆனால் இப்போது சுற்றிலும் ஒருமுறை பார்த்தபோது மற்ற கருப்பர்கள் எல்லோரும் தங்கள் மீது பதிக்கப்பட்ட இந்தத் தாழ்வான மதிப்பை சத்தமில்லாமல் ஏற்றுக்கொண்டி ருப்பதைக் கண்டான். அப்படியிருக்கும்போது. இவன் யார் அதை எதிர்க்க? வேறு எந்த வழியும் இல்லாததால், அவனோ மற்ற யாருமோ அறிந்திராத சக்திகளால் இயக்கப்பட்ட, அவன் வாழ்வில் எப்போதும் வந்து போய்க் கொண்டிருந்த அந்தப் பரந்த நிழல் உலகின் ஒரு பகுதி என்று சாதாரணமாக எடுத்துக்கொண்டு அமைதியாக இருந்துவிட்டான்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால், வெகு சீக்கிரமே அவனுடைய கவலைகள், அச்சங்கள், எரிச்சல்கள் அத்தனையும் அவனுடைய உழைப்பை உறிஞ்சிக்கொண்டு வெறும் ரொட்டியை வீசிய அந்த வெள்ளை நிழல் உலகின் மீது குவிய ஆரம்பித்தன. ஏனென்று தெரியாமலேயே குதூகலமிழந்து சோகமாகத் திரிந்தவன் இப்போது தன்னை அச்சம் கொள்ள வைத்த அந்த நிழல் உலகின் மீது தன்னுள் பொதிந்து கிடந்த துயரத்தனையும் இறக்கிவைத்தான். இதைச் செய்யாமல் விட்டிருந்தால், தன்னுடைய சுமையை இறக்கி வைப்பதற்கு ஒரு வழியைக் கண்டிருக்காமல் விட்டிருந்தால் எப்போதோ அவன் தற்கொலை செய்துகொண்டிருப்பான். கடைசியில் அந்த யோசனையையும் அவன் விட்டுவைக்கவில்லை. ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டிருந்தது...

பதினைந்து வயதானபோது சால் தான் அப்போது வாழ்ந்துகொண்டிருந்த வாழ்க்கைதான் தனக்கு விதிக்கப் பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டான். அவனைச் சுற்றிலும் இருந்த பொருட்கள் அத்தனையும் வெறும் நிழல்கள் என்ற உணர்வை விரட்டியடிக்கவோ மறந்துவிட்டு நிம்மதியாக இருக்கவோ வழியே இல்லை என்பதை உணர்ந்து கொண்டான். ஆனால், தன் இனத்தவரோடு, கருப்பு மக்களோடு இருந்தபோது அவன் தன்னை மறந்திருந்தான். அந்த சமயங்களில்தான் அவன் ஓரளவு மகிழ்ச்சியோடு இருந்தான். ஆனால், வயது ஏற ஏற வனது அச்சங்கள் கூடிக்கொண்ட இருந்தன.

ஆனால் அவனுடைய நண்பர்கள் இதையெல்லாம் கவனிக்கவே இல்லை. சொல்லப்போனால், சாலுடைய நண்பர்கள் அவனை மிகவும் நேசித்தார்கள். சால் எல்லோரிடமும் அன்பாகவே இருந்தான். இனிமையாகப் பழகினான். அடுத்தவர் பேச்சை எப்போதும் காதுகொடுத்துக் கேட்டான். அவனுடைய இனிய முகம். அமைதி, பணிவு இதெல்லாமும் அவனுடைய அச்சத்தின் விளைவுகள் என்பதை ஒருவரும் சந்தேகிக்கக்கூட இல்லை.

வாழ்க்கை இப்படியே போய்க்கொண்டிருக்கவில்லை. கொஞ்ச நாளில் சாலிடமும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதை அதிர்ஷ்டம் என்பதா அல்லது துரதிர்ஷ்டம் என்று சொல்வதா, தெரியவில்லை. சொல்வது சிரமம். சால் குடிக்கப் பழகிக்கொண்டான். ஒரு இரண்டு பெக் விஸ்கி உள்ளே போனதும் நரம்புகள் தளர்ந்து உளைச்சல்கள் குறைவது போல உணர்ந்தான். உலகம் இப்போது அதன் முப்பரிமாணத்தில் அழகாகத் தெரிந்தது. நிழல்கள் எங்கே போய் ஒளிந்தன என்றே தெரியவில்லை. மகிழ்ச்சியாக இருந்தது. விஸ்கி செய்கிற மாயம்தான் என்ன!

சால் குடிப்பதை விரும்ப ஆரம்பித்தான். சனிக்கிழமை இரவு கையில் சம்பளம் கிடைத்ததும் நண்பர்களோடு சேர்ந்து குடிப்பதை வழக்கமாக ஆக்கிக்கொண்டான். அந்த நேரங்கள் அவனுக்கு இதமாக இருந்தன. மகிழ்ச்சியும் தெம்பும் தந்த விஸ்கி இல்லாமல் வாழ்க்கை நிறைவாக இருக்காது என்று உணர ஆரம்பித்தான். ஆனால், உண்மையில் அது அப்படி இருக்கவில்லை. விஸ்கி அவனை மந்தமாக்கியது; சோர்வை அதிகரித்தது. அவனை அச்சுறுத்தி இறுக வைத்துக் கொண்டிருந்த நிழல்களைக் குறைத்து, அவற்றின் வெறியைத் தணித்தது.

நிதானத்தில் இருக்கும்போது வெள்ளை நிழல் உலகின் அருகாமையில் அவன் சிரித்ததே இல்லை. ஆனால், ஒன்றிரண்டு பெக் விஸ்கி உள்ளே போனதும் அங்கும்கூட தன்னால் சிரிக்கமுடிவதை கண்டுகொண்டான். நீக்ரோக்களின் அவலமிக்க வாழ்க்கை பற்றி யாராவது பிரசங்கம் செய்தால் அவன் கவலையில் மூழ்கிவிடுவதில்லை. விஸ்கி எடுத்துக் கொள்வான். சோகத்தின் சுமை இறங்கிவிடும். ஒரு வெள்ளைப் பெண்ணோடு தனியாக இருக்கும்போது, அவள் வீறிட்டுக் கத்திவிட்டால் உனக்கு சங்கு ஊதப்பட்டுவிட்டது என்று அர்த்தம்; நீ ஒன்றுமே செய்திருக்கவில்லை என்றிருந்தாலும்கூட நிச்சயம் கொல்லப்படுவாய்; என்றெல்லாம் சொல்லக் கேட்டபோதும்கூட அவன் அலட்டிக்கொள்வதில்லை. கருப்பர் பகுதியில் போலீஸ் கார்கள் சைரன்கள் அலற சீறிக்கொண்டு போவது, வெள்ளை போலீஸ்காரர்கள் நீக்ரோக்களை அடித்து இழுத்துச் செல்வது, எல்லாம் சாலுக்கு பார்த்துப் பார்த்து பழகிவிட்டன. ஒரேயொருமுறை அதை நினைத்து அவனுக்கு கடுமையான கோபம் வந்தது. அதே கதி தனக்கும் ஒருநாள் நேரக்கூடும்; நிழல்கள் தன்னையும் கொத்திச் சென்றுவிடக்கூடும் என்று உணர்ச்சிவசப்பட்டான். ஆனால் அவனுடைய நண்பர்கள் அந்த நினைப்பே ஆபத்தானது என்று அவனை பயமுறுத்தினார்கள். எப்போதும் கருப்பர்கள் தோல்வியடைய எழுதிவைக்கப்பட்டுவிட்டது என்று புத்தி சொன்னார்கள். மதுதான் நல்ல மருந்து என்று உற்சாகப்படுத்தினார்கள். அவனும் புரிந்துகொண்டான். விஸ்கியை விழுங்கினான். சற்று நேரத்தில் எல்லோரும் சேர்ந்து சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு இரவு லேசான போதையில் இருந்தபோது - அப்போது அவனுக்கு முப்பது வயது; வாஷிங்டனில் இருந்தான் - அவனுக்குத் திருமணம் முடிந்தது. அந்தப் பெண் சாலுக்குப் பொருத்தமானவளாக இருந்தாள். சாலைப் போலவே அவளும் குடிப்பதை விரும்பினாள். பிணக்குகள் எதுவும் இல்லாமல் இருவரும் சேர்ந்து வாழ்ந்தனர். இப்போது நிலைமைகள் சற்று பரவாயில்லை என்பது போல சாலுக்குத் தோன்றியது. எப்போதும் சுற்றிவளைத்து நெருக்கப்பட்டது போன்ற உணர்வை உதறித்தள்ளிவிடமுடிந்த வரைக்கும், எப்போது என்ன நடக்கும் என்கிற நிச்சயமின்மையை நசுக்கி விடமுடிந்த வரைக்கும் வாழ்க்கை துயரமில்லாமல் போனது.

சால் பார்த்த வேலைகள் எல்லாம் மிகவும் சாதாரணமானவை. அவன் முதலில் வேலைக்குச் சேர்ந்தது ஒரு பண்ணையில். அவனுடைய பாட்டி இறந்தபிறகு பதினாலு வயதில் வாஷிங்டனுக்குப் போய்ச் சேர்ந்தான். ஒரு வேலையில் நிலையாக நிற்கவில்லை. பலவிதமான வேலைகளில் இருந்துவிட்டு கடைசியில் வயதான ஒரு வெள்ளைக் கொலெனெலிடம் டிரைவராகவும் சமையல்காரனாகவும் சேர்ந்தான். இங்கு சராசரியாக வாரத்திற்கு இருபது டாலர்கள் தேற்ற முடிந்தது. கொலெனெல் அவனுக்கு உணவும், சீருடையும் தங்குவதற்கு இடமும் தந்தான், சால் அங்கு ஐந்து வருடங்கள் வேலை செய்தான். கொலெனெலும் மதுவை

படிப்பகம்

www.padippakam.com



விரும்பினான். சில நேரங்களில் இருவரும் சேர்ந்தே குடிப்பார்கள். ஆனால் கொலெனெல் குடித்தாலும், தன்னிடம் நன்றாக நடந்து கொண்டாலும் அவன் நிஜமல்ல, நிழல்; எந்த நேரத்திலும் தன் மீது பாய்ந்துவிடக்கூடும் என்பதை மட்டும் சால் ஒருபோதும் மறந்துவிடவில்லை.

ஒருநாள், விஸ்கியின் போதையில் இதமாக உணர்ந்தபோது சால் கொலெனெலிடம் சம்பளத்தை உயர்த்தச் சொல்லி கேட்டான். விலைவாசி ஏறிக்கொண்டே போவதையும் சம்பளம் போதவில்லை என்பதையும் சொன்னான். ஆனால், கொலெனெல் அன்று விறைப்பாக இருந்தான். முடியாது என்று முகத்திலடித்ததுபோல சொல்லிவிட்டான். சால் இதை எதிர்பார்க்கவில்லை. ஏமாற்றத்தில், அதிர்ச்சியில் அந்த நிமிடமே வேலையை உதறிவிட்டான். விஸ்கி தந்த போதையில் ஒரு நிமிடம், ஒரேயொரு நிமிடம் நிழல்களின் உலகம் மறைந்துவிட்டது என்று நினைத்துவிட்டான். ஆனால் சம்பளத்தை உயர்த்திக்கேட்டு எந்தவித தயவு தாட்சண்யமும் இல்லாமல் மறுக்கப்பட்டவுடன் தனது நினைப்பு எவ்வளவு தவறு என்பதை உணர்ந்துகொண்டான். அதிக சம்பளம் கேட்டிருக்கக்கூடாது. கொலெனெல் நல்ல மனிதன் என்று நம்பியிருக்கக்கூடாது. அவன் ஒரு நிழல் என்பதை மறந்திருக்கக்கூடாது.

அடுத்து, ஒரு பெரிய மருத்துக் கம்பெனியில் சேர்ந்தான். வீடு வீடாகச் சென்று எலிகளுக்கும் கரப்பான்களுக்கும் மருந்து வைக்கவேண்டியதுஅவன் வேலை. தன்னுடன் இருக்கும் ஏதோ ஒரு இயல்புக்குப் பொருத்தமான வேலை என்று அவனுக்குத் தோன்றியது. செத்துப்போன எலிகளின் உடல்கள் நிழல்கள் அல்ல; நிதர்சனமான நிஜங்கள் என்பதைப் பார்த்தான். தான் செய்த வேலைக்குப் பருண்மையான விளைவுகள் உண்டானது அவனுக்கு மகிழ்ச்சி தந்தது. சமூகத்தின் ஒப்புதலோடு கொலைசெய்வது வாழ்க்கையில் என்றுமில்லாத திருப்தியைத் தந்தது. அதோடு, அவனுடைய முதலாளி கேட்டதும் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தான். இப்போது, தன் இஷ்டப்படி குடிக்க ஆரம்பித்தான். யாரும் அவனை எதுவும் கேட்கவில்லை.

ஆனால் ஒருநாள் காலை, இரவு முழுக்கக் குடித்திருந்துவிட்டு எரிச்சலோடு விறைப்பாக இருந்தவனிடம் அவனுடைய முதலாளி அவனுக்குப் பிடிக்காத ஏதோ ஒன்றைச் சொல்லிவிட்டான்.. தன்னை அவமானப்படுத்துவதாகப்பட்ட அந்த குற்றச்சாட்டை உடனே சால் மறுத்துப் பேசினான். ஒரு வாக்குவாதம் நடந்தது. சால் வேலையை விட்டுவிட்டான்.

இரண்டு வாரங்கள் வேலை தேடி வேட்டையாடியதில் நேஷனல் கதீட்ரல் என்ற மதநிறுவனத்தில், சர்ச்சில் ஜெனிட்டராக வேலை கிடைத்தது. எந்தத் தொந்தரவும் யாருடைய தொல்லையும் இல்லாதது அவன் விரும்பியது போன்றே அவனைத் தனிமையில் விட்ட வேலை அது. தினமும் காலை ஏழு மணிக்கு கையெழுத்திடவேண்டும். பதினோரு மணிக்கெல்லாம் வேலை முடிந்துவிடும். முதலில் கிறிஸ்துமஸ். வாழ்த்து அட்டைகள் விற்கும் கடையைத் துடைத்து சுத்தம் செய்யவேண்டும். அடுத்து நூலகம். கடைசியாக, பாட்டுப் பயிற்சி நடக்கும் அறையை சுத்தம் செய்யவேண்டும்.

ஆனால் வரிசை வரிசையாக புத்தகங்கள் அடுக்கி வைத்திருந்த நூலகத்தை சுத்தம் செய்யும்போதுதான் அவனுக்கு ஏதோ உறுத்தலாக இருந்தது. அங்கு ஒரு நிழல் - ஒரு வெள்ளைப் பெண் எப்போதும் அவனை ஒரு மாதிரியாக வெறித்துக் கொண்டிருந்தாள். நூலகம் தனியான ஒரு கட்டிடத்தில் இருந்தது. அவன் சுத்தம் செய்யப் போகும் போதெல்லாம் அவனும் அந்தப் பெண்ணும் தனியாகவே இருந்தார்கள். பொன்னிறம் நீலக் கண்கள், ஐந்து அடி மூன்று அங்குலம் இருந்த உருவத்தில் சிறிய அந்தப் பெண் தோராயமாக ஒரு 110 பவுண்டுகள் கனத்திற்கு இருப்பாள்.

சாலுடைய முதலாளி முதலிலியே அவனை எச்சரித்திருந்தார். "அவள் ஒரு சிறுக்கி", என்று சொல்லியிருந்தார். எந்தக் காரணத்தைக் கொண்டும் நூலகத்துக்குப் பொறுப்பாக இருந்த அந்தப் பெண்ணோடு எந்தத் தகராறும் வைத்துக் கொள்ளவேண்டாம் என்று எச்சரித்திருந்தார். சாலுக்கு மட்டும் எந்தச் சண்டையில் என்ன விருப்பம். அவளுடைய பெயர் என்ன என்பதைக்கூட அவன் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால், பல சந்தர்ப்பங்களில் ஏதோ உறுத்த துடைப்பதை நிறுத்திவிட்டுத் தயங்கி நிற்பான். சற்று தெம்பை வரவழைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தால், அவள் அவனை வெறித்துக் கொண்டிருப்பாள். சட்டென்று, ஏதோ வெட்கம் வந்தவளைப் போல வேறு பக்கம் திரும்பிக் கொள்வாள் "அட சனியனே, என்னிடம் என்ன இருக்கிறது இவளுக்கு?" என்று சங்கடத்தில் நெளிவான். காலை வணக்கம் சொல்வதைத் தவிர அவள் அவனிடம் ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை. அதையும்கூட ஏதோ வேண்டாவெறுப்பாக சொல்வதைப் போல சொல்வாள். சால், ஒருவேளை அவள் தன்னைக்கண்டு பயப்படுகிறாளோ என்றுகூட யோசித்தான். ஆனால், அவனைக் கண்டு பயப்பட என்ன இருக்கிறது? தன்னைக் கண்டு பயந்தவர்கள் என்று வாழ்க்கையில் ஒருத்தரைக்கூட அவனால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. அதுவரையில் அவன் எந்தப் பெரிய தொந்தரவு எதிலும் மாட்டிக்கொண்டது இல்லை.

ஒருநாள் காலை பெருக்கிக் கொண்டிருந்தபோது மீண்டும் அதே உறுத்தல் அவனைப் பிடித்து நிறுத்தியது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தான். அவள் அவனை வெறித்துக் கொண்டிருந்தாள். அசையாமல் அப்படியே நின்றான். அவளும் பார்வையைத் திருப்பவில்லை. ஒரு பத்து நொடிகள் இருவரும் அப்படியே இருந்தார்கள். சட்டென்று அவள் ஏதோ பயத்தாலோ கோபத்தாலோ வெகுண்டுவிட்டவளைப் போல எழுந்து விறுவிறுவென்று நடந்து அறையைவிட்டு வெளியேறினாள். சால் அரண்டு போய்விட்டான். ஆனால், சீக்கிரத்திலேயே சம்பவத்தை மறந்துவிட்டான். "இந்தச் சனியனுக்கு என்ன வந்து தொலைத்தது?" என்று மட்டும் நினைத்துக்கொண்டான்.

மறுநாள் காலை முதலாளி அவனை கூப்பிட்டனுப்பினார். மெதுவான குரலில், அமைதியான தொனியில் - அது அவனுக்கு எந்தப் பெரிய வித்தியாசமும் தந்துவிடவில்லை;

படிப்பகம்

www.padippakam.com



எரிச்சலும் அச்சமுமாகவே இருந்தது - நூலகத்தில் இருந்த அந்தப் பெண், அவளுடைய மேசைக்கடியில் அவன் சுத்தம் செய்வதே இல்லை என்று புகார் செய்திருப்பதாகக் கூறினார்.

"அவளுடைய மேசைக்கு அடியிலா?" சால் திகைத்துவிட்டான்.

"ஆமாம்", அவனுடைய திகைப்பைக் கண்டு ஆச்சரியத்தோடு சொன்னார்.

"ஆனால், நான் ஒருநாள்கூட தவறாமல் அவளுடைய மேசைக்கடியில் சுத்தம் செய்கிறேனே."

"சரி, சரி சால். நான் தான் முதலிலேயே சொல்லியிருக்கிறேனே. அவள் ஒரு சரியான கிறுக்கி." முதலாளி அவனை சமாதானப்படுத்தினார். "அவளோடு எந்தப் பேச்சும் வைத்துக்கொள்ளாதே. உன் வேலையை நீ சரியாகச் செய். அது போதும்."

"சரி. சார்."

அவள் எப்போதும் தன்னையே வெறித்துக்கொண்டிருந்தாள் என்பதை அவரிடம் சொல்லிவிடவேண்டும் என்று ஒரு நிமிடம் அவனுக்குத் தோன்றியது. ஆனால், அவனுக்குத் தெம்பு வரவில்லை. அவனுடைய கருப்பு நண்பர்களாக இருந்திருந்தால் இந்நேரம் சாதாரணமாக சொல்லிவிட்டிருப்பான். ஆனால், ஒரு விசித்திரமான நிழலைப் பற்றி இன்னொரு நிழலிடம் எதற்குச் சொல்ல வேண்டும்?

அன்று சம்பளத் தேதியாகையால் அவனுடைய வாரக்கூலியை பெற்றுக்கொண்டான். அந்த இரவு அற்புதமாகக் கழிந்தது. நினைவில் இருந்த எல்லாமும் கரைகிற வரைக்கும் கிறுகிறுத்து தள்ளாடுகிற வரைக்கும் குடித்தான். இப்போதெல்லாம் கையில் காசு கிடைக்கிற போதெல்லாம் குடிக்க ஆரம்பித்திருந்தான். குடிப்பது அவனுக்குப் பிடித்துப் போய்விட்டது. அப்போதுதான் அவன் மகிழ்ச்சியாக இருந்தான். ஆனால் யாரையும் தொந்தரவு மட்டும் செய்ய மாட்டான். ஆனால், விடியல் எப்போதும் சக்கையாக உலர்ந்துபோனவனை, சோர்ந்து உடைத்துப்போனவனையே எழுப்பியது. முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு இப்போது அவனை நிழல்கள் சுற்றி முற்றுகையிட்டிருப்பதைப் போல உணர்ந்தான். எழுந்து வேலைக்குப் போகவேண்டும் என்கிற நினைப்பே எரிச்சலாக இருந்தது. ஆழமான தூக்கத்திற்காக ஏங்கினான். ஆனால் என்ன செய்வது. இது நல்ல வேலை. எப்படியும் அதில் ஒட்டியிருக்க வேண்டும். ஆமாம் போய்த்தான் ஆகவேண்டும்.

கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் விற்கும் கடையைத் துடைத்து முடித்ததும், - அதற்குள் சோர்ந்துவிட்டிருந்தான்; வெகுவாக வியர்த்துக் கொட்டியது - நூலகத்திற்குக் கிளம்பினான். அங்கு ஒருவரும் இருக்கவில்லை. தரையைத் துடைத்து முடித்து புத்தகங்களை தூசு தட்ட நகர்ந்தபோது அவள் அறைக்குள் வந்த காலடிச் சத்தம் கேட்டது. அரைத் தூக்கத்தில் சோர்ந்துபோய் இருவந்தவனுக்கு ஒருவிதமான படபடப்பு தொற்றிக்கொண்டது; கைகள் நடுங்கின; அவனுடைய இயல்பான அசைவியக்கங்கள் வழக்கத்தை விட வேகமாக இருந்தன. "என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகச் சொன்ன தேவடியா நீ தானே? ம்ம்ம்," எரிச்சலோடு சொல்லிக்கொண்டான். கொஞ்ச நேரம் எந்த நினைப்பும் இல்லாமல் தூசு தட்டிக்கொண்டிருந்தான். திடீரென்று மறுபடியும் அவள் தன்னையே வெறித்துக் கொண்டிருப்பது போல உறுத்தியது. திரும்பிப் பார்க்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு சில நிமிடங்களுக்கு மேலாக கட்டுப்படுத்திக்கொண்டிருக்க முடியவில்லை. மெதுவாகத் திரும்பினான். அவளுடைய இடத்தில் உட்கார்ந்திருந்தவள் அவனை கண் கொண்டாமல் வெறித்துக் கொண்டிருந்தாள். ஏதோ சொல்ல வருவது போலத் தெரிந்தது. அவளைப் பார்த்துக்கொண்டு என்ன சொல்லப் போகிறாள் என்று காத்துக்கொண்டிருப்பதைத் தவிர அவனுக்கு ஒன்றும் சொய்யத் தோன்றவில்லை.

"என் மேசைக்கடியில் துடைக்க உனக்கு என்ன நோகிறதா?" கட்டுப்படுத்திக்கொண்ட சற்று நடுங்கிய குரலில் கேட்டாள்.

"மேடம்" மெதுவாகச் சொன்னான், "சற்று முன்பாகத் தான் அங்கு துடைத்தேனே மேடம்." "இங்க வந்து பார்", விரலை கீழே காட்டிச் சொன்னாள்.

புத்தகத்தை அலமாரியில் திரும்ப வைத்தான். இதற்கு முன் அவள் அவனிடம் இத்தனை வார்த்தைகள் பேசியது இல்லை. அவள் முன்பாக போய் நின்றவன் அதிர்ந்து போனான். அவனுடைய கண்கள் பார்த்ததை மூளை ஆட்சேபித்தது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. கால்களைப் பரத்தி இடுப்புக்குக் கீழிருந்த துணியை தொடைகளுக்கு மேலாக ஏற்றி உட்கார்ந்திருந்தாள். அவளுடைய வட்ட நீல விழிகளிலிருந்து கிறங்கி வெள்ளை வெளேறென்றிருந்த கால்களை வெறித்தான். மேலே ஏற ஏற சதைப்பற்று கூடியிருந்த தொடைகள் செங்குத்தாக, இறுகியிருந்த இளஞ்சிவப்பு உள்ளாடை மறைத்த ஒரு 'ய'-யில் முடிந்தன. திரும்பவும் அவள் கண்களை நோக்கினான். அவளுடைய முகம் சிவந்திருந்தது. ஏதோ அவள் விரும்பாகத ஒரு காரியத்தை வலுக்கட்டாயமாக செய்ய வைக்கப்பட்டவளைப்போல இறுக்கமாக உட்கார்ந்திருந்தாள். சால் அதிர்ந்துபோய் நின்றிருந்தான்.

"கொஞ்ச நேரத்திற்கு முன்பாகத்தான் உங்கள் மேசைக்கு அடியில் துடைத்தேனே", சம்பந்தமில்லாமல் உளறுகிறோம் என்ற உறுத்தலோடேயே முனகினான்.

"இப்போது இங்கே தூசு சேர்ந்திருக்கிறது", வெடுக்கென்று சொன்னாள். அவளுடைய கால்கள் இன்னும் அகலமாக விரிந்ததைப் பார்த்தவனுக்கு அவள் நிர்வாணமாகக் கிடந்தது போலத் தோன்றியது.

என்ன செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. இந்த அளவுக்கு அவன் அவமானப்பட்டதில்லை; பயந்து திணறியது இல்லை. கோபம் மெதுவாக அவன் தலைக்கு ஏறிக்கொண்டு இருந்தது. ஆனாலும் வெளிப்படுத்துகிற தைரியம் வரவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



· "பாருங்கள் மேடம்", வெறுப்பையும் ஆத்திரத்தையும் அடக்கிய தொனியில் பேசினான், "என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்."

"சொன்ன வேலையைச் செய்யாமல் இங்கே என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறாய்," அவள் இப்போது அனல் கக்கினாள். "கருப்புக் குரங்கே! அதற்குத்தானே உனக்குச் சம்பளம் கொடுக்கிறோம்", அவளுடைய கால்கள் இன்னும் விரிந்தே கிடந்தன. எந்த நிமிடமும் பாய்ந்து அவனுடைய உடல்மீது தொடையை அழுத்திவிடத் தயாராக இருப்பது போல உட்கார்ந்திருந்தாள்.

ஒரு நிமிடம் அவன் அசையாமல் அமைதியாக நின்றான். இதற்கு முன் வாழ்க்கையில் அவன் கருப்புக் குரங்கு என்ற வசவை வாங்கியதில்லை. கருப்பர்களை ஆகக் கீழாக அவமானப்படுத்த வெள்ளையர்கள் அந்தப் பதத்தை பயன்படுத்தினார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால் அந்த வசவுக்கு அவன் ஒருமுறைகூட ஆளான தில்லை. விரிந்து கிடந்த தொடைகளை வெறிக்க வெறிக்க அவமானம் அவனுக்குள் இறங்கிக் கொண்டிருந்தது. ஒரு பயங்கர ஆபத்து தன்னைச் சூழ்ந்து கொண்டிருப்பதைப் போல உணர்ந்தான்.

"இது எனக்குப் பிடிக்கவில்லை," சொல்லி முடிக்கும் முன்பாகவே என்ன செய்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளும் முன்பாகவே அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

எதிர்பாராத அடியில் ஒரு நிமிடம் அவளுக்கு மூச்சு நின்றுவிட்டது போலிருந்தது. துள்ளி எழுந்து பின்னே நகர்ந்து நின்றாள். அடுத்த நிமிடம் வீறிட்டுக் கத்தினாள். அவளுடைய அலறல் சாட்டையால் அவன் நெஞ்சைப் பிளந்தது போல இருந்தது. மறுபடியும் கத்தினாள். அவன் பயந்து பின்னால் நகர்ந்தான். என்ன செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. அவன் செய்துவிட்ட காரியம், அதன் விளைவு என்ன என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அந்த நேரத்தில் அவனால் வேறு என்ன செய்திருக்க முடியும். அந்த அறையில் அவனுடைய இன்னொரு மனம் நின்றுகொண்டு செய்யக்கூடாத காரியங் களை எல்லாம் அவன் செய்துகொண்டிருப்பதை கவனித்துக் கொண்டே இருப்பது போலத் தோன்றியது. மூச்சை நன்றாக இழுத்து விட்டான். ஒரு நிமிடம் நிற்கவே தெம்பில்லாமல் போனது போலத் தோன்றியது. எப்போதும் அவன் அஞ்சி நடுங்கிய நிழல்கள் எல்லாமும் சேர்ந்து அவனைச் சூழ்ந்து கொண்டுவிட்டது போலத் தோன்றியது. ஒரு கருப்பன் அதிகபட்சம் எதிர்பார்க்கக்கூடிய மோசமான ஆபத்தில் அவன் சிக்கிக்கொண்டு விட்டிருந்தது தெரிந்தது.

அவள் இப்போது நிறுத்தாமல் கத்திக்கொண்டு இருந்தாள். அவன் மாடிப்படிகளை நோக்கி ஓடிக்கொண்டு இருந்தான். படியில் காலை வைத்தவன் தயங்கி நின்று திரும்பிப் பார்த்தான். கத்துவதை நிறுத்தாமலேயே அவள் அறையின் கோடியில் திறந்திருந்த ஜன்னல் பக்கம் பின்னாலேயே நகர்ந்து கொண்டிருந்தாள். ஐயோ ஆண்டவனே! அவளுடைய அலறலில் கருப்பர் பகுதியில் கருப்பர்களை வேட்டையாடிய போலீஸ் கார்களின் சைரன்கள் கேட்டது; கருப்பர்களை துரத்திச் சென்ற வெள்ளை போலீஸ்காரர்களின் சில்லிடும் விசில்களின் அலறல் கேட்டது; ஒரு நிமிடம் அவன் உடலை ஊடுருவிப் பாய்ந்த அந்த உணர்ச்சியில் குற்றம் செய்த எந்த ஒரு கருப்பனையும் எப்படியும் வெள்ளையர்களை பிடித்து விடுவதைப் பற்றிய அந்த பயங்கர கதைகளெல்லாம் திரும்பக் கேட்டது. இவளோ ஏதோ இவன் கற்பழித்து விட்டதைப்போல அலறிக்கொண்டு இருக்கிறாள்.

படிகளில் ஏறி ஓடினான். ஆனால் அவளுடைய அலறல்கள் சப்தம் கூடிக்கொண்டே போனது. கடைசிப் படியில் காலை வைத்தபோது அவனுடைய வேகம் குறைந்து விட்டிருந்தது. அவளுடைய அலறல்கள் இனிமேலும் அவனை ஓடவிடாது போலிருந்தது; அவனைச் சோர்ந்து போக வைத்தது; சட்டையைப் பிடித்து இழுத்தது; நெஞ்சு வெடித்துவிடும்போல இருந்தது. நின்று இலக்கில்லாமல் சுற்றிலும் பார்த்தான். குளிர்காயும் இடம் கண்ணில் பட்டது. அருகில் விறகுக் கட்டைகள் ஒழுங்காக அடுக்கிவைக்கப் பட்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்தபோதே மறுபடியும் அவளுடைய அலறல்கள். நெஞ்சு பிளந்துவிடும் போல இருந்தது; ஒரு நடுக்கம் உடலெங்கும் பரவியது. நடுங்கும் கைகளோடு குனிந்து கோடரியால் வெட்டுப்பட்ட முனைகளில் கூராக இருந்த ஒரு கட்டையை இடதுகையால் - அவன் இடதுகைப் பழக்கமுள்ளவன் - உருவினான். திரும்பி படிகளில் விறுவிறுவென்று இறங்கி அவள் நின்று அலறிக் கொண்டிருந்த இடத்திற்கு ஓடினான். நெருங்கி கட்டையை ஓங்கியவன் ஒரு நிமிடம் தயங்கி நின்றான். அவள் அலறுவதை நிறுத்தினால் போதும். அவள் நிறுத்தியிருந்தால் அவன் அங்கிருந்து ஓடிவிட்டிருப்பான். ஆனால், அவள் தொடர்ந்து அலறிக்கொண்டு இருந்தாள். அவனுக்குள் கொந்தளித்துக் கொண்டிருந்த கோபம் எல்லை மீறிக்கொண்டு இருந்தது. அவளுடைய அலறலை நிறுத்த உடனடியாக ஏதாவது செய்தாகவேண்டும். அவள் இரப்பை நிறைய காற்றை இழுத்து முழு வேகத்தில் அலறிக் கொண்டிருந்தாள். இடது கையை வேகமாக இறக்கினான். அவள் தலையின் பக்கவாட்டில் அடி இறங்கியது. ஆனால் அவனுக்கு அவளைக் கொல்ல வேண்டும் என்பது நோக்க மில்லை; அவளைக் காயப்படுத்தவும் விருப்பமில்லை. அவனுடைய எண்ணமெல்லாம் ஒன்றுதான்; அவளுடைய அலறலை நிறுத்தவேண்டும்; அந்த அலறல்களுக்கு அர்த்தம் ஒன்றே ஒன்றுதான் மரணம். அவள் அலறுவதை நிறுத்தியாகவேண்டும்—

அவள் தரையில் சரிந்த அதே வேகத்தில் மண்டை பிளந்து கட்டை உள்ளே இறங்குவதை உணர்ந்தான். ஆனால் இன்னும் அவள் அலறிக்கொண்டிருந்தாள். உச்சிமுதல் உள்ளங்கால் வரை அவனுக்கு நடுங்கியது. அட சனியனே— இன்னமும் ஏன் இப்படி அலறிக்கொண்டிருக்கிறாள்? மீண்டும் கையை உயர்த்தி ஓங்கி அடித்தவன் கட்டை அவள் மண்டை ஓட்டைப் பிளந்துகொண்டு உள்ளே இறங்குவதை

படிப்பகம்

www.padippakam.com



உணர்ந்தான். ஆனால் இன்னமும் அவள் அலறிக்கொண்டிருந்தாள். திரும்பவும் அடிக்க ஓங்கியவன் கை லேசாக இருப்பதுபோல உணர்ந்தான். கட்டை பாதி உடைந்து தரையில் கிடந்தது. அவள் ஆடையெங்கும் ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. கால்கள் பரப்பிக் கிடந்தன. ஆனால் அவள் இன்னமும் அலறிக்கொண்டிருந்தாள். கையிலிருந்த துண்டை வீசிவிட்டு அவள் தொண்டையைப் பிடித்து உலுக்கினான். அது அவளை அடக்கியது போல இருந்தது. மயங்கிவிட்டவளைப் போலக் கிடந்தாள். ஆனால் அவன் விட்டுவிடவில்லை. வெகு நேரத்திற்கு கழுத்தை நெறித்துக் கொண்டிருந்தான். அவளைக் கொல்லவேண்டும் என்கிற எண்ணமெல்லாம் அவனுக்கு இல்லை. அவனுக்குள் புதைந்து கிடந்த அச்சத்தையும் கோபத்தையும் மீண்டும் மீண்டும் கிளறி அவனைப் பைத்தியமாக்கிய அந்த அலறலை நிறுத்திவிடவேண்டும் என்பதற்காகத்தான் நெரித்தான். அவளைப் பழிதீர்க்க வேண்டும் என்கிற எண்ணமெல்லாம் அவனுக்கு இல்லை. அந்த அலறல்கள் கிளறிவிட்ட உணர்ச்சிகளின் வேகத்திலேயே அப்படி நடந்துகொண்டான்.

இப்போது அவள் தொய்ந்து அமைதியாகக் கிடந்தாள். மெதுவாக கழுத்திலிருந்து கையை எடுத்தான். அவள் சத்தம் எதுவும் போடவில்லை. காத்திருந்தான். இன்னும் அவனுக்கு நம்பிக்கை வந்துவிடவில்லை. ஆமாம், கீழே பாத்ரூமிற்கு இழுத்துக்கொண்டுபோய் போட்டுவிட வேண்டும். அங்கு அவள் கத்தினால்கூட யாருக்கும் கேட்காது... அவளுடைய கைகளை அவனுடையதுக்குள் எடுத்துக்கொண்டு ஜன்னலிலிருந்து தள்ளி அவளை இழுத்துக்கொண்டு போக ஆரம்பித்தான். அவனுடைய கைகள் வியர்த்து ஈரமாயிருந்தன. நாலைந்து முறை அவளுடைய சிறிய விரல்கள் அவன் பிடிக்குள் இருந்து நழுவி விழுந்தன. அவள் கைகள் அத்தனை சிறியதாக மிருதுவாக இருந்தன. இன்னும் இறுக்கிப் பிடிக்க முயற்சித்து அவனுடைய நகங்கள்தான் பதிந்தன. இழுத்துக் கொண்டிருக்கும் போதே அவளுடைய மோதிரம் நழுவி அவன் கைக்குள் விழுந்தது. ஒரு நிமிடம் நின்று, தகதகத்த அந்த மெல்லிய வளையத்தை வெறித்துப் பார்த்தான். எந்த உணர்ச்சியும் இல்லாமல் சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டான். ஒருவழியாக அவளை படிகளில் கீழே இறக்கி இழுத்துக்கொண்டு பாத்ரூம் கதவுவரை போய்ச் சேர்த்து விட்டான்.

உள்ளே அவளை இழுத்துப்போக இருந்தவன் தரையில் ரத்தத்துளிகள் இருப்பதைப் பார்த்தான். இது ஒன்றும் சரியில்லையே.... நிழல்களைப் பார்த்து பயப்பட பழக்கப் பட்டவனைப் போலவே தரையை சுத்தமாக வைத்திருக்கவும் பழக்கப்பட்டிருந்தவன் அவன். ஒரு சுவரில் அவளை மொத்தாக போட்டுவிட்டு பாத்ரூமிற்குள் நுழைந்து கழிவறைக் காகிதங்களை கொத்தாக எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். சிகப்புத் துளிகளை துடைத்தெடுத்தான். மாடிக்கு ஏறிப்போய் அவளை முதலில் அடித்த இடத்தில் சிந்திக் கிடந்த ரத்தத்துளிகளை கவனமாக துடைத்தான். சட்டென்று அவன் உடல் இறுகியது. அவள் மீண்டும் அலறிக்கொண்டிருந்தாள். வேகமாக கீழே இறங்கி ஓடிவந்தான். இந்த முறை அவன் சட்டைப் பைக்குள் ஒரு கத்தி இருந்தது ஞாபகத்திற்கு வந்தது. வெளியே எடுத்து பட்டனை அழுத்தித் திறந்தவன் அவளுடைய தொண்டைக்குள் சொருகினான். அவள் அலறலை நிறுத்தவேண்டும் என்பதில் அவனுக்கு வெறி யேறி வந்துவிட்டிருந்தது- தொண்டைக்குள் இருந்து கத்தியை உருவினான். இப்போது அவள் அமைதியாக இருந்தாள்.

அறையைச் சுற்றிலும் நோட்டம் விட்டுக்கொண்டே எழுந்து நின்றான். நீராவிக் குழாய்கள் சென்ற உள்வழிக்கு இட்டுச் சென்ற கதவு ஒரு சுவரில் இருந்தது அவன் கண்ணில் பட்டது. அதுதான் சரி, அவளை அதற்குள் போட்டுவிடுவது தான் நல்லது. அவள் திரும்ப கத்தத்தொடங்கினாலும் யார் காதிலும் விழாது. அவன் அவளை ஒளித்துவைக்க முயற்சிக்கவில்லை. அவனுக்கு வேண்டியதெல்லாம் அவளுடைய அலறல் யாருக்கும் கேட்டுவிடக்கூடாது; அதை உறுதி செய்துகொள்ளவேண்டும்; அவ்வளவுதான். அவளை இழுத்தான். ஸ்கர்ட் உருவிக்கொண்டு அவளுடைய மார்புப் பக்கம் மேலாக வந்துவிட்டது. இளஞ்சிவப்பு உள்ளாடை மீண்டும் அவன் கண்களில் பட்டது. அவளை இழுப்பது இப்போது இன்னும் சிரமமாக இருந்தது. தூக்கி கைகளில் சுமந்துகொண்டு ஒரு சின்ன நடையே இருந்த படிகளில் இறங்கி வந்துகொண்டிருந்தபோது அந்த இளஞ் சிவப்பு ஜட்டியை நனைத்து எடுத்துக்கொண்டால் சிதறி யிருந்த ரத்தத்துளிகளை சுத்தமாக துடைத்தெடுக்க வசதியாக இருக்குமே என்று தோன்றியது. மீண்டும் அவளை ஒரு சுவரில் சாய்த்து, அவள் ஜட்டியை உருவினான் ஒரு நொடி நேரம்கூட அவள் பெண் உறுப்பை அவன் பார்க்கக்கூட இல்லை - நனைத்து ரத்தம் சிந்தியிருந்த இடங்களை சுத்தமாக துடைத்தெடுத்தான். அப்புறம் குழாய்களுக்கு கீழே அந்த உள்வழியில் அவளைத் தள்ளிவிட்டான். முழுப் பார்வைக்கும் எளிதாகத் தெரியும்படி கிடந்தாள். ஈரப் பந்தாகியிருந்த ஜட்டியை அவளுக்குப் பின்னால் எறிந்தான்.

நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டு சுற்றிலும் பார்த்தான். தரை சுத்தமாகத் தெரிந்தது. திரும்பவும் மாடிக்குப் போனான். அந்த உடைந்த விறகுக்கட்டை.. இரண்டாக உடைந்திருந்த துண்டையும் இன்னும் மற்ற சிறிய துண்டு களையும் பொறுக்கி எடுத்தான். உடைந்த முனைகளைச் சேர்த்துப் பொருத்தினான். முழுக் கட்டையைப் போலவே குளிர்காயும் இடத்தில் அடுக்கி வைத்திருந்த கட்டைகளோடு சேர்த்து கவனமாக வைத்தான். சற்று நின்று உற்றுக் கேட்டான். எந்தச் சத்தமும் இல்லை. அவள் மீண்டும் அலறவில்லை. அவளுக்கு உதவவேண்டும் என்ற எண்ணமோ, வலியால் துடித்திருப்பாள் என்றோ அவனுக்குத் தோன்றவேயில்லை. அவள் செத்துவிட்டிருப்பாள் என்பது கூட அவனுக்குத் தோன்றவில்லை. தொப்பியையும் கோட்டையும் எடுத்துக் கொண்டான். வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

ரொம்பவும் சோர்ந்துபோயிருந்தான். அவன் எப்போதும் செய்துவந்த அவனுக்குப் பழகிப்போயிருந்த ஒரு வேலையை, அவனை எப்போதும் சுற்றிச் சூழ்ந்திருந்த அவனால் புரிந்துகொள்ளவே முடியாதிருந்த நிழல்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



ஆட்டம் காட்டி ஏமாற்றும் வேலையை முடித்துவிட்டு வந்தது போல இருந்தது. ஆடைகளைக் கழற்றி வீசினான். சட்டையிலும் பேண்டிலும்படிந்திருந்த ரத்தக் கறைகளை சட்டைகூட செய்யவில்லை. மனைவி வேலைக்குப் போயிருந்தாள். அவன் மட்டும் தனியாக இருந்தான். பர்சை உருவியபோது மோதிரம் கண்ணில் பட்டது. மேசையின் ட்ராயரைத் திறந்து அதற்குள் அசட்டையாக வீசினான். அதை ஒளித்துவைக்க வேண்டும் என்ற யோசனையெல்லாம் அவனுக்கு இல்லை. அவள் பார்வையில் பட்டுவிடவேண்டாம் என்பதற்கு மேலாக அவன் யோசிக்கவில்லை.

களைத்து சலித்து கட்டிலில் விழுந்தவன் சட்டென்று நல்ல தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான். மறுநாள் மதியம்வரை எழுந்திருக்கவில்லை. இரத்தம் போலச் சிவந்திருந்தக் கண்களை சிமிட்டிக்கொண்டு அப்படியே மல்லாந்திருந்தான். நேற்று நடந்த எதையும் அவனால் ஞாபகத்திற்கு கொண்டுவர முடியவில்லை. அப்புறம் மெதுவாக சம்பவங்களின் நிழல் போன்ற படங்கள் அவன் கண்களில் விரிந்தன. ஒரு நிமிடம் அவையெல்லாம் உண்மையிலேயே நிகழ்ந்தவைதானா அல்லது யாராவது சொன்ன கதையா என்பது புரியாமல் குழம்பினான். எதுவும் உறுதியாகச் சொல்லமுடியவில்லை. என்றாலும் எந்தப் பயமும் வருத்தமும் எழவில்லை.

அப்புறம் கடைசியில் நடந்தது எல்லாம் நிஜம் என்ற நம்பிக்கை வந்தபோது உணர்ச்சிகளற்ற வெறும் நினைவுகளாகவே நின்றன. சோர்ந்து தூக்கக் கலக்கத்தில் இருக்கும் போது தியேட்டரின் திரையில் விழுந்த ஒரு காட்சியைப் போல மங்கலாக இருந்தது. என்ன செய்வதென்று எதுவும் புரியவில்லை. அப்படியே படுக்கையிலேயே கிடந்தான். வேலை முடிந்து வெகுநேரம் கழித்து அவன் மனைவி வந்துசேர்ந்த போது மறுபடியும் தூக்கம் அவனை அள்ளிச் சென்றுவிட்டது.

மறுநாள் காலை மனைவி செய்து வைத்த காலை உணவை உண்டுவிட்டு மேசையிலிருந்து எழுந்தான். அவளை முத்தமிட்டான். எதுவுமே நடக்காததுபோல கதீட்ரலை நோக்கி நடக்க ஆரம்பித்தான். சர்ச் படிகளை மிதிக்கும் வரைக்கும் எதுவும் தோன்றவில்லை. பிறகுதான் நடுங்க ஆரம்பித்தது. ஒரு இரண்டு மூன்று நிமிடங்கள் கதவுக்கு எதிரில் நின்றான். அதன்பிறகுதான் இனிதான் அதற்குள் நுழையவே முடியாது என்று உணர்ந்தான். அவனுக்குக் கோபம் எதுவும் இல்லை. அந்த இடத்தின் மீது ஏதோ ஒருஇனம்புரியாத வெறுப்பு. அவள் உயிரோடுதான் இருக்கிறாளா அல்லது செத்துவிட்டாளா என்ற கேள்வியே அவனுக்குள் எழவில்லை. என்ன செய்வதென்று இன்னும் அவனுக்கு பிடிபடவில்லை. அப்போது சட்டென்று அவன் மனைவி சில மளிகை சாமான்கள் வாங்கிவரச் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. சரி, அதைச் செய்யவேண்டியதுதான். வேறு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. வேறு வழியில்லாமல் அதைச் செய்ய நினைத்தான்.

மளிகைச் சாமான்களை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு திரும்பினான். பிறகு நாள் முழுவதையும் ஒவ்வொரு பாராக கழித்தான். ஓடிப்போய்விடவேண்டும் என்ற எண்ணம் ஒருமுறைகூட அவனுக்குத் தோன்றவில்லை. வீட்டுக்குப் போவது, ரேடியோவை திருகிக்கொண்டிருப்பது, திரும்பவும் தெருவுக்குப்போவது, கால்போன போக்கில் நடப்பது, கடைசியில், ஒருபாருக்குள் நுழைவது, போதை தலைக்கேறும் வரை குடிப்பது என்று கழித்துக்கொண்டிருந்தான். ஒருமுறை, உடைகளை மாற்றிக் கொண்டான். ரத்தம் படிந்திருந்த சட்டையையும் பேண்ட்டையும் ஒரு மூட்டையாகக் கட்டி கறை படிந்த கத்தியை அதற்குள் திணித்து ஒரு மூலையில் எறிந்தான். துப்பாக்கியை எடுத்து பாக்கெட்டுக்குள் வைத்துக்கொண்டான். ரொம்பவும் சோர்ந்துபோய் இருந்தான்.

ஆனால் இன்னமும் என்ன செய்வதென்று அவனுக்குப் பிடிபடவில்லை. திடீரென்று சில மாதங்களுக்கு முன்பாக மட்டமான விலைக்கு வாங்கி வைத்திருந்த கார் ஞாபகத்துக்கு வந்தது. ரிப்பேருக்காக காரேஜில் விட்டிருந்தான். உடனே காரேஜுக்குப் போனான். இருபத்தைந்து டாலர்களுக்கு பேசி அதன் உரிமையாளனிடமே அதை விற்றான். அப்போதுகூட தப்பித்துப் போகவேண்டும் என்றோ அதற்கு கார் பயன்படும் என்றோ அவனுக்குத் தோன்றவே இல்லை. மாலைவரை பார்களில் குடித்துக் கழித்தான். வாழ்க்கை முழுக்க அவனை விரட்டிக்கொண்டிருந்த உணர்வுகள் அப்போதும்கூட அன்றுகூட அவனை விட்டுத் தொலைந்துபோல அவனுக்கு தெரியவில்லை.

இரவு எட்டு மணி போல, எதிர்ப்பட்ட இரண்டு நண்பர்களை தன்னோடு குடிக்கவரும்படி அழைப்பு விடுத்தான். இப்போது நன்றாக குடித்திருந்தான். மேசையில் அவனுக்கு முன்பாக சாண்ட்விச்சும் ஒரு சிறிய க்ளாஸில் விஸ்கியும் இருந்தது. இரண்டு நண்பர்களில் ஒருவன் சொல்லிக்கொண்டிருந்த ஒரு பெண்ணின் கையை தூக்கக் கலக்கத்தில் முன்னே குனிந்து கேட்டுக் கொண்டிருந்தான். அப்போது ஒரு குரல் கேட்டது:

"நீ தானே சால் சாண்டர்ஸ்?"

நிமிர்ந்து பார்த்தவனுக்கு இரண்டு வெள்ளை நிழல்களின் வெளிறிய முகங்கள் தெரிந்தது.

"ஆமாம்," தயக்கமில்லாமல் சொன்னான்.

"உன்னிடம் சில கேள்விகள் கேட்கவேண்டும். ஒழுங்காக எங்களோடு வந்துவிடுவது நல்லது," ஒரு நிழல் சொன்னது.

"எதற்காக, என்ன விஷயம்?" சால் கேட்டான்.

அவர்கள் அவன் தோளைப் பற்றி இழுத்தார்கள். சால் எழுந்து நின்றான். குனிந்து, கொஞ்சம் விஸ்கி மிச்சமிருந்த கிளாஸை எடுத்து அதை காலி செய்தான். போலீஸ்காரர்கள் ஆளுக்கொரு பக்கம் வர தடுமாறாமல் நடந்தான். பாருக்கு வெளியே காத்துக்கொண்டிருந்த காருக்கு வந்தார்கள். அவனுடைய மூளை சுத்தமாக துடைத்து எடுத்துவிட்டிருந்தது போல இருந்தது. காருக்குள் அவர்கள் அவனைத் தள்ளுவதற்கு சற்று முன்பாக வரை அவனுக்கு எதுவும் தோன்றவில்லை. அப்போதுதான் அவளை சுயநினைவுக்குக் கொண்டுவந்து அவனுக்குக் காத்திருந்த அபாயத்தை

படிப்பகம்

www.padippakam.com



உணர்த்திய அது நடந்தது. ஒரு போலீஸ்காரன் அவன் துப்பாக்கி எதுவும் வைத்திருக்கிறானா என்று இடுப்பைத் தடவிப் பார்த்தான். எதுவும் அகப்படவில்லை. சால் துப்பாக்கியை மார்போடு சேர்த்து வைத்திருந்தான். அந்த நொடியில் திடீரென்று அந்த எண்ணம் அவன் மூளையில் உதித்தது. அந்த எண்ணம் கிளப்பிய கிளர்ச்சியில் அவன் உடல் நடுங்கியது– ஆமாம், அவன் தன்னைத்தானே சுட்டுக் கொள்ளவேண்டும். ஆனால், இது ஏன் முன்னமே மூளைக்கு எட்டவில்லை?

மெதுவாக தொப்பியைக் கழற்றி, இடது கையின் அசைவை மறைத்துக்கொள்ள நெஞ்சுக்கு நேராக வைத்துக் கொண்டான். சட்டைக்குள் கையைவிட்டு துப்பாக்கியை வெளியே உருவினான். சடாரென்று ஒரு போலீஸ்காரன் பாய்ந்து துப்பாக்கியை பிடுங்கிக்கொண்டான்.

"ஓ, எங்களையும் கொல்லப் பார்க்கிறாயோ?"

"இல்லை. என்னையே சுட்டுக்கொள்ள நினைத்தேன்." சால் ரொம்பவும் சாதாரணமாக சொன்னான்.

"சனியனே!"

ஒரு முஷ்டி அவன் மோவாயில் இறங்கியது. மயங்கி சரிந்தான்.

இரண்டு மணி நேரம் கழித்து, போலீஸ்ஸ்டேஷனில் சால் நடந்தது ஒன்றையும் விடாமல் ஒப்புவித்தான். உணர்ச்சி களின் எந்தத் தடயமும் இல்லாமல், விருப்பு வெறுப்பற்ற மெதுவான தொனியில் மெல்லிய குரலில் ஒவ்வொரு சிறு விவரத்தையும் தெளிவாக விளக்கிச் சொன்னான். ஆனால், என்ன விளக்கிச் சொன்னாலும், அவள் அலறல் தன்னை எப்படி நடுங்க வைத்தது என்பதை அவர்களுக்கு சுத்தமாக புரியவைக்கவே முடியாது என்பதை நன்றாக உணர்ந்திருந்தே சொன்னான். அவன் சொன்ன கதை மிகவும் கொடூரமாக இருந்திருக்கவேண்டும் அந்த போலீஸ்காரர்களுடைய முகம் வெளிறிப்போயிருந்தது.

சில வாரங்களுக்குப்பிறகு அவன் வோர்சாக வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு கோர்ட்டில் அந்தக் குரல் இரைந்து கரைத்தது.

"..ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் மரியாதைக்குரிய ஜூரிகள் மேற்சொன்ன கொலம்பியா மாவட்டத்தின் பெயராலும் அதன் சார்பாகவும் எடுத்துக்கொண்ட உறுதிமொழியின் பேரில் இதைப் படிக்கிறோம்:"

"குற்றம் சாட்டப்பட்ட சால் சாண்டர்ஸ் என்ற இந்த நபர், 19---, மார்ச் முதல் தேதி, மேற்சொன்ன கொலம்பியா மாவட்டத்தில் அதன் எல்லைக்குள் மேபெல்லெ ஈவா ஹவுஸ்மேன் என்கிற பெண்மணியைக் கொல்லும் நோக்கத் தோடு, திட்டமிட்டு–"

"ஓ, இதுதான் அவள் பெயரா," ஆச்சரியப்பட்டுக் கொண்டான்.

".... வேண்டுமென்றே, உள்நோக்கத்தோடு, முன்கூட்டியே யோசித்த இழிந்த நோக்கோடு, திட்டமிட்டு, மேற்சொன்ன மேபெல்லெ ஈவா ஹவுஸ்மேனை தலையில் முன்பக்கமாகவும், வலது பக்கமாகவும் இரண்டு ஆழமான காயங்கள் விழும்படியும், மண்டை உடையும்படியும் அடித்துக் காயப்படுத்தியிருக்கிறார். மேலும் அவரது கையால் அல்லது இரண்டு கைகளாலும் – இரண்டு கைகளாலுமா அல்லது ஒரு கையால்தானா என்பதை தெளிவாக முடிவு செய்யமுடியவில்லை என்று மேற்சொன்ன ஜூரிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள் – மேற்சொன்ன மேபெல்லா ஹவுஸ் மேனின் கழுத்தை இறுகப் பற்றி அழுத்தியிருக்கிறார்; மேலும், மேற்சொன்ன சால் சாண்டர்ஸ், மேற்சொன்ன மேபெல்லே ஈவா ஹவுஸ்மேனின் கழுத்தை, மேற்சொன்னவாறு ஒரு கையாலோ இரண்டு கைகளாலோ பிடித்து மூச்சுத்தினறும் வரை நெறித்திருக்கிறார்; அதன் விளைவாக, மேற்சொன்ன மேபெல்லே ஈவா ஹவுஸ்மேன் மூச்சுத் திணறி, கழுத்து முறிந்து, சரியாக 19---, மார்ச் மாதம் முதல் தேதியன்று, மேற்சொன்ன கொலம்பியா மாவட்டத்தில் அதன் எல்லைக்குள் இறந்துவிட்டார் என்பது உறுதியாகிறது.

சால் குடிப்பதற்கு ஏங்கினான். ஆனால் இப்போது அது சாத்தியமில்லை. மூச்சை நிம்மதியாக இழுத்துவிட்டான். அதே நிம்மதியோடு இத்தனை காலமும் பயந்து ஓடிக்கொண்டிருந்த அந்த நிழல்களின் உலகிடம் மண்டியிட்டு சரணடைந்தான். அவனுடைய உளைச்சல்கள் அத்தனையும் தொலைந்து அதுநாள் வரையில் அனுபவித்திராத அமைதியை உணர்ந்தான். நிழல்களின் உலகத்தோடு போராடுவதை நிறுத்திய அந்த நிமிடமே அவ்வளவு அமைதி கிடைத்தது ஆச்சரியமாக இருந்தது.

"..மேற்சொன்ன மேபெல்லே ஈவா ஹவுஸ்மேனுக்குச் சொந்தமான பத்து டாலர்கள் மதிப்புள்ள மோதிரத்தை, எதிர்ப்பை மீறி, வன்முறையைப் பிரயோகித்து, அச்சுறுத்தி, அந்த நேரத்தில், அந்த இடத்தில், மேற்சொன்ன நபரிட மிருந்து பிடிங்கி, திருடி எடுத்துச் சென்றுவிட்டார்."

இப்போது எந்தக் கவலையும் இல்லாமல் ஆனால் இன்னும் கவனமாக கேட்டுக்கொண்டிருந்தான்.

"ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் முறையிலும், இத்தகைய சூழல்களில் வாய்க்கிற சந்தர்ப்பங்களுக்குப் புறம்பாகவும், மேற்சொன்ன மேபெல்லெ ஈவா ஹவுஸ்மேனை கொலை செய்திருக்கிறார் என்பதும் உறுதியாகிறது".

பி.கு. இதன்பேரில் டாக்டர். ஹெர்மேன் ஸ்டீன் சாட்சியாக அழைக்கப்பட்டு, முறையான உறுதிமொழி எடுத்துக்கொண்டு அளித்த சாட்சி பின்வருமாறு:

"...பிறப்புறுப்புகளை ஆராய்ந்ததில் உராய்வுகளோ, கடுமையான காயங்களோ இல்லை என்பதோடு இறந்தவரின் கன்னிமைத்திரையும் கிழியாமல் இருக்கிறது. இறந்தவர் தாக்கப்பட்டது கற்பழிக்கும் நோக்கத்தில் அல்ல; புணர்வதற்கான முயற்சியும் நடைபெற்று இருக்கவில்லை. இறந்தவரின் வயது நாற்பது என்பது உறுதிசெய்யப் படுகிறது." ■

படிப்பகம்

www.padippakam.com



# அகன்ற வெளி

ஜேம்ஸ் ஆலன் மெக்ஃபெர்சன்

தமிழில் : வளர்மதி

*ஜேம்ஸ் ஆலன் மெக்:பெர்சன் 1943- ): 1960-70களின் முக்கிய சிறுகதை எழுத்தாளராக வெளிப்பட்டவர் மெக்:பெர்சன். ஜார்ஜியா-வில் சவானா பகுதியில் பிறந்த மெக்:பெர்சன் ஒரு சட்டப் பட்டதாரி. படித்துக் கொண்டிருக்கும்போதே பரிசுகளை வென்ற பல சிறுகதைகளை எழுதினார். பல்வேறு அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் ஆக்க இலக்கியப் பயிற்சியாளராகப் பணிபுரிந்தார்.*

*தனி மனிதர்களுக்கிடையேயான கடக்க முடியாத வேறுபாடுகளை மையமாகக் கொண்ட அற்புதமான சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ளார். அவரது பல கதைகள் ரயில்களைச் சுற்றியுள்ள கலாச்சார வாழ்வை விவரிக்கின்றன. 'புலிட்சர் பரிசு உட்பட பல பரிசுகள் மெக்:பெர்சனுக்கு வழங்கப்பட்டுள்ளன.*

*இனம், வர்க்கம் ஆகிய பிரச்சினைகளை மெக்:பெர்சனின் கதைகள் நெருக்கமாய்க் கையாண்ட போதிலும் தனது பாத்திரங்கள் படும்பாடுகளின் பொதுமைத் தன்மைகளை வெளிப்படுத்துவதற்கு அவர் முன்னுரிமை அளித்தார். "எனது கதைகள் மக்களைப் பற்றியது, எல்லாவிதமான மக்களையும் பற்றியது.... அவர்களில் சிலர் வெள்ளையர்களாகவும் இருக்க நேரிடுகிறது. எனினும் அவர்களின் தோலின் நிறம் என்ன என்பதை நான் பின்னணியிலேயே வைக்கிறேன்... அது வைக்கப்பட வேண்டிய இடம் அதுதான்."*

"பிரச்சினை அரசியல் ரீதியிலானதோ பொருண்மையானதோ அல்ல; அழகியல் ரீதியிலானதும் மதிப்புகள் பற்றியதும்தான் என்பதைக் கண்டுகொண்டதில்தான் பூன்-ன் மேதைமை அடங்கியிருக்கிறது",
- "The Discovery of Kentucky"
William Carlos Williams

இந்தக் கதை சொல்லி கட்டுக்களில்லாமல் திரிபவன். பிறழ்வு நிலையை தொட்டுக்கொண்டு வடிவம் என்பதையே சட்டை செய்யாத ஒரு மனநிலையைக் காட்டுகிறான். விடாமல் கேட்டதில் மரபுவழிப்பட்ட கதைசொல்லல் உத்திகளுக்கு தான் வெளிப்படையான எதிரி என்று அறிவித்துக்கொள் கிறான். என்ன காரணம் என்று அழுத்திக்கேட்டதில் "எல்லைகள்", "கட்டமைப்புகள்", "சட்டகங்கள்", "ஒழுங்கு", ஏன் "வடிவம்" என்று எல்லாவற்றையுமே தான் சந்தேகிப்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்ல ஆரம்பித்துவிட்டான். ஒழுங்கீனத்தை ஒரு ஒழுக்கமாகவே வலியுறுத்துகிறான். மரபு வழிப்பட்ட கதைசொல்லல் முறைகளில் வருகிற புதிரான புராதன ஒழுக்கங்கள், ஒருமுகத்தன்மைகள் மீது ஏறக்குறைய ஒரு காட்டுத்தனமான வெறுப்பை தம்பட்டமடித்துக் கொள்கிறான். அவன் தேர்வு செய்துகொண்டிருக்கிற இந்தத் துறையில் அவனுடைய இந்தக் குறை இங்கு எடுப்பாகவே படிந்திருக்கிறது. தணிக்கை செய்கிற எந்த எண்ணமும் இல்லாமல் இந்தக் கதையைக் காப்பாற்றும் நோக்கில் குறைந்த பட்சம் ஒரு ஒழுங்கு இருப்பது போன்ற தோற்றத்தையாவது தரும் பொருட்டு சில இடங்களில் சில விளக்கங்களைத் தரும் நிர்ப்பந்தம் தொகுப்பாளருக்கு நேர்ந்துவிட்டது. ஒரு தொழில்நுட்ப ரீதியிலான ஒழுக்கத்தைப் பேணும் முயற்சி இது. கட்டுக்குள் வராமல் மீறுகிற பிரதிக்கும் இறுதிப் படியை உருவாக்குவதில் இறுதி முக்கியத்துவம் வாய்ந்த, அந்த, எல்லாவற்றையும் கூர்ந்து நோக்குகிற பார்வைக்கும் இடையில் இருக்கவேண்டிய அவசியமான பொருத்தத்தை, ஒரு ஒழுக்கத்தின் ஒழுக்கத்தைப் பற்றியே தொகுப்பாளர் இங்கு குறிப்பிடுகிறார்.

அவன் சொன்னதின் சாரம் இதுதான் :

## I

கான்சாஸின் அந்தச் சிறிய டவுன்களை விட்டு அந்தக் காலத்தில் பெயர்ந்த ஆயிரக்கணக்கான பையன்களில் பால் ஃப்ராஸ்டும் ஒருவன். திரும்பிப் போகாத மிகச் சிலரில் அவன் ஒருவன். அவன் வெளியேறிய காலத்தில் போருக்குச் செல்லாமல் தப்பித்துக்கொள்வது எளிதான காரியமாகவே இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு அதில் சிரமம் கூடிக்கொண்டே போனது. சிகொகோவில் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே தான் சொல்ல வேண்டிய பாதை எதுவென்று பால் தீர்மானித்துவிட்டிருந்தான். வருவது எதுவானாலும் எதிர்கொள்ளத் தயாராகவும் இருந்தான். ஒரு சிறிய விடுமுறையில் வீட்டிற்கு வந்தவன் குடும்பத்தவர்களையும் போருக்கு ஆட்களைத் தேர்வு செய்த கமிட்டியையும் எதிர்கொண்டான். அவனைக் குழந்தையாக இருந்தது முதல் பார்த்தவர்கள் அவர்கள். அவனுடைய மறுப்பு அவர்களைக் கடுங்கோபம் கொள்ள வைத்தது. அவர்களுடைய

படிப்பகம்

www.padippakam.com



கோபத்தைப் பார்த்துக்கொண்டு அமைதியாக இருந்தவன் உள்ளுக்குள் அழுதான். சிகாகோவிற்குத் திரும்பி ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் மாற்றுச் சேவை செய்தான். ஆஸ்பத்திரியில் ஒரு குவேக்கர் வட்டத்தின் கூட்டங் களுக்குப் போக ஆரம்பித்தான். வரலாறு, இலக்கியம், ஒழுக்க வியல், தத்துவம் இவற்றில் ஆழமாக படிக்க ஆரம்பித்தான். வெகு சீக்கிரத்திலேயே அங்கு அடைக்கப்பட்டி ருந்தவர்களில் நிறைய பேர் உண்மையில் பைத்தியங்கள் இல்லை என்பதைக் கண்டு கொண்டான். இதனால் அவன் கொண்ட அச்சம் மெல்ல மெல்ல அவன் பேச்சைக் குறைத்தது. அதிகம் கவனிக்க ஆரம்பித்தான். இந்த சமயத்தில் கார்ஃபீல்டு பார்க்குக்கு அருகில் ஒரு வாடகை அறையில் தங்கியிருந்தன. சாப்பாடு, வேலை, புத்தகங்கள் எடுத்துவர லைப்ரரி இவற்றுக்கு மட்டுமே வெளியே போய் வந்தான். பெண்களின் வாசனையே தெரியாமல் கிடந்தான். அவனுக்கு அதில் நாட்டமும் இருக்கவில்லை. அவனுக்குள் ளாகவே சுருங்கி வாழ்ந்து கொண்டிருந்ததால் சீக்கிரத்தி லேயே சுற்றியிருந்தவர்கள் அவனை முட்டாள் என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களுடைய இந்த நினைப்பு அவனுக்கு ஒரு வகையில் வசதியாகிப் போனது. அவனுடைய இரகசியமான நானை தீனிபோட்டு வளர்த்தான். இரவுகளில் தனிமையில் அவன் அறையில் அதனுடன் உரையாடிக்கொண்டிருந்தான். பல மாதங்களுக்குப் பிறகு பொதுஇடத்தில் அவன் பேசியது ஆஸ்பத்திரியின் விளை யாட்டு அறையில் ஒரு செஸ்போர்டுக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டு மூளைக் கோளாறுக்காக வந்திருந்த ஒருவனோடு நிகழ்ந்தது." "நீ பைத்தியமில்லை", அவன் காதருகில் கிசுகிசுத்தான், "இங்கே என்ன செய்துகொண்டு இருக்கி றாய்?" அந்த நோயாளி பாலை கூர்ந்து நோக்கிவிட்டு மெலி தாக சிரித்தான். வாழ்க்கையை உதறிவிட்ட ஞானிகளுக்கே உரிய ஆழ்ந்த அர்த்தம் தொனிக்கிற சிரிப்பு அவன் உதடுகளில் படிந்திருந்தது. குனிந்து, பலகைக்குக் குறுக்காக சாய்ந்து பாலுடைய கரிய பழுப்புக் கண்களுக்குள் நேராகப் பார்த்தான். "நீ இங்கு என்ன செய்துகொண்டு இருக்கிறாய்?" இந்தக் கேள்வி பாலை நிலைகுலைய வைத்தது. அதை நினைக்க நினைக்க அவனை படபடப்பு துரத்தியது. ஓய்வு நேரங்களில் லாசேல் தெருவில் முற்றிலும் அறிமுகமில்லாத நபர்களிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டு உலா வர ஆரம்பித் தான். ஆனால், எல்லோரும் ஏதோ அவசரத்தில் இருப்பது போல பரபரத்துக் கொண்டிருந்தார்கள். மாற்றுச் சேவையின் இரண்டாவது வருடத்தில் கடற்கரையில் இருந்த ஒரு ஆஸ்பத்திரிக்கு மாற்றுதல் பெற்றுக்கொண்டான். அங்கு ஒக்லாண்டில், பைத்தியக்காரத்தனமான காரியங்களை செய்து கொண்டு சுற்றி வந்தான். ஆனால் நல்ல காலமாக தொடர்ந்து குவிந்திருந்த வேலைகள் அவன் பைத்தியமாகி கான்சா ஸிஸ்ற்குத் திரும்புவதை தடுத்து நிறுத்தியது. அவனுடைய கடைசி பைத்தியக்காரத்தனம் டென்னெஸெ-வில் இருந்த க்ளாக்ஸ்வில்லெ-வுக்கு வெளியே இருந்த வாரென் என்கிற சிறிய டவுனிலிருந்து வந்திருந்த விர்ஜினியா வாலென்டைன் என்ற கருப்புப் பெண்ணை சான்ஃப்ரான்ஸிஸ்கோசவில் - வைத்து மணம் செய்துகொண்டது.

## II

விர்ஜினியா வாலென்டைன் ஒரு பத்து வருடங் களுக்கு முன்பாக தெற்கில் விவசாயிகள் அலை அலையாக ஜெயில்களை உடைத்துக் கொண்டு வெளியேறிய அந்தப் பெரும் அலையில் வாரனை விட்டு வெளியேறிவள். தலை முறை தலைமுறையாக அடிமைகளாகக் கிடந்த அவளைப் போன்றவர்களுக்கு வெளியே விரிந்திருந்த இந்தப் பரந்த உலகம் இனிமையான வாய்ப்புகளை அள்ளித் தயாராக வைத்திருந்தது போன்ற நெளிவான ஒரு கோட்டோவியம் போலத் தெரிந்தது. ஆனால் எல்லோருக்குமே இந்தச் சுதந்திரம் இஷ்டம் போலத் திரியப் பயன்படவில்லை. நீண்ட சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்த செல்லப் பிராணிகள் எந்த நேரமும் சங்கிலியின் முனையில் இழுத்துப் பிடிக்கப் படுவதை உணர்ந்திருப்பது போல ஒரு எல்லை அவர்களைச் சுற்றி எப்போதும் வரையறுக்கப்பட்டிருந்தது. என்றாலும், விர்ஜினியாவைப் போன்ற மிகச் சிலர் கர்வம் மிக்க பருந்துகள் ஆளில்லாத சிகரங்களின் மேலாக உயர உயரப் பறந்து தங்கள் கூடுகளைக் கட்ட விழைவது போல எழுந்து பரந்து விரிந்து கிடந்த உலகின் மேலாகப் பறந்தார்கள்.

விர்ஜினியாவின் கனவு ஒரு இலட்சியக் காவியமாக இருந்தது. பத்தொன்பது வயதில் அமைதிப் படையில் சேர்ந்தவள் ஏழைகளுக்கே உரித்தான உலகப் பயணத்தை மேற்கொண்டாள். நாட்டுப்புற மக்களுக்கே உரிய ஒரு முரட்டுத்தனமான காட்டு வாழ்வின்த இயல்பைப் பெற்றவள் அவள். மனிதர்களிடம் புதைந்து கிடந்த மனிதத்தன்மையை சட்டென்று கண்டுகொள்ளும் திறன் அவளுக்கு இருந்தது. நல்ல நகைச்சுவை உணர்வும் வாய்க்கப் பெற்றிருந்தாள். இருபது வயதில் சிலோனில் குழந்தைகளுக்கு செவிலித் தாயாக வேலை செய்து கொண்டிருந்தாள். இருபத்தொன்றில், இந்தியாவில், ஜாம்ஷெட்பூரில் ஒரு சந்தையில் நின்றுகொண்டு போவோர் வருவோரைப் பார்த்துக்கொண்டு சாதிகளை எண்ணப் பழகிக் கொண்டிருந்தாள். தனது சொந்த மக்களைவிட இந்துக்கள் "கருப்பாக" இருக்கிறார்கள் என்று முடிவு செய்தவள் ஒரு முரண் நகை தொனியில் சற்று பெருமையாகவே தன்னை "கருப்பி" என்று அழைத்துக் கொள்ள ஆரம்பித்தாள். நுட்பமான ஒரு நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொண்டாள். செனிகலில் மீனவர் களோடு சேர்ந்து வெறுங்கையால் உண்ணப் பழகிக்கொண் டாள். கென்யாவில் ஒரு விடுமுறை நாளில் கிளிமஞ்சா ரோவின் சிகரத்தில், கிராமத்தவளைப் போல இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு இன்னும் கால் பதிக்கவேண்டிய சிகரங்களைத் தேடி பார்வையை வீசினாள். கெய்ரோ, செய்த் துறைமுகம், டமாஸ்கஸ் நகரங்களின் நறுமணப் பொருட் களின் வாசம் மூக்கைத் துளைத்து வியர்க்க வைக்கிற சந்தை களில் சாராயம் குடித்துவிட்டு களித்திருந்த வியாபாரிகளோடு பேரம் பேசி பொருட்களை வாங்குவதில் தேறினாள். பெண் களும் அடிமைகளும் இன்னும் சந்தைகளில் விலைபேசப் படுவதைக் கண்டு அராபியர்களை வசைபாடும் நல்ல பழக்கத்தையும் வளர்த்துக்கொண்டாள். லீக்கி என்ற ஒரு வயதான கிழவனைப் பற்றி நிறைய கதைகளை வைத்திருந்

படிப்பகம்

www.padippakam.com



தாள். வடக்கு டான்சேனியாவில் ஒரு மாட்டுப் பண்ணையில் அவனோடு சேர்ந்து குடித்துவிட்டு இரவுமுழுக்க கதைகள் பேசி உட்கார்ந்திருந்ததைப் பற்றியும், பசுவின் பாலை அப்படியே மடியில் வாய் வைத்தும் பசுவின் ரத்தத்தையும் குடிக்கப் பழகியதைப் பற்றியும் நிறைய பேசினாள். கிழவன் எப்போதும் சிடுசிடுத்தாலும் தன் திறமையைக் காட்டும் வாய்ப்பு வரும்போது எவ்வளவு துடிப்பாக இருந்தான் என்பதைச் சொல்வாள். பால் மோசமில்லை என்றாள். பசுவும் அவளை உதைக்கவில்லை என்று சொன்னாள். அராபியர்கள், ஆசியர்கள், ஆப்ரிக்கர்கள், இந்தியர்களுடைய மரியாதை நிமித்தமான பணிவான புன்னகைகளுக்குப் பின்னால் இருந்த அவர்களுடைய உண்மையான உலகில் பிரவேசித்து வந்தாள். அவர்கள் சொன்ன கதைகளில் வாழ்க்கையைப் பற்றிய மாறுபட்ட பல பார்வைகள் பல விதங்களில் படிந்திருப்பதைக் கண்டுகொண்டாள்.

இருபத்தியிரண்டு வயதில் சொந்த ஊருக்குத் திரும்பியபோது ஏராளமான கதைகளைச் சொல்ல வைத்திருந்தாள். அவளைப் போலவே அப்போது நிறையபேர் இருந்தார்கள். பாஸ்டன், நியூயார்க், ஃபிலடெல்ஃபியா, சிகாகோ என்று கலிஃபோர்னியாவின் எல்லாப் பகுதிகளிலும் மக்கள் கூடிக்கூடி இது போன்ற ஏராளமான கதைகளைப் பேசினார்கள். அவர்களுக்கே புதிதான ஒரு மொழியில் இனிக்க இனிக்க பேசினார்கள். அவர்களுடைய பேச்சுக்களில் உலகின் நாலு மூலைகளிலும் ஒன்றே போல இருந்த அரிய விஷயங்களைப் பற்றி நினைத்து நினைத்து ஆச்சரியப் பட்டார்கள். மேட்டுக்குடியினருக்கேயுரிய மட்டமான செயற்கைப் பாசாங்கைத் தொற்றிக் கொள்ளவிடாத அந்த விவசாய மக்கள் உண்மையிலே மேன்மைமிக்க மனிதர்கள். வாழ்க்கையின் சாரத்தை சாதாரணமாக புரிந்துகொள்கிற கலை அவர்களுக்குக் கைவந்திருந்தது. அவர்கள் ஒரு புது இனமாக உருவாகியிருந்தார்கள்; தங்களை அப்படி கருதிக்கொண்டார்கள்.

ஆனால், மெதுவாக மிக மெதுவாக அவர்களுடைய எண்ண ஓட்டங்கள் மாற ஆரம்பித்தன. ஆரம்பத்தில் இது மிகவும் நுட்பமாகவே இருந்தது. உரையாடலின்போது ஒருவர் சாதாரணமாகக் கேட்பார், "என்ன புரிந்துவிட்டதா?" சற்று தயக்கத்திற்குப் பிறகு மறுப்பு மெதுவாக வரும். இந்தக் காலத்தில் விழுந்த நீண்ட மௌனங்களைப் பற்றிய வேதனை மிக்க கதைகளை வாலென்டைன் நிறைய வைத்திருக்கிறாள். மக்கள் குற்ற உணர்ச்சியோடு தங்களைப் பற்றிய கூருணர்வோடு தவித்தார்கள். கொஞ்சம் நிர்ப்பந்தித்தால், அவளுடைய குழுவில் நடந்த தற்கொலையைப் பற்றி சொல்லிவிடுவாள். மக்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்வது மெல்ல மெல்லக் குறைந்தது. சீக்கிரத்திலேயே அவர்கள் தமக்குள்ளாகவே பேசிக்கொண்டும் தெருக்களில் நடக்கும்போது தலையை ஆட்டிக்கொண்டும் நடந்தார்கள். வேறுவழியில்லாமல் உரையாடல்களின் போது இப்போது பலரும் "இல்லை, எனக்குப் புரியவில்லை!"என்று ஒப்புக் கொள்ள ஆரம்பித்தார்கள். முதலில் இதில் ஒரு தயக்கம், சந்தேகத்தின் சாயல் இருந்தது. ஆனால், போகப் போக மறுக்கமுடியாத, ஆணித்தரமான தொனியில் பதில் வந்தது. வெறுப்பும் பகையுணர்ச்சியும் வெளிப்படையாகத் தெரிய சில மாதங்கள் எடுத்துக்கொண்டது. சண்டையில் இறங்க முயற்சித்தவர்கள், குழம்பி எல்லாவற்றையும் வெறுத்தார்கள். இதனால்தான் மற்ற எல்லா உறுதிமிக்கவர்களைப் போலவே விர்ஜினியாவும் கிழக்கை விட்டு வெளியேற கலிஃபோர்னியா வுக்கு ஓடிப் போனாள். அடிபட்ட பறவை இறக்கைகளை விரித்துக் கொண்டே தரையிறங்க பயப்படுவது போல, காயம்பட்ட தன் மனதுக்கு இதம் தரக்கூடிய ஒரு மென்மை யான வெளியை, தனிமையைத் தேடி ஓடிப்போனாள்.

## III

புதிய கதைகளைத் தேடி அந்தப் பிரதேசத்திற்கு நான் போயிருந்தேன். கிழக்கை விட்டு நான் கிளம்பிய அந்தக் காலத்தில் அங்கு புதிய கதைகள் எதுவும் இருக்கவில்லை. கருத்துக்களும் வழக்குகளும் கலந்து தூசிதட்டிப்போன மரபுகளாகிவிட்டிருந்தன பழைய கதைகளே திரும்பத் திரும்ப பேசப்பட்டன. சொன்னவர்களுக்கே அவற்றில் நம்பிக்கை போய்விட்டிருந்தது தெரிந்தது. வார்த்தைகளுக்கும் உணர்ச்சி களுக்கும் இடையிலான பிணைப்பு அறுந்து காதலுணர்ச்சி யின் வேகத்தோடு பாய்வது நின்றுபோய் இருந்தது. பழமையான நல்ல புனைவுகளும்கூட அவற்றுக்கேயுரிய சடங்குகள் கொண்டாட்டங்களிலிருந்து விலகி தனித்து மிதந்தன. கலைகளை உள்ளூர வெறுத்த வியாபாரிகள் அவற்றை நாட்டுப்புறக்கதைகள் என்று சொல்லி விற்றார்கள். உற்சாகமான சிரிப்பு என்பதே இல்லாமல் போனது. அப்புறம், செல்வச்செழிப்பான புரவலர்களைத் திருப்தி செய்ய மொழியை, தாய்மொழியை அதன் சிறந்த மகன்களே போட்டி போட்டுக்கொண்டு புணர்ந்தார்கள். புதிய கதைகள் ஒன்றுகூட இருக்கவில்லை. புணர்ச்சியின் தொழில்நுட்பத்தை விளக்கப் பெரும் உழைப்பு விரயமாக்கப்பட்டது. காலத்தால் மாற்ற முடியாத, விதிக்கப்பட்டுவிட்ட பாத்திரங்களை திரும்பவும் ஏற்றுக்கொண்டு கருப்பு மக்கள் மற்றவர்களை மகிழ்வித்தார்கள். மாப்பஸானின் தேவடியாக்கள் தொழிற்சங்கத் தலைவர்களின் இரும்புக் கரங்களில் மயிர்சிலிர்த்தார்கள். செக்கோவ், பேபெலுடைய உயிர்ப்புமிக்க விவசாயிகள் எல்லோரும் சோர்ந்து, ஆர்வமிழந்து, தம் ரத்தத்தின் தாளங்களைப் புறந்தள்ளிவிட்டு திண்ணைகளில் உட்கார்ந்து கிடந்தார்கள். புஷ்கினுடைய பெருமைமிக்க கொள்ளைக் காரர்களும் கலகக்காரர்களும், ஒளிமங்கிய கண்களோடு சோர்ந்து வீழ்ந்து கிடப்பதை விரும்பியது போலத் தெரிந்தது: அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரையொருவர் கொலை செய்துகொண்டு, வயதான பெண்களை உறிஞ்சிக்கொண்டு, வட்டிக்கடைக்காரர்களிடமிருந்து சில்லறைகளைத் திருடிக் கொண்டு, வெட்டி வீறாப்புப் பேச்சில் மயங்கி அடிமையாகிக் கிடந்தார்கள். பெரிய மனிதர்கள் தொலைபேசியிலும் தனிப்பேச்சுகளிலும் வெற்று வார்த்தைகளை, ஏதோ அவை தமக்காகவே காத்திருக்கிற டேப்ரிக்கார்டருக்குள் பத்திரமாக போய்ச்சேர்ந்துவிடும் போல கேட்பவர்கள் காதுகளில் திணித்துக் கொண்டிருந்தார்கள். எங்கும் எதிலும் நிஜமான

படிப்பகம்

www.padippakam.com



கண்ணீர் இல்லாமல் இந்த அகோரமான சோகம் படிந்திருந்தது.

கருப்பர்கள் எல்லோரும் மறுபடியும் தனியே பிரித்து வைக்கப்பட்டு சாதியத் திரைகள் இழுத்து விடப்பட்டன. உணவகங்களில், ஏரோப்ளேன்களில், சாதாரணமாக நாகரீகமாக நடந்துகொண்டவர்களின் வீடுகளிலும் கூட அச்சமும் பதுங்கிக்கொள்வதும், பாராமுகமாக திரும்பிக் கொள்வதும் மீண்டும் தலையெடுத்தன. அச்சத்தைப் பற்றிய ஒப்புதல்கள், பிரார்த்தனைகளாக வெளிபபட்ட வெறுப்பின் 1கூச்சல்கள், மவரவேண்டி இருந்த காதல்கள், நம்பிக்கைகள், தேவைகள்; கொலைகள், வஞ்சகங்கள், பரிகாரங்கள், ஒளிக்காமல் வெளிப்படுத்திய கோபங்கள் இப்படி எண்ணற்ற விஷயங்களைப் பற்றிய கதைகள், கோடிக்கணக்கான கதைகள் அந்தக் காலத்தில் கிழக்கில் மடிந்துபோயின. அறிமுகமில்லாத ஒரு நபரை அணுகி, "நண்பரே, என்னுடைய நானை நிறைவு செய்துகொள்ள உங்களுடைய கதையும் கொஞ்சம் தேவை," என்று கேட்டிருந்தால் அவரை அலறவிட்டு என்னைக் கொலைகாரன் என்று பழிக்க வைத்த பரிதாபத்திற்குத் தள்ளிவிட்டவனாகியிருப்பேன். ஆனால், இதைச் செய்யாமலிருப்பதும் எனக்குச் சிரமமாக இருந்தது. கதைசொல்லி என்கிற கடமையில் இருந்து தவறுவது பெரிய கொடுமை. புதிய பார்வைகள், பரிமாணங்கள் தேவைப்படுகிற காலங்களில் சுற்றிலும் கூர்ந்து கவனிப்பதோடு நின்றுவிடாமல் பேசப்பட வேண்டிய கதைகளையும் கட்டாயம் சொல்லி விடவேண்டும். ஆனால், அந்தக் காலத்தில், கிழக்கில், இதைப்பற்றியெல்லாம் எந்தக் கவலையும் யாருக்கும் இருக்கவில்லை. புதிய பார்வைகள், வடிவங்கள், புத்துயிர்ப்பு தேவையாயிருந்தது. அவற்றைத் தேடி கிழக்கை விட்டு வெளியேறினேன்.

**ஒரு சிறிய விளக்கம். சாதியக் கட்டுப் பாடுகளுக்கும் வடிவத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது?**

எல்லாவிதமான தொடர்புகளும் இருக்கிறது.

**வெள்ளையனாக மாறிவிட விரும்பு கிறாயா?**

ஒரு கதைசொல்லிக்கு அவன் பேசுகிற உலகத்தைப் பற்றிய புனைவுகளுக்கு மட்டுமல்ல அந்த உலகத்திற்குமே வாய்ப்புகள் வேண்டும்.

**அப்படியென்றால், கருப்பனாக இருப் பதற்கு வெட்கப்படுகிறாயா?**

மற்றவர்கள் கிழித்து வைத்திருக்கிற எல்லைகளை மீறுவதில் என்னிடம் கூடுதல் வேகம் இல்லை என்பது குறித்தே வெட்கப்படுகிறேன்.

**ஒருங்கிணைவின் (Integration) மீது உனக்குக் காதல் இருக்கிறது. அப்படித் தானே?**

ஆரோக்கியமான கற்பனையால் சபிக்கப்பட்டவன் நான்.

**கற்பனைக்கும் சாதிய வரையறுப்பு களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது?**

எல்லாவிதமான தொடர்புகளும்.

**இன்னும் ஒரு சிறிய விளக்கம். தனிமனித சுதந்திரம் பற்றி உனது அபிப்பிராயம் என்ன?**

புதிய கதைகளைக் கட்டுவதற்கு, தேடுவதற்கு எந்தத் தடைகளும் இருக்கக்கூடாது.

**இந்தக் கதைக்கு நீ போதிய கவனம், உழைப்பு செலுத்தினாயா?**

முன்னொரு காலத்தில் சான்ஃப்ரான்சிஸ்கோ-வில் ஒரு திருமணம் நடந்தேறியது.

விர்ஜினியாவை அவள் சேகரித்து வைத்திருந்த கதைகளுக்காக நான் விரும்பினேன். பால் ஃப்ராஸ்ட் அவற்றுக்கு முழுமுதல் உரிமையும் கொண்டாடியதால் அவனை வெறுக்கவும் செய்தேன். அவளிடமிருந்த அந்தப் புதையலை அவன் விற்றுத் தீர்த்துவிடுவான் என்று பயந்தேன். விர்ஜினியா அப்படி ஒன்றும் பிரமாதமான அழகானவள் இல்லை. ஆரம்பத்தில் அவன் எப்படி அவளை விரும்பினான் என்பது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. சிறிய முலைகளோடு அவள் சற்றே பருமனாக இருந்தாள். எப்போதும் லெஸ் ஜீன்விகளையும் நாற்பதுகளில் ஹாலிவுட் கொள்ளையர் படங்களில் பிரபலமான விரிந்த ஓரம் வைத்த தொப்பிகளையும் அணிந்தாள். ஆனால், அவளுடைய உடுத்தும் பாங்கை இன்னும் கூர்ந்து கவனித்த பிறகு அவள் ஒளித்து வைத்திருந்த நானை யாரும் கண்டுகொண்டு விடக்கூடாது என்பதற்காக, கவனத்தை திசைதிருப்பும் நோக்கத்தில் அப்படி அணிந்தாள் என்பதைப் புரிந்து கொண்டேன். உரக்கச் சிரிப்பாள். அந்தச் சிரிப்புக்குப் பின்னால் ரகசியமாக கீழே இறங்கி ஆடைகளை சரிசெய்து கொண்ட ஒரு கையின் அசைவுகளைக் கேட்டேன். அவளுடைய பிடிவாதமான வீறாப்பு மென்மையான இதயத்தை தற்காத்துக்கொள்ளும் முயற்சியாக இருந்தது. அவள் சிரிப்பின் குரலில் பிசைந்த தொண்டை நார்கள், மிக நுட்பமாக பிண்ணப்பட்டிருந்த அவளுடைய கூருணர்வுகள் தன்னை உலகத்தின் முன்பாக வெளிக்காட்டிக்கொள்வதை தவிர்ப்பதற்கு, மிகுந்த பிரத்தனப்படுவதை கண்டுகொண் டேன். மிகவும் செரிவான சிக்கலான ஒரு தற்காப்பு முன்நகையை அவள் பிரயோகித்துவந்தாள். "கருப்பனே என்னிடம் விளையாடாதே!" என்று அவள் குரல் அதிர்ந்த போது, அதன் நயத்தின் ஆழத்தில் "ரொம்பவும் நெருங்கி வந்துவிடாதே, எளிதில் உன்னை புண்படுத்திவிடுவேன்" என்று சொல்வது போலிருந்தது. அல்லது, "இங்கே வா, இவன் தான் நான் மணந்துகொள்ளப் போகிறவன்; உனக்குப் பிடிக்கவில்லையெனில் செத்து நகர்த்துக்குப் போய் தொலை!" என்று அவள் குரல் சொன்னபோது, துறுதுறு வென்று அந்தக் கரிய விழிகள், எதிர்வினைகளைக் கூர்ந்து எதிர்பார்த்துக்கொண்டே தனது மௌன மொழியில் "கண்ணே, காயப்படுத்திவிடாதே! காயப்படுத்திவிடாதே

படிப்பகம்

www.padippakam.com



என்று கெஞ்சியது. இதே முரண்நகை கலந்து அவள் தன் கதைகளை சுவையாகத் தந்தாள். விர்ஜினியா வாலென்டைன் பல நாடுகளைச் சுற்றி கண்ட அனுபவங்களின் சுவை கூட்டி கதைகளைச் சொன்ன ஒரு நாட்டுப்புற நாடோடிக் கதை சொல்லி. அவற்றைச் சொல்வதன் ஊடாக அவள் தன் மொத்த இருப்பையுமே சிக்கலான முறைகளில் பேசினாள். அவள் தனித்தன்மை சுடர்விட்டவள். அருமையான கதைசொல்லி. ஒரு அற்புதமான மந்திர மங்கை. தேவதை.

பால் ஃப்ராஸ்ட் அவள் இப்படி மேலுக்காக வெளிக் காட்டி விளையாடிய தைரியத்தைப் பார்த்து மயங்கிவிட்டான். இந்தக் காலத்தில் வெறும் ஈர்ப்பைத் தாண்டி உள்ளே ஊடுருவிக் காதலிக்கிற முதிர்ச்சியை அவள் பெற்றுவிட்டி ருந்தான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வியாபாரத்தில் வெற்றிகரமாக நிலை கொண்டுவிட்ட ஒரு கான்ஸாஸ் குடும்பத்தில் இரண்டாவது தலைமுறையாகப் பிறந்தவன் அவன். அதனால் தான் என்னவோ வாழ்க்கை மதிப்புகள் குறித்த தேடல் அவனுக்கு இருந்தது. ஆனால், இந்தக் காரணத்தாலேயே அல்லது அவனுக்கே இன்னமும் விளங்காத ஏதோ சில காரணங்களால் தன் குடும்பத்தையும் பரந்த மேய்ச்சல் நிலங்களையும் கடந்த காலத்துக்குரியவை யாக தள்ளி வைத்துவிட்டான். காலத்தால் அழியாத கலைப் படைப்புகளைத் தந்து வெறிச்சோடிக்கிடந்த மொட்டையான டவுன்களின் பிடியிலிருந்து தன் குடும்பத்தை விடுவிக்க அவன் கனவு கண்டான், என்று நினைக்கிறேன். அவனுடைய விழிகளின் ஆழத்தில் கூட்டங்கூட்டமாக கொன்று குவிக்கப் பட்ட இந்தியர்களின் ஆவிகள் அலைக்கழிவதைப் பார்த்தது போல எனக்கு ஞாபகமிருக்கிறது. அதே நேரத்தில் ஒளிக்கத் தெரியாத அவன் விழிகளில் அறிவுத்தாகம் சுடர்விட்டுக் கொண்டிருந்ததும் தெரிந்தது. எந்த நொடியிலும் விழுந்துவிட, விரல் நுனியில் இருந்த நியாயமான கேள்விகளுக்கு பதில்களை எதிர்பார்க்கும் பேராசைமிக்க ஆவல் தெரிந்தது. தணியாத ஒரு தாகம் ஒளி உமிழும் மேகத்திரள் போல, இன்னும் அவனோடு கலந்துவிட முடியாமல் உறுத்திக் கொண்டிருந்த பளிச்சிடும் இரண்டாவது தோல் போர்வை யைப் போல அது அவனுடைய முகத்தில் எப்போதும் தொக்கிக் கிடந்தது. எதிரே யார் வந்து நின்றாலும் அவர்களிடம் “நான் யார்?” என்று கேட்கக் காத்திருப்பது போலத் தோன்றியது. என் கவனம் முழுக்க இதிலேயே குவிந்திருந்ததால் அந்த முகத்தில் தோன்றி மறைந்த மற்ற உணர்ச்சிகளெல்லாம் கவனத்திலிருந்து தப்பிவிட்டன என்பதை ஒப்புக்கொள்கிறேன். இப்படி என் கவனத்தை சுருக்கிக்கொண்டு கறாராக வரையறுத்த ஒரு பதிலை எதிர் பார்த்துக் கொண்டிருந்ததை உணரத் தொடங்கியபோது குற்ற உணர்ச்சியும் வெட்கமும் என்னை சற்று சங்கடத்திற் குள்ளாக்கியது. ஏனென்றால் அவனுடைய தேடலைத் தூண்டிவிட்ட அந்தப் புதிரான ஆரம்பம், வெறுமனே சாதாரணமான ஒரு குற்றவுணர்ச்சியாகவோ அல்லது அதிகாரத்திற்கான விருப்பமாகவோ அல்லது வெட்கக் கேடான காம வெறியாகவோ, அவனால் வெற்றிகொள்ள முடியாத அவள் அஞ்சி நடுங்கிய ஒரு பொருளிடம் சரணடைந்து விடுவதற்கான நிர்ப்பந்தமாக இப்படி ஏதோ ஒன்றாகவும் இருந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் எதுவாக இருந்தாலும் இத்தகைய எல்லா காரணங்களும் காதல் என்கிற அந்த வழக்கமான விஷயத்தில் போய் முடிந்துவிடுவது உண்மை.

என்றாலும் சில நேரங்களில் விர்ஜினியாவின் கண்கள் அவன் முகத்தில் படிந்தபோது மென்மை பூத்ததை கவனித்தபோது அவனுக்குள் கட்டுக்குள் இருந்த, ஆனால் வெளிப்படையாக காட்டிக் கொள்வதற்கு கூச்சப்படாத அளவுக்கு தன்னம்பிக்கை பதிந்திருந்த, வழக்கத்திற்கு மாறான ஆன்ம வேகம் இருந்ததை, அந்தப் பார்வை அங்கீகரித்ததை என்னால் கண்டுகொள்ள முடிந்தது. ஆனால், அவன் தன் குழந்தைமை தொனித்த அறியாமையை உணர்ந்திருக்கவில்லை என்று உறுதியாக நம்புகிறேன். ஒருவேளை அதனால்தான் என்னவோ முற்றிலும் அறிமுக மில்லாத, ஆன்மா நொறுங்கிப்போயிருந்த ஒருவனை அவன் கள்ளங்கபடமில்லாமல் அணுகியபோதெல்லாம் அவளு டைய கண்கள் - அவளது குரல் உறுமிக் கொண்டிருந்தாலும், கேலி பேசிக்கொண்டிருந்தாலும் அல்லது உரக்கச் சிரித்துக்கொண்டிருந்தாலும்- **கண்ணே, காயப்படுத்தி விடாதே! காயப்படுத்திவிடாதே!** என்று கெஞ்சின. தன்னுடைய கிராமத்துக் கூர்மதியை நுட்பத்தோடு பிரயோகித்த கிராமத்துத் தேவதை அவள். அப்புறம், நான் அவர்களை இன்னும் நன்றாக புரிந்துகொள்ள ஆரம்பித்த பிறகு, அவர்களுடைய உறவின் பிணைப்பு பற்றியிருந்த கண்ணியை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள ஆரம்பித் தேன். மேன்மையான ஆன்மா வாய்க்கப்பெற்றிருந்த அந்த கிராமத்துப் பையனுக்கு நிழல் தர தன் முறிந்த சிறகுகளை - சற்று குழப்பத்தோடுதான் என்றாலும் கூட, விரித்த பருந்து அவள். அவனுடைய ஆன்மாவை சேர்த்து அணைத்துக் கொண்டது அவனை இன்னும் பலவீனமாக்கியது. ஆனால் அத்தனை உயரத்தில் பறந்திருந்தாலும், நிறைய காயப் பட்டிருந்தாலும் இன்னமும் காய்ந்துவிடாமல் இருந்த காயங்களின் மீது எந்த முரட்டு உரசலும் பட்டுவிடாமல் தன்னைக் காத்துக்கொள்கிற அளவுக்கு இந்த உலகத்தைப் பற்றியும் இதில் யாரையும் எக்காலத்திலும் நம்பிவிடமுடியாது என்பது பற்றியும் முழுமையாகப் புரிந்திருந்தாலும், அதையும் மீறி அளவில்லாத அன்பைத் தனக்குள் பொதித்து வைத்திருந்தாள். பால் ஃப்ராஸ்டு ஒரு அப்பாவி. ஆனால் கொடுத்து வைத்தவன். விர்ஜினியா வாலென்டைன் தன்னை குணப்படுத்திக்கொள்ள அவனைப் பாதுகாத்தாள்.

அவர்களுடைய திருமணம் ஒரு நீதிபதியின் அலுவலக அறையில் ஆரவாரமில்லாமல் நடந்தேறியது. பாலுடைய சகோதரன் மாப்பிள்ளைத் தோழனாக நின்றான். நல்ல உயரமாக, கட்டான உடல் வாகோடு இருந்த அவன் தன் சகோதரனின் அருகில் நிற்பதற்காக கான்ஸாஸிலிருந்து பறந்து வந்திருந்தான். கண்ணியத்தோடு மென்மையாக மோதிரத்தைப் பிடித்திருந்தான். பாலுனுடைய பெற்றோர்கள் திருமணத்திற்கு வரவில்லை. வழக்கமான கெஞ்சல்களைக் கூவி ஒருமுறையாவது வந்துபோகும்படி பலமுறை அவனை

படிப்பகம்

www.padippakam.com



அழைத்தார்கள். ஒன்றும் நடக்காமல் போகவே வாழ்த்து சொல்லி தந்தி அனுப்பி வைத்தார்கள். ஆனால் விர்ஜினியா வின் பெற்றோர்கள் டென்னெஸெவிலிருந்து வந்திருந்தார் கள். இனிமையான கிராமத்தவர்கள் அவர்கள். நீண்ட காலமாக அவளை வீட்டுக்கு வந்துபோகும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவளுடைய மனதை மாற்ற முடியாது என்பதைப் புரிந்துகொண்ட பிறகு, பதப்படுத்திய நாட்டுப் பன்றிக் கறியும், வீட்டிலேயே தயாரித்த கேக் ஒன்றும், டென்னெஸெ-வின் காடுகளுக்குள் வாழ்ந்துவந்த, இரத்தத்தின் ஒவ்வொரு அணுவிலும் ஒரு செரோகீ-யாக இருந்த அவளுடைய பாட்டி அவளுக்காகவே நெய்த மெத்தையும் எடுத்துக்கொண்டு வந்திருந்தார்கள். நலம் விரும்பிய சுற்றத்தார்களிடமிருந்து கைநிறைய பரிசுகளும் கொண்டுவந்திருந்தார்கள். தாயார் இளநீல உடையும் வெள்ளைத் தொப்பியும் அணிந்திருந்தாள். நல்ல கருப்பாக இருந்த அந்த சிறிய பெண்மணி ஞாயிற்றுக்கிழமை சர்ச் சேவையில் வந்த கட்டியங்காரனைப் போல பணிவாக நீதிபதி யின் தோல் நாற்காலியில் அமைதியாக உட்கார்ந்திருந்தாள். தந்தை திரு. டானியல் வாலென்டைன் எல்லோரிடமும் சாதாரணமாகக் கலந்து பேசினார். நீதிபதி உரிய சடங்குகளை முடித்ததும் லேசான படபடப்போடு சிரித்துக்கொண்டே எல்லோருடனும் கைகுலுக்கிக் கொண்டார். கருத்த சுருள் முடிகளும், எழும்பிய கன்ன எலும்புகளோடும் ஒரு இந்தியனைப் போன்ற சாயல் அவர் முகத்தில் தெரிந்தது. விர்ஜினியா ஆழச்சிவந்த பழுப்பு நிறம். சிவப்பு ஓரம் வைத்த எளிமையான வெள்ளை ஆடையை அணிந்திருந்தாள். மருகிக்கொண்டிருந்த தாய்க்கு, "நான்தான் முன்னமே சொன்னேனே, கவலைப்பட ஒன்றுமேயில்லை", என்கிற தொனியில் சமாதானம் செய்கிற புன்னகையை படரவிட்டி ருந்தாள். கருப்பு சூட்டில் இருந்த பால் மேட்டுக்குடி தனியார் க்ளப்பில் இருந்த பணியாளனைப் போல பொறுப்பாகவும் பணிவாகவும் தெரிந்தான்.

கோல்டன் கேட் பார்க்கின் ஒரு வெளிச்சமான மூலையில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் டானியல் வாலென்டைன் எல்லோருக்கும் சுருட்டுகள் தந்துகொண்டி ருந்தார். பின்னர், பேண்ட் பாக்கெட்டுக்குள் கைகளை விட்டுக்கொண்டு புல்வெளியில் மெதுவாக நடைபோட்டுக் கொண்டிருந்தார். அவருடைய உடலின் தாக்குப்பிடிக்கும் சக்தியைச் சோதித்தன் நல்ல நவம்பர் மதியம் அது. அவர் பழகிய சூழலிலிருந்து முற்றிலும் மாறுபட்ட புதிய சூழல் அது. அவருக்குச் சற்று சங்கடமாக இருந்தது நன்றாகவே தெரிந்தது. அவருடைய சங்கடத்தைத் தணிக்க என்னுடைய கருப்பைப் புகைத்துக்கொண்டே அவரோடு சேர்ந்து கொண்டேன். அவருடைய பழுப்பு முகத்தில் அச்சமும் பெருமையும் புதிரும் கலந்திருந்தது. கடைசிவரை உலகில் நிச்சயமாக மாறவே மாறாது என்று அவர் நம்பிக் கொண்டிருந்த விஷயமும்கூட அவரை ஏமாற்றிவிட்டதைப் புரிந்துகொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தார். உலகத்தி லேயே மாற்றமுடியாத உறுதியான பிணைப்பு நிறம்தான் என்று நம்பியிருந்தார். ஆனால் இப்போது எதையோ யாரையோ நினைத்து வெட்கப்பட்டதைப் போலத் தெரிந்தது. "ஒருமுறையாவது வந்துபோகும்படி பலமுறை கேட் டோம்,"நடையை நிறுத்தாமலேயே பேச்சை ஆரம்பித்தார். காலந்தாழ்ந்து பூத்துக் கொண்டிருந்த பூக்களையும் பழுத்துக் கொண்டிருந்த பச்சை மரங்களையும் சட்டையில்லாமல் ஃப்ரிஸ்பீக்களை வீசிக்கொண்டிருந்த இளைஞர்களையும் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். "இந்த உலகத்தை முழுமையாக புரிந்துகொண்டு விட்டதாக நடிக்க இனிமேலும் எனக்கு விருப்பமில்லை. ஆனால் அவனுக்கு நல்ல அறிவுரை சொல்லக்கூடிய அளவுக்கு எனக்கு ஓரளவு உலக அனுபவம் இருக்கிறது. அதைச் சரியாகச் செய்யவும் எனக்குத் தெரியும். என்னுடைய குழந்தை நீண்ட பாரம்பரியமிக்க குடும்பத்தில் வந்தவள். அதில் அவள் அம்மாவுக்கும் எனக்கும் நிறைய பெருமிதம் உண்டு. அங்கு, தெற்கில் என் பின்னால் அலைந்த வெள்ளைப் பெண்கள் நிறைய பேரை எனக்குத் தெரியும். அதனால், இந்த உலகம் எங்கே போய்க்கொண்டு இருக்கிறது என்று எனக்கு ஓரளவுக்குத் தெரியும். ஆனால், நான் யாருக்கும் விளையாட்டுப் பொம்மை இல்லை. என் குழந்தையும் அப்படியில்லை". புல்லின் பசுமையையும் மரங்களின் அடர்த்தியையும் நோட்டம் விட்டபடி நுரையீரலை நிரப்பி ஒரு ஆழ்ந்த மூச்சை இழுத்தார். டென்னெஸெ-வின் குளிர்ந்த இலையுதிர் காலத்தை நினைவுக்குக் கொண்டுவர அவரது உடல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது போலத் தெரிந்தது. லேசாக வியர்த்துக் கொண்டிருந்தது. தொடர்ந்தார்," அவனுடைய குடும்பம் எக்கேடு கெட்டாலும் எனக்குக் கவலையில்லை. நரகத்திற்கே போனாலும் எனக்கு ஒரு பொருட்டில்லை, ஆனால் என் குடும்பத்தைப் பற்றி மிகுந்த அக்கறை எனக்குண்டு. நேற்று இரவு அவனிடம் தெளிவாகச் சொல்லிவிட்டேன். 'என்னுடைய குழந்தையை எந்த காரணத்திற்காவது துன்புறுத்தினால், அவளுடைய பெண்மைத்தனமான இயல்புகளுக்குச் சம்பந்தமில்லாத ஏதாவது ஒரு தவறுக்காக அவளை அழவைத்தால் உன்னை சும்மா விட்டுவிடமாட்டேன்.' அவனுக்காக ஒரு தடியை செய்து வைத்திருக்கிறேன் என்று எச்சரித்து வைத்திருக் கிறேன்." ஒரு கருப்பன் இன்னொரு கருப்பனிடம் மனம் விட்டு பகிர்ந்துகொள்கிற முறையில் என்னிடம் பேசினார். நான் அவருக்கு நம்பிக்கையளித்துப் பொறுப்பேற்றுக் கொள்வேன் என்ற நம்பிக்கையில் இதையெல்லாம் என்னிடம் சொன்னார். ஆனால் அவருடைய செல்ல மகள் மரபான அபிப்பிராயங்களுக்கு மட்டுமே மதிப்பிருந்த அவருடைய வீட்டிலிருந்து வெகு காலத்திற்கு முன்னமே பல உலகங்கள் தாண்டி போய்விட்டதை தனக்கென ஒரு உலகத்தை எடுத்துக்கொண்டு அதில் தனது நாளை இரகசியமாக போற்றிப் பாதுகாத்து வளர்த்து வந்ததை எப்படி விளக்கிச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. "அவனுக்கு அதைத் தெளிவாகச் சொல்லிவிட்டேன்", அழுத்தமாக தலையை அசைத்துச் சொன்னார். பிறகு, என் கண்களைத் தவிர்த்துவிட்டு, சுருட்டை இழுத்து, ஒரு யூக்கலிப்டஸ் மரத்துக்கடியில் கூடியிருந்த மற்ற எல்லோரையும் பார்த்த தலையசைத்தார். திருமதி. வாலென்டைன், கொண்டு

படிப்பகம்

www.padippakam.com



வந்திருந்த மதிய உணவைப் பிரித்துக் கொண்டிருந்தார். பால் சின்னப் பையனைப் போல சிரித்துக் கொண்டு வாலென்டை னுடன் கோர்த்துக் கொண்டு கைகளை வீசிக் கொண்டி ருந்தான். "என்றாலும் அவர்கள் ஒரு நல்ல ஜோடியாக இருப்பார்கள். என்ன, அப்படித்தானே தெரிகிறார்கள்?" என்னைக் கேட்டார்.

அவர்கள் ஒரு நல்ல ஜோடியாக அமைந்தார்கள். பால் மிஷன் மாவட்டத்தில் ஒரு அபார்ட்மெண்டை வாடகைக்கு எடுத்து அவர்களுடைய எல்லா பொருட்களையும் கொண்டுவந்து சேர்த்தான். அவளுடைய பயணங்களில் சேகரித்திருந்த போஸ்டர்கள், ஓவியங்கள், சிற்பங்களை எடுத்து சுவர் மூலைகளையும் மேசைகளையும் அலங்கரித்தார்கள். பாலுடைய ஏராளமான புத்தகங்கள் சிறிய லிவிங் ரூமில் உயரமான பழுப்புநிற புத்தக பீரோக்களில் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டன. திருமணத்திற்குப் பிறகு நான் சந்தித்த சந்தர்ப்பங்களில் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி யாக இருந்தது போலத் தெரிந்தது. சிதறிப் போயிருந்த வாழ்க்கையின் உடைஙநத பாகங்களைப் பொறுக்கி எடுத்து சரிசெய்வதில் ஒன்று சேர்ப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தது போலத் தோன்றினார்கள். விர்ஜினியா அரசு நிறுவனம் ஒன்றில் க்ளார்க்காக வேலைக்குச் சேர்ந்தாள். பால் பகலில் ஒரு கட்டடக் கம்பெனியில் வேலை செய்தான். இரவில் ஒரு சமுகக்(Community) கல்லூரியில் பட்டம் படித்தான். இலக்கை அடைந்தே தீருகிற உறுதியோடு திட்ட மிட்டு கடுமையாக உழைத்தான். ஆனால் ஒரு பெருநகரத்தில் வசதியான வாழ்க்கைத் தரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு அவர்கள் கடுமையாக முயற்சி செய்ய வேண்டியிருந்தது. பக்கத்து வீட்டுக்காரர்களாக இருந்த மெக்சிக நண்பர்களிட மிருந்து இருவரும் ஸ்பானிஷ் கற்றுக்கொண்டிருந்தார்கள். நல்ல இயல்பும் தனித்தன்மையும் உள்ளவர்களாகப் பார்த்து நண்பர்களை பொறுக்கி எடுத்தார்கள். நான் சந்தித்த நபர்களிலேயே மிக அதிக ஜனநாயக உணர்வுள்ளவர்களாக இருந்தார்கள். எல்லோரையும் பேச அனுமதித்தார்கள். மெக்சிக்கர்கள், ஆசியர்கள், ஃப்ரெஞ்சுக்காரர்கள், ப்ரேசில் நாட்டவர்கள், கருப்பர்கள், வெள்ளை அமெரிக்கர்கள் என்று எல்லோரிடமும் உறவு வைத்திருந்தார்கள். ஆனால், எப்போதும் பலரும் வந்து போய்க்கொண்டிருந்த ஒரு இடத்தில் வசித்துவந்தார்கள். இது, கிழக்கில் நிகழ்ந்தது போல அவ்வளவு கொடூரமானதாக இல்லையென்றாலும் அதே போன்ற விளைவுகளைத் தரக்கூடியதாக அமைந்துவிட்டது.

இந்த சமயத்தில் பாலுடைய தந்தை கான்சாஸில் இருந்துகொண்டே நிர்ப்பந்தங்களை அதிகரித்துக் கொண்டி ருந்தார். விர்ஜினியா பற்றிய யோசனை அவரைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்துவிட்டிருந்தது என்று நினைக்கிறேன். அவருடைய பெயருக்கு ஏற்படவிருக்கும் களங்கம் அவரை பயமுறுத்த ஆரம்பித்து விட்டிருக்கவேண்டும். பால் தன்னுடைய முடிவை மறுபரிசீலனை செய்வதாக இருந்தால் தன்னுடைய முழு உதவியும் அவனுக்கு நிச்சயம் கிடைக்கும் என்று உறுதி சொல்லி தொலைபேசியில் தொடர்ந்து தொந்தரவு செய்தார். தன்னுடைய முயற்சிக்குப் பலன் நிச்சயம் இருக்கும் என்று எதிர்பார்த்தார். தொலைபேசியிலேயே அவர்கள் விவாதித்தார்கள். வாலிபப் பருவத்தின் பரவசத்தில் மயங்கிவிட்டதாக குறை கூறினார். நீக்ரோவைப் போலவே யோசிக்க ஆரம்பித்துவிட்டான் என்று குற்றம் சாட்டினார். குறுகிய மனப்பான்மை அவரை விட்டு அகலவில்லை என்று மகன் தந்தையைக் குற்றம் சொன்னான். அவருக்கு மூளை மழுங்கிப் போய்விட்டதாகச் சொன்னான். எதுவும் தீர்க்கப்படவில்லையென்றாலும் விவாதங்கள் ஆக்கப்பூர்வ மாக தொடர்ந்து நடந்தன. தந்தை ஒரு நல்ல வியாபாரி. சந்தையில் அடுத்தது என்ன என்பதை நன்கு அறிந்தவராக இருந்தார். மகன் ஒரு மோசமான முதலீடு செய்திருப்ப தாகவும் விர்ஜினியாவிடம் சரக்கு இருப்பு தீர்ந்ததும் சீக்கிரமே திருந்திவிடுவான் என்று நம்பினார் என்றும் நினைக்கிறேன். சாயம் போகாத நிறம், சலித்துவிடாத பழம், என்று எது இருக்கிறது. அவருடைய பார்வையில் அது அவ்வளவு சுளுவானது. ஆனால் பாலுடைய பார்வை அப்படியிருக்க வில்லை.

டிசம்பரின் ஆரம்பத்தில் ஒருநாள் இரவு உணவுக்கு என்னை அழைத்திருந்தார்கள். அந்த இரவு விர்ஜினியா சொன்னாள், "அந்தக் கிழட்டு ராஸ்கல் ஒருநாள் ஒரு நீக்ரோக் குழந்தையை எடுத்து கொஞ்ச வேண்டியிருக்குமே என்று பயப்படுகிறான். எனக்கு மட்டும் கல்நெஞ்சாக இருந்திருந்தால் அவனுக்குக் குழந்தையை கோமாளி வேஷமிட்டு படமெடுத்து அனுப்புவேன்." சொல்லிக்கொண்டே சிரித்தாள். ஆனால் வழக்கமான முரண்னொனி அதில் இல்லை. தன்னுடைய லெவி ஜீன்ஸின் பின் பாக்கெட்டுகளுக்குள் கைகளை விட்டுக்கொண்டு அடுப்பின் மீது சாய்ந்து கொண்டாள்.

பால் சமையலறை மேசையில் உட்கார்ந்து வைன் குடித்துக்கொண்டிருந்தான். விர்ஜினியாவின் தாக்குதலில் சற்று நிலைகுலைந்து விட்டிருந்தாலும் உறுதியாக இருப்பது போலத் தெரிந்தான். "என்னுடைய அப்பா அவருக்கே உரிய முறையில் நாகரீகம் மிக்கவர். உலகத்தின் ஒரு சிறிய பகுதிதான் அவருக்குத் தெரியும். அவரைப் போலில்லாத புதியவர்களோடு ஆழமாகப் பேசியிருப்பது கொஞ்சம்தான். கருப்பு மக்களை அவருக்குத் தெரியாது. ஜின்னியைப் புரிந்துகொள்ள அவர் நிறைய சிரமப்படவேண்டியிருக்கும்" என்றான். "முரண்களின் மொத்த உருவம் அவள். எல்லா விதமான விதிகளையும் உடைத்துவிடுவாள். ஆனால், எல்லோருமே சில சமயங்களில் அதைச் செய்வதுண்டு தானே," கண்கள் ஒளிவிட சிரித்தான்.

மேசைக்கருகில் நானும் உட்கார்ந்துகொண்டு ஒரு கிளாஸ் சிகப்புவைனை ஊற்றிக்கொண்டேன். விர்ஜினியா காரம் மூக்கைத் துளைத்த ஒரு ஸ்பானிஷ் உணவு வகையை சமைத்துக் கொண்டிருந்தாள். அதன் நெடியில் வழக்கத்துக்கு மீறிய நிம்மதி உணர்வு வந்தது. க்ளாஸை காலி செய்துவிட்டு சொன்னேன், "உன் அப்பாவுடைய வருத்தத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. சாதாரண வழக்கப்படி உங்களிருவரில் ஒருவர் செத்துப்போக வேண்டும், அல்லது

படிப்பகம்

www.padippakam.com



நோயில் விழுந்துவிட வேண்டும் அல்லது ஒரு அற்புதமான சாயங்கால வெயில் பொழுதில் காதல் செய்துகொண்டிருக்கும் போது திடீரென்று ஒரு மின்னல் இறக்கி செத்து விழவேண்டும்."

பால் சிரித்தான். க்ளாஸிலிருந்து வைனை லேசாக உறிஞ்சினான். "இது சினிமா இல்லை. நிஜ வாழ்க்கை. எப்படி யோ, எதையும் நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை."

விர்ஜினியா ஒரு சிகப்பு சாஸை கலக்கிக் கொண்டி ருந்தாள். அறையின் காற்றில் காரசாரமான நெடி கலந்து பரவியிருந்தது.

"ஹாலிவுட் தயாரிப்பாளர்கள் பழைய கதைகளை திரும்ப எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்." பாலைப் பார்த்து சொன்னேன்.

பால் திரும்பவும் சிரித்தான். "இது யதார்த்தமான வாழ்க்கை." இப்போது கொஞ்சம் போதை ஏறியிருந்தான். ஒரு மடக்கு குடித்துவிட்டு சொன்னான், "இந்த வீட்டில் யதார்த்தத்திற்கு நாங்கள் அதிகக் கவனம் கொடுக்கிறோம். பொது அபிப்பிராயத்தில் ஜின்னி ஒரு கருப்பி. ஆனால் உண்மையில் அவள் ஆப்ரிக்க, ஐரோப்பிய, இந்திய ரத்தங் களின் கலப்பு அங்கே வெளி உலகத்தில் அவள் முரட்டுத் தனமானவள். ஆனால், இங்கே வீட்டில் மென்மையானவள், இனிமையானவள். மற்றவர்கள் எதிரில் இறுக்கமாகத் தெரிவாள். ஆனால் என்னிடம் பூனைக்குட்டியாகிவிடுவாள். அவளுடைய முரண்களைப் புரிந்துகொள்ள எனக்கே அதிக காலம் பிடித்தது. என்னுடைய குடும்பத்தவர்களுக்கு இன்னும் அதிக காலம் பிடிக்கும். 'என்னுடைய அப்பாவுக்கு நெளிவு சுளிவுகளில்லாத விறைப்பான மூளை. ஆனால் நான் காத்திருக்கத் தயாராக இருக்கிறேன். என்னுடைய எதிர் காலத்திற்கு ஒரு முதலீடாக என் திருமணத்தைப் பார்க்கிறேன். என்னுடைய அப்பா கொஞ்சம் இளகிய பிற்பாடு அவளை வீட்டிற்கு கொண்டு போவேன். கவலைப்படவேண்டிய தேவை எதுவும் எனக்கில்லை."

அடுப்புக்குப் பக்கத்திலிருந்து விர்ஜினியா கத்தினாள், "போன் செய்யும்போது அந்தக் கிழ ராஸ்கல் என்னிடம் பேசவாவது செய்திருக்கலாம்."

முற்றுகையில் மாட்டிக் கொண்டுவிட்டவனைப் போலத் தெரிந்த பால் விரல்களால் வைன் க்ளாஸில் தாளம் போட்டுக்கொண்டு இருந்தான்.

அது என்னுடைய கதை இல்லை. என்றாலும் அதில் தலையிடாமல் இருக்கமுடியவில்லை. கதைக்கு ஒரு ஒழுங்கான போக்கு இல்லை என்பது போலத் தெரிந்தது. இன்னொரு க்ளாஸ் வைன் ஊற்றிக்கொண்டு மேசைக்கு எதிர்ப்பக்கம் உட்கார்ந்திருந்த பாலை உற்று நோக்கினேன். எங்களுக்கு மேலே தொங்கிக்கொண்டிருந்த பல்ப் எனது க்ளாஸ் வைனில் நடுங்கிக் கொண்டிருந்தது. நான் சொன்னேன்,"கிழக்கில் இருந்ததைவிட காலம் இங்கு வித்தியாசமாக இருக்கிறது. நாம் இங்கு 'மதிய வணக்கம்' சொல்லும்போது கிழக்கில் மக்கள் 'இரவு வணக்கம்' சொல்லிக் கொண்டு இருப்பார்கள். இது மதிப்புகளைப் பற்றிய விஷயம் அல்ல; தூரத்தைப் பற்றிய விஷயம். கிழக்கில் தொடங்கும் கருத்துக்கள் தகவல் சாதனங்களின் ஊடாக வேகமாக பரவிவிடுகின்றன. ஆனால் இங்கு நிலவும் வித்தியாசங்களால் அது கட்டுப்பட்டுவிடுகிறது. இருந்தும், தன்னைப் பற்றிய உணர்வை மறுபடியும் தொகுத்துக் கொள் வதற்கு தொடர்பு சாதனங்களின் உதவி மூளைக்குத் தேவைப் படுகிறது. தன்னிறைவு பெற்ற கற்பனை என்று எதுவும் இல்லை."

பால் என்னை எரிச்சலோடு பார்த்தான். "நீ சொல்வது எனக்குப் புரியவில்லை," என்றான்.

நான் தொடர்ந்தேன், "உன்னைச் சொந்தம் கொண்டாட யாரோ ஒருவர் இங்கு வரப்போகிறார். சீக்கிரமே நீயே உனக்கு அசடாகத் தெரிவாய். நேரம் இருக்கும்போதே உன்னுடைய மனைவியின் மறுக்கமுடியாத இருப்பை உன் தந்தையின் மூளைக்குள் நீ இறக்கிவிடவேண்டும். முடிவு எதுவாக இருந்தாலும் அதற்கு உன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்."

உண்மையிலேயே அவன் புரிந்துகொள்ளவில்லை. இன்னமும் அவன் தானே சுதந்திரமாக விஷயங்களைத் தீர்மானிப்பதாக நினைத்துக்கொண்டிருந்தான். சமையலறை மேசையில் விறைப்பாக உட்கார்ந்துகொண்டு வைனை உறிஞ்சிக் கொண்டிருந்தான். அடிபட்டது போல குழம்பி, கோபத்தின் விளிம்பில் இருந்தான். அவனுடைய கதையில் தலையிட்டு விட்டதற்காக வருந்தினேன். என்றாலும் அவனுக்கு உணர்த்தவேண்டிய விஷயம் இருந்தது என்று நினைத்தேன். சமையலறைக் கதவில் மாட்டியிருந்த ஒரு நைஜீரியச் சடங்கு முகமூடியைக் காட்டினேன். எங்களுக்கு மேலாக இருந்த விளக்கின் தூய வெள்ளை ஒளிபட்டு மெருகேறியிருந்த அந்த முகமூடி தகதகத்தது. "அது அழகாக இருக்கிறதா?" கேட்டேன்.

பால் நிமிர்ந்து அதை நோட்டமிட்டான். மனித முகத்தின் மிகை யதார்த்தம் போல இருந்தது அது. உறைய வைத்துவிட முடியாத மனித ஆளுமை மரத்துண்டில் செதுக்கி வைக்கப்பட்டு இருந்தது. கண்களின் இடத்தில் இரண்டு துளைகள் அகன்ற வாயிலிருந்து ஏதேதோ கோணங் களில் பற்கள் துருத்திக் கொண்டிருந்தன. நெற்றியின் மேலாக, வளைந்த மேடுகள் மலை ஆடுகளின் கொம்புகள் போல புடைத்து இருந்தன. பால் வைனை உறிஞ்சினான். "அது அழகுதான். இபாதானில் ஒரு வியாபாரியிடம் ஜின்னி அதை வாங்கினாள். அதற்குப் பின்னால் ஒரு சுவையானகதை இருக்கிறது."

"அது சரி, அது உனக்கு அழகாகப் படுகிறதா?"நான் கேட்டேன்.

"கதையா, முகமூடியா?" அடுப்பருகிலிருந்து வர்ஜி னியா கேட்டாள். ஒரு சுயஎள்ளல் தொனியில் சிரித்தாள்

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் அந்த ஒலியில் அவளுடைய அந்தரங்க நானை மறைத்துக்கொள்ள ஒரு திரைச்சீலை இழுத்து விடப்பட்டது போல இருந்தது.

"அதிலென்ன சந்தேகம். முகமூடியைத் தான் சொல்கிறேன்," பால் சாதாரணமாகச் சொன்னான். கண்களில் உணர்ச்சி பொங்கி வழிய என்னைப் பார்த்துச் சொன்னான், "அற்புதமாக இருக்கிறது."

இப்போது நான் பேசினேன், "நீ கலைப் பொருட்களை விற்கும் ஒரு வியாபாரி என்று வைத்துக்கொள்வோம். ரொம்பவும் வித்தியாசமான ரசனையுள்ளவன். ஆனால் உன்னுடைய கடை ஒரு சிறிய டவுனில் இருக்கிறது. உன்னுடைய ஒரு நல்ல வாடிக்கையாளருக்கு இதை அழகானது சுவாரசியமானது என்று நம்பவைத்து நீ விற்க வேண்டும். ஆனால் டவுனில் இருக்கிற மற்ற எல்லா வியாபாரிகளும் இதை அசிங்கமாயிருக்கிறது என்று சொல்கிறார்கள். உன்னுடைய வாடிக்கையாளரை எப்படி சமாதானம் செய்து நீ விற்பாய்?"

பாலுடைய கண்கள் விரிந்து ஒளி தெரித்தது எழுந்திருக்கப் பார்த்து முடியாமல் தள்ளாடி உட்கார்ந்தான். "ஞானப் பால் புட்டப்படுவதை நான் விரும்புவதில்லை," அவள் குரலில் வெறுப்புத் தெறித்தது. "என்னை உட்காரவைத்து புத்திமதி சொல்வது எனக்குப் பிடிக்கவில்லை!" அடக்கிக் கொண்ட கோபம் தெரிந்தது. திரும்பவும் எழுந்திருக்கப் பார்த்தான்.

"சாப்பாடு தயார்!" விர்ஜினியா கத்தினாள்.

"ஒரு உளவியல் யுத்தத்திற்குள் நீ மாட்டிக்கொண்டு விட்டாய்," நான் அவனை விடவில்லை.

பொறியில் அகப்பட்டுக் கொண்டுவிட்டவனைப் போலத் தெரிந்தான். மனைவியின் முகத்தைப் பார்க்கத் திரும்பினான். அவள் அவனுக்கு முதுகைக் காண்பித்துக் கொண்டு இருந்தாள். பாத்திரத்தைத் திறக்க அவசியமில்லாமல் நிறைய சத்தம் செய்துகொண்டிருந்தாள். ஒரு பழைய நீக்ரோப் பாடலை முனுனுத்துக் கொண்டிருந்தாள் என்று ஞாபகம். மீண்டும் திரும்பி என்னைப் பார்த்தாள். ஒரு பயங்கர அச்சம் அவன் முகத்தில் கப்பிக் கொண்டிருந்தது. "இன்னும் ஏன் இங்கு இருக்கிறாய்!" கத்தினான். "போய்விடு! இங்கிருந்து வெளியே போய்விடு!"

அவளைத் தாண்டி நின்றுகொண்டிருந்த விர்ஜினியாவைப் பார்த்தேன். பழுக்கச் சிவந்திருந்த ஒரு பாத்திரத்தை வெறுங்கைகளால் பிடித்துக்கொண்டிருந்தாள். அடிபட்ட சிறு பறவையைப் போல நடுங்கிக் கொண்டிருந்தாள். மோசமான ஒரு தோல்வியின் சாயல் அவள் முகத்திலிருந்து. கத்தினாள், "போய்விடு! தயவு செய்து வெளியே போய்விடு! நீ என்ன நினைத்துக்கொண்டாலும் பரவாயில்லை. அவன் என் கணவன்!"

அவர்களைத் தனியே விட்டுவிட்டுப் பிரிந்தேன். அது என்னுடைய கதை இல்லை. அவர்கள் நிதானத்துக்கு வரும் வரைக்கும் எதையும் பேசாமலிருப்பது நல்லது.

**இந்தப் பகுதியை கொஞ்சம் அலச வேண்டும். மிகவும் நுட்பமாக இருக்கிறது. இன்னும் தெளிவான விளக்கம் தேவைப் படுகிறது.**

அவனுடைய மூளைக்குள் நுழைய முயற்சித்து தோல்வியடைந்தேன்.

**விளக்கம் தேவை!**

நிறத்தால் அவனை மோதினேன். அவன் வெளுத்து விட்டான்.

**தெளிவில்லை. விளக்கம் தேவை! விளக்கம் தேவை!**

அவனுடைய "நான்" இருந்த பொதுவெளி ஒன்று இருந்தது. அராஜகம் என்று தவறாகக் கொள்ளப்படுகிற அமைதியிழந்த நிலை அதன் அடித்தளமாக இருந்தது. உண்மையில் உலகத்தோடு அவனது உறவு இப்படித்தான், இதன்வழியாகத் தான் கட்டமைக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கட்டமைவை மிகவும் நேரடியாக, முரட்டுத்தனமான ஒரு தாக்குதல் தொடுத்து அதனுடைய முன்அனுமானங்களை தகர்த்துவிட முயற்சி செய்தேன். என்னுடைய தலையீட்டைப் புரிந்துகொண்டு அவனது இருத்தலைத் தக்கவைத்துக் கொள்ள உணர்ச்சிவயமாக என்னை எதிர்கொண்டான். அவனுடைய உலகத்திலிருந்து என்னை வெளியே தள்ளி கதவை அடைத்துக்கொண்டான்.

**தெளிவில்லை. விளக்கம் தேவை.**

நான் நானாக இருக்கிறேன். நான் நாமாக இருக்கிறேன். நீ நீயாக இருக்கிறாய்.

**இந்த விஷயத்தில் தெளிவு அவசியம் தேவை. விளக்குக.**

கோடிக்கணக்கான சிறிய முன்அனுமானங்கள் வருடத்திற்கு வருடம் சேர்ந்து, பல்தேய்ப்பது போன்ற சாதாரணமான வழக்கமாகி விடுகின்றன. வளர்த்துக் கொள்ள வேண்டிய கடமை எதுவும் இல்லாத ஒரு ஆளுமையின் பகுதியை அந்த முழுமை மறைத்து, தடுத்து வந்தது. அவன் பிறப்பதற்கு வெகு காலத்திற்கு முன்னமேயே மற்றவர்களின் செயல்கள், தகுதி, அதிகாரம், பிம்பங்கள் வழியாக வெளியே, உலகத்தில் தேவையான எல்லா வாய்ப்புகளும் சூழல்களும் அவனுக்காகக் காத்துக் கிடந்தன. அந்த வரையறுக்கப்படாத "நானில்" (I) இந்த மொத்த உலகத்தின் வரைவெல்லைகளை, வரைவெல்லைகளை மட்டுமே தொட்ட ஒரு சுயம் (Ego) இருந்தது. அவனது கைக்கு மீறிய நனவிலி நிகழ்வு அது. அவனுடைய தன்னிலையை இது வரையறுத்தது. ஒழுங்கு பற்றிய அவனது உணர்வை வரையறுத்த முறைப்படுத்தப் பட்ட கட்டமைப்பு அது. அவனுடைய தனிப்பட்ட அனுபவங்கள் இந்த ஒழுங்கை சிதைத்துவிடாமலிருக்க பார்த்துக் கொள்ளும்படி நனவிலியில் இயக்கிவிடப்பட்டது அது. அழைப்பில்லாமலேயே நான் இந்த வெளிக்குள் நுழைய

படிப்பகம்

www.padippakam.com



முயற்சித்து நெட்டித் தள்ளப்பட்டேன். அது அவன் உரிமை. அந்தரங்கமான அறைக்குள் அனுமதியின்று நுழைய ஒரு விருந்தாளிக்கு இடமில்லை. முன்பின் அறிமுகமில்லாத புதிய சத்தத்தைக் கேட்ட ஒரு குருடன் அடுத்த அடி எடுத்து வைப்பது இல்லை.

**இந்த இடத்தில் தெளிவு அவசியம் தேவைப்படுகிறது. தயவு செய்து விளக்குங்கள்.**

ஒழுக்கம், அறம் பற்றிய ஒரு தீவிரத் தேடலை மீண்டும் தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை அவன் உணர்ந்து கொண்டுவிட்டான் என்று நினைக்கிறேன்.

கிறிஸ்துமஸ் கழித்து விர்ஜினியா தொலைபேசியில் என்னைப் பிடித்தாள்; "நீ என்ன நினைத்துக் கொண்டிருக் கிறாயா தெரியாது. அவன் வருந்திக் கொண்டிருக்கிறான். அவனுக்கு நல்ல மனது இருக்கிறது. ஆனால் நீ தான் தூண்டி விட்டாய் நிறைய பயணித்ததில் நான் சேகரித்துகொண்ட அனுபவம் ஒன்று மனிதர்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படியே அவர்களை எடுத்துக்கொண்டு அங்கிருந்து தொடங்கவேண்டும் என்பதுதான். ஆப்ரிக்கர்களும் கொடூரமானவர்களாக இருக்கமுடியும் என்பது உனக்குத் தெரியும். அராபியர்களை மட்டும் நான் நம்பத் தயாராக இருந்ததில்லை. என்றாலும், அவ்வளவு எளிதில் கோபத்திற்கு ஆட்படாத **கருப்புக் குரங்குகள்** நம்மில் நிறையபேர் இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கந்தல் கூத்து இந்தியர்கள் பொறுமை, நம்பிக்கையோடு காத்திருப்பது பற்றி எனக்குக் கொஞ்சம் கற்றுக்கொடுத்துத் தொலைத்துவிட்டார்கள். நம்பிக்கை வைக்க அவர்களிடம் எதுவும் இல்லையென்றா லும்கூட பொறுமையோடு காலத்தைக் கடத்துகிறார்கள். கல்கத்தாவில் முடமான பிச்சைக்காரர்கள் எங்குபார்த்தாலும் திரிந்து கொண்டிருப்பார்கள்.னால் மக்கள் அவர்களை சட்டைசெய்யாமல் போய்க்கொண்டு இருப்பார்கள். இப்போ ஒரு மேற்கத்தியன் அதைக் கொடூரம் என்று சால்லாம். ஆனால் இந்தச் சனியன் பிடித்த இந்தியர்களுடைய மூளையை என்னவென்று சொல்வது. அவ்வளவு சிக்கலானது. அதே பிச்சைக்காரர்களில் ஒருவனைப் பார்த்து ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக அவர்களை ஆண்ட அழகான அரசன் ஒருவன் எக்கச்சக்கமான காரம் தின்று வலிப்பு வந்து செத்துப் போனான் என்றும் அவன்தான் இப்போது மறுபிறவி எடுத்து இப்படிப் பிறந்திருக்கிறான் என்றும் அமைதியாக சொல்லிவிடுவார்கள்! அதனால் இப்போது அவனுக்கு எதுவும் செய்யவேண்டியதில்லை. அவன் செய்த பாவத்தை அவன் அனுபவிக்கிறான். **கொடுமையே!** ஆனால் பொறுமையாக இருப்பது என்பது ஒரு கிறிஸ்துமஸ் காலையைப் போல. கிறிஸ்துமஸ் மரத்தின் கீழ் என்ன வைக்கப்பட்டிருக்கிறதோ அதை திருப்தியோடு ஏற்றுக்கொண்டு சான்டா க்ளாஸ் என்று ஒருவர் இருக்கிறார் என்று நம்பிக் கொண்டிருக்கவேண்டும். நீங்கள் இரண்டு பேருமே, நீயும் என்னுடைய அந்தக் குரங்கனும் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் நான் **எதையும்** விடப்போவதில்லை! ஒரு **மயிரையும்** விட்டுக்கொடுக்கப் போவதில்லை! அதனால் நீ ஏன் உன் கந்தல் கூத்தை இழுத்துக்கொண்டு வருடப் பிறப்பு சிறப்பு வழிபாட்டுக்கு எங்களோடு வரக்கூடாது?"

நான் ஏற்கனவே சொல்லியிருந்தேன். விர்ஜினியா ஒரு மந்திரப் பெண்.

பிரம்மாண்டமான அந்த கதீட்ரல், இருண்டிருந்தது காற்றில் ஆடிய மெழுகுவர்த்திகளின் மஞ்சள் ஒளி பட்டு புனித தெய்வ உருவங்களின் நிழல்கள் பெரிய வளைந்த கறைபடிந்த ஜன்னல்களின் மீது விழுந்து ஆடின. நீண்ட வெள்ளை அங்கிகளை அணிந்த திருச்சபை பாதிரிமார்கள் பீடத்தின் மீது நின்றுகொண்டு திருமுறை ஏட்டிலிருந்து புனித வாசகங்களைப் படித்துக் கொண்டிருந்தார்கள். பழுப்பேறி யிருந்த தூபக்கலங்களில் சாம்பிராணி எரித்துக்கொண்டு கருத்த அங்கிகளில் சிறுவர்கள் பீடத்தின் மேலும் கீழு சத்தம் எழாமல் பவ்யமாக நடந்துகொண்டிருந்தார்கள் எங்களைச் சுற்றிலும் சிறியவர், பெரியவர், நடுத்தர வயதினா நாகரீகமாக உடையணிந்த மேட்டுக்குடியினர், வெளுத்து போன ஆடைகளை அணிந்திருந்தவர்கள், கைவிட பட்டவர்கள், வாழ்வில் இன்னமும் நம்பிக்கை வைத்திருந் வர்கள் என்று பலதரப்பட்டவர்களும் உட்கார்ந்திருந்தார்கள் மெலிதான தாடிகளோடு தலைகுனிந்தபடி இளைஞர்க அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு அருகில் எல்லையில் நீண்டகாலம் வாழ்ந்த முன்னோடிப் பெண்களை போல அலைக்கழிப்பப்பட்ட தோற்றத்தில் வெளுத்த இறுகி முகங்களோடு இளம் பெண்கள். கலைந்த அடிப்பாகங் ளோடு நீண்ட ஃப்ராக்குகளுக்கு மேலாக சிறிய கண்ணாடிக பதித்த ஜாக்கெட்டுகளை இந்தப் பெண்கள் அணிந்திரு தார்கள். பலர் தோல் பூட்சுகளில் வந்திருந்தார்கள் ஆன களும் பெண்ளும் தனித்தனியாகப் பிரிந்து அங்கும் இங் மாக சிதறி அந்தக் கூட்டத்தில் மெல்லக் கறைந்துவிடுவ போல தலைகளைக் கவிழ்த்து கைகளைக் கோர்த் உட்கார்ந்திருந்தார்கள். விர்ஜினியா தனது வழக்கமா அசட்டுத் தொப்பியை அணிந்திருந்தாள். அவளுடை சுரண்ட மயிரில் அது அழுந்தி உட்கார்ந்திருந்தது. அவளுக் வலப்பக்கம் நானும் இடப்பக்கம் பாலும் நெருக்கமா உட்கார்ந்திருந்தோம். அந்த இடம் முழுக்க ஒரு தெய்வீக தன்மை சுடர்விட்டுக் கொண்டு இருந்தது.

எங்களுக்கு மேலே கருப்பு, வெள்ளை அங்கிகளி இரண்டு சேர்ந்திசைக் குழுக்கள் ஒரு இறைப்பாடலை பாடி கொண்டிருந்தார்கள். வரத் தவறிய கடவுளை மீண்டு பூமிக்கு வரச்சொல்லி வருந்தி அழைத்துக் கொண்டிருந் தேவதைகளைப் போல அவர்களுடைய குரல் தொனித்த சிரத்தை மிகுந்த முயற்சி. ஆனால் எங்களைச் சுற்றிலுமிருந் எல்லோருமே உணர்ச்சிகள் வடிந்து சோர்ந்திருந்தார்க இறைப்பாடலை சிரத்தை எடுத்து கவனிக்க முயற்சி செய்த போல இருந்தது. நாங்கள் கண்களை மூடிக்கொண்டு எங்க தனிப்பட்ட பிரார்த்தனைகளை சொல்லிக் கொண்டிந்தோ நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்தது. சேர்ந்திசைக் குழுவி ஏறி இறங்கிய பாடலில் பாக்-கின் நம்பிக்கை தொனித்த

படிப்பகம்

www.padippakam.com



அதற்குப் பதில் சொல்வது போல, அங்கிருந்தவர்களின் அமைதியில் ஒரு ஆழமான வெறுப்பை உணர முடிந்தது. அப்போது சற்றும் எதிர்பாராமல் எங்களுக்குப் பின்னால் இருந்து ஒரு குரல் அந்த மௌனத்தின் மீது விழுந்தது. "இளைஞனே", அது அரற்றியது, "சர்ச்சுக்குள் தொப்பியைக் கழற்றும் நாகரீகம் இல்லையென்றால் வெளியே போய்விடு!" இரண்டு வரிசைகள் நெடுகிலும் இருந்தும் முறுகி இறுகியிருந்த கழுத்துகள் திரும்பும் சத்தம் கேட்டது. "இளைஞனே", அந்தக் குரல் விர்ஜினியாவை திரும்பவும் அதட்டியது. "நான் சொல்வது காதில் விழவில்லையா? ஆங்கிலம் புரியாத அளவுக்கு நீ முட்டாளா?" நான் கண்களைத் திறந்து திரும்பினேன். எனக்கருகில் விர்ஜினியா கண்களை இன்னும் இறுக மூடியிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் பால் தலையை உயர்த்தி நெருப்பு கக்கிய கண்களை அந்த வயதான கனவான் முகத்தில் வீசியதைப் பார்த்தேன். அவனுடைய குரலில் அப்போதுதான் அவன் உணர்வுப்பூர்வமாக அணையிட முயற்சித்துக் கொண்டிருந்த அந்தப் பழக்கமான அராஜகம் தொனித்தது. "கிழக் குசுவே", மேலிருந்து எங்கள் மீது கவிந்து கொண்டிருந்த அந்த இனிமையான இசையை மறித்து அவனது குரல் கேட்டது. "இவள் என் மனைவி. அவள் தொப்பி அணிந்திருப்பது உனக்குப் பிடிக்கவில்லையெனில் அப்புறம் அது பிரச்சனைதான்!"

தங்கள் குரலின் வலிமையால் அந்தச் சம்பளத்தை அழித்துவிட முயற்சிப்பது போல சேர்ந்திசைக் குழு குரலை உயர்த்தியது. எங்களைச் சுற்றியிருந்தவர்கள் லேசாக இருமினார்கள். பால் தன்னுடைய கைகளை விர்ஜினியாவின் தோள்களில் ஆதரவாக அணைத்தான். கண்களை மூடிக் கொண்டு அவள் காதுகளில் ஏதோ கிசுகிசுத்தான். நான் கண்களை மூடிக்கொண்டு இசையில் கறைந்துவிட முயன்றேன். ஆனால் அந்தச் சம்பவம் எனக்கு நம்பிக்கையும் பெருமையும் ஊட்டியது. இவன் **ஆண்மகன்**. நான் நினைத்துக்கொண்டேன்.

ஜனவரி ஆரம்பத்திலிருந்து பால் தன்னுடைய வரலாற்றின் மறைக்கப்பட்ட பரிமாணங்களை அலச ஆரம்பித்திருந்தான். அவனுடைய மூளைக்குள் இருந்த ஏதோ ஒன்று திறந்து கொண்டிருந்தது. அவன் விவரங்களைத் தேடி பசியோடு அலைந்தான். மாற்றுப் பார்வைகளை அறிந்துகொள்வதற்காக வெற்று வார்த்தைகளை பிரச்சாரங்களைக் கழித்துவிட்டு உண்மை விவரங்களைத் தேடி அலசி, ஏராளமான புத்தகங்களைப் படித்தான். நிறைய அடிக்கோடுகள் இட்டான். ஓரங்களில் கேள்விகளைக் கிறுக்கினான். வெளிப்படையாக கேள்விகள் கேட்டான். படித்ததில் ஏராளமானவற்றை நிராகரித்தான். ஆனால், அவனுடைய மூளையின் அந்தத் தனிமைப் பிரதேசத்தில் அவனைத் தாக்கிய அந்த ஒன்று அவனை அமைதியாக்கிவிட்டிருந்தது. ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். சற்று வருத்தமாகவும் கிடந்தான். நான் அவனைக் கூர்ந்து கவனித்து வந்தேன். ஆனால், எனது எல்லைக்குள் நின்று கொண்டேன். அவனுடைய துணிச்சலான அலசிப் பார்க்கும் முயற்சியை வியந்து எனக்குள் பாராட்டிக் கொண்டிருந்தேன்.

ஆனால், பிப்ரவரியில் ஒரு நாள் விர்ஜினியாவோடு ஒரு சூப்பர் மார்க்கெட்டின் நிறுத்துமிடத்தில் நின்று கொண்டிருந்தபோது ஒரு கார் நிறைய பிள்ளைகள் அவனை nigger என்று சத்தம் போட்டார்கள். அவர்கள் பாடிய பாடலின் தாளத்திற்கேற்ப அவர்களுடைய நாயும் குரைத்தது. "அந்தச் சின்னப் பொறுக்கிகளைப் பார்த்து நான் சிரிக்க மட்டுமே செய்தேன்," விர்ஜினியா சொன்னாள்.

ஆனால், பால் ஏன் அவ்வளவு நிலைகுலைந்து போனான் என்பதைத்தான் தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாள்.

பிப்ரவரி கடைசியில் சன்செட் மாவட்டத்தில் மழையில் விர்ஜினியாவோடு சேர்ந்து நடந்து போய்க் கொண்டிருந்தபோது இரண்டு சிறிய குழந்தைகள் அவனை nigger அழுவதை என்று கூப்பிட்டனர்.

"Nigger என்றால் என்ன அர்த்தம்", தொலைபேசியில் என்னிடம் கேட்டான். "அதாவது அது உனக்கு என்ன அர்த்தம் தருகிறது?"

"ப்ரோட்டியஸின் வழித்தோன்றல், அதிஉயர்ந்த சுதந்திரத்தின் வெளிப்பாடு" என்றேன்.

அவன் ஃபோனை வைத்துவிட்டான்.

நான் அவனைத் தொடர்பு கொள்ளவில்லை. அர்த்தங்களை அவனே கண்டுபிடிக்கவேண்டும் என்பதில் எனக்குத் தெளிவு பிறந்துவிட்டிருந்தது.

மார்ச் ஆரம்பத்தில் விர்ஜினியா தான் கர்ப்பமுற்றிருப்பதைக் கண்டுகொண்டாள்.

அதே மாதத்தில், பால் தன்னுடைய தந்தை, தங்களுடைய விவாதங்கள் ஒன்றின்போது அவருடைய அலுவலகத்தை துடைத்து எடுத்துக்கொண்டு போன கருப்பு வாயிற்காவலனின் முழுப்பெயரையும் சொல்லிவிட்டார் என்பதை அறிவித்தான். ஆனால் அந்த வயதானவருக்கு குழந்தையைப் பற்றிய செய்திதான் பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

கிறித்துமஸ்க்குப் பிந்தைய மாதங்களில் அவர்களை மிகச் சில நாட்களே சந்தித்தேன். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருந்துவிட்டு அப்போதுதான் பரோலில் வந்திருந்த ஒரு மனிதனின் மீது எனது ஆர்வம் திரும்பியிருந்தது. சொல்வதற்கு நிறைய சுவையான கதைகளை அவன் வைத்திருந்தான். அவர்களுடைய வீட்டிற்குப் பாதிதூரத்திலேயே இருந்த அவனுடைய அறைக்குப்போக அரம்பித்தேன்.

செஸ் விளையாடிக்கொண்டும் அவன் பேச்சை கவனித்துக்கொண்டும் இருந்தேன். சுதந்திரத்தின் ஆடம்பரமான சுகங்களுக்கு வாழ்த்து சொல்லி அற்புதமான பாடல்கள் பாடினான். அவன் சிறைக்குப் போக நேர்ந்த சம்பவங்களின் காவியத் தன்மை வாய்ந்த நிகழ்வுகளை எனக்காக விவரித்தான். லட்சியங்கள், காமவேட்டைகள், நிறைய

படிப்பகம்

www.padippakam.com



ஆசைகள் என்று துள்ளித் திரிந்தான். ஆனால் எல்லாம் இருந்தும் கண்ணுக்குப் புலப்படாத ஒரு கடிகாரத்தின் துடிப்புக்கேற்றபடி அறைக்குள் அவனது செயல்கள் அமைந்திருந்தது போல எனக்குப் பட்டது. கதவை நோக்கி நடந்து போனவன் திடீரென்று குழம்பிப் போனதைப் போல அப்படியே நின்றுவிடுவான். கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த தன் நாற்காலிக்குத் திரும்பிவிடுவான். அவனுடைய ஜன்னல், சூரியன் கடலுக்குள் இறங்கிய அந்தக் காட்சிக்கு நேரெதிராக இருந்தது; ஆனால் ஜன்னலில் திரைச்சீலை எப்போதும் தொங்கிக்கொண்டு இருந்தது. ஒருமுறை மதிய உணவுக்கு வரச்சொல்லி என்னைக் கட்டாயப்படுத்திவிட்டு, ஒரேயொரு ஸ்பூன் பீச் பழச்சாறை மட்டும் பகிர்ந்து கொள்வோம் என்று திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தான். அவனுடைய நலம் விரும்பிகள் தந்த ஒரு பார்ட்டிக்கு என்னையும் அழைத்தான். அங்கு அறையின் ஒரு மூலையில் நெடுநேரம் மௌனமாக உட்கார்ந்திருந்துவிட்டு முற்றிலும் அறிமுகமில்லாத ஒருவன் அவனுடைய நினைவலைகளில் ஆர்வம் காட்டிய பிறகே முகம் மலர சிரித்தான். அதே கதைகளை வரிக்கு வரி மாறாமல் அப்படியே சொன்னான். மாலை வெகு நேரம் கழிந்த பிறகு விருந்து வைத்தவளிடம் பேசினேன். இந்தப் பெண்மணி சிறைகளை உணர்ச்சிமயமான ஒரு வெறுப்போடு நிராகரித்துவிட்டு என் கண்களை நேராகப் பார்த்தாள். சீரான இடைவெளியில் காலியான தன்னுடைய மது க்ளாஸை எந்தத் தயக்கமும் இல்லாமல் தனது வலப் பக்கமாக ஒரு வளைவாகத் திரும்பி வைத்தாள். அவள் திரும்பிப் பார்க்கவேண்டியஅவசியமே இல்லாதபடிக்கு, அவளுடைய வளைந்த அசைவு முடிந்த இடத்தில், சரியாக அந்த இடத்தில் ஒரு வேலைக்காரன் தட்டைத் தயாராக வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தான். அவளுடைய கருநீலக் கண்ணாடியில் என் முகம் பிரதிபலித்தது. நான் சிரிக்க ஆரம்பித்துவிட்டேன்.

**மேலே உள்ள பகுதி சுத்தமாக தெளிவில்லாமல் இருக்கிறது. அது வெட்டப்படவேண்டும்.**

நான் அதை அப்படியே வைத்துவிடுவேன். அந்தக் காலத்தின் சூழலைத் தொட்டுக் காட்டுவதற்கு முயற்சி செய்திருக்கிறேன்.

**ஆனால் இந்த இடத்தில் கதை திசை மாறிப் போகிறது. கதைப்பொருள், மனநிலை, கதையின் மையத்திலிருந்து இங்கு ஒரு விலகல் தெரிகிறது. வெட்டிவிடுவது உகந்தது.**

அந்தக் காலத்தில் உணர்ச்சிகள் தொய்ந்து போயிருந்தன. எந்த மையநோக்கும் இருக்கவில்லை.

**விஷயங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு கதைசொல்லிக்கு இருக்கிறது.**

இந்த விஷயத்தில் கதைசொல்லி தோல்வியடைந்து விடுகிறான். அங்கு தெளிவு இருக்கவில்லை. குவிமையம் இருக்கவில்லை. கட்டுப்பாடு இருக்கவில்லை. ஒரு ராட்சச கடிகாரத்தின் முட்கள் தாறுமாறாக சுழன்று கொண்டிருந்தது போல இருந்தது. கிழக்குக்கும் மேற்குக்கும் இனியும் எந்த வித்தியாசமும் இருக்கவில்லை.

இது யாரையும் விட்டு வைக்கவில்லை. எல்லோருமே சோர்ந்து விட்டது போலத் தெரிந்தது. குண்டு வெடித்துப் பாழாகிப் போன இடம் போல எனக்குள் உணர்ந்தேன். இயேசுவின் அங்கியையும், மாத்திரைகளையும், பாட்டில்களையும் இறுகப் பற்றிக்கொண்டிருந்த மனிதர்களை எங்கு போனாலும் பார்த்தேன். சோர்வில் எரிந்துவிழும் மனப்பான்மை என்னையும் தொற்றிக் கொண்டது. எனக்கு உள்ளேயும் வெளியே விரிந்து கிடந்த உலகத்திலும் வெறுமனே பெருமூச்சுகளும், தேம்பல்களும், புலம்பல்களுமே கேட்டேன். இந்தக் காலத்தில் எல்லோருக்கும் தெரிய எங்கும் ஒரு நிர்வாணம் கவிந்திருந்தது. ஏறெடுத்துப் பார்க்க யாருக்கும் தைரியம் இருக்கவில்லை. நான் பார்த்தேன். எல்லாவற்றையும் பார்த்தேன். விர்ஜினியா தன் கதைகளின் மீது கட்டுப்பாடு இழந்து நின்றதைப் பார்த்தேன். அவளுடைய வயிறு பெரிதாக பெரிதாக அவளுடைய நினைவலைகள் ஒழுங்கை இழந்தன. அவற்றின் செறிவு மறைந்துவிடவில்லை என்றாலும்கூட அவை கதைகள் என்ற தன்மையை இழந்து அசைபோடுதல் என்பதாகி விட்டிருந்தன. தெளிவும் ஒழுங்கும் அற்று விழுந்து விட்டிருந்தன. இன்னமும் அவள் பெயர்களையும், பேச்சு வாடைகளையும், தனிப்பட்ட இந்தியர்கள், ஆசியர்கள், இஸ்ரேலியர்களின் விளையாட்டுக்களையும் நினைவில் வைத்திருந்தாள். ஆனால் அவை மெல்ல ஞாபகத் துணுக்குகளாக சிதறிக் கொண்டிருந்தன. தனியொருத்தியின் சாகசக் காவியத் தன்மையை இழந்துவிட்டிருந்தன. அவளுடைய கதைகளில் அவளே காணாமல் போயிருந்தாள். பழையவற்றுக்கான ஏக்கம், கவர்ச்சி சாகசங்கள் என்கிற துருவ எல்லைகளுக்குள் அபாயகரமாக அவை உலவ ஆரம்பித்திருந்தன. சில நேரங்களில் அவள் பளிச்சிடுகிற நினைவுகளைச் சொல்கிற திறம் வாய்ந்தவளாக, அப்புறம் திடீரென்று உறைந்து, வாழ்ந்து, மறைந்து போகிறவளாக ஒரு திறமையான நிகழ்த்துபவளாக ஆகிப்போனாள். சர்வதேச அளவில் விரிந்த அனுபவங்கள் நிறைந்த சாகசக் காவியம் அவளுக்குள் இருந்தது. ஆனால் அதற்கு நிரந்தரமான வடிவம் கொடுக்கும் அவசியமான உணர்ச்சி வேகம் மெல்ல மெல்ல வடிந்து கொண்டிருந்தது. அவளுடைய ஒருபகுதி, தனித்து இருக்க விரும்பிய வருங்காலத் தாயாகவும் மற்றது பிரம்மாண்டமான கதைகளைச் சொல்கிற கிராமப்புற கதைசொல்லியாகவும் பிளவுப்பட்டுக்கொண்டே போனது.

அந்தக் காலமே அப்படி ஆகிவிட்டிருந்தது என்று ஏற்கனவே சொன்னேன்.

பாலுக்குள்ளும் ஏதோ நிகழ்ந்து கொண்டிருந்தது. அவனுடைய மூளைக்குள், அவன் தன் வரையறுக்கப்படாத அந்த "நானை" கண்டுபிடித்து வெளியேற்ற, அதன் அமைவைக் குலைக்க கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தான். ஆனால், எதிரியைக் கண்டுபிடிக்க அவனால் முடியாது போலிருந்தது. ஒரு தற்காப்பு

படிப்பகம்

www.padippakam.com



நோக்கில்கூட அவனுள் எழுந்திருந்த புதிய சிந்தனை அவசியமான எந்த யுக்தியையும் கற்றுத் தரவில்லை. இன்னமும் அவன் புத்தகங்கள், பேச்சுகள், வாழ்வின் யதார்த்தங்களோடு நெருங்கியிருந்தவர்களோடு பழகுதல், இவற்றின் வழியாக அறிந்துகொள்ள வாய்ப்புள்ள சில இரகசியங்கள் இருப்பதாக நம்பிக்கொண்டு இருந்தான். ஏறக்குறைய எல்லா வெள்ளை ஆண்களோடும் தொடர்புகளை வெட்டிக்கொண்டான். ஒரு நில அளவிடும் குழுவில் சேர்ந்து எப்போதும் வெளியிடங்களிலேயே இருந்தான். அவனுடைய தசைகள் இறுகி முகம் பழுப்பேற ஆரம்பித்தது. நீண்ட கருப்பு தாடி வளர்த்தான். டைபிள், கீர்க்கார்ட், ஒழுக்கவியல் குறித்த கடினமான அருவமான ஆய்வுரைகளைத் தேடிப் பிடித்து படித்தான். நிறைய அடிக்கோடுகள் இட்டான். துன்பத்தை வலியத் தாங்கிக் கொண்டிருந்த கிறிஸ்துவின் தோற்றத்தோடு, அவனுடைய தாடியும், சிமிட்டாத ஆழ்ந்த கண்களும் இயைந்து கலந்து போயின. இந்த சமயத்தில் முச்சந்தி பிலுக்கனுடைய உடைகளை பரிசோதித்து விளையாடிக் கொண்டிருந்தான். உரையாடல்களின் போது அடிக்கடி ஏழைகள் புறக்கணிக்கப்படுவது குறித்து வருத்தத்தோடு பேசினான். ஜெர்மையாவின் புலம்பல் குறிப்புகளிலிருந்தும், இஸய்யாவின் புத்தகங்களிலிருந்தும் நீண்ட பகுதிகளை மனப்பாடமாக மேற்கோள் சொன்னான். தன் தந்தையை அற மதிப்புகள் இழந்த கோழை என்று இகழ்ந்தான். தன்னைத்தானே சரி செய்துகொண்டு, போராடிக்கொண்டு ஆனால் ஆழங்காண முடியாத தனிமையில் இருந்தான். என்றாலும் அவனுடைய முகத்தில் அந்த ஒளிவட்டம் இன்னும் இருந்தது. அவ்னுடைய பெரிய பழுப்பு விழிகள் இன்னும் அதே கேள்வியை, இப்போது கொஞ்சம் தாங்கமுடியாத வேட்கையோடு கேட்டன, "நான் யார்?"

பல நேரங்களில் அவன் தன் தனிமையை மறைத்துக்கொள்ள பிரயத்தனப்படுவதைப் பார்த்து, "புராணப் பரிமாணங்கள் நிறைந்த அந்த அருவமான வெள்ளையனாகவே நீ மாறிவிட்டால், மீண்டும் அந்த முழுமை உனக்குக் கிடைத்துவிடும்," என்று சொல்ல விரும்பினேன். ஆனால் கதை இன்னும் முடிந்திருக்க வில்லை. அவசியமில்லாமல் தலையிட்டு அதன் போக்கைக் குலைத்துவிட நான் விரும்பவில்லை. பதுங்கி, மாறாமல் இருந்த அந்த முழுமை வடிவத்திலிருந்து அவன் மீட்டெடுக்க முயற்சித்துக் கொண்டிருந்த உள்ளடக்கங் களைப் போலவே அவனுடைய குழப்பங்களும் அவனுக்கே உரியவை. ஆனால் அவனுக்கும் நியாயம் செய்தாக வேண்டும். இந்தக் காலம் முழுதும் அவன் ஒருமுறைகூட "எனக்குப் புரியவில்லை" என்று விர்ஜினியா விடம் சொல்லிக் கேட்டதில்லை. அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் காத்திருக்கிற எளிமையான உலகத்தைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, அவனுடைய மௌனத்தின் விருப்பு வெறுப்பற்ற தன்மையைப் பார்த்தால் யாரும் அவனை நேசிக்காமல் இருக்க முடியாது.

அப்புறம் ஜூன் ஆரம்பத்தில் இரண்டு பக்கங்களிலி ருந்தும் பெற்றோர்கள் நல்ல சமிக்ஞைகள் காட்ட ஆரம்பித்தார்கள். விர்ஜினியா வீட்டிலிருந்து அடிக்கடி வந்துபோனார்கள். குழந்தைக்குத் தங்கள் குடும்பப் பெயர்களை முன்மொழிந்தார்கள். பாலுடைய தாயார் தொட்டிலுக்கு பணம் அனுப்பிவைத்தாள். ஆனால் குழந்தையின் நரம்புகளில் ஐரோப்பிய ரத்தம்தான் ஓடுகிறது என்பது உறுதியாகத் தெரியவேண்டும் என்பதை மிக இரகசியமாக சூட்சமமாக சொல்லி வைத்தாள். ஆனால், தந்தை இன்னும் வளைந்துகொடுத்த பாடில்லை. அவருடைய வாதங்கள் இன்னும் சிக்கலாகியிருந்தன. குழந்தையை அங்கீகரித்தாரேயானால் விர்ஜினியாவின் பெற்றோர்களை அங்கீகரித்தாக வேண்டும். அவர்களுடைய வீட்டிற்கு ஒருமுறையாவது போய்வர வேண்டும். அப்படியாகிவிட்டால் அவர்கள் அவரை வந்து பார்க்கவேண்டும். இந்தப் புதிய நோக்கில் ரொம்பவும் வெளிப்படையாகவே வர்க்க வேறுபாடு குறுக்கே வந்தது. அவருடைய மூளை நுட்பமில்லாதிருந்தது. ஆனால் அவருடைய ஒழுங்கு பற்றிய உணர்வை ஒருவர் வியந்துதான் ஆகவேண்டும். அவருடைய சொந்த முயற்சியில் தன்னுடைய கம்பெனியில் ஒரு கருப்பனை வேலைக்குச் சேர்த்திருப்பதாக மகனிடம் சொன்னார். பால் அது போதாது என்றான். தாயார் இதுபற்றி அவர் யோசிப்பார் என்றும் அவர் மறுபரிசீலனை செய்தபிறகு விர்ஜினியாவும் குழந்தையும் வீட்டில் வரவேற்கப்படுவார்கள் என்றும் கூறினாள். ஆனால், விர்ஜினியா பாலிடம் இதுவும் போதாது என்று கூறினாள்.

அவளுடைய நோக்கிலிருந்து ஒருவரும் விஷயத்தைப் பார்க்கவில்லை.

"கௌரவ வெள்ளைப் பட்டம் என் குழந்தைக்குத் தேவையில்லை", என்றாள்.

கோடை மத்தியில் ஜப்பானிய தேநீர் அரங்கில் பார்க்கில் பேசிக்கொண்டிருந்தபோது இப்படிச் சொன்னாள். பார்வையாளர் மாடத்தின் கீழ் எங்களைச் சுற்றிலும் சுற்றுலாப் பயணிகள் தின்பண்டங்களை மென்றுகொண்டும், சூடான தேநீர் உறிஞ்சிக்கொண்டும் அந்த அதிகாலைப் பனியில் நெருங்கி உட்கார்ந்து குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். இப்போது விர்ஜினியா தனது பேண்ட்டுக்கு மேலாக குழந்தை மேலங்கியை அணிந்திருந்தாள். ஆனால், அந்த அசட்டுத் தொப்பி இன்னும் விடாமல் அவள் சுருண்ட கூந்தல் மீது சவாரி செய்து கொண்டிருந்தது. வளர்ந்து கொண்டிருந்த கருவினால் அவளுடைய வயிறு பெருத்துக் கொண்டி ருந்தது. பழுப்புக் கன்னங்களில் சதைப்பிடிப்பு ஏறியிருந்தது. கண்கள் மட்டும் ரொம்பவும் சோர்ந்திருந்தன. "நான் கருப்பினத்தவள்தான். அதை எப்போதோ ஜீரணித்துக் கொண்டேன். ஆனால், அதையும் மீறி எனக்கென்று ஒரு வெளியை உருவாக்கிக்கொண்டேன் இல்லையா?" ஆட்காட்டி விரலை பக்கவாட்டில், நெற்றியின் ஓரத்தில் தட்டினாள் "மேலே, இங்கே!" கசப்பாக சிரித்து தேநீரை உறிஞ்சினாள். "காலமும் சூழலும் நிர்ப்பந்திக்கும்போது யார்வேண்டுமானாலும் வெள்ளையனாக மேலெழுந்து

படிப்பகம்

www.padippakam.com



விட முடியும். கருப்பர்கள் அதைப் பல நூற்றாண்டுகளாக செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அது ஒன்றும் புதிதில்லை. ஆனால் இந்த உலகு அளவுக்கு விரிந்த ஒரு தன்னிலையிலிருந்து கருப்பு, வெள்ளை மற்ற எல்லா வற்றையும் பார்க்கும் வாய்ப்பு, சூழல் மட்டும் ஒரு கருப் பனுக்கு கிடைத்தால் எப்படி இருக்கும்?" சிரித்தாள். "அந்தக் கருப்பன் அற்புதமானவனாக இருப்பான் இல்லையா?"

தேநீரை உறிஞ்சிக்கொண்டே பூக்களிலிருந்து பனி விலகிக்கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டிருந்தோம். எங்களுக்குக் கீழே நடைபாதைகளில் சுற்றுலாப் பயணிகள் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

நான் சொன்னேன், "நீ விளையாடினாய். உண்மைதான், நீ துணிச்சலாக இறங்கிப் பார்த்தாய். நீ மற்றவர்களிடமிருந்து வித்தியாசமான கருப்பிதான்."

"நான் கருப்பை விட கருப்பானவள். வெண்மையை விட வெள்ளையானவள். எப்படியோ, பனித்திரையை ஊடுருவிப் பார்க்கவாவது கற்றுக்கொண்டுவிட்டேன்."

"பரவாயில்லை. நீ எல்லாவற்றையும் விளையாடிப் பார்த்துவிட்டாய்."

ஒரு சுற்றுலாப் பயணி எங்களைத் தாண்டிப் போனான். சற்று தயங்கி நின்று லேசான படபடப்போடு சிரித்தான். எங்களை ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டான்.

விர்ஜினியா பேசினாள், "எல்லாமே கெட்டுச் சீரழிந்து கிடக்கிறது! உனக்கு இரண்டே தேர்வுகள் தான் உண்டு. இரண்டுமே நட்டநடு வெயிலில் மாட்டிக்கொண்ட வௌவாலின் கதியைப் போல - உன்னைக் குருடாக்கி விடும். புதிதாக அடியெடுத்து வைப்பவர்கள் போல முத லில் இரண்டுமே வேண்டும் என்று தோன்றும். பிறகு உலகத்தில் உள்ள எல்லாமே தேவைப்படும். ஆனால் கடைசியில் கொஞ்சம் நினைவுக் கொத்துகளோடு ஒரேயொரு கண்ணோடு சுருண்டு விழவேண்டும். ஆனால் என்னுடைய குழந்தை ஒரு கௌரவ வெள்ளையனாக பொட்டைக் கண்ணோடு முடிந்து விடுவதில் எனக்கு விருப்பமில்லை. கருப்புக் கண்களில் ஓரங்களில் எட்டிப் பார்க்கவாவது செய்யும்."

திடீரென்று அந்த அதிகாலைப் பனி என் தோள் மீது படிந்தது போன்ற மெலிதான ஒரு குளிர்வு எனக்குள் படர்ந்தது போல உணர்ந்தேன். அவர்களிருவரைப் பற்றியும் அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றியும் இனியும் எனக்கு எந்த அக்கறையும் இருக்க அவசியமில்லை. சொல்லத் தகுதியான கதைகள் எதுவும் அவர்களிடம் இருப்பதாகப் படவில்லை. வேறு பக்கம் திரும்பிக் கொண்டு சொன்னேன், "என்ன செய்வது, வாழ்க்கை கடினமானது."

விர்ஜினியா தன்னுடைய தேநீர் கோப்பையை சுழற்றிக் கொண்டிருந்தாள். கைகளால் வண்ணம் தீட்டப்பட்டிருந்த அந்த ட்ரேயின் மீது அதைச் சுற்றிக் கொண்டிருந்தாள். தலையை உயர்த்தி பூக்களைப் பார்த்துச் சொன்னாள், "ஆனால் என்னுடைய அந்த கருப்புக் குரங்கனைப் பற்றிதான் எனக்குக் கவலை. அவனுக்கு மென்மையான இதயம் என்று சொல்லியிருக்கிறேன். அவனுடைய மூளையில் இன்னும் எல்லாக் குப்பைகளையும் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறான். அந்த பலவீனமான இடத்திற்குக் கீழே அவன் கழுதையைப் போன்ற பிடிவாதத்தோடு இருக்கிறான். இப்போதுதான் அவனுடைய கண்கள் லேசாகத் திறந்திருக்கின்றன. ஆனால், திடீரென்று ஒரு கண்ணை மூடிக்கொண்டு சிந்தனையில் மூழ்கி மௌனமாகி விடும்போது நான் கற்பனை கூட செய்து பார்த்திராத அளவு கருப்பனாகிவிடுகிறான். அப்படித்தான் அவன் சமாளித்துக் கொள்கிறான்."

அவர்களுக்கு இனிமேலும் கடமைப்பட்டிருப்ப வனாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால், முன்பு ஒரு காலத்தில் அவள் தன் கதைகளை என்னிடம் பகிர்ந்து கொண்டதால் அவளுக்குக் கடமைப்பட்டிருப்பதாக உணர்ந்திருந்தேன். தொங்கிப் படர்ந்திருந்த சிகப்பு ஊதா க்ரோட்டன்ஸ்களுக்கு ஊடாக பயணிகள் தட்டுத்தடுமாறி நடந்து கொண்டிருந்தார்கள். மென்மையான இதழ்கள் பலவற்றை மிதித்துவிட்டிருந்தார்கள். பார்வையாளர்கள் அரங்கம் இப்போது பயணிகளால் நிரம்பியிருந்தது. விர்ஜினியாவின் வயிற்றை நோக்கி குனிந்து சொன்னேன், "அப்படியானால் உன்னுடைய குழந்தையின் பொருட்டாவது கருப்பாக இருக்காதே. வழமையான எல்லோரையும் மகிழ்விக்கிற nigger-ஆக இரு."

அவள் சிரித்தாள். என் முதுகைச் செல்லமாக தட்டினாள்.

கிழக்கிற்குத் திரும்புவதற்கு முன்னால் பாலோடு நகரைச் சுற்றி வந்துகொண்டு இருந்தேன். இது குழந்தை பிறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னால், கோடையின் இறுதியில். அவனுக்கு ஏதோ கடமைப்பட்டிருப்பதாக ஒரு உணர்வு இன்னும் இருந்தது. அது ஞாயிற்றுகிழமை. அன்று காலை பால் ஒரு க்வேக்கர் கூட்டத்தில் கலந்துகொண்டு வந்திருந்தான். திருப்தியாகத் தெரிந்தான். மதியம் முழுக்க நடந்துகொண்டிருந்தோம். நீண்ட நிழற்சாலைகள், கடற்கரையை ஒட்டியிருந்த சாலை, பூங்காவுக்குள் வெட்டிச்சென்ற அகன்ற சாலைகள் என்று இலக்கில்லாமல் மௌனமாக நடந்துகொண்டிருந்தோம். மனிதர்கள் மங்கலான, உருவற்ற பேய்களால் ஆட்டுவிக்கப்பட்டவர்கள் போல, சுரத்திழந்திருந்தது போலத் தெரிந்தார்கள். என் கண்களுக்கு கருப்பர்கள் மட்டுமே தட்டுப்பட்டார்கள். கோல்டன் கேட் பார்க்கில், நல்ல குடி போதையிலோ கஞ்சாவிலோ இருந்த ஒரு கருப்பன் குழந்தையை ஒரு சிறிய வண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு நடந்து போன ஒரு பெண்மணியைப் பார்த்து விசித்திரமான சைகைகள் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். அந்த இளம் தாயின் மனதில் ஆடிய நினைவுகளை கிண்டல் செய்வதில் குறியாக இருப்பது போலத் தெரிந்தான். நான் நின்று பாலுக்கு அவனைக் காட்டினேன். "Nigger என்றால் என்ன அர்த்தம் என்று கேட்டாயே, இதோ பார்த்துக்கொள்!" பான்ஹாண்டி லில் சாதாரணமாக உடையணிந்திருந்த வெள்ளையர்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



மத்தியில், அதிகப் பகட்டான உடைகள் அணிந்து முப்பத்திரெண்டு பற்களும் தெரிய சிரித்துக்கொண்டிருந்த ஒரு கருப்பனை நின்று கவனித்தோம். போவோர் வருவோருக்கெல்லாம் "என்னைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். என்னிடம் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை என்பதை நான் அறிவேன் என்பது உங்களுக்குத் தெரியும் என்பதும் எனக்குத் தெரியும்," என்று தம்பட்டமடிப்பது போல இருந்தது அந்தச் சிரிப்பு. அவனைப் பார்த்து தலையசைத்துவிட்டு பாலிடம் சொன்னேன். "பால், இவனும் ஒரு nigger" பால் இப்போது இன்னும் நிம்மதியாகத் தெரிந்தான். லிங்கன் வே-யில் பேருந்து நிறுத்தத்தை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த போது, பம்பர்களில் நிறைய ஸ்டிக்கர்கள் ஒட்டியிருந்த கார் ஒன்று கடந்து போனபோது, அதைச் சுட்டிக் காட்டினான். மோட்டார் லூப்ரிக்கன்ட் விளம்பரம், இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகை, இன்னும் பல அற்ப உலக விஷயங்கள் என்று ஏதேதோ ஒட்டியிருந்தது. பின்பக்க பம்பரின் மத்தியில், கருப்பு எழுத்துக்களில் ஒரு வெள்ளை ஸ்டிக்கர் இப்படி அறிவித்தது: **Nigger-ஆக இருப்பதற்கு பெருமைப்படு.**

பால் சிரித்தான். அதை ஏதோ ஒரு நுட்பமான கிண்டலாக அவன் நினைத்திருக்கவேண்டும்.

ஆனால், பார்க்கிலிருந்து ஒரு நாலைந்து தெருக்கள் தள்ளி வந்துகொண்டு இருந்தபோது பளபளப்பான ஒரு சிகப்பு கியர் சைக்கிளில் கனமான தாடி வைத்திருந்த ஒரு வெள்ளை இளைஞனை நோக்கித் தலையசைத்தேன். அவனுடைய முகம் பல நாட்களாக கழுவாமல் சிவந்திருந்தது தெரிந்தது. அவனுடைய கருப்பு பேண்டும் சட்டையும் தூரத்திலிருந்து பார்த்த போதே அழுக்காகத் தெரிந்தன. பேன்கள் ஊர்வதுகூடத் தெரிந்தது. வண்டியை மிதித்துக்கொண்டு அவன் போனபோது, டயரை உரித்து செய்திருந்த செருப்புகளிலிருந்து முரட்டுப் பாதங்கள் துருத்திக்கொண்டு இருந்தன. எதிலிருந்தோ மீண்டு வந்தவனைப் போன்ற ஒரு தன்னுணர்வு அவன் முகத்தில் தெரிந்தது. சிவந்த முகத்தின் கோடுகளில் குழப்பமான அராஜகம் பளிச்சென்று தெரிய, அந்த மதிய நெரிசலில் எல்லா சிரமங்களுக்கு மத்தியிலும் சர்வசாதாரணமாக நீந்திச் சென்றான். தெருவின் கோடியில் அவன் திரும்பியபோது, நான் பாலிடம் சொன்னேன், "இவன் ஒரு மோசமான போலி; பகுதி நேர nigger வேஷம் போட்டிருக்கிறான்."

பால் சிரிக்கவில்லை. அவன் புரிந்துகொள்ளவில்லை.

நான் தொடர்ந்தேன். "ஒரு தெருவில் இரண்டு பேர் நடந்து போவதாக கற்பனை செய்துகொள். ஒருவன் இப்போது போனவனைப் போல உடையணிந்த ஒரு வெள்ளையன். இன்னொருவன் ஒரு கருப்பன். ஒரு கனவானுடைய உடைக்கு கேலியான ஒரு மாடல். உன்னுடைய மனதில் அல்லது உன் தந்தையின் மனதில் இவர்களிருவரில் யார் இயல்பிலிருந்து விலகியவர்களாக வித்தியாசமானவர்களாக வேடிக்கையானவர்களாகத் தெரிவார்கள்?"

பால் நின்றுவிட்டான். மோசமாக புண்பட்டவனைப் போலத் தெரிந்தான். "இப்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. என்னை இனவெறியன் என்று நினைக்கிறாய், அப்படித்தானே?"

எனக்குள் ஒரு குளிர்ச்சி பரவியது போல உணர்ந்தேன். ஒரு புதிய கதையைத் தேடும் கடமை இனி இல்லை என்பது போல உணர்ந்தேன். எந்தத் தயக்கமும் இல்லாமல் பாலிடம் சொன்னேன், "ஒருவிதமான ஒழுங்கமைப்பை மதிக்கிறவர்களுக்கு மத்தியில் நீ தனியனாக பிறந்திருப்பாய் என்று நினைக்கிறேன். ஒரு காலண்டரில் வானததிற்கும் பரந்த புல்வெளிக்கும் நடுவில் பரந்த வெளியில் தன்னந்தனியாக ஒருவன் நின்றுகொண்டிருப்பதைப் போன்ற படத்தை ஒருமுறை பார்த்திருக்கிறேன். ஒரு சிறிய பெட்டிக்குள் அடைபட்டவனைப் போல அந்த பரந்த வெளியால் அழுத்தப்பட்டது போலத் தெரிந்தான். அந்த இடத்தின் எளிமையான தாளத்தில் குறுகிப்போனது போல இருந்தான். அந்தத் தாளங்களோடு இயைந்து போவதற்கு, எளிமையாகச் சொல்வதென்றால், அவனுடைய மூளையில் ஏதொவொரு முறையியலைக் கடைபிடிப்பவனாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்."

ஆனால் நான் இன்னமும் அவனை குற்றம் சாட்டிக்கொண்டிருப்பதாக, தவறுகளுக்கு பதில் சொல்லவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதாக நினைத்துக் கொண்டிருந்தான். "மனிதர்கள் வளர்வது **உண்டு,** என்னைப் பற்றி பெரிதாக சொல்ல எதுவும் இருக்காது. ஆனால் என் குழந்தைகள் மாபெரும் சாதனைகள் செய்வார்கள்," என்றான்.

நான் சொன்னேன், "ஒன்று அவர்கள் கருப்பாக, குருடர்களாக இருப்பார்கள். அல்லது, வெள்ளையர்களாக எடுத்துக்கொள்ளப் படுவார்கள்; தங்களைத் தாங்களே குருடாக்கிக் கொள்வார்கள். இந்த இரண்டு வாய்ப்புகளே சாத்தியம்."

பால் என்னை விட்டு விலகி வேகமாக நடந்தான்.

பத்தொன்பதாவது சாலையில் பஸ் நிறுத்தத்தில் திரும்பி என்னைப் பார்த்து சொன்னான், "எனக்காக வீடுவரை வரவேண்டாம். அனேகமாக ஜின்னி இப்போது தூங்கிக் கொண்டிருப்பாள்." சொல்லிவிட்டு சட்டென்று பார்வையை சிக்னல் மாறுவதற்காக பேருந்துகள் காத்துக் கொண்டிருந்த பக்கம் திருப்பிக் கொண்டான். பனிமூட்டம் கவிந்திருந்தது. இருட்டிக் கொண்டிருந்தது. வாகனங்களின் வெளிச்சத்தில் அவன் கண்கள் சிவந்து சோர்ந்திருப்பது தெரிந்தது. அவனுடைய முகத்தைத் தெளிவாக பார்க்கும் நெருக்கத்தில் நான் இருக்கவில்லை. ஆனால் அதில் எப்போதும் தகதகத்துக் கொண்டிருந்த ஒளிவட்டம் சுத்தமாக மறைந்து விட்டிருந்தது தெளிவாகத் தெரிந்தது. என் கண்களுக்குத் தெரிந்த எல்லாவற்றையும் போலவே அவனும் சோர்ந்திருந்தான்.

நாங்கள் கைகுலுக்கிக் கொண்டோம். உலகத்தில் புதிய கதைகள் எதுவுமே இல்லை என்று சமாதானம் செய்து

படிப்பகம்

www.padippakam.com



கொண்டு நடக்க ஆரம்பித்தேன்.

இரண்டு பக்கமும் வண்டிகள் என்னைக் கடந்து போய்க்கொண்டிருந்தன. அவற்றின் கிறீச்சிடல்களுக்கும் ப்ரேக் உராய்வுகளுக்கும் மேலாக எழுந்த பாலுடைய குரல் கேட்டது. "**குறைந்தது** நான் முயற்சியாவது செய்தன்! **போராடிக்** கொண்டாவது இருக்கிறேன். அப்புறம், nigger என்பதற்கு அர்த்தம் என்ன என்பதும் இப்போது எனக்குத் தெரியும். ஒருவன் தன்னை ஒரு கலைப் பொருளாக உணரத் தொடங்கும்போது அவன் nigger ஆகிவிடுகிறான்!

இரண்டு வாரங்கள் கழித்து, கிழக்குக்கு புறப்படும் முன்பாக, அவர்களுடைய அபார்ட்மென்டுக்குச் சென்றேன். டெலிபோன் வயர் துண்டிக்கப்பட்டிருந்தது. அவர்களிடம் சொல்லிக்கொள்வதற்குள் போய்விட்டிருந்தார்கள். லாஸ் தஞ்சல்ஸிலிருந்து அப்போதுதான் இறங்கியிருந்த ஒரு மெக்சிக ஜோடி, பொருட்களை இறக்கிக் கொண்டிருந்தார்கள். மோசமான ஆங்கிலத்தில் பேசினார்கள். நான் தேடிக் கொண்டிருந்த ஜோடியைப் பற்றி விசாரித்ததற்கு மெதுவாக தலையை ஆட்டினார்கள். பெரிய தொந்தியோடு தொங்கு மீசை வைத்திருந்த கணவன் உள்ளே இருந்து ஒரு பெரிய குப்பைக் கூடையை இழுத்து வந்தான். அதற்குள் இருந்து ஒரு பெரிய பலகையை எடுத்து மார்புக்குக் குறுக்காக வைத்துக் காட்டினான். அதில், **இப்போது நாங்கள் பெற்றோர்கள், உள்ளே வராதே**, என்று எழுதியிருந்தது.

பழைய கதைகளை சொல்லிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று நான் கிழக்குக்குக் கிளம்பினேன்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு, விடாமல் நினைவுக்கு வந்து கொண்டிருந்த ஒரு நாட்டுப்புறக் கதையின் இரக்கமற்ற இதயத்தின் ஆழத்திற்குள் இறங்க எனது மூளைக்குள் முட்டிக்கொண்டிருந்த போது ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. கான்சாசிலிருந்த ஒரு சிறிய டவுனிலிருந்து சான் ஃப்ரான்சிஸ்கோ வழியாக திருப்பி விடப்பட்டிருந்தது. ஏழு, எட்டு மாதங்களான ஒரு குழந்தையின் பிறப்பை அறிவித்தது. மூன்று கலர் போட்டோக்களும் அதோடு இருந்தது. அக்டோபர் முதல் தேதியிட்ட ஒன்றில் கருப்பு சுருள் முடியோடு ஒரு சிறிய இளஞ்சிவப்புக் குழந்தை. கொஞ்சம் சமீபத்தில் எடுக்கப்பட்ட இரண்டாவதில் கொழுத்த பழுப்புப் பையன் விரிந்திருந்த உலகத்தை பழுப்புக் கண்களில் ஆச்சரியம் விரிய வெறித்துக் கொண்டிருந்தான். பின்னால், "டானியல். பா. ஃப்ராஸ்ட்; 4 மாதங்கள், 8 நாட்கள்," என்று அச்சிட்டிருந்தது. மூன்றாவதில், ஒரு வயதான ஜோடி நடுவில் இருக்க ஒரு பக்கம் பாலும் இன்னொரு பக்கம் விர்ஜினியாவும் நின்றுகொண்டிருந்தார்கள். விர்ஜினியா வழக்கமான தன் தொப்பியை அணிந்து வெற்றிப் புன்னகையோடு இருந்தாள். பெரியவர் ஆழ்ந்த அமைதியோடு இருந்தார். பழுத்த வெள்ளை முடியோடு பாட்டி குழந்தையைக் கையில் வைத்திருந்தாள். இவர்களிடமிருந்து சற்றுத் தள்ளி கைகளை மடித்துக் கொண்டு பால் நின்றிருந்தான். அந்தப் பழைய தாடி இல்லை. யாருக்கும் பணியாதவனைப் போல மிடுக்காக நின்றிருந்தான். பரிச்சயமான அந்தத் தேடல் இன்னும் முகத்தில் தெரிந்தது. இந்தப் படத்திற்குப் பின்னால் யாரோ எழுதியிருந்தார்கள்: "இவன் **முதல்தரமான nigger**-ஆக இருப்பான்."

**இந்தக் குறிப்பின் அர்த்தத்தை தெளிவுபடுத்துக.**

அது என்னால் முடியாது, சிரமம். ஆரம்பம் முதலே இது என் கதை இல்லை. அதனுடைய செறிவான சிக்கல்களை விளக்கும் நுண்ணாற்றல் எனக்கில்லை. என்றாலும் இதை மட்டும் சொல்ல முடியும். தாய் பரந்த அனுபவமுள்ள நாட்டுப்புறக் கதைசொல்லி. தந்தை விஷயங்களைத் தெளிவாக பார்க்கும் ஆற்றல் உள்ளவன். நான் மீண்டும் அவர்களைத் தொடர்புகொள்ள முயற்சித்தபோது அவர்கள் டென்னெஸெ-லின் காடுகளுக்குள் வாழ்ந்துவந்த வித்தியாசமான மற்ற உறவினர்களைப் பார்க்கப் போய் விட்டார்கள் என்பது தெரிய வந்தது. நான் காத்திருப்பேன். தாய் தைரியம் மிக்கவள். எது எப்படி இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தவன் தந்தை. ஆனால் காத்திருக்கும் காலத்தில் அந்தப் பையனுடைய கதையின் வலிமை மீது இல்லையென்றாலும் கூட இலட்சிய வேகத்தின் மீது நம்பிக்கையோடு பந்தயம் வைப்பேன்.

**குறிப்பு தெளிவில்லை. விளக்கம் தேவை. விளக்கம் தேவை.**

படிப்பகம்

www.padippakam.com



# கருப்பர் நாட்டுப்புறக் கதைகள்

தமிழில் : வளர்மதி

## இறைவனின் எல்லாக் குழந்தைகளுக்கும் அப்போது சிறகுகள் இருந்தன

முன்னொரு காலத்தில் எல்லா ஆப்ரிக்கர்களும் பறவைகளைப் போல பறக்கமுடியும். ஆனால், அவர்கள் செய்த பல பாவச்செயல்களுக்காக பின்னால் அவர்களுடைய இறக்கைகள் பறிக்கப்பட்டன. என்றாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறிய தீவுகளில், தடங்களிலிருந்து விலகியிருந்த சிறு கிராமங்களில் தப்பிப் பிழைத்தவர்கள் சிலர் பறக்கும் சக்தியை தக்கவைத்திருந்தார்கள். ஆனால் பார்ப்பதற்கு என்னவோ அவர்கள் மற்ற சாதாரண மனிதர்களைப் போலவே இருந்தார்கள்.

சாகும்வரை தன் அடிமைகளை சக்கையாகப் பிழிந்தெடுத்த இரக்கமில்லாத எஜமானன் ஒருவன் அந்தத் தீவுகளில் ஒன்றில் இருந்தான். இறந்தவர்களது இடத்தை நிரப்ப அவன் இன்னும் சில அடிமைகளை வாங்கிக்கொள்வான். அவர்களையும்கூட கோடையின் சுட்டெரிக்கும் உச்சிப் பொழுதுகளில் அளவுக்கதிகமான வேலை செய்ய வைத்து சாகடிப்பான் - அது சட்டத்திற்குப் புறம்பானது என்று தெரிந்திருந்தும்கூட.

ஒருநாள் வேலைச்சுமை தாளாமல் அவனுடைய எல்லா அடிமைகளும் செத்து விழுந்தபிறகு டவுனிலிருந்த ஒரு தரகன் மூலமாக, அப்போதுதான் ஆப்ரிக்காவிலிருந்து வந்து இறங்கியிருந்த ஒரு கூட்டத்தை வாங்கி உடனே வயலில் இறக்கிவிட்டான்.

அவர்களையும் கசக்கிப் பிழிந்தான். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரையும் கொஞ்சமும் இரக்கமில்லாமல் விரட்டி விரட்டி வேலை வாங்கினான். அதிகாலை எழுந்து வயலில் இறங்கியவர்கள் இருட்டும்வரை வேலை செய்தார்கள். கோடையின் உச்சி வெயிலிலும்கூட சற்றும் இளைப்பாறாமல் அவர்கள் வேலை செய்தார்கள். பக்கத்திலேயே நிழலான மரங்கள் நிறைய இருந்தும்கூட ஓய்வெடுக்க அவன் அனுமதித்ததில்லை. மற்ற பண்ணைகளில் சற்று இரக்கமுள்ள எஜமானர்கள் வெயில் கொளுத்தும் மதிய நேரங்களில் தங்கள் அடிமைகளை ஓய்வெடுக்க அனுமதித்திருந்தார்கள். இவனது அடிமைகள் வெளியில் தாகத்தால் சோர்ந்து சக்தியிழந்து விழும் வரை வேலை செய்தார்கள்.

அவர்களுக்கு மத்தியில் பிள்ளைப்பேறு முடிந்து சில நாட்களே ஆகியிருந்த இளம் பெண் ஒருத்தி இருந்தாள். அதுதான் அவள் முதல் குழந்தை. இழந்த சக்தியை அவள் இன்னும் முழுமையாக பெற்றிருக்கக்கூட இல்லை. அதற்குள் வயலுக்கு விரட்டியடிக்கப்பட்டிருந்தாள். தன் பிள்ளையையும் முதுகில் கட்டியிருந்தாள்.

அந்தக் குழந்தை அழுதது. சமாதானம் செய்ய அவள் அதோடு பேசினாள். எஜமானனின் அடியாளுக்கு அவள் பேசியது புரியவில்லை. குழந்தை பசியாறட்டும் என்று தன் முலையை எடுத்து தோள்களுக்கு மேலே பின்னால் வீசினாள். பிறகு, மீண்டும் களை பிடுங்கத் தொடங்கினாள். ஆனால், ஏற்கனவே பலவீனமாக இருந்தவள் கொஞ்ச நேரத்திலேயே வெயிலில் சோர்ந்து தடுமாறி தடுக்கி விழுந்தாள்.

ஆனால் அடியாள் விடவில்லை. அவள் எழுந்து திரும்பக் களையெடுக்கும் வரை சாட்டையால் விளாசினான்.

அவளுக்கருகில் கவட்டுத் தாடி வைத்திருந்த கட்டுக்குலையாமல் நல்ல உயரமாயிருந்த கிழவனிடம் அவள் ஏதோ கேட்டாள். அந்தக் கூட்டத்தில் எல்லோரையும்விட வயதானவன் அவன்; பதில் சொன்னான். ஆனால், அவர்கள் பேசிக்கொண்டது அடியாளுக்குப் புரியவில்லை. அவர்கள் பேச்சு விசித்திரமாக இருந்தது.

மீண்டும் அவள் வேலை செய்யத் தொடங்கினாள். ஆனால் சற்று நேரத்தில் மறுபடியும் விழுந்தாள். மீண்டும், அவள் தன் கால்களில் நிற்கும்வரை அந்த அடியாள் அவளை அடித்தான். இந்த முறையும் அவள் அந்தக் கிழவனிடம் ஏதோ கேட்டாள். ஆனால், அவன் சொன்னான், “இல்லை மகளே, இன்னும் நேரம் வரவில்லை.” அதனால், உடல் சோர்ந்திருந்தும் அவள் வேலையைத் தொடர்ந்தாள்.

கொஞ்ச நேரத்தில் அவள் மறுபடியும் தள்ளாடி விழுந்தாள். அடியாள் சாட்டையை வீசிக்கொண்டு அவளை அடிக்க ஓடிவந்தான். அவள் திரும்பி அந்த முதியவனிடம் கேட்டாள், “காலம் கனிந்துவிட்டதா அப்பா?” ஆமாம் மகளே, நேரம் வந்துவிட்டது. போ. நிம்மதி உனக்குக் கிடைக்கட்டும்! கைகளை விரித்து அவளை வாழ்த்தினான். அவள்...

தாவி எழும்பி பறவையைப் போல வயல்களுக்கும் காடுகளுக்கும் மேலாக, மேலாகப் பறந்து மறைந்தாள்.

அடியாளும் மேஸ்திரியும் வயலின் எல்லை வரை அவள் பின்னால் ஓடினார்கள். ஆனால் அவள், முலையை சூப்பிக் கொண்டிருந்த குழந்தையை இடுப்பில் இருத்திக்கொண்டு, அவர்கள் தலைக்கு மேலாக, வேலி களுக்கு மேலாக, காடுகளுக்கு மேலாக உயரே உயரே எழுந்து மறைந்து போனாள்.

ஒரு ஆள் குறைந்ததை ஈடுசெய்ய, அடியாள் மற்றவர்களை விரட்ட விரைந்தான். வழக்கத்தைவிட அன்று வெயில் அதிகமாகவே இருந்தது. கொஞ்ச நேரத்தில் இன்னொரு அடிமை விழுந்தான். இந்த முறை மேஸ்திரியே சாட்டையை எடுத்து விளாசினான். அடிமை எழுந்து தள்ளாடி நின்றபோது அந்தக் கிழவன் புரியாத ஒரு மொழியில் அவனுக்கு ஏதோ சொன்னான். அவன் சொன்ன வார்த்தைகளை என் தாத்தா எனக்கும் சொன்னார். ஆனால், காலங்கள் உருண்டோடியதில் நான் அதை மறந்துவிட்டேன். அப்புறம், கிழவன் சொல்லி முடித்ததும், அந்த அடிமை

படிப்பகம்

www.padippakam.com



திரும்பி மேஸ்திரியைப் பார்த்து ஏளனமாக சிரித்தான். பிறகு, ஒரு கடற்பறவையைப் போல வானில் எழுந்து வயல்களுக்கும் காடுகளுக்கும் மேலாகப் பறந்து, மறைந்தான்.

சீக்கிரமே இன்னொருவன் விழுந்தான். அடியாள் அடித்தான். விழுந்தவன் கிழவனைப் பார்த்தான். மற்ற இருவருக்கும் செய்தது போலவே கைகளை விரித்து அவனைப் பார்த்து கிழவன் ஏதோ உரக்கச் சொன்னான். இவனும் அவர்களைப் போலவே வானில் எழுந்து ஒரு பறவையைப் போல வயல்களுக்கும் காடுகளுக்கும் மேலாகப் பறந்து, மறைந்தான்.

அப்போது மேஸ்திரி அடியாளைப் பார்த்து கத்தினான்; எஜமானன் இரண்டு பேரையுமே விரட்டினான், "அந்தக் கிழச்சனியனை பிடித்து உதையுங்கள்! அவன்தான் இதைச் செய்கிறான்!"

அடியாளும் மேஸ்திரியும் சாட்டைகளை சொடுக்கிக்கொண்டு கிழவனை நோக்கி ஓடினார்கள். எஜமானனும் வேலியிலிருந்து ஒரு சவுக்குக் குச்சியை உருவிக்கொண்டு அந்தக் கருப்பர்களை பறக்கச் செய்த கிழவனை நொறுக்கித் தள்ள ஓடினான்.

ஆனால் அந்தக் கிழவன் அவர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான். வயலில் இருந்த எல்லா நீக்ரோக்களையும், புதியவர்கள், பழைய ஆட்கள் எல்லோரையும் நோக்கி ஏதோ உரக்கச் சொன்னான்.

அவன் சொல்லி முடித்ததும், அவர்கள் எல்லோரும் மறந்திருந்த அந்த மந்திரச் சொல்லை திரும்பப் பெற்றார்கள். முன்பு இழந்திருந்த பறக்கும் சக்தியைப் பெற்றார்கள். எல்லா நீக்ரோக்களும், பழைய ஆட்கள், புதியவர்கள் எல்லோரும் சேர்ந்து எழுந்து நின்றார்கள். கிழவன் கைகளை உயர்த்தினான்; எல்லோரும் சேர்ந்து பெருங்கூச்சலிட்டு தாவி எழுந்து பறந்தார்கள். ஒரே நொடியில் ஒரு காக்கைக் கூட்டத்தைப் போல வயல், வேலி, காடுகள் எல்லாவற்றுக்கும் மேலாகப் பறந்து, மறைந்தார்கள். எல்லோருக்கும் பின்னால் அந்தக் கிழவன் பறந்து சென்றான்.

ஆண்கள் கைகளைத் தட்டிக்கொண்டும் பெண்கள் பாடிக்கொண்டும் பறந்தார்கள். குழந்தைகள் வைத்திருந்த பெண்கள் தங்கள் முலைகளை அவற்றுக்குக் கொடுத்தார்கள். குழந்தைகள் மகிழ்ச்சியோடு சூப்பினார்கள். அவர்கள் பயங்கொள்ளவில்லை.

காடுகள், மலைகள், நதிகளைக் கடந்து, மைல்கள் மைல்களுக்கப்பால் உலகின் விளிம்பைக் கடந்து சருகுகள் போல அவர்கள் காற்றில் கரைந்து மறைந்து போகும் வரை அடியாள், மேஸ்திரி, எஜமானன் மூவரும் நின்று பார்த்தார்கள். அதன் பிறகு யாரும் அவர்களைப் பார்க்கவில்லை.

அவர்கள் எங்கே மறைந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. எவரும் எனக்குச் சொன்னதில்லை. நான் மறந்துவிட்ட..... அந்தக் கிழவன் சொன்ன வார்த்தைகள் என்ன என்பதையும் யாரும் சொன்னதில்லை. ஆனால், கடைசியாக இருந்த வேலியைக் கடந்தபோது அந்தக் கிழவன் எஜமானனை நோக்கி ஏதோ சைகை செய்து, "குலி -பா! குலி-பா!" என்று கத்தினான். அதன் அர்த்தம் என்ன என்றும் எனக்குத் தெரியவில்லை.

ஆனால், அந்த வயதான தச்சனை மட்டும் நான் கண்டுபிடித்து விட்டேனென்றால் அவன் உங்களுக்கு இன்னும் நிறைய விஷயங்கள் சொல்வான். அந்த ஆப்ரிக்கர்கள் தங்கள் பெண்களோடும் குழந்தைகளோடும் பறந்து போனபோது, அந்தக் காலத்தில், அவனும் அங்கு இருந்தான். தொன்னூறு வயதுக்கும் மேலான பழுத்த கிழவன் அவன். நிறைய விசித்திரமான கதைகளை அவன் ஞாபகத்தில் வைத்திருக்கிறான்.

குறிப்பு :- ஜான் தீவைச் சேர்ந்த **சீஸர் கிரான்ட்** என்ற தொழிலாளி சொன்ன கதை. **ஜான் பென்னட்**-டின் Doctor to the Dead தொகுப்பிலும் **லாங்ஸ்டன் ஹக்ஸ்** மற்றும் **ஆர்னா போன்டெம்ப்ஸ்** தொகுத்த The Book of Negro Folk Lore (1958)-லும் இடம் பெற்றுள்ளது. கருப்பர்கள் பறப்பது பற்றிய நாட்டுப்புறக் கதைகளால் உற்சாகம் பெற்று **டோனி மாரிசன்** எழுதியதுதான் Song of Solomon என்கிற அவரது நாவல்.

## கருப்பு சகோதரியே எப்போதும் கடுமையாக உழைத்துக் கொண்டிருப்பது எதனால்?

அது எப்படி நடந்ததென்று தெரியுமா? உலகத்தையும், மனிதனையும் மற்ற உயிர்களையும் படைத்து முடித்ததும் கடவுள் ஒரு பெரிய மூட்டையைக் கட்டி தெருவில் நடுவழியில் அதைப்போட்டுவிட்டார். ஆயிரம் வருடங்கள் அது அங்கேயே கிடந்தது. அப்புறம் ஒருநாள் வயதான அந்த அம்மணி, அய்யாவிடம் சொன்னாள், "போய் அந்த மூட்டையை எடுத்து வா. அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்க்கவேண்டும்." வயதான அய்யா மூட்டையைப் பார்த்தார். ரொம்பவும் கனமாகத் தெரிந்தது. தன் கருப்பு அடிமையைக் கூப்பிட்டு சொன்னார், "போ. அங்கே தெருவில் கிடக்கிற அந்தப் பெரிய மூட்டையை எடுத்து வா." அந்தக் கருப்பன் அந்த மூட்டையை பலமுறை பார்த்திருக்கிறான். அதனால் தன் மனைவியைக் கூப்பிட்டுச் சொன்னான்;

"ஏய், போய் அந்த மூட்டையை எடுத்துவா." அந்தக் கருப்பி பெட்டியை எடுத்துவர ஓடினாள். அவள் சொல் லிக் கொண்டாள்:

"பெரிய மூட்டைகளை அவிழ்த்துப் பார்க்க எப்போதுமே எனக்கு ஆசைதான். எப்போதுமே அவற்றுக்குள் நல்ல சமாச்சாரங்கள் ஏதாவது இருக்கும்". அவள் ஓடிப்போய் அதை அவிழ்த்துப் பார்த்தாள். அது முழுக்க கடுமையான வேலை இருந்தது.

அதனால்தான் உலகத்தில் மற்ற எல்லோரையும் விட கருப்பு சகோதரியே எப்போதும் அதிகமாக வேலை செய்து கொண்டு இருக்கிறாள். வெள்ளையன் கருப்பனை வேலை செய்யச் சொல்கிறான். கருப்பன் அதை தன் மனைவியைச் செய்ய வைக்கிறான்.

குறிப்பு : ஸோரா நீல் ஹர்ஸ்டன் தன் Mules and Men (1935)-ல் தொகுத்தது. இரு கதைகளுமே Norton Anthololgy-யிலிருந்து எடுத்தது.

படிப்பகம்

www.padippakam.com



கவிதைகள் :

# கருப்புப் பெண் கவிதைகள்

தமிழில் : வளர்மதி

## 1. ஒரு பழுப்புப் பெண்ணுக்காக

உனது பழுப்பு நிறத்திற்காக
உனது முலைகள் கருத்த வட்டமாக விழும் அழகிற்காக
நான் உன்னைக் காதலிக்கிறேன்.
உடைந்த உன் குரலில் தொனிக்கும் சோகத்திற்காக
உனது சிறிய இமைகள் தங்குமிடத்தில் விழும் நிழல்
தரும் தன்மைக்காக
நான் உன்னைக் காதலிக்கிறேன்.

உன் தளர்ந்த நடையில்
நினைவுகளில் மங்கிக் கரைந்துபோன
அந்தப் பழங்காலத்து அரசிகளை நினைவூட்டும்
ஏதோவொன்று
தொக்கி விழுகிறது.
உன் பேச்சின் அதிர்வுகளில்
தேய்ந்த விலங்குகள் பூட்டிய அடிமையின் தேம்பல்கள்
வடிகிறது.

ஓ, சிறிய பழுப்புப் பெண்ணே
துன்பத்திற்குப் பிறந்தவளே
அரசிகளின் தளிர் அழகு, கம்பீரம் எதையும் இழந்துவிடாமல்
ஒரு காலத்தில் அடிமையாக இருந்தாய் என்பதை மறந்து
உன் தடித்த இதழ்களை விரித்து
விதியின் முகத்தில் ஒரு புன்னகையை உதிர்த்துவிடு.

– ஜ்வென்டொலின் பென்னெட் (1902-1981)

ஹார்லெம் எழுத்தாளர்களிலேயே மிக அதிகமான இன உணர்வு உடையவராக அறியப்பட்டவர். கவிதை களுக்காகவே பெயர் பெற்றவர். இவருடைய கவிதைகள் உணர்ச்சிகளின் நுட்பங்களை வெளிக்கொண்டு வந்ததும் கருப்பு உடலைக் கொண்டாடியதும் அன்று எவரும் கண்டுகொள்ளாமல் புறக்கணித்துவிட்ட ஒன்று.

## 2. கருப்புக் காதல்

ஒரு நாள்
நீ இந்த வீட்டிற்குள் மெல்ல நடந்து வருவாய்
நான்
ஒரு நீண்ட ஆப்ரிக்க கவுன் அணிந்திருப்பேன்
உட்கார்ந்து நீ பேசத்தொடங்குவாய் "கருப்பு..."
உனது கையை எடுத்து எனதுள் வைத்துக்கொள்வேன்
நீ- என்னை கவனிக்காமலேயே, பேசிக்கொண்டிருப்பாய்,
"ஆமாம், இந்தச் சகோதரனை..."
மெல்ல உன் கையை என் தலையில் நழுவவிடுவேன்
சலிக்காமல் நீ உளறிக்கொண்டிருப்பாய் "புரட்சி இருக்கிறதே..?"
உனது கையை என் வயிற்றில் அழுத்திப் பிடித்திருப்பேன்
எப்போதும் போல நீ தொடர்ந்து கொண்டிருப்பாய்
"இது எனக்கு சுத்தமாக புரியவில்லை..."
உனது கையால் என் உடலை வருடிக் கொண்டிருப்பேன்
பிறகு மெல்ல உனது டாஷிகியை உருவி எடுப்பேன்
அப்போது நீ சொல்வாய் "உண்மையில் நமக்கு இப்போது
தேவைப்படுவது என்னவென்றால்..."
இப்போது நாவால் உனது கையை வருடிக் கொண்டிருப்பேன்
நீ, "நான் அதை எப்படிப் பார்க்கிறேன் என்றால், இனி நாம்.."
உனது காற்சட்டைப் பொத்தான்களை அவிழ்த்திருப்பேன்
"சரி, அந்த நிலைமையில் எப்படி.."
உனது உள்ளாடையை உருவி எடுப்பேன்
அப்போது உனது நிர்வாண நிலை
உனக்கு உறைக்கும்
உன்னை உனக்குத் தெரியும்
நீ வெறுமனே இப்படிச் சொல்வாய்
"நிக்கி
இது எதிர்ப்புரட்சிகரமானதில்லையா?"

– நிக்கி கியோவானி (1943)

60-களின் கருப்பு அழகியல் இயக்கத்தோடு சேர்ந்து மிகக் குறுகிய காலத்தில் புகழின் உச்சிக்கு ஏறியவர். இவரது கவிதைகள் ஒலித்திராக கருப்பர் வீடுகள் ஒன்றாவது இருந்திருக்குமா என்பது கேள்வியே. கருப்பு இசையி லிருந்து இவருடைய கவிதைகள் பிரிக்கமுடியாதது.

## 3. நெருப்பு

எனக்கு வயது பதினாலு ஆகிவிட்டது
சதையின் வேட்கைக்கு எப்போதோ பலியாகிவிட்டேன்
அவனில்லாமல் இனி உயிர்வாழ முடியாது
அந்தப் பையன்
இன்னும் மறைவில் கைசூப்புவதுண்டு
அதெப்படி என் கால்கணுக்கள் மட்டும்
எப்போதும் சாம்பல் நிறத்தில்
நாளை எழுவதற்குள்
இறந்துவிட்டால் என்ன
அப்புறம் அம்மா படுக்கையறையில் இருக்கிறாள்
கதவு தாளிட்டிருக்கிறது.

அடுத்த பார்ட்டிக்குள்ளாக
நடனமாட கற்றுக்கொள்ள வேண்டும்
என்னுடைய அறை மிகவும் சின்னதாகிவிட்டது
ஒருவேளை பட்டம் பெறுவதற்குள்
நான் இறந்துவிட்டால்
அவர்கள் சோக கீதம் இசைப்பார்கள்
எப்படியிருந்தாலும் கடைசியில்
என்னைப் பற்றிய உண்மையைச் சொல்லிவிடுவார்கள்
எதையும் செய்ய எனக்கு விருப்பமில்லை
ஆனால் செய்ய நிறைய இருக்கிறது
அப்புறம் அம்மா படுக்கையறையில் இருக்கிறாள்
கதவு தாளிட்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



என் பக்கக் கதையைக் கேட்க
எவருக்கும் தோன்றுவதில்லை
கணிதக் குழுவில் நான் இருந்திருக்கவேண்டும்
அவனுடையதைவிட என் மதிப்பெண்கள் அதிகம்
இடுப்புறைகள் அணிந்தவளாக
ஏன் நானிருக்கவேண்டும்
நானை உடுத்துவதற்கு ஒன்றும் இல்லை
பெரியவளாகும் வரைக்கும் நான்
உயிர்வாழ்வேனா
அப்புறம் அம்மா படுக்கையறையில்
கதவு தாளிட்டிருக்கிறது.

– ஆட்ரெ லோர்ட் (1934-92)

அறிமுகத்திற்குப் பார்க்க பக்கம் : 105

## 4. அமிழ்து

ஒரு திராட்சையாக நீ இருந்திருந்தால்
நான்
அந்தக் கொத்திலிருந்து
உன்னை
பறித்து
எடுப்பேன்
குளிர்ந்த நீரில் உன்னை அலசி
இன்பக் கனியில் கைபட்டுவிடாமல்
மெல்ல தோலை உரித்து எடுப்பேன்
ஒரு சொட்டு
சிந்திவிடாமல்
ருசித்து ருசித்து
உள்ளிருக்கும்
சாற்றை உறிஞ்சிக் குடிப்பேன்
அமிழ்து
சுத்தமான அமிழ்து
தாகம் சற்று தணிந்து
சாய்ந்து கிடப்பேன்
திளைத்து
மகிழ்ந்து
மகிழ்ச்சியில்
திளைத்து
நீ
விதைகள் இல்லாமல்
இருப்பதை நினைத்து

– டோரிஸ் எல். ஹாரிஸ்

இவரைப் பற்றி கிடைத்த விபரம் : பிட்ஸ்பர்க்கில் பிறந்தவர் 1993ம் ஆண்டுக்கான Astrea Foundational Award பெற்றவர். நிக்கி கியோவானி கவிதைப் பரிசும் வென்றவர்.

## 5. ஊதாப்பூ

என் மகள் கால்களை விரித்து குனிந்து
மயிர்களற்றிருக்கும்
தன் யோனியைப் பார்க்கிறாள்
எப்போதும் முகத்தைச் சுளிக்க வைக்கும் இந்தத் துணுக்கு
அவளுடைய வீறிடல் இல்லாமல்
அந்நியர் எவரும் தொட்டுவிட முடியாத ஒன்று. அவள்
என்னுடையதைப் பார்க்கக் கேட்கிறாள்
சிதறிக் கிடக்கிற பொம்மைகளுக்கு நடுவே ஒரு நொடி நேரம்
நாங்கள் அருகருகே எதிரெதிரே
இரட்டை நட்சத்திரங்கள் போல நிற்கிறோம்
மழித்துச் செதுக்கிய அவளுடைய முத்து மணிக்கு முன்னால்
பெருத்த எனது வரிச்சோழி
இருந்தும் அதே பளிங்குப் புழை, வரித்த மடிப்புகள்
மூன்று வயது அவளுக்கு, அவளுடைய அறியாமையைச்
சொல்லும் அது
உணர்வுகளின் உச்சத்தில் நாங்கள்!
சிறு ஊதா மொட்டுக்களாக
அவள் வீறிட்டுப் பின்னால் நகர்ந்து போகிறாள்.

ஒவ்வொரு மாதமும் அது எனக்கு எங்கே நோகிறது
என் கால்களுக்கிடையில் அது என்ன சுருக்கம்விழுந்த கயிறு
என்று கேட்கிறாள்
இது நல்ல இரத்தம் நான் சொல்கிறேன்
ஆனால் அதுவும் சரியில்லை, முழு உண்மையில்லை
என்ன செய்ய
நான் கருப்புத் தாயாகவும் அவள் பழுப்புக் குழந்தையாகவும்
நாங்கள் ஊதாவுக்குள்ளும்
ஊதா எமக்குள்ளும்
இருப்பது எல்லாம் இதனால்தான்
என்பதை அவளுக்கு எப்படிச் சொல்ல?

– ரீடா டோவ் (1952 –

அமெரிக்க அரசின் அரசவைக் கவிஞராக (Poe Laureate) (1993 - 95) அறிவிக்கப்பட்ட முதல் ஆப்ரே அமெரிக்கர் என்ற பெருமைக்குரியவர். ஐந்து கவிதை தொகுதிகள் வெளியிட்டிருக்கிறார். இவரது Thomas an Beulah (1986) என்ற கவிதைத் தொகுதி புலிட்சர் பரி (1987) வென்றது. 60-களின் கருப்பு அழகியல் இயக்கத்தி குறுகிய வரையறைகளிலிருந்து தன்னை விடுவித்து கொண்டதாக, ஒரு சாராம்சவாத கருப்பு அடையாளத்த நிராகரிப்பதாக அறிவித்துக்கொள்பவர்.

### உதவிய நூல்கள் :


1. The Sexual Mountain and Black Women Writers - Calvin Hernton Anchor Press, New York, 1978.
2. Black Feminist Criticism : Perspectives on Black Wom Writers - Barbara T. Christian. Pergamon Press, 1985.
3. The Black Unicorn - Andre Lorde. Norton Paper back,197
4. Black Feeling, Black Talk - Nikki Giovanni. Broad Side Pre 1970.
5. Sister Fire : Black Womanist Fiction and Poetry - ed Charlotte Watson Shermon. Harper Perenninal, 1994.
6. The Book of American Negro Poetry - edited with prefa and critical notes by - James Weldon Johnson. Harcourt Bra Javonovich, 1959.


குறிப்பு : நிறப்பிரிகை இலக்கிய இணைப்பு-3ல் வந்த கரு இலக்கியம்: மொத்தத்திலிருந்து கொஞ்சம் சிதறல்கள் எ அறிமுகத்தின் தொடர்ச்சியாக இந்தக் கவிதைகள்.

படிப்பகம்

www.padippakam.com



காமத்தின் அரசியல் :

# விலகியபடியே நெருங்கிக்கொண்டு

ஆலிஸ் வாக்கர்

தமிழில் : நிறப்பிரிகை

***ஆலிஸ் வாக்கர் (1944) :*** இந்த நூற்றாண்டின் பிற்பகுதியின் மிகவும் முக்கிய ஆப்ரோ - அமெரிக்கப் பெண் எழுத்தாளர். ஜார்ஜியா மாநிலத்தின் ஈட்டன்விலி நகரில் ஒரு எளிய குத்தகை விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஆலிஸ் வாக்கரின் முதல் கவிதைத் தொகுதி Once அவரது 23வது வயதில் வெளிவந்தது. ஆப்ரிக்க அமெரிக்கப் பெண்களின் வாழ்க்கையைப் பற்றி எழுதுவதே தன் எழுத்தின் நோக்கம் எனப் பிரகடனப்படுத்திய ஆலிஸ் மூன்று வகைக் கருப்புப் பெண்கள் இதுவரை எழுத்தில் சித்திரிக்கப்பட்டதில்லை என்றார். முதல் வகையினர் உடல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் சுரண்டப்பட்டவர்கள். குறுகிய வாழ்க்கை இறுக்கத்தின் விளைவாக அவர்களில் பலர் பைத்தியம் பிடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இரண்டாமவர்கள் உடல் ரீதியான வன்முறையைக் காட்டிலும் உள ரீதியான வன்முறைக்கு அதிகம் இலக்கானவர்கள். சொந்தக் கலாச்சாரத்திலிருந்து அந்நியப் படுத்தப்பட்டவர்கள். மூன்றாமவர்கள் தங்கள் மீது சுமத்தப்பட்ட ஒடுக்குமுறைக்கும் அப்பால் முழுமையை எய்தியவர்கள்குறிப்பு: இதர ஒடுக்கப்பட்ட குழுக்களுக்கான ஆக்க வெளிகளை உருவாக்கியவர்கள். அவரது முதல் நாவல் The Third life of Grange copeland (1970) முதல் வகைப் பெண்களைப் பற்றியது. மூன்றாம் வகைக் கருப்புப் பெண்களைப் பற்றிய The colour purple நாவலுக்கு 1982-ம் ஆண்டு புலிட்சர் பரிசு கிடைத்தது. 'தேசிய புத்தகப் பரிசு'-ம், 'அமெரிக்க புத்தகப் பரிசு'-ம் பரிசும் கூட இந் நாவலுக்குக் கொடுக்கப்பட்டது. எனினும் இந்தப் புத்தகம் பல விவாதங்களுக்கும் களமாகியது. முறை தகாப் புணர்ச்சி, (கருப்புக்) கணவர்களின் கொடுமை ஆகியவற்றை அவர் வெளிக் கொணர்ந்தது என்பதும் லெஸ்பிய நோக்கை அவர் கையாண்டதென்பதும் விமர்சனத்திற்குள்ளாயின. வெள்ளைப் பெண்ணியர்களின் கைப்பாவையாக ஆலிஸ் மாறிவிட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. கறுப்பர் வாழ்வின் பாலியல் அரசியலை மிகவும் நுண்மையாகப் பகுப்பாய்வு செய்த அற்புதமான ஆக்கம் என்கிற பெரும் பாராட்டையும் அந் நாவல் சந்தித்தது. ***ஸ்டீபன் ஸ்பீல்பர்க்*** அந்நாவலைத் திரைப்படமாக்கியபோது (1985) சர்ச்சைகள் தொடர்ந்தன.

*1965-1968 கால கட்டத்தில் மிகத் தீவிரமாக சிவில் - உரிமைப் போராட்டங்களில் பங்கு பெற்றார். ஜார்ஜியாவில் வாக்குரிமைப் பதிவுப் போராட்டங்களிலும் மிஸ்ஸிசிபியில் சமூக நல உரிமைகள் மற்றும் குழந்தைகள் நலப் போராட்டங்களிலும் முன்னணிப் பாத்திரம் வகித்தார் ஆலிஸ்.*

*இங்கேயுள்ள சிறுகதை/ முன்னுரை/ கட்டுரை எழுத நேர்ந்த பின்னணியை அவரே விவரிப்பதைப் படித்துப் பாருங்கள்.*

*இது* "You can't keep a good woman down" *என்கிற அவரது சிறுகதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.*

*வெளியீடு :* Harvest Brace & Company, 1971.

---

'போர்னோ கிராபி' பற்றித் தான் தொகுத்துக் கொண்டிருந்த "இரவைத் திரும்ப எடுத்துக்கொள்" என்கிற நூலின் மூன்றாம் உலகப் பெண்கள் குறித்த அத்தியாயத்திற்கு ஒரு முன்னுரை எழுதுமாறு லாரா லெடரர் என்னைக் கேட்டுக் கொண்டார் (1979). நான் ஒத்துக்கொண்டவுடன் ஆட்ரே லார்ட், லூயிசா டீஷ், டிரேசி ஏ கார்ட்னர் ஆகியோரின் மூன்று கட்டுரைகளை அனுப்பி வைத்தார். அவை என்னை ரொம்பவும் அசத்தின. விளைவு இந்தக் 'கதை' வடிவிலான முன்னுரை. தொகுப்பு வெளிவருவதற்கு முன்பாகவே இது தனியாகப் பிரசுரிக்கப்பட்டது.

'முன்னுரை' என்பதைவிட ஒரு 'கதை' என்கிற வகையிலேயே ஆற்றலோடு செயல்படுவதாக நான் உணர்கிறேன். எனினும் முன்னுரை என்றில்லாமல் கதைக்காகவே தேவையான தரவுகளைச் சேகரித்து எழுதியிருந்தேனென்றால் இது கொஞ்சம் வேறு மாதிரி வந்திருக்கலாம். வெள்ளை ஆண்களின் 'போர்னோ' வெள்ளைப் பெண்களை எவ்வாறு கொடூரமாக அணுகுகிறது என்பது இன்னும் கொஞ்சம் நீண்ட வரலாற்றுப் பார்வையோடு வந்திருக்கலாம். கருப்பு ஆண்களையும் பெண்களையும் பொது இடத்தில் கொல்வதற்கும் (Lynching) வெள்ளைப் பெண்களைப் 'போர்னோ'வில் பயன்படுத்துவதற்குமான தொடர்பை மறுக்காமலே நவீன போர்னோகிராபியின் பழமையான வேர்கள் கருப்புப் பெண்கள் அடிமையாக்கப்பட்ட கணத்திலிருந்தே தொடங்குகிறது என்பதை வற்புறுத்தியிருப்பேன். அடிமையாக்கப்பட்ட அன்றிலிருந்தே அவர்கள் 'போர்னோ' நோக்கில் பயன்படுத்தப்பட்டு வந்தனர். செக்ஸ், வன்முறை - சுருக்கமாக வெற்றி கொள்ளல் - ஆகியவற்றின் தர்க்கப் பூர்வமான குவியமாக வன்புணர்ச்சி இருந்து வந்துள்ளது.

பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வெள்ளை ஆண்களின் 'போர்னோ' வெளிப்பாட்டிற்குக் கருப்புப் பெண்கள் களமாக்கப் பட்டிருக்கிறார்கள். கருப்பு மனிதர்களை உற்பத்தி செய்பவர்களாகவும், சுகத்திற்காக வன்புணர்ச்சி செய்யப்படுபவர்களாகவும்,

படிப்பகம்

www.padippakam.com



உரிமையாளர்களின் லாபத்துக்குரியவர்களாகவும் மட்டுமே கருப்புப் பெண்கள் கருதப்பட்டனர். அடிமைகளின் உரிமையாளனுக்கு இதற்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தது. தென் அமெரிக்காவில் பழம் அடிமைச் சமூகங்களில் வெள்ளைப் பெண்களுக்குச் சமம் எனச் சொல்லத்தக்க வடிவில் கருப்புப் பெண்களை உற்பத்தி செய்து அதிக விலையில் விற்றார்கள். வெள்ளைக் கனவான்களின் கையில் இந்தப் பெண்கள் பட்ட கொடுமைகளைச் சொல்லி மாளாது.

இந்தக் 'கதை' அல்லது 'முன்னுரை'யை ஆபாசமானது, 'போர்னோ' என்று அமெரிக்கக் கல்வி மாவட்டமொன்று தற்காலிகத் தடைவிதித்துள்ளது. எனினும் 'போர்னோ'வை இப்படி வெளிப்படையாக எதிர் கொள்ளும் போதுதான் எழுத்தாளர்கள் எழுத்தின் மூலமாகவே உரிய பங்களிப்புச் செய்கிறார்கள் என நான் நம்புகிறேன். இனி 'கதை' அல்லது 'முன்னுரை'...

- ஆலிஸ் வாக்கர்

நீண்ட வேலை நாளை அலுவலகத்தில் கழித்துவிட்டு ஒரு நடுத்தரவயதுக் கணவன் வீட்டுக்கு வருகிறான். கதவைத் திறந்த மனைவி அவனை வரவேற்று இரவு உணவு தயார் எனச் சொல்கிறாள். அவன் நன்றி சொல்கிறான். ஆனால் முதலில் அவன் குளியலறைக்குச் செல்ல வேண்டும். குளியலறையில் 'கம்மோட்'டில் உட்கார்ந்து கொண்டு பையில் கொண்டு வந்திருந்த 'ஜிவ் பாய்' இதழை எடுத்து விரிக்கிறான். அந்த இதழில் இருந்த இரு பெண்களின் 'போஸ்'கள் அவனை எழுச்சி கொள்ள வைக்கின்றன. பொன்னிற மேனி, இறுகத் தழுவிய இடுப்புக் கச்சை, அழைக்கும் விழிகள் அவனைக் கிறங்க அடிக்கின்றன. விரல்கள் அவனது ஆண்குறியைத் தடவுகின்றன. அதே சமயம் அவனது அடிவயிறு கலக்குகிறது. உடனடியாக அவன் கழித்தாக வேண்டும். குளியலறையில் கழிந்த அந்தச் சுகமான பத்து நிமிடங்களுக்குப் பின்பு அவன் களைத்துப் போய், தணிந்து வெளியே வருகிறான். இரவு உணவை எதிர்பார்த்து வயிறு பசிக்கிறது.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு குளியலறைக்குச் சென்ற அவனது மனைவி நனைந்து கிடந்த அந்த இதழைப் பார்க்கிறாள். பலவிதமான உணர்ச்சிக் கலவைகளோடு அதைப் புரட்டுகிறாள். அவள் கருப்பு நிற முடியும் விழிகளும் உள்ள மாநிறப் பெண். இதழிலிருந்த பொன்னிற வெள்ளைப் பெண்களைப் பார்க்கிறாள். என்னோடு உறவு கொள்ளும் போதும் அவன் இவர்களைத்தான் நினைத்துக் கொண்டிருக் கிறானா?

"இதை ஏன் வாங்கி வருகிறாய்?" : அவள்.

"அது ஒண்ணும் பெரிய விசயமில்லை" : அவன்.

"ஆனால் அவை என்னை மிகவும் பாதிக்கின்றன" : அவள்.

"நீ ரொம்பவும் (அ) அற்பம் (ஆ) தேவையற்றதை யோசிப்பவள் (இ) கேலிக்குரியவள் - நான் உன்னைக் காதலிப்பது உனக்குத் தெரியுந்தானே" : அவன்.

ஆனால் நீ காதலிப்பது என்னையா, அந்தப் பெண்களைத் தானே? என அவள் கேட்கவில்லை. காகிதப் படங்களைப் பார்த்துத் தான் பொறாமைப்படுவதாக அவளால் காட்டிக்கொள்ள முடியாது. தான் கண்ணுக்குத் தெரியாமல் ஆகிவிட்டதாக, ஒதுக்கப்பட்டதாக, கண்டு கொள்ளப் படாததாக உணர்கிறாள். அவன் சொன்னது சரிதான். நான் வளர வேண்டும். சரிசெய்து கொள்ள வேண்டும். அலைகள் எழும் திசையில் நீந்த வேண்டும்.

★ ★ ★

அவளை, அவள் சொல்ல விரும்பியதைத் தா
புரிந்து கொண்டதாக அவன் நினைக்கிறான். அவளத
பிரச்சினை 'ஜிவ் பாய்' இதழிலுள்ள வெள்ளைப் பெண்களி
படங்கள்தான்.

அடுத்த நாள் வெண்கல உடம்பும், தேன் வண்ண
மேனியும் உடைய கருப்புப் பெண்கள் நிரம்பிய 'ஜிவர்
இதழைக் கொண்டு வருகிறான். குளியலறையில் அந்த
சுகமான பத்து நிமிடங்கள்.

★ ★ ★

அந்த இதழை வைத்துக் கொண்டு அவள் நிற்கிறா
கையில் ஒரு சூட்கேசும், சுருட்டி வைக்கப்பட்ட 'வால் ஸ்ட்ரீ
ஜோர்னல்' இதழையும் வைத்துள்ள நன்கு உடை உடுத்தி
ஒரு கருப்பு ஆணின் கால்களும் ஷூக்களும் அந்த இதழி
அட்டையில் மின்னுகின்றன.

அந்த இதழைப் புரட்டிப் புரட்டி அவனது போ
எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது எனப் பார்க்கிறா
அவனது காலருகில் தன்னைப் போல ஒரு மாநிறப் பெ
தலை இருப்பதுகூடத் தெரியாத வண்ணம் சுருண்டு திரும்பி
கிடக்கிறாள். அவளது மின்னும் உடல் மட்டும் - முதுகு
புட்டமும் - அவனது காலடியில் சுருண்டு கிடக்கும் மல
உருண்டையாகத் தோற்றமளிக்கிறது.

★ ★ ★

அவன் அலுவலக வேலையாக நியூயா
சென்றுள்ளான். மனைவியையும் கூடவே அழைத்
சென்றுள்ளான். 42வது தெருவை ஆர்வத்தோடு அவளுட
பகிர்ந்து கொள்கிறான். "கவனி" அவன் சொல்கிறான். "எல்ல
எவ்வளவு சுதந்திரமாக இருக்கின்றன. 'பால்ட'னிலிரு
(அவர்களின் சிறிய நகரம்) நாம் எவ்வளவு வி
வந்துவிட்டோம்." பொன்னிற மேனிப் பெண்கள், வேசி
கருப்பு மாமாக்கள் முதலியோர் வீதியில் அலைவன
கண்டு அவன் உற்சாகத்தில் மிதந்தான். கருப்பு வேசிகள
குட்டைப் பாவாடைகள், அவர்களின் நீண்ட முடி - நிச்
மாகப் பொய் முடி. ஆனால் பொன்னிற முடி - அவ
மேலும் உற்சாகம் கொள்ள வைத்தது. அவள், அவனுக்
பின்னால் ஒரு மாதிரி நடந்து வந்து கொண்டு இருந்த
அந்த ஆச்சரியங்களை அவனே முதலில் சந்திக்கட்
அவளது கண்களைக் கவர்ந்த ஒரு கடையின் சன்னல் (
அவள் நின்றுவிட்டதை கொஞ்ச தூரம் போன பின்பு
அவன் கவனித்தான். அவள் தனியாக நின்று கொண்டி

படிப்பகம்

www.padippakam.com



கிறாள். இரண்டு மாமாக்கள் அவளை நெருங்கி விசாரிக்கின்றனர். யார் அவள், எங்கே இருக்கிறாள். "இங்கேதான் வேலை செய்கிறாயா?"

அவன் திரும்பி ஓடிவந்து அவள் கரத்தைப் பற்றிக் கொள்கிறான். இந்தக் கேள்விகளில் தொனித்த பாராட்டில் அவன் பெருமை கொள்கிறான். பின்பு அவளோடு அதைப் பகிர்ந்து கொள்கிறான். "உனக்குத் தெரியுமா? நீ அவ்வளவு கவர்ச்சிகரமாக இருக்கிறாய்!"

அவளால் நகர முடியவில்லை. அவள் முகம் கஷ்டத்தையும் வியப்பையும் வெளிக் காட்டியது. "சரி இங்கே பார்" என அவள் அங்கிருந்த நான்கு பிளாஸ்டிக் பொம்மைகளைச் சுட்டிக்காட்டினாள். ஒன்று மெல்லிய 'ஃபாரா ஃபாசெட்' பொம்மை – ஆசனவாய் பரிசோதனைக்காக குனிந்திருக்கும் போசில்; மற்றது ஒரு 'ஓரியன்டல்' – ஒரு மாதிரி மூடிய கண்களோடும் சிவந்த உறிஞ்சு கிண்ணம் போல துருத்திய உதடுகளோடும் இருந்த – பொம்மை; இன்னொன்று ஒரு பெரிய 'எஸ்கிமோ' பெண் – கழுத்து, கால்கள் மற்றும் பெண்ணுறுப்பைச் சுற்றிக் கம்பளிக் குஞ்சங்களோடு; கடைசியாக ஒரு கருப்புப் பெண் – கருப்பு முழுசாக, வால் கூட நறுக்கப்படாத சிறுத்தைத் தோலொன்றை உடுத்திக் கொண்டு. நான்கும் ஆளுயரப் பொம்மைகள். இந்தப் பொம்மைகளின் செக்ஸ் உறுப்புகளின் பயன்பாடு ஒரு அட்டையில் விளக்கமாக அச்சிடப்பட்டு தொங்கவிடப்பட்டிருந்தது கண்ணாடி வழியே தெரிந்தது.

அவளுக்கு இவை பயங்கரக் கனவுகளில் வருவன போல் தோன்றின – ஒரு வேளை அந்தப் பொம்மைகள் எல்லாம் புன்னகைத்துக் கொண்டிருந்ததால் அப்படித் தோன்றியிருக்கலாம். இனி சாகும்வரை இவை அவள் கண்களில் நிழலாடிக்கொண்டேயிருக்கும். அவனுக்கும்கூட இந்தக் காட்சி அதிர்ச்சியை அளித்தது. ஆனால் ஒரு வகையான குயுக்தியான ஆர்வத்தை அது அவனுள் எழுப்பியது. இன்னொரு முறை இந்த வீதிக்கு அவளில்லாமல் அவன் மட்டும் தனியாக வரவேண்டும் என நினைத்துக் கொண்டான். அதற்கு முன் அவள் இது மாதிரிக் காட்சிகளைப் பார்ப்பதைத் தடுக்க வேண்டும். சீக்கிரமாக இந்த வீதியை விட்டு அவளை தள்ளிக்கொண்டு போக வேண்டும்.

சற்று நேரத்திற்குப் பின்பு ஒட்டல் அறையில் அவள் டிவி. பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டு கருப்புப் பெண்கள் அவர்களது சமீபத்திய 'ஹிட்'களைப் பாடிக் கொண்டிருந்தார்கள். முதல் பெண் தங்க வண்ண ஆடை அணிந்திருந்தாள். (ஏனெனில் அவள் பாடிய பாட்டு "கட்டித் தங்கம்!") இருந்த போதிலும் அவள் தன் காலில் ஒரு சங்கிலி அணிந்திருந்தாள். ஆம் மனைவியின் கண்ணுக்கு அந்தக் கருப்புப் பெண் சங்கிலி அணிந்திருப்பது போலத்தான் தெரிந்தது – ஏனெனில் அப்போது அவள் பாடிக் கொண்டிருந்தது: "எனது சுதந்திரத்திலிருந்து எனக்கு விடுதலை கொடு. என்னை அந்த மரத்தில் சங்கிலியால் பிணை..."

அவள் கணவனிடம் கேட்டாள். "இது பற்றி என்ன நினைக்கிறாய்?"

அவன் சொன்னான் "அவள் ஒரு முட்டாள்."

சுற்றிலும் துப்பாக்கிகளும் ராக்கெட்டுகளும் வெடித்துச் சிதறிக் கொண்டிருக்கும் பின்னணியில் இரண்டாவது பெண், "தயாராகு; குறிவை, சுடு – என் பெயர் வேட்கை" எனப் பாடியதைக் கேட்டுக் கொண்டிருந்த அவளுக்கு, "உன் காதலால் என்னைச் சுடு" என்கிற வரி எல்லாவற்றையும் விளக்குவதாகத் தோன்றியது.

அவள் நம்பிக்கையற்றிருந்தாள்.

அவள் ஒரு கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். மாநிறமும் கருப்பும் கலந்த உருண்ட வடிவம், சுருண்ட குட்டை முடி, கருப்புக் கண்கள்... தான் அழகாயில்லை என முட்டாள்தனமாக முடிவு செய்து கொண்டாள்.

'Nigger' என்ற சொல்லை யாரும் உச்சரிப்பதைச் சகித்துக் கொள்ள முடியாததும், 'மரிஜ்வானா' வைக் கண்டு அஞ்சுவதும் அவளது மற்ற பிரச்சினைகள். இந்தப் பிரச்சினைகள் அவளை அவள் அம்மா மாதிரி வயதான வளாக்கி விட்டதாக உணர்ந்தாள். அவள் அம்மா 'செக்ஸை' நேசிப்பவள் – இதை அவள் ரொம்பத் தாமதமாகத்தான் தெரிந்து கொண்டாள். ஆனால் ரொம்பவும் மதப் பற்றுடையவள். சீட்டு விளையாடுவதைப் பாவம் எனவும் சாராயத்தைக் கொடூரம் எனவும் நினைப்பவள். அவள் அம்மாவை தன் கணவன் 'செக்ஸி' எனக் கருதமாட்டான் என அவள் நம்பினாள். அவளுக்கும் வயதாகிக் கொண்டிருந்ததால் இந்த எண்ணம் அவளை அச்சுறுத்தியது. தான் அம்மாவாக மாறுவதைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவளுக்கு ஒரு உண்மை உறைத்தது. தனது நரைக்கும் தலையை சராசரி உருவை மிகக் கவனமாகச் சிங்காரித்துக்கொண்டு படுக்கைக்குப் போகும் அவள் தாய், தனது தந்தையை இன்னும் இரவில் தன்னைச் சுவைக்க வைக்கும் அவள் தாய் ரொம்ப 'செக்ஸி' என்கிற உண்மைதான் அது.

இது அவளுக்கு ஒரு ஆறுதலை அளித்தது. போராடுவது என தீர்மானித்துக் கொண்டாள்.

ஆழ்ந்த சிந்தனையிலும் அமைதியிலும் அவள் தோய்ந்துபோனதற்குப் பின்னணியாக உள்ள முடிவை அறியாத அவள் கணவன் அவளிடம் சொன்னான். "இந்த உலகில் இம்மாதிரியான விசயங்களுக்கெல்லாம் கவலைப் படுகிற ஒரே கருப்புப் பெண் நீ ஒருத்திதான்."

அவள் சொன்னாள்: "ஏ, கருப்பு மனிதா, ஆட்ரே லார்டின் இந்தக் கட்டுரையைப் படித்துப் பார்."

அவன் அதைக் கண்டுகொள்ளாதிருக்க முனைகிறான். அவள் வற்புறுத்துகிறாள்.

அவன் படிக்கத் தொடங்குகிறான். "நான் விரும்பும் பெண்ணின் உடலுக்கு எதிராக சூரிய ஒளிக்குள் நகரும் போது..." என்னும் வரிகளைப் படிக்கும்போது அவன் தலையை உதறிக் கொள்கிறான். "கொஞ்சம் பொறு... 'ஆட்ரே' என்று யாராவது ஆணுக்குப் பெயர் வைப்பார்களா? அது 'ஆந்தரே'யாக இருக்க வேண்டும்" என்றான்.

"அது ஒரு பெண்ணின் பெயர்... மிச்சத்தையும் படி" என்றாள் அவள்.

பக்கங்களை முரட்டுத்தனமாகப் புரட்டிக் கொண்டே அவன் சொன்னான்: "ஒரு பால் புணர்ச்சிக்காரிகளிடமிருந்து

படிப்பகம்

www.padippakam.com



நான் ஒன்றும் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை."

இதற்காகத்தான் அவள் அமைதியாகக் காத்திருந்தாள். ஜிவ் பாய், ஜிவர்ஸ் இதழ்களைக் கொண்டு வந்து அவன் முன் வீசினாள். இரண்டிலும் யாரோ பெண்கள் தங்களுக்கு யாரென்று கூடத் தெரியாத மற்ற பெண்களை அனுபவித்துக் கொண்டிருந்தனர். இப்போது அவள் கட்டுரையை எடுத்து வாசித்தாள்:

"காமம் குறித்த கடைசி கருத்தாக்கத்திற்கு இது என்ன இட்டுச் செல்கிறது. ஒருவருக்கொருவர் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது என்பது ஏதோ 'கிளீனெக்சை'ப் பயன்படுத்துவது போல மற்றவர்களது உணர்வுகளைப் பயன்படுத்திக் கொள்வதல்ல. நமது அனுபவகங்களின் அடிப்படையில் இதை இன்னொரு விதமாகப் பார்த்தால் காமமோ இல்லை வேறெதுவோ நம்மோடு பங்கேற்பவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது என்பதைக் காட்டிலும் பயன்படுத்திக் கொள்வதுதான் நடைமுறையாக இருக்கிறது என்பது விளங்கும். பயன்படுத்தப்படுவதின் சம்மதத்தைப் பெறாமல் அதைப் பயன்படுத்துவதென்பது அதைத் தவறாகப் பயன்படுத்துவதுதான்."

அவள் அந்தப் பகுதியை மீண்டும் அமைதியாக அமிழ்ந்து போய் தனக்குத்தானே வாசித்துக் கொண்டிருந்தாள். அவளறியாமல் அவள் மடியில் விரிந்து கிடந்த அந்த ஒரு பால் புணர்ச்சியாளர்களின் படங்களை அவள் கைகள் பற்றியிருந்தன. அவன் வருத்தத்தோடு அவளை நோக்கினான். அவள் உடம்பு வேறு யாருக்கோ சொந்தமாகி விட்டது போல உணர்ந்தான். அவர்களது திருமணத்தின் இரண்டாமாண்டு முதல் அவளை அவன் எப்படி அனுபவித்திருந்தானோ அது போல இனித் தொடர முடியாது என்பதை அவன் உணர்ந்தான். இந்தத் திருமணம் உடையப் போவது, இன்னும் தோதான உடல்களைத் தொடர்ந்து தேடப் போவது, வாய் பேசாத அடங்கிப் போகிற மனைவியைத் தேடிப் போவது எனக் காட்சிகள் அவன் கண்களில் விரிந்தன. அவள் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தால் அவன் ஒடுக்கப்படுவதை உணர்ந்தான். இதுவரை அவன் அனுபவித்து வந்த சுகத்தை மாற்றியமைப்பதற்கான அவளது போராட்டம் அவனது உரிமைகளைப் பறிப்பதாக உணர்ந்தான்.

★ ★ ★

இப்போது அவள் சமையலறைத் தொட்டிக்கு மேலாக ஆட்ரே லார்டின் வாசகங்களை ஒட்டுவதில் முனைந்திருந்தாள்.

காதலில் ஈடுபடும்போது அவனது கண்களை நேராகப் பார்க்க முயன்றாள். அவன் திரும்பப் பார்ப்பதைத் தவிர்த்தான். அவளில்லாமல் அவளை நெருங்கும் சுகம் ரொம்பக் கசப்பானது. தனிமையானது என்பது முதல் முதலாக அவனுக்கு உறைத்தது. திருடி வந்த இனிப்பை கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு சாப்பிடுவது போல உணர்ந்தான். இப்போதும் கூட அவன் வக்கிரம் ஓயவில்லை. ஒன்றுமில்லாததற்கு இது எவ்வளவோ பரவாயில்லை. அவளது போராட்டங்களும் நமக்கு ஒரு மாதிரியான சுகம்தான் என அவன் நினைத்தான்.

★ ★ ★

அடுத்த நாள் அவன் அலுவலகத்திலிருந்து திரும்பியபோது அவள் இன்னொரு கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தாள். லூயிசா டீஷ் எழுதிய "ஒரு அமைதியான கவிழ்ப்பு" என்பது அக் கட்டுரையின் தலைப்பு. "இன்னொரு ஒரு பால் புணர்ச்சிக்காரியா?" என்றான்.

"ஆம் உனது இன்னொரு சகோதரியுடையது" என அவள் பதிலளித்தாள். அவன் சாப்பிடக் கூடக் காத்திராமல் படிக்கத் தொடங்கினாள்:

**"கருப்பு அதிகார இயக்கத்தின்'** போது, கலாச்சாரக் கல்வி நடவடிக்கைகளில் கருப்பு உடல் மீது கவனம் குவிப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அந்தக் காலகட்ட முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று ஆப்ரிக்கத் தலையலங்காரங்களைப் பிரபலப்படுத்துவதாக இருந்தது. இந்தப் புதிய தலையலங்காரத்தோடு ஒரு புதிய சுயபிம்பம் ஒன்றும் ஒரு புதிய அணுகல் முறையும் உருவாகியது. திரைப்படத் துறையில் 'சூப்பா ஃப்ளை' முன் வைக்கப்பட்ட 'லார்ட் ஜேசுஸ் லுக்' 'கோன்கட்' தலை மற்றும் அவற்றோடு இணைந்த கண்ணோட்டங்கள் கருப்புச் சமூகத்திற்குள் தடையற்றுப் பெருக்கெடுத்தோடின. "ஷாப்ட்", "புளூஸ் இசைக்கும் பெண்" முதலிய திரைப்படங்கள் கருப்பு நாயகர்களை 'கோகேய்ன்' உறிஞ்சுபவர்களாகவும் முரட்டு முட்டாள்களாகவும் சித்தரித்தன. இத்தகைய திரைப்படங்களில் ஒரு கருப்புப் பெண் எப்போதும் வன்முறை வலைக்குள் சிக்கியிருப்பாள்...

ஒரு பிரபலமான பெர்க்லி அரங்கு "காதலின் அடிமைகள்" என்றொரு 'போர்னோ' (பாழ்ய்ர்- வணிக நோக்கிலான காமச் சுவையுடைய) திரைப்படத்தைத் திரையிட்டிருந்தது. அதன் விளம்பரங்களில் சங்கிலியால் கட்டப்பட்ட அம்மணமான இரு கருப்புப் பெண்களும் அவர்களுக்கு எதிரே சாட்டையோடு ஒரு வெள்ளை ஆணும் சித்திரிக்கப்பட்டிருந்தனர். இத்தகைய இனவெறி நிறைந்த ஒரு போர்னோ படம் எவ்வாறு கருப்பு இயக்கப் போராளிகளின் கண்களுக்குத் தப்பியது எனத் தெரியவில்லை..."

இந்தப் பெண் பற்றிய வாசகத்தைக் கூட அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. "கருப்பு அதிகார இயக்கம் பற்றி இந்தத் தேவடியாளுக்கு என்ன தெரியும்?" அவன் பொருமுகிறான். அப்பட்டமாகத் தன்னைப் புரிந்து வைத்துள்ளாளே, தன்னைப் பற்றிய எல்லா விசயங்களையும் தெரிந்து வைத்திருக்கிறாளே என அவள் மீது அவனுக்குக் கோபம் வந்தது. எடுத்துக்காட்டாக அவனது இப்போதைய இந்த முதலாளித்துவ வேலை என்பது கருப்பு அதிகார இயக்கத்தின் சாதனைதானேயொழிய அந்த இயக்கத்தில் அவன் பங்கேற்றுச் செயல்பட்டதால் கிடைத்தல்ல என்பது உண்மை அவளுக்குத் தெரிந்திருக்கிறது. அவள் தன் முடியை ஆப்ரிக்க ஸ்டைலில் மாற்றிக்கொண்டதும் கூட அவனுக்குத் தெரியும். அவன் எப்படி இருக்கிறானே

படிப்பகம்

www.padippakam.com



அப்படியே அவனை அவள் தெரிந்து வைத்திருந்ததால் அவள் எப்படி இருக்கிறாளோ அப்படியே அவளோடு காதல் செய்வது சாத்தியமில்லாமல் போய்விட்டதாக அவனுக்குப் பட்டது. அவள் எப்படி இருக்கிறாளோ அப்படியே அவளைக் **காதலிக்க** முடியாது. அழுத்தப்பட்ட அவனது உள்ளத்து மூலை ஒன்றில் அவள் **இன்னும்** கருப்பாக இருப்பதாகவும் அவன் வேறேதோ ஒரு தளத்திற்கு நகர்ந்துவிட்டதாகவும் உணர்கிறான்.

(இந்தப் புரிதலின் ஒரு சிறு தெறிப்பு அவனுக்கு உறைத்த போது அவன் நடுங்கிப் போனான். இன்னும் பல ஆண்டுகளுக்கு இந்த எண்ணத்தோடு அவன் போராடி அதைத் தடுத்தாக வேண்டும்! ஏதோ ஒரு வகையில் அதை அவன் உடனடியாக ஏற்றுக் கொண்டான் எனில் கருப்புப் பெண்களுக்கு எதிராக 'போர்னோ' பயன்படுத்தப்படுவதை அவன் மனம் ஏற்றுக் கொள்கிற அபத்தத்தை விளங்கிக் கொள்ள அது அவனுக்கு உதவி செய்யும். கருப்புப் பெண் களை வெறும் 'செக்ஸ்' அடிப்படையில் மட்டுமே அடை யாளம் காணும் முயற்சியில் அவன் எவ்வாறு தனது சொந்த கருப்புத் தன்மையிலிருந்து ஒதுங்கிக் கொள்கிறான் என்பதையும் அவன் புரிந்து கொள்ள முடியும்).

உண்மையில் அவள் ஒரு கருப்புப் பெண் விடுதலைக் கோட்பாடுடையவளானாலும் தன்னை ஒருபோதும் "பெண்ணியவாதியாக"க் கருதிக் கொள்வதில்லை. ஆப்ரிக்க அமெரிக்க கருப்புப் பெண்கள் எம்ம்ண்ய்ண்ள்ற் என்கிற சொல்லைப் பயன்படுத்துவதில்லை. வெள்ளைப் பெண்ணியர்களுக்கான சொல்லாக அது விளங்கியதால் இவர்கள் தங்களை ரர்ம்ஹய்ண்ள்ற் என அழைத்துக் கொண்டனர் மொழிபெயர்ப்பாளர். கருப்புப் பெண் விடுதலையாளர்களும் பெண்ணியர்கள் தான் - இன்னும் பரவலான பொதுவான அர்த்தத்தில். (இந்தக் கட்டுரையாளரும் கூட ஒரு கருப்புப் பெண் விடுதலையாளர் தான்) எனவே அவளது கணவன் அவளை "பெண்ணியவாதி" எனவும் "வெள்ளைப் பெண்களின் எடுபிடி" எனவும் "குளோரியா ஸ்டெய்னெம்மின் கையாள்" எனவும் "பிரா எரிப்பவள்" எனவும் தாக்கிய போது வியப்படைந்தாள். டைம்ஸ் சதுக்கத்தில் தங்களின் உயர்தூய்மைத் தத்துவங்களைப் பீற்றிக்கொண்டு அணிவகுக்கும் வெள்ளைப் பெண்களுக்கும் அவளுக்குமிடையில் என்ன மாதிரியான தொடர்பை அவன் நிலைநாட்ட விரும்புகிறான்?

(அந்த வீதிகளில் அவள் அடைந்த விடுதலை உணர்வு மட்டுமே இப்போது அவன் நினைவிலிருக்கிறது. பிளாஸ்டிக் பொம்மைக் கடை சன்னல் முன் அவள் நின்று கொண்டிருந்ததை மறந்துவிட்டான்). இப்படி ஒரு பால் புணர்ச்சிக் காரிகளுடனும், வெள்ளைக்காரிகளுடனும் புதிய தொடர்புகளை அவள் வளர்த்துக் கொண்டே போவாளானால் இந்த மண்ணிலேயே மிகவும் இழிவான ஒழுக்கமுறைக்கு ஆளான கருப்பினத்தைச் சேர்ந்த இந்த மனிதனின் நிலை என்ன? (இப்போது அவன் மிகவும் சுதந்திரமாக வெள்ளைப் பெண்களை ஆசைப் பார்வை பார்க்க முடிகிறதென்பதாலும் அவளுக்கு அத்தகைய சாத்தியங்கள் இல்லை என்பதால்தான் அவளை இன்னும் கருப்பாகவே இருப்பவள் எனவும் தான் மாறிவிட்டவன் எனவும் அவன் நினைத்துக் கொள்கிறானா?

இந்த எண்ணம் அவன் உண்மையிலேயே என்ன சொல்கிறா னோ அதைக் கோடிட்டுக் காட்டியது. அவன் மனைவிக்கு அது தெரியவில்லை). இதே வெள்ளை உடல்களால்தான் அவன் இத்தனை நாளும் பொது இடத்தில் வைத்து கத்தியால் குத்திக் கொல்லப்பட்டிருக்கிறான் (Lynch கருப்பர்களை பொது இடங்களில் வைத்துக் கொல்வது). இந்தப் போலீஸ், இந்த சிறைச்சாலைகள் தான் பல நூறு முறை அதைச் செய்தன. இன்னும் செய்து கொண்டிருக்கின்றன.

இந்தக் கணத்திற்காகத்தான் அவள் **டிரேசி கார்ட்னரின்** கட்டுரையைப் பாதுகாத்து வைத்திருந்தாள். டிரேசி இது பற்றி எல்லாம் யோசித்திருக்கிறார். தற்காலச் சூழலை வைத்து மட்டுமல்ல, வரலாற்று ரீதியாகவும் சிந்தித்துள்ளார். ஒரு கருப்பு உயிரி என்கிற வகையிலும் ஒரு பெண் என்கிற முறையிலும் அவருக்கு இழைக்கப்பட்டுள்ள அனைத்து அநீதிகளையும் கொடுமைகளையும் அறிந்து வைத்திருந்தார். அவர் தைரியமானவர். கோபம் நிறைந்தவர். ஆனால் அவனோ கோபத்தைக் காட்டிலும் சோர்வுக்கும் சுய மறுப்பிற்கும் இடம் கொடுத்தவன். டிரேசியின் சீறும் கோப நெருப்பில் இப்போது அவள் குளிர் காய்கிறாள்.

அவள் படிக்கத் தொடங்கினாள் :

"என்னுடைய அணுகல் முறையைப் பொறுத்த மட்டில் இனவெறி எல்லா இடத்திலும் பரவியுள்ளது. பெண்கள் இயக்கத்திற்குள்ளும் அது ஊடுருவியுள்ளது. எந்தக் கணத்தில் அது என் கண்ணில்படவில்லையோ அப்போது நான் அதுபற்றிப் பேசுவேன்... முதன் முதலாக அவ்வாறு நிகழும்போது நான் உங்களுக்கு அது பற்றிச் சொல்வேன்."

இது அவனுக்கு எந்தப் பொருத்தமுமில்லாத வேடிக்கைக் கூற்றாகத் தெரிந்தது முழங்காலைத் தட்டிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். ஒருபால் புணர்ச்சிக்காரி என்கிற ரீதியில் ஏதாவது சொல்லி மட்டம் தட்ட பெரு முயற்சி புரிந்தான். ஒன்றும் தோன்றவில்லை.

"அமெரிக்க அடிமைத் தனம் என்பது கருப்பு மக்களுக்கு மனித அடையாளத்தையே மறுப்பதாகவும் அவர்களது தேசிய உணர்ச்சியையும் குடும்ப உணர்வையும் கவிழ்ப்பதாகவும், பாதுகாப்பளிப்பவன் / பங்களிப்புச் செய்பவன் என்கிற பாத்திரத்தைக் கருப்பு ஆண்களுக்கு மறுப்பதாகவும் வெள்ளை ஆணாதிக்க அமைப்புக்குள் கருப்புப் பெண்களைப் பொருத்துவதாகவும் . . . இருந்தது."

அவள் சொன்னாள்: "வேறு வார்த்தைகளில் சொல்வ தானால் தாங்கள் தான் எல்லாவற்றிற்கும் மேலாக இருப்பதாக வெள்ளை ஆண்கள் நினைத்துக் கொள்கிறார்கள். மற்ற ஆண்கள் கீழ் நிலைகளிலிருந்து வாழ்க்கையை அனுபவிக் கிறார்கள்."

"சிவில் உரிமைப் போரின் முடிவு கருப்பு மக்களின் ஒரு "வடிவிலான" அடிமைத்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. அத்தோடு "வேலை உத்தரவாதமும்" அடிமை உரிமையாளர் அளிக்கும் பாதுகாப்பும் நின்று போனது. கருப்பர்கள் இப்போது சுதந்திரப் பிராணிகள். ஆனால் கருப்பர்களை குறிப்பாகக் கருப்பு ஆண்களை அச்சுறுத்து தலும் இழிவுசெய்தலும் புதிய நிலையில் தொடங்கியது. இப்போது ஒரு கருப்பு ஆண் ஒரு குடும்பத்தை வைத்துக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டு தனது தகுதியை நிரூபித்துக் கொள்ள முடியும். ஆனால் அவனையோ அல்லது அந்தக் குடும்பத்தையோ பாதுகாக்க, பராமரிக்க வழிகள்தான் இல்லாமல் போனது."

அவள் படிக்கப் படிக்க அவன் வெட்க உணர்வு கொண்டான். அவனது மனைவியின் காயம்பட்ட உணர்வு களை உணர்ந்து கொண்டான். அவள் உணர்ச்சியற்ற குர லில் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தாள் :

"சிவில் யுத்தத்திற்குப் பிறகு 'வெகுஜன நீதி' அதன் ஆட்சியைத் தொடங்கியது. அதாவது எந்தவித விசாரணை யும் இல்லாமல், சாட்சிகளும் ஆதாரங்களும் இல்லாமலே கருப்பு ஆண்களை எல்லோருக்கும் முன்பாக் குத்திக் கொல்வது, தலையை வெட்டுவது, ஆண்மை நீக்கம் செய்வது நிகழ்ந்தது. ஏதோ திருவிழாவுக்குப் போவதைப்போல கிட்டத்தட்ட ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட வெள்ளையர்கள் இந்தக் காட்சியைப் பார்க்கத் திரளுவார்கள். (அவள் ஒரு நிமிடம் நிறுத்துகிறாள். பெருமூச்செறிகிறாள்: தலையை வெட்டுவதா?) 1899-99க்கு இடைப்பட்ட பத்து ஆண்டு களுக்குள் 2000 கருப்பு ஆண்கள் இவ்வாறு குத்திக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கருப்புப் பெண்களும் கூட பலர் இவ்வாறு கொல்லப்பட்டு இருக்கிறார்கள். (இந்த வரியை அவள் வேகமாகப் படிக்கிறாள். உடன் மறந்து போகிறாள்). குத்திக் கொல்லப்பட்ட கருப்பு ஆண்களில் பாதிக்கு மேற்பட்டோர் பாலியல் வல்லுறவு செய்தவர்கள் அல்லது அதற்கு முயற்சித்தவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டனர்."

ஒரு பெண் இவ்வாறு குத்திக் கொல்லப்படுவதை அவனால் கற்பனை செய்ய முடியவில்லை. இத்தகைய சாத்தியத்தைக் கூட அவன் யோசித்துப் பார்த்ததில்லை. ஒருவேளை இதனால் தான் சங்கிலியால் பிணைக்கப்பட்ட கருப்புப் பெண்ணின் படம் அவனை அச்சுறுத்துவதற்குப் பதிலாக கிளர்ச்சியுறச் செய்கிறதா? தன் உடல் குத்திக் கிழிக்கப்படுவதென்பது நிறுத்தப்பட்டதேயில்லை என்பதால் தான் அவள் மனம் இந்தக் கணத்திலேனும் அந்த வரலாற்றை நினைவுகளிலிருந்து துடைத்தெறிய முயல்கிறதா? இந்தப் பழைய வரலாற்றின் தொடர்ச்சியாகத் தன் கணவனை இணைத்துப் பார்க்க அவள் தயாராக இல்லை.

அவள் படிக்கிறாள் :

"வெள்ளைப் பெண்ணோடு ஒரு கருப்பு ஆண் உடலுறவு வைத்துக் கொண்டால் அவள் விரும்பி வந்த போதிலும் அது வல்லுறவாகவே கருதப்படும். (படித்துக் கொண்டிருக்கும் போதே அவள் மனம் - நான் ஏன் எப்போதும் எனது மனிதன் ஒரு வெள்ளைப் பெண்ணுடன் உறவு வைத்துக் கொள்வதைப் பற்றியே படித்துக் கொண்டிருக்கிறேன், நினைத்துக் கொண்டு இருக்கிறேன், கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்? - என எண்ணியது). ஒரு வெள்ளைப் பெண்ணை அவன் தப்பித் தவறிப் பார்த்தாலே போதும் அது வல்லுறவுக்கான முயற்சியாகக் கருதப்படும்."

அவளது கடுகடுத்த வாசிப்பிற்கு ஆதரவு தெரிவிப்பது போல அவன் மிருதுவாகச் சொன்னான், "ஆம். நான் கூடப் படித்திருக்கிறேன். இடா. பி. எழுதியுள்ளதை. இடா.' பி.... அவரது முழுப் பெயரென்ன?

"இத்தகைய கொலைகள் மூலம் வெள்ளை மனிதன் தான் கருப்பு மனிதனை உடல் ரீதியாக, உயிர்க்கூறு ரீதியாகவே வெறுப்பதை காட்டிக் கொண்டான். அவனது உடல் நிறத்தை, அங்கங்களை, ஆண்குறியை எல்லா வற்றையும் வெறுத்தான். எனவே அவன் கருப்பு ஆணின் உடலைத் தாக்கினான். வெறி பிடித்த ஒரு காதலனைப் போல அவளது சதையைச் செதுக்கினான். ரொம்பவும் அந்தரங்க மாக, 'போர்னோ' நிலையில் அவனது உடலை மறுத்தான்-"

வெள்ளை ஆண்கள் கருப்பு ஆண்கள் மீது மேற்கொள்ளும் இத்தகைய அருவருக்கத்தக்க மனிதாபி மானமற்ற நடவடிக்கைகள் வெள்ளை ஆண்கள் சொந்த வாழ்க்கையிலும் போர்னோ கிராபியிலும் பெண்களிடம், குறிப்பாக வெள்ளைப் பெண்களிடம் அருவருப்பாகவும், மனிதாபிமானமற்றும் நடந்து கொள்வதோடு நேரடித் தொடர்புடையதாக உள்ளதென நான் நம்புகின்றேன். வெள்ளைப் பெண்கள் தங்களின் சொந்த வலிமையையும் அடையாளத்தையும் நோக்கி செயல்படுவதன் விளைவாக ஒரு மாதிரிப் பகட்டு அருவருப்புத் தன்மையுடையவர்களாகி விட்டனர். வெள்ளை ஆணின் ஆற்றலையும் ஆண்மையை யும் கருப்பு ஆணின் இருப்பு அச்சுறுத்துவது போல இப்போது பெண்களும் ஆகிவிட்டனர்."

"அந்தப் பெண் ஏதோ சொல்ல வருகிறாள்" என்று அவன் கூறுகிறான். 'ஜிவ் பாய்' இதழிலுள்ள படங்களைப் பார்த்து அல்லது தெருவில் செல்லும் வெள்ளைப் பெண்களைப் பார்த்து ஜொள்ளு விட்டு அவர்களைப் படுக்கையில் தள்ளுவது பற்றி நினைக்காத கணங்களில் அவர்களை இழிவுசெய்வது பற்றி அவன் அடிக்கடி சிந்தித்து வந்துள்ளான் என்கிற உண்மையை அவன் வாழ்க்கையில் முதன் முதலாக யோசித்துப் பார்த்தான். அமெரிக்காவில் வசிக்கிற ஒரு கருப்பு மனிதன் என்கிற வரலாற்றுப் பின்னணியில் யோசிக்கும்போது வெள்ளைப் பெண்களைப் புணர்வதும் அவர்களை இழிவு செய்வதும் ஒன்றோடு ஒன்று குழப்பக்கூடிய ஒரு செயல்தான் என்று அவன் நினைத்துக் கொண்டான். ஆனால் இந்தச் சிந்தனை அவன் தன்னைத் தானே எப்படிப் பார்த்துக் கொள்கிறான் என்பது பற்றி என்ன சொல்கிறது? இந்த எண்ணம் டிரேசியின்பால் எழுந்த பாராட்டுணர்வைச் சற்று அழுத்தி மூடியது. பதிலாக ஒரு குழப்பமான பார்வையை அவள் மீது வீசுகிறான். தன் மனைவியை அவளை அவளாகவே ஏற்று அவளோடு காதல் புரிவது - உண்மையில் எந்த மனித உயிரிகளையும், அவர்களை அவர்களாகவே ஏற்று அன்பு செய்வது - என்பது முற்றிலும் தன்னைத் தானே மறு பரிசீலனை செய்து கொள்ளும் ஆன்ம சோதனையைத் தேவையாக்குகிறது என்பதை அவன் தெரிந்து கொள்கிறான். இந்த எண்ணம் அவனை மயிர்க்கூச்செறியச் செய்கிறது.

அவள் தொடர்ந்து படித்தாள் :

"சில கருப்பு ஆண்கள் வெள்ளை ஆண்களின் பார்வைகளையும் மதிப்பீடுகளையும் மூளை முழுவதும் ஏற்றுக்கொண்டு வெள்ளைப் பெண்களை, பொன்னிற தேவதைகளை அமெரிக்காவின் வெற்றி அடையாளமாக போற்றுகின்றனர். சில சமயங்களில் அவன் தனது கருப்பு

படிப்பகம்

www.padippakam.com



பெண்ணோடு இருக்கையில் அவள் எவ்வாறு இழிவு செய்யப் பட்டுள்ளாள், தான் எப்படி அதைத் தட்டிக் கேட்பதற்கு அதிகாரமற்றவனாய் இருந்திருக்கிறோம் என்பதை நினைத்து வெட்கப்பட்டு ஒருவரோடு ஒருவர் இணைந்து நிற்பது ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக இருப்பது என்பதை நினைத்துக்கொள்கிறான்.

வெள்ளைப் பெண்களைப் பற்றி ப்ரான்ஸ் ஃபெனான் சொல்லியுள்ளார். "என்னைக் காதலிப்பதன் மூலம் நான் வெள்ளைப் பெண்களைக் காதலிக்கத் தகுதியானவன் என அவள் நிருபிக்கிறாள். நான் ஒரு வெள்ளை ஆணைப் போலக் காதலிக்கப்படுகிறேன். நான் ஒரு வெள்ளை ஆண். நான் அந்தப் பண்பாட்டை, வெள்ளையை, வெண்மையை, வெள்ளை அழகைத் திருமணம் செய்து கொள்கிறேன். எனது துழாவும் கரங்கள் அந்த வெள்ளை மார்பகங்களை வருடும்போது அவை வெள்ளைக் கலாச்சாரத்தை, அதன் பெருமையைத் தனக்குள் பற்றுகின்றன. அவற்றை எனக்குரியதாக்குகின்றன." ('வெள்ளைப் பெருமை' என ஃபெனான் எழுதியிருப்பார் என அவளால் நம்ப முடியவில்லை)

அவள் ஒரு கணம் அமைதியாய் இருக்கிறாள். பின் அவனைப் பார்க்கிறாள். "ஆக ஒரு கருப்புப் பெண் தனது கருப்பு ஆண் ஒரு 'ப்ளேபாய்' இதழை வரவேற்பதை மேசை மீது வைத்து செல்வதை எப்படி எடுத்துக் கொள்வாள்?"

முதன் முதலாக முதல் நாள் தன் மனைவி வாசித்த ஒரு வரியின் பொருள் அவனுக்கு விளங்குகிறது: " 'போர்னோ' தொழில் ஒரு கருப்புப் பெண்ணின் உடலைத் தனது சரண்டலுக்குப் பயன்படுத்திக் கொள்வது வெள்ளைப் பெண்ணின் உடலைப் பயன்படுத்திக் கொள்வதிலிருந்து பண்பு ரீதியாக வேறுபட்டுள்ளது." 'ஜிவர்ஸ்' இதழை அவனுக்கு முன் விரித்து, "இந்தப் பெண் உனக்கு எப்படி தோன்றுகிறாள்?" எனக் கேட்கிறபோது அது அவனுக்கு விளக்கமாகிறது.

'போர்னோ கிராபியி'ல் வெள்ளைப் பெண்கள் வெறும் "பொருள்"களாகக் கருதப்பட்டார்களெனில் கருப்புப் பெண்கள் "மிருகங்கள்" ஆகக் கருதப்படுகிறார்கள் என்பதை அவன் இதுவரை பார்க்க மறுத்திருந்தான். – ஏனெனில் அதை அவன் பார்ப்பதென்பது கருப்புப் பெண்களைப் பாதுகாக்க இயலாத கையாலாகாத் தனத்தை அவனுக்கு நினைவு படுத்துவதாகுமே! – வெள்ளைப் பெண்கள் மனித உயிரிகளாக அல்லாமல் வெறும் வெள்ளை உடம்புகளாகச் சித்தரிக்கப்படுகிறார்களென்றால் கருப்புப் பெண்கள் மலத்தைப் போலச் சித்தரிக்கப்படுகிறார்கள்.

அவன் சோர்வாக உணரத் தொடங்குகிறான். பெண்ணின் படங்கள் – கருப்பு, வெள்ளை எல்லாவிதமான பெண்களின் படங்கள் – எவ்வளவை அவன் கொண்டு வந்திருக்கிறான்? அதோடு, தவிர்க்க இயலாமல், தன்னைப் பற்றிய விளம்பரப் படங்களையே அல்லவா அவன் கொண்டு வந்திருக்கிறான்? போர்னோகிராபியில் கருப்பு ஆண்கள் எதை வேண்டுமானாலும், மலத்தைக்கூடப் புணரக் கூடியவர்களாக அல்லவா சித்திரிக்கப்படுகிறார்கள். பெருத்த உருவம், எதையும் புணரத் தயாராக இருக்கும் விறைத்த குறி– இவற்றின் மூலமாக அல்லவா அவன் வரையறுக்கப் பட்டிருக்கிறான்.

திரைப்படங்கள், பத்திரிகைகள் இவை கட்டமைத்துள்ள பாலியல் கற்பிதங்களை விட்டுவிட்டு எப்படி இனி காதல் புரியப் போபகிறோம் என அவனுக்கு விளங்கவில்லை. (இந்தப் பத்திரிகைகள் மற்றும் திரைப்படங்களின் கதாபாத்திரங்களின் செயல்பாடுகள் அவனுக்குத் தேவையற்றவை, பொருத்தமற்றவை). இவை அவனுக்கும் அவனது மனைவிக்குமிடையில் ஒரு திரையாய் புகுந்துவிட்டன. அவளது உடலின் மொத்தத்தன்மையும், அவளது உடல் ரீதியான முழுமையான இருப்பும் அவளிடமிருந்து அன்னியமாக்கப்பட்டன. அவளை காம இச்சையோடு பற்றும்போது கூட தன்னிச்சையாகவே அவன் தன் கண்களை மூடிக்கொண்டல்லவா இருந்திருக்கிறான். கண்களை மூடிக்கொண்டு . . . கசப்போடு முணுமுணுக்கிறான் . . . இங்கிலாந்தைக் கனவு காண்பது.

இத்தனை ஆண்டுகளாக அவன் தன்னைத் தானே புணர்ந்து கொண்டிருந்திருக்கிறான்.

★ ★ ★

**ஆட்ரே லோர்டை** முதலில் இருவருமாய்ச் சேர்ந்து படிக்கும் போது கன்னிமையை, செக்ஸிலிருந்து ஒதுங்கியிருத்தல் புனிதம் என்பதை மறுக்கத் தொடங்குகிறார்கள். எனினும் மூளையில் சேர்ந்து போனவற்றைச் சுத்தப்படுத்திக் கொள்வதற்கும், சேதங்களைத் தொகுப்பதற்கும், புண்களை ஆற வைப்பதற்கும் அவர்களுக்குக் காலம் தேவைப் படுகிறது. எப்படியிருந்தாலும் அவனுக்காக ஒரு போலித்தனமான எதிர்வினையை அவளால் உருவாக்க முடியாது. அவனுக்கும் கூட அது விருப்பமில்லை. தனியாக விடப்படும்போது தூக்கி எறிந்த அந்தப் பத்திரிகைகளை அவன் பசியோடு தேடி விழுகிறான். அவன் முன் விரிந்து கிடக்கும் சுவை ததும்பிய அழகிய பெண்களின் முன்னால் தன்னைத் தானே வருடிக் கொள்கிறான். ஆனால் தான் தெரிந்து கொண்டதை இனி அவனால் மறுக்க முடியாது. அவனது மனைவிக்கு என்னவெல்லாம் தெரியும் என அவன் தெரிந்து வைத்துள்ளானோ [illegible]. எல்லாப் பெண்களும் கருப்பு நீக்கி வெள்ளையாக்கப்பட்டு எல்லா ஆண்களும் தங்களை வெள்ளையாகவே பாவனை செய்துகொண்டு வாழ்கிற ஒரு கருப்பு தேசத்தின் கடற்கரையில் நடந்து கொண்டு அவனுக்குத் தெரிந்ததை அவனால் மறுக்க முடியாது.

அவள் திரும்பி வருவதற்கு ரொம்ப நேரத்திற்கு முன்பாகவே அவள் புத்தகங்களை அவன் படித்துக் கொண்டிருக்கிறான். தனியாக அவள் நடத்தும் போராட்டங்களையும் அவற்றைப் பகிர்ந்து கொள்வதில் அவனுக்குள்ள அச்சத்தையும் யோசித்துக் கொண்டிருக்கிறான். அவள் வருகிறபோது சூரிய ஒளியில் அவன் நெருங்குவது அவளது அறுபது சத உடம்பைத்தான். அவனது கண்களின் ஒளியில் அவளது கருப்புத் தோல் உறுதி செய்யப்படுகிறது. ●

படிப்பகம்

www.padippakam.com



# காமத்தின் பயன்கள் : காமம் ஓர் ஆற்றலாக, அதிகாரமாக

ஆட்ரே லோர்ட்

தமிழில் : நிறப்பிரிகை

*ஆட்ரே லோர்ட் (1934 1992):- உணர்ச்சி வேகமும் சொற்ச் செறிவும் மிக்க கவிஞர், கருப்பர், பெண்ணியப் போராளி, ஒரு பால் புணர்ச்சியர் (லெஸ்பியன்). கவிதைகளாகவும் உரைநடைகளாகவும் இவர் எழுதியவை பதிமூன்று தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. இவரது From a land where other people live என்னும் நூலுக்கு தேசிய நூற்பரிசு வழங்கப்பட்டது. பாலியல், அரசியல், இனவியல் மற்றும் பொருளியல் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் 'லெஸ்பியன்' மற்றும் 'கே' உரிமைகளுக்காகவும் வாழ்நாளெல்லாம் போராடியவர். உலகெங்கிலும் சுற்றித் திரிந்து முழங்கியவர். நியூயார்க் நகரிலுள்ள ஹண்டர் கல்லூரி உட்பட ஏராளமான சிறந்த கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியராகப் பணியாற்றியவர்.*

*சீனப் பெண்களின் காலை இறுக்கிய கட்டுகளைப் போல பெண்களின் சிந்தையை இறுக்கும் அரசியல் / பாலியலின் புனித விதிகளைத் தொடர்ந்து ஆய்வுக்குட்படுத்தி தூக்கி எறிந்து வந்த ஆட்ரே லோர்டின் முக்கிய கட்டுரை இது.*

*சமூகத்தால் மறுக்கப்பட்டும் பெண்களால் புறக்கணிக்கப்பட்டும் வந்துள்ள ஆற்றல் வளமாகிய - காமத்தை (EROTICA)-ப் பகுத்து ஆய்வு செய்கிற ஒரு பாலியல் பிரகடனம் இது. அவரது கவிதைகள் நம் எதிர்பார்ப்புகளைக் கவிழ்ப்பது போலவே இந்தக் கட்டுரை 'காமம்' என்கிற சொல்லின் சாத்தியங்களையும் அர்த்தங்களையும் விரிவாக்குகிறது; 'காமம்' என்பதின் பொருள் குறித்த நமது நம்பிக்கைகளையும் இது சிதறடிக்கிறது.*

*இக் கட்டுரை Marita Golden தொகுத்துள்ள Wild Women Don't Wears No Blues : Black Woman writers on Love, Men and Sex என்னும் நூலிலிருந்து (Double Day, New York, 1993) எடுக்கப்பட்டது.*

*இந்தக் கட்டுரையோடு மேலும் இரு கட்டுரைகளும் சேர்ந்துள்ள ஒரு தொகுப்பிற்கு* ***ஆலிஸ் வாக்கர்*** *எழுதிய முன்னுரையை இதே இதழில் வேறோரிடத்தில் காணலாம்.*

அதிகாரத்தில் பல வகைகள் உண்டு. பயன்படுத்தப் பட்டவை, பயன்படுத்தப்படாதவை, அங்கீகரிக்கப்பட்டவை, அங்கீகரிக்கப்படாதவை- இப்படி பெண்மை சார்ந்த உணர்வு சார்ந்த ஆழமான தளத்தில் நம் ஒவ்வொருவருக்குள்ளும் நிறைந்துள்ள ஓர் ஆற்றல் காமம். நமது வெளிப்படுத்தப்படாத அல்லது அங்கீகரிக்கப்படாத உணர்வின் ஆற்றலில் அது வேரோடியிருக்கிறது. எந்த ஒரு ஒடுக்குமுறையும் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்காக செய்கிற வேலைகளில் ஒன்று தான் ஒடுக்கி வைத்துள்ள பண்பாட்டில் மாற்றத்தை விளைவிக்கக் கூடிய வீரியமுள்ள ஆற்றல்களைச் சிதைத்து அழிப்பது. பெண்களைப் பொறுத்தமட்டில் இவ்வாறு நசுக்கப்படுகிற முக்கிய ஆற்றலாகக் காமம் விளங்குகிறது.

மேலைச் சமூகத்தில் மிகவும் கேவலப்படுத்தப்பட்ட தாகவும் இழித்துரைக்கப்பட்டதாகவும், கொடூரமாக உருவகிக்கப்பட்டதாகவுமுள்ள இந்த ஆற்றல் வளத்தை (காமம்) சந்தேகத்திற்குரிய ஒன்றாக நோக்குமாறு நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கம் ஆண்மையைக் காட்டிலும் பெண்மை இரண்டாம் பட்சமானது எனப் பறைசாற்றும் வகையில் மேலோட்டமான பாலுணர்வு என்பது பெண்மை யின் அடையாளமாக ஊக்குவிக்கப்படுகிறது. இன்னொரு பக்கம் காம உணர்வின் இருப்பிற்காகவே பெண்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்; வெறுப்புக்கும் அய்யத்திற்கும் உரியவர்களாக ஆக்கப் படுகிறார்கள்.

இந்தக் கருத்தின் அடுத்த கட்டமாக நமது வாழ்விலும் பிரக்ஞையிலும் காம உணர்வை ஒடுக்குவதுதான் பெண்கள் உண்மையிலேயே வலிமை பெறுவதற்கான வழி என நாம் நம்ப வைக்கப் பட்டிருக்கிறோம். ஆனால் இந்த வலிமை ஒரு மாயைதான். ஏனெனில் இந்த வலிமை ஆண்நிலை சார்ந்த அதிகார மாதிரிக்குள் கட்டமைக்கப்படுகிற ஒன்று.

மிகவும் ஆழமானதும் தர்க்கத்திற்கு அப்பாற்பட்டது மான நமது இந்த (காம) ஆற்றலை, ஒரு பெண் என்கிற முறையில், அய்யப்பட்டு வந்துள்ளோம். இது குறித்து ஆணுலகு நம் வாழ்நாளெல்லாம் நம்மை எச்சரித்து வந்திருக் கிறது. நம்முடைய இந்த ஆழமான உணர்வை தனது சேவைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என ஆணுலகு கருதி வந்திருக்கிறது. ஆனால் அதன் சாத்தியங்களை ஆய்வு செய்வதற்கு இந்த ஆழமே அச்சத்திற்குரிய ஒன்றாக அதற்கு இருந்து வந்துள்ளது. பழச்சாறை உறிஞ்சி வைத்துக்கொள்ளும் பச்சை ஈக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்குமாமே எறும்பு கள், அது போலப் பெண்களாகிய நம்மை, தேவைப்படும் போது உளவியல் ரீதியாகக் கறந்து கொள்ளும் நோக்கில் கீழ்ப்படிந்த ஒரு நிலையில் சற்றுத் தூரத்தில் வைத்திருந் தார்கள்.

ஆனால் மேலோட்டமான உணர்வே போதுமென்ற நம்பிக்கைக்குப் பலியாகாத பெண்களுக்கும், காம உணர்வை

www.padippakam.com



வெளிக்காட்டிக் கொள்ளத் தயங்காத பெண்களுக்கும் புத்துணர்ச்சியையும் புதுத்தூண்டலையும் அள்ளித்தரும் ஊற்றாகக் காமம் விளங்குகிறது.

காமம் என்பதைத் தவறான அர்த்தத்திற்குள்ளாக்கி பெண்களுக்கு எதிரான ஆயுதமாக ஆண்கள் அதனைப் பாவிக்கின்றனர். காமம் என்பது ஒரு குழப்பமான, அற்பமான, மனப்பிறழ்வுக்குரிய, நெகிழ்ச்சியான உணர்வாகக் காட்டப் பட்டது. எனவே நாமும் காமத்தை ஆற்றலுக்கும் அறிவுக்கு மான மூல வளமாகக் கருதாமல் அதனை அதன் நேரெதிரான 'போர்னோ கிராபி'யுடன் போட்டுக் குழப்பிக் கொண்டோம். ஆனால் உண்மையில் 'போர்னோ' என்பது காமத்தின் ஆற்றலை நேரடியாக மறுக்கக்கூடிய ஒன்று. ஏனெனில் உண்மையான உணர்வுகளின் ஒடுக்கத்தையே 'போர்னோ' குறிக்கிறது. உள்ளுணர்வுகளுக்கு (Feeings) புறம்பான மேலோட்டமான புலனுணர்வுகளுக்கே (Sensations) போர்னோ அழுத்தம் கொடுக்கிறது.

நமது வலிமையான உணர்வுகளின் கட்டற்ற நிலையோடு ஒப்பிடும்போது நமது சுயம் (Self) குறித்த உணர்தல் தொடங்குவதன் அளவையே காமம் என்கிறோம். ஒரு முறை அனுபவித்துணர்ந்த பின்பு எந்த ஒரு அகநிலை யான திருப்தியுணர்வுக்கு ஆசைப்படுகிறோமோ அதுதான் காமம். இந்த ஆழமான உள்ளுணர்வை முழுமையாக அனுபவித்து அதன் ஆற்றலைப் புரிந்து கொண்ட கையோடு பெருமையிலும் சுயமரியாதையிலும் நமக்குக் குறைவான எதையும் நாம் ஏற்க முடியாதவர்களாகி விடுகிறோம்.

நம்முள்ளிருந்து, நமது வாழ்வுகளிலிருந்து, நமது பணிகளிலிருந்து இவை ஒவ்வொன்றின் உச்சத்தையும் கோருவதென்பது எளிதான காரியமல்ல. நமது சமூகம் ஊக்குவித்து முன்நிலைப்படுத்துவது ஒரு வகையான சராசரித் தன்மையைத்தான். ஆனால் இந்த சராசரித் தனத்தைத் தாண்டிச் செல்ல வேண்டும். உன்னதத்தையும் ஒவ்வொன்றி லும் அதன் உச்சத்தையும் (Excellence) நோக்கி ஊக்குவிக்க வேண்டும். உணர்வுகள் பற்றிய அச்சத்திற்கு வழிவிடுவதும் சராசரியாகச் செயல்படுவதும் விருப்பற்றவர் களுக்கு மட்டுமே சாத்தியமாகும் சுக போகம். தமது விதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ள ஆசைப்படாதவர் களையே "விருப்பற்றவர்கள்" என்கிறோம்.

இந்த உன்னதத்தை நோக்கிய உந்துதலை நாம் காமத்திலிருந்து கற்றுக் கொள்கிறோம். தனக்குள்ளிருந்தும் பிறரிடமிருந்தும் சாத்தியமற்றதைக் கோருகிற நடவடிக்கை யாக இதைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். அப்படிக் கோரினால் அது யாரையும் முடக்கிவிடக் கூடியதுதான். காமம் என்பது நாம் என்ன செய்கிறோம் என்பதை மட்டும் பொருத்த பிரச்சினை அல்ல. மாறாக செயல்பாட்டில் நாம் எந்த அளவிற்கு ஆழமாகவும் முழுமையாகவும் உணர் கிறோம் என்பதைப் பொருத்த பிரச்சினை அது. நிறைவையும், முழுமையையும், திருப்தியையும் அடைகிற அந்த உணர்வை நாம் எந்த அளவிற்கு உணரச் சாத்தியம் என அறிந்து கொண்டவுடன் நமது வாழ்வியற் செயற்பாடுகளில் எது இந்த முழுமைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பதைக் கவனிக்க லாம்.

நமது வாழ்வையும் நமது குழந்தைகளின் வாழ்வை யும் அதிகச் சாத்தியங்களும் வளங்களுமுள்ளதாக ஆக்கு வதே நமது செயற்பாடுகள் ஒவ்வொன்றின் குறிக்கோளு மாகும். நமது எல்லாச் செயற்பாடுகளிலும் காமத்தைக் கொண்டாடும்போது எனது பணி (work) என்பது என் மீது திணிக்கப்பட்ட ஒன்றாக இல்லாமல் எனது விருப்பப்பூர்வ மான முடிவாகிறது; நான் விரும்பிய செயற்களமாகிறது; நன்றியோடு அதற்குள் நுழைந்து ஆற்றலோடு அதிலிருந்து எழுகின்றேன்.

இவ்வாறு ஆற்றலுள்ள அதிகாரம்பெற்ற பெண்கள் ஆபத்தானவர்கள் என்பது உண்மைதான். எனவேதான் காமம் குறித்த நமது விருப்பை உட்லுறவோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமெனவும் நமது வாழ்வின் பிற களங்களிலிருந்து அதைப் பிரித்தொதுக்க வேண்டுமெனவும் நாம் கற்பிக்கப் பட்டிருக்கிறோம். நமது பணிகளுக்குரிய காம வேர்கள் பற்றிய நமது கரிசனமின்மையும் நமது பணிகளில் முழுமையை எட்டுவதில் ஆர்வமின்மையும்தான் நமது பணிகள் வெறுக்கத் தக்கதாக மாறுவதன் காரணம். நமது பணிகளை நாம் எப்போதாவது விரும்பிச் செய்திருக்கிறோமா என யோசித்துப் பாருங்கள்.

மனிதனுக்குத் தேவையா என்பதை விடுத்து வெறும் லாபத்தின் அடிப்படையில் "எது நல்லது" என்பதை வரை யறுக்கிற ஒரு அமைப்பின் பயங்கரத் தன்மை எதில் அடங்கி யுள்ளதெனில் அது நமது பணியின் காம முக்கியத்துவத்தை, காம மதிப்பை, காமத்தின் வழியிலான ஆற்றலை, வாழ்வின் ஆர்வத்தை, வாழ்வின் திருப்தியை எட்டுவதை நமது பணியிலிருந்து நீக்கி ஒதுக்குவதுதான். மனிதத் தேவை என்பதை வரையறுக்கும் போது அதன் உள மற்றும் உணர்வு அடிப்படையிலான தேவைகளை ஒதுக்கி வரையறுப்ப வர்களும் கூட காமத்தின் வழியிலான ஆற்றலை மறுப்பவர் கள்தான். இத்தகைய கட்டமைப்பு நமது பணி என்பதை வெறும் தேவைகளின் போலியாகச் சுருக்குகிறது; நமக்கும் நமக்கு நெருக்கமானவர்களுக்கும் உணவையும் ஒழியு மிடத்தையும் சம்பாதிப்பதற்கான கடமையாக எளிமைப் படுத்துகிறது. இது ஒரு ஓவியரை அவரது கண்களைப் பிடுங்கிவிட்டு 'இன்னும் நன்றாக வரை' என ஆணையிட்டு வேடிக்கை பார்ப்பதற்கொப்பல்லவா? அது சாத்தியமில்லை என்பது இருக்கட்டும், ரொம்பவும் மோசமான கொடுமை யல்லவா?

நமது உலகம் இப்போதுள்ளவாறில்லாமல் வித்தியாச மாக இருக்க வேண்டிய வழிமுறைகளை பெண் என்கிற வகையில் நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது வாழ்வு மற்றும் பணிகளில் அடங்கியுள்ள அனைத்து அம்சங்களின் அடிப்படையான பண்பையே மறு மதிப்பீடு செய்ய வேண்டியதன் அவசியத்தைப் பற்றி நான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறேன்.

காமம் (Erotic) என்கிற இச்சொல் Eros என்கிற கிரேக்கச் சொல்லினடியாக உருவாகிறது. Eros என்பது

படிப்பகம்

www.padippakam.com



அன்பை அதன் எல்லா அம்சங்களிலும் உருவப்படுத்துகிறது. ஒழுங்கமைப்பில் பிறந்து படைப்பாற்றலையும் ஒத்திசைவையும் உருவப்படுத்துகிறது. எனவே நான் காமத்தைப் பற்றிப் பேசும்போது பெண்களின் வாழ்வு ஆற்றலை உறுதி செய்வது பற்றிப் பேசுகிறேன்; ஆற்றல் ஏற்றப்பட்ட அந்தப் படைப்பூக்கத்தைப் பற்றிப் பேசுகிறேன், நமது மொழி, வரலாறு, கலை, காதல், பணி, வாழ்வு எல்லாவற்றிலும் காமத்தின் அறிவு மற்றும் பயன்பாடு குறித்த மீள் உரிமையை நாம் கோரி நிற்கிறோம்.

பாலியலின் இரு நேரெதிரெதிரான பயன்பாடுகளாகிய 'போர்னோ' (காம இச்சையை வணிக மாக்குதல்) வையும் காமத்தையும் சமமாகக் காட்டுவதற்கு அடிக்கடி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய முயற்சிகளின் விளைவாக உளவியல் மற்றும் உணர்வியல் அம்சங்களை அரசியலிலிருந்து பிரித்து ஒதுக்குவதும் அவற்றை ஒன்றுக்கொன்று முரணானவைகளாகக் காட்டுவதும் வாடிக்கையாகிவிட்டது. அதே போல. உளவியல் மற்றும் உணர்வியல் சார்ந்த ஆற்றலையும் (Spiritual என்கிற சொல்லை Psychic and emotional என்கிற பொருளில் ஆட்ரே லோர்ட் பயன்படுத்துகிறார். Physic and emotional என்ற சொற்களை அடைப்புக்குறிக்குள் பயன்படுத்துகிறார். Spiritual என்பதை 'ஆன்மீகம்' என மொழியாக்கினால் நமது சூழலில் வேறு பொருள் கொள்ள வாய்ப்புள்ளதால் 'உளவியல் மற்றும் உணர்வியல் சார்ந்த' எனப் பயன்படுத்தப்படுகிறது. - நி.பி.) காமத்தையும் பிரித்து ஒன்றுக்கொன்று முரணாக்க நாம் முயற்சித்திருக்கிறோம். இதன் மூலம் உளவியல் மற்றும் உணர்வியல் சார்ந்த ஆற்றலைத் தட்டையாக்கி அதனைத் தெய்வீகத்தோடு இணைத்து (ஆன்ம ஆற்றல் என்றாக்கி) இன்மையை நோக்கிய நாட்டமாகச் சுருக்கி இருக்கிறோம். ஆனால் எதுவும் உண்மைக்கு அப்பாற்பட்டதல்ல. ஏனெனில் தெய்வீகம் என்பது அச்சத்தின் உச்சம்; மிகவும் அழிவுக்குரிய செயலின்மை. முழுமையான துறவு என்பதே தெய்வீகத்தில் முதன்மைப்படுத்தப்படுகிறது. இந்தத் துறவு என்பது சுய கட்டுப்பாட்டின் வெளிப்பாடல்ல; மாறாக அது சுய மறுப்பின் வெளிப்பாடு.

உளம் மற்றும் உணர்வு சார்ந்தவைகட்கும் அரசியலுக்குமிடையிலான பிளவும் கூடத் தவறானதுதான். காமம் குறித்த அறிவு பற்றிய நமது அரைகுறை ஆர்வத்தின் விளைவுதான் இது. ஏனெனில் உடல், உள்ளம் மற்றும் உணர்வு சார்ந்தவற்றை அரசியலோடு இணைக்கும் பாலம் காமத்தால் - புலனுணர்வால் - நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிற வலிமையான, ஆழமான, வளமான உடல் / உள்ளம் / உணர்வு சார்ந்த வெளிப்பாடுகளால் கட்டப்பட்டுள்ளது. அது நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருப்பதும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதுமான காதலின் உச்ச வெளிப்பாடு - அதன் ஆழமான பொருளில்.

நாம் ஆர்வத்தோடு சொல்கிற "அது எனக்குச் சரின்னு படுது" என்கிற சொற்றொடர் காமத்தின் வலிமையை ஒரு உண்மையான அறிவு என்ற வகையில் அங்கீகரிக்கிறது. ஏனெனில் இது எதை அர்த்தப்படுத்துகிறதோ, உணர்த்துகிறதோ அதுதான் எந்தப் புரிதலுக்கும் முதற்படியாக அமைகிறது. ஆழமான அறிவின் பிறப்பிற்கு உதவும் மருத்துவச்சியாக இந்த புரிதல் அமைகிறது. காமம்தான் நமது ஆழமான அறிவுக்குப் பாதுகாவலி, செவிலித்தாய் எல்லாம்.

என்னைப் பொறுத்த மட்டில் காமம் பல வழிகளில் செயல்படுகிறது. எந்த ஒரு ஆர்வத்தையும் மற்றவருடன் ஆழமாகப் பகிர்ந்து கொள்ளுவதால் பெறுகிற ஆற்றல் இவற்றில் முதன்மையானது. இன்பத்தின் பகிர்வு - அது உடல் சார்ந்ததோ, உளம் சார்ந்ததோ, அறிவு சார்ந்ததோ - பகிர்ந்து கொள்பவர்களுக்கிடையே பாலமாக அமைகிறது. அவர்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படாத இதர அம்சங்களின் புரிதலுக்கு அடிப்படையாக அமைகிறது; அவர்களுக்கிடையேயான வேறுபாடுகளின் அடிப்படையில் உருவான அச்சத்தைக் குறைக்கிறது.

இன்பத்தை, மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கான எனது தகுதியையும் திறமையையும் அடிக்கோடிட்டுக் காட்டுவதென்பது காமத்தின் அடுத்த முக்கியமான பணி. ஒலிக்கும் இசைக்கு என் உடல் நெளிந்து திறந்து கொள்வது போல, இசையின் ஆழமான லயத்தில் நான் கிறங்குவது போல நான் உணர்வு கொள்கிற ஒவ்வொரு தாளமும் காமவயப்பட்டு திருப்தியுறும் அனுபவத்தை நோக்கித் திறந்து கொள்கிறது. நடனமாடுவது, கவிதை எழுதுவது, ஒரு புத்தக அலமாரியைக் கோர்ப்பது, ஒரு கருத்தை ஆராய்வது ... என எல்லாவற்றிற்கும் இது பொருந்தும்.

நான் பகிர்ந்து கொண்ட சுயம் நான் எவ்வளவு அனுபவிக்கமுடியும் எனத் தெரிந்துள்ளேனோ அந்த இன்பத்தை அளக்கும் கருவியாகிறது; எனது உணர்வுத் திறன் பற்றிய நினைவூட்டியாக அது அமைகிறது; எனது இன்பத்திறன் குறித்த ஆழமான மாற்றிக் கொள்ள முடியாத புரிதலை அது ஏற்படுத்துகிறது. எனது மொத்த வாழ்க்கையையும் நோக்கி இந்தப் புரிதல் ஒரு கோரிக்கையை வைக்கிறது. இந்தப் புரிதலுக்குள் அதனை வாழ்ந்து தீர்க்கவேண்டும் என்பதுதான் அக் கோரிக்கை. திருமணம், கடவுள், மறுவாழ்க்கை என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு அது நடைபெற வேண்டும்.

காமம் பற்றிய அச்சத்தின் காரணங்களில் இது ஒன்று. படுக்கை அறை மட்டுமே இதனை அங்கீகரிக்கும் நிலை ஏற்பட்டதற்கும் காரணம் இதுதான் நமது வாழ்வின் அனைத்து அம்சங்கள் பற்றியும் நாம் ஆழமாக உணரத் தலைப்பட்டவுடன் நம்மிடமிருந்தும் நம்முடைய வாழ்க்கையின் தேடல்களிலிருந்தும் நாம் ஒன்றைக் கோருகிறோம். நாம் எத்தகைய இன்பத்திற்குச் சாத்தியமானவர்களாக இருக்கிறோமோ அதற்குத் தக அந்தத் தேடல்களும் வாழ்க்கைகளும் அமைய வேண்டும் என்பதே அக் கோரிக்கை. காம அறிவு நம்மை அதிகாரம் உடையவர்களாக ஆக்குகிறது. நமது இருப்பின் எல்லா அம்சங்களையும் ஆய்வு செய்யக் கூடிய உருப் பெருக்கிக் கண்ணாடியாக அது பயன்படுகிறது. அந்த அம்சங்களை நமது வாழ்வுக்குள் அவை பெறும் அர்த்தங்களின் அடிப்படையில் நேர்மையாக மதிப்பீடு செய்வதற்கு நம்மை அது உந்துகிறது. நமக்கு இது ஒரு பெரும் பொறுப்பாக அமைந்து விடுகிறது. நம் ஒவ்வொருவருக்

படிப்பகம்

www.padippakam.com



குள்ளிருந்தும் முன்னிலைப்படுத்தப்படும் இப் பொறுப்பு எந்தப் பிரச்சினையுமில்லாத அற்ப சுகத்திலிருந்தும் இழிந்த பாதுகாப்பிலிருந்தும் நம்மை மீட்கிறது.

இரண்டாம் உலகப் போரின் போது இறுக மூடப்பட்ட பிளாஸ்டிக் பைகளில் விற்கும் செயற்கை வெண்ணையை நாம் வாங்கி வருவோம். வெள்ளை நிறத்தில் அது இருக்கும். அத்தோடு மஞ்சள் வண்ணம் ஏற்படுத்துவதற்கான ஒரு பசை துணுக்கை வைத்திருப்பார்கள். மஞ்சள் வைரக் கல்லைப் போல அது மின்னும். செயற்கை வெண்ணையைக் கொஞ்ச நேரம் அப்படியே வைத்திருந்தால் மென்மையாகிவிடும். பின்னர் வெளியிலிருந்து அந்த மஞ்சள் பசையைக் கொஞ்சம் அழுத்தினீர்களானால் அது பைக்குள்ளேயே உடையும். அதன் அழுத்தமான மஞ்சள் நிறம் அந்த வெறுத்த வெண்ணைக்குள் பரவத் தொடங்கும். பின்பு அந்தப் பிளாஸ்டிக் பையை முன்னும் பின்னும் மேலும் கீழும் இலேசாய் பிசைந்து கொண்டே இருந்தோமானால் பையில் இருக்கும் ஒரு பவுண்டு வெண்ணையும் மஞ்சளாகிவிடும்.

பிளாஸ்டிக் பையில் மஞ்சள் வண்ணத் துண்டு வைக்கப் பட்டிருப்பதுபோல எனக்குள் காமம் வைக்கப் பட்டுள்ளது என நான் கருதுகிறேன். அழுத்தி வைக்கப்பட்ட அந்தச் சிறு துணுக்கிலிருந்து அது வெளியே வந்தவுடன் அது எனக்குள் பாய்ந்து என் வாழ்வை வண்ணமய மாக்குகிறது. எனது எல்லா அனுபவங்களையும் உயர்த்தி, நுண்மையாக்கி வலிமையூட்டும் ஆற்றலை அது வாரி வழங்குகிறது.

கட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்ட நமது எதிர் பார்ப்புகளிலிருந்து எழும் உந்துதல்கள் நம்மைச் செயலுக்குள் தள்ளுகின்றன. நமது தேவைகளுக்கும், வேட்கைகளுக்கும், அறிதல்களுக்கும் தக நம்து வாழ்வை உயர்த்திக் கொள்ள அச் செயல்கள் உதவுகின்றன. ஆனால் நமது ஆழமான ஆசைகள் ஆபத்தானவை என நமக்குள் ஊட்டப்பட்டுள்ள அச்சமோ நம்மைப் பணிவுள்ளவர்களாக, விசுவாசமான வர்களாக அடங்கிப் போகிறவர்களாக வைத்திருக்கிறது. ஒரு பெண் என்கிற அடிப்படையில் நம்மீது மேற்கொள்ளப்படுகிற ஒடுக்குமுறையின் பல்வேறு அம்சங்களையும் ஏற்று அடங்கிப் போகும் நிலைக்கு நம்மை இட்டுச் செல்கிறது.

நாம் நமக்கு வெளியே வாழ்கிறபோது - அதாவது நமது தேவைகள், உள் அறிதல்கள், நமக்குள்ளிருந்து நம்மை வழி நடத்தும் காம வழிகாட்டிகள் ஆகியவற்றை ஒதுக்கி விட்டு புற ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்கிறபோது - நமது வாழ்வு நமக்கு அந்நியமான புற வடிவங்களால் கட்டுப்படுத்தப் படுகிறது. மானுடத் தேவைகளுக்கல்லாமல் இந்த அமைப்பின் தேவைகளுக்குத் தகுந்த மாதிரி நாம் தகவமைக்கப் படுகிறோம். மானுடத் தேவைகளே புறக்கணிக்கப்படும் போது நமது தனிமனிதத் தேவைகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நமக்குள்ளி ருக்கும் காமத்தின் ஆற்றலோடு இணைந்து நமக்குள்ளிருந்து வெளிப்போந்து நாம் வாழத் தொடங்கும் போதும் இந்தக் (காம) ஆற்றல் நம்மைச் சுற்றியுள்ள உலகின் மீதான நமது செயற்பாடுகளை வழிநடத்தி ஒளியூட்டும் போதும் நமக்கு நாம் பொறுப்பானவர்களாகத் தொடங்குகிறோம்: பொறுப்பானவர்களாக ஆவது என்பதை அதன் ஆழமான பொருளில் சொல்கிறேன். ஏனெனில் நாம் நமது ஆழமான உணர்வுகளைப் புரிந்து ஏற்கத் தொடங்கும் போது சுயமறுப்பிலும் துயரங்களிலும் திருப்தியுறும் மனநிலையை யும் இந்தச் சமூகத்திற்குள் நமக்கு வழங்கப்பட்டுள்ள ஒரே மாற்றாக விளங்கும் உணர்ச்சியற்ற மரத்துப்போன மன நிலையையும் நாம் தூக்கி எறிய வேண்டியவர்களாகி விடுகிறோம். ஒடுக்கு முறைக்கு எதிரான செயற்பாடுகள் என்பது நமது சுயத்தோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. உள்ளிருந்து ஆற்றலையும் உத்வேகத்தையும் பெறகிறது.

காமத்தோடு இணைந்து நிற்பதன் வழியாக அதிகாரமற்ற, ஆற்றலற்ற, பலவீனமான நிலையை ஏற்றுக் கொள்ளும் மனநிலை மீதான விருப்பை நான் விடத் தொடங்கினேன். என் மீது திணிக்கப்பட்ட எனக்குரியதல்லாத பண்புகளாகிய விரக்தி, தோற்றுப் போதல், சுய மறுப்பு, சோர்வு, சுய அடையாள அழிப்பு ஆகியவற்றின் மீதான விருப்புகள் குறையத் தொடங்கின.

உலகில் சில ஏற்றத்தாழ்வுகளை ஏற்றுக் கொண்டாக வேண்டுமென்றே வைத்துக் கொள்வோம். சுவற்றுக்கு வண்ணம் தீட்டுவதற்கும் கவிதை எழுதுவதற்குமிடையில் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்த வேறுபாடுகள் வெறும் அளவு அடிப்படையிலானவைதான். என்னைப் பொறுத்த மட்டில் ஒரு நல்ல கவிதை எழுது வதற்கும் நான் விரும்பும் ஒரு பெண்ணின் உடலை நோக்கி சூரிய ஒளிக்குள் நகர்வதற்கும் எந்த வேறுபாடும் இல்லை.

காமம் குறித்த இறுதிக் கருத்துக்கு இது என்னை இட்டுச் செல்கிறது. ஒருவர் மற்றவரது உணர்வின் ஆற்றல்களைப் பகிர்ந்து கொள்வதென்பது மற்றவரது உணர்வுகளைப் பயன்படுத்திக் கொள்வதிலிருந்து வேறுபட்டது. இந்த நோக்கிலிருந்து பார்த்தோமானால் காமம் சார்ந்ததோ இல்லை வேறுவகையான அனுபவங்களோ எதுவாயினும் நம்மோடு அந்த அனுபவங்களில் பங்கு பெறுபவர்களின் உணர்வுகளை நாம் இதுவரை பயன்படுத்திக் கொண்டுதான் வந்திருக்கிறோமேயொழிய பகிர்ந்து கொண்டதில்லை என்பது விளங்கும். பயன்படுத்தப் பட்டவர்களின் சம்மதமில்லாமல் பயன்படுத்துவதென்பது அவர்களைத் தவறாகப் பயன்படுத்துவதுதான்.

காம உணர்வுகளைப் பயன்படுத்துவதற்கு முதற்படியாக அதனை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஆழ்ந்த உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதென்பது மனிதனின் அடிப்படையான தேவை. ஆனால் இந்தத் தேவை என்பது நமது பாரம்பரியத்தால் தடுக்கப்பட்டிருந்த காம உணர்வுகளின் இணைவில்தான் பூர்த்தியாகிறது. ஆனால் இந்த இணைவுகள் மதம், நோய், கும்பல் என்முறை என வேறு ஏதோ பெயர்களிடப்பட்டு கண்டு கொள்ளப்படாமல் புறக்கணிக்கப் படுகின்றன. இவ்வாறு இந்தத் தேவைகளையும் செயற்பாடுகளையும் தவறாகப் பெயரிட்டு அழைப்பதென்பது உணர்வுகளைத் தவறாகப் பயன்படுத்துகிற 'போர்னோகிராபி', 'ஆபாசம்' இவற்றுக்கு இட்டுச் செல்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



நமது ஆற்றல் / அதிகாரம் ஆகியவற்றை உருவாக்குவது மற்றும் தக்கவைப்பது என்பதில் காமத்தின் முக்கியத்துவத்தை மறுப்பதுதான் மரபு வழிப் பார்வை. அதாவது மற்றவர்களோடு இணைந்து நமது காமத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நம்முள்ளிருந்தே அணுகுவதிலிருந்து விலகி வெளி ஆணைகளின் வழியாக அணுகுவதே மரபு வழிப் பார்வை. இதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களை நமது திருப்திக்கான பொருளாகப் பார்ப்பதற்கு மட்டுமே கற்றுக் கொடுக்கப் பட்டிருக்கிறோம். திருப்தியுறுதலின் இன்பத்தை நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டதில்லை. நமது ஒற்றுமைகள் மற்றும் வித்தியாசங்களோடு நாம் இணைவதில்லை. எந்த ஒரு கணத்திலும் நாம் என்ன உணர்கிறோம் என்பது பற்றிய பிரக்ஞையை மறுப்பது - அது எவ்வளவு சுகமாகத் தோன்றிய போதிலும் - அனுபவத்தின் பெரும் பகுதியை மறுப்பதாகும். நம்மை நாமே ஆபாசப் படுத்திக் கொள்வதற்கு, 'போர்னோ கிராபி'யாகச் சுருக்கிக் கொள்வதற்கு, அபத்தமாக்கிக் கொள்வதற்கு இது சமம்.

காமம் என்பதை நேரனுபவமாகவின்றி இரண்டாம் நிலையாகப் பெறமுடியாது. ஒரு கருப்பு 'லெஸ்பியன்' பெண்ணியவாதி என்கிற வகையில் நான் நடனமாடிய, விளையாடிய, ஏன் சண்டையிட்ட சகோதரிகள் பற்றிய ஒரு குறிப்பான புரிதல் எனக்குண்டு. அவர்களுடனான இந்த ஆழ்ந்த பங்கேற்பென்பது அதற்கு முன்பு சாத்தியமில்லாத கூட்டுச் செயல்பாடுகளுக்கு முன்னோடியாக இருந்தது.

ஆனால் முற்றிலும் நமது ஆணாதிக்கப் பாரம் பரியத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய பெண்களுக்குக் காம ஆற்றலைப் பகிர்ந்து கொள்வது அவ்வளவு எளிதல்ல. இத்தகைய வாழ்க்கை முறைக்கும் உணர்தல் முறைக்கும் நான் எனது பிரக்ஞையைத் தகவமைத்துக் கொள்ள முயற்சித்த போது இத்தகைய பகிரும் பண்பு வற்றிப் போவதை நான் புரிந்து கொண்டேன்.

காமத்தின் படைப்புத் திறனைப் புறக்கணிக்காமலும் சிதைக்காமலும் அதன் அதீதமான மின் ஆற்றலைப் பகிர்ந்து கொண்டு உண்மையிலேயே ஒரு பெண்ணாக அடையாளம் காணும் பெண்களை, இத்தகைய 'ஆபத்தை' எதிர்கொள்ளும் தைரியமிக்கப் பெண்களை இப்போது அதிகமாகக் காணமுடிகிறது. நமது வாழ்வில் காமத்தின் ஆற்றலை அங்கீகரித்து ஏற்பதென்பது இந்த உலகில் ஒரு உண்மையான மாற்றத்தை நோக்கி இயங்கும் ஆற்றலை நமக்கு அளிக்கும். இல்லாவிட்டால் இதே போன்ற சுவையற்ற அறுவையான நாடகத்திற்குள் வெறுமனே பாத்திரங்களை மாற்றிக் கொள்வதோடு நிற்க நேரிடும்.

வற்றாத படைப்பு ஆற்றலை அள்ளித் தருகிற ஆற்றல் வளத்தை நாம் அடைவது என்பது மட்டுமின்றி இந்தத் தந்தை வழியிலான, இனவெறி நிறைந்த, காமத்தை மறுக்கிற சமூகத்தின் முன் நம்மைச் சுய உறுதி செய்து கொள்வதற்கும் (உண்மையான) பெண்மைக்குரியவற்றைச் செய்வதற்குமான வழி இதுவே.


ஆதரவற்ற நிலையிலுள்ள
பொன் விஜயனின் குடும்பத்திற்கு
நண்பர்கள்
நிதி திரட்டுகின்றனர்.
முகவரி கீழே.

தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48, இராணி அண்ணாநகர்,
கே.கே. நகர், சென்னை - 78.

கொ.மு. ரியாஜ் அகமது
47, சச்சிதானந்தம் தெரு,
குயப்பேட்டை, சென்னை - 12.

தாராளமாக நிதி உதவி செய்ய
வேண்டுகிறோம்.



மன்னை உ. இராசேந்திரன்
மருத்துவ நிதி.

கடந்த 25 ஆண்டுகளாக பல்வேறு சமூக இயக்கங்களில் பணியாற்றிய தோழர் மன்னார்குடி உ. இராசேந்திரன் இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு தற்போது மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டுத் தேறி வருகிறார். இவரது சிகிச்சைக்காக இதுவரை ரூ 21/2 இலட்சம் வரை செலவாகியுள்ளது. கவிஞர் இன்குலாப் தலைமையில் அமைக்கப் பட்ட நிதிக்குழு ஒன்றின் முயற்சியில் இதுவரை சுமார் ரூ. 11/2 லட்சம் நிதி திரட்டப்பட்டுள்ளது. உதவி செய்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

நிதி வழங்க விரும்புவோர் P. மலர்விழி என்ற பெயரில் வரைவோலை எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

டாக்டர் V. சிவகுமார்,
2, தெற்கு லீத் காசில் தெரு,
சாந்தோம், சென்னை - 600 028.


படிப்பகம்

www.padippakam.com



# இழப்புகள்... ஈடு செய்ய முடியாத... ஈடுசெய்தே ஆக வேண்டிய... இழப்புகள்

**தோழர் கே.வி.ஆர்** : எழுத்தாளர், கவிஞர், அமைப்பாளர், மனித உரிமைப் போராளி, பேராசிரியர், பத்திரிகை ஆசிரியர், இந்திய அரசால் பல முறை தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டவர், நெருக்கடி நிலைக்கு முன்பு மூன்று மாத காலமும், நெருக்கடி நிலையில் இருப்பத்தோரு மாத காலமும் சிறையிலடைக்கப்பட்டவர்... எனப் பல முகங்கள் தோழர் கே.வி.ஆருக்குண்டு. ஆங்கிலத்திலும் தெலுங்கிலுமாய் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களுக்கும் பல்லாயிரம் பக்கங்களைத் தாண்டிய கட்டுரைகளுக்கும் சொந்தக்காரர்.

எழுத்தாளர், விமர்சகர், கவிஞர் என்பதையெல்லாம் காட்டிலும் அவர் ஒரு சிறந்த அமைப்பாளர். அராசம், புரட்சிகர எழுத்தாளர் சங்கம் (விராசம்), ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் குழு, இந்திய-சீன நட்புறவுக் கழகம் . . . இறுதியாக அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டுக் கழகம் - இவைகளில் பல்வேறு நிலைகளில் பங்கு பெற்றுச் செயல்பட்டவர்.

நெல்லூர் மாவட்டத்தில் ஒரு மத்தியதர விவசாயக் குடும்பத்தில் பிறந்த **கே.வி. ரமணரெட்டி** மாணவப் பருவத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் செயல்பட்டார். **கல்பனாத்** பற்றிய கட்டுரை ஒன்றிற்காகக் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்ட கே.வி. ஆரின் எஞ்சிய சம்பவங்கள் நிறைந்த ஐம்பதாண்டு கால வாழ்க்கை புரட்சிகர இயக்கங்களோடு கழிந்தது.

நக்சல்பாரி இயக்கத்தின் தொடக்க காலத்தில் மார்க்சிஸ்ட் கட்சியிலிருந்து கொண்டு அதனைக் கண்டித்தவர் கே.வி.ஆர். எனினும் புரட்சிக் கவிஞர் சுப்பாராவ் பாணிக்ரகி கொல்லப்பட்ட போது அது பற்றிய அவரது கவிதையை முடக்க முயன்ற மார்க்சிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறி விராசத்தில் இணைந்தார்.

ஸ்ரீஸ்ரீ-யின் கவிதைகளை ஆறு தொகுதிகளாய்த் தொகுத்தார். புரட்சிக் கவிதைகளின் முதல் தொகுதியாகிய **ஜஞ்சா**வும் கே.வி.ஆரால் தான் தொகுக்கப்பட்டது.

கிட்டத்தட்ட இரண்டாண்டுகளைச் சிறையில் கழித்த கே.வி.ஆரின் மீது புகழ் பெற்ற செகந்தராபாத் சதி வழக்கு தவிர மேலும் இரண்டு சதி வழக்குகளும் போடப்பட்டன. அகில இந்திய புரட்சிப் பண்பாட்டு இயக்க மாநாட்டு மேடை ஒன்றி (டெல்லி) லிருந்து இனி ரெட்டி சாதி ஒட்டு தன் பெயரில் இருக்காது என அறிவித்தார்.

பெண்கள் பிரச்சினை, சாதிப்பிரச்சினை, வகுப்புவாதம் ஆகியவற்றில் அவருக்கு அக்கறையிருந்தது. அவரது முன் முயற்சியால் அகில இந்திய புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பாக சாதியும் வர்க்கமும் மாநாடு சென்னையில் நடைபெற்றதும் பின்னர் அக்கருத்தரங்கக் கட்டுரைகள் 'சாதியும் வர்க்கமும்' என்கிற பெயரில் தொகுக்கப்பட்டதும் தோழர்களுக்கு நினைவிருக்கலாம். அந்நூலின் முதற்கட்டுரை தோழர் கே.வி. ஆருடையது.

கே.வி. ஆருடன் நெருங்கிப் பணிபுரிந்த தோழர் பா. கல்யாணியைச் சந்தித்து கே.வி. ஆரின் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டபோது பண்பாட்டு அமைப்புகளைக் கட்டுவதற்கான மிகவும் விரிந்த சனநாயகப் பண்பு அவரிடமிருந்ததைப் பற்றி கல்யாணி சொன்னது இங்கே குறிப்பிடத்தக்கது.

குழந்தையைப் போல, கோபித்துக் கொண்டு பின்பு மறந்துபோகும் பண்புடைய கே.வி.ஆருக்கு 'பியர்' மிகவும் பிடிக்கும்.

சரீகாகுளம் போராட்டம் குறித்த ஒரு நூலுக்காக விரிவான களப் பணியில் ஈடுபட்டிருந்த போது (ஜனவரி 12, 1998) அவர் உயிர் பிரிந்தது குறிப்பிடத்தக்கது.

**பொன். விஜயன்** : கொள்கைப் பற்று, இலட்சிய வேகம், சிறு பத்திரிகைகள் மூலம் இலக்கிய சேவை ஆற்றும் உத்வேகம் நிறைந்த... ஒரு கால கட்டத்தின் வெளிப்பாடு தோழர் பொன் விஜயன். புதிய நம்பிக்கை - ஐம்பதுக்கும் மேற்பட்ட இதழ்களை ஓரளவு தொடர்ச்சி கெடாமல் தன்னந்தனியராகக் கொண்டு வந்தவர்.

ஏழ்மை நிறைந்த வாழ்க்கைச் சூழல். ஓட்டல் பணியாளராக இருந்து கொண்டே சிறு பத்திரிகை தொடங்கும் முயற்சி. எழுத்துக்களை மட்டும் வாங்கி வைத்துக் கொண்டு இரவு நேரங்களில் கோர்த்து, காசு கிடைக்கும் போது காகிதம் வாங்கி, அச்சகங்களுக்கு நடையாய் நடந்து, தேனி - அல்லி நகரத்திலிருந்து புதிய நம்பிக்கையைக் கொண்டு வந்த போது அவர் எங்களுக்குப் பழக்கம்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்த காலம் அது. தோழர் டானியலின் பேட்டியை வெளியிட்டார். நாங்கள் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்து விலகியதற்கான காரணங்களில் ஒன்றாகிய தோழர் அய். மாயாண்டி பாரதி அவர்களின் பேட்டியும் புதிய நம்பிக்கையில்தான் அச்சாகியது. எனினும் பாதி அச்சான அப் பேட்டி வந்த இதழை கட்சியின் வேண்டுகோளுக் கிணங்க வெளியிடாமல் முடக்கிக் கொண்டார் விஜயன்.

கடந்த சில ஆண்டுகளாகக் குடும்பத்தோடு சென்னை வாசம். ஒரு சிறிய அச்சகத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கையோடு போராட்டம். இத்தனைக்கும் மத்தியில் புதிய நம்பிக்கை, அப்புறம் அவருக்கு முக்கியமெனப் படுகிற சில வெளியீடுகள்.

பார்க்கும்போதெல்லாம் ஏதாவது புத்தகத்தை என்னிடம் அச்சுக்குக் கொடுங்கள் என்பார். கடைசிவரை அவரது வேண்டுகோளை நிறைவேற்றவில்லை. எந்தப் பாதுகாப்புமில்லாமல் குடும்பத்தை விட்டு விட்டு அவர் மறைந்த செய்தி நெஞ்சைப் பிசைகிறது. ○

படிப்பகம்

www.padippakam.com



# செய்திகள்... சிந்தனைகள்... சிதறல்கள்...

## விஜயபாரதமும் விஷ்ணுபுரமும்

– பொ. வேல்சாமி

ஜெயமோகனின் விஷ்ணுபுரத்திற்கு எதிர்பார்த்தபடி வரவேற்புகள் கிடைத்துள்ளன. சென்னை புத்தகச் சந்தையில் ஆர்.எஸ்.எஸ். பத்திரிகையான விஜயபாரதம் தன் முன்னாள் ஊழியர் எழுதிய இந்த நாவலை தனது கடையில் வைத்து விற்பனை செய்ததை திருநெல்வேலி கூட்டத்தில் எஸ். ராமகிருஷ்ணன் போட்டு உடைத்தார். விஜயபாரதம் கடையில் விற்பனையான முக்கிய புத்தகம் விஷ்ணுபுரம் மட்டும் தான். மேற்கே ஞானி தனது பரிவாரங்கள் புடைசூழ விஷ்ணு புரத்தை விதந்தோதுகிறார். கலைப்படைப்பில் ஆகட்டும், தத்துவ ஞானத்திலாகட்டும், சிற்ப சூத்திர நுட்பங்களை சொல்வதில் ஆகட்டும் இந்த நாவலை 'பீட்' அடிக்கிற மாதிரி வேறு எதுவும் தமிழில் இல்லை என அவர் சேலம் தமிழ்ச் சங்கத்தில் பேசியதை நான் நேரில் கேட்டேன். என்ன மாதிரி இதை அவர் நிறுவப் போகிறார் என நான் ஆவலாக காத்திருந்தபோது முன்பெல்லாம் ரேடியோவில் ஒலிச்சித்திரம் போடுவார்களே அதுபோல கதைச் சுருக்கத்தை கச்சிதமாகக் கூறி என்னை ஏமாற்றிவிட்டார் ஞானி. (இடையில் 'நுண் வெளிக் கிரணங்கள்' நாவலின் கதையோடு இதைப்போட்டுக் குழப்பிய போது மேடையில் இருந்தவர்கள் ஞானிக்கு நினைவூட்டி இழுத்து வந்தனர்) தெற்கே சுந்தர ராமசாமி குழுவினர் விஷ்ணுபுரத்திற்கு விழா எடுக்கின்றனர். தமக்குத் தோதான ஆட்களை மட்டுமே வைத்து இலக்கியக் கூட்டங்கள் நடத்தும் காலச்சுவட்டினர் இம்முறை தெரியாத் தனமாக எஸ். இராமகிருஷ்ணனை அழைக்கப் போக அவர் இந்த நாவலின் இந்துத்துவச் சார்பைப் போட்டுடைத்து சுந்தரராம சாமி குழுவினரை தர்ம சங்கடத்திற்கு உள்ளாக்கி விட்டார். வடக்கே நமது அன்பிற்குரிய இராஜமார்த்தாண்டன் தினமணியில் விஷ்ணுபுரத்தைப் புகழ்ந்து தள்ளிவிட்டார். தலை மறைவாய்த் திரியும் சிலதுகள் இந்த நாவலுக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமெனச் சொன்னதாக நண்பர் பாப்லோ அறிவுக்குயில் இன்று என்னிடம் சொன்னார்.

தமிழர்களுக்குப் பொதுவாக பெரிசாக எதைப் பார்த்தாலும் ஒரு அதிர்ச்சி, பிரமிப்பு. அதனால்தான் யார் பெரிய கட் அவுட் வைப்பது என்ற போட்டி இங்கே முக்கியமாக இருக்கிறது. எண்ணூறு பக்கத்தில் டெம்மி சைஸில் ஒரு புத்தகம் வந்தால் அதைப் படிக்காமலேயே எழுதியவருக்கு அறிஞர் பட்டம் கொடுக்காமல் சும்மா விடுவார்களா? விஷ்ணுபுரத்திற்கும், ஜெயமோகனுக்கும் இந்தப் பெருமையைச் சாற்றுவதற்கு தமிழர்கள் தயாராக இருக்கின்றனர்.

இது மத்தியில் பாரதிய ஜனதா ஆட்சியைப் பிடித்துள்ள தருணம் மட்டுமல்ல தமிழகத்தில் உறுதியாக காலூன்ற முயற்சிக்கும் நேரம். அ.இ.அ.தி.மு.க, பா.ம.க, ம.தி.மு.க முதலிய கட்சியினர் தத்துப்பித்தென்று பாரதிய ஜனதாவுக்கு மாலை போட்டு வரவேற்பது மட்டுமல்லாமல் நமது மதிப்பிற்குரிய தலித் எழில்மலை போன்றவர்கூட அடக்கி வாசிக்க நேர்ந்திருக்கும் ஆபத்தான தருணம் இது. இச்சூழலில் விஷ்ணுபுரத்திற்கான வரவேற்பில் பொதிந்து கிடக்கும் ஆபத்தை தமிழ் மக்களின் நலனில் அக்கறை உள்ளவர்கள் என்ற வகையில் பொறுப்புடன் சிந்திக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

இந்நாவலைப் பற்றி – இந்த வரவேற்பின் பின்னணியில் – ஒரு சில அம்சங்களை இங்கே பகிர்ந்து கொள்ள வேண்டி இருக்கிறது. இது நாவலின் விமர்சனமல்ல, விரிவான விமர்சனம் அடுத்த நிறப்பிரிகையில் வெளிவரும்.

முதலில் இந்நாவல் தமிழ்ச் சூழலுக்குப் பொருந்தாத கற்பனைகளை உள்ளடக்கியது என்பதைச் சுட்டிக் காட்டியாக வேண்டும்.கற்பனை என்று வந்த பின்பு அப்புறம் என்ன பொருந்துவது பொருந்தாதது என ஒருவர் கேட்கலாம். வரலாற்றை துணைக்கு அழைத்து எழுதும்போது ஒவ்வொரு முறையும் எழுதப்படும் காலகட்டத்தின் வரலாறுதான் மீண்டும் எழுதப்படுகிறது. எனவே நிகழ்காலத்தில் மோதிக் கொள்ளும் பல கருத்துக்களில் ஏதேனும் ஒரு கருத்தின் சார்புடன் தான் நின்று அந்த வரலாறு எழுதப்படுகிறது. வில்லங்கமான ஒரு நோக்குடன் வரலாறு வாசிக்கப்படும்போது நாம் இந்த பொருந்தாமையைச் சுட்டிக்காட்ட வேண்டி இருக்கிறது. புதுமைப்பித்தனும் கூட வரலாற்றுப் பின்னணியில் 'கபாடபுரம்', 'அன்றிரவு, போன்ற கதைகளை எழுதி உள்ளார். இந்தக் கதைகளின் நோக்கம் நிலவும் ஆதிக்கக் கருத்துக்களை (status-quo) கேள்வி கேட்பது, கவிழ்க்க முயல்வது. புதுமைப்பித்தனின் இத்தகைய கதைகள் கிடைக்கும் தரவுகளுடன் பொருந்திப் போகக் கூடியவை. ஜெயமோகனின் விஷ்ணுபுரமோ நிலவும் இந்துத்துவச் சொல்லாடலுக்குத் துணைபோவது. ஏராளமான வரலாற்றுத் திரிபுகளுடன் இதனை அவர் செய்திருக்கும்போது நாம் அதனைச், சுட்டிக்காட்ட வேண்டி இருக்கிறது.

முதலில் இந்த நூலின் தொடக்கத்தில் போடப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்டமான வரைபடம். விஷ்ணுபுரம் என்னும் கற்பனையான ஊரையும், பழனி, மதுரை, வைகை நதி என இப்போதும் உள்ள புவியியல் வெளிகளையும் இணைத்துப் போடப்பட்டுள்ளது. வைகை நதி பழனி மலையிலிருந்து வருவது போல படம் வரையப்பட்டுள்ளது. சேலத்திற்கு அருகாமையில் உள்ள சேர்வராயன் குன்றுகள் போடிநாயக்கனூர் பக்கம் உள்ள தாகக் காது குத்துகிறார், ஜெ. நதியாவது காலப்போக்கில் இடம் மாறியதாக ஒரு 'டுபாகூர்' விடலாம். மலை எப்படி ஐயா இடம் பெயரும்? துறவியாக ஆகும் திருநாக்குடன் காலையில் வீட்டை விட்டுக் கிளம்பிய ஜெயமோகனுக்கு திருவருளால் கைவந்த இந்த நாவலின் மையப் படிமத்திலேயே இந்த வரைபடமும் இடம் பெற்றதா

படிப்பகம்

www.padippakam.com



என்பதை அவர் தான் விளக்கவேண்டும். இல்லை ஞானி, சு. ராவாவது விளக்கினால் நல்லது.

இந்த நாவல் காலம், வெளி கடந்தது என்றெல்லாம் இவர்கள் உரிமை கொண்டாட முடியாது. இந்த நாவலின் மையப் பாத்திரமான பவதத்தரின் பாட்டனார் களப்பிரரை வெற்றி கொண்ட பாண்டியன் கடுங்கோனின் காலத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரு குறிப்பு நூலில் இடம் பெறுகிறது (பக்கம். 318). இக்கால கட்டம் கி.பி. 600 எனில் விஷ்ணுபுரம் நாவலின் மையக் கதையின் காலம் கி.பி. 700ல் இருந்து கி.பி. 900க்கு இடைப்பட்டது எனலாம். இக்காலகட்டத்து வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முற்றிலும் எதிராக கட்டப்பட்டுள்ளது விஷ்ணுபுரம்.

வைணவத்திற்கும், பௌத்தத்திற்கும் இடையிலான மோதலின் களமாக தமிழ்நாடு இந்நாவலில் சித்தரிக்கப் படுகின்றது. தமிழகத்தில் மத மோதல் என்பது பௌத்தத் திற்கும் வைணவத்திற்கும் இடையில் ஏற்பட்டதில்லை. மாறாக சைவத்திற்கும், சமணத்திற்கும் இடையில் தான் இங்கே மோதல்கள் நிகழ்ந்தன. வைணவம் இங்கே எக்கால கட்டத்திலும் சகல வல்லமையுடன் கோலோச்சியதில்லை. அதிலும் குறிப்பாக இந்தக் கால கட்டத்தில் வைணவம் இங்கே ஆட்சி செய்ததில்லை.

தமிழ்க் காப்பியங்களுள், குறிப்பாக மணிமேகலை யிலும், நீலகேசியிலும் தர்க்க விவாதங்கள் இடம் பெறுகின்றன. இந்த மோதல்களின் வெற்றி தோல்வி என்பது தர்க்கத்தின் அடிப்படையிலும், எதிரே உள்ள மக்கள் அளிக்கும் தீர்ப்பின் அடைப்படையிம் தான் நிர்ணயிக்கப் படுகின்றது. மாறாக தீபம் எரிவது, வெள்ளைப் பறவை மல்லாக்கப் பறப்பது போன்ற அதீத கற்பித நிகழ்வுகளின் மூலம் நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆனால் அனல்வாதம், புனல்வாதம் என்று வைதீகர்கள் சமணர்களை கழுவேற்றி யதை நியாயப்படுத்துவதற்காக தொன்மங்களை கட்டமைத்தது போல இங்கே ஒரு வெள்ளைப் பறவையைப் பறக்க விடுகிறார் ஜெ. அஜீதன் என்கிற பௌத்தர் வைணவப் பார்ப்பனர்களை வென்றது தர்க்கத்தின் மூலமாக அல்ல இப்படியான ஒரு 'அற்புத' நிகழ்ச்சியினால் தான் எனச் சொல்வது ஜெ.யின் நோக்கம். இதனை பார்ப்பனர்கள் ஆட்சேபிக்கும்போது வைணவப் பார்ப்பனரான பவதத்தர் பெருந்தன்மையோடு அஜீதன் வெற்றி பெற்றதாக அறிவிக்கி றாராம். பாட்டன் நிர்மாணித்த விஷ்ணுபுரத்தை பௌத்தனின் கையில் தாரை வார்க்கிறாராம். எண்ணாயிரம் சமணர்களை கழுவில் ஏற்றிக் கொன்றது தான் வைதீகம் தமிழனுக்குக் காட்டிய பெருந்தன்மை. ஆனால் ஜெ. காட்டும் வரலாறோ கத்தியின்றி, இரத்தமின்றி பௌத்தனுக்குத் தாரை வார்க்கும் வரலாறு!

தர்க்கத்தை ஆங்காங்கு கிண்டலடிக்கிறார் ஜெ. இது ஏதோ போஸ்ட் மார்டனிஸ்டுகள் தர்க்கத்தை மறுப்பது போல் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். வேதங்களை மறுக்கும் போதும் அதற்கு இவர்கள் பதில் அளிக்கமுடியாமல் திணறும் போதும் மட்டும் தான் தர்க்கத்தின் மீது இவர்களுக்கு ஆத்திரம். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் நாத்திகர் களோடு மோதும்போது மட்டும் தான் இவர்களுக்கு தர்க்கம் பிடிக்காது. வேதத்தை பிரமாணமாக ஏற்றுக் கொண்டால் தர்க்கம் இவர்களுக்கு இனிக்கும்.

பௌத்தர்கள் கையில் அளிக்கப்பட்ட விஷ்ணுபுரம் அடுத்த நூற்றாண்டுகளில் இசுலாமிய படையெடுப்பால் அழிக்கப்பட்டது என்கிறார் ஜெ. இசுலாமிய படை யெடுப்பு வட இந்தியாவில் நடைபெற்றதற்கும் தமிழகத்தில் ஏற்பட்டதற்கும் இடையில் சுமார் ஐநூறு ஆண்டுகள் இடை வெளி உள்ளது. விஷ்ணுபுரம் அழிவதாகச் சொல்லப்படும் கால கட்டத்தில் இசுலாமிய படையெடுப்பு தமிழகத்தில் நடந்ததாக சொல்ல முடியுமா?தவிரவும் இசுலாமியர்கள் கோவில்களை இடித்து நொறுக்கி ஊர்களை தரைமட்டமாக தமிழகத்தில் ஆக்கினர் என்பதற்கும் சான்றுகள் காட்ட முடியுமா? கொள்ளை அடித்திருக்கலாம். பொன்னையும், மணியையும் ஐம்பொன் சிலைகளையும் அள்ளிச் செல்வது இசுலாமியர்களின் நோக்கமாக இருந்திருக்கலாம். சீரங்கநாத னையும், தில்லை நடராசனையும் பீரங்கி வைத்துப் பிளப்பது அவர்களது நிகழ்ச்சி நிரலில் இருந்ததில்லை. 'விஷ்ணு புரத்தின்' மூலம் தமிழகத்தின் வரலாற்றையே சொல்ல முயல்வதாக உரிமை கொண்டாடி தமிழகம் வீழ்ந்ததே இசுலாமியப் படையெடுப்பால் தான் என்ற கருத்தாக்கத்தை உருவாக்க முனைவது யாரை திருப்தி செய்ய?

விஜயபாரதம் 'விஷ்ணுபுரத்தை' விற்பனை செய்வதை நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. ஞானியும், சு. ராவும் இதனை ஏன் தலையில் சுமந்து திரிகிறார்கள்? தமிழ்த் தேசீயம் பற்றி புத்தகம் வெளியிடும் ஞானியும், விஷ்ணு புரத்தை விற்கும் விஜயபாரமும் எந்தப் புள்ளியில் இணை கின்றனர்? இதற்கு ஞானி மட்டும் பதில் சொன்னால் போதாது. ஞானியின் பின்னால் திரியும் தமிழ்த் தேசீயர்களும், கோவை மாவட்ட கலை இலக்கிய அன்பர்களும் பதில் சொல்லியாக வேண்டும்.

கடைசியாக இந்த நாவலில் முன்னுரை மற்றும் நன்றிகள் என்கிற பெயர்களில் ஜெ. அடிக்கிற லூட்டியைப் பற்றி கொஞ்சம் சொல்லியாக வேண்டும். துறவியாக முயன்றது, துறவியாகவே அலைந்து திரிந்தது, ஒரு மார்ச் 22ஆம் தேதி காலையில் நாவலின் மையப் படிமம் இவரை வந்தடைந்தது, நாவலை எழுதுவதற்கு முன் இவர் பேரிலக்கியங்கள், காவியமரபு, இந்திய ஞான மரபு, தாந்திரிக வியல், சிற்பவியல் எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்தது, போதானந்தா ஆத்மானந்தா,பிரம்மானந்தா, சைதன்யர், ஞானி, சுந்தர ராமசாமி இன்னும் ஒரு பெயர் தெரியாத திருவண்ணா மலைத் துறவி ஆகியோரின் அருளை இறக்கிக் கொண்டது (நடுவே திடீரென பித்துக்குளி முருகதாஸ் போல திருமணம் செய்து கொண்டது) என இந்த நாவலுக்கு ஒரு தெய்வீகத்தைக் கற்பிப்பதை நண்பர்கள் கவனிக்கவேண்டும்.

Tail Piece: இந்த நாவலின் கருவை 1991-இல் தேனிலவு நாட்களில் மனைவியிடம் பேசித் தீர்த்தாராம் ஜெ. பாவம் சகோதரி அருள்மொழியை அவர் அப்படிக் கொடுமை செய்திருக்க வேண்டியதில்லை. ■

படிப்பகம்

நிறப்பிரிகை
இலக்கிய இணைப்பு - 4
மே 1998

முகப்போவியம் : விஸ்வம்

ஒளி அச்சு கோர்வை: ஆதவ் கிராபர்ஸ்
சென்னை - 14.

அச்சு : சேகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 5

வெளியீடு : ஸ்நேகா
348, டி.டி.கே. சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 14.
தொலைபேசி : 8221997

ரூ. 35/-

www.padippakam.com

வழக்கம் போல நண்பர் ரவி சீனிவாஸ் சில முக்கிய ஆக்கங்களை அனுப்பி வைத்தார். அவற்றிலிருந்தும் சிலவற்றை எடுத்துக் கொண்டோம். இவற்றைத் தவிர முக்கியமெனப் பட்ட சில கதைகளையும் தெரிவு செய்து கொண்டோம்.

நிறப்பிரிகையும் வளர்மதியும் மொழியாக்கியவை தவிர தோழர்கள் லதா ராமகிருஷ்ணன், இரா. நடராஜன், மோனிகா ஆகியோரும் மொழியாக்கித் தந்தனர். அவற்றில் சில இடமின்மை காரணமாக இவ்விதழில் இடம் பெறவில்லை. அடுத்தடுத்த இதழ்களில் வரும்.

இந்தப் பிரதிகளில் பொதிந்து கிடக்கும் ஆஃப்ரோ-அமெரிக்கர்களுக்கே உரிய தனித்துவமான பண்பாட்டு அர்த்தங்கள் பற்றிய குறிப்புகள் நிறைய சேர்த்திருக்கவேண்டும். இயலாமல் போனது வவருத்தத்திற்குரியது.

கருப்பர் இலக்கியம், புதிய விமர்சன முறையின் தேவை ஆகியவை குறித்த அறிமுகமாக வளர்மதி, அ. மார்க்ஸ் ஆகியோரின் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. ஜேன் கேரீ, இவோர் மில்லர் ஆகியோரின் கட்டுரைகள் கருப்பர் அரசியல் எழுச்சியின் ஓரங்கமாக அவர்களின் கலாச்சாரச் செயற்பாடுகள் விளங்குவதைச் சுட்டிக்காட்டுகின்றன. இனவெறிச் சமூகத்தில் ஒரு கருப்புப் பெண் தான் கருப்பாக இருப்பதை உணர நேரும் அனுபவங்கள் பற்றிய சோரா நீல் ஹர்ஸ்டனின் கட்டுரை கருப்பு எழுத்து முறையின் வீச்சுக்கு ஒரு சான்று.

தன் வரலாற்று இலக்கியங்களாகத்தான் கருப்பர் இலக்கியங்கள் முதலில் தோன்றுகின்றன. எனினும் இவற்றை அவர்கள் புனித இலக்கிய வகைகளில் ஒன்றாகிய 'தன் வரலாறு' (autobiographical genre) என அழைத்துக் கொள்வதில்லை. ஆவண, ஆதார உதவிகளெல்லாமில்லாமல் பெரும்பாலும் நினைவுகளின் துணையோடு எழுதப்படுபவை இவை. பெரும்பாலோருக்குப் பிறந்த தேதிகள் கூட நினைவிலிருப்பதில்லை. இந்த வகையில் இவை வெறும் தன் வரலாற்றுச் சம்பவத் தொகுப்புகளாகவன்றி அவற்றிற்கும் அப்பால் தனித்துவமிக்க கருப்பர் கதையாடல்களாக பரிணமிக்கின்றன. ஈவுலத் அக்வானா, பிரெடரிக் டக்ளஸ் ஆகியோரின் அடிமை வரலாறுகளிலிருந்து சில பகுதிகளைத் தந்துள்ளோம்.

கருப்புக் கதாசிரியர்களில் மிக முக்கியமான மூவரின் சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கிளாரன்ஸ் மேஜர், ரிச்சர்டு ரைட் ஆகியோரின் முக்கிய ஆக்கங்கள் தவிர ஜேம்ஸ் ஆலன் மெக்பர்சனின் போஸ்ட் மார்டனிச எழுத்தும் அவற்றில் ஒன்று.

கருப்புப் பெண்ணிய எழுத்தாளர்களின் முக்கிய ஆக்கங்கள் சில இவ்விதழில் இடம் பெறுகின்றன. காமத்தின் அரசியல் பற்றிய ஆலிஸ் வாக்கர், ஆட்ரே லோர்ட் ஆகியோரின் கட்டுரைகள் பெண்ணிய நோக்கில் மிக முக்கியமானவை. காமம் என்பதை மிகவும் விரிந்த பரிமாணத்தில் உயர்த்திப் பிடிக்கின்றன இவை. பெண்களுக்குக் காமத்தை மறுப்பதன் மூலம் அவர்களை இந்த ஆணாதிக்க உலகு எவ்வாறு தகவமைக்கிறது என்பதை நுண்மையாக விளக்குகின்றன இக் கட்டுரைகள். காமத்தை 'போர்னோ'வுடன் வேறுபடுத்தி, காமத்தை மறுக்கிற நாம், எவ்வாறு நம்முடன் இன்பத்தைப் பகிர்ந்து கொள்பவர்களை வெறும் 'போர்னோ' பொருளாக, பயன்படுத்துபவர்களாக இருக்கிறோம் என்பதை இவை சுட்டிக்காட்டி விடுகின்றன.

கருப்பர் நாட்டுப்புறக் கதைகள், கவிதைகள் முதலியவற்றிலிருந்து மிக மிகச் சிலவற்றை மொழியாக்கித் தந்துள்ளோம். அடுத்தடுத்த இதழ்களில் இன்னும் சிலவற்றைத் தர முயற்சிக்கிறோம்.

மொத்தமாய்ப் பார்க்கும் போது சில முக்கியமான ஆக்கங்கள் விடுபட்டுப் போயுள்ளதை உணர முடிகிறது. ரிச்சர்டு ரைட்டின் Blue print for Negro writing, சோரா நீல் ஹர்ஸ்டனின் Characteristics of Negro Expression முதலியவை அவற்றில் சில. அடுத்த இதழில் உறுதியாய் அவை இடம் பெறும். ஜூலையில் வெளிவர உள்ள நிறப்பிரிகை - 10 இதழில் கருப்பர் அரசியல் ஆவணங்கள் சில இடம் பெற உள்ளன.

இத்தொகுப்பிலுள்ள ஆக்கங்கள் அனைத்தும் அவை வெளிவந்த போது பெரிய அளவில் வரவேற்புக்குள்ளானவை என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு ஆசிரியர் மற்றும் அவரது எழுத்துக்கள் குறித்த முக்கிய செய்திகள் கொண்ட அறிமுகங்களை ஒவ்வொரு ஆக்கத்திற்கு முன்பும் கொடுத்துள்ளோம். எந்தத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டவை முதலான விவரங்களுடன்.

ஒரு கட்டுரையைத் தவிர மற்ற அனைத்தும் மிக எளிமையானவை. எளிதில் படிக்கக் கூடியவை. கூடியவரை மூலப் பிரதிக்கு நெருக்கமாகவும் எளிமையாகவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளவை.

மொழியாக்கிய தோழர்களுக்கும் ஸ்நேகாவுக்கும் நன்றிகள்.

உங்களிடமிருந்து எதிர் வினைகளைக் கோருகிறோம். குறிப்பாக இளைஞர்களிடமிருந்து.


**நிறப்பிரிகை**

ஆசிரியர் குழு

**அ. மார்க்ஸ் - பொ. வேல்சாமி**

ஆசிரிய முகவரி :
31, சேவியர் நகர்,
தொல்காப்பியர் சதுக்கம்,
தஞ்சாவூர் - 613 001
தொலைபேசி : 04362/36284

வெளியீட்டு முகவரி :
ஸ்நேகா,
348, டி.டி.கே. சாலை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-8221997


படிப்பகம்